திருக்குறள் மெய்ப்பொருளுரை

பாவலரேறு
பெருஞ்சித்திரனார்

2

பெருஞ்சித்திரனார்
திருக்குறள் மெய்ப்பொருளுரை

(உரைச் சுருக்கம்)

PERUNCHITHIRANAR'S
THIRUKKURAL
A PHILOSOPHICAL BRIEF COMMENTARY.

(SECOND PART)

இரண்டாம் பகுதி

குறட்பாக்கள் 1 முதல் 100 வரை

வெளியீடு

தென்மொழி பதிப்பகம்,

பாவலரேறு தமிழ்க்களம்,

1, வடக்குப்பட்டுச் சாலை,

மேடவாக்கம், சென்னை – 601 302.

தொலைபேசி : 044 – 22771231

பதிப்பு : முதல் பதிப்பு : தி.பி. 2028 கும்பம் 27 (10.03..1997)
இரண்டாம் பதிப்பு : தி.பி. 2037 மீனம் 19 (02.04.2006)

நூல் தலைப்பு : **பெருஞ்சித்திரனார் திருக்குறள் மெய்ப்பொருளுரை உரைச் சுருக்கம் – இரண்டாம் பகுதி**

ஆசிரியர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

வெளியீடு : **தென்மொழி பதிப்பகம்,**
பாவலரேறு தமிழ்க்களம்,
1, வடக்குப்பட்டுச் சாலை,
மேடவாக்கம்,
சென்னை – 601 302.
தொலைபேசி : 044 – 22771231

அச்சாக்கம் : தென்மொழி அச்சகம்,
சென்னை – 601 302.

தாள் : வெள்ளைத்தாள்

பக்கங்கள் : 352

அளவு : மடி(தெம்மி) 1/8

படிகள் : 1000

விலை : உரு. 120/-

பெருஞ்சித்திரனார்
திருக்குறள் மெய்ப்பொருளுரை
உரைச் சுருக்கம்

அதிகார அடைவுகள்

அறம்முப்பத் தெட்டு பொருளெழுப தின்ப
உறவிருபத் தைந்தென் றுரை.

பாயிரம் நான்காம் பயனறம்முப் பன்னான்காம்
ஆயும் பொருளெழுப தாகுமே -- தோயுமுண்மைக்
காதல் மனைவியொடு நுண்காமம் ஐயைந்தாம்
ஓதும் திருக்குறள்என் றோது.

வெளியீட்டுரை

துரைமா. பூங்குன்றன் அறி.இ., க.மு., மெய்.மு.,

நம் பாவலரேறு ஐயா அவர்கள், இயற்கையின் இயக்கங்கள், அமைப்புகள், போக்குகள் அனைத்தையும் மெய்ப்பொருளறிவோடு பொருத்தி இவை ஒரு நெறியோடுதான் இயங்கவல்லன எனக் கூர்ந்தாயும் பழக்கம் உள்ளவர்கள். அனைத்து வாழ்வியல், அறிவியல் அறிவும் உள்ளடக்கியதுதான் மெய்ப்பொருளறிவு என முறைப்படுத்திக் கொண்டவர்கள்.

எனவே, திருக்குறளின் கருத்துகள் மெய்யறிவுப் பார்வையில் பார்க்கத் தக்கன எனப் பார்வையைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். அப்பார்வையில் மிகவும் புதுமையான பொருள்களை, ஆங்காங்குத் திருக்குறளைப் பற்றிய சொற்பொழிவுகளில் வெளிப்படுத்துவார்கள். அரசியல் நெருக்கடிக் காலமான 1975-76ஆம் ஆண்டுகளில் அற்றை அரசு இவ்வுலக நடைமுறை வாழ்வினின்று பிரித்து ஓராண்டுக் காலம் ஐயா அவர்களைக் கொடுஞ்சிறையில் வைத்திருந்த காலத்தில்தான் திருக்குறளை மெய்ப்பொருள் நோக்கில் நோக்கி, அதைச் சார்ந்தே உரையெழுத அவர்களுக்கு எண்ணம் எழுந்தது. எனினும் திருக்குறளுக்குத் தாம் உரை எழுத விழைந்த நோக்கத்தை ஐயா அவர்களே தம் பொது முன்னுரையில் விளக்கியெழுதியுள்ளார்கள். அப் பொது முன்னுரை ஒவ்வொரு பகுதியிலும் இடம் பெறவில்லை

யென்ற கரணியத்தால் அப்பகுதியை மட்டும் உடனடிப்பார்வைக்கு இங்கு அளிக்கிறோம். இதை முழுமையாகப் பொதுமுன்னுரை தொகுதியில் காணலாம்.

"உரை எழுத விழைந்த நோக்கமும் சூழலும் உருவாக்கத் திட்டமும்!

அழிவற்ற நம் அரும்பெரும் திருக்குறள் நூலுக்கு இன்றுகாறும் நூற்றைம்பதுக்கு மேற்பட்ட உரைகள், அது தோன்றிய நம் அறத்தமிழ் மொழியிலும், அண்டை அயல் மொழிகளிலும் தோன்றித் துலங்கி, மூல நூலுக்கு உயிர்ப்பும் செழிப்பும் சிறப்பும் பரப்பும் உயல்வும் பயில்வும் ஊட்டி வருகின்றன. திருக்குறள் போல் உலகில் தோன்றிய வேறு எம்மொழி நூலுக்கும், எவ்வற நூலுக்கும் இப் பலர்பால் உரைப்பேறு வாய்த்ததில்லை என்று வலிந்தும் துணிந்தும் கூறலாம்.

மக்கள் குலம் முழுமையும் கருத்தினும் செயலினும் மேம்பாட்டினும் அளாவியும், அனைத்துக் காலத்தையும் இடத்தையும் தழுவியும் நிற்கும் ஒரு தனிப்பேறாய் நின்றிலங்கும் ஓர் அரும்பெரும் அரிய அறநூலுக்கு, இத்துணை மாந்தப் பார்வை செல்வதும், அதன் மேல் இத்துணை ஆய்வு நோக்குகள் கொள்ளுவதும் வியப்பன்று; உரைப் பெருக்கம் சார்வது செயற்கையுமன்று; இயற்கையே! இந்நிலை இந்நூலுக்குப் பெருமையே தவிர, எனைத்தானும் சிறுமையே அன்று.

ஆயினும், இந்நூலுக்கு இன்றுவரை வெளிவந்த எம் கண்களிற்பட்ட நூலுரைகள் யாவும், அந்நூலின் கருப் பொருளுக்கும் திருப்பொலிவிற்கும், அஃகியகன்ற அறிவுச் செறிவிற்கும், உணர்வுத்திணர்வுக்கும், மெய்ப் பொருளுக்கும், உய்ப்பு அருளுக்கும் ஏற்றவாறு செய்யப் பெற்றுள்ளனவோ எனில், எம்மைப் பொறுத்த அளவினும் எம் சிற்றறிவிற்கு எட்டிய உணர்வினும் இல்லை என்றே சொல்ல வேண்டியுள்ளது.

இது பற்றியெல்லாம், கடந்த அரசியல் இருட்காலமாகிய 1975-76-ஆம் ஆண்டுகளில், யாம் சிறைப்படுத்தப் பெற்று, ஓராண்டுக் காலம், சென்னை, நடுவண் சிறையுள் வைக்கப் பெற்றிருந்த பொழுது, தீவிரமாகச் சிந்திக்கவும், அதன் வழித் தக்கவொரு தீர்வுக்கு எம்மைக் கொளுவிக்கவும் வேண்டியிருந்தது.

இவ் வகையில், எம் விழித்திறவுக்கு மொழிப்புலங் காட்டிய, விழுப்பெருந் தோன்றல், தமிழ்ப்பேராசான், மொழிஞாயிறு **ஞா.தேவநேயப் பாவாணர்** புலப்படுத்திய, **'திருக்குறள் தமிழ்மரபுரை'**யும், எமக்கு ஒரு சிறிதும் நிறைவளிக்கவில்லை யெனின், பிறர் பிற உரைகளெல்லாம் பற்றிக் கூறுதல், வறட் பாறைக்கண் வளந்தேடுதல் போன்றதே! சுருங்கக் கூறுமிடத்து, திருக்குறள் - பரிமேலழகர் உரையே ஒரு பொறுக்கு மணியாக உள்ளது எனலாம். ஆனால், அவரின் இன, மதக் காப்புணர்வாலும், தமிழறக் காழ்ப்பெரிவாலும், மூல விடங்களிலெல்லாம் பெய்து போகிய ஆரியப் பார்ப்பனீயச் சார்புரைகளாலும், அவர் பழிக்கப்பட வேண்டிய அல்லது கண்டிக்கப்பட வேண்டிய - ஒருவராகவே உள்ளாரேயன்றி, அவர் கண்டு காட்டிய உரையூற்றம் இல்லாமற் போமாயின், திருக்குறள் மணியின் முழு ஒளிச் சிதறலையும் உலகம் உணர்ந்திராது என்னும் உண்மையை யாரும் மறைத்தோ மறுத்தோவிடற்கியலாது. எனினும் பரிமேலழகர் உரையின் புரைகளைப் பாவாணர் காட்டிய ஒருவகைப் பாங்கு ஓரளவு போற்றுதற்குரியதே என்க. அது, திருக்குறள் நோக்கிற்கே ஒரு திருப்பத்தைத் தந்தது எனலாம். ஆயினும், அவரும் பெரும்பாலான விடங்களில் பரிமேலழகர் பதித்துச் சென்ற காலடிகளின் மேலேயே தம் காலடிகளையும் வைத்துச் சென்றுள்ளது யாவர்க்கும் எளிதே புலப்பட்டு விடும் தன்மையதே.

இனி, பாவாணர்க்கு யாம் தந்த உரைச் சிறப்புப் பாயிரத்துள்,

'பத்துரைக்கு மேலும் பரிமே லழகரோ(டு)
ஒத்தவுரை நூறுசெய்தும் ஒன்றாமே - மெத்ததிரு
வள்ளுவனார் நூலுக்கு வாய்மை உரைசெய்தார்
தெள்ளுதமிழ்ப் பாவாணர் தேர்ந்து'

- பாடல்: 1.

'திருக்குறள் தமிழ்மரபுரைச் சிறப்புப் பாயிரம்'.

'தேசமே யன்என்னும் தேர்ந்தமதிப் பாவாணர்
தேவத் திருக்குறட்குத் தீர்ந்தவுரை - மேவியபின்
மற்றோர் உரைசெயவும் மானுவரோ? மானுவரேல்
கற்றோர் நகைப்பர் கலித்து'

- மேற்படிநூல், பாடல்: 10.

- என்றோர் உறுதி கூறியிருந்ததும், பின்னர் யாம் மேலும் ஓர் உரையெழுதத் துணிந்ததும், காலத்தால் நேர்ந்த கட்டாயக் கருத்து வெளிப்பாடுகளே! அவ்வெளிப்பாட்டிற்கும் அம்மெய்ப்பொருள் உணர்வே காரணியமாக அமைந்ததெனில், அது புனைவோ பொய்யோ ஆகா தென்க.

இனி, திருக்குறள் பற்றிய பெருமை கூறுகையில், யாவரினும் மேலாகவும் சுருக்கமாகவும், இடைக்காடர்,

'கடுகைத் துளைத்(து) ஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்'

- தி.வ.மா: 54.

என்றும், ஔவையார் அதனினும் நுட்பமாக,

'அணுவைத் துளைத்(து) ஏழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்'

- தி.வ.மா: 55.

என்றும் கூறுவர். இங்கு இருவரும் அஃது ஒரு கடல் போன்றது என்று கூறியது எண்ணி வியக்கத்தக்கது. உண்மையிலேயே திருக்குறள் சிந்தனையளவிலும், சொல்லளவிலும் கருத்தளவிலும், காலத்தையும் இடத்தையும் அளாவிப் படர்ந்து விரிந்து கிடக்கும், அறிஞர்கள் கடப்பதற்கு அரிதான ஒரு கடலைப் போன்றதே! அக்கூற்று மிகையன்று; அருமையும் பெருமையும் ஒருமையும் மிக்கதே!

அஃது அவ்வாறாயின், அதற்கு உரையெழுதுவது என்பதும், அக் கடலைக் கடைந்து, கருத்து வெண்ணெய் எடுத்து, உண்மை நெய் உருக்குகின்ற அளப்பரும் அருஞ்செயலாகும் என்பதும் உணரத்தக்கதாகும். ஆனாலும் திருக்குறள் கடலில் ஒருவாறு நீந்தியும் மூழ்கியும் ஆழங்கண்டும் அகலம் பார்த்தும், ஆங்குற்ற அணிமணிகளையும், நனி செல்வங்களையும் வாரிக் கொணர்ந்து கரை சேர்ப்பதும், பிறர் அறியக் காட்டுவிப்பதும் மகிழ்விப்பதுமே அத்துறையின்கண் போந்துநிற்கும் அனைத்துப் பேரறிஞரினதும் செய்கையாகும் என்க.

என்னை? அதற்குக் காரணம் அத்தனைச் சுரங்கப் பொருள்கள் அதில் உள. அத்தனை அறிஞர் பெருமக்களும் காலந்தோறும் அச்சுரங்கத்துள் இறங்கி அவரால் இயலும்

அணிமணிகளைச் சேர்க்கும் அறிவுப் பணியே இவ்வுலகிற்கு அவர்கள் தரும் செல்வச் சேர்ப்பாகும்; அவர்கள் விட்டுச் செல்லும் திருவறிவு வைப்பாகும்.

எனவே, திருக்குறளுக்கு உரைகள் மிகுதி, அதன் அறிவுப் பெருக்கத்தையே உணர்த்தும், என்க.

'முன்னம்பலர் உரைகாணினும்
முதற்பாவலர் நூலோ
இன்னம்பலர் உரைகாணினும்
இயல்பிற்றது மெய்யே!
சொன்னம்பல வென்னில்சில
சொல்வல்லிது மாண்பார்
பொன்னம்பல நாமன்முதற்
புலவீர் நனிகேண்மின்!'

- தனிப்பாடல்.

- என்னும் ஒரு பழம் பாடலின் உண்மையை ஓர்க.

மெய்ம்மங்கள் என்றும் உண்மையின் வடிவங்களே. இருப்பு நிலைகளே. வானும், புடவிகளும், கதிரும், விண்மீன்களும், காற்றும், நெருப்பும், நீரும், உலகமும், உயிர்களும், உயிருடல்களும், இவையுள்ளடக்கிய இயற்கையும் மெய்ம்மங்கள்தாம். மாந்தனும் ஒரு மெய்ம்மமே! அவன் சிந்தனைகளும் ஒளியையும் காற்றையும் போலும் மெய்ம்மங்களே! இயற்கையும் மெய்ம்மக்கூறே. அவற்றின் வடிவமே! இனி, இன்னும் தெளிவாகச் சொன்னால், அணுக்களும், அண்டங்களும் அவற்றின் இயக்கங்களும் மெய்ம்மமே! அவற்றின் தவறும் சரியும்கூட மெய்ம்மமே! அவற்றின் விரிவும் விளக்கங்களும் கூட மெய்ம்மமே!

- இவற்றின் மெய்ம்ம இருப்பையே திருக்குறள் கூறுகிறது. மெய்ம்மங்களின் - இயற்கையின் சுழற்சியிலே மாந்த மெய்ம்மத்தை மட்டும் தனியே பிரித்தெடுத்துக் கூர்மைப் படுத்தி, அதன் இயக்க நிலைகளைக் காட்டும் முயற்சியே திருக்குறள். அதன் முடிவு காண்கின்ற முயற்சிகளே உரைகள். அவற்றின் வெற்றியும் தோல்வியும் காலத்தையும் கருத்தையும் பொறுத்தன.

மாந்தருள் ஆண், பெண் பெயர்களும், ஆணுக்குத் தந்தை, மகன், அண்ணன், தம்பி, நண்பன், உறவன், கணவன் - முதலிய

பெயர்களும், பெண்ணுக்குத் தாய், மகள், அக்கை, தங்கை, நண்பி, உறவி, மனைவி - முதலிய பெயர்களும், மாந்த மெய்ம்மத்தின் இருப்பு மாற்றங்களே! இவர்தம் உறவையும் உறழ்வையும், அவற்றால் விளையும் பயன்களையும் விளக்குவதே திருக்குறள். அவற்றை மேலும் நன்கு புலப்படுமாறு விளங்கச் செய்வனவே உரைகள்! அவற்றின் துல்லியத்தைக் காண்பதே இம் மெய்ப்பொருள் உரை!

இனி, திருக்குறளில் இவ்வளவுதாம் சொல்லலாம் என்பதில்லை; இன்னமும் சொல்லலாம்; எவ்வளவும் சொல்லலாம். உலக உயிர்களில் சிறந்து நிற்கும் மாந்தனின் உறவுகளையும், துய்ப்புகளையும், இன்ப துன்பங்களையும், எழுச்சி ஒடுக்கங்களையும் ஒருவாறு அடையாளம் காட்டி விளக்கிக் கூறுகிறது, திருக்குறள். அவற்றை இஃது இன்னின்னது என்று சுட்டிக் காட்டுகிறது இவ்வுரை.

இதில் சாதியில்லை; இனமில்லை. மாந்த இனத்தை வேறு பிரிக்கும் எந்த வேற்றுமைக் கூறும் இதில் இல்லை, என்க.

காற்று, உலகெங்கும் வீசிக்கொண்டிருந்தாலும் ஓர் இடத்திலும் உறைந்து நின்று விடாதது போல், மாந்த இனம் பல்வேறு இயக்கங்கட்கு ஆட்பட்டிருந்தாலும், ஒன்றினும் உறைந்துவிடக்கூடாது என்பதே திருக்குறள் கூறும் மாந்த மெய்ம்மம்.

மாந்தன் இயங்குவதுதான் இல்லறம், அரசியல், பொருளியல், வாழ்வியல்!

அவன் நின்று நிலைத்துவிடுவது தான் துறவறம், பேரா இயற்கை!

இந்நிலைகளையெல்லாம் முற்ற முடிந்த நிலையில் அடையாளம் காட்டிப் பேசுவதுதான் இம் மெய்ப்பொருள் உரை!"

இயல்பாகவே ஐயா அவர்களின் மெய்ப்பொருள் நோக்குக்குத் திருக்குறள் மிகவும் பொருந்தி வந்ததை உணர்ந்தார்கள். தாம் உணர்ந்த மெய்ப்பொருள் உணர்வை வெளிப்படுத்தத் திருக்குறளை ஒரு களமாக எடுத்துக்கொண்டாதாகவும் கூறினார்கள்.

நெருக்கடிக்காலச் சிறையினின்று வெளிப்பட்டபின், தாம் எழுதிய உரைக்குறிப்புகளைப் படியெடுக்கவும் பிரிக்கவும் துணையாளர்கள் தேவைப்பட்டனர். அப்போது அப்பணிச்சுமை பற்றி அனைவரிடமும் விளக்கினார்கள். அக்கால் தலைமைச் செயலகத்தில் பணியாற்றிவந்த திரு. வடிவேல் இராவணன், மந்தைவெளிப் பள்ளித் தமிழாசிரியர் திரு. தமிழ்நாவன் போன்றோர் ஓரிரு திங்கள் தொடர்ந்து மாலை நேரங்களில் படியெடுத்தும் வகைப்படுத்தியும் உதவி செய்தனர்.

நாள் எந்நேரமும் உரையைப் பற்றிய எண்ணமும் பேச்சுமாகவே ஐயா இயங்கி வந்தார்கள். இதற்கிடையில் 1982 இறுதியில் திரு. இளமாறன் அவர்கள் பவானியில் திருக்குறள் தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சி ஒன்று அமைத்தார். இச்சொற்பொழிவின் பின் இந்நூல் விரைவில் அமைவதற்கான சூழல் அமைந்ததெனினும் நடைமுறைப் போக்கில் அச்சூழல் நில்லாமற் போனது.

இதற்கிடையில் ஐயாவின் மகளான தங்கை செந்தாழை பட்டம் முடித்து வீட்டில் இருந்த காலத்தில் இப்பணிக்குத் துணையாக இருந்தது குறிப்பிடத்தக்கது. எனினும் அவர்க்கும் மணவாழ்க்கை அமைக்கப்பட்டது.

அதன்பின் சரியான துணைச் சூழல்கள் வாய்க்காமலும் இல்லத்தில் ஏற்பட்ட சிற்சில சிக்கல்களாலும் உரை எழுதும் பணி தடைப்பட்டது. அதன்பிறகு அரசியலிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டு வந்தன. ஐயாவின் பணி இதழ் வெளியீடுகளிலேயே தொடர்ந்து இருந்தது. இதற்கிடையில் 1991 சூன் மாதம் செயலலிதா ஆட்சியின் கொடுமையான சூழல் தமிழகத்தில் தொடங்கியது. ஐயா அவர்கள் மிகவும் இச்சூழலால் தமிழினத்தை எண்ணி வருந்தியிருந்தார்கள். அத்துடன் ஐயாவின் கண்களில் கதிர்முறையில் அறுவை செய்ய நேர்ந்தது.

இவ்விரண்டு அழுத்தமான நிகழ்வு எண்ணங்களோடு தென்மொழி அச்சகம் சென்றிருந்தபோது, தென்மொழி அச்சகப் பெயர்ப்பலகை வேறு காற்றினால் வீழ்ந்திருந்தது கண்டு திடுக்குற்றார். இவைபோன்ற மனச்சுமையான எண்ணங்களோடு ஒருநாள் இரவு உறக்கத்தினிடையில் திடீரென்று விழிப்பு வந்தபோது திருக்குறள் உரையை முடித்துவிட வேண்டும் என்ற முனைப்புப் பீறிட்டு எழுந்தது.

இதன்படி முதலில் உரைச் சுருக்கத்தை வெளியிட்டுவிட வேண்டும் என்ற உந்துதலில் அதற்கான பணிகளை மும்முரமாகத் தொடங்கினார். தென்மொழியில் முன்வெளியீட்டுத் திட்ட அறிக்கைகள் வெளிவந்தன. அச்சிடுவதற்காகப் பெருந்தொகை வேண்டியிருந்ததாகையால் அத்தொகையில் தென்மொழி நெஞ்சங்களான திருவாளர்கள் ஈரோட்டை அரசமாணிக்கனார், மா.செ. தமிழ்மணியார், நிலா. வேங்கடவனார் முதலியோர் ஐயா அவர்களிடம் நூல் வெளியீட்டிற்குத் துணையாகத் தொகை விடுத்திருந்தனர். மேலும் முன்வெளியீட்டுத் திட்டத்தின்படி தென்மொழி அன்புள்ளத்தினர் சிலரும் தொகை விடுத்திருந்தனர்.

சுதிரச்சுக்கோப்பில் பணி விரைவுபடுத்தப் பெற்று 10.3.93 அன்று வெளியிட்டுவிடத் திட்டமிடப்பெற்றது. இவ்வாறு மும்முரமாகத் திட்டமிட்டுப் பணி முனைப்பில் இருந்தபோது 1993 சனவரி 26-ஆம் பக்கலில் 'தடா'வில் ஐயா சிறைப்படுத்தப்பட்டார்கள். இந்த முறை சிறை ஐயாவிற்கு மன நைவையும், உடல் நலிவையும் ஏற்படுத்தியது. ஏழு திங்கள் சிறை வாழ்விற்குப் பின் வெளிவந்த பிறகு மீண்டும் திருக்குறளை வெளியிடும் பணியில் முனைந்தார். திருத்தத்திற்குப் பின் உரை நீண்டது.

இல்லறவியல் பகுதி வரை (240 குறள்களுக்கு மட்டும்) முழு நிறைவுபடுத்திவிட்டு முடிக்கும்போது அதைப் பற்றி ஐயா அவர்கள் நகைச்சுவையாகக் குறிப்பிட்டுப் பேசுகையில், "இல்லறவியல் வரையில் முடித்துவிட்டேன். இனி, துறவறவியல்தான் போக வேண்டும்" என்று கூறினார்கள். ஆனால் வாழ்க்கையையே துறப்பார் என்று அப்போது யாரும் எண்ணிப் பார்க்கவில்லை.

ஐயா அவர்களின் மறைவிற்குப் பின்னர், உயிர் முயற்சியான இந்நூலை வெளியிட வேண்டும் என்ற துடிப்பு அனைவரிடமும் இருந்தது. ஆனால் குறிப்புகள் ஒன்றும் விடுபடாமல் தொகுத்து வருவதற்குக் காலம் எடுத்துக்கொண்டது. முதல் நூறு திருக்குறளுக்கான உரை முதல் பகுதியை தி.பி.2028 (10-03-1997)-இல் முதல் பதிப்பாக வெளிக்கொணர்ந்தோம். இப்போது பொது முன்னுரையை முதல்பகுதியாகவும் முதல் நூறு குறள்களுக்கான உரையை இரண்டாம் பகுதியாகவும் பகுத்து வெளியிட்டுள்ளோம்.

ஐயா அவர்கள் இவ் வடிவங்களைப் பார்க்காமல் சென்றிருந்தாலும் அவர்கள் குறித்திருந்தபடியே பதிப்புரையைத் திருக்குறள்மணி புலவர் இறைக்குருவனார் அவர்களும் வெளியீட்டுரையை நானும், தகவுரையைச் சொல்லாய்வு அறிஞர் ப. அருளியார் அவர்களும் எழுத அவை இணைக்கப்பட்டுள்ளன. திரு. அருளியார் எழுதிய தகவுரையை ஐயா அவர்களே பார்க்க நேர்ந்தது.

முகப்பு அட்டைவடிவத்தை உருவாக்கிய எம் மகன் செல்வன் மா.பூ. தமிழ்மொய்ம்பனுக்கும் மற்றும் இந்த நூல்கள் உருவாகத் துணைநின்ற அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் எம் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அ. அறத்துப்பால்

முன்னுரை

'கடலக வரைப்பின்இப் பொழில்முழு தாண்டநின்
முன்திணை முதல்வர்' — பதிற்று: 14.

— எனும் பாடலடி, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனார் பாடியது. இதில் இவ்விந்திய நாடு முழுமையும் தமிழரால் ஆளப்பெற்றமை குறிக்கப்பெற்றது.

'கல் ஒங்கு நெடுவரை வடதிசை எல்லை இமயம் ஆக, தென்னம் குமரியொடு' அற்றை, **'இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கித்'** தோன்றியது.

தமிழரின் ஆட்சி வரலாறு மட்டுமன்று, அவர்தம் பண்பியல் மாட்சி வரலாறும் மிகச் சிறந்து விளங்கித் தோன்றியிருந்த பெருமை உலகம் அறிந்தது.

இப்பண்பியல் மாட்சியின் பெருமைக்குத் **திருக்குறளே** தலைசிறந்த சான்றாக நின்று நிலவுகிறது என்பதை எவரும் மறுத்தற் கியலாது.

தமிழரின் மிக்கோங்கிய பெருமைப் பண்புக் கூறுகளில், **'அறவுணர்வு'** என்பது மாந்த மனத்தினது நறுமணம் கொழுவிய ஒரு மலர் போல் ஆகும் எனில் மிகையாகாது.

ஆரியர் வருகைக்குச் சில்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றி விளங்கியிருந்த **அறம்** எனும் மிக்குயர்ந்த பண்பியல் கூறின் அடிப்படையில்தான், தமிழரின் மேலோங்கி நின்ற கலைப்பண்பும், நடை நாகரிகமும் படிநிலை வளர்ச்சி பெற்று முழுமை அடைந்திருந்தன.

பொருள் என்பது அவரின் **அறிவியல்** கூறாகவும், **அறம்** என்பது பழந்தமிழரின் **மனவியல்** கூறாகவும், **இன்பம்** என்பது அவரின் **உடலுணர்வியல்** கூறாகவும், செழித்துக் கொழித்து, அவர் வாழ்வையே உயிரியலின் மீமிசை மாந்த மலர்ச்சியாக நிலைநிறுத்தியிருந்தன.

அறம் என்பது மனத்தின் அத்தனை நல்லுணர்வுகளுக்கும் அடிப்படையாய் விளங்கி நின்று, ஒருவரின் அன்புக்கும் பண்புக்கும் ஊற்றமாய், உருவமாய் இலங்கியிருந்து; மாந்தவியலின் பொதுமை வளர்ச்சிக்கே இலக்காய், குறிக்கோளாய், வாழ்வியல் கோட்பாட்டை நிறைவு செய்யும் மூலகமாய்ப் படிந்து தேங்கி உரம் பெற்றிருந்தது.

இதனால், தொடக்கமும், முடிவும் தெரியாத உலகின் மாந்தவியக்கத் திற்குப் பொருள் விளங்கியது.

மொத்தத்தில் தமிழரின் வாழ்வியல் முழுவதும் அறமாகவே மலர்ச் சியுற்றிருந்தது என்பது மிகையான கூற்றன்று. அதே போல், **பொருளியல்** என்பது, அவ்வறவியலின் வழிப்பட்ட, வாழ்க்கையின் பொதுவியல் கூறுகளாகிய குமுகவியல், ஆட்சியியல், பொருள் செயலியல், பொருள் பயன்பாட்டியல், உலக ஒப்புரவியல், குடியியல், தொழில் முறையியல், மக்கள் அளவளாவியல், மக்கள் முரண்பாட்டியல், உடன்பாட்டியல் முதலிய நாட்டியல் கூறுகளை விளக்கமாகவும் விரிவாகவும் மாந்தச் செயற்பாடுகளை ஊடுருவிக் கண்டுகாட்டிய உலகியல் வழித்தடமாக விளங்கி நின்றது.

இனி, அஃதொப்பவே, தனிமாந்தப் பிரிவான ஆண், பெண் எனும் படைப்பியல் உயிராக்க உணர்வுகளடங்கிய **இன்பியல்** தன்மைகளையும் நுண்ணியதாகக் கண்டுணர்ந்து, அவற்றின் செவ்விய ஈடுபாடுகளையும் உடலியல் நுட்பங்களையும் விளக்கி நின்றது.

இவ்விவ்வாறு, மாந்தத் தொகுதியின் உயிரியக்கக் கூறுகளாகிய **மனவியல்** வாழ்க்கை, **அறிவியல்** வாழ்க்கை, **உடலியல்** வாழ்க்கை என்னும் மூவகை இயக்கங்களையும் வரையறுத்து, அவற்றை **அறம், பொருள், இன்பம்** எனப் பகுத்துக் காட்டி, மக்களை இயங்கச் செய்த பெருமையும் அருமையும் தமிழினத்தையே சார்ந்தனவும், தமிழினத்திற்கே உரிமையுடையனவும் ஆகும் என்க.

இத்தகு பெருமைப் பாட்டிற்கும் **திருக்குறள்** என்னும் இந்நூலே, குறைவற நிற்கும் ஒரு நிறைவுணர்வு வெளிப்பாட்டுச் சான்றாகும் என்க.

இத் தமிழியல் உறுதிப் பொருள்கள் மூன்றின் தெறிப்புகளும் தெரிவிப் புகளும் பழந்தமிழ் இலக்கியப் பரப்பு முழுவதும் பதியப்பெற்றுள்ளதைக் கீழ்வரும் எடுத்துக்காட்டுகள் உறுதி செய்கின்றன.

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை'

— தொல் : 1038:1-2

'அந்நிலை மருங்கின் அறம்முத லாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப'

— தொல்: 1363

அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்

— புறம் 28.15-16

சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்
அறத்துவழிப் படூஉம் தோற்றம் போல

— புறம் 31.1-2

அறம் பொருள் இன்பம் என்றம் மூன்றின்

— கலி: 141-3

'தோற்றம்சால் தொகுபொருள்'

— கலி:17

(தொகுபொருளாவன அறமும் பொருளும் இன்பமும் என்பர் உரையாசிரியர்.)

வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவணது எய்த இருதலையும் எய்தும்

— நாலடி: 28

'ஐந்திணை மருங்கின் அறம்பொருள் இன்பம்'

— சிலம்பு-நூற்கட்டுரை-4

'அறம்பொருள் இன்பம் மூன்றினும்'

— பெருங்: 4-7-140

'அறம்பொருள் இன்பம்' — குறள் .501

'அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்'

— குறள் 754

'ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு' — குறள் 760

இவ்விடத்து, தமிழியல் உறுதிப்பொருள் **அறம், பொருள், இன்பம்** என்னும் மூன்றினொடு **'வீடு'** என்னும் ஒரு கோட்பாடு, ஆரியவியலும் வேதமதமும் தமிழகத்தில் நன்கு பரவி, சிவமத, திருமாலிய மதச் சிந்தனைகள் மேலோங்கி வளர்ந்து விரிந்திருந்த தேவார காலத்தில் அஃதாவது கி.பி. 7-ஆம் நூற்றாண்டில்தான் வளர்ச்சி பெற்று, வேரூன்றியிருத்தல் வேண்டும் — என்பதை நினைவில் இருத்துக.

ஏனெனில் அக்காலத்திற்குப் பின்னர் எழுந்த நூல்களிற்றான் இவ்'வீடு' பற்றிய கோட்பாடு, பரவலாகக் காணப்பெறுகிறது. எனவே அஃது ஆரியவியல் தாக்கமே என்க. திருக்குறளிலும் பிற சுழக நூல்களிலும் இஃதில்லையாகல் ஒன்றே அதனை உறுதிப்படுத்தும்.

அதன் பின்னர் 'வீடு' குறிக்கப்பெற்றுள்ள சில நூல் வழக்குகள் வருமாறு:

அறம் பொருள் இன்பம் வீடு — தேவா : 575;5

அறம் பொருள் வீடின்பம் — தேவா; 6905;11

'அறம் பொருள் இன்பம் வீடு என்று உலகில்
நன்னெறி மேம்பட் டன நான்(கு) அன்றே'

— நாலா.திவ்.பிர; 2764

அறம் முதல் நான்காய்..... நின்றனை'

— திருவாய்; 34.5

'அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே'

— நன்; 10

'அறம் பொருள் இன்பம் வீடென நான்கும்'

— சேந். திவா; 286

'நாற்பொருள் பயக்கும் நடைநெறித் தாகி'

— தண்டியலங்; 8-5

திருக்குறளில் வீடு என்னும் கருத்து எவ்விடத்தும் நேரிடையாகவோ மறைமுகமாகவோ குறிக்கப் பெறவில்லை என்பது தெளிவு. இதுபற்றிப் பொது முன்னுரையிலும் கூறப்பெற்றது.

இனி, **அறம்** என்னும் சொல்லின் சுருக்க விளக்கமான பொருள், **பொதுமை நல உணர்வு** என்பதே ஆகும். அஃதாவது, **தனிமாந்த நலன் மட்டுமே கருதாமல், பொதுமாந்தர்-பொதுமக்கள்-அனைவருக்கும் உகந்த நலம் கருதும் எண்ணம், உரை, செயல், வகுபாடு, முறைகள் முதலிய அனைத் திற்குமான ஒரு பொருள்பொதி தகுதிச் சொல்லே அறம் என்பது.** இவ்வுணர்வு நெறிகள் வகுக்கப் பெற்றவை ஆகலின் 'அறம்' எனலாயிற்று. (அறம் -வகுக்கப் பெற்றது; வரையறுக்கப் பெற்றது)

இதுபற்றிய பல்வேறு விளக்கங்களும் அறன் வலியுறுத்தல் அதிகாரத்துள் மிக விரிவாகக் கூறப்பெறும். அவற்றை ஆண்டுக் காண்க.

அடுத்து, திருக்குறளுள் **அறத்துப்பால், அறவியல்** (பாயிரவியல்), **இல்லறவி யல், துறவறவியல், ஊழியல்** என்னும் நான்கு இயல்களாகப் பகுக்கப் பெற்றுள்ளது.

இப்பகுப்பு முறைகள் யாவும் நூலாசிரியராலேயே செய்யப் பெற்றுள்ளன என்றும், செய்யப்பெறவில்லை என்றும் ஆராய்ச்சியாளரிடை இருவேறு கருத்துகள் உள்ளன. இவ்வேறுபாடுகள் அறிவு வளர்ச்சியாலும் காலமாற்றத்தாலும் கருத்துப் புகுத்தத்தாலும் இயல்பாகத் தோன்றி நிற்பனவேயாகும். எல்லாராலும் விரும்பப்பெறும், மதிக்கப்பெறும் ஓர் உலக உயர்வு ஒப்பற்ற நூலுள் இத்தகைய பல்வேறு குளறுபடிகள் நிகழ்வது கூடுவதேயாகும். ஆனால், சிதைக்கப்பெற்ற அல்லது மாற்றப்பெற்ற அல்லது மறைக்கப்பெற்ற அல்லது திரிக்கப் பெற்ற அல்லது அழிக்கப்பெற்ற கூறுகள் இன்னின்ன அல்லது இவ்வியைவுதாம் என்று ஆய்ந்து காண்பது முற்றிலும் இயலாதது.

அவ்வகையில், இந்நூலுக்கு உரையெழுத முற்படும் உரையாசிரியர்களும், தங்கள் தங்கள் காலமாறுதல்களுக்கும் கருத்து வளர்ச்சிக்கும் ஏற்ப, மூல நூல் அமைப்புகளை மாற்றிக்கொண்டு செல்வதும் அறிவுப் பொருத்தமுள்ளதாகப் படவில்லை. இவ்வாறு செய்யின், நூல் வடிவமே காலப் போக்கில் மாறுபட்டு, மூல அமைப்பு அல்லது நூல்வடிவம் எஃது என்னும் ஐயப்பாட்டு நிலைக்கு வந்துவிட வேண்டியிருக்கும்.

'பால்' என்னும் சொல் பகுப்பு, பகுதி என்னும் பொருள்களை உணர்த்தி நிற்கும். **அறத்துப்பால்** என்பது, அறக்கூறுகளின் பகுதி என்பதாகும். அதுபோலவே **பொருட்பாலும், இன்பத்துப்பாலும்** என்க.

அறத்துப்பால் முப்பத்தெட்டு அதிகாரங்கள் கொண்டது என்பது, திருவள்ளுவ மாலைச் செய்யுள்களிலுள்ள,

> 'அறம்முப்பத் தெட்டுப் பொருளெழுப தின்பத்
> திறமிருபத் தைந்தால் தெளிய'

என்னும் **மதுரைப் பெருமருதனார்** பாட்டானும் (37)

> 'பாயிரம் நான்(கு)இல் லறம்இருபான் பன்மூன்றே
> தூய துறவறம் ஒன்(று) ஊழாக'

என்னும் **எறிச்சலூர் மலாடனார்** பாட்டானும் (25) தெரிய வருகிறது.

அஃதாவது, பாயிரம் (இதில் அறவியல்) நான்கு அதிகாரங்கள், இல்லறவியல் இருபது அதிகாரங்கள், துறவறவியல் பதின்மூன்று அதிகாரங்கள், ஊழ் ஓர் அதிகாரம் என முப்பத்தெட்டு அதிகாரங்கள் ஆகும். என்க.

இனி, அறவியல் என்பது என்னென்று நுண்ணிய உணர்வளவான் காட்ட, 'அறமுதல் உணர்தல்', 'வான் சிறப்பு', 'நீத்தார் பெருமை', 'அறன் வலியுறுத்தல்' ஆகிய நான்கு அதிகாரங்களையும் ஆசிரியர் பயன்படுத்திக் கொள்வார்.

அடுத்து, அறவியலை இரண்டு கூறுகளாகப் பகுத்து, ஒன்று 'இல்லறம்', இரண்டு 'துறவறம்' என்றும் கூறி,

— இல்லறவியலின்கண், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணைநலம், மக்கட்பேறு, அன்புடைமை, விருந்தோம்பல், இனியவை கூறல், செய்ந் நன்றியறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினையச்சம், ஒப்புரவறிதல், ஈகை, புகழ் ஆகிய இருபது அதிகாரங்களையும்,

— துறவறவியலின்கண், அருளுடைமை, புலால் மறுத்தல், தவம், கூடாவொழுக்கம், கள்ளாமை, வாய்மை, வெகுளாமை, இன்னா செய்யாமை, கொல்லாமை, நிலையாமை, துறவு, மெய்யுணர்தல், அவாவறுத்தல் ஆகிய பதின்மூன்று அதிகாரங்களையும்,

— ஊழியலின் கண், 'ஊழ்' என்னும் ஓரதிகாரத்தையும் பொருந்திய காரணத்தான் நிறை நிரலாக அடைவு செய்து, திண்ணிய பருவளவான் வகுத்துரைத்தார் என்க.

இவ்விவற்றின் காரணப் பொருத்தங்களையும் வகுமுறைகளையும் அவ்வவ்வதிகாரங்களின் தொடக்கத்தும் ஈற்றிலும் விளக்கிக் காட்டப் பெற்றுள்ளதிற் கண்டுகொள்க.

இனி, அறவுணர்வு என்னும் மாந்தத் திறவுணர்வை அறத்துப் பாலில் தொகுத்துக் காட்டினும், அவ்வுணர்வு அவ்வளவில் அடங்குவதன்று. அது வாழ்க்கை முழுதும் விரிந்து பரவி, ஆங்காங்குப் பொதுவொழுங் காகவும், மக்கள் நடைமுறையாகவும், ஓரளவு நேரடியாகவும் பேரளவு மறைமுகமாகவும் வலியுறுத்தப்பெறுகிறது. மேலும், இவ்வறவுணர்வு பொருட்பாலில் மட்டுமன்றி, இன்பத்துப் பாலிலும் ஊடுருவி நின்று, கணவன் மனைவியர்க்குள்ள ஒழுகியலாக மலர்ந்து சிறப்பதையும் ஆண்டுக் கண்டுகொள்க.

என்னை? அறவியலன்றி அரசியல் ஏது? ஆட்சியியல்தான் ஏது? அல்லது குடியியல்தான் அறவியலின்றி இயங்குமோ? என்க.

அவ்வாறே, இன்பியலும் அறவியலையே அடிப்படையாகக் கொண்டு இயங்குவதே என்பதை ஆங்காங்குக் கூறப்பெறும் விளக்கவுரைகளான் கண்டுகொள்க.

இவ்வறநூலின்கண் அறவுணர்வு பல்வகையால் வலியுறுத்தப் பெறுகின்றதேனும், இஃதிஃது அறம் என்று வெளிப்படையாகச் சில அறக்கூறுகள் கூறப்பெறுவதையும் நாம் கவனித்தல் வேண்டும். அவற்றை இங்ஙனம் ஒருவாறு தொகுத்துக் கூறலாம்:

அந்தண்மை உடையது அறம் – 30
உயிர்க்கு ஆக்கம் தருவது அறம் – 31
வாழ்க்கைக்கு ஆக்கம் தருவதும் அறம் – 32
மனத்துக்கண் மாசில்லாதது அறம் – 34
அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம் – 35
பொன்றினும் பொன்றாத்துணை அறம் – 36

இன்பம் தருவது அறம் – 39
செய்யத் தக்கது அறம் – 40
வாழ்க்கைக்குப் பயன் தருவது அறம் – 45
ஆற்றின் ஒழுகச் செய்தல் அறம் – 48
இல்வாழ்க்கை அறம் – 49, 147
அன்பாயிருப்பது அறம் – 77
நலந்தரும் இன்சொல் அறம் – 93
நல்லவை நாடுதல் அறம் – 96
சினம் காத்தல் அறம் – 130
கற்று அடங்கல் அறம் . – 130
பிறனில் விழையாமை அறம் – 141
பிறன்மனை நோக்காமை அறம் – 148
பிறர் தீமை பொறுப்பது அறம் – 157
பிறன் ஆக்கம் கண்டு பொறாமைப் படாதது அறம் – 163
பிறர் பொருளை விரும்பாமை அறம் – 179
புறங் கூறாமை அறம் – 181, 182, 183, 185
புன்சொல் பொறுப்பது அறம் – 189
பிறர்க்குக் கேடு செய்யாமை அறம் –204
பொய்யாமை அறம் – 297
கொல்லாமை அறம் – 321
பகுத்துண்ணல் அறம் – 322
பல்லுயிர் ஓம்புதல் அறம் – 322
அஞ்சப்படுவதற்கு அஞ்சுவது அறம் – 366
அல்லவை நீக்குதல் அறம் – 384
மானமுடையது அறம் – 384
மூத்த அறிவுடையார் கேண்மை அறம் – 41
ஆன்று அமைந்த சொல்லால் இயல்வது அறம் – 625
திறனறிந்து சொல்வது அறம் – 644
தீதின்றிப் பொருள் ஈட்டுதல் அறம் – 754
பெண் ஏவல் செய்யாமை அறம் – 909

இவ்வாறு நூலாசிரியர் அறவுணர்வுகளின் மேம்பட்ட ஒழுகலாறுக ளாக ஆங்காங்குப் புலப்படுத்தியிருப்பது, கண்டு மகிழ்தற்கும், உணர்ந்து கடைப்பிடித்தற்கும், அறிந்து போற்றுதற்கும் உரியதாம் என்க.

இனி, அறம் என்னும் உணர்வியலின்கண் நூலுள் கூறப்பெறும் அத்தனைக் கூறுகளும், உளவியல சார்ந்தனவாக இருப்பதை, இந்நூலை ஆழ்ந்து ஆராய்வார் நன்கு அறிந்து கொள்வார் என்க.

அறம் என்று சிறப்பித்துக் கூறும் கூற்றே முதற்கண் இல்லறவியலைத் **தான்** சாரும் என்பது விளங்க அறத்துப்பாலின் முதற்கண் இல்லறவியல் கூறுகளைக் கூறுவதிலிருந்தே நன்கு புலப்படும் என்க. இவ்வுண்மையை நன்கு வலியுறுத்த,

'அறன் எனப்பட்ட்தே இல்வாழ்க்கை' 48

என்பதானும், இது துறவறத்தினும் மேம்பாடுடையது, என்பதை வலியுறுத்த,

'அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின்
போஒய்ப் பெறுவது எவன் – 46

இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை – 47
ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து – 48
வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் – 50

என்பவற்றானும் நன்கு விளங்கும் என்க. இத்தகைய இல்லறவியலை துறவறத்தினும் மேம்படுத்திக் கூறும் கூற்றுகளைத் தமிழ் இலக்கியங்களுள் வேறெங்கணும் தெளிவுறக் காணுதல் இயலாதாம் என்க.

இனி, திருவள்ளுவர் காட்டும் **துறவறமும்,** இல்லறத்தில் நன்கு ஈடுபட்டு, அறஞ்செய்து, வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து சிறந்தவர், தம் முதுமைக்கண் கடைப்பிடித்தொழுகும் **பொதுவுணர்வு பொதுளிய பொது மக்கள் தொண்டே** என்பதும், அவர் துறவியலில் கூறும் பற்பல கருத்து களானும் தெள்ளத் தெளிவாக உணர முடிகிறது. அத்தகைய துறவறம் மணக்கும் சிறந்த கருத்துகளைக் கீழே காண்க.

'அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள' – 241

'நல்லாற்றால் நாடி அருளாள்க பல்லாற்றால்
தேரினும் அஃதே துணை' – 242
'அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த
இன்னா உலகம் புகல்' – 243

'மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க்(கு) இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை' – 244

இக்குறட்பாக்களின்கண், துறவுணர்வுடையார்க்கு அடிப்படையாகிய அருளுணர்வு, அத்துறவறத்தை மேற்கொண்டார் பொதுமக்களிடம் காட்டும் **ஒழுகல் உணர்வே** என்று கருதுவதில் கருத்து வேறுபாடு உண்டோ என்று ஆய்ந்து உணர்க.

மேலும், இவ்வாறான பொதுவியல் கருத்துகளைத் துறவறவியலின் வேறு பலவிடங்களிலும் அவர் வலியுறுத்திக் காட்டுவதையும் கீழ்வரும் குறட்பாக்களால் கண்டு உறுதி கொள்க.

'உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்' –294

'செல்லிடத்துக் காப்பான் சினம் காப்பான் அல்லிடத்துக்
காக்கிலென் காவாக்கால் என்' — 301

'செல்லா இடத்தும் சினம்தீது செல்லிடத்தும்
இல்அதனின் தீய பிற' –302

'சினமென்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும்' –306

'என்றவாறு **வெகுளாமை** அதிகாரத்தும்,'

'இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்' – 314

'அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்றாக் கடை' – 315

'எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானும்
மாணா செய்யாமை தலை' – 317

'தன்னுயிர்க்கு இன்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க்கு இன்னா செயல்' – 318

'பிறர்க்குஇன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும்' – 319

'என்றவாறு **இன்னா செய்யாமை** அதிகாரத்தும்',

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' – 322

'நிலைஅஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை' – 325

நன்றாகும் ஆக்கம் பெரிதெனினும் சான்றோர்க்கு
கொன்றாகும் ஆக்கம் தலை – 328

'என்றவாறு **கொல்லாமை** அதிகாரத்தும்',

'அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல்' – 333

'நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை
மேற்சென்று செய்யப் படும்' – 335

என்றவாறு **'நிலையாமை'** அதிகாரத்தும், நூலாசிரியர் கூறும் அறக்கூறுகள், அவை **இல்லறம்** என்னும் பிரிவின்கண் கூறப்பெறுவனவதாயினும், **துறவறம்** என்னும் பகுப்பின்கண் கூறப்பெறுவனவாயினும், பொதுமை நலம் கருதும் கருத்துகளையே உள்ளடக்கியிருப்பதை நுணுகி ஆராயுமிடத்து, நூலாசிரியர் மன்பதை நலம் கருதும் பொதுவுணர்வையே **அறம்** என்னும் நல்லுணர்வின்கண் கூறுவதாகத் தெரிகிறது. அவ்வாறு தெரியவே ஆரிய தர்மத்தை இன்னும் வெளிப்படையாகக் கூறுவதானால் வர்ணாச்சிரம அதர்மத்தை அவர் கூறிடவில்லை என்பது உறுதியாகிறது.

இனி, **அறத்துப்பால்** என்று அவர் வகுத்துக்கொண்ட பாற்பகுப்புப் பிரிவில் மட்டுமன்று, அவர் அறத்தைக் கூறுவது, பொருட்பால், இன்பத்துப்பால் என்று பகுத்துக்கொண்ட பாற்பகுப்புகளிலும்கூட ஆங்காங்கே, அவர் கூறும் கருத்துகளில் அறவுணர்வையே அடிப்படையாகக் கூறுவது, ஆய்ந்து அணுகினார்க்குத் தெரியவரும் என்க.

பொருட்பாலில், வேந்தர்க்குக் கூறும் கீழ்வரும் இலக்கணங்களாகும் குறட்பாக்களில், அவ்வரசன்,

'காட்சிக்கெளியன் கடுஞ்சொல்லன் அல்லன்' ஆகவும் – 386

'இன்சொலால் ஈத்தளிக்க வல்லான்' ஆகவும் – 387

'முறை செய்து (மக்களைக்) காப்பாற்றுபவன்' ஆகவும் – 388

'கொடை அளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையான்' ஆகவும் – 390

இருத்தல் வேண்டும் என்பது பொதுமக்கள் நலம் கருதும் அறவுணர்வே யன்றோ?

'கல்வியை வலியுறுத்துகின்ற அதிகாரத்தும்கூட நூலாசிரியர், தமக்கும் பிறர்க்கும் நன்மை பயக்கின்ற இன்பம் தருகின்ற கல்வியே தேவை என்னும் பொருளில்,

'தாம் இன்புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்' – 399

என்று கூறுவது பொதுமையறம் நோக்கிய கூற்றே யன்றோ?

இனி, இவ்வாறே நூல் நெடுகலும் அவர் கூறிச்செல்லும் அறவியல் கூற்றுகளும், பிற ஒழுகியலாறுகளுமான அறவியல் உணர்வு என்பது, மக்களின் பொதுமை நலம் கருதும் ஒரு **மிகைசை மாந்த உணர்வே** யாகும் என்பதை எவரும் மறுத்தற்கியலாது என்க.

அவ்வாறான பொதுமையுணர்வே, பொதுவுடைமை உணர்வாகப் பலவிடங்களிலும் சிறப்பித்துச் சொல்லப்பெறும் கூற்றுகள், தமிழ் இலக்கியப் பரப்புகள் திருக்குறளில் மட்டுமே உண்டு என்று தமிழர் அனைவரும் பெருமைப்பட்டுக் கொள்வதில் தவறில்லை என்று நெஞ்சு நிமிர்த்திக் கூறலாம் என்க.

o

அ.1 அறவியல் (பாயிரவியல்)

முன்னுரை

இவ்வியல் பிற நூற்பதிப்புகளுள் 'பாயிரவியல்' என்றே அழைக்கப் பெறும்.

'பாயிரம்' என்பது நூலுக்கு முன்னுரையாக அமைவது என்று பொது வாகப் பொருள்தரும் ஒரு சொல்.

முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்

-நன்.1

என்று நன்னூல் விளக்கம் தருகிறது.

முகவுரை : நூலுக்கு முகம் போல் உரைக்கப் பெறுவது

பதிகம்: பதியம்-நூலுக்கு நாற்றங்கால் போல் இருப்பது. அல்லது ஒரு பொருள்மேல் பத்துப்பாடல்களால் ஆக்கப் பெறும் ஒரு நூலமைப்பு.

அணிந்துரை : நூலுக்கு அழகுதரச் சிறப்புரையாக முன் நிற்பது. அஃதாவது நூலின் உள்ளுறை அழகை எடுத்துக் கூறுவது.

நூன்முகம்: நூலுக்கு முகமாக இருந்து உள்ளே கூறப்புகும் கருத்தைச் சுருங்க விளக்குவது. என்னை?

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம் -706

என்றார் ஆகலின். கடுத்தது - மிகுந்தது.

— உள்ளத்தில் மிகுந்துள்ள உணர்வை, முகம் பளிங்கு (கண்ணாடி) போல் காட்டி நிற்கும்.

— அதுபோல், நூல் நுவலப் போகும் கருத்துகளை நூன்முகம் அஃதாவது பாயிரம் நுழைவாயில் போல் காட்டி நிற்கும்.

புறவுரை : நூலுக்கு வாயிற்புறமாக நின்று, நூலில் எதுபற்றி, எந்த அளவில், எதற்காக, என்ன பயன் நோக்கி, எவர்க்காக, எவ்வாறு எழுதப் பெற்றுள்ளது என்னும் செய்தியைச் சொல்வது.

தந்துரை: நூற்பொருளைச் சுருக்க விளக்கமாக நூலாசிரியராலோ, அவர் தொடர்புள்ளவர்களாலோ, அந்நூலைப் படிக்க முற்படுவார்க்கு, முன்னதாகத் தந்து உரைப்பது. இனி, 'தந்து' என்பதற்கு நூல் என்று

பொருள்கொண்டு, நூலுக்கு அமைந்த முன்னுரை என்றும் பொருள் கொள்ளலாம் என்க.

புனைந்துரை: நூலுள் கூறப்பெறுவதைச் சுருக்கமாகவும், சிறப்பாகவும் அழகுபெறக் கூறுவது.

– 'பாயிரம்' என்னும் சொல்லுக்கு இணையாக இத்தனைச் சொற்கள் உண்டு என்று மேற்காட்டிய நன்னூல் நூற்பா (சூத்திரம்) விளக்கும்.

'நன்னூ'லுக்கு முன்னூல் எவற்றிலும் இவ்வகையான பாயிரக் குறிப்புகள் இல்லை. பெயர்களும் இல்லை. பயன்படுத்தமும் இல்லை. நன்னூல் ஆசிரியர் பவணந்தி முனிவர் காலம் கி.பி. 12-ஆம் நூற்றாண்டு.

நன்னூலுக்கு முன், கி.பி. 8-ஆம் நூற்றாண்டினதாகக் கருதப்பெறும் **பழமொழி** நானூற்றில் பாயிரம் என்னும் சொல் 165-ஆம் பாட்டில் ஒரே இடத்தில் மட்டும் முதன் முதலாக வருகிறது. அப்பாடல் இது:

'மறுமனத்தன் அல்லாத மாநலத்த வேந்தன்
உறுமனத்தன் ஆகி ஒழுகின்-செறு மனத்தார்
பாயிரம் கூறிப் படைதொக்கால் என் செய்ப
ஆயிரம் காக்கைக்கோர் கல்'

இதிலுள்ள பாயிரம் என்னும் சொல்லுக்கு வீரத்திற்கு வேண்டும் முகவுரை என்று பழைய உரை கூறுகிறது.

இதுதவிர, பாயிரம் என்னும் சொல் வேறு எந்தக் கழக நூலிலும் பயிலப்பெறவில்லை.

தமிழிலக்கண வரலாற்றியல்படி, கி.பி. 12-ஆம் நூற்றாண்டினதான நன்னூலில்தான் பாயிரம் கூறுவதற்குரிய இலக்கணம் கூறப்பெற்றுள்ளது.

தொல்காப்பிய மரபியலில் நூல்மரபு பற்றிய நூற்பாக்களிலும் நூலுக்குப் பாயிரம் கூறுவது மரபு என்பது கூறப்பெறவில்லை.

அவ்வாறிருப்பினும், தொல்காப்பியத்திற்குச் சிறப்புப் பாயிரமாகப் பனம்பாரனார் என்பவர் செய்த பாயிரம் ஒன்று காணப்பெறுகிறது. எனவே, இதுபற்றிய வரலாறு மயக்கமளிப்பதாக உள்ளது.

எஃது, எவ்வாறிருப்பினும், நூலுக்குப் பாயிரம் பாடுவது ஒரு மரபாக உள்ளது. பிற்கால நூல்களால் தெரியவருகிறது.

இவ்வகையில் திருக்குறளுக்கு அமைந்துள்ள பாயிரமும் ஐயுறவுக் கிடமளிப்பதாகவே உள்ளது கருதத்தக்கது.

மேலும், நன்னூலில் கூறப்பெறும் இலக்கண முறைப்படி பாயிரம் என்பது, **பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம்** என இருவகைப்படும்.

பாயிரம், பொதுச் சிறப்பு எனவிரு பாற்றே

– நன்.2

இதன்படியும் திருக்குறளில் உள்ள பாயிரம் பொதுப்பாயிரமா, சிறப்புப் பாயிரமா என்றும் மதிப்பிட்டுக் கூறுவதற்கியலாமல் உள்ளது அறியத்தக்கது.

இனி, நன்னூலில் பாயிரம் கூறப்பெறுவதற்கு உரியோராகக் கூறப் பெறுவோர்,

'தன்ஆ சிரியன் தன்னொடு கற்றோன்
தன்மா ணாக்கன் தகும்உரை காரன் என்று)
இன்னோர் பாயிரம் இயம்புதல் கடனே'

– நன்.51

என்று கூறப் பெற்றிருப்பதற்கேற்ப, திருக்குறள் பாயிரம் மேற்கூறிய எவராலும் கூறப் பெறாமல், ஆசிரியர் பெயராலேயே கூறப் பெற்றதாக அமைந்திருப்பதும் அவ்வையுறவுக்கு அரண் சேர்ப்பதே.

மேலும், நூலாசிரியரே பாயிரம் கூறுதல் தகாது என்றும், மேற்கூறப்பெற்றவருள் ஒருவரே பாயிரம் செய்தல் வேண்டும் என்றும் கீழ்வரும் நூற்பாக்களுள் வலியுறுத்தப் பெறுகிறது.

தோன்றா தோற்றித் துறைபல முடிப்பினும்
தான்தற் புகழ்தல் தகுதி யன்றே.

– நன் 52

இதன் உரையாகத், 'தோன்றாத நுட்பங்களெல்லாம் தோற்றிப் பலதுறைப் பட்டு விரிந்தநூலைச் செய்து முடித்தானாயினும், தன்னைத்தான் புகழ்தல் தகுதியன்றாமாதலின், நூல் செய்தானது புகழாகிய சிறப்புப் பாயிரத் தைப் பிறர் கூற வேண்டும்', என்றவாறு கூறப்பெற்றுள்ளது.

இனி, இதற்கடுத்த நூற்பாவிலும்,

'தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்
மன்னிய அவையிடை வெல்லுறு பொழிதினும்
தன்னை மறுதலை பழித்த காலையும்
தன்னைப் புகழ்தலும் தகும் புல வோர்க்கே

– நன்.53

இதில் வரும் 'புகழ்தலும்' என்ற உம்மையான், இவ்விடங்களிலும் தன்னைப் புகழாமையே தகுதியென்பது பெற்றாம், என்று உரை விளக்கமும் இதற்குக் கூறப்பெற்றுள்ளது.

இவ்விரு வகையால் நோக்கினும், திருக்குறள் பாயிரம் நூலாசிரியரால் கூறப்பெறுவது கூடாதென்றே தடுக்கப்பெற்றுள்ளது.

இந்நிலையிலும் நூலாசிரியரே பாயிரம் கூறியிருப்பாரோ, அவ்வாறி ருப்பின் அது பாயிரமாக இருக்குமோ என்றெல்லாம் ஐயம் எழுகிறது. அவ்வாறு எழவே, – இது பாயிரமாக இருத்தல் இயலாது என்றோ, அவ்வாறு இருப்பின், இதை நூலாசிரியராகிய திருவள்ளுவரே கூறியிரார் என்றோ, முடிவு கொள்ள வேண்டியுள்ளது.

இனி, அது சிறப்புப் பாயிரம் என்னில், அதில் கூறப்பெற வேண்டிய கருத்துகள் இன்னின்ன என்றும் நன்னூல் கீழ்வருமாறு விளம்புகிறது.

'ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆயென் பொருளும்
வாய்ப்புக் கேட்டல் பாயிரத்து இயல்பே'

– நன்47

'காலம் களனே காரணம் என்றுஇம்
மூவரை ஏற்றி மொழிநரும் உளரே'

– நன்.48

அஃதாவது, ஆக்கியோன் பெயர், அந்நூல் வழிநூலா அல்லது முதல்நூலா என்பது, அந்நூல் வழங்குதற்குரிய இட எல்லை, அந்நூலின் பெயர், அஃது அமைந்துள்ள யாப்பு, அந்நூல் கூறுகிற பொருள், அதனைக்

கேட்பதற்கு உரியவர், அதன் பயன், அது தோன்றிய காலம், அது தோன்றிய இடம், அது தோன்றுவதற்குரிய காரணம். - ஆகிய பதினொரு விளக்கங்களும் அப்பாயிரத்துள் கூறப்பெறுதல் வேண்டும் என்பது இவ்விரு நூற்பாக்களிலும் கூறப்பெற்றுள்ளது.

இப்பதினொரு கருத்து விளக்கங்களிலும் ஒன்றுதானும், திருக்குறள் பாயிரத்துள் கூறப்பெறவில்லை என்பது வெளிப்படை யாகலின், திருக்குறளில் கூறப்பெற்றுள்ள பாயிரவியலும், அதனுள் வரும், **'அறமுதல்' 'உணர்தல்'**, பிறர் கூறும் **கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல்** ஆகிய நான்கு அதிகாரங்களும் திருக்குறளுக்கு இயைபானவையா இல்லையா என்றும் ஐயுற வேண்டியுள்ளது.

இயைபானவை என்றால், அவை **'பாயிரவியல்'** என்று பெயர் பெற்றிருப்பது பொருந்தாது என்றே கருத வேண்டியுள்ளது. எனவே இதனை இடைச்செருகல் என்றே பிற்கால உரையாசிரியர் சிலர் கூறுவர். இது தொடர்பாகத் **'திருக்குறள் மரபுரை'** ஆசிரியராகிய **'பாவாணர்,** திருக்குறட்குப் பாயிரந் தேவையில்லை யென்பதும் அஃது **'இடைச் செருகல்'** என்பதும், ஆராய்ச்சியில்லார் கூற்றேயென அறிக' என்று முடிவு கூறுவர்- (மேற்படிநூல் - முன்னுரை பக்.30)

இனி, ஒரு நூலுக்குப் பாயிரம் மிகவும் இன்றியமையாதது என்பதையும் நன்னூலார் கீழ் வருமாறு கூறுவார்.

ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும்
பாயிரம் இல்லது பனுவல் அன்றே.

— நன்.54

மாடக்குச் சித்திரமும், மாநகர்க்குக் கோபுரமும்
ஆடமைத்தோள் நல்லார்க்(கு) அணியும்போல்-நாடிமுன்
ஐதுரையா நின்ற அணிந்துரையை எந்நூற்கும்
பெய்துரையா வைத்தார் பெரிது

— நன்.55

பருப்பொருட் டாகிய பாயிரம் கேட்டார்க்கு
நுண்பொருட் டாகிய நூலினது விளங்கும்

— தனியன்

இனி, 'பாயிரம் என்பது வரலாறு'

— நூ

நூற்கு இனியமையாத அணியாய் முன் உரைக்கப் படுவதை

உரை

என்றும் கூறுவன, பாயிரத்தின் இன்றியமையாமையை மேலும் வலியுறுத்தும்.

இனி, திருக்குறளுக்கு வாழ்த்துரைகளாக வழங்கும் **'திருவள்ளுவமாலை'ச்** செய்யுள்கள் சிலவற்றாலும், இப்பாயிரவியல் பற்றிப் பலவாறான குழப்பங்களும் குளறுபடிகளும் நேர்ந்துள்ளன.

முதற்கண்,

'திருவள்ளுவ மாலை'யில் உள்ள **நத்தத்தனாரின்** 16-ஆவது பாடலின் முதலிரண்டு அடிகள்

'ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததற்பின்'

என்று வருகின்றன.

இதில், பாயிரம் என்பது, இப்பொழுதுள்ள 1330 குறட்பாக்களுக்கும் அப்பாற்பட்ட மிகைப்பகுதியாகக் குறிக்கப் பெற்றுள்ளது.

இப்பொழுதுள்ள பாயிரப் பாடல்கள் பாயிரமே ஆகாத நிலையில், வேறு பாயிரப் பகுதி அல்லது இயல் ஒன்று இருந்திருந்து அழிந்தோ அல்லது மறைக்கப்பட்டோ போயிருக்குமோ என்பது ஐயமாகிறது.

ஆனால், இதற்கு இன்று வரை விடையில்லை.

இனி, இரண்டாவதாக, **சிறுமேதாவியாரின்** 20-ஆம் பாடலாகிய,

வீடொன்று பாயிரம் நான்கு விளங்கறம்
நாடிய முப்பத்து மூன்று ஒன்று ஊழ்-கூடுபொருள்
எள்ளில் எழுபது இருபதிற் றைந்துஇன்பம்
வள்ளுவர் சொன்ன வகை

என்னும் பாடலில், இக்கால் உள்ள நூல் அதிகாரங்கள் 133-க்கு மேல் வீடு என்று ஓர் அதிகாரமும் உள்ளதாகக் குறிப்பு இருப்பதை மேலோட்டமாகப் பார்த்தால் தெரியும். அது கொண்டு, சிலர் திருக்குறளின் மொத்த அதிகாரங்கள் 134 என்றும், மொத்த குறட்பாக்கள் 1340 என்றும் கூறுவர். ஆனால் இது தவறாகவும் இருக்கலாம். எவ்வாறெனில், வீடொன்று என்பதை வீடு + ஒன்று என்று எண்ணுப் பொருள் கூறாமல், வீடொன்று என்பது 'வீடு பொருந்திய பாயிரம்' என்று விளக்கப் பொருளாகவும் கொள்ளலாம். அவ்வாறு கொள்ளவே இக்கருத்துக் குழப்பம் நீக்கம் பெற்று விடுகிறது.

இதேபோல், மேற்குறித்த நத்தத்தனார் பாடலையும் பொருள் கோள் முறையில்,

'பாயிரத்தினோடு ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளும் பகர்ந் ததற்பின்' என்று கொள்ளின், அதில் உள்ள சிக்கலும் தீர்ந்துவிடுவதை உணரலாகும். ஆனால் இவ்விரு பாடல்களும் இவற்றுடன் 25-ஆம் பாடலும் திருக்குறளுக்குப் 'பாயிரவியல்' ஒன்றிருப்பதையே புலப்படுத் துகின்றன.

இனி, மூன்றாவதாக, தொடித்தலை விழுத்தாண்டினாரின் 22-ஆம் பாடலில்,

'அறம்நான்(கு) அறிபொருள் ஏழொன்று'

என்னும் முதலடியில் வரும் கருத்தும் கவனிக்கத் தக்கதாகும்.

இதுவும் எண்ணுச் சிக்கல் ஆகும்.

அஃதாவது, 'அறத்துப்பால் நான்கு இயல், பொருட்பால் ஏழு ஒன்று இயல்களும், காமத்துப்பால் 3 இயல்களும் என்று இப்பாடலில் இயல்கள் 4+8 (அஃதாவது 7+1) +3=15 இயல்களுமாகக் கூறப்பெற்றுள்ளதும் ஒருவகைக் குழப்பமே. அஃதாவது, காமத்துப்பாலை, ஆண்பால் கூற்றியல், பெண்பால் கூற்றியல், இருபால் கூற்றியல் எனப் பிரித்துக் கூறுவர். இக்கால், பரிமேலழகர் இயல் பகுப்பு முறைப்படி உள்ளவை மொத்தம் 13 இயல்களே!

இப்பாடலை, 'நான்கு இயல்கள் கொண்ட அறம் ஒரு பகுதி, பொருட் பால் ஒரு பகுதி, காமத்துப்பால் ஒரு பகுதி, ஆக மூன்று பாற்பகு திகளாகப் பகுத்து, என்று பொருள் கொள்ள இக்குழப்பமும் நீங்கி விடுவதாகக் கருத இடமுண்டு.

இனி, திருவள்ளுவமாலைச் செய்யுள்களில் உள்ள பிற இயல், அதிகாரப் பகுப்புக் குழப்பங்கள், பொதுமுன்னுரையில் முன்னரே கூறப் பெற்றுள்ளதை ஆண்டு அறிக.

இனி, 'பாயிரம்' என்னும் சொற்பொருளும் ஆயத்தக்கது என்க.

இது தொடர்பாக, மொழியியல் பேரறிஞர் பாவாணர் தம் மரபுரையின் முன்னுரையில் பக்கம் 30 – இல் கீழ்வருமாறு கூறியிருப்பது கருதத்தக்கது.

"பாயிரம் என்னும் சொல், முதற்கண் போர்மறவர் போர்க்களத்தில் பகைவரை விளித்துக் கூறும் **நெடுமொழி** என்னும் மறவியல் முகவுரையைக் குறித்து பின்பு நூல் முகவுரையைக் குறித்தது.

1) பயிர்தல் -ஊரி (ஊர்வன), விலங்கு, பறவைகள் ஒன்றையொன்று அழைத்தல்

'செங்காற் பல்லி தன்துணை பயிரும் – குறுந் :16
'கடுவன்... மந்தியைக் கையீடுஉப் பயிரும்'

– புறம்:158

'புலம்புதரு குரல புறவுப்பெடை பயிரும்' – குறுந் 79

2. **பயிர்தல்** - மக்களை அழைத்தல்

நாடுபுறை பயிருங்காலை முரசம்

– சிலப் 26-52

பயிர்-பயிரம்-பாயிரம் =அழைப்பு, போருக்கழைப்பு, போருக்கு அழைக்கும் முன்னுரை, முகவுரை

(ஒ.நோ.) அகவுதல் – அழைத்தல்
அகவு- அகவம்-போர்

– இவை பாவாணர் சொற்பொருள் விளக்கங்கள்.

பாவாணர் கருத்துப்படி, போர்க்களத்தில் பகைவரை விளித்துக் கூறும் **'நெடுமொழி'** என்னும் **'வஞ்சின மொழி',** மறவியல் முகவுரையைக் குறித்துப் பின்பு நூன்முகவுரையைக் குறித்தது என்பது சரிதானா?

போர்மறவர் தாம் போருக்குப் புறப்படும் முன் நெடுமொழி என்னும் வஞ்சின மொழி கூறும் வழக்கம் தமிழகத்திலிருந்தது.

மாராயம் பெற்ற நெடுமொழியானும்

– தொல் :1009.5

– நெடுமொழியென்பது வஞ்சித்துணையின் பதின்மூன்று துறைகளுள் ஒன்று என்று தொல்காப்பியம் கூறுகிறது. இது **நெடுமொழி வஞ்சி** என்றே அழைக்கப் பெறுவது.

மோகூர் மன்னன் முரசம் கொண்டு
நெடுமொழி பிணித்து

– பதிற் 49.15

நிரைபல குழீஇய நெடுமொழிப் புல்லி
தேன்தூங்கி உயர்வரை நன்னாட்டு உம்பர்
வேங்கடம் இறந்தனர்

– அகம்: 393.18-20

'கடுமான் கோதை துப்பெதிர்த் தெழுந்த
நெடுமொழி மன்னர்'

– புறம் 54-9

'எறிபடை மயங்கிய வெருவரு ஞாட்பின்
கள்ளுடைக் கலத்தர் உள்ளூர்க் கூறிய
நெடுமொழி மறந்த சிறுபே ராளர்.'

புறம் 178.7-9

'நெடுமொழி பயிற்றித் தோன்றல் செல்லாது'

– புறம் 376.22

இவ்வாறு, நெடுமொழி, வஞ்சினமொழி என்பதும், அது போருக்கு அழைக்கும் அழைப்பாகும்-முகவுரையாகும் - என்பதும், இங்குக் காட்டிய பல்வேறு எடுத்துக் காட்டுகளால் தெரியவரினும், அவ்வழைப்பு அல்லது முகவுரை போன்றதுதான் பாயிரம் என்னும் நூல்முகப்பும் என்பது முற்றிலும் பொருந்துமாறில்லை.

மேலும், அழைத்தல் என்று பொருள்படும் 'பயிர்தல்' என்னும் சொல்லே, பயிரம்-பாயிரம் என்று முன் நீண்டு, முகவுரையைக் குறித்தது என்னும் சொல்லாய்வு வரலாறு தழுவியதாகவும் தெரியவில்லை. அது வரலாறு தழுவியதாக இருந்திருப்பின் 'பயிரம்' என்னும் சொல்லாட்சி இலக்கியங்களுள் ஆளப் பெற்றிருக்கும். அவ்வாறு இச்சொல் எந்த நூலிலும் ஆட்சி பெறவே இல்லை. மேலும் பாயிரம் என்னும் சொல்லே கூட முன் கூறப்பெற்ற 'பழமொழி நானூ'றில் ஓரிடத்தில் மட்டும், அதுவும் போர் அழைப்புப் பொருளில்தான் வந்துள்ளது என்பதை நாம் கவனித்தல் வேண்டும்.

இவ்வாறு நன்னூலார்க்கு (கி.பி. 13-ஆம் நூற்றாண்டிற்கு முன், நூல் வழக்கேறாத ஒரு சொல்லால் திருவள்ளுவர் (கி.மு. 2-அல். 3-ஆம் நூற்றாண்டு) தம் நூலுள் 'பாயிரவியல்' என்றோர் இயல் வகுத்துப் பெயரிட்டிருப்பார் என்பது எவ்வாற்றானும் பொருந்தாத ஒரு கூற்றே என்பதில் ஐயமே இல்லை.

ஆனால் அவ்வையப்பாட்டின் அடிப்படையில், இற்றைப் பாயிரவியலில் உள்ள முதல் நான்கு அதிகாரங்களும் திருக்குறளைச் சார்ந்தவை அல்ல என்றோ, அவற்றைத் திருவள்ளுவர் எழுதியிருத்தல் முடியாது என்றோ, அவை இடைச் செருகலாய் இருக்கலாம் என்றோ மதிப்பிடுவது அல்லது முடிவு செய்வது கொஞ்சமும் பொருத்தமாயில்லை.

எஃது எவ்வாறிருப்பினும், திருக்குறள் பாயிரவியலில் இடங் கொண்டுள்ள நான்கு அதிகாரங்களும் திருவள்ளுவரால் எழுதப் பெற்றிருக்கா என்பதை உறுதிப்படுத்திக் கூறுவதற்கு எந்த அடிப்படைக் காரணமும் காட்டவியலாது. ஏனெனில் அந்நான்கு அதிகாரங்களும் **'பாயிரவியலில்'** என்று அடக்கிக்கூறப் பெறுவதற்குப் பொருத்தமாயில்லை என்று கருதலாமே தவிர, அவை திருக்குறள் நூல் அமைப்பிற்கு ஒத்தனவாக இல்லை என்று கூறவியலாது.

முதல் அதிகாரம் **கடவுள் வாழ்த்து** என்று கூறப் பெறுவதற்குப் பொருத்தமாயில்லை என்று உரையாசிரியர் பலரும் கருத்துக் கூறுவது ஒருவாறு ஏற்புடையதே. எனவேதான் அதற்கு இவ்வுரை நூலில் **அறமுதல் உணர்தல்** என்று பெயரிடப் பெற்றுள்ளது. இது பற்றிய கரணியங்களை அவ்வதிகார முன்னுரையில் விளக்கமாகக் காட்டியிருக்கிறோம்.

இதன் இரண்டாவது அதிகாரம் **'வான்சிறப்பு'** என்பது.

'வான் சிறப்பு' அதிகாரம் மழையினது தேவையையும், அதன் சிறப்பியல்களையும் கூறுவதாக அமைந்திருப்பது, திருக்குறளின் கருத்தியலுக்குப் பொருந்துமாறில்லை என்றே ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆனால், அதனை அவ்வாறு எளிதாகக் கருதித் தள்ளிவிடவும் இயலாது. அதன் உள்ளுறையும் கருத்துகளும் திருவள்ளுவப் பேராசானால் கருதுமாறு போலவே அமைந்திருப்பதை ஊன்றிக் கவனித்து உணரலாகும்.

உலகின் உயிரியக்கத்திற்கு ஊன்று கோலாய் விளங்கித் தோன்றும் அறவுணர்வின் முதற்செயற்பாடு மழையின் வழியாகவே உணரவும் உணர்த்தவும்பெறும் என்பதை அறிவினார் ஊன்றி அறியலாம்.

எனவே **'அறமுதல் உணர்தல்'** என்னும் முதல் அதிகாரத்தை யொட்டியும் அதனை அடுத்தும் **'வான் சிறப்பு'** அதிகாரம் அமைந்திருப்பதும் மிகவும் பொருத்தமானதே! இவ்வாறு அதிகாரங்களும் உலக இயக்கத்திற்குரிய அடிப்படையான இயங்கியல், மெய்ப்பொருளியல் ஆற்றல்களை மக்களமைப்பிற்கு உணர்த்துவதற்காகவே அமைந்திருப்பனவாக உணரலாம்.

இனி, இவ்வியலின் மூன்றாவது அதிகாரமாக அமைந்திருப்பது, அல்லது அமைக்கப்பெற்றிருப்பது **'நீத்தார் பெருமை'** அதிகாரமாகும். இதுவும் அறவுணர்வின் பாற்பட்டு இயங்கும் மீமிசை மாந்தத் தன்மையை மக்கட்கு உணர்த்துவதாகும். இதனின் பொருத்தத்தையும் சிறப்பையும் கூட அவ்வதிகார முன்னுரையில் விளக்கியுள்ளோம்.

அடுத்து, இவ்வியலின் நான்காவதும் இறுதியானதுமாகிய அதிகாரம் **'அறன் வலியுறுத்தல்'** ஆகும். இதனது தேவையையும் பொருத்தத்தையும் சிறப்பையும்கூட அவ்வதிகார முன்னுரையில் நன்கு விளக்கப்படுத்தியுள்ளோம்.

இனி, **'அறமுதல் உணர்தல்', 'வான்சிறப்பு', 'நீத்தார் பெருமை', 'அறன் வலியுறுத்தல்'** ஆகிய நான்கு அதிகாரங்களையும் கொண்ட இயலுக்கு ஒரு பெயர் சூட்டுவதாயின் அறவியல் என்னும் பெயரே மிகவும் பொருந்துவதாகும். நான்கு அதிகாரங்களும் அறத்தொடர்புடையன என்பதில் யாருக்கும் ஐயப்பாடு வரவேண்டியதில்லை.

இவ்வாறு இவ்வியலை அமைத்துக் கொள்வதானால் **அறத்துப்பால்** என்னும் பால்பகுப்பில், **அறவியல், இல்லறவியல், துறவறவியல், ஊழியல்** என்னும் நான்கு இயல்கள் அடங்குவதாகக் கொள்ளலாம்.

'பாயிரவியல்' என்பதைவிட அறவியல் என்பதே இவ்வியலுக்கு மிகப் பொருத்தம் உடையது. பாயிரவியல் என்பது எவ்வகையிலும் பொருத் தமிலாத பெயராகும். பாயிரம் என்பதன் இலக்கணக் கூறுகளில் ஒன்றுகூட இந்நான்கு இயல்களில் இல்லையென்பது ஒன்று. பாயிரம் என்னும் சொல்லே தொல்காப்பியர் காலத்திலோ, திருவள்ளுவர் காலத் திலோ தோன்றியிருக்கவில்லை என்பதால் திருவள்ளுவரே இவ்வியலுக்கு இப்பெயரைச் சூட்டியிருக்க முடியாதென்பது, இரண்டு.

எனவே **'பாயிரவியல்'** என்று இதுகாறும் வழங்கிவந்த இவ்வியல், இந்நூலில் அறவியல் என்று புதுப்பெயர் கொண்டு வழங்கப்பெறுகிறது என்க. இப்பெயர்த்தகுதி நோக்கி, அறிஞர்கள் இனி, இப்பெயராலேயே இவ்வியலை வழங்கி வருவார்களாக.

'அறவியல்' என்பது இயற்கையாக நின்றியங்கும் ஒழுகியலுக்கு ஒத்த அமைப்பு விளக்கமாக அமைந்துள்ளதை அறிவினார் அறிந்து மகிழ்க.

o

அ-1. பாயிரவியல்

அ-1-1. அறமுதல் உணர்தல்-1.

அதிகார முன்னுரை:

இறைமை உணர்வு தேவை :

செயற்கைக்கும் இயற்கைக்கும் அடிப்படையான மூல அறக்கூறை நினைந்து, உணர்வொன்றிப் போற்றுதலாகும் இது.

அறமுதல் - இயங்கியலின் மூல மெய்ப்பொருள்.

அஃதாவது மூல உண்மை.

உலக அறவியலும்[1], இயங்கியலும்[2], வாழ்வியலும் வகுத்துச் சொல்லப் புகுந்தவர், முதற்கண், இவ்வுலக உயிர்களும், அவற்றுக் கிருப்பிடனாய இவ்வுலகமும், அதுவும் பிறவும் இயங்குறும் இப்புடவியும்[3], அது போற் பலவும் நின்று இயங்குவதற்கு அடிப்படையாய் நிற்கும் அறமுதலாகிய இறைமைப் பேராற்றலும், அதற்கும் நம் வாழ்வியலுக்கும் உள்ள தொடர்பும், அத்தொடர்பால் விளைதரும் நன்மைகளும் கூறுவான்

---

1. அறவியல் - Science of ethics or Virtue. The reality of Natural existance. அறவுணர்வின் இயல்பாந் தன்மைகள், இயற்கையின் ஒழுங்கியல்.
2. இயங்கியல் - பூதவியலும் (Physics), வேதியலும் (Chemistry) இணைந்து, பொருளாகவும் (Matter), ஆற்றலாகவும் (Energy), இயற்கையாய் அமைந்து, தானியங்கு நிலை. (Naturalism, Spontaneousness).
3. புடவி - பிரபஞ்சம் (Universe)

வேண்டி, அவ்வற முதலாம் இறைமையுணர்வுத் தேவையை இவ்வதிகாரத் தின்கண் கூறப் புகுந்தார்.

அதிகாரப் பெயர் மாற்றம் - அறமுதல் உணர்தல்:

பிற உரையாசிரியர்கள் கொண்ட பாடங்களில் இவ்வதிகாரப் பெயர் **'கடவுள் வாழ்த்து'** முதலிய வேறு பெயர்களில் உள. கடவுள் என்னும் பெயர்க் குறிப்பு இவ்வதிகாரத்து மட்டுமன்றி, நூலுள் வேறு எங்குமே வராமையானும், இறைவன் வேறு, கடவுள் வேறு, தெய்வம் வேறு ஆகலானும், இறைவன் என்று இவ்வதிகாரத்துள் வந்த (5,10) ஈரிடங்களிலும்கூட, அறமுதலையே உணர்த்தியுள்ளார் ஆகலானும், இவ்வதிகாரப் பெயர் **அறமுதல் உணர்தல்** - (அஃதாவது அறத்தின் முதலாக நின்றியங்கும் மூலமெய்ப் பொருளாகிய இறைமையை உணர்தல்) - என மாற்றப்பெற்றது.

'வாழ்த்து' எனும் சொல்லும், பொருளும் பொருத்தம் இன்மையாலும் அச்சொல்லும் தவிர்க்கப்பெற்றதென்க.

இறைவன், கடவுள், தெய்வம்:

இறைமை அல்லது **இறைவன்:** தோற்றம் கொண்ட அனைத்துக்கும் மூலமாய், முதலாய் நிற்கும் முதற்பொருள் அல்லது மூல ஆற்றல் தனித்து நிற்கும் நிலை.

கடவுள்: அம்மூலப்பொருள் உயிர்களுடன் கலந்து நிற்கும் நிலை. இறக்க(அவதார) நிலையும் அது.

தெய்வம்: உயிர்களுள் மேம்பாடுற்றுச் சிறந்த மீமிசை மாந்த உயிர்கள், உலகத்து வாழ்ந்து மறைந்து, மீண்டும் உடற்பிறவியற்று உயிரொளியாய் இயங்கும் நிலை.

இம்மூன்று நிலைகளும் தொடக்கத்தே வேறு வேறு காலங்களில் கருத்துப் படிநிலையும், சொற் படிநிலையுமாகிய வளர்ச்சி பெற்றுப் பல்வேறு உணர்வு நிலைகளை உணர்த்தி, இக்கால் ஒன்றெனவும் மிகைப்படவும் மயங்கி வழங்குகின்றன. தெள்ளிதின் உணர்வதற்காக இங்கு வேறு பிரித்துச் சொல்லப்பெறுகிறது. இவற்றின் தோற்ற விரிவு விளக்க வரலாறெல்லாம் இதன் **'நிறைவுரை'**யில் கூறப்பெறும்.

இந்நூலைப் பொறுத்த அளவில், கடவுள் என்னும் சொல் கையாளப் பெறவில்லை. ஆனால் திருவள்ளுவர் காலத்திற்கு முன்பிருந்தும், அவர் காலத்தும் அவர்க்குப் பின்னும் இச்சொல் நெடுகலும் வழங்கப் பெற்றுள்ளது. இச்சொல்லை அவர் ஏன் தவிர்த்தார் என்பது புலப்படவில்லை. அவர் காலத்தில் ஆரியச் சார்பான கடவுள் இறக்க(அவதார) நிலைக் கதைகளும் தமிழகத்துள் வழங்கியுள்ளமை

அறியப்பெறுகிறது. அவற்றை அவர் அறிந்திருக்கவே முடியும். ஆனால், ஏனோ அவற்றாலெல்லாம் அவர் கவரப்படவில்லை என்றே தெரிகிறது.

அவர் இந்நூலுள் கடவுள் என்னும் சொல் தவிர, இறை - இறைவன், தெய்வம் என்னும் மற்றிரண்டு சொற்களையும் பயன்படுத்தியுள்ளார். **'இறை'** என்னும் சொல், ஏழு இடங்களில் (388, 541, 547, 564, 733, 847, 1157) வருகின்றது. இவற்றுள், ஒரே ஓர் இடத்தில் (388) மட்டுந்தான் அஃது இறைவனைக் குறிக்கிறது. மற்ற, இரண்டு இடங்களில் (547, 564) அரசனையும், ஓர் இடத்தில் (541) அரசு அல்லது நடுநிலையையும், ஓர் இடத்தில் (733) இறைப்பொருளையும், ஓர் இடத்தில் (847) வருத்தத்தையும், மற்று ஓர் இடத்தில் (1157) மணிக்கட்டையும் குறிக்கின்றது.

அதேபோல், **இறைவன்** என்னும் சொல் ஐந்து இடங்களில் (5, 10, 690, 733, 778) வருகிறது. இவற்றுள் இரண்டு இடங்களில் (5, 10) மட்டும் இறைவனைக் குறிக்கிறது. மீதி மூன்று இடங்களிலும் (690, 733, 778) அரசனையே குறிக்கின்றது.

இனி, **தெய்வம்** என்னும் சொல் ஆறு இடங்களில் (43, 50, 55, 619, 702, 1023) வருகிறது. அவ்வாறு இடங்களிலும் அது தெய்வத்தையேதான் குறிக்கிறது.

இம்மூன்று சொற்களின் பயன்படுத்தங்களையும் வைத்துப் பார்க்கும் பொழுது, திருவள்ளுவர் அனைத்து நிலைகளின் மூல முதற்பொருளாகிய 'இறைமை' அஃதாவது 'இறைவனை'யும், மாந்த நிலையினின்று மேம்பட்டு உயர்ந்த 'தெய்வ' நிலையினையும் ஒப்புகிறார். **கடவுள் நிலையை அவர் கருதவில்லை, அல்லது ஏற்கவில்லை என்றே தெரிகிறது.**

தமிழியலும் ஆரியவியலும் :

இதற்கு ஒரே ஒரு காரணியந்தான் இருக்க முடியும் என்று தோன்றுகிறது. அஃது, இறைமையுண்மையையும் தெய்வ உண்மையையும் ஏற்கனவே உள்ள, ஆரியம் கலவாத தமிழியல் நிலைகள் என்றும், கடவுள் நிலை ஆரியவியல் பெரிதும் கலந்த கலப்புநிலை என்றும் அவர் கருதியதாகத் தெரிகிறது. ஆம், கடவுள் நிலைகளில்தான் ஆரியம் பற்பல கடவுளர்களை உருவாக்கித் தமிழர்தம் மெய்யியலையும் (Philosophy), இறையியலையும் (Theology) ஒரு கலக்குக் கலக்கியிருக்கிறது. **கடவுளர், கடவுளாளர்** என்று கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பிற்கால நூல்களில் வரும் பல கடவுள் கொள்கை (Pantheism) ஐயப்படாது ஆரியவியல் சார்ந்ததே என்க. மிகப் பிற்கால நூல்களில் **இறைவர், தெய்வ கணங்கள்** என்றும் குறித்திருப்பதும் ஆரியவியல் நன்கு வேரூன்றிவிட்டதைக் காட்டும். இராமன், கிருட்டிணன், மற்று விண்ணு (விஷ்ணு)வின் பத்து திருவிறக்க(அவதார)க் கொள்கையெல்லாம் முழுக்க முழுக்க ஆரியவியலைச்

சார்ந்தனவே! தமிழ்த் தெய்வமான திருமால் வேறு; ஆரியக் கடவுளான விஷ்ணு வேறு. இரண்டையும் ஆரியர்கள் தமிழில் சமசுக்கிருதக் கலப்புபோல் மயக்கினர். இவ்வகையில் இக்கால், உள்ள, தென்னாட்டுக்கே உரித்தான, சிவனிய(சைவ)க் கொள்கையிலும், திருமாலிய(வைணவ)க் கொள்கையிலும், தமிழியலும் ஆரியவியலும், பிரித்துணராதவாறு, மயங்கியே கிடக்கின்றன. தமிழினின்று சமசுக்கிருதத்தைப் பிரித்தெடுப்பதுபோல், சிவனிய, மாலியக் கொள்கைகளிலிருந்து, சங்கர, விஷ்ணுக் கொள்கையைப் பிரித்து உணர்த்துவதும், பிரித்தறிவதும், பிரித்தெடுப்பதும், கடல் நீரில் கலந்த சாய்கடை நீரைப் பிரித்தெடுப்பது போல, மிக மிகக் கடினம் என்க.

இறைவனுக்குப் பெயரும் இல்லை; வடிவமும் இல்லை:

காளி, மாரி, முருகன், சிவன், திருமால், வாரணன் முதலியவை தமிழ்த் தெய்வங்கள் அல்லது கடவுள்கள். தமிழியலில் இறைவனுக்குப் பெயரும் இல்லை; வடிவமும் இல்லை. தொல்காப்பியத்தில், பொருளதிகாரம், புறத்திணையியலில் வரும்

> கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
> வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
> கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே
>
> - தொல்.1034.

என்னும் நூற்பாவில் குறிப்பிடப்பெறும், **கொடிநிலை** என்பது ஞாயிற்றையும், **கந்தழி** என்பது நெருப்பையும், வள்ளி என்பது நிலவையுமே குறிக்கும். இவைதாம் தமிழர்களின் முதல் மூன்று கடவுள்கள். அதனால்தான் அவை 'முதலன மூன்றும்' என்று குறிக்கப்பெற்றன.

இவற்றின் வரலாற்று விரிவெல்லாம் மறுக்கவொண்ணாச் சான்றுகளுடன் இதன் நிறைவுரையில் குறிக்கப் பெறும்.

இறைவன், பிரகிருதி, பிரம்மம்:

மற்றபடி, தொல்காப்பியத்தும், கழக இலக்கியங்கள் யாவற்றினும் பரவலாக இறைவன், கடவுள், தெய்வம் எனும் மூன்று சொற்களும் குறிக்கப் பெறுவதால், மிகவும் தொன்மை நிலையிலேயே தமிழர்கள் அனைத்துக்கும் மூலமாய் முதலாய் நிற்கும் இறைமை நிலையை உணர்ந்திருந்தனர் என்பது உறுதியாகிறது. தமிழியலில் மூலப்பொருள் **இறைமை** என்றும், ஆரியவியலில் மூலப்பொருள் **'பிரகிருதி'** அல்லது **'பிரம்மம்'** என்றும் வழங்கப்பெறுகின்றது.

'இறைமை' என்னும் தூய தமிழ்ச்சொல்லுக்கு, 'தங்கியிருப்பது' 'நிலையாயிருப்பது', 'என்றும் இருப்பது', 'இறுதியாய் இருப்பது', 'மூலமாய் இருப்பது' என்பவெல்லாம் பொருளாம்.

'பிரகிருதி' என்னும் சமசுக்கிருதச் சொல்லுக்கு, (பிர-முதல், கிருதி-படைப்பு) **படைப்பு மூலம்** என்பது பொருள்.

'பிரம்மம்' என்னும் சமசுக்கிருதச் சொல்லிற்கும் 'ஆதிகரணம்' அல்லது 'மூலக்காரணம்' என்பது பொருள்.

இனி, எவ்வாறேனும், தொல்காப்பியத்திலும், கழக இலக்கியங்களிலும் கூட, இறைவன், கடவுள், தெய்வம் என்னும் மூன்று சொற்களும் பொருள்நிலை மயங்கியே வந்துள்ளன. இருப்பினும் அங்கெல்லாம் இம் மூன்று நிலை வணக்கங்களும் வாழ்த்துகளும்கூடக் குறிக்கப்பெறுகின்றன. எனவே, தமிழர் வாழ்வியல் நிலையிலும், பண்பாடு, நாகரிக, கலை நிலைகளிலும், இவ்விறையுணர்வும், கடவுள், தெய்வ உணர்வுகளும் கலந்தே உள்ளன என்பதை உறுதியாகச் சொல்லலாம். ஆனால், ஆரியவியல் அங்கெல்லாம் மிகுதியும் விரவியிருக்கவில்லை என்பதையும் தெளிவாகச் சொல்லலாம். அக்காலத்துத்தான் தமிழகத்தும் தமிழர்களிடையேயும் ஆரியவியல் தலைமுட்டியிருத்தல் வேண்டும் என்பதற்கு மட்டும் சிற்சில குறிப்புகள் தெரியவருகின்றன. இவைபற்றியெல்லாமும்கூட நிறைவுரையில் மிக விரிவாகச் சொல்லப்பெறும்.

கற்பனை என்றாலும் தேவை:

இனி, இவற்றையெல்லாம் விடுத்து, இறைவன், கடவுள், தெய்வம் ஆகியவையெல்லாம் கற்பனை என்றே கூறினாலும், அது, மாந்தவினத்தின் மேம்பட்ட சிந்தனையாளர்களால் செய்யப்பெற்ற தலையாய, மிகச்சிறந்த, உயர்ந்த, மக்கள் வாழ்வியலுக்கும், அறவியலுக்கும், ஒழுங்கியலுக்கும் மிகு தேவையான ஒரு கற்பனையே என்று முடிவாகக் கூறலாம். அக்கற்பனையால், மக்களினத்துக்கு ஏற்படும் தீமைகளைவிட நன்மைகளே அதிகம் என்பதையும் உறுதியாகக் கூறலாம்.

உணர்வதும் உணர்த்துவதும்
எவராலும் இயலாது:

இறைவன், கடவுள், தெய்வம் ஆகிய கருத்தெல்லாம் உண்மை என்று முழுமையாகவோ, தெளிவாகவோ, உணர்வதும் உணர்த்துவதும் எவராலும் இயலாது; அதேபோல் அஃது உண்மையில்லை அல்லது பொய் என்று முழுமையாகவும் தெளிவாகவும் உணர்வதும் உணர்த்துவதும் எவராலும் இயலாது. இது தண்ணீருக்குள் நின்று கொண்டு 'இது தண்ணீர்' என்றும், 'இது தண்ணீர் இல்லை' என்றும் தருக்கமிடுவது போல் ஆகும்.

'அளவையான் அளப்பரிது; அறிவின் அப்புறத்து
உளவையஆய் உபநிட தங்கள் ஓதுவ;
கிளவிஆர் பொருள்களால் கிளக்கு நாதவன்
களவையார் அறிகுவார் மெய்ம்மை கண்டிலார்'

- கம்ப. 6250

- என்னும் கம்பரது பாடல் இங்குக் கருதத் தக்கது. இன்னும் சொல்வதானால், நம் மலக்குடலுக்குள் உள்ள மலத்திரளையுள் நெளிந்து கொண்டிருக்கும் ஒரு புழுவுக்கு ஓர் அறிவுநிலை தோன்றி, 'நான் எங்கிருக்கிறேன், யாரால் இருக்கிறேன், என்னை யார் உருவாக்கியவர்?' - என்றெல்லாம் வினாவெழுப்பி ஆராய்வது போலாகும் இது. இனி, அதனை உருவாக்கியவரைக் காண விரும்பும் முயற்சியும் ஆகும் அது.

உண்டு, இல்லை - என்பதற்கு விடையில்லை:

இனி, உண்டு, இல்லை என்னும் கருத்துக்கு விடையையும் யாராலும் காட்ட வியலாது. காரணம் இவ்வுலகில் வாழ் உயிரினங்களுள், சிந்திக்கும் ஆற்றல் உள்ள மாந்த இனம் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களும், பருப்பொருள்களும் மற்றும் மக்களுக்குத் தோன்றும் கருத்துகளும்கூட, நேர், எதிர் (Positive, Negative) என்னும் இருதன்மை உடையவனவாக இருப்பதை நாம் நுண்மையாக நோக்கினால் உண்மை விளங்கும். இவ்வெதிரெதிரான கூறுகளே உலகின், உயிரின் அனைத்து இயக்கங்களுக்கும், ஏன் மொழிக்கும், கருத்துக்கும், அறிவுக்கும்கூட, மூலக் காரணமாக உள்ளன என்பதை நாம் அறிந்துகொள்ளுதல் வேண்டும். இவ்வெதிரெதிரான தன்மைகள், அல்லது கூறுகள் இலவாயின் உலக இயக்கமே தடைப்பட்டுப்போகும்; எந்தவொன்றும் இயங்கவே முடியாது. எனவேதான் இதன் இயங்கியல் அமைப்பே, இல்லை, உண்டு என்னும் கருத்துக்கும், எதிரெதிரான பண்புக்கும், பொருள்களுக்கும் காரணமாக இருப்பதை உணர்ந்து கொள்க.

இயக்கமும் எதிர் இயக்கமும்:

ஒவ்வோர் இயக்கத்திற்கும், அதற்கு நேரான அதே சமமான ஆற்றலுடைய எதிரியக்கம் ஒன்று உண்டு. (For every action, there is an opposite and equal re-action) என்பது இயங்கியல் உண்மையன்றோ? அதனால்தான் இறைக்கொள்கையிலும் உண்டு, இல்லைக் கொள்கை என்றும் இருந்தே இருக்கும். மெய்ப்பொருளியலைப் பொறுத்தவரை இவ்விரண்டு கொள்கைகளுமே சரி எனலாம்.

தேங்காய் இருக்கிறதா, இல்லையா?

இதனை, ஓர் எடுத்துக்காட்டால் விளக்குவோம்.

மண்ணில் புதைத்த தேங்காய் மரமாகிறது. அதிலும் தேங்காய்கள் இருக்கின்றன. இப்பொழுது மூலத் தேங்காய் உள்ளதா, இல்லையா என்னும் வினாவிற்கு விடையென்ன? உண்டு என்பதும் இல்லையென்பதும் சரியான விடைகளே! எப்படி?

மூலத் தேங்காய்தான் இத்தனையுமாக (மரமாயும், மட்டையாயும், பலநூறு தேங்காய்களாகவும்) விரிவு பெற்றிருக்கின்றது. அதனால் அந்தத் தேங்காய் இல்லையாகிவிடவில்லை; உண்டு.

ஆனாலும், இத்தனையும் உள்ள பொழுது அந்த மூலத் தேங்காயை நாம் காண முடியவில்லையே; அஃதும் இவ்வாகிய பொருள்களுடன் இருக்கவில்லையே! அஃது இல்லையாகிவிடுகிறது! எனவே, இல்லை.

இந்த நிலைதான் அனைத்துக்கும் மூலமாய் ஆதியாய் இருக்கின்ற இறைமைக்கும் உண்டு, இல்லை ஆன - உண்டில்லை - ஆன நிலை என்க.

கற்பனை மகிழ்வும் நிறைவும் தருவது:

இறைமையை அல்லது இறைவனை, கடவுளை அல்லது தெய்வத்தை (எல்லாமே ஒரு வகையில் வேறுவேறும், அதே பொழுது இன்னொரு வகையில் ஒன்றும் ஆகும் என்பது இயற்கையியலின் ஒரு மெய்ம்மம்) ஓர் உருவமாகக் கருதினாலும், அல்லது உணர்வாகக் கருதினாலும் அல்லது கருதாவிட்டாலும், வணங்கினாலும் அல்லது வணங்காவிட்டாலும், அந்த உணர்வு அல்லது அறிவு மக்களுக்குத் தேவை என்பதும், அவ்வுணர்வால் மாந்தனுக்கு இவ்வுலக வாழ்வில் ஒருவகைப் பிடிப்பும், நம்பிக்கையும், எதிர்பார்ப்பும், நிறைவும், மகிழ்வும், ஆராய்ச்சி உணர்வும், அன்புணர்வும், அறிவு மேம்பாடும் உண்டாவதையும் அனைவரும் ஆழ எண்ணிப் பார்த்தால், அல்லது அளவை முறையாகச் சிந்தித்துப் பார்த்தால், இவ்வுண்மையை ஒப்பவே செய்வர் என்பதையும் உணர்க.

உண்மையான ஏதோ ஒன்று கண்களுக்கோ மனத்துக்கோ கிடைக்காமல் போகையில், கற்பனை ஒருவகையில் மட்டுமன்று, மனத்துக்குப் பலவகையிலும் மகிழ்வையும் நிறைவையும் அளிப்பது.

உள்முகமாக ஒரு துணை, ஓர் ஆதரவு தேவை:

உலகில் நாம் அனைவரும் தனித்தனியாகத்தான் பிறக்கிறோம்; மறைகிறோம். ஆனாலும் அனைவரும் ஒன்றாய் இருப்பதாக நினைக்கிறோம். அவ்வாறு உணர்ந்தாலும், நாம் அனைவரும் தனித்தனியாகத்தான் சிந்திக்கிறோம்; உணர்கிறோம்; கருத்தை அசைபோடுகிறோம்; இன்ப உணர்வையும் துன்ப உணர்வையும் சரித்துக் கொள்கிறோம். மனம் அவ்வாறு துன்பவுணர்வுகளையும் ஏமாற்றங்களையும் சந்திக்கும்பொழுது, சொல்லவொண்ணாத் தாக்கங்களுக்கு உள்ளாகிறது. அக்கால் நாம் தனியாகவே இருப்பதாக உணர்கிறோம். அதுபோன்ற நிலையின் பொழுதுதான் நமக்கு உள்முகமாக ஒரு துணை, ஓர் ஆதரவு தேவைப்படுகின்றது.

சமயம், மதம், மெய்யறிவியல்:

அப்பொழுதுதான், நம்மையறியாமல், நம் மனம், முன்னரே நாம் கேள்வியுற்றிருந்து, நம் அறிவுணர்வில் மொய்த்துக் கொண்டிருந்த, நமக்கு

ஏதோ ஒரு வகையில் யாராலோ அல்லது நூல்களாலோ சிறு அகவைப் பொழுதிலிருந்து அறிமுகப் படுத்தப்பட்டிருந்த இறைவனை, அல்லது ஏதோ ஒரு கடவுளை, அல்லது ஒரு தெய்வத்தை, நம் அறிவு ஏற்றுக் கொண்டாலும், புறக்கணித்தாலும், மனம் விரும்புகிறது. அக்கருத்துகள், ஒருவேளை, உண்மையாயிருக்குமோ என்னும் ஐயவுணர்வோடு அசைபோடுகிறது, மனம். பிறகு படிப்படியாக ஏற்றுக்கொள்ள அணியமாகிறது, அது. எனவே, மனம் கிடந்து தவிக்கும் அச் சூழ்நிலையில், தாயுணர்வினும் மேலான ஓர் அன்புணர்வை, ஆதரவை அதனிடமிருந்து எதிர்பார்க்கிறோம். மனம் அதை விரும்புகிறது; வேண்டுகிறது. இது முட்டை குஞ்சு பொரிக்கின்றது போன்ற ஒரு நேரம்; பூ மலர்ச்சியுற்று மணம் பெறுகின்ற ஒரு சமையம்; காய் பழுத்துச் சுவை பொதுளுகின்ற (கொழிக்கின்ற) (expose - ஆகின்ற) ஒரு காலம்; பெண் வடிவாகிக் கன்னியாகிக் கனிந்து நிற்கின்ற ஒரு பருவம்; உலையிலிட்ட அரிசி, சோறாகச் சமைந்து வருகின்ற சமையம். எனவே மனமும் இவற்றைப் போல் பக்குவம் (மெய்யுணர்வு) பெறுகின்ற ஒரு காலநிலை, இது. இதைத்தான் **சமைதல் - பக்குவப்படுதல் - சமையம் - சமயம்,** என்கிறது, தமிழியலான **மெய்யறிவு**. இதை, **'தீட்சம்'** [தானாக மனத்துள் நிகழ்வதை (சம்பவிப்பதை) வெறுக்காமல் துய்ப்பது (அநுபவிப்பது)] என்கிறது, ஆரியவியல். **(சமயம், மதம்** இரண்டும் தமிழ்ச் சொற்களே. மதம் என்னும் சொல்லையே ஆரியமும் பயன்படுத்துகிறது; இந்து மதம், வேதமதம் - என்னும் வகையில் என்க. ஆனால் சமசுகிருதத்தில், **தாத்துவீகம்-தத்துவம்** - தத்தம் - தாந்தம் - வேததாந்தம் - **வேதாந்தம்;** சித்ததாந்தம் - **சித்தாந்தம்** - என்கின்றனர்.) (இவற்றின் விரிவையும் எம் **நிறைவுரையில்** காண்க.)

மனவுணர்வும், அறிவுணர்வும்:

மனம் மெய்யுணர்வு எய்திய பின்னை மெய்யறிவுக்கு அவாவுகிறது. **மனவுணர்வாக** நின்ற அது, பிறகு **அறிவுணர்வை**யும் உடன் சேர்த்துக் கொண்டு, மெய்ப்பொருள் உசாவலில் (தத்துவ விசாரணையில்) ஈடுபடுகிறது. (இங்கு மனம் என்பதும் அறிவு என்பதும் வேறு வேறு உணர்வுகள், ஒளியும் ஒலியும் போல - என்பதை உணர்தல் வேண்டும். இரண்டும் ஒன்று என்பாரா, அறியாதவர். இவை பற்றியும் விரிவாக எம்

---

1. உருவமாகக் கருதினாலும் உணர்வாகக் கருதினாலும் - என்பது பற்றிய ஒரு சிறு விளக்கம்.
   உருவம் காட்சியான் பெறுவது. உணர்வு மனத்தால் உறுவது. மனம் ஒன்றைக் காட்சியளவையான் கண்டு கண்டு பழகிவிட்டால், அஃது உணர்வாக மனத்தில் நிலைபெற்றுவிடுகிறது. தாயின் உருவம் உணர்வாகி என்றும் மனத்துள் நிற்பது போல என்க.

நிறைவுரையில் விளக்கப்பெறும்) தான் யார், தன் தாய், தந்தையரெல்லாம் யார், தன் உற்றார் உறவுகளெல்லாம் யார் யார், நாம் எதற்காக இங்கு வந்து பிறந்தோம், நம்மை உருவாக்கியது யார் அல்லது எது, அஃது என்ன, நாம் என்றும் இருப்போமா, அல்லது இல்லாமற் போய் விடுவோமா, அவ்வாறாயின் எங்கே போவோம், இருப்போம், பின்பு வருவோமா, எப்படி வருவோம், நம்மை உருவாக்கிய அல்லது படைத்த மூலப் பொருளை (பிரகிருதியை, அல்லது பிரம்மத்தை என்கிறது, ஆரியவியல்) நாம் உணரமுடியுமா, பார்க்கமுடியுமா, அதனுடன் இணைய முடியுமா, அஃது, அம்மெய்ப்பொருள், மூலப் பொருள், இறைப்பொருள் என்பது ஆணா, பெண்ணா அல்லது இரண்டுமா, அதற்கு அழிவுண்டா, அது யார், நாம் யார் அதற்கும் நமக்கும் என்ன தொடர்பு என்றெல்லாம் மனமும், அறிவும் இணைந்து கேட்கத் தொடங்கிவிடுகின்றன.

மனம், அறிவுப் போராட்டம்:

இதில், மனம் கேட்பதற்குச் சில நேரங்களில் அறிவு (தனக்குத் தெரிந்த) விடையைச் சொல்லுகிறது. சில பொழுதுகளில் அல்லது சிலவற்றில் அறிவு கேட்பதற்கு மனம் விடை சொல்கிறது. இதன் மேலும் மெய்யறிவு உசாவல் படர்ந்து விரிகிறது; மேன்மேலும், மேன்மேலும் உசாவுகிறது; உசாவிக் கொண்டே போகிறது; ஒவ்வொரு முறையும் விடைகள் கிடைக்கக் கிடைக்க மனமும் அறிவும் மாறி மாறி வினாக்களை எழுப்பிக் கொண்டே போகின்றன; விடைகளும் காண்கின்றன. விடை கிடைக்கக் கிடைக்க வினாக்களும் எழுந்து கொண்டே போகின்றன; **'அறிதோறும் அறியாமை கண்டற்றால்'** (1110) என்று இதைத்தான் நூலாசிரியர் உய்த்தறிந்து நுவல்கிறார், கூறுகிறார், உணர்த்துகிறார். அதுவும் எங்கு? **'புணர்ச்சி மகிழ்தல்'** என்னும் **'இன்பத்துப்பால்'** அதிகாரத்தில் என்க.

சிற்றின்பமும் பேரின்பமும்:

ஓர் ஆணும் பெண்ணும், கணவனும் மனைவியும் உடலின்பம், சிற்றின்பம் கொள்ளுகின்ற நேரத்தில், இப்பேரின்பவுணர்வின் உண்மை

---

1. **இறைவன்:** முழுமுதல் இறைவன் - உருவும் திருவும் அற்ற ஓர் உணர்வாகி நிற்கும் ஒரு மெய்ப்பொருள் உணர்வின் - விளக்கமற்ற ஓர் உணர்வு.
2. **கடவுள்கள்:** சிவன், முருகன், திருமால், பிள்ளையார், உமை (சக்தி) இதில் மீனாட்சி, காமாட்சி, மூகாம்பிகை முதலிய அனைத்துப் பெண் கடவுள்களும். அடங்கும்.
3. **தெய்வங்கள்:** காளி, மாரி, முனியப்பன், சாத்தப்பன், வீரபத்திரன் போலும் அவ்வக் குடும்பத் தெய்வங்கள்
4. **சமயம்:** 'சமை' என்னும் வேரடியாகத் தோன்றிச் சமையம் என்று உருப்பெற்றாலும், தனிச் சொல்லாக நின்று மதத்தைக் குறிக்க வேண்டிச் 'சமயம்' என்று ஆனது. இதே வேரினின்று தோன்றி இதனின்று வேறுபட்டுப் பொழுதைக் குறிக்கும் சொல் 'சமையம்' என்றே நின்றது.

கூறப்பெறுகிறது. ஏனெனில், இவ்வுண்மை அந்த நேரத்தில்தான் விளங்கும் என்பது அவர் கருத்து. 'அவையறிந்து ஆராய்ந்து சொல்லுதல்' (711) அவருடைய கோட்பாடு ஆதலால், சிற்றின்பம் நிகழ்ந்து கொண்டிருக்கும் அவ்வேளையில் பேரின்பமாகிய மெய்யறிவின்பத்தின் உசாவல் நிலைக்கு விடைகூறுகிறார். ஏன்? அந்த இன்பமும் - அச்சிற்றின்பமும் - நமக்கு விளங்குவதில்லை; இம்மெய்யறி வின்பமும் விளங்குவதில்லை என்கிறார். ஆனால் உணர்கிறோம். பிறர்க்கு உணர்த்த முடிவதில்லை. இதைத்தான் திருமூலர் சொல்கிறார், இப்படி:

மகட்குத் தாய்தன் மணாளனோடு ஆடிய,
சுகத்தைச் சொல் என்றால், சொல்லுமா றெங்ஙனே?

(திருமந். 2944)

'ஒரு தாய் தன் கணவனோடு துய்த்த உடலின்பத்தை மகளுக்கு அவள் கேட்டாலும் எப்படிச் சொல்ல முடியும்? அவ்வாறு இம்மெய்ப்பொருள் இன்பத்தையும் எவராலும் சொல்லி உணர்த்த முடியாது; 'தாய் தன் மணாளனிடம் பெற்ற இன்பத்தை மகளும் அவள் கணவனிடம் பெற்றுத்தான் உணரமுடியும்' என்பதை நம் மெய்யறிவர்களாகிய திருவள்ளுவரும் திருமூலரும் எவ்வாறு உணர்த்தியிருக்கின்றனர் என்பதை உணர்ந்து மகிழ்க. (திருவள்ளுவருக்குப் பின்னர் வந்தவர் திருமூலர் ஆகையால், அவரின் கருத்தையே இவரும் இலக்கிய வடிவில் இன்னும் சிறிது கூடுதலாக எடுத்துக்காட்டுடன் விளக்கியுள்ளார் என்று அறிக.)

இப்போராட்டம் எப்பொழுது நிற்கும்?

எனவே, இந்த மன அறிவுப் போராட்டம் என்றென்றும் நிகழ்ந்து கொண்டே வந்திருக்கிறது. நிகழ்ந்து கொண்டே போகிறது; இனி என்றென்றும் நிகழ்ந்து கொண்டே இருக்கும். எதுவரை? இவ்வுலகம் உள்ளளவும். இது முற்றுப்பெறவே பெறாது; 'முற்றுப்பெறவும் கூடாது' என்பதும் ஒரு மெய்ப்பொருள் உண்மை. இது முற்றுப்பெறாமல் இருக்கும் பொழுதுதான், இவ்வுலகமும் புடவியும் உயிர்களும் இயற்கையும் இயங்கிக் கொண்டிருக்கும். இது முற்றுப்பெறும் பொழுது, இவ்வுலகம் இராது; நாமும் இருக்க மாட்டோம். எல்லாவற்றோடும் நாமும் ஒன்றாகி விடுவோம். விளங்கவில்லையா? அறிவு கலங்குகிறதா? கலங்கத் தேவையில்லை. மண்ணில் புதைத்த தேங்காய் காணாமற் போனது போல, இவ்வுலகமும் காணாது போய்விடும்; நாமும் காணாது போய், அனைத்துடனும் ஒரே மரமாக ஆகிவிடுவோம். அப்பொழுதும் புடவி இருக்கும்; கதிரவன் இருக்கும்; விண்மீன்கள் இருக்கும்; நாமும் அந்த மரம் போல் ஒரே உயிர்த்திரட்சியாக, ஒளித்திரட்சியாக ஒலித்திரட்சியாக விண்ணின்கண் இருந்துகொண்டிருப்போம். என்ன? வியப்பாகவிருக்கிறதா? அல்லது

குழப்பமாக இருக்கிறதா? வியக்கவும் வேண்டியதில்லை, குழம்பவும் வேண்டியதில்லை.

முன்பு எப்படியிருந்தோம்? எங்கிருந்தோம்?

இப்பொதுள்ள நிலைக்கு வருவதற்கு முன்னர் நாம் எப்படியிருந்தோம்? எங்கிருந்தோம்? நாமும் இவ்வுலகமும், இதிலுள்ள புல் பூண்டுகள் உள்ளிட்ட அனைத்து உயிரினங்களும் தீக்குழம்பாக இருந்தோம்; அதற்கு முன்னர் ஒளித்திரட்சியாக இருந்தோம்; அதற்கு முன்னர்க் கதிரவனில் இருந்தோம். என்ன? நாம் உரைப்பது அறிவியல்; மதவியல் இல்லை; தூய மெய்யறிவியல்!

இப்பொழுது எண்ணிப் பாருங்கள். நாமும், இவ்வுலகமும் அப்பேரொளிக் கோளமாகிய கதிரவனிலிருந்துதானே வந்தோம். அவ்வொளிக் கோளம் நெருப்பாகி, நெருப்புக் குழம்பாகி, ஆறி, இறுகலுற்றுக் குளிர்ந்து, மண்ணாகி, மண்ணில் நீராகி, நீரில் உயிரணுக்கள் தோன்றி, நீந்துவனவாகி, நிலத்து ஊர்வனவாகி, பறப்பனவாகி, நடப்பனவாகி, மாந்தனாகிப் படிநிலை (பரிணாம) வளர்ச்சி பெற்று வரவில்லையா? அறிவியல் உணர்வும் இதுதான்; மெய்யறிவியல் உணர்வும் இதுதான். அறிவியலுணர்வு பொருள்கள் (matter) உடன் இணைந்து நிற்கும்; மெய்யறிவியலுணர்வு ஆற்றல் (energy) உடன் இணைந்து அறிவாகி, உணர்வாகி நிற்கும். பொருள்கள் மீண்டும் ஆற்றலாகும்; ஆற்றல் மீண்டும் பொருள்களாகும். பொருளில் ஆற்றலுண்டு; ஆற்றலில் பொருள்களுண்டு. இதுதான் இயங்கியல், இயற்கையியல், அறிவியல், பொருளியல், உயிரியல், பயிரியல், மாந்தவியல், நிலவியல், விண்ணியல் முதலிய அனைத்தும்! இதை இத்துடன் நிறுத்திக்கொண்டு மேலே விரிவோம்.

வினாவும் விடையும்! விடையும் வினாவும்!

இவ்வாறு வினாவும் விடையும், விடையும் வினாவுமாக இயங்கிக் கொண்டிருக்கும் மன, அறிவு உணர்வுகளின் போராட்டம் நாம் இருக்கின்ற வரை, இவ்வுலகம் இருக்கின்றவரை, இருந்து கொண்டேயிருக்கும் என்றோம். பிறகு முடிவுதான் என்ன? அதுதான் முடிவில்லா நிலை (infinity). 'முடிவில்லா மோனநிலை, என்று மதவியலார் கூறுகிறார்களே, அந்த நிலைதான் அது. இதில் 'கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர்' என்பதுதான் விடை. இந்த நிலையில் இறுதியான கேள்வி, 'முட்டை முந்தியதா, கோழி முந்தியதா?' 'விதை முந்தியதா, பயிர் முந்தியதா?' 'இறை முந்தியதா உயிர் முந்தியதா' - என்பன போன்றுதான்.

பகுத்தறிவும் மெய்யறிவும்!

பகுத்தறிவின் - காட்சிநிலையின் (Rationalism - Reasonalism) உதவியால் இறைமைப் பொருளை உணரமுடியாது என்று மெய்யறிவியல் (philosophy) அறிஞர்கள் (philosophers) கூறுகின்றனர்.

பகுத்தறிவு என்பது புலனுணர்வுகள் (perception) வழியாகக் காரணமுறையில் (Reasonable) மனம் ஓர் உண்மையைக் காண்பதும், பின் அவற்றைத் தொகுத்து, ஒன்றோடு ஒன்றை ஒப்பவைத்துப் பார்த்து (comparitive study) அறிவால் இறுதியாகத் தேர்ந்து, முடிவு செய்வதும் ஆகும். ஆனால், இதுவன்றி இன்னோர் அறிவு முயற்சியும் நம்மிடம் உண்டு. அஃது **உள்ளுணர்வால்** (intution) காணுவது. இதைத்தான் அகக்கண்ணால் - மனக்கண்ணால் - காணுவது என்று மெய்யறிவாளரும், மதவியலாளரும் (Religionists) கூறுகின்றனர். மனவியலாரும் (Psychologists) இதனை ஒப்புகின்றனர்.

புலனுணர்வுகளால் விளங்கிக்கொள்ள முடியாத உண்மைகளை, இன்னும் நுட்பமாக உணர்ந்துகொள்ள வேண்டுமானால், அதற்கு உள்ளுணர்வுதான் துணைசெய்ய முடியும் என்கின்றனர், உளவியல் அறிஞர்கள்.

அறிவு (Knowledge) என்பது, பொறிகள் வழியாக உணரும் புலனுணர்வு. அஃதாவது, கண்ணால் பார்ப்பது, காதால் கேட்பது, நாவால் சுவைப்பது, மூக்கால் முகர்வது, மெய்யால் - ஊறுணர்வால் - உணர்வது - ஆகிய இவையெல்லாம் தனித்தனியாக மூளை உணர்கின்ற நிலையைத் தொகுதியாக்கிப் (compilation) பார்க்கின்ற ஒரு நிலையே ஆகும்.

இவற்றை, ஏற்கனவே அறிந்து முடிவுசெய்த உண்மைகளுடன், ஒப்பவைத்துப் பார்த்துச் சரி இது, சரியில்லாதது இது என்று, நமக்குத் தெரிந்த அளவில் முடிவு செய்யும் ஓர் உணர்வுதான் **பகுத்தறிவு** என்பது.

புறமனமும் அகமனமும்.

இந்த இரண்டு அறிவு நிலைகளையும் உணர்வது புறமனம் (Conscious Mind) என்னும், நமக்குள் இயல்பாகச் செயல்படும் மனமாகும் என்பது மனவியலறிஞர்களும் மெய்யறிவியலறிஞர்களும் ஒப்புக்கொள்ளும் உண்மை. இதை மதவியலறிஞர்கள் வேறுவகையில் விளக்கியும் கூறுவர். அது நமக்கு இங்கு வேண்டா.

இங்குக் கூறிய புறமன உணர்வால்தான் நாம் பொதுவாக அறிகிறோம்; உணர்கிறோம்; பேசுகிறோம்; அன்பு செலுத்துகிறோம்; வெறுப்பு, பகை முதலியன கொள்கிறோம். மற்றும் உலகியல் தொடர்பான அனைத்துச் செயல்நிலைகளிலும் ஈடுபடுகிறோம்.

ஆனால், இவற்றுக்கும் மேலாக நம்மிடம் உள்மனம் (Sub-conscious Mind) என்று ஒன்று உள்ளது என்பது சிலர்க்கே தெரியும். அந்த உள்மன உணர்வை **உள்ளுணர்வு** (நேரடி உணர்வு - மெய்யறிவு (intution) என்று மனவியலறிஞர்கள் கூறுகின்றனர். அறிவிற்கும் அப்பாற்பட்டு இயங்குகிற உண்மைகளை அறிவதற்கு இந்த உள்ளுணர்வு (intution) தான் உதவுகிறது.

இந்த உள்ளுணர்வால் காணும் உண்மைகள் கற்பனையில்லை. அவை இருப்பவை; என்றுமே இருப்பவை. அவைதாம் மெய்ம்ம உண்மைகள் (Philosophical truths). அவை நம் புலனுணர்வுகளுக்கும், அறிவுக்கும் ஏன் பகுத்தறிவுக்கும் ஆய்வுக்கும், அளவைகளுக்கும் (தருக்கங்களுக்கும்) கூடப் புலப்படாதவை. இன்னும் கூறுவதானால், இன்றைய பல அறிவியல் உண்மைகளையும்கூட, கண்டுபிடிப்பதற்கு அந்த உள்ளுணர்வே அறிஞர்களுக்கு உதவியிருக்கின்றது.

'ஆய்ந்தும் காணாப் பொருள்', 'ஆராயப்பட்டு அறியார்', 'சோதித்தார் காணாமை', 'அறிவரு ஞானத்து எவரும் அறியார்', 'பொறிவழித் தேடிப் புலம்புகின்றார்கள்' என்றெல்லாம் சமயக்குரவர்கள் கூறியுள்ளனர். எனவே உள்மனத்தால் மட்டுமே அறியமுடிகின்ற உண்மை அது - என்று மெய்யறிவாசிரியர்கள் கூறுவர் என்க.

அந்த உள்மனம், பொதுவாக அனைவர்க்குமே செயல்படுவ தில்லை. அனைவர்க்கும் செயல்படுவது புறமனமே அல்லது வெளிமனமே என்று அறிந்து கொள்ளுதல் வேண்டும். எனினும், அந்த உள்மனத்தையும் நாம் செயல்பட வைக்க முடியும். அதற்கு ஆழமான, ஒருங்கிணைந்த, மனவுணர்வுகளைப் புறத்தே பாயவிடாமல், அகத்தே ஒடுக்கி நிற்கின்ற - ஒருமுகப்படுத்துகின்ற - (Concentration) மனப்பயிற்சிகள் வேண்டும்.

மனவியல் மருத்துவத்திலும், இவ் வுள்மனத்தை அறிதுயில் (Hypnotism) நிலைக்குக் கொண்டுசென்று - அஃதாவது ஒருவரை அந்நிலைக்கு உட்படுத்தி - அதைச் செயல்பட வைத்து, அதில் வெளிமனம் மறந்து போய்விட - என்றோ நடந்து புதைந்து போயிருக்கின்ற - உடலின் அல்லது உள்ளத்தின் அல்லது அறிவின் உண்மைகளை அவரின் வாயாலேயே, தம்மையறியாமல் சொல்லும்படி செய்து உணர்கின்றனர்.

ஓகம், ஊழ்கம்

துறவியர்களும், மெய்யறிவர்களும் இந்த மனப் பயிற்சியை **ஓகம், ஊழ்கம்** (தியானம் - Meditation) என்று கூறி, அந்த ஆழ்மனத்தை அல்லது அடிமனத்தை அல்லது உள்மனத்தைச் செயல்பட வைத்து, நாளடைவில் அதை மேலும் மேலும் கூர்மையுடையதாக (Focus) ஆக்கி, புறத்தே உணரமுடியாத பல இயற்கை உண்மைகளை உணர்கின்றனர். பிறர் மனங்களில் உள்ள உணர்வுகளையும் உண்மைகளையும்கூட அறிகின்றனர். இந்த மனவியல் சார்ந்த அறிவியல் துறைக்குத் **தொலைவறிவியல்** (Teleology) என்றும், அவ்வாறு அறியும் திறனைத் **தொலைவிலுணர்தல்** (Telepathy) என்றும் வழங்குகின்றனர். (இந்த மனப்பயிற்சி என்பது, உடற்பயிற்சி போன்றதே - கனமான பொருள்களைத் தூக்குவது, நெடுந்தூரம் ஓடுவது, உயரந்தாண்டுவது, உடலைப் பல கோணங்களிலும் வளைப்பது, இயக்குவது, மலையேறுவது, குத்துச்சண்டை, மல்லு, களரி, வலிச்சைகள்

(Gymnastics) செய்வது - போன்ற திறப்பாடுகளை உடற்பயிற்சி வழியாகச் செய்வது போன்றதே.)

இறையியல் கோட்பாடு

இவ்வாறான, மனப்பயிற்சிகளின் வழி மனத்தை ஒருமுகப்படுத்தி, உள்மனத்தை விழிக்கச் செய்து, அதன் **உணர்வு** வழியாக உணரப் பெறுவதுதான் **மெய்யறிவு** என்பது. இதன் தொகுப்பியல் அறிவுதான் மெய்யுணர்வியல் அல்லது **மெய்ப்பொருளியல்** என்பது. இதன் வழியாக அறியப்பெறுவதே **மெய்ம்மங்கள்** (Philosophical Truths) என்பவை. இம் மெய்ம்மக் கோட்பாடுகளைத் தமிழர் மதவியலில் முப்பத்தாறு வகையாகப் பகுத்துள்ளனர். அவற்றுள் ஒன்றுதான் **இறைமைக் கோட்பாடு** என்னும் **இறையியல்** (Theology) என்பது. (இவை பற்றிய அனைத்து விளக்கங்களும், **நிறைவுரை**யில், இவ்வதிகாரத்தின்கண் முழுமையாக விளக்கப்பெறும். விரிவாக உணர விரும்புவோர் ஆண்டுக் காண்க.)

எஃது எவ்வாறாயினும், உண்மையோ, பொய்யோ, நன்மையோ தீமையோ, இன்பமோ துன்பமோ, அன்போ அறிவோ, வன்மையோ கொடுமையோ, அறமோ மறமோ, இயற்கையோ செயற்கையோ, அது இது, அங்கு இங்கு, அப்படி இப்படி - என்றில்லாமல், எல்லாவற்றிலும், - கண்ணுக்குத் தெரியும்-தெரியாத, காதுக்குக் கேட்கும்-கேட்காத, மூக்குக்கு வரும்-வராத, வாய்க்குத் தெரியும்-தெரியாத, உடலில் ஊறும்-ஊறாத - அனைத்து உயிர்களின் உணர்வு, அறிவு நிலைகளிலும் - இறைமை உணர்வு கலந்தே இருக்கிறது - என்பது மெய்யறிவு.

'எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்,
அங்கங்கிருப்பது, நீ - அன்றோ பராபரமே'

- என்பார் தாயுமானவர்.

'பார்பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்
படர்ந்ததோர் படரொளிப் பரப்பே'

– திருவாசகம். 22-8

'பண்ணின் ஓசை பழத்தினில் இன்சுவை'

- திருநாவுக்கரசர் 'திருக்கச்சி யேகம்பம்'

'ஆக்கம் அளவிறுதி இல்லாய்! அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்'

– திருவாசகம் 1-41

'எஞ்ஞான்றும் எங்கும் ஒழிவற நிறைந்து நின்ற
மெய்ஞ்ஞானச் சோதி'

– திருவாய்மொழி 3-2-7

'இயங்குகின்ற அனைத்துமாய்
இயங்கிலாத எனைத்துமாய்
மயங்குகின்ற மனத்துளே
மயக்கறுக்கும் உணர்வுமாய்
வயங்குகின்ற நோக்கெலாம்
வயப்படுத்தும் அறிவுமாய்
முயங்குகின்ற ஒளியினை
மூப்பமூப்ப உணர்வரே!

– உரையாசிரியர்

இறைமை, கடவுள், தெய்வம் :

இனி, இறைமை, கடவுள், தெய்வம் என்று சொன்னவுடனேயே கோயில்களில், சிலைகளில், ஓவியங்களில் பார்க்கும் உருவங்களை நினைத்துச் சிலர் மகிழவும், வெறுக்கவும் செய்கின்றனர். உண்மையில் அவையோ, அல்லது நூல்கள்வழிப் புலப்படுத்தப்பெறுகின்ற சொல்லுருவங்களும் கருத்துருவங்களுமோ, கடவுளோ, இறைவனோ, தெய்வமோ அல்ல என்பதை உண்டு என்னும் உணர்வினரும், இல்லை என்று சொல்பவரும் உணர்தல் வேண்டும்.

இறைவன் ஏன் நேரில் வருவதில்லை :

இனி, இறைமறுப்பாளர் சிலர், 'இறைவன் இருந்தால் ஏன் நேரில் புலப்படுவதில்லை. ஏன் நம்முடன் தொடர்பு கொள்வதில்லை' என்றெல்லாம் வினாவுவதற்கு, இறையுண்மையார், 'அவ்வாறு மெய்யறிவர் (ஞானியர்)க்கும், துறவியர்க்கும், தூயருக்கும் புலப்பட்டிருப்பதையும், தொடர்புகொண்டிருப்பதையும் தொன்மைக் கதைகளிலிருந்து எடுத்துக்காட்டி, அமைவு கூறுவர். இவ்விரு நிலைகளினும் கருத்துச் செலுத்தாமல், ஒரு மனவியல் உண்மையை நாம் இங்குக் கருதுதல் வேண்டும். அதன்வழி,நமக்கு நேரில் புலப்படாமைக்கும், நம்முடன் வந்து உறையாமைக்கும் அடிப்படையான ஆறு கரணியங்கள் உண்டு. அவை இவை:

1) தனியொருவர் வழிபாடு கூடாது என்னும் உணர்வு மக்கட்குப் பொதுவான ஒரு மனநிலை. அவ்வாறு ஏதோ ஒரு நன்மை கருதி வழிபடுபவர்கள்கூட, தாம் விரும்பிய நிலை வாயாவிடத்தோ அல்லது குறைவுறும் இடத்தோ, அந்நிலையைக் கைவிட்டு வெறுப்பார். இந்நிலையில் இறைவன் நேரில் வருவதை அத்தகையர் விரும்பார். விரும்பினும் தங்கட்குள் உள்ள ஏற்றத் தாழ்வு கருதிப் புகைச்சலும், பொறாமையும், பூசலும் விளைவித்துக்கொண்டு ஒருவருடன் ஒருவர் பொருதி மாய்வர்.

2) இறைவன் எந்த ஒரு வடிவத்தில் (பறவை, விலங்கு, மாந்தன் முதலிய உருவில்) வெளிப்படினும், நிலை எப்படியெப்படி இருக்கும்,

உலகியல் நடைமுறை நிலையில் என்னென்ன மாறுதல்கள் நடக்கும் என்பதை ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க.

3) ஒரு தந்தையைப் பிள்ளையோ, ஓர் ஆசிரியனை மாணவர்களோ, தம்மிடம் இருத்திக் கொள்ளவோ, அவர்கள் தம் வாழ்வியல் நிலைகளுடன் எப்பொழுதும் ஒன்றி இருப்பதையோ, தம் நிகழ்ச்சிகளில் குறுக்கிடுவதையோ விரும்பமாட்டார். அவ்வாறிருக்க இறைவன் அவ்வாறு ஈடுபடுவதை மக்கள் விரும்பார்.

4) இறைவனை இப்பொழுதும் எப்பொழுதும் எவரும் விரும்புவதோ மதிப்பதோ இல்லை. அவனை வெறும் வழிபடு பொருளாகவே கருத விரும்புகின்றனர். அவ்வாறு எப்பொழுதும் வழிபட்டுக் கொண்டிருப்பதையும் அவர்கள் விரும்புவதில்லை. அவ்வப்பொழுது மட்டும் வழிபடுதலை விரும்புகின்றனர். எண்ணிப் பார்க்க.

5) ஒரு ஞாயக்காரர், அல்லது அறமன்ற நடுவர், அல்லது ஒரு நடுநிலையாளர் தம்மோடு எப்பொழுதும் உறைவதை மக்கள் விரும்ப மாட்டார்கள். அதுபோலவே பல்வகையான குற்றம் குறைகள், விருப்பு வெறுப்புகள் உள்ள உயிர்கள் இறைவன் தம்முடன் இருப்பதையோ ஊடாடுவதையோ விரும்புவதில்லை.

6) இனி, அறிவுணர்வும், மனவுணர்வும் வளர வளர நாமே நம்மைத் தனிப்படுத்திக்கொண்டு இருக்க விரும்புகின்றோம். நம்மோடு சுற்றியுள்ளவர்களுடைய தாறுமாறான அறிவு, மன இயக்கங்களும், உடலியக்கங்களாகிய ஆரவாரப் பகட்டுச் செயல்கள், ஒழுக்கக் கேடுகள் ஆகியனவும் நமக்குப் பல நிலைகளில் பல வேளைகளில் பலவாறான துன்பங்களையும் இடையூறுகளையும் விளைவிக்கின்றன. எனவே நாம் இவற்றிலிருந்தெல்லாம் விலகியிருக்கவே விரும்புகின்றோம். இறைவனும் தன் மேம்பட்ட வாலறிவுணர்வாலும், தூய்மையான மனவுணர்வாலும் தனித்து இருக்கவே விரும்புகிறான் என்க.

இங்கு, மாந்தனினும் பலகோடி நூறுமடங்கு பெருகிய வாலறிவும், பொய்தீர் ஒழுக்க நெறியுணர்வுந்தாம் இறைமை என்பது ஒரு மெய்யியல் கோட்பாடு என்பதை உணர்தல் இன்றியமையாதது.

இன்ன பிற கரணியங்களால், இறைவன் தம்மோடு இருப்பதை மக்கள் விரும்புவதில்லை. இன்னும் அவன் தம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான், தாம் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருக்கிறான் - என்பதையும்கூட அவர்கள் விரும்புவதில்லை. அதனால்தான் மொத்தத்தில் அவன் இருக்கிறான் என்பதைக்கூட அவர்கள் விரும்புவதில்லை; அதனால் ஒப்புவதும் இல்லை என்க.

பல்வேறு உருவங்கள் :

இனி, இறைவன் உள்ளான் எனும், கற்றவரின் உணர்வு நிலை, கல்லாத பொது மக்களுக்கு விளங்காத தன்மையில், உருவ நிலைகள் தோன்றின. அவை மக்கள் படிநிலை வளர்ச்சி, கால, இடமாற்றங்கள் அடிப்படையில் பல்வேறு வடிவங்களாகப் பல்கிப் பெருகின. இஃது அவரவர்க்கு வேறுவேறு வகையான காய்கறிகள், பழங்கள், சுவைகள் பிடிப்பதைப் போன்றது; அதற்கிணையானது என்க. எனவே, இவ்வுருவ வேறுபாடுகளைக் கொண்டோ, அவற்றின் அமைப்புகளைக் கொண்டோ, அல்லது அவற்றைப் பார்த்த மட்டில் நமக்குள் ஏற்படும் வெறுப்பு விருப்புகளைக் கொண்டோ, அவ்வுணர்வு நிலைகளையே தேவையில்லை என்று கருதுதல் அறிவுடைமை ஆகாது.

'இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணாதே'

- என்பார் திருநாவுக்கரசர்.

அறிவுடைமை என்பது மக்களியல், மக்கள் நலம் கருதியதாகத்தான் இருக்க முடியும்; இருக்க வேண்டும். எவ்வளவு சிறந்த அறிவுக் கோட்பாடாயினும், அது மக்கள் நலம் கருதியதாகவே, மக்களின் பண்பியலுக்குப் பொருந்தியதாகவே இருத்தல் வேண்டும் என்பது ஆசிரியர் கருத்து என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். (997)

- என்னும் குறளில், மக்கட் பண்புதழுவிய நலத்தைக் கருதாதவர் எவ்வளவு பெரிய சிறந்த அறிவுக் கூர்மையுடையவராக இருப்பினும் அவர் ஓரறிவுயிராகிய வளர்ந்து நிற்கும் மரம் போன்றவரே ஆவர் என்பதைத் தெளிவாகக் கூறுதல் காண்க. மேலும், அவர்,

உலகத்தார் உண்டு என்பது இல் என்பான் வையத்து
அலகையா வைக்கப் படும். (850)

என்னும் குறளில், உலக மக்களியலுக்குத் தேவை என்று கருதிச் சில நிலைகளை உண்டு என்று நம்பிக்கை அடிப்படையில் கூறுவதை ஒருவர் திறனாய்வு செய்து, அவற்றின் அறிவு நிலைகளையும் மூடநிலைகளையும் விளக்கி, அதில் ஒரு தெளிவை அவர்களுக்குக் கற்பிக்கலாமே தவிர, அடியோடு அதனை மறுத்தல் கூடாது என்பதும், அவ்வாறு மறுப்பவர் மாந்த நிலைக்கு மாறுபட்டவராகக் கருதப்படுவார் என்பதும் கவனிக்கத் தக்கன, என்க.

மேற்சொன்ன இவ்விரண்டு உண்மைகளும் 'மெய்ப்பொருள்', கோட்பாடும் மக்களியலும் (Socialogy) மக்கள் மனவியலும் (Social

Psychology) சார்ந்தவை என்க. எனவே, அவை மக்கள் நலச் சிந்தனையாளர்களால் கட்டாயம் கருதப்பெற வேண்டியவை என்க.

இறையுணர்வு எதற்கு ?

இனி, உறுதியான அறிவு விளக்கமற்ற, அறிவியலால் இன்றுவரை மெய்ப்பிக்கப்பெறாத, வெறும் கருத்தியல் கோட்பாடாக (Conceptional theory) உள்ள இறையியல் கருத்துகளுக்கு நாம் ஏன் மதிப்பளிக்க வேண்டும், அவற்றில் ஏன் கவனம் செலுத்துதல் வேண்டும், அவை பற்றி நாம் ஏன் கவலைப்படுதல் வேண்டும் என்றெல்லாம் பலரும் வினாக்கள் எழுப்பலாம். ஒரு மக்களியல் சார்ந்த, மக்கள் மனவியல் அடிப்படையான, வலிவான, வாழ்வியலைப் பற்றிக்கொண்டுள்ள, காலங் காலமாய்த் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்ற ஒரு கருத்தை அவ்வளவு எளிதில் மறுத்து விடுதல் என்பதும், அதில் கருத்துச் செலுத்துதல் கூடாதென்பதும், அது பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்பதும், மக்கள் நலவியலில் - ஒழுக்கவியலில் கருத்துக்கொண்டு உழைக்கும் அல்லது கருத்தறிவிக்கும் எவருக்குமே நலமாகா. இறைமறுப்புக் கருத்தையும் பின்பற்ற ஒரு குழுவோ கூட்டமோ எக்காலத்தும் எவ்விடத்தும் எந்த மக்கள் கூட்டத்தும் இருக்கவே செய்யும். அதனால், அக்குழுவால் கூறப்பெறும் எக்கருத்தும் சிறந்தது, ஏற்றது, உண்மையானது, மக்கள் நலத்துக்கு உகந்தது என்று ஆகிவிடாது.

இல்லையும் இருக்கிறதும்!

எனவே, இறையியல் கருத்தை நாம் தவறு என்றோ மூட நம்பிக்கை என்றோ, (அறிவியலின் அனைத்துக் கூறுகளிலும்கூட மூடநம்பிக்கைகள் உண்டு)' பகுத்தறிவுக்குப் பொருந்தாதது என்றோ, அறிவியல் அடிப்படையில்லாதது என்றோ, ஏமாற்று நிறைந்தது என்றோ, எவரும் எந்நிலையிலும் தள்ளிவிடல் அறிவுடைமை ஆகாது என்க. இத்தனைக் கூறுகளும் ஒரு கருத்தியல் நிலைக்கு வேறு வேறு நிலையில் பொருத்தமுடையனவாகவும் இருக்கலாம்; பொருத்தமற்றனவாகவும் இருக்கலாம். ஆனால் அறிவியலையோ, பகுத்தறிவியலையோ அடிப்படையாகக் கொண்டுதான் மக்கள் மனவியல் இயங்குகிறது என்பதை எவரும் கூறிவிட முடியாது. அது தனியாகவும் இயங்குகிறது. இன்னும் உண்மையாகவும், தெளிவாகவும், உறுதியாகவும் சொல்வதானால், மக்கள் மனவியல்தான், இவ்வுலகின் அனைத்து அறிவியல், செயலியல் (Operational or Functional), ஒழுக்கவியல் நடைமுறைக்கும் பொருந்துவது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. கடவுள் இல்லை என்று சொல்வதும் கூட ஒருவகை மனவியல் உண்மைதான் என்று அறிஞர்கள் கருதுகின்றனர். அஃது, ஒரு தந்தையைப் பார்த்து, அவர்மேல் ஏதோ ஒரு வகையில் வெறுப்புற்ற அல்லது சலிப்புற்ற மகன் ஒருவன், 'எனக்கு எவரும் தந்தையுமில்லை; நான் எவர்க்கும் மகனுமில்லை' என்று சொல்வது போலும் ஓர் எதிர்மறையுணர்வாகும்.

கற்பனை என்பது என்ன?

பின்னை, கடவுள் அல்லது தெய்வ அல்லது இறைமை உணர்வு என்பதுதான் என்ன? ஏன் அது வேண்டும் என்றால், அது மனத்துக்குத் தேவையான, உள்ளுணர்வாக அமைந்த, ஒரு நம்பிக்கையுணர்வு சார்ந்த, ஒரு பற்றுக்கோடு என்பதுதான். அஃது ஒரு கற்பனையியல் கொள்பொருள் (Imaginary Theme) ஆகக்கூட இருக்கலாம். அதனால் அதைத் தேவையில்லை என்று கருதிவிடக் கூடாது.

கற்பனை என்பது என்ன? நம்மைவிட, நம் எண்ணங்களைவிட, நம் அறிவைவிட, உலகில் உள்ள பருப்பொருள்களும் நுண்பொருள்களும்கூட ஒருவகைக் கற்பனைதான் என்பதை முதலில் நாம் உணர்ந்துகொள்ளல் வேண்டும். கற்பனை, நம்பிக்கை இரண்டு உணர்வுகளும் ஒரு வகையில் ஒத்த உணர்வுகளே. கற்பனை விதையென்றால், நம்பிக்கை என்பது செடி. நம் தாயும், தந்தையும் ஒரு நிலையில் நாம் கற்பித்துக் கொண்ட நம்பிக்கைப் பொருள்கள்தாம்! அஃதாவது அவர்கள்தாம் நம் பிறவிக்குக் காரணமானவர்கள் என்பது நமக்குத் தெரியாது. நாம் பிறந்தவுடன் நம்மை அவர்களிடமிருந்து அப்புறப்படுத்தியிருப்பார்களானால், நாம் அவர்கள்தாம் நம் தாய் தந்தையர் என்று, நம் அறிவு வளர்ந்த பின்னும்கூட, கண்டு பிடித்துவிட முடியாது. எனவே, அவர்கள்தாம் நம் தாய் தந்தையர் என்பது, அவர்கள் நம்மை வளர்த்து வந்ததிலிருந்து, பிறர் நம்மிடம் கூறி உறுதிப்படுத்தியதிலிருந்து, நாம் கற்பித்துக்கொண்ட அல்லது கற்பிக்கப்பெற்ற கருத்தாகும். அவர்களுக்கு நாம் பிறவாதிருந்து, பிறப்பித்த வேறு இருவர் அவர்களிடம் நம்மைக் கொடுத்து வளர்க்கப்பெற்றவர்களாக நாம் இருந்திருந்தாலும், அவர்களைத்தாமே நம் தாய் தந்தையராக நாம் கருதியிருப்போம். எனவே, வளர்த்ததாலோ, அதை நாம் கண்கூடாக உணர்ந்ததாலோ, பிறர் நமக்கு அவ்வாறு கூறியதாலோகூட நம் தாய் தந்தையராக அவர்கள் ஆகிவிடமுடியாது. இந்த வகையில் நாம் கற்பனை செய்துகொண்டோம், இவர்கள்தாம் நம் தாய் தந்தையராக இருக்க வேண்டும் என்று; அப்படியே பிறராலும் கற்பிக்கப்பெற்றோம், இவர்கள்தாம் நம் தாய்தந்தையரென்று. ஆனால், இவற்றால் மட்டுமே அஃது உண்மையாகிவிட முடியாது என்பதை நாம் முழுமையாக உணர்ந்துகொள்ளுதல் வேண்டும். பின் எப்படி அவர்கள் நம் தாய் தந்தையர் ஆனார்கள்? நாம் கற்பனை செய்து கொண்டோம்; அத்துடன் பிறராலும் கற்பிக்கப்பெற்றோம். அவற்றின் அடிப்படையில் நாம் நம்பினோம். இந்த நிலைகள்தாம் உண்மை. எனவே, கற்பனையும் அதை அடியொற்றிய நம்பிக்கையும்தாம் நமக்கு அப்பால், பிறர்க்கிடையில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்கின்ற உணர்வை நமக்குத் தருகின்றன என்க.

தாய் தந்தையரும் கற்பனையே!

இனி, நம் தாய்தந்தையர் போலவே மற்றவர்களும், மற்றவையும்கூட நம் கற்பனையாலும், அல்லது பிறர் கற்பித்ததாலும், அவற்றின் அடிப்படையில் ஏற்பட்ட நம் நம்பிக்கையாலுமே, நமக்கு அறிமுகமானவர்களே, அறிமுகமானவையே என்க. என்னை? நம் உடன் பிறந்தவர்களையும் நம் தாய்தந்தையர்தாம் பிறப்பித்தார்கள் என்பதற்கும் என்ன உறுதி? நாம் அதைப் பார்த்தோமோ? இல்லை, வேறு சிலர் பார்த்ததும், நம் தாய் கூறியதும் நம் உடன்பாட்டுக்கு உறுதுணையாயின. பிறப்பறையில்கூட நம் தாய்க்குத் தெரியாத வகையில், நம் உடன்பிறந்ததாக, நம் தாய்க்குப் பிறந்ததாக நாம் கருதிக் கொண்டிருப்பவர்கள், மாற்றப்பெற்றவர்களாக இருந்திருக்கலாமன்றோ? எண்ணிப் பார்க்க. இனி இவர்களைப் பற்றியே நிலை இவ்வாறிருக்க, மற்றவர்களைப் பற்றியும், மற்றவற்றைப் பற்றியும், இந்த வகையில் எண்ணிப் பார்க்கத் தேவையில்லை என்பதும், அவ்வாறு எண்ணிப் பார்த்தாலும் இதே முடிவுதான் என்பதும் உணர்ந்து கொள்க.

கற்பனை, நம்பிக்கை, விருப்பம்:

இனி, இந்தக் கற்பனையுணர்வையும், நம்பிக்கையுணர்வையும் இன்னொரு வகையாகவும் விளக்கலாம். நாம் ஒருவரை விரும்புகிறோம் அல்லது ஒரு பெண்ணைக் காதலிக்கிறோம். அதற்கீடாக அவரும், அல்லது அவளும் நம்மை விரும்புகிறார், அல்லது காதலிக்கிறார் என்று, நாம் கற்பனைசெய்து கொள்வதும் நம்புவதும் போன்றதுதான், அதுவும். ஆனால், உண்மையில் நாம் ஒருவர்மேல் கொண்ட விருப்பமும் அல்லது அன்பும் அல்லது காதலும், உண்மையாகவும் இருக்கும், பொய்யாகவும் இருக்கும் என்பது, அவரவர் மன நிலைகளையும், அறிவு நிலைகளையும், சூழலையும், வாய்ப்பு வாய்ப்பின்மைகளையும் பொறுத்த செய்தி. இவற்றைப் போன்றதுதான், இறைமை அல்லது கடவுள் கற்பனையும் நம்பிக்கையும். 'உண்டெனில் உண்டு; இல்லெனில் இல்லை' - எனும் மனவியல் மெய்ம்மம்தான் இதிலும் செயல்படுகிறது. இவ்வகையில் அறிவுணர்வு மனத்துக்கு அடங்கிவிடுகிறது. அல்லது அதை நம்பிவிடுகிறது. எனவே, பலர் அதன் உண்மைகளைப் பற்றியோ பொய்களைப் பற்றியோ சிந்திப்பதில்லை. தாயாக இதுவரை நாம் நம்பிக்கொண்டு அல்லது கருதிக்கொண்டு இருப்பவர், உண்மையிலேயே நம்மைப் பெற்றவராக இருந்தாலும் பெறாதவராக இருந்தாலும், வளர்ந்தவராக இருந்தாலும், வளர்க்காதவராக இருந்தாலும், அன்பு காட்டுபவராக இருந்தாலும், வெறுப்பவராக இருந்தாரும், உதவுபவராக இருந்தாலும், உதவாதவராக இருந்தாலும், தாய்தான் என்று நாம் நம்புகிறோம். அதனால் நாம் ஏதிலியில்லை - (அனாதையில்லை) - நாமும் இக்கால் நம்மைச் சுற்றியுள்ள

மக்கள் கூட்டத்தில், உறவுக் கூட்டத்தில், குடும்பத்தில், குழுவில், குலத்தில், இனத்தில் ஒருவர்தாம் என்று நிறைவு பெறுகிறோம்.

இந்த நிறைவு நம் மனம், அறிவைப் புறக்கணித்துவிட்டுக்கூட நம்புகிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இந்த மனவுணர்வுதான் கடவுள் அல்லது இறை நம்பிக்கையிலும் செயல்படுகிறது. அது மக்கட்கு - நமக்குத் தேவை. அதனால், மனம் நிறைவு பெறுகிறது; நம்பிக்கை பெறுகிறது; துணிவு பெறுகிறது; ஊக்கம் பெறுகிறது; உழைக்க முற்படுகிறது; பிறருடன் உறவாட விரும்புகிறது. இந்த உள்முக நம்பிக்கையுணர்வு மனத்தில் இல்லாமல், அல்லது இருந்து குறைந்து மனம் வெறுமையுற்றால், மன வெறுக்கையினால், உயிர் இவ்வுலகக் கட்டுப்பாட்டினின்றும், உடற்கூட்டினின்றும் வெளியேறிவிட விரும்புகிறது. வெளியேறியும் விடுகிறது. தற்கொலைகள் இவ்வாறுதாம் நடைபெறுகின்றன.

முழுமையும் உண்மையோ
முழுமையும் பொய்யோ இல்லை!

இனி இன்னோர் உண்மையையும் நாம் இவ்விடத்தில் தெரிந்து கொள்ளல் வேண்டும். இறைமையையோ அல்லது கடவுள் தன்மையையோ, முழுமையும் உண்மையென்றோ, அல்லது முழுமையும் பொய்யென்றோ எவராலும் எக்காலத்தும் எக்காரணம் காட்டியும் மெய்ப்பிக்க முடியாது. எனவேதான், இந்த உணர்வு, உலக அறமாக, இயற்கையின் மூல ஒழுங்கியலாக இவ்வதிகாரத் தலைப்பு வழியாகவும், அதிகாரக் கருத்துகள் வழியாகவும் கூறப்பெற்று, ஒரு வகையில் மட்டுமன்று, பலவகையிலும் இது மக்கள் வாழ்வியலுக்கும் அதற்கடிப்படையான அறவியலுக்கும் தேவை என்று இதில் வலியுறுத்தப்பெறுகிறது என்க.

மனவுணர்வும் அறிவுணர்வும் உடலுணர்வும்:

மனம், அறிவு இரண்டும் தனித்தனியாகவும் இயங்குகின்றன; ஒன்றோடொன்று இணைந்தும் இயங்குகின்றன. ஒலி மட்டும் இயங்கும் வானொலிப் பெட்டியையும், ஒலியும் ஒளியும் சேர்ந்தியங்கும் தொலைக்காட்சிப் பெட்டியையும் நாம் கேட்டும் பார்த்தும் இருக்கிறோமே, அதுபோல. தொலைக்காட்சிப் பெட்டியிலும், ஒலிக் கருவியை நிறுத்தி விட்டால், ஒளி மட்டும் இயங்குவதை நாம் பார்க்கலாம்.

இவ்வாறு மனமும் அறிவும் சேர்ந்து இயங்கும் பொழுது, மனம் அறிவை அடிப்படையாகக் கொள்கிறது. அறிவு மனத்தை அடிப்படையாகக் கொள்கிறது. இந்த வகையில் ஒன்றுக்கொன்று உதவிக் கொள்கிறது. ஒன்றையொன்று தழுவிக் கொள்கிறது. மனம் வெறுப்படைந்தால் அல்லது அலைவுற்றால் அறிவு அதைத் தேற்றுகிறது.

'சென்றவிடத்தால் செலவிடாது தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு' *(422)* என்றது காண்க. அறிவு தடுமாறினால் மனம் அதைத் தேற்றுகிறது. இரண்டுக்கும் ஒப்புதலான ஒன்றை இரண்டுமே துய்க்கின்றன; ஏற்றுக்கொள்கின்றன. இரண்டுக்கும் ஒப்புதலில்லாத ஒன்றை இரண்டும் துறந்து விடுகின்றன.

இவ்விடத்தில் உடலையும் நாம் இணை சேர்த்துக்கொள்ளுதல் வேண்டும். அதையும் மறந்துவிடக் கூடாது. மனமும் அறிவும் கதைத் தலைவியும் தலைவனும் போன்றவை யென்றால், உடல் இரண்டும் இணைந்து நடத்தும் நாடகத்திற்கு ஒரு மேடை, களம் போன்றது ஆகும். அல்லது அவையிரண்டின் வாழ்க்கைக்கு ஒரு வீடு போன்றது ஆகும். இந்த உடலென்னும் வீட்டில்தான் மனம் என்னும் தலைவியும், அறிவு என்னும் தலைவனும் வாழ்க்கை என்னும் குடும்பத்தை நடத்துகின்றனர். இருவரும் தொடக்கத்தில், அஃதாவது இளம் பருவத்திலிருந்து இளமைப் பருவம்வரை ஒருவரை ஒருவர் விரும்பும் காதலர்கள் போல், வாழ்க்கை நடத்துகின்றனர். அப்பொழுது, அவர்களுக்குள் ஊடல் நடக்கிறது. பூசல் விளைகிறது. அவற்றாலெல்லாம் அவர்கள் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து விடாமல், ஒருவரை ஒருவர் நன்றாக விளங்கிக்கொள்ள முற்படுகின்றனர். பிறகு, இளமைப்பருவம் வந்து ஒருவரை ஒருவர் நன்கு விளங்கிக் கொண்டு, மணந்து இணைந்துவிடுகின்றனர். பின்னர் இருவரது போக்கும் ஒருவரை ஒருவர் சரி செய்துகொண்டு போகும்படி, குடும்பத்தில் உள்ள கணவன் மனைவியரைப் போன்றே, ஒருவர்க்கொருவர் உறுதுணையாகவும், விட்டுக்கொடுத்தும் இயங்குகின்றனர். முதுமை அடைய அடைய இருவர்க்கும் ஊடல்களும், பூசல்களும் படிப்படியாகக் குறைந்து இறுதியில் அஃதாவது முதுமையில் இருவரும் ஒரே குறிக்கோளுடன் கொள்கை கோட்பாட்டுடன் இணைவாக இயங்குகின்றனர்.

இறையுணர்வு நிலைகள் :

இவ்வகையான மனம், அறிவு இணைவு வாழ்க்கையில், உயிரை நாம் மறந்துவிடக் கூடாது. இவ்வுயிரைத்தான் மெய்யறிவியலார் **ஆதன், ஆன்மா (ஆத்மா)** என்கின்றனர். இவ்வுயிர் மனத்திற்கும் அறிவுக்கும் **தாய்** போன்றது. அவ்வாறானால் அவ்விரண்டிற்கும், அஃதாவது, தாயாக உள்ள உயிர்க்கு - ஆதனுக்கு - ஆன்மாவிற்குக் கணவனும் அஃதாவது தலைவனும், (பதியும்) இந்த மனம், அறிவு என்னும் குழந்தைகளுக்குத் **தந்தையும்** யார்? அவரைத்தான் **இறைவன்** என்கிறது மெய்யியல். அவர்தான் பேராதன், பேரான்மா, பெத்தான்மா (பேராத்மா) பேரிறைவன் என்றெல்லாம் விளக்குகிறது மெய்யறிவியல்.

இதில் எவ்வகைப் போராட்டத்திற்கும் இடம் இல்லை. **உள்ளது** எனலாம்; இல்லது எனலாம். இவ்வாறு எனலாம்; அவ்வாறு எனலாம்.

இப்படி எனலாம், அப்படி எனலாம். அஃது அவரவர் மன நிலையையும் அறிவு வளர்ச்சியையும் பொறுத்தது.

ஒன்றே என்னின், ஒன்றேயாம்;
பலவென் றுரைக்கின் பலவேயாம்!
அன்றே என்னின், அன்றேயாம்;
ஆமே என்னின் ஆமேயாம்
இன்றே என்னின், இன்றேயாம்!
உளதென் றுரைக்கின் உளதேயாம்!
நன்றே நம்பி குடிவாழ்க்கை
நமக்கிங் கென்னோ பிழைப்பம்மா!

— கம்ப. கடவுள் வாழ்த்து.

தன்னுள்ளே உலகங்கள் எவையும் தந்து, அவை
தன்னுள்ளே நின்று, தான் அவற்றுளே தங்குவான்
பின்னிலன் முன்னிலன் ஒருவன் போகிலன்,
தொன்னிலை ஒருவரால் துணியற் பாலதோ?

— கம்ப. இரணியன்வதை: 59

எனும் கம்பரின் மெய்ப்பொருள் கூற்றுகள் இங்கு நினைக்கத் தக்கன. அத்துடன் எல்லாவற்றுக்கும் மனமே காரணம் என்பதையும் நாம் இவ்வகையில் நினைத்தல் தகும். 'மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறன்' (34) என்றும், 'மன நலம் மன்னுயிர்க்காக்கம்' (457) என்றும் ஆசிரியர் கூறுதலும் காண்க. இதுபற்றித் திருமூர் பெயரால் கீழ்வரும் பழஞ்செய்யுள் ஒன்றும் வழங்குகின்றது.

மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டாம்
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டாம்
மனமது செம்மையானால் மற்றதும் செம்மையாமே!

— திருமூலர்

இவற்றுடன் திருநாவுக்கரசரின்

பண்ணில் ஓசை பழத்தினில் இன்சுவை
பெண்ணொடு ஆணென்று பேசற் கரியவன்
வண்ண மில்லி, வடிவுவே றாயவன்
கண்ணில் உள்மணி கச்சியே கம்பனே!

— திருக்கச்சியேகம்பம்

என்னும் பாடலையும் கருதுக.

மெய்யறிவியலும் மதவியலும்:

எனவே, இவ்வாறான உணர்வு நிலைகளை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். விளங்கிக்கொண்டால்தான், இவ்வுலக வாழ்க்கையை நாம் செப்பமாகவும், மகிழ்ச்சியாகவும், நிறைவுடனும், நம்பிக்கையுடனும் நடத்திச் செல்ல முடியும் என்பது மெய்யறிவியலார் கொள்கை. இதை மதவியலார் வேறு வகையாகக் கற்பிப்பர். அந்த நிலைகளையெல்லாம் இந்த நூலுள் தேவையான இடங்களில் தேவையான அளவு விளக்கிச் செல்கிறார் நூலாசிரியர். அவற்றை ஆங்காங்குப் பார்ப்போம்.

இனி, இத்தகைய பேரிறைவனை வாழ்த்தி வணங்குவதில் என்ன தவறு? அஃது அவரவர் விருப்பம், அஃதாவது, அஃது அவரவர் மனத்தையும் அறிவையும் பொறுத்தது. அது தனித்தனி உணர்வு. அதை மெய்யறிவியல் பொதுவாக்கி வலியுறுத்துவதில்லை. அவ்வாறு அது பொதுவாக்கப்பெற்று எல்லார்க்கும் உற்ற கடமையாக்கப்பட்டுவிட்டால், அது மதமாகி விடும். அத்தூய இறையுணர்வு அறவுணர்வாக மாற வேண்டும் என்பதுதான் மெய்யறிஞர் கோட்பாடு. அதுதான் அறம், மூல அறம், முதல் அறம். இறையுணர்வு அறவடிவின; அறத்தைத்தான் எல்லார்க்கும் பொதுவாக்க முடியும். மதத்தை அன்று. மதத்தை எல்லார்க்கும் பொதுவாக்க முடியாது. மதவுணர்வு தொடக்கத்தில் மாந்தர்க்கு உகந்தது போலிருந்து, படிப்படியாக வெறியுணர்வாகவும், பின் வல்லுணர்வாகவும் மாறி வந்து இறுதியில் கொடுமை உணர்வாகவும் கொலையுணர்வாகவும் மாறி விடும்; படிநிலை (பரிணாமம்) எய்தி விடும்.

மெய்யுணர்வு மனத்தையும் அறிவையும் அமைவுபடுத்துவது. மதவுணர்வு மனத்தையும் அறிவையும் அலைக்கழிப்பது. அஃது எந்த மதமாயினும் சரி. மதம் என்ற சொல்லுக்குத் தமிழில் இருபொருள்கள் உண்டு. ஒன்று கொள்கை என்ற பொருளைத் தரும். இன்னொன்று வெறி, உன்மத்தம் என்னும் பொருளைத் தரும். யானை மதம் பிடித்தது என்றால், அது கட்டுத்தறியை அறுத்துக்கொண்டு தாறுமாறாக ஓடி, எதிரிலுள்ள அனைத்தையும் மிதித்தும், அழித்தும் தூக்கி வீசியும் உயிருள்ளவர்களைக் கொன்று பேரழிவு செய்யும். அதைப் போன்றது மதம்.

மெய்யுணர்வு உள்ளத்தில் அறிவில் உயிரில் மட்டுமே கலந்து நிற்கும் ஓர் உணர்வு. அது மதவடிவம் கொள்ளுதல் கூடாது என்பது நூலாசிரியர் கொள்கை.

மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்
பழித்தது ஒழித்து விடின் (280)

என்று மதப் புனைவுகளைக் கண்டித்து, மதத்தையும் கண்டிக்கிறார். இது துறவியலில், கூடாவொழுக்கம் என்னும் அதிகாரத்தில் கூறப்பெற்றதால்,

மதவுணர்வு கூடாது என்பதை வலியுறுத்தினார் என்க. இனி இதனினும் மேலாக அற்றையிருந்த மதங்களிலேயே மிகவும் கீழான ஆரியரின் வேத மதம் (இன்றைய இந்து மதம்) தவிர்க்கக் கூடியது என்பதை அதன் அடிப்படை நடைமுறையைக் கூறிப் **புலால் மறுத்தல்** அதிகாரத்துள்,

அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்து உண்ணாமை நன்று (259)

என்னும் குறளில் அறிவுறுத்துகிறார்.

இனி, இவையே யன்றி அந்த ஆரிய மதமான வேத மதத்தின் கோட்பாடுகளை ஆங்காங்கே கண்டித்துக் கூறியதையும், அவ்வவ்விடத்தில் சுட்டிக் காட்டுவோம், என்க.

திருவள்ளுவர் காலத்துக் கடவுள் கொள்கை:

திருவள்ளுவரின் காலத்தில் (கி.மு. 3-ஆம் நூற்றாண்டு) கடவுளை வணங்கும் வழக்கம் இருந்தது. அவ்வளவு அழுத்தமாக அஃதில்லையெனினும் கடவுளை வாழ்த்துவது ஒருசார் மக்களிடம் இருந்தது.

தொல்காப்பியத்துள்,

'வாழ்த்தியல் வகையே நாற்பாவுக்கும் உரித்தே'

– தொல். (இளம்) 1366.

– என்னும் நூற்பாவால் 'கடவுள் வாழ்த்து' இருந்தது எனத் தெரிகிறது. இனி, அதிலேயே,

'வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ'

– தொல். 1367

என்பதானும்,

'பாடாண் பகுதி கைக்கிளைப் புறனே
நாடுங் காலை நாலிரண்டு உடைத்தே'

– தொல் (இளம்) புறத். 5

- என்னும் நூற்பாவில் கூறப்பெற்ற நாலிரண்டு (எட்டு) என்னும் சொல்லுக்கு இளம்பூரணர் உரையெழுதுகையில் அவ்வெட்டு வகைப் பாடாண் வாழ்த்துள் 'கடவுள் வாழ்த்தை'யும் முதலாக வைத்துப் பொருள் கூறுவதானும், தொல்காப்பியர் காலத்திலேயே (கி.மு. 7-ஆம் நூற்றாண்டு) கடவுளை வாழ்த்தும் வழக்கம் இருந்தது உறுதிப்படுகிறது.

இன்னொரு கருத்தையும் நாம் இங்கு எண்ணிப் பார்க்க வேண்டும். பொதுவாகப் பண்டையில் கடவுள் வாழ்த்து என்பது, இறைவன் இயன்மொழி வாழ்த்தாகவே இருந்தது. பிறகு வரவரத்தான் மாந்தன் தன்னலத்திற்காகவே இறைவனை அல்லது கடவுளை வாழ்த்தத் தொடங்கியிருக்கின்றான். அஃதாவது வாழ்த்தி வேண்டத் தொடங்கியிருக்கின்றான்.

உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகி லாவிளை யாட்டுடை யார்அவர்
*தலைவர் **அன்னவர்க் கே சரண் நாங்களே***

- என்னும் கம்பரது கடவுள் வாழ்த்தையும்,

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத் தமிழ்மூன்றும் தா

- என்னும் பிற்கால ஔவையார் பாடலையும் கவனித்து உணர்க.

இறைவனிடம் தனக்கு அது வேண்டும் இது வேண்டும் என்று வேண்டுவது தன்னலவுணர்வே. பொது நலவுணர்வுடன்தான் இறைவனை வழிபடுவதாயின் வழிபடுதல் வேண்டும். அல்லாக்கால் வழிபடாமலிருப்பதே நல்லது.

இது பெற்றோரிடமிருந்து நன்மைபெறுவதற்காக, அவர்களிடம் வணக்கமாகவும், பற்றுதலாகவும் அன்பாகவும் நடந்துகொள்வதையும் அல்லது அவர்கள்தாமே தனக்கு விரும்பியதைச் செய்யட்டும் என்று விட்டுவிட்டுத் தான் இயல்பாகத் தன் கடமைகளைச் செய்து கொண்டிருப்பதையும் போன்றது. இரண்டிலும் போலித்தனமோ தன்னலமோ இருக்க வேண்டுவதில்லையன்றோ?

இம் முதலதிகாரத்தில் இன்ப வேண்டுதல் இல்லை. வேண்டுதலும் வேண்டாமையும் இலான் என்பது வழிபடுவான் உணர்வைக் குறித்த கருத்தே. இன்ப வாழ்க்கைக்கு இறைவனை வேண்டுவது பொதுச் சொத்தைக் கொள்ளையடிப்பது போன்றது, என்க.

இனி, கழக விலக்கியங்களில் பாரதம் பாடிய பெருந்தேவனார் **அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு** ஆகியவற்றுள் **சிவனை** வாழ்த்தியும், **நற்றிணை**யில் **திருமாலை**யும், **குறுந்தொகை**யில் **முருகனை**யும் வாழ்த்தியும் கடவுள் வாழ்த்துப் பாடல்களைப் பாடி முன்னிணைத்துள்ளார்.

'கலித்தொகை'யிலும் **சிவன்** வாழ்த்தாக ஒரு கடவுள் வாழ்த்துப் பாடலை நூலின் முன் இணைத்துள்ளனர். இதை யார் பாடினார் என்று

தெரியவில்லை. **'பதிற்றுப்பத்'**தின் முதற் பத்து கிடைக்காமையால் கடவுள் வாழ்த்துப் பற்றித் தெரிய வாய்ப்பின்றிப் போய்விட்டது. **பரிபாடலின்** முதற்பாடலே கடவுளை வாழ்த்தும் பாடலாக அமைந்துள்ளது.

- இவற்றிலிருந்து, கழகக் காலத்திலேயே, அஃதாவது தொல்காப்பியர் காலத்திலிருந்தே கடவுள் வாழ்த்து இருந்ததாகத் தெரிகிறது. ஆனால் அதைப் பாடித்தான் நூல்களைத் தொடங்கியதாகத் தெரியவில்லை. அது, பாரதம் பாடிய **பெருந்தேவனார்** காலத்திலிருந்துதான் தொடங்கியிருத்தல் வேண்டும். பெருந்தேவனார் காலம் **உக்கிரப் பெருவழுதி** என்னும் பாண்டியவரசன் காலம். அவன் காலத்தில் சேரநாட்டை **மாவெண்கோ** என்பவனும், உறையூரைத் தலைநகராகக் கொண்ட சோழ நாட்டை இராசசூயம் வேட்ட **பெருநற்கிள்ளி**யும் ஆண்டு வந்ததாகத் தெரிகிறது. அவர்கள் காலத்தில்தான் சிலப்பதிகாரக் கதையும் நிகழ்ந்ததாகவும் தெரிய வருகிறது. இனி, இந்த **உக்கிரப் பெருவழுதி**யின் பேரவையில்தான், கடைக் கழகத்தில் திருக்குறளும் அரங்கேறியதாகக் கதை வழங்குகிறது. இதற்குத் **திருவள்ளுவமாலை**யில் உக்கிரப் பெருவழுதியின் பாடல் மூன்றாவது பாடலாக உள்ளதைச் சான்றாகச் சொல்லுகின்றனர். இவன் காலம் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு என்பர். எனவே, திருவள்ளுவரின் காலத்தையும் கி.பி. 3-ஆம் நூற்றாண்டு என்று பின் தள்ளி வலியுறுத்திக் கூறுவர். ஆனால் மொழியறிஞர் பாவாணர் தம் **'திருக்குறள் தமிழ் மரபுரை'**யின் கால ஆய்வுரையில் பல்வேறு வலிந்த காரணங்களைக் காட்டித் திருவள்ளுவர் காலத்தை கி.மு. 2 முதல் கி.மு. 5 வரை நீட்டித்துச் சொல்லுவார். இஃது இவ்வளவில் நிற்க.

கடவுள் வாழ்த்துப் பெயர் மாற்றம்:

இனி இத்துணைச் சூழல்களிலும், அஃதாவது தொல்காப்பியத்தில் கடவுள் வாழ்த்து முறை நூலுள் கூறப் பெற்றிருந்தும் (ஆனால் தொல்காப்பியத்துள், கடவுள் வாழ்த்து இல்லை) திருவள்ளுவர் கடவுள் வாழ்த்தாகப் பாடாமல் பொதுவாக **இறையுணர்வை நினைந்து** கூறியதாக உள்ளதை மறுத்தல் இயலாது. வணங்குதல் வேறு வாழ்த்துதல் வேறு. ஆனால் கடவுள் வாழ்த்து வழக்கூன்றிய நிலையில், இதற்குப் பரிமேலழகர் உள்ளிட்ட பத்து உரையாசிரியர்கள் உரை (பரிமேலழகர் அனைவர்க்கும் பிந்திய காலத்தவர். கி.பி. 13ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவராகலாம்) எழுதிய பொழுதுதான், இவ்வதிகாரத்திற்குக் **'கடவுள் வாழ்த்து'** என்று பெயரிட்டிருத்தல் வேண்டும். ஆனால், இவ்வதிகாரத்திற்கு நூலாசிரியர் இட்ட பெயர் கிடைக்கவில்லை. அதைக் கருதலளவானும் (அனுமானத்தானும்) கூட உறுதிப்படுத்த வியலவில்லை. எனினும், அவர் கடவுள் என்னும் சொல்லை, இந்த அதிகாரத்தில் மட்டுமன்றி, நூலுள் வேறு எங்குமே சுட்டாமையால் இதற்குப் பிற்காலத்து, அறிவியல் வளரப் பெற்ற நிலையில், உரையெழுதிய புலவர் சிலர், பெற்றோர் பெயரிடாத

பிள்ளைக்கு ஊரார் பல பெயர்கள் இட்டு அழைப்பது போல நூலாசிரியர் இட்டிராத தலைப்புக்குத் தம் தமக்கு உகந்ததாகப்பட்ட வேறுவேறு தலைப்புகளை இடலாயினர்.

இவ்வகையில் **'இறைநலம்'** எனப் புலவர் **குழந்தையாரும்**, **'இறைவாழ்த்து'** எனப் பன்மொழிப் புலவர் **கா. அப்பாத்துரையாரும்**, **'முதற்பகவன் வழுத்து'** என மொழி ஞாயிறு **தேவநேயப் பாவாணரும்**, **ஆதிபகவன் வாழ்த்து** என இருக்கலாமெனப் பேராசிரியர் **வ.சுப. மாணிக்கனாரும்** கூறியுள்ளது கவனிக்கத் தக்கது.

இந்நிலையில் பரிமேலழகரால் குறிக்க பெற்றிருத்தல் வேண்டும் எனக் கூறும் **கடவுள் வாழ்த்து** என்னும் பெயரும், மேற்குறித்த அறிஞர்கள் வைத்துள்ள நால்வகைப் பெயர்களும் பிறர் சிலர் இட்டுள்ள வேறு பிறவும், பல்வகைக் கரணியங்களால் பொருந்துவனவாக நாம் கருதவில்லை.

அறமுதல் உணர்தல்:

மூலத்திலிருந்து எவ்வகையானும் குறை கூறற் கியலாத மிகச் சிறந்த உரையாசிரியராகிய பரிமேலழகரும், **'நீத்தார் பெருமை'** அதிகாரத்துத் தம் முன்னுரையுள், 'அவ் வற முதற் பொருள்களை உலகிற்கு உள்ளவாறு உணர்த்துவார் அவராகலின்...' என்று குறித்திருப்பதும் - அக் கூட்டுச் சொல்லின் பொருள் வேறானாலும் - இத் தொடர் அமைய ஒரு கருதலுணர்வை நமக்குத் தந்தது.

இறையுணர்வாகவன்றி, அறமுதல் உணர்வாக நாம் அதைக் கருத வேண்டுவது, கருதலளவையான் உண்டென்பார்க்கும் இல்லையென்பார்க் கும்கூடப் பொருந்திய கருத்தாக இருப்பதுடன் இவ்வுலகின்கண் உள்ள அனைத்துக் கூறினர்க்கும் பொதுவானதும், ஒப்புக் கொள்ளத் தக்கதுமான கருத்தாகவும், அதே பொழுது நூலாசிரியர் கருத்துக்கு மாறில்லாததாக விருப்பதும் கருதத் தக்கதாம் என்க.

இல்லையும் இருக்கிறதும்!

('இல்லை' என்பதும் 'இருக்கிறது' என்பதும் ஒரு வகை மெய்ம்மக் கோட்பாடு. அதன் பல்வேறு உருவளவை (பரிமாண)க் கருத்துகளை இங்குக் காணலாம். இதில் உள்ள ஒவ்வோரடியும் ஒவ்வொரு வகையில் மூலக் கருத்தை வலியுறுத்துகிறது. எண்ணிக் காண்க.)

இல்லை என்று ஒன்று இல்லை!
இருக்கிறது என்றும் ஒன்று இல்லை!

இல்லையும் இல்லை; இருக்கிறதும் இல்லை;
இருக்கிறதும் இருக்கிறது; இல்லையும் இருக்கிறது;

இல்லாமலும் இருக்கிறது;
இருக்காமலும் இல்லை;

இல்லையும் இல்லாமல் இல்லை.
இருக்கிறதும் இல்லாமல் இல்லை.
இல்லையும் இல்லாமல் இருக்கிறது;
இருக்கிறதும் இல்லாமல் இருக்கிறது!

இல்லை இருக்கிறது இல்லை;
இருக்கிறது இருக்கிறது இல்லை;
இல்லாமல் இருக்கிறதும் இருக்கிறது;
இருக்கிறது இருக்கிறதும் இருக்கிறது;

இல்லை இல்லாமலும் இருக்கிறது;
இருக்கிறது இல்லாமலும் இருக்கிறது!
இல்லை இல்லாமலும் இல்லை;
இருக்கிறது இல்லாமலும் இல்லை;

இருக்கிறது இல்லை இருக்கிறது!
இல்லை இல்லை இருக்கிறது;
இருக்கிறது இல்லை இல்லை;
இல்லை இல்லை இல்லை;

இல்லை இல்லாமல் இல்லை இல்லை;
இருக்கிறது இல்லாமல் இல்லை இல்லை;
இல்லையும் இல்லாமல் இருக்கிறது இல்லை;
இருக்கிறதும் இல்லாமல் இருக்கிறது இல்லை!

இல்லை இருக்கிறது இல்லை இல்லை;
இருக்கிறது இருக்கிறது இல்லை இல்லை!
இல்லை இருக்கிறது இருக்கிறது இல்லை;
இருக்கிறது இருக்கிறது இருக்கிறது இல்லை!

இல்லை இல்லாமல் இல்லை இருக்கிறது.
இருக்கிறது இல்லாமல் இல்லை இருக்கிறது
இல்லையும் இல்லாமல் இருக்கிறது இருக்கிறது.
இருக்கிறதும் இல்லாமல் இருக்கிறது இருக்கிறது!

இல்லை இருக்கிறது இல்லை இருக்கிறது.
இருக்கிறது இருக்கிறது இல்லை இருக்கிறது.
இல்லை இருக்கிறது இருக்கிறது இருக்கிறது.

இருக்கிறது இருக்கிறது இருக்கிறது இருக்கிறது!

இருக்கிறது இல்லாமல் இருக்கிறது இல்லை;
இல்லாமல் இல்லாமல் இருக்கிறது இல்லை.
இருக்கிறதும் இல்லாமல் இல்லையும் இல்லை.
இல்லையும் இல்லாமல் இருக்கிறதும் இல்லை!

இருக்கிறது இருக்கிறது இருக்கிறது இல்லை.
இல்லாமல் இருக்கிறது இருக்கிறது இல்லை.
இருக்கிறது இருக்கிறது இல்லை இல்லை
இல்லை இருக்கிறது இல்லை இல்லை!

இருக்கிறது இல்லாமல் இருக்கிறது இருக்கிறது,
இல்லை இல்லாமல் இருக்கிறது இருக்கிறது;
இருக்கிறது இல்லாமல் இல்லை இருக்கிறது;
இல்லை இல்லாமல் இல்லை இருக்கிறது!

இருக்கிறது இருக்கிறது இல்லை இருக்கிறது;
இல்லை இருக்கிறது இருக்கிறது இருக்கிறது
இருக்கிறது இருக்கிறது இருக்கிறது இல்லை!
இல்லை இல்லை இல்லை இல்லை!
இல்லை!
இருக்கிறது!

- உரையாசிரியர் ('தென்மொழி' சுவடி: 9. ஓலை: 11.)

க. அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு. 1

பொருள் கோள் முறை *(அன்வயம்):*

எழுத்து எல்லாம் அகரம் முதல;
உலகு ஆதி பகவன் முதற்றே.

பொழிப்புரை: *எழுத்துகள் எல்லாம் 'அ'கரத்தை (அ'வை) முதலாக உடையன. (நாம் வாழும்) இவ்வுலகம் (இதன் தோற்றத்திற்கும், விளக்கத்திற்கும், மாற்றத்திற்கும், அடிப்படைப் பொருளாகவும் அறிவாகவும் உணர்வாகவும் நிற்கும்) மூல (இயங்கியல் அறமுதல் கூறாகிய) இறைவனை முதலாக உடையது.*

சில விளக்கக் குறிப்புகள்:

1) **ஆதி பகவன்** - மூல அறமுதல் கூறாகிய இறைவன். ஒளியும் உணர்வுமாகி அறமுதல் கூறாய் இயங்கிக் கொண்டிருக்கும் இறைமையை, அறிதற்கு எளிதாய் வடிவப்படுத்திப் பால் தழுவி 'ஆதி பகவன்' அஃதாவது, மூல இறைவன் என்றார் என்க.

இனி, ஒளிக்கும் மூலமாய் நின்றது ஒலி. அஃது உணரப்பெறாது என்க.

ஆதி பகவன் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. உயர்திணைப் புணர்ச்சியாகலின் ஒற்று மிகாமல் வந்தது. இகர ஈறாயின் இருவழியும் என்க.

'ஆதி' தமிழ்ப் பெயரே. 'ஆதன்' என்னும் ஆண்பாற் பெயருக்குற்ற பெண்பாற் பெயர். முதல், மூலம் என்னும் பொருளுடையது.

இதன் வழி, அனைத்து இயற்கை இயங்கியலுக்கும் மூல முதலாகி நிற்கும் ஓர் அறமுதல் பேராற்றல் உண்டென உணர்த்தினார்.

'ஆதி' வடதிரவிடச் சொல் என்பார் பாவாணர். தமிழ்ச் சொல்லே என்று நிறுவுவார் அருளியார். இது, தொடக்கப் பொருள் தரும் தூயதமிழ்ச்சொல் என்பது அவர் கூற்று.

-பகவன் - பகுக்கக்கூடியவன் - பாகுபாட்டுக்குரியவன்.

'ஆதி பகவன்' - முதல் பகுநிலைக்குரியவன். அல்லது பாகுபாட்டு நிலைக்கு முற்பட்டவன்.

என்னை? உலகின் மூலமுதலினின்று. உயிர்கள் வேறு பிரிதற்கு முன் இருந்த இருப்பு நிலை என்க. அதனின்று வெளியேறிய உயிர்களைத் தனிப்படுத்திக் காட்ட 'ஆதி பகவன்' என்றார். இதன்வழி முழு இறைமையின் ஒரு பகுதி உயிர்களாகி வெளியேறிய பின், மறுபகுதி இறைமையாக இருப்பதை உணர்த்தினார், என்க.

'பகவன்' என்பதும் வடதிரவிட (பிராகிருத)ச் சொல் என்றும், தொடக்கத்தில் இது கதிரவனை - பகலவனைக் குறித்துப் பின்னர்க் கடவுளைக் குறித்தது, என்றும் கூறுவார் புலவர் மதிவாணனார்.

'ஆதி பகவன்' என்னும் தொடர்ச்சொல், சிவனியச் சார்பாக, 'உலகம் ஆதி ஆற்றலாகிய அம்மையைத் தன் ஒரு பாகத்திற் கொண்ட (ஆதி+பகவு+அன்) முழுமுதற் கடவுளை (சிவனை)

முதலாக உடையது' என்று கூறியதாகக் கருதுவார், மறைமலையடிகளார். அவர் போல் பிறரும் பல்வேறு கரணியங்கள் கூறி, இத் தொடர்ப் பொருளைத் தம்தம் சமயச் சார்பாக்கிக் காட்டுவர்.

உவமைக் கண் 'எழுத்தெல்லாம்' என்று குறித்ததால் 'உலகு' என்பதை 'உலகெல்லாம்' என்றும் கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு கொள்ளவே, உலகங்கள் எல்லாவற்றையும் தோற்றிய - அத்தோற்றத்துக்கு முதலாக உடைய ஒருவனையே 'ஆதிபகவன்' என்றார் என்றும் பொருள் கொள்ளல் வேண்டும். கொள்ளவே, குரு என்பார் கொள்கை தவிர்ந்தது என்க.

'குரு'வும் கடவுளாகக் கருதப்பெறுவர் என்பதைத்

'தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய

மன்னுயிர் எல்லாம் தொழும்' **(268)**

என்பதில் கூறினாரேனும், 'ஆதிபகவன்' என்பதில் முழுமுதல் இறைவனையே அவர் குறித்தாராதல் வேண்டும். இஃது, எந்தச் சமயத்தையும் சார்ந்ததாகப் பொருள் கொள்ளக்கூடாது என்பதற்காகத்தான், 'ஆதிபகவன்' என்று இணைத்து வழங்கியிருப்பார் என்று கருத வேண்டியுள்ளது.

மற்று, இத் தொடருக்குப் பல மதவியலாரும் கூறும் கூற்றுகளும், அவற்றுக்கான மறுப்புகளும் இதன் 'நிறைவுரை'யில் மிக விரிவாகக் காட்டப்பெறும்.

2. **முதற்றே உலகு** - (ஆதி பகவனை) முதலாக உடையது உலகு. - முதலது - முதல்+அது - முதல் து - முதற்று. 'ஏ'காரம் உறுதி (தேற்ற)ப் பொருளில் வந்தது.

இங்கு, உலகை முன் வைத்துக் கூறியது, கருமியத்தை (காரியத்தை)க் கொண்டு, கரணியத்தை (காரணத்தை)ப் புலப்படுத்த வேண்டி என்க. என்னை? 'பாண்டியன் வென்ற நாடு' என்பதில், பாண்டியன் முன்பே அறியப் பெற்றவனாகலின் அவனை முன் வைத்தும், அறியப்படாத செய்தியாகிய வென்ற நாட்டைப் பின்வைத்தும் கூறலே மரபு.

இங்கு, இம் மரபை மாற்றி, 'இந்நாடு பாண்டியனை வென்றியாக உடையது' என்பது போல், 'இவ்வுலகு ஆதிபகவனை முதலாக உடையது' என்று பொருள் வரும்படி கூறியது, காணப்பெறும் கருமியப் பொருளாகிய உலகை முற்காட்டி, இதற்கொரு காரணன் வேண்டு மன்றோ, 'அவன்

ஆதிபகவன்' என்று அளவையான் நிறுத்துதற்கே என்க.

— **உலகு** — **உலகம்** - தூய தமிழ்ச் சொல். சுழலுதல் - சுழன்று –கொண்டிருப்பது என்னும் பொருளுடையது. அல மரல் - உலமரல் – சுழலுதல். இதனை 'லோக' என்னும் சமசுக்கிருதத்திலிருந்து வந்ததாகக் கூறுவது திரித்துக் கூறுவது. 'லோக்' என்பது 'பார்க்கப் படுவது' என்னும் பொருளது. உலகம் மட்டுமன்று பிற அனைத்துமே பார்க்கப்படுவதால் இப்பொருள் பொருத்தமற்றது என்க.

- இனி, உலகம் என்னும் சொல் போலவே உலகைக் குறிக்கும் பிற சொற்களும் அறிவியற் பொருள் சான்றவை என்க. அவை:

ஞாலம் - தொங்கிக் கொண்டிருப்பது. (ஞாலுதல் - தொங்குதல்)

கோளம் - உருண்டையாய் இருப்பது

மண்ணகம் - ஐம்பூதங்களும் பொருந்தியிருப்பது. மண்ணுதல் - பொருந்துதல் - இணைதல்.

வையகம் - சக்கரம் போல் உருண்டுகொண்டிருப்பது.

வையம் - சக்கரம் - வண்டி - உருளுதல்.

நிலம் - உயிர்கள் நிலைத்திருப்பது. 'நில்' என்னும் வேரடியாகப் பிறந்த சொல்.

புடவி - புடைத்திருப்பது. புடைந்து (விரிந்து) கொண்டே செல்வது என்னும் பொருளில் 'பிரபஞ்ச'த்தையும் (Universe) குறிக்கும் பொருள் பொதிந்த சொல்.

3. **அகர முதல எழுத்து எல்லாம்** - எழுத்துகள் எல்லாம் அகரத்தை முதலாக உடையன.

இந்நூலைக் கற்கப் புகுவான் எழுத்தையும் மொழியையும் கற்றவனாக இருத்தல் வேண்டும். ஆகையால், அதன்வழி அவனுக்கு அறிந்த உவமை கூறினார்.

அகரத்தை எடுத்துக் காட்டியது ஒலிவடிவாகிய மூலத்தைக் காட்ட என்க. எழுத்துகளைக் கூறியது பருவடிவாலான பொருளுலக விளக்கத்தை என்க.

எழுத்துகளுக்கெல்லாம் அகரம் முதல். உலகுக்கெல்லாம் இறைவன் முதல். எல்லாம் என்பது இரண்டுக்கும் வந்து பொருள் தரும்.

எல்லா எழுத்துகளும் அகரத்தினின்றே தோன்றியது போலவே, எல்லா உயிர்களும் பிற பொருள்களும் இறைமையினின்றே தோன்றியமை பெறப்படும்.

உயிரெழுத்துகள் வரிசையில், நெடில்கள் தவிர்த்து எழுத்துகள் - அ, இ, உ, எ, ஐ, ஒ, ஔ ஆகிய ஏழும், ஃ-ஐயும் சேர்த்தால் எட்டும் ஆகும். இவற்றுள் 'அ' இறைவனையும், பிற ஏழும் ஏழு உயிர்ப்பிறவிகளையும் குறிக்கும்.

ஏழு உயிர்ப்பிறவிகளாவன: நிலைத்திணை, நீந்துவன, ஊர்வன, பறப்பன, நகர்வன (விலங்குகள்), நடப்பன (மக்கள்), ஃ எழுத்து அனைத்துக்கும் பொதுவாகிய, கண்ணுக்குப் புலப்படாத நுண்ணுயிரி (microbe)களைக் குறிக்கும், என்க.

'அ'கரம் முதலில் வாயைத் திறந்து கூறுகையில் ஒலியாக இருந்து, அதனை எழுதுகையில் ஒளி வடிவமும் பெறுவது போலவே, இறைவனும் முதலில் ஒலி வடிவாய் இருந்து, பின் உலகங்களும் பிறவுமாக இயங்குகையில் ஒளிவடிவாகவும் விளங்குகிறான் என்க.

அகரத்தை இறைவனாகவும், பிற எழுத்துகள் அனைத்தையும் உயிர்களாகவும், உயிர்ப்பொருள்களாகவும் உயிரும் மெய்யும் சார்ந்த வாழ்வுயிர்களாகவும் உருவகம் செய்தார்.

இங்கு, 'உயிர்கள்' என்றது அகரம் தவிர்த்த பிற உயிரெழுத்துகளையும், உயிர்ப் பொருள்கள் என்றது மெய்யெழுத்துகளையும், உயிரும் மெய்யும் சார்ந்த வாழ்வுயிர்கள் என்றது உயிர்மெய் எழுத்துகளையும் குறிக்கும் என்க.

இதனால் இறைக் கொள்கையையும் உயிர்க் கொள்கையையும் ஒப்பினார் என்க.

இதில், எழுத்துகள் என உயிரெழுத்து, மெய்யெழுத்து, உயிர்மெய் எழுத்து ஆகியவற்றையும், உலக இயக்கத்தையும், இறைமையுடன் இணைவைத்துக் கூறியதால், தொல்காப்பியத்துள் கூறப்பெறும் இம்மூவகை எழுத்துகளின் இயக்க இலக்கணங்கள், உலகின் உயிரியக்கத்திற்கும் பொருந்தும் என்க.

உயிரெழுத்துகள் - உயிர்கள்.

மெய்யெழுத்துகள் - உடல்கள் - உடம்புகள்.

உயிர்மெய்யெழுத்துகள் - உயிரும் உடம்புமாய் இயங்கும் மக்கள்.

இனி, எழுத்திலக்கணத்தோடு, உயிர் இலக்கணம் பொருந்துமாறு காண்க: (சில எடுத்துக் காட்டுகள்)

1) மெய்யின் இயக்கம் அகரமொடு சிவணும் — தொல். 46

- அஃதாவது மெய்யெழுத்துகள் அனைத்து உயிரெழுத்துகளுடனும் பொருந்தி ஒலிக்கும்.

க் + அ = க; ம் + அ = ம; ப் + அ = ப

- அதுபோல், அனைத்து உயிர்மெய்களிலும் இறைவனாகிய 'அ' பொருந்தியிருக்கிறது, என்க.

2) உயிர்மெய் அல்லன மொழிமுதல் ஆகா - தொல். 60

- அஃதாவது, உயிரெழுத்துகளும், உயிர்மெய்யெழுத்துகளும் அன்றி, மெய்யெழுத்துகள் மட்டும் சொற்களின் முன் வருவதில்லை.

அன்பு, இரக்கம், ஈகை, உண்மை.

கனிவு, பிறப்பு, நீக்கம், முன்பு.

அதுபோல் உயிரற்ற வெறும் உடம்புகள் இயங்குவதில்லை, என்க.

3) மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே. - தொல். 18

- அஃதாவது, உயிருள்ள ஓர் உடம்பில் உயிர் தெரிவதில்லை. உடம்பு மட்டுந்தான் தெரிகிறது. ஆனால் அதில் உயிரும் கலந்திருக்கிறது. எதுபோல் எனின் உயிர்மெய் எழுத்தில் உயிர் கலந்திருப்பது போல். அத்துடன், முதலில் தெரிவது உடல்; அந்த உடலில் உயிர் கலந்திருப்பது, அவ்வுடல் ஒலிப்பதிலிருந்து பின்னர்த் தெரியும். எதுபோல் எனின் உயிர்மெய் எழுத்தில் முதலில் தெரிவதும், ஒலிப்பதும் மெய்யெழுத்தே. உயிர் அதன் பின்தான் ஒலிக்கும், ஆனால் காட்சிக்குத் தெரியாது.

க்+அ-க. 'க' என்று ஒலிப்பின், அவ்வொலியில் முதல் ஒலியாக 'க்'-உம், இரண்டாவது ஒலியாக, முடிவில் 'அ'வும் ஒலிப்பது காண்க)

4) மெய்யொடு இயையினும் உயிரியல் திரியா

- தொல். 10

- அஃதாவது, மெய்யெழுத்தோடு உயிரெழுத்து சேர்ந்து ஒலிப்பினும் உயிர் ஒலிப்பில் மாற்றம் ஏற்படுவதில்லை.

'ம' என்று ஒலிக்கும் போது, முற்றொலியாக வரும் அந்த 'அ' ஒலி கெடுவதில்லை; மாற்றம் அடைவதும் இல்லை.

அதுபோல், உடம்போடு உயிர் இயங்கினாலும், அந்த உயிர்க்கு முன்னரே உள்ள தன்மைகள், (அஃதாவது அறிவு, மன, குண நிலைகள்) வேறுபடுவதில்லை.

ஒருவன் இயற்கையாகவே அறிவு நுட்பத்துடனும், நல்ல மன, குணங்களுடனும் இயங்குவதும், பிறிதொருவன் அறிவு முட்டுப்பாட்டுடனும், தீய மன, குணங்களுடனும் இயங்குவதும்

காண்க. இவை பிறப்புச் சூழலாலோ, வளர்ப்புச் சூழலாலோ அல்லது வாழ்க்கைச் சூழலாலோ ஏற்படுவதில்லை. பிறவியிலேயே உயிர்க்குள்ள உணர்வும் குணமுமாம் என்க.

என்னை? 'நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன் உண்மை அறிவே மிகும்' (373) என்றும், 'உருவு கண்டு எள்ளாமை வேண்டும்' (667) என்றும், 'எனை வகையான் தேறியக் கண்ணும், வினைவகையான் வேறாகும் மாந்தர் பலர்' (514) என்றும், உயிர்நிலைகள் திரியா உண்மை காட்டுவர். 'தையையும் கொடையும் பிறவிக் குணம்' என்றார் ஔவையாரும்.

5) பன்னீர் உயிரும் தந்நிலை திரியா. - தொல். 84

- அஃதாவது, உயிரெழுத்துகள் பன்னிரண்டும், (அஃதாவது, நாம் முன்னர்க் கூறியது போல் அகரமும் நெடிலும் தவிர்த்த ஏழு உயிரெழுத்துகளும்) தனித்து இயங்கினும் மெய்யெழுத்துகளோடு எந்நிலையில் இயங்கினும், தம் இயல்பாம் தன்மைகளிலிருந்து திரிபடைவதில்லை.

அவை போலவே, எந்தெந்த உடல்களில் உயிர்கள் வந்து பொருந்தி இயங்கினாலும் அவ்வவற்றின் உயிர்களுக்குண்டாம் இயல்புத் தன்மைகளிலிருந்து அவை மாறுபடுவதில்லை, என்க.

6) மெய் உயிர் நீங்கின் தன்னுருவாகும். - தொல். 139

- அஃதாவது, மெய்யெழுத்தை விட்டு உயிரெழுத்து நீங்கிவிட்டால், மீண்டும் அதன் இயல்பான உருவையும் ஒலியையும் எய்தும்.

க-க்-அ

அதுபோல், உடம்பினின்று உயிர் நீங்கிவிட்டால், இயல்பாக அது தன்னிலையில் இயங்கி நிற்கும், என்க.

7) - இனி, தொல்காப்பியர் மட்டுமன்றி, **பவணந்தியாரும்** (12-ஆம் நூற்றாண்டு) தம் **'நன்னூலில்'** எழுத்தியல் தொடர்பாகக் கூறும் பல நூற்பாக்கள் உயிரியக்க உண்மைகளைக் கூறுவன. அவற்றுள் எடுத்துக் காட்டாக ஒன்று காண்க.

'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவ தியல்பே' - நன்னூல் 204

- இது, மெய்யெழுத்தோடு உயிரெழுத்து வந்து இணைவது இயல்பாக நிகழ்வது என்பதை உணர்த்துகிறது.

- அதே பொழுது, தனியே இயங்கிக் கொண்டிருக்கும் உயிர் பிறவியை விரும்பித் தனக்கோர் உடலைத்தேடி, அதனோடு பொருந்தி

வாழ்கிறது என்னும் மெய்ப்பொருள் உண்மையும் இதனுள் விளக்கப் பெறுவது காண்க.

- 'எழுத்தெல்லாம் அகர முதல' என்றதால், உலகில் வழங்கும் எல்லா மொழிகளுக்கும் அகரமே முதலாக உடையதும் பெறப்பட்டது.

இவ்வுண்மை கூறுவதற்கு, நூலாசிரியர்க்கு, அவர் காலத்துப் பலமொழிகளைப் பார்க்கும் வாய்ப்பும் ஏற்பட்டிருத்தல் வேண்டும் என்றும் தெரிய வருகிறது. கழக நூல்களிலிருந்து அவர் காலத்து, சீனம், கிரேக்கம் முதலிய அயன்மொழிகளும், பிராகிருதம், பாலி, சமசுகிருதம் முதலிய வடமொழிகளும் வழங்கியனவாக அறியப்பெறுகின்றது. எனவே, ஆசிரியரும் அவை பற்றி அறிந்திருக்கலாகும். அவற்றுளெல்லாம் அகரமே எழுத்து முதலாக உள்ளது அறிக.

- 'அ'கரம் பல்வேறுபட்ட உலக மொழிகளிலும் ஒலி நிலையில் ஒன்றுபட்டிருப்பினும், ஒளி நிலையில் அஃதாவது எழுத்து-வரி வடிவ நிலையில் வேறு வேறு வகையாக உள்ளதால், அவற்றிலும், அவற்றைப் பேசும் மக்களிடையிலும், இறைவன் எனும் உணர்வு பொருந்தியிருப்பினும், அவன் பெயரும் உருவமும் வேறு வேறு பட்டிருப்பதை உணர்த்தினார் என்க.

எழுத்துகளின் பிறப்புப் பற்றித் தொல்காப்பியம்,

'எல்லா எழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி எழுதரு வளியின்
பிறப்பொடு விடுவழி உறழ்ச்சி வாரத்து
அகத்தெழு வளியிசை'.

- தொல். 102.

என்றுரைக்கும். அஃதாவது ஓர் எழுத்தை ஒலிக்கும் எண்ணம் தோன்றியவுடனே, அந்த ஒலி தோன்றும் இடத்திலுள்ள அணுக்களெல்லாம் அந்த ஒலியை எழுப்புவதற்கு ஒன்று திரளும். இஃது அகநிகழ்வு. இனி, ஒன்று திரண்ட ஒலியணுக்கள் எழுத்தொலியாக வருவது புற நிகழ்ச்சி. அஃதாவது, முதலாவது காரணம்; பின்னது கருமம்.

இந்தக் கருமநிலை வேறுபாடுடையது. அவரவர் குரல் முயற்சியின் வெளிப்பாடு. ஆகையால் அவரவர் உடல் நிலைக்குத் தக்கபடி வேறுபாடுகள் நிகழும். எனவே, ஒரே எழுத்தொலி ஒவ்வொருவரின் குரல் வழியாகவும், வெவ்வேறு காலநிலை,

உணர்வுநிலை, அறிவுநிலை - ஆகியவற்றைப் பொறுத்து, வெவ்வேறு மாத்திரை அளவிலும், ஒலியளவிலும் (உரத்தல், கரகரத்தல் முதலியன போல்) மாறுபாடுகள் உடையதாக இருக்கும் என்க.

இறையுணர்வும் இத்தகையதே. என்னை, முருகன் என்னும் இறைமைக் கூறாகிய ஒரு கடவுளை ஒவ்வொருவரும், அவரவர் உணர்வுநிலை, அறிவுநிலை, உடல் நிலை, கால நிலை ஆகியவற்றுக் கேற்பவே உணர்தல் முடியும்; பயன்பெறுதல் முடியும் என்றார், என்க.

- இனி, அகர எழுத்தேகூட, வரிவடிவில், தொடக்கத்தில் இருந்த நிலைக்கும் இன்றுள்ள நிலைக்கும் எத்தனையோ மாறுதல்கள் அடைந்துள்ளன. ஆனால், ஒலிவடிவில் ஒன்று தான். அதுபோல் இறையுணர்வு தொடக்கத்திலிருந்து இன்றுவரை ஒன்றுதான். வடிவங்கள் மாறுதல் அடைந்து வந்துள்ளன. இதே இறையுணர்வு வேறுவேறு மக்களிடையும் மதங்களிடையும், உணர்வில் ஒன்றியும், பருப்பொருளாய பெயர்களிலும் வடிவங்களிலும் மாறியும் இருக்கின்றன. வடிவங்கள் இன்னும்கூட மாறலாம். ஆனால் அகரவொலி என்றும் ஒன்றாகவே இருப்பதுபோல், இறையுணர்வும் என்றும் ஒன்றாகவே இருக்கும் என்க.

- 'அ'கரம் பிற உயிரெழுத்துகளிலும் மெய்யெழுத்துகளிலும் உயிர்மெய்யெழுத்துகளிலும் ஒலியானும் ஒளியானும் ஊடுருவி நிற்பதுமன்றித் தனித்தும் நிற்பதுபோல், இறைவனும் உலகிலுள்ள எல்லா உயிர்களிலும், மெய்களிலும் (மெய்கள் என்பவை ஒலியற்ற-இயங்குதலற்ற கல், மண் போன்ற பருப்பொருள்கள்), உயிர்மெய்களிலும் (நுண்ணுயிர் முதல் மாந்தன் வரை) ஒலியானும், ஒளியானும் ஊடுருவி நிற்பதுடன், தனித்தும் நிற்கிறான் என்பதையும் உணர்த்தினார். (அ' எல்லா எழுத்துகளிலும் அதன் ஒலியமைப்பிலும் ஒளி (உருவ) அமைப்பிலும் ஊடுருவி நிற்பதை - ஏதோ ஒரு வகையில் - அதன் தொடக்க வரைவோ, இடை வரைவோ, இறுதி வரைவோ, கூடக் குறையப் பொருந்தி இருப்பதை, அவ்வெழுத்துகளை உற்று நோக்கியும் பிற எழுத்தாய்வு நூல்களானும் உணர்ந்துகொள்க.)

- இவ்வாறு 'அ'கரம் பிற எழுத்துகளில் கலந்து நிற்பதை நுண்ணறிவினரே உணர்வது போல், நுண்ணறிவு (மெய்யறிவு) உடையோரே, இறையுண்மையையும், அது பிற உயிர்களோடும் பொருள்களோடும் இரண்டறக் கலந்து நிற்பதையும் உணர்ந்து கொள்ள முடியும் என்க.

- இனி, எழுத்துகளிற் போலவே எழுத்தமைப்புகளிலும் சொற்களிலும், சொல் தொடர்களிலும்கூட மெய்ப்பொருள் உண்மைகள்

பொதிந்திருப்பதைக் கீழ்வரும் விளக்கங்கள்வழி உணர்ந்துகொள்க.

1) எழுத்தமைப்புகளில் மெய்ப்பொருள் உண்மைகள் உள்ளமை: -

- **உயிரெழுத்துகள் குறில், நெடில்** என்றிருப்பதைப் போலவே, வாழ்கின்ற உயிர்களும் குறுகிய, நெடிய வாழ்நாளைப் பெற்றிருப்பதை உணர்க.

- **உயிர்மெய்யெழுத்துகள் வல்லினம், மெல்லினம், இடையினம்** என்று பிரிக்கப்பெற்றிருப்பதைப் போலவே, உயிர்களின் மெய்களும் அஃதாவது உடல்களும், வலிவாகவும், மெலிவாகவும், இடையீடாகவும் இருப்பதை உணர்க. இனி, இவை போல் பல உண்மைகளும் உள்ளதை விரிக்கில் பெருகும். அவை நிறைவுரையில் காட்டப் பெறும்.

2) சொற்களில் மெய்ப்பொருள் உண்மைகள் உள்ளமை:

- - **'உயிர்'** என்னும் சொல், 'உடலை இயக்குவது - செலுத்துவது - நடத்துவது' - (உய்த்தல் - இயக்குதல், செலுத்துதல், நடத்துதல்) என்னும் பொருளையும்,

- **உடல், உடம்பு** என்னும் சொற்கள், உயிர் இயங்குவதற்கு உடனாக - துணையாக - உள்ளது என்னும் பொருளையும் புலப்படுத்தி நிற்பதைக் காண்க.

- அதேபோல், உடல் என்று பொருள் தரும் **'மெய்'** என்னும் சொல்லும், உயிரிருப்பதை மெய் - உண்மை - என்று உணர்த்துவதையும் காண்க.

- இனி, **பிறப்பு, இறப்பு** என்னும் இரண்டு சொற்களையும் எடுத்துக் கொள்ளுங்கள். இவற்றில் உள்ள முதல் எழுத்துகள், முறையே **பி** என்னும் உயிர்மெய் எழுத்தையும், **'இ'** என்னும் உயிரெழுத்தையும் கொண்டிருக்கின்றன. மற்ற 'றப்பு' என்னும் எழுத்துகள் பொதுவானவை.

பிறப்பு என்னும் சொல்லின் முதலெழுத்து 'பி' -யில் ப் + இ, அஃதாவது மெய்யோடு உயிர் சேர்ந்திருப்பதையும், இறப்பு என்னும் சொல்லின் முதலெழுத்து 'இ' மெய்யை இழந்து உயிராகத் தனித்து நிற்பதையும் உணர்க.

இவை, **'பிறப்பு'** என்பது மெய்யோடு உயிர் சேர்ந்துள்ள நிலை என்பதையும், 'இறப்பு' என்பது, மெய்யை விட்டு உயிர் நீங்கியிருக்கும் நிலை என்பதையும் உணர்த்துகின்றமையை அறிந்துகொள்க.

- தமிழில் மட்டுந்தான் இவ்வாறு மெய்ப்பொருள் உண்மையை உணர்த்துகிற சொற்களை மிகுதியும் பார்க்க வியலும். ஏனெனில் அஃது இயற்கைமொழி யாகையால் என்க. பிறமொழிகளெல்லாம் இத்தகைய உண்மைகளை மிகுதியாகக் கொள்ளாதனவும் இல்லாதனவுமாக உள்ளதை ஆய்ந்தறிக.

பின்னர் வரவிருக்கும் நிறைவுரையின்கண் இவை போலும் கூடுதலான சொற்களும், எழுத்தமைப்புகளும் இன்னும் கூடுதலாகவே விளக்கிக் காட்டப்பெறும்.

3) சொல் தொடர்களில் மெய்ப்பொருள் உண்மைகள் உள்ளமை:

- சில நேரங்களில், நம் வீட்டில் ஒருவரை இருக்கச் செய்துவிட்டு, நாம் வெளியே செல்கையில், வீட்டை நோக்கி 'ஏ! வீடே, உன்னைக் கவனமாகப் பார்த்துக்கொள்' என்று சொல்லாமல், வீட்டில் இருப்பவரை நோக்கி, 'நீங்கள் இந்த வீட்டைக் கவனமாகப் பார்த்துக் கொள்ளுங்கள்' என்று சொல்கிறோம்.

இதுபோலவே, உடல் நலம் குறைந்த ஒருவரைப் பார்த்து, 'நீங்கள் உங்கள் உடலை நன்கு கவனித்துக் கொள்ளுங்கள்' என்று சொல்கிறோம். இந்தக் கூற்றை யாரை நோக்கிச் சொல்கிறோம்? நலங்குன்றியவரின் உடலைப் பார்த்தா சொல்கிறோம்? உடல் தானே தன்னைப் பார்த்துக்கொள்ள முடியாததால், அதைப் பார்த்துக் கூறுவதில்லை. பின் யாரைப் பார்த்து இதைக் கூறுகிறோம் எனில், உடலுக்குள் இருக்கும் உயிரைப் பார்த்து என்க. நாம் இது பற்றியெல்லாம் ஒன்றும் அறியாமலேயே, இயல்பாக இந்த மெய்ப்பொருள் உண்மையை வெளிப்படுத்துகிறோம். இவ்வாறு நாம் பேசும் தொடர்களிலும் ஆங்காங்கு மெய்ப்பொருள் உண்மைகள் வெளிப்படுவதை உய்த்துணர்ந்துகொள்க.

இவ்விடத்துத் **தொல்காப்பியம்** கூறும்,

'எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே' - தொல். *640*

'பொருண்மை தெரிதலும் சொன்மை தெரிதலும்
சொல்லின் ஆகும் என்மனார் புலவர்' - தொல். *641.*

என்னும் நூற்பாக்களின் உண்மையும், சொற்களுக்குப் பொருள் காண முற்பட்டால், அஃது எல்லையின்றி விரிந்துகொண்டே போகும், (இறைமையின் உண்மைபோல) என்றுணர்த்த,

'பொருட்குப் பொருள்தெரியின் அதுவரம்பு இன்றே'

- தொல். *874*

என்றும், உணர்த்தவல்ல ஆசிரியன்வழி ஒரு சொல்லின் பொருளை அறிந்தால், அப்பொருளுக்கு எந்த வகையான மயக்கமும் நேராது, உண்மை உணர முடியும் என்பதை உணர்த்த,

'பொருட்குத் திரிபில்லை உணர்த்த வல்லின்'

- தொல். **875.**

என்றும், சொற்களின் பொருள்களுக்குக் காரணம் உண்டு, ஆனால் அது வெளிப்படையாகத் தெரியாது. ஆராய்ந்து பார்த்தே உணர முடியும் என்றும் புலப்படுத்த,

'மொழிப்பொருட் காரணம் விழிப்பத் தோன்றா'

- தொல். **877.**

(விழிப்ப-பார்த்த மட்டிலேயே - வெளிப்படையாக.) என்றும் கூறியிருப்பனவற்றை உணர்ந்து கொள்க.

4) இக்குறளின்வழி, எழுத்துகளும், எழுத்துகள் சேர்ந்த சொற்களும், சொற்கள் இணைந்த தொடர்களும், தொடர்கள் நிறைந்த மொழியும், இறையுண்மையை நன்கு அறிவதற்கு முதல் சான்றாய் உள்ளதை உலகினர்க்குப் புலப்படுத்தினார் என்க.

இக் கூற்றைத் திருமூலர் வழிமொழிதல் போல்,

'என்னைநன் றாக இறைவன் படைத்தனன்
தன்னைநன் றாகத் தமிழ்ச்செய்யு மாறே'

- திருமந். **81.**

அஃதாவது, 'தன்னுடைய இருப்புண்மையையும், இயக்கவுண் மையையும், மயக்கமின்றித் தமிழில் வெளிப்படுத்தத் தம்மை அத் தமிழ்மொழியிலுள்ள உண்மைகளை உணருமாறு செய்யும் நல்ல நோக்கத்துடன், நிறைவுற, நன்கு பிறப்பித்துள்ளான், இறைவன்' என்று கூறுவதும் காண்க. O

உ. கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். 2

பொருள் கோள் முறை:

வாலறிவன் நற்றாள் தொழாஅர் எனின்,
கற்றதனால் ஆய பயன் என்கொல்.

பொழிப்புரை: *(ஒருவர் ஒலியும் ஒளியுமாகிய எழுத்தையும், அதன்வழிக் கருத்தையும், அதன்வழி உணர்வையும், அறிவையும், அவற்றின்வழிப் பொருட் புறவெளிப்பாடாகிய உலகையும், படிப்படியாய், ஆசிரியன் வழியும், நூல்கள்வழியும் முயன்று) கற்றுக்கொண்ட அதனால் ஆகி வந்த பயன்தான் என்னவோ, (அவற்றுக் கெல்லாம் மூலமாகி) ஒளியுருவாய் நிற்கும் அறிவுணர்வாய இறைவனின் நல்ல (படைப்பு) முயற்சிகளைப் போற்றியுணர்ந்துபுரந்து கொள்ளாதவராக இருப்பின்.*

சில விளக்கக் குறிப்புகள்:

1) 'கற்றதனால்' - *என்றதால் அதன் தொடர்பான அறிவறி முயற்சிகளையும் இணைத்துக்கொள்க.*

அவை - *பார்த்தறிதல், கேட்டறிதல், உசாவியறிதல், படித்தறிதல், பட்டறிதல், உய்த்தறிதல் ஆகிய அறுவகைத் தாம்.*

உசாவியறிதல் - *பலர் வழியும் 'விசாரணை' செய்தறிதல்.*

உய்த்தறிதல் - *ஆராய்ந்தறிதல், 'ஊகம்' செய்தறிதல்.*

பட்டறிதல் - *'அநுபவத்து' அறிதல், தானே அதில் ஈடுபட்டறிதல்.*

கற்றல் - *'கல்' என்னும் வேரடியாகப் பிறந்த சொல். கல்தல் - கல்லுதல் - தோண்டுதல். நிலத்தைத் தோண்டி நீர் பெறுதல் போல், மனத்தைத் தோண்டி அறிவு பெறல். 'தொட்டனைத் தூறும் மணற்கேணி (396) என்றது காண்க.*

கற்றல் - *நூல்களைக் கற்றல். நூல்களாவன,*

'வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூல்'

- தொல். 1594.

'என்றும் உண்டாகி இறையால் வெளிப்பட்டு
நின்றது நூலென் றுணர்'

- அருங்கலம் 9

'மெய்ப்பொருள் காட்டி உயிர்கட்கு அரணாகி
துக்கம் கெடுப்பது நூல்'

- அருங்கலம் 10.

- எனக் குறிப்பிட்ட நூல் வகைகளை என்க.

2) ஆய பயன் - *கற்ற பயன். அஃது உண்மை உணர்வதும் அதன் வழியாய அறவாசிரியனின் முயற்சிகளைப்*

போற்றிக்கொள்வதுமே என்றுணர்த்தினார். கற்றபயன் - வாலறிவை - வாலறிவனை உணர்தல். அவ்வாறு உணராது நிற்பது பேதைமை என்க. என்னை? 'ஓதியுணர்ந்தும் பிறர்க்கு உரைத்தும் தானடங்காப் பேதையின் பேதையார் இல்' (834) என்றும், 'கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' (391) என்றும் கூறுவது காண்க.

'கற்றுணர்ந்து அடங்கல்' 'ஆன்றவிந்து அடங்கல்' என்றார் பிறரும். அடங்கல் - அதன்படி நடத்தல்.

3) **என் கொல்** - 'என்' என்பது வினா - ஒன்றுமில்லை என்னும் பொருள் தந்தது. கொல் - ஆசை.

4) **வாலறிவன்** - ஒளியுருவாய் நிற்கும் அறிவுணர்வாய இறைவன். இறைமையை வடிவமும் பாலும் புணர்த்தி இறைவன் என்றார்.

5) **நற்றாள்** - நல்ல தாள் - நல்ல படைப்பு முயற்சிகள். உலகின் இயற்கையும் உலக மாந்தர்தம் இயற்கையும் கண்டு அவற்றுக்குகந்தபடி ஒழுகுதல். என்னை? 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலாதார்' (140) ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான், மற்றையான் செத்தாருள் வைக்கப்படும் (214) என்று கூறுவார் ஆகலின்.

6) **தொழாஅர் எனின்** - போற்றி உணர்ந்து புரந்துகொள்ளார் எனின். தொழுதல் - போற்றி உணர்ந்து புரந்து கொள்ளுதல். என்னை? 'செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து இயற்கை அறிந்து செயல்' (637) என்பார் என்க.

7) - இனி, கற்றவர்களே அச்சமின்மையானும் கல்விச் செருக்காலும், பொருட்கூறு உணர்ந்தவழி உலகுண்மை (உலோகாயத)க் கருத்தால் பொருட்பகுக்கும் கருவியறிவு (அஃதாவது அறிவியலறிவு) கொண்டவராக இருப்பாராதலாலும், அதனால் காரணவறிவாகிய மெய்ப்பொருட்கூறு அவரால் மறுத்தற்படுமென்று கருதி, அவர்க்குக் கூறினார் என்க.

- கல்லாதவர் அச்சத்தாலும், பெரியோர்வழி நம்பிக்கையானும் ஒரு தொழல் உணர்வு கொண்டேனும் எதிர் நடவடிக்கையின்றி அமைந்திருந்து, மனநலமும் அதன்வழி வாழ்வு நிறைவும் இயல்பாகப் பெறுவார் ஆதலால் அவர்க்குக் கூறுதல் வேண்டாதாயிற்று, என்க.

- எனவே, கல்விப்பயன் இறையுணர்வு பெறுதல் என்று உறுதிப்படுத்தியவழி, அது தெரியவும் தெளியவும் கற்க

வேண்டும் என்றும் வற்புறுத்துவார். அவ்வாறு கற்றும் அவ்வுணர்வு எய்திவரா நிலையில் அக்கற்பு முழுமை யெய்தாமை குறித்ததுமாம் என்க.

8) எழுத்தும் மொழியும் கற்பதன் பயனைப் புலப்படுத்துவதற்கு இதனை அதன்பின் கூறினார், என்க.

O

ங. மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார். 3

பொருள் கோள் முறை: **இயல்பு.**

பொழிப்புரை: *(ஐம்பொறிகளிடத்து, முன்னரே தோன்றி நின்ற புலனுணர்வுகள் முற்றிய நிலையில், மலரிடத்துப் பருவத்தால் ஏறிநிற்கும் மணம்போல) மன மலரின்கண் மெய்யுணர்வாய்த் தோன்றி நிற்கும் அறமுதல்வனின் பெருமை பொருந்திய நெறிகளைப் பின்பற்றி, உலக நடை மேற்கொண்டார், இந்நிலவுலகத்துப் புகழால் நீண்ட காலத்து வாழ்வார்.*

சில விளக்கக் குறிப்புகள்:

1) **மலர்** *என்றது மனத்தை; மிசை - இடத்து.*

2) **ஏகினான்** *என்றது முன்பே ஏகி இருந்தமை பற்றி.*

'போக்கு வரவு அற்ற பொருள்' *என்று இறைவனைத்* **தாயுமானார்** *குறிப்பிடுதல் போல், போதல் வருதல் ஏகுதல் திரும்புதல் என்றில்லாமல் இருத்தல் பொருள் கூறப் பெற்றது. ஏகினான் என்றது 'மன மலரின்கண் மெய்யுணர்வாய்த் தோன்றி நிற்கும் அறமுதல்வனை - இறைவனை என்க. என்னை?*

'பூவினிற் கந்தம் பொருந்திய வாறுபோல்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது'

- திருமந்திரம். 1459.

- என்பார் திருமூலரும்.

3) **நீடு புகழ்** - நெடும் புகழ் நிலைத்தல். பிறிதோரிடத்து 'நீள் புகழ்' (234) என்பார்.

4) மூல அறமுதலாகிய இறையுணர்வைப் போற்றி, வாழ்க்கையைப் புகழ்ப் பயனாக்கிக்கொள்ளல் வேண்டும் என்னும் நோக்கம் கூறினார், என்க. 'இசைபட வாழ்தல் உயிர்க்கு ஊதியம்' (231) என்றும் உரைப்பார்.

5) **'மலர் மிசை ஏகுதல்'** மெய்யுணர்வு தோன்றுதல் 'ஐயுணர்வெய்தியக் கண்ணும்' (354) எனப் பின்னரும் இக்கருத்தைப் பயன் முறையில் விளக்குவார்.

6) **மாணடி சேர்தல்:** அறமுதல் உணர்வின் - இறையறத்தின் நெறிகளைப் பின்பற்றுதல்.

அடி சேர்தல் - பின்பற்றுதல், நினைத்தல், போற்றல்.

நெஞ்சத் தாமரையில் வந்து பொருந்தினானை எங்ஙன் நாம் நினைப்பது - போற்றுவது - பின்பற்றுவது?

மனத்தை மனவுணர்வால்தான் சேர முடியும். எனவே, மனவழிச் சேர்தலை - இடைவிடாது நினைத்தலை - மனத்தை அவன் வயப்படுதலை - அவன் நெறிப்படுதலை ஈண்டுச் சுட்டினார் என்க.

இஃது ஒருவகை மனவழிபாடும் ஆகும். என்னை? வழிபடுதல் - பின்பற்றுதல்.

இதில் மனவழிபாட்டைக் குறித்தவர், 'இருள்சேர் இருவினையும்' (5) என்பதில் 'மொழி வழிபாட்டையும்', 'கோளில் பொறியில்' (9) என்பதில் 'மெய் வழிபாட்டையும்' குறித்தார் என்றும் கூறலாகும்.

மனத்தின்கண் மெய்யுணர்வு தோன்றி, இறைமையுணர்வு உள்ளத் தில் நிரம்புதலால், அதைக் கோயிலாகவும் உருவகிப்பர். அதன்வழி உடம்பையும் கோயிலாகக் கொள்ளும் கற்பனையும் வளர்ந்தது.

"மறையுமாய், மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே"

- திருவா. கோயில் திருப். 5

"அறவையேன் மனமே கோயிலாகக் கொண்டான்
அளவிலா ஆனந்தம் அருளி"

- திருவா. பிடித்த பத்து. 6

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்"

- திருமந். 1823

"நெஞ்சமே கோயில் நினைவே சுகந்தம்"

- தாயுமானவர் பராபரக்கண்ணி. 151

"காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக"

- திருநா-தேவாரம்-நாலாந்திருமுறை. 739

"உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்று
உடம்பினை யாளிருந் தோம்புகின் றேனே"

- திருமந். 725.

"இறைவனே, நீஎன் னுடலிடங் கொண்டாய்
இனி உன்னை என்னிரக் கேனே"

- திருவாசகம். கோயில் திருப். 5

7) அறம் அறிவு ஆகியவற்றின் முயற்சிகளின் பயன் நிலமிசை நீடு வாழ்தல் எனற்கு இதனைப் பின் வைத்தார் என்க

O

சு வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல. 4

பொருள் கோள் முறை:

வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

பொழிப்புரை: *(ஆசையால்) ஒன்றை விரும்புதலும், (அஃதின்மையால்) ஒன்றை விரும்பாமையும் அற்ற நடுநிலைவுணர்வுடைய அறமுதல்வனின், நெறிகளைப் பின்பற்றி இயங்கியவர்க்கு, (இவ்வுலகின்கண் எவ்விடத்தும் எந்நிலையிலும்) மனத்துயரங்கள் நேர்வன இல்லை.*

சில விளக்கக் குறிப்புகள்:

1. இக்குறளை, 'வேண்டுதல்வேண் டாமை' என்று வகையுளி செய்து எழுத்துவது, ஓசைக் குறைவும் பொருள் மயக்கமும் தருவதாக உள்ளது. இது பற்றித் 'திருக்குறள் மணிவிளக்க' உரையாசிரியர் அறிஞர். கா.அப்பாத்துரையார் கீழ்வருமாறு கருத்துரைப்பார்.

"இக்குறட்பாவில் முதல் அடியில் வேண்டுதல் என்பதை முதற்சீராகவும், வேண்டாமை என்பதை இரண்டாம் சீராகவும் வாசிப்பதே இயல்பான ஓசையுடையதாகத் தோற்றுகிறது. ஆனால் இஃது இலக்கண முறையில் தளைத்தவறு உடையதாய் அமைகிறது.' என்றும் பிறவாறும் கூறியுள்ளார்.

இதனைக் கீழ்வருமாறு தளைபிறழாமல் பிரித்து எழுதினால் வகையுளி செய்ய வேண்டுவதில்லை..

வேண்டுதல் வேண்டாமை இல்லான் அடிசேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

இங்குக் குற்றியலிகரம் எண்ணப்படாமை மரபு.

- இது தொடர்பான குறளாட்சிகள் வருமாறு.

(ஒ-நோ):

1. அருளல்ல தியாதெனில் (254)
2. வாய்மை எனப்படுவ தியாதெனின் (291)
3. நல்லா றெனப்படுவ தியாதெனின் (324)
4. பழமை எனப்படுவ தியாதெனின் (801)
5. பேதைமை என்பதொன் றியாதெனின் (831)
6. வெண்மை எனப்படுவ தியாதெனின் (844)
7. இன்மையின் இன்னாத தியாதெனின் (1041)

1) **வேண்டுதல்** - பற்றாலும் ஆசையாலும் பாசத்தாலும் ஒன்றை விரும்புதல்.

2) **வேண்டாமை** - வெறுப்பாலும், பொருந்தாமையாலும், பகையாலும் ஒன்றை விரும்பாமை. வேண்டுதல் இருந்து தான் வேண்டாமை வருதலால் அது முன் கூறப்பெற்றது.

3) **இலான்** - இவையிரண்டு வேறுபட்ட உணர்வுகளும் இல்லாதவனாகிய இறைவன் அல்லது அறவாசிரியன்.

வேண்டுதலும், வேண்டாமையும் மன வேறுபாடுகள் - (விகாரங்கள்). வேறுபாடுகள் இல்வழி மனம் தொழிற்படுவதும் இல்லையாயிற்று; மனத்தொழில் இல்வழி மனமும் இல்லையாயிற்று; மனம் இல்வழி அறிவும் இல்லை; மனமும் அறிவும் இல்வழிப் பூத இயக்கமும் இல்லை; அஃது இல்வழி உருவும் இல்லை; உருவம் இல்வழி இடமும் இல்லை; இடம் இல்வழிக் காலமும் இல்லையென்றாயிற்று.

எனவே, வேண்டுதல் வேண்டாமையிலான் ஆகிய இறைவன்

அல்லது அறமுதல்வன், காலமும், இடமும், உருவும், பூதப் பொருள்களும், அறிவும், மனமும் இல்லாதவனாக - அவற்றைக் கடந்தவனாக இருத்தல் வேண்டும். அவற்றைக் கடந்தவனாக நிற்றல் அவையாக நிற்றல் என்க.

இவை அந்நிலையிலுள்ள அறவாசிரியனுக்கும் பொருந்தும் என்க.

4) **அடிசேர்தல்** - நெறிகளைப் பின்பற்றி இயங்குதல்.

5) **யாண்டும்** - எங்கும் எப்பொழுதும் எந்நிலையிலும். இடத்தையும் பொழுதையும் சூழலையும் குறிக்கும்.

6) **இடும்பை** - மனத்துயரம்

7) **'யாதனின் யாதனின்'** *(741)* எனப் பின்னும் இதனை உலகியல் முறையில் விளக்குவார்.

8) அறமுயற்சிகள் செய்யுழி, புறத்துன்பங்கள் மனத்துயரங்களைத் தோற்றுவியா என்று உறுதி கூறினார்.

9) முன்னைய குறள் நோக்கத்தின் விரிவு கூறினார். O

ரு. இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு. 5

பொருள் கோள் முறை:

இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு,
இருள் சேர், இருவினையும் சேரா.

பொழிப்புரை: அறமுதலாகிய இறைவனின் பொருளுடைய புகழுக்குரிய அறச்செயல்களைச் செய்பவர் இடத்து, அறியாமை சேர்ந்த (அறத்திற்கு எதிரான) மறவினை, (நன்மைக்கு எதிரான) தீவினை ஆகிய இரு வினைகளும் (செயலுக்கு உரியனவாக) வந்து சேர்வதில்லை.

சில விளக்கக் குறிப்புகள்:

1) **இருள் சேர் இருவினை** என்பதால், இரண்டு வினைகளும் அறியாமையால் நிகழும் வினைகளாகவே இருத்தல் வேண்டும்.

அவை **மறவினை**யும் **தீவினை**யுமே ஆகும். மறவினை-அறத்திற்கு எதிரானது; தீவினை - நன்மைக்கு எதிரானது.

மறவினை என்பது, ஒருவனைக் கத்தியால் குத்திக் கொலை செய்வது போன்றது.

- தீவினை என்பது, ஒருவனை நஞ்சு வைத்துக் கொல்வது போன்றது.

- முன்னர் உரை கண்டார், இருள்சேர் இருவினைகளுள் நல்வினையையும் அடக்கிக் கூறியது பொருந்தாது.

நல்வினையும் இருள் சேர்ந்ததாகக் கருதின், நன்று, தீது இன்றாகி, உயிர்களுக்கு இயக்கமே தேவையில்லை என்றாகி விடும்.

பயன் கொளுவப் பிறவி பயப்பதால் இருவினையும் இருள்வினை அஃதாவது அறியாமை சேர்ந்த வினை என்றால், அறிவுக்கும் சிறப்பின்மை சேர்ந்துவிடும். அறிவு தேவையின்றால் நூலும் தேவையின்றாகிவிடும். பிறவி உண்மை இன்மைக் கருத்தால் உறுதியிழந்து, இக் கருத்துக்குத் துணை நில்லாதாகிவிடும் என்க.

2) **பொருள் சேர் புகழ்** - பொருளுடைய புகழ். இறைமைக்கு உள்ள புகழே பொருள் செறிந்த புகழாகும்; மற்றைய மாந்தர்க்கு வரும் புகழ், மொழி, இனம், இடம், காலம் கடந்து நிற்றல் இயலாதாகையால் பெருமை குலைதலோ அழிதலோ கொண்டதாகும். எனவே பொருளில்லாப் புகழாகும்.

3) **புகழ் புரிதல்** - புகழுக்குரிய செயலைச் செய்தல். அது பெரும்பாலும் அறவழிப் பட்டதாகவே இருக்கும். எனவே 'இறைவன் பொருள்சேர் புகழ் புரிபவர்' அறச் செயல்களைச் செய்யும் அறவோராகவே இருத்தல் கூடும்.

மற்று, உலகியலால் வரும் உண்மைப் புகழைப் பிறிதோரிடத்து 'உயர்ந்த புகழ்' (233) என்றார்.

அறச் செயல்கள் செய்யுழிப் பிற இருவினைகள் நிகழ்வதில்லை என்றார்.

4) - **'புரிதல்'** என்பார்க்கு **'விரும்பினார்'** என்று பொருள் கூறி, 'எப்பொழுதும் செய்தல் என்று விளக்கமும் செய்வார் பரிமேலழகர். பாவாணரும் அவ்வாறே கொள்வர். ஆனால் 'செய்தார்' என்பதே பொருத்தமுடைய பொருள் என்க.

'இறைவன் பொருள்சேர் புகழ் புரிந்தார் மாட்டு' என்பதற்கு, 'கடவுள் இயற்கையைச் சேர்ந்துள்ள புகழை விரும்பினாரிடம்' என்று கூறித் திரு.வி.க. முட்டுப்படுவர்.

'இறைவன்' எப்பொழுதும் தங்குகிறவன்' என்பர் அடியார்க்கு நல்லார், தம் சிலப்பதிகார உரையில் (சிலப். 10 : 184 உரை.)

கூ. பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்றார் நீடுவாழ் வார். 6

பொருள் கோள் முறை : **இயல்பு**

பொழிப்புரை : *(அறிவுணர்வையும் மனவுணர்வையும் அசைவுறச் செய்து, உலகியற் பொருள்களின்மேல், உடலை நுகர்வுக்கெனக் கொண்டு செலுத்தும்) மெய், வாய், மூக்கு, கண், செவி எனும் ஐம்பொறிகளின் தவிப்புணர்வை, (கொழுந்துவிட்டு எரியச் செய்யாமல், தணியவைத்து எரிப்பது போல்) அவிப்புச் செய்த அறமுதல் ஆசிரியனின் பொய்யற்ற ஒழுகலாற்றின் வழியில் தம்மை நிலைநிறுத்திக்கொண்டவர், இவ்வுலகின்கண் நெடும்புகழ் எய்தி வாழ்வார்.*

சில விளக்கக் குறிப்புகள்:

1) *மெய் முதலாச் செவி ஈறா எண்ணியது படிநிலை அறிவால் என்க.*

2) **அவிப்பது** - *அறவே அற்றுப்போகச் செய்யாமல் நற்பயன் கருதித் தணிவித்து எரியச் செய்வது. சேற்றில் புதைந்துவிடாமல் நீரில் மட்டும் குளிப்பது போல் பொறிகளைப் பயன்படுத்தல் வேண்டும்.*

3) **நீடு வாழ்தல்** - *உலகில் பெரும்புகழ் பெற்று வாழ்தல்.*

***'தோன்றிற் புகழொடு தோன்றுக'** (236) என்பார்.*

O

எ) தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தார்க்(கு) அல்லால் மனக்கவலை மாற்றல் அரிது. 7

பொருள் கோள் முறை : **இயல்பு**

பொழிப்புரை: தனக்கு இணையாக வேறோர் உவமை இல்லாத அறமுதலோனாகிய இறைவனது அறமுயற்சிகளில் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட அறநெறியாளர்களுக்குத் தவிர, மற்றையவர்களுக்குத் தங்கள் மனத் துயரங்களை நீக்குவது கடினம்.

சில விளக்கக் குறிப்புகள்:

1. **தாள் சேர்தல்** - முயற்சிகளில் ஈடுபடுதல். மனக்கவலை என்பது மனத்தில் எண்ணியது செயலில் நிறைவேறாமையால் ஏற்படும் ஏக்க உணர்வு. அறவுணர்வொன்றினாலேயே மனமும் செயலும் ஒன்றி மனமகிழ்வு ஏற்படும்.

   இறைமையின் அறவாழ்க்கையைத் தவிர்த்தால் வாழ்க்கை துன்பமுடையதாகும் என்றார்.

2) **தனக்கு உவமை இல்லாதான்:** எந்த ஒன்றையும் அவனுக்கு உவமையாகக் காட்ட இயலாத தன்மையுடையவன். 'அகரமுதல' என்னும் குறளில் கூறப்பெற்றது, அவனது இருப்புக்கு ஆன உவமையேயன்றித் தன்மைக்கு அன்று.

   - இங்கு,

   அப்படியும் அந்நிறமும் அவ்வண் ணமும்
   அவனருளே கண்ணாகக் காணின் அல்லால்
   இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
   இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ ணாதே!

   என்னும் திருநாவுக்கரசரின் கூற்று நினைத்தற்குரியது.

   கடவுளொடு குருவையும் கடவுளாகவே கொண்டு வணங்குவாரையும், ஆதிபகவன் முதல் குருவே என்பாரையும் இக்குறள் கருத்து மறுக்கின்றது.

   'தனக்குவமை இல்லாதான்' என்று கூறியதால், இறைமையொடு ஒப்பவைத்துப் பேசப்பெறுபவர் எவருமிலர் என்பது ஆசிரியர் கருத்தாதல் புலப்படுகின்றது. புலப்படவே, அவனது அறமுயற்சிகளையே பற்றி நினைப்பார்க்கல்லால் மனக்கவலையை மாற்றுவது அரிது என்றாகிறது.

அறிஞர் அப்பாத்துரையார், தம் மணிவிளக்கவுரையில், இதற்கு மறுப்பளிப்பார் போல் கீழ்வருமாறு கூறுவர்.

"இதுபோல ஆதிபகவனும் பகவரும் கடவுளுருவாயினராகவே கொள்ளப்படுதல் மரபானாலும், அவர்கள் கடவுளின் கண்காணா ஒளியின் கண்கண்ட நிழல்கூறுகள் அன்றி வேறல்லர். எனவே,

இங்கெல்லாம் கடவுள்தாமே தமக்கு உவமையானதன்றி, பிறிதுவமை கொண்டவர் ஆக மாட்டார் என்பது தெளிவு" என்பார். இது - சரியன்று.

குருவணக்கம் கடவுள் வணக்கமாயின் திருவள்ளுவரும் ஒரு குருவானவரே; 'ஆதிபகவன் மரபினரே' என்று கொண்டு அவரையும் வணங்கவும் மாறுகொள்ளார், அவர். ஆகவே அத்தகையார்க்குத் திருவள்ளுவரும் ஒரு கடவுளரே! அவரையும் இன்றும் வணங்கவே செய்வர்.

ஆனால், திருவள்ளுவர் கருத்து அஃதன்று. இங்குதான் அவர் கூறிய இறைமை நிலைக்கு விளக்கம் கிடைக்கிறது. அவர் கருத்துப்படி குரு வணக்கக் கொள்கையோ, தெய்வ வணக்கக் கொள்கையோ, கடவுள் வணக்கக் கொள்கையோ இறைக் கொள்கை அன்று. அவர் தாம் கூறும் இறைக்கொள்கைக்குத் தாமே தம்மைப் பொருத்தமாக்கிக் கொள்ளும்படி கூறியிருப்பார் என்று கருதுவது நம் அறியாமையையே காட்டும். மகாவீரரும். புத்தரும், இராமனும் இவ்வகையில் வழிபட்டுவரப்படுவதையும், பிற கடவுள் மறுப்பாளரும்கூட, (புத்தர் கடவுள் மறுப்பாளரே) மக்கள் அவர்கள் மேல் கொண்ட பற்றுமிகுதியாலும், நம்பிக்கையாலும் மதச் சார்பினராக்கப்பெற்று, கடவுள்களாக - தெய்வங்களாக - வழிபட்டு வரப்படுவதையும் திருவள்ளுவர் அறிந்திருக்க இயலும்.

ஆனால், அவர் பொதுவின் கூறிய இறைமைக் கொள்கை என்பது, இத் தெய்வங்கள் கடவுள்கள் முதலியவற்றுக்கெல்லாம் மிக்கோங்கிய அனைத்துக்கும் மூலமான உயர்ந்ததும் ஒப்பில்லாததுமாகிய கொள்கை என்பதை இதனால் புலப்படுத்துகிறார் என்க.

உயிர கூர்தல் அறவியலின்படி, கடவுளின், அதனினும் அடுத்த கீழ்நிலையான தெய்வத்தின், இனி அதனினும் மிகக் கீழான நிலையான மீமிசை மாந்தனின் அல்லது குருவின், இனி, அவற்றினும் மிக விழிந்த கீழிறங்கிய நிலையாக உள்ளவனே மாந்தன் என்க. இக் கீழ்ப்படி நிலையை மேனிலைப் படியாகக் கொண்டு மேலேறிச் சென்றால், அனைத்துப் படிநிலைகளுக்கும் மேலோங்கி நிற்பதும் இவ்வனைத்து உயிரியங்கியல் படிநிலைகளை மட்டுமன்றி, பொருளியங்கியல் படிநிலைகளையும் உள்ளடக்கிக் கொண்டு அதே பொழுது முன்னுள்ள அனைத்து நிலைகளினின்றும் வேறாகித் தன்னைத் தனிப்படுத்திக் கொண்டும், ஒன்றுபடுத்திக் கொண்டும் உள்ள ஒரு நிலையே இங்கு ஆசிரியரால் கூறப்பெறும் இறைநிலை என்று உய்த்துணர்க. O

அ. அறவாழி அந்தணன் தாள்சேர்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது **8**

பொருள் கோள் முறை : **இயல்பு**

பொழிப்புரை : *அறக்கடலாகிய இறைவனின் வழிநின்ற அருளாளனின் அறமுயற்சிகளில் தம்மை இணைத்துக்கொண்டவர்களுக்குத் தவிர, மற்றையவர்கள் பிறப்பாகிய வாழ்க்கைக் கடலை இயல்பாக நீந்திக் கடத்தல் கடினம்.*

சில விளக்கக் குறிப்புகள்:

1. *(பிறவு ஆழி - பிறவாழி; பிறவு - பிறப்பு - வாழ்க்கை. உகர வீற்றுப் பெயர்ச் சொல். துறத்தல் துறவு, இறத்தல் இறவு எனற்போல், பிறத்தல் பிறவு என்றார். 'பெருந்தகை பிறவினோ டிறவு மானான்' (தேவாரம்) என்றது காண்க.*

2) *நீந்தத் தெரியாதவர் நீரில் தத்தளித்துத் துன்புற்று, இறுதியில் மூழ்கி மறைதலால் நீந்திக் கடத்தல் அரிது என்றார்.*

3) *வாழ்க்கையை ஆழி (கடல்) என்றது அகற்சியும் ஆழமும் ஏதங்களும் நிறைந்திருத்தலான். ஆழி என்பதைச் சக்கரம் என்றும் பலர் பொருள் கொள்வர். 'நீந்தல்' குறித்தலால் அது பொருந்தாது என்க.*

4. *அந்தணர் என்போர் அறவோர் என்பார்.*

5. *'அறம்' என்பதற்குத் தமிழில் தவிர வேறு எம்மொழியிலும் தெளிவான பொருள் இல்லை என்று கருத வேண்டியுள்ளது.*

ஆங்கிலத்தில் அதற்கு morality, ethics, righteousness *- என்று மூன்று சொற்கள் பயன்படுத்தப்பெறுகின்றன.*

ஆனால், morality *என்பதற்கு ஒழுங்குணர்வு, படிப்பினை, நெறி முறை என்பன பொருள்கள்.* ethics *என்பது நன்னெறி நடைமுறையொழுங்கு என்றே பொருள் தரும். அதே போல்,* Righteousness *என்பதும் நேர்மையுணர்வு சரியான நடைமுறை என்பனவற்றையே குறிக்கும்.*

இவையே போல் வடமொழியாகிய சமசுக்கிருதத்திலும் 'தர்ம'

என்றே அறம் குறிக்கப் பெறும். 'தர்ம' என்பதற்கு ஞாயம், நெறிமுறை, கடைப்பிடி, மதவியல் கடமை (religious duty) வகுக்கப்பெற்ற நடவடிக்கை, வருணவொழுக்கம் என்னும் பொருள்கள்தாம் உண்டு..

இவையெல்லாம் தமிழியலில் கூறப்பெறும் 'அறம்' என்னும் சொற் பொருளை ஒருவாறாகவே விளக்குவன. இவையெல்லாம் ஒருங்கிணைந்த நடைமுறையே 'அறம்' என்பதற்கு ஒருவாறு பொருந்தும்.

அறம் என்பதற்கு இந்தியாவுக்கு வெளியே சரியான சொல் கிடையாதென்பர் அறிஞர் அப்பாத்துரையார், தம் மணி விளக்க உரையில்.

ஆனால் 'இந்தியாவுக்கு வெளியே' என்பதைத் **'தமிழியலுக்கு வெளியே'** என்பதே சரியாக முடியும் என்று கருத இடமுண்டு.

இனி, 'பிறவாழி' என்பதற்குப் பொருள் கூறுகையில், அறிஞர் அப்பாத்துரையார், 'அறவாழி என்று கூறப்பட்டதால், பிற ஆழி என்பது 'பொருள்' வாழ்வாகிய ஆழியும், இன்ப வாழ்வாகிய ஆழியும் குறித்தது என்பர். அது பொருந்தாது.

என்னை? 'பொருளும் இன்பமும் கூட அறத்தின் வழிப் படுஉம்' என்பதால் அவையிரண்டும் அறத்திற்குள்ளேயே அடங்கும் என்க. எனவே பிறவாழி பிறவிக் கடலையே குறித்ததாகும்.

இதன் பிற விளக்கங்களை 'அறன் வலியுறுத்தல்' அதிகார முன்னுரையில் காண்க.

6. இறைமையின் அறவாழ்க்கையை ஏற்றால் வாழ்க்கை மகிழ்வாகவும் எளிதாகவும் இருக்குமென்றும் அல்லாதார்க்கு அது கடிதாக இருக்குமென்றும் கூறினார். O

கூ. கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை. 9

பொருள் கோள் முறை:

எண் குணத்தான் தாளை வணங்காத்தலை
கோளில் பொறியில் குணமிலவே.

பொழிப்புரை : *(எல்லா நிலை மக்களும் ஏற்றத்தாழ்வின்றி அணுகுவதற்கு உகந்த) எளிமையான குணத்தினை உடைய அறவாணனின் அறமுயற்சிகளை ஏற்றுப் போற்றி அவற்றுக்கு உடன்பட்டு இயங்காதவனிடத்துக் (கொள்கையெனும்) குறிக்கோள் இராது; (முன்னறிந்து செல்லும்) அறிவு இராது; (மக்கள் தன்மைக்குகந்த) நல்ல குணங்களும் இலவாகும்.*

சில விளக்கக் குறிப்புகள்:

1. *அற முயற்சிகளைப் போற்றிக் கொள்ளாதவர்க்கு வாழ்க்கையின் குறிக்கோள், அதனை நிறைவேற்றுவதற்கான அறிவு வளர்ச்சி, மாந்தப் பிறவியின் சிறப்புகள் ஆகியவை இலவாகும் என்றார். இதன் வழி இறைமையுணர்வின் பயன் கூறினார்.*

2. **கோளில்** - *கோள் இல் - கொள்கையெனும் குறிக்கோள் இல்லை. இராது.*

3. **பொறியில்** - *பொறி - அறிவு, இல் - இல்லை - இராது.*

4. **குணமில** - *நல்ல குணங்களும் இல்லை - இரா.*

5. **எண் குணத்தான்** - *'எண் குணத்தான்' என்பதற்குப் பரிமேலழகர் முதல் பாவாணர் உள்ளிட்ட உரையாசிரியர் அனைவரும் எட்டுக் குணங்களையுடைய இறைவன் என்றே பொருள் தருவர். இவை அனைத்தும் சிவனிய, அருக (சமண) மதச் சார்புடையவையே என்று வழக்கிட்டுக் கொள்ளப்படுகின்றன. ஒருவருக்கொருவர் இவை தம் மதம் சார்ந்தவையே என்பர்.*

   காலிங்கரும் இற்றை உரையாசிரியர் ஓரிருவரும், 'எண்ணப்பட்ட நல்ல குணங்கள்' என்பர். இப்பொருள் பொருந்தாது.

   என்னை? 'எண்' என்பது பெயர்ச் சொல்லாக வருமிடத்து இலக்கத்தையும் எட்டு என்னும் எண்ணையும் குறிக்குமே தவிர 'எண்ணப் பெறும் குணங்கள்' என்று வினைத் தொகைப் பொருளில் வராது. அவ்வாறு வரவேண்டுமாயின் 'எண்ணு குணங்கள்' என்றே வரும். 'எண்' என்னும் சொல் தொடர்ந்த அனைத்துப் பண்புத் தொகை தொடர்களும் 'எளிமை' 'எட்டு' என்னும் பொருள்களையே தரும். இங்கும் இம் முன்னொட்டுச் சொல் 'எளிமை'ப் பொருளையே தந்தது என்க.

இறைவனுக்கு எட்டுக் குணங்கள் மட்டுமே இருப்பதாகச் சொல்வது குறைவுடையது. மாந்தர்க்கு இல்லாத எத்தனையோ குணங்கள் இருப்பனவாகச் சொல்லலாம். இந்த எட்டும்கூட அவ்வகையினவே. மேலும் சிவனியரும் சமணரும் கூறும் எட்டுக் குணங்களில் வேறுபாடும் மாறுபாடும் உண்டு என்க. அவை விரிக்கில் பெருகும்.

- இனி எண் குணங்களை அறிஞர் அப்பாத்துரையார், முன்னுள்ள எட்டுக் குறள்களிலும் கூறப்பெற்ற,

1. ஆதிபகவன் - (தமிழ்) வேத உருவினன்.
2. வாலறிவன் - அறிவுருவினன்.
3. மலர்மிசை யேகினான் - அன்புருவினன்.
4. வேண்டுதல் வேண்டாமை யிலான் - அறவுருவினன்.
5. இருள் சேர் இருவினையும் சேரா இறைவன் - செய்ம்மை உருவினன்.
6. பொறிவாயில் ஐந்தவித்தான் - ஆற்றல் உருவினன்.
7. தனக்குவமை இல்லாதான் - இனத்தின் தனி முதல் இலக்கெல்லையான ஒருமை உருவினன்.
8. அறவாழி அந்தணன் - அருள் உருவினன்.

- என்று வகைப்படுத்திக் கூறுவார்.

அதன் பின் அவர் மேலும்

"எண் பதத்தான் (548), (991) 'எண் பொருள் (424), (760) ஆகிய இடங்களில் எண் என்பதை எளிமை என்ற பொருளில் திருவள்ளுவரே வழங்கியுள்ளார். இவ்வழி 'எண்குணத்தான்' என்பது 'எளிய இயல்பினை உடையவன்' 'அன்பர்களுக்கு எளிவந்தவன் (பத்த வச்சலன்)' என்று பொருள்படுவதாகும். குறட்பாவில் திருவள்ளுவர் கருதிய முதற்பொருள் என்ற முறையில் இது சிறப்புடைய பொருளன்று; ஆனால் தொனிப் பொருள் என்ற முறையில் இஃது எண்குணத்தான் என்ற அடைமொழியால் குறிப்பாகத் தெரிவிக்கப்படும் அழகு நயம்மிக்க கருத்தேயாகும். அத்துடன் இது பொருள் மேலே மூன்றாவது குறட்பாவில் விதந்துரைக்கப்பட்ட 'அன்புருவினன்' அஃதாவது 'மலர்மிசை ஏகினான்' என்ற கருத்தை வலியுறுத்துவதாகவும் அமைந்துள்ளது" என்று விளக்குவார்.

- இவர் கருத்துகளில் இறுதியில் கூறப்பெற்ற 'எளிமைப் பொருள்' கருத்தே வலிவுடையது. அதிகாரத்தின் முன்னைய எட்டுக்

குறள்களில் கூறப்பெறும் எண்குணக் கருத்துகள் தனித்தனியே விளக்கப்பெற்ற பின்னை, அவற்றை மேலும் ஒரு குறளில் தொகுப்பாக விளக்கத் தேவையில்லை. அது கூறியது கூறலாகச் சிறப்பிழக்கும். எனவே, முன்னர்க் கூறப்பெற்ற எட்டுக் குணங்களுக்கு மேலும் ஒரு சிறந்த உண்மையான 'எல்லார்க்கும் எளியவன்' என்னும் சிறந்த கருத்தையே இக் குறட்பாவில் தனிப்படுத்திச் சொல்லியிருக்க வேண்டும்.

இனி, சிவனியம் கூறும் எண் குணங்களாவன:

1.	**தன் வயத்தனாதல்** *(சுவதந்த்ரத்வம்)*	Self existence (Absolute Self-control)
2.	**தூய உடம்பினனாதல்** *(விசுத்த தேகம்)*	Unmaculateness Absolute purity)
3.	**இயற்கை உணர்வினன் ஆதல்** *(அநாதி போதம்)*	Intutive Wisdom (Absolute intution)
4.	**இயல்பாகவே பாசங்களி லிருந்து நீங்குதல்** *(நிராமயம்)*	Freedom from the snouses and illusions to which derived intelligence is exposed (Absolute Freedom)
5.	**பேரருள் உடைமை** *(அப்த சக்தி)*	Unbounded kindness (Boundless grace)
6.	**வரம்பில் இன்பமுடைமை** *(நித்ய திருப்தித்வம்)*	Infinite happiness (Boundless grace)
7.	**முற்று முணர்தல்** *(சர்வக்ஞத்வம்)*	Omni science
8.	**முடிவிலாற்றலுடைமை** *(அனந்த சக்தி)*	Omni potence (Omni potence)

இவற்றுள் தூய உடம்பினனாதல் என்பது மக்களுக்குரியதாவதால், தெய்வ இறக்கம் (அவதாரம்) தொடர்புடையதாகத் தெரிகிறது. சிவனியம் தெய்வ இறக்க) (அவதார)க் கொள்கை உடையது என்பதற்கு இது சான்றாகிறது.

மாந்தனின் பிறப்பினின்றும் இறைவனின் பிறப்பு தூய்மையுடையது என்பதனைப் பிரித்துக் காட்டுதல் வேண்டித் 'தூய உடம்பினன்' என அடை கொடுத்து மொழியப்பெற்றது

போலும்.

அடுத்து, இவற்றை மிக ஆழ்ந்து நோக்குகையில், இவை அனைத்தும் குணங்கள் - பண்புகள் - (Quality) என்று சொல்வதற்கு உரியனவாகத் தெரியவில்லை. தன்மைகள் (Naturity) - இயல்பாம் நிலைகள் - என்று சொல்லப்பெறுவதற்கே உரியவை.

ஆங்கிலத்தில் குணத்தைக் குறிக்கும் மிகச் சரியான சொல் இருப்பதாகத் தெரியவில்லை.

Quality, Nature, attribute, character, disposition என்றும் சொற்கள், குணத்தை, பண்பை, இயல்பை, தன்மையை, நடைமுறையை எல்லாம் குறிப்பன வேனும் 'குணம்' என்னும் தமிழ்ச் சொல்லின் கருப்பொருளை இவற்றுள் ஒரு சொல்லும் குறியாது.

எடுத்துக்காட்டாக Quality என்னும் சொல் குணம், பண்பு, தன்னியல்பு, தரம், நயம் முதலிய அனைத்தையும் குறிக்கும் ஒரு சொல்லாக உள்ளது.

தமிழில் குணம், பண்பு, நடத்தை, இயல்பு, தன்மை - முதலிய சொற்கள் ஒன்று போல் பயன்படுத்தப் பெற்றாலும் பல நுட்ப வேறுபாடுகள் கொண்டவை.

குணம் - தூய தமிழ்ச் சொல்; வட சொல் அன்று. வடமொழியில் வழங்குகிறது, அவ்வளவுதான். மூலம் தமிழில்தான் உண்டு.

'குண்' என்னும் வேரடியாகப் பிறந்த சொல். குண்ணுதல் - அண்ணுதல் - அணுத்திரட்சியால் உருவாகும் இயற்கைத் தன்மை. அஃதாவது அறிவும் மனமும் உடலும் ஒன்றிய உணர்வு. பிறவிப் பண்பு.

பண்பு - பண்படுத்தப்பட்ட தன்மை Cultivated mind பிறந்த பின் அமையும் தன்மை.

நடத்தை - நடந்துகொள்ளும் தன்மை - behaviour Conduct - சூழலுக்குப் பொருத்தமானது.

இயல்பு - தன்மை - இயற்கைத் தன்மை - Natural இங்குகிற தன்மை.

தன்மை - அடைவுப் பண்பு - Attribute.

மனவியல் - மனத்தின் தன்மை மட்டும் - disposition.

இனி, எண் குணம் பற்றிய சமணர் கொள்கை வருமாறு.

1. கடையிலா மெய்யறிவு Infinite Wisdom
(ஞானம்)

2. **கடையிலாக் காட்சி** Omni Science

3. **கடையிலா வீரியம்** Omni potence

4. **கடையிலா இன்பம்** boundless happiness

5. **பெயர்** (நாமம்) **இன்மை** being nameless

6. **குலம்** (கோத்ரம்) **இன்மை** Without descent

7. **அகவை** (ஆயுள்) **இன்மை** without age (eternal)

8. **தடையிலா யியக்கம்** Unobstructed

- இவற்றிலும்கூட மாந்தருக்குள்ள தன்மைகளுக்கான எதிர்த் தன்மைகளே இறைவனின் தனித் தன்மைகளாகக் கூறப் பெற்றுள்ளதைக் கவனிக்க வேண்டும். இங்கும் இறைவனின் அறிவுத் தன்மையும் ஆற்றலும், புறநிலைகளும், சொல்லப் பெற்றுள்ளனவே தவிர, குணங்கள் சொல்லப்பெறவில்லை.

ஒருவன் வேகமாக ஓடுவதும், வீரமாகச் சண்டை பிடிப்பதும், பெயர் வைத்துக்கொள்ளுவதும் அல்லது இல்லாமலிருப்பதும், குலமும், அகவையும் அவனுடைய குணங்கள் ஆகுமா? எண்ணிப் பார்க்க.

- எனவே, 'எண்குணம்' என்பது இறைவன், ஏழைமை, எளிமை, தாழ்மை, நொடிமை, மிடிமை, வறுமை, துயரம், துன்பம், கேடுகள், தீமைகள், கல்லாமை முதலிய எவ்வகையான கீழ்மைநிலை வயப்பட்டவர்களுக்கும் எளிதில் இரங்கும் - அருளும் தன்மையே இங்குச் சிறப்பாகக் குறிக்கப்பட்டது. மற்று, அறிவு, செல்வம், பத்திமை, ஆரவாரப் பூசைகள், ஓகம், தவம், முதலிய மேனிலைக் கூறுகளில் ஈடுபட்டவர்க்கேயன்றி, எளியார்க்கும் எளியனாய் உள்ள குணம் உள்ள தன்மையே இறைவனது சிறப்பான குணமென்றார் என்க.

இதனை,

"பத்துடை அடியார்க்கு எளியன்!
பிறர்களுக்கு அரிய வித்தகன்"

என்று நம்மாழ்வார்,

"எளியதிது வென்றே ஏழைகாள் யாதும்
அளியீர் அறிவிலீர்"

என்று காரைக்கால் அம்மையார்,

"திரிகின்ற முப்புரம் செற்ற பிரானை

அரியன் என்றெண்ணி அயர்வுற வேண்டா
பரிவுடை யாளர்க்குப் பொய்யலன் ஈசன்
பரிவொடு நின்று பரிசறி வானே"

- திருமந். 348

- என்று திருமூலர் முதலிய மதவியலாரும் இறைவனது எளிமைக் குணத்தைக் குறித்திருக்கின்றதும் காண்க.

- இனி, இவற்றுக்குக்கும் மேலும் 'எண்' என்னும் சொல்லை நூலாசிரியரே 'எண் பதத்தான்' (548), (991) என்றும், எண் பொருள் (424), (760) என்றும் பயன்படுத்தியுள்ள நான்கு இடங்களிலும் 'எளிமை'ப் பொருளிலேயே கையாண்டுள்ளது மிகப் பெரும் சான்றாகுதல் காண்க. எனவே, இது தொடர்பான குணப் போராட்டங்களும் சமயப் பூசல்களும் தவிர்ந்தன அல்லது தவிர்க்கத் தக்கன என்க. O

க0. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். 10

பொருள் கோள் முறை:

இறைவன் அடி சேராதார் பிறவிப் பெருங்கடல்
நீந்தார்; (சேர்ந்தார்) நீந்துவர்.

பொழிப்புரை : *(உடல், அறிவு, மனம் ஆகிய பருப்பொருள், நுண் பொருள் இயங்கியல் முதிர்வடைதலின் வழி) அறமுதலின் மூலவுணர்வாகிய இறைப் பேராற்றலொடு ஒன்றிக் கலந்தவர், அடுத்தடுத்து அலைகள் போல் தோன்றும் பிறவித் தொடராகிய பெருங்கடலை நீந்திப் பிறவா நிலையாகிய கரை சேர்ந்து, உருவ, அருவச் சுழற்சியின்றி இருப்பர்; மற்றையவர் அவ்வாறு நீந்திக் கரை சேராமல், பிறவிச் சுழற்சியின் வயப்பட்டே இருப்பர்.*

சில விளக்கக் குறிப்புகள்:

1. (இது அறமுதலை உணர்ந்து, அதனுடன் ஒன்றிக் கலந்து, பருப் பொருள் நுண்பொருள் வெளிப்பாடின்றி, அருவ நிலை எய்தி, உணர்வாகிப் பிறவியின்றி நிற்கும், உயிரியக்க இறுதி நிலையைக் கூறியதாகும்.

2. கடல் போலும் முற்றுப் பெறாத பிறவிச் சுழற்சியினின்று, நாமே விரும்பி நம்மை விடுவித்துக்கொண்டு, பிறவாத நிலை என்னும் கரை சேர்ந்தாலன்றி, நாம் என்றென்றும் அதில் நீந்திக்கொண்டு தான் இருப்போம், என்றார்.

- உயிர், தானே விரும்பித்தான் பிறவிச் சுழற்சியில் ஈடுபடுகின்றது. அந்நிலை அன்பினாலும் ஆசையினாலும், மற்ற உயிர்களோடும், பொருள்களோடும் கொண்ட தொடர்பினாலும் ஏற்படுகின்றது.

- இதன் விரிந்த விளக்கங்கள் 'அன்புடைமை' அதிகாரத்துள் விளக்கப்பெறும்.

3. இதனால், ஆசிரியர் பல்பிறவிக் கொள்கையை ஒப்புகிறார், என்க.

4. இவ்வதிகாரக் கருத்துகளின் முற்ற முடிந்த பயனும் இது! உயிர்களின் இறைமை நிலையும் இது.

5. அங்கு (8) ஒரு பிறவி வாழ்வை ஆழி என்றார். இங்குப் பிறவித் தொடரைப் பெருங்கடல் என்றார். O

அ-1. பாயிரவியல்

அ-1-2. வான் சிறப்பு-2

அதிகார முன்னுரை:

அறமுதற் பொருளாகிய இறைமையினது இயக்கத்தின்கீழ்த் தங்கிய உலகின்கண், உயிர்கள் தோன்றி, மலர்ந்து, வளர்ந்து வாழ்க்கை செய்வான் வேண்டி, உலகுக்கு முதல் தேவையான உறுபொருள் நீரே ஆகலின், அந் நீர்தரு வான்மழையின் பெருமை கூறினார்.

இறைமை ஒளிவழி உலகத்திற்கும் இயக்கத்திற்கும் முதனிலையாகச் செயற்பட்டு, உயிர்களின் தோற்றத்திற்கும் நிலைப்பிற்கும் ஒலியாகிய நீர்வழி இரண்டன் நிலையாகச் செயற்படுதலின் அதன்பின் இது கூறினார்.

உலகைப் பொறுத்த அளவில், இறைமையின் அறவுணர்வு செயல்படும் முதற்கூறு ஒலியாகிய காற்றும், இரண்டாம் கூறு ஒளியாகிய கதிரவனும் நிலவும், மூன்றாம் அறக்கூறு மழையும் ஆகும். ஒலியும் ஒளியுமாகிய மூல முதலிரு அறக் கூறுகளின் சிறப்பு நிலைகளை **'அறமுதல் உணர்தல்'** அதிகாரத்துள் விளக்கினார். இங்கு மூன்றாம் அறக் கூறாகிய மழையினது சிறப்பு நிலைகளையும் அதன் **'கைம்மாறு வேண்டா கடப்பாடு'** (211) ஆகிய அறவுணர்வெனும் அளியையும் அதன் இன்றியமையாமையையும் உணர்த்துவார், என்க.

இதில் முதலிரண்டு குறள்களில் மழையின் பெருமையை உடன்பாட்டானும், பின் வரும் எட்டுக் குறள்களிலும் மழையின்மைக் கேடுகளை எதிர்மறையானும் உணர்த்துவார்.

கக. வானின்று உலகம் வழங்கி வருதலால் தானமிழ்தம் என்றுணரற் பாற்று 11

பொருள் கோள் முறை :

வான் நின்று உலகம் வழங்கி வருதலால் தான் அமிழ்தம் என்று உணரல் பாற்று

பொழிப்புரை : *வானம் (ஒரு தாய் போல்) நிலையுற்றிருந்து, தான் பயந்த உலகத்திற்கும், அதன் உள்ளார்ந்த உயிர்களின் தோற்றத்திற்கும், நிலைப் பிற்கும், அவ்வப்பொழுது அவை கேட்டலின்றித் தானே மழையூட்டுதல் தந்து உதவிவருவதால், அம்மழை (அனைத்துப் பயிர்களுக்கும் உயிர் களுக்கும்) தாய்ப்பால் (போன்றது) என்று உணர்ந்து கொள்ளும் பான்மையுடையது.*

சில விளக்கக் குறிப்புகள்:

1. **நின்று** - *நிலையுற்றிருந்து.*
2. **வழங்கி** - *வழங்குதல் தந்து. வழங்குதல் கேட்டலின்றித் தானே தருதல்*
   - *இவ்வுலகில் நிலையுற்றிருந்து வழங்குதல் தன்மையுடையவர் எவ்வுயிரினத்தும் தாயே என்க.*
   - *தொடக்கத்தும் அவளே உயிரைத் தோற்றுவித்தற்கும் பாலூட்டி வளர்த்தற்கும் உரியளாகையாலும், மழையை அமிழ்தம் (தாய்ப்பால்) என்றமையாலும், தோன்றா உவமை தாயென்று தோற்றிற்று.*
3. **அமிழ்தம்** - *'அம்' 'அம்' என்பது, குழந்தை தாய் முலையில் பாலருந்தும் ஓர் ஒலிக்குறிப்பு. அம்மம் - தாய் முலை; அம்மு - முலைப்பால்; அமுது - அமுதம் - அமிழ்தம் - முலைப்பால். அம்மை - முலைப்பால் ஊட்டும் தாய், அம்மா - தாய் (விளி);*
   - *உலக மொழிகள் அனைத்திலும் தாயைக் குறிக்கும் மூலச் சொல்*
   - *(அவ்வவ் விடத்திற்கும் இனத்திற்கும் மொழிக்கும் ஏற்ப இச் சொல் சிற்சிறிது மாறுபட்டு வழங்கினும்) இதுவே என்க.*
   - *அமிழ்தம் முதலில் தாய்ப்பாலைக் குறித்துப் பின் பிற அருந்து பால்களையும் குறித்தது.*
   - *மற்று, அமிழ்தம் அமிர்தம் ஆகாது, அது கற்பனையாகலின்.*
   - *உயிர்கள் உடலொடு தோன்றி மலர்ச்சியுறுவதற்கு முதல் உலக*

உணவு தாயினது பாலே யாகலின், அதுவே உயிர்க்கு மருந்தும் சாவைத் தடுப்பதும் ஆகும். பறவையினத்திற்கும் அது போல் பிறவற்றிற்கும் தாய்ப்பாலைப் போலும் ஊட்ட நீர் முட்டையிலேயே உள்ளதென்க.

அமிழ்தம் (உயிரைத் தருவது) என்னும் சொல்லினின்றே வடநூலார் 'அமிழ்தம்' (மிர்து-சாவு; மிர்தம் - சாவைத் தருவது; அமிர்தம் - சாவைத் தடுப்பது) என்னும் சாவா மருந்தைக் கற்பனை செய்து கொண்டனர் என்க.

இவ்வுலகின்கண் அப்படி ஒரு மருந்து இன்மையால் விண்ணுலகத்தில் - அங்குள்ள தேவர்களுக்கு - உணவாக இருப்பதென்பதும் அவர்களது கற்பனையே யாகும்.

4. **வழங்குதல்** என்னும் சொல்லால், வழங்கு பொருள் வானாகவும், வழங்கப்பெறும் பொருள் மழையாகவும், வழங்கப்பெறுவது உலகமாகவும் ஆயின. ஆகவே, வானாகிய தாயும், உலகாகிய மகவும், மழையாகிய தாயமிழ்தும் உருவகமாயின.

5. **என்றுணரற் பாற்று** - என்று உணர்தல்பாலது - என்றது அறிவால் அறியப் பெறுதல் மட்டுமன்றி, உணர்வாலும் நன்றி கருதலும் வேண்டி என்க.

- இவ்வுணர்வைச் 'செய்யாமற் செய்த உதவி' (101), 'கைம்மாறு வேண்டா கடப்பாடு' (211) என்னும் பாக்களாலும் உறுதிப் படுத்தினார் என்க.

- உணரற் பாற்று - உணரற் பால்+அது - பாலது. பால்+அது - பால்+து - பாற்று.

6. இறைமையின் - அறமுதலின் மூன்றாவது கூறாகிய மழையின்றேல் உலக உயிர்களும் விளைவுகளும் இல்லை என்று உணர்த்தினார். இதன்வழி, அறவுணர்வின் தன்மையையும் - தாய்மை உணர்வு போல் மக்கட்குத் தானே செய்யும் தண்ணளி போன்ற உணர்வையும் - விளக்கினார் என்க.

7. இறைமைக்கும் உலகிற்கும் உள்ள மூன்றாம் தொடர்பு இதனால் உணர்த்தப் பெற்றது.

o

கஉ. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை 12

பொருள் கோள் முறை : **இயல்பு**

பொழிப்புரை : ஓரறிவு முதல் ஆறறிவு ஈறாக உள்ள உலகுவாழ் உயிரினங்கள் அனைத்துக்கும், அவையவற்றிற்கும், அவரவர்களுக்கும், அவ்வவ்விடத்துக்கும், அவ்வக்காலத்திற்கும் ஏற்ற வகையான உணவு, உடை, உறையுள் முதலிய துய்ப்புப் பொருளாகிய அனைத்தையும் உண்டாக்கிக் கொடுத்தும், அவ்வாறு உண்பவர்களுக்குத் தானும் உண்ணப்படும் நீர் எனும் வகையில் ஓர் உணவாகி நிற்பதும் மழையே ஆகும்.

சில விளக்கக் குறிப்புகள்:

1. **துப்பு** - துய்ப்பு (அநுபவம்) - துப்பு - துய்ப்பு (நுகர்வு)ப் பொருள்கள் ஆகிய அனைத்தையும் குறிக்கும். என்னை?

அரக்கும் பவளமும் ஆயுதப் பொதுவும்
துணையும் வலியும் பொலிவும் நெய்யும்
அனுபவமும் தூய்மையும் துப்புஎன லாகும்.

- பிங்கலந்தை

அற்றைப் பரிமேலழகர், மணக்குடவர், பரிதியார், காலிங்கர், பரிப்பெருமாள் முதல் இற்றைப் பாவாணர் உள்ளிட்ட அனைத்து உரையாசிரியர்களும் ' துப்பு ' என்பதற்கு 'உணவு' என்று மட்டுமே பொருள் கொண்டுள்ளது குறையுரையாகும். துப்பு என்பது நுகர்ச்சி - துய்ப்புப் பொருள்கள் அனைத்தையும் குறிக்கும் ஒரு சொல் என்பதை உணர்தல் வேண்டும்.

மழை வெறும் உணவுப் பொருள்களை மட்டும் உருவாக்கித் தரவில்லை; அதற்கு மட்டும் அது காரணமாக அமையவில்லை. அனல் உலகைப் புனல் உலகமாக மாற்றி, உயிர் வாழ்க்கைக்குரிய உலகமாக இதை உருவாக்கியதும், இதில் உலவுகின்ற அத்தனை உயிர்களும் உருவாகக் காரணமாகியதும்; அவ்வுயிர்கள் தம்மை நிலை நிறுத்திக் கொள்ளவும், வாழவும் ஆன அனைத்து நுகர்வுப் பொருள்களாகிய உணவு, உறையுள் மக்களுக்கு வேண்டிய உடைகள் முதலிய அனைத்தும் உருவாகுவதற்கு மூலப் பொருளாக நின்றதும், அதன் பின் இறுதியில் தானும் ஓர் துய்ப்புணவான நீர் ஆகி நிற்பதும் மழையே என்க.

இச் செய்யுளின்கண் வெறும் உணவாக்கம் மட்டுமே கூறப் பெறாமல், படைப்பாக்கம் அனைத்தும் கூறப்பெற்றிருப்பதை உய்த்துணர்க. என்னை?

2. **'துப்பு ஆய துப்பு ஆக்கி'** என்பதில் உலகின் அனைததுப்

படைப்புகளும், துப்பார் என்பதில் உயிர்களின் படைப்பும், அவற்றிற்கான வாழ்க்கைத் தேவை நிறைவுகளும் கூறப்பெற்றுள்ளன, என்க.

இதன்வழி அறமுதல் உணர்வாகிய இறைப்பொருள் செயல்படும் வழிவகை கூறினார் என்க.

முன்னைய குறளில் 'வான்நின்று' என்று, கூறியதும், அதன் பின் 'வழங்குதலாகிய மழையைக் கூறியதும், இதில் அவற்றின்வழி, உலகின் அனைத்துக் கூறுகளின் படைப்புக் கூறியதும் பொருத்திக் கண்டு, இவற்றின்வழி மூலப்பொருளாகிய இறைமையென்னும் மெய்ப்பொருளைக் கண்டுகொள்ள ஏதுக்கள் காட்டினார் என்க. O

கங. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்(து)
உண்ணின்(று) உடற்றும் பசி. 13

பொருள் கோள் முறை:

விண் இன்று பொய்ப்பின் விரிநீர் வியன் உலகத்து
உள் நின்று பசி உடற்றும்.

பொழிப்புரை : மழை பொழிவின்றிப் பொய்த்துப் போகுமானால், பெரும் பகுதியும் கடல்நீரால் சூழப்பெற்ற, இவ் வியத்தகு உலகத்தில், வாழ்தலுறும் அனைத்து உயிர்நிலைகளையும் உள்ளாக நின்று பசியுணர்வு வருத்திக் கொல்லும்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. புறத்தே தெரியாமல் உயிர்களின் உடல்களுக்குள்ளே தோன்றியிருந்து அது தீர்க்கப்படாமல் நின்று வருத்துவதால், *'உள் நின்று உடற்றும் பசி'* என்றார். உயிர்களைப் புறம் நின்று வருத்துவது வறட்சி.

2. **பொய்ப்பின்** என்றது நிலையாக வன்றி இடைக்காலத்து இல்லாமை பற்றி, நிலையாக எனின் 'நீங்கின்' என்பது போல் கூறியிருப்பார்.

3. **விரிநீர்** என்றது உணவு ஆக்கத்திற்குக் கடல் நீர் நேரிடையாகப் பயன்படாமை பற்றி உயர்வு நவிற்சியாகக் கூறியது.

4. **வியனுலகம்** விரிந்த, அகன்ற உலகம் என்றும் பொருள் தரும். ஆயினும் பல்வேறு அறிவியல் பொருளியல் கூறுகளைக் கொண்டிருப்பினும், மழையின்றி அப்பெருமைகளால் பயனில்லை என்றற்கு வியப்புப் பொருளே ஏற்றதென்க. வியப்புகள் பலவாயினும் அவற்றால் மழையை வருவிக்க இயலாது என்றும் கூறினார் என்க. இதுவும் உயர்வு நவிற்சியாகக் கூறியதே.

5. **நின்று** என்றது மீண்டும் பொழியும்வரை தொடர்ந்து பசி வருத்தும் எனற்கு.

6. மழை பெய்யாது இடை நின்றால் முந்தைய பெயலால் சேமித்து வைத்த உணவுப் பொருள்கள் தீர்ந்து, உயிர்களைப் பசி வருத்தும் என்றார். பசி - நீர் வேட்கையையும் உள்ளடக்கியது.

7. **உடற்றுதல்** - உடல் உறுதல் - உடலுதல் - உடற்றுதல் - வருத்துதல். O

கசஃ ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும் வாரி வளங்குன்றிக் கால் 14

பொருள் கோள் முறை:

புயல் என்னும் வாரி வளங்குன்றிக் கால்,
உழவர் ஏரின் உழாஅர்.

பொழிப்புரை : *(கடலினின்று நீர்த் துளிகளைச் சுமந்து வந்து பொழிவிக்கும்) மழைமேகம் என்னும் கொடை, தான் வழங்கப் பெறும் அளவில் குறைதல் நேருமிடத்து, (நீரால் உணவுப் பயிரை விளைவிக்க வேண்டி) உழவர் ஏரைப் பூட்டி வேளாண்மைக்கென நிலத்தை) உழுதல் செய்ய மாட்டார்.*

சில விளக்கக் குறிப்புகள்:

1. **புயல்** - மழை மேகம்; மழையைக் கொணரும் பெருங்காற்று.

   வாரி - வழங்குதல் செய்யப்பெறும் கொடை.

2. **வளம் குன்றுதல்** - வழங்கப்பெறும் அளவு குறைதல்; இஃது அறவே இல்லாமற் போதலன்று.

3. மழை போதிய அளவின் குறைந்து பெய்யுமானால், அதன்வழி நிலத்தை உழுது வேளாண்மை செய்யும் உணவுப் பயிர் ஆக்கம் நிகழாது போகும். போகவே உணவுத் தட்டுப்பாடு நேரும்.

4. **உழவர்** - **'உழு'** என்னும் வேரடியாகப் பிறந்த சொல். உழு - உழவு - உழவர். உழு - உழுவர் - உழவர் என்றும் கொள்ளலாம். 'உழு' என்னும் வேரடியாகவே 'உழை' என்னும் சொல் தோன்றி 'உழைப்பு' என்னும் ஊக்க முயற்சியையும் அது தொடர்பாய்ப் பிறபணிகளையும் குறித்த தென்க.

- தமிழில் உள்ள உழைப்புத் தொடர்பான அனைத்துச் சொற்களும் உழவுத் தொடர்பான சொற்களே என்பது இங்குக் கவனிக்கத்தக்கது. 'உழைப்பு' தவிர வேறு சொற்கள்.

தொழில் - தொள் - தொடு (பறி) தொண்டு - தோண்டு. தொள் - தொளில் - தொழில் (சிறப்பு முகரம் பெற்றுத் தனிப் பெயராக நின்றது)

பணி - பள் - பள்ளம் (விதைக்கப் பள்ளம் செய்தல்)

பள் - பள்ளு (உழவு) - பள்ளர் - உழவர்

பண் - பண்ணை - உழவு

பண் - பண்ணுதல் - செய்தல்

பண் - பணி

வினை - விளை - வெளை - வேளை - வேள் - வேளிர்

வேள் - வேளாண்மை - வேளாளர்.

வேளை - வேலை. விளை - வினை (செயல்)

செயல் - செய் - வயல், நன்செய், புன்செய், செய் - செய்தல் நிலத்தைப் பண்படுத்தல் - விளைவுக்குரியதாக ஆக்குதல்.

ஆற்றுதல் - ஆற்று நீரை விளைவுக்குப் பாய்ச்சுதல் (வயல்கள் ஆற்று ஓரங்களிலும், ஏரிகளைச் சுற்றியுமே இருந்தன. ஏரி - ஏருக்கு உதவுகிற நீர்த் தேக்கம். - (இவ்வாறு) செய்தல்.

5. இதனால் நிலம் தன் மேல் விளைவு இல்லாமல் வறட்சி எய்தும் என்றார். உழார் என்பதை 'ஏரின் உழார்' என்று மிகுத்துக் கூறியது, நிலம் ஏருக்குரியவாறு நனைந்து பதப்பட்டிருக்காது என்பதை உள்ளடக்கிக் கூறியதாம் என்க. குன்றியக்கால் என்றது குன்றிக்

கால் என்று தொக்கு நின்றது. வாரி வளம் குன்றின் ஏரின் வளமும் குன்றும் என்றார்.

6. **'ஏரின் உழாஅர்'** *என்றவர்,* **'உழவு'** *அதிகாரத்தில்* **'சுழன்றும்'** *ஏர்ப்பின்னது உலகம் என்பதாலும், மழையின்மையால் ஏரும், அதன் பின்னவாய ஏனைத் தொழில்களும், அவை பொருட்டாய உலகமும், அலகுடை நிழலால், பல குடை நீழலும் தங்குடைக்கீழ்க் காணும் அரசும், இல்லறமும், துறவறமும் ஆய பல்வகை அறக் கூறுகளும் நடைபெறா என்றவாறு.* O

கரு. கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை. 15

பொருள் கோள் முறை: **இயல்பு**

பொழிப்புரை : *உலகுவாழ் உயிரினங்களுக்கு எதிராகத் தான் பொழியாது நின்று அவற்றைச் சீரழித்துக் கெட வைப்பதும், அவ்வாறு சீரழித்துக் கெட்ட அவற்றுக்குத் துணையாக மீண்டும் வேண்டிய அளவு பெய்து, அவற்றை அழிவினின்று மீட்டெடுத்து நிலைபெறச் செய்வதும், ஆகிய அழித்தல், ஆக்கல், அளித்தல் என எல்லாவற்றையும் செய்ய வல்லது மழையே ஆகும்.*

சில விளக்கக் குறிப்புகள்:

1. ***சார்வாய்*** *- துணையாக. சார்வாக நின்று அழிவினின்று மீட்டெடுப்பது என்றதால், எதிராக நின்று கெடுத்தது வருவிக்கப் பெற்றது.*
2. ***கெடுத்தல்*** *- இல்லாமற் செய்தல்.*
3. ***எல்லாம்*** *- என்றது அழித்தல், ஆக்கல், அளித்தல் என யாவும் வல்லது என்று உணர்த்துவான் வேண்டி.*

இதனை, இவ்வதிகாரத்தின் இறுதிக் குறளாகக் கொள்வர் திரு.வி.க.

இதனால், விளைவு குறைந்து, உயிர்கள் கெட நேர்ந்தால், மீண்டும் மழையையன்றி அவற்றை மீட்பதற்குத் துணையாக நிற்பார்

எவருமிலர் என்றார்.

உலக ஆக்கங்களுக்கும் அழிவுகளுக்கும் காரணமான வளி (காற்று), ஒளி (வெப்பம்), குளிர்மை (நீர்) ஆகிய மூன்று கூறுகளும் உடலின் மூன்று கூறுகளாக நின்று, மிகினும் குறையினும் நோய் செய்தல் (941) போல், இயங்குவதாகக் கூறியதை ஒப்பு நோக்கி உணர்க.

- இதில் இறைமையின் ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய மூன்று கூறுகளும் கூறப் பெற்றன. இவற்றுள் அழித்தல் கூறை முன் வைத்தது, நிலையாமைவழி நிலைத்தல் பெருமையை உணர்த்துதற் கென்க.

O

ககூ விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண் பரிது. 16

பொருள் கோள் முறை: **இயல்பு**

பொழிப்புரை: வானிலிருந்து மழைத்துளி விழுந்தால் அல்லது, விழாத அவ்விடத்தில், உலகின் ஓரறிவுயிரினத்திலும் மிகச் சிறியதாகிய பசும்புல்லினது முளையையும் நாம் காண்பது அரிதாகிவிடும்.

சில விளக்கக் குறிப்புகள்:

1. **விசும்பு** - வானம். வெப்பத்தால் நீர் கொண்ட மேகம், வானில் ஏறிப் பரந்து படிந்து நிற்பதே, அது குளிரடைந்து மீண்டும் துளியாக மாறுதற்கு ஏதுவாகலின், அதனின்று வீழும் நீர்த்துளியை விசும்பின் துளி என்றார்.

2. **துளி** - **'துள்'** என்னும் வேரடிச் சொல் - துள் - துண் - துணுக்கு. நீர்த்துணுக்கு துளி என்க.

   - மழையின் சிறிய அளவாகிய துளியின் இன்மை கூறி, விளைவின் சிறிய அளவாகிய புல்லின் இன்மையும் கூறியது உற்று நோக்கி மகிழத்தக்கது.

3. **ஆங்கே** - அத்துளி விழாத அவ்விடத்தில்.

4. இஃது, ஓரறிவுயிரின் மிகத் தாழ்ந்த நிலையில் உள்ள பசும்புல்லும் தலைகாட்டாது என்றவாறு. ஓரறிவுயிரே தலைகாட்டாதெனின் பிற

கருவும் காணா என்றவாறு.

- புல்தலை - தோற்றத்தைக் குறித்தது. உயிர்களின் தோற்றத்தைக் குறித்ததுமாம்.

- தலையென்றது, உயிரினத் தோற்றத்தின் முதல் கூறின் முதல் உறுப்பையே.

- எல்லா உயிர்க்கும் தலைத் தோற்றமே பிறவியின் முதல் வெளிப்பாடு என்க.

- புல் என்னாது, பசும்புல் என்றது, எதுகை நோக்கி மட்டுமன்று.

'புறக்காழ னவே புல் என மொழிப'

- என்னும் தொல்காப்பிய (1585) நூற்பாவால், புல் என்பது புறக்காழ்ப்புடையனவாகிய மூங்கில், தென்னை, பனை முதலியவற்றையும் குறிக்குமாகலின், அவையன்றிக் கூற வந்தது, அவற்றிற் கடைநிலையினதும், முதல் தோற்றமுடையதுமாகிய 'பசும்புல்'லேயாம் எனல் வேண்டி என்க.

- இனி, பசும்புல் என ஓரறிவுயிரின் கடைநிலைப் பிறவியின் தலையும் காண்பு அரிது எனக் குறித்தது, அதனின்றும் பரிந்தெழுந்த புறக்காழனவும் அகக்காழனவும் நினைக்கவும் அரிது எனல் வேண்டி என்க.

இதனால் மழையில்லாமற் போமாயின், ஓரறிவுயிரினும் சிற்றுயிராகிய புல்லும் முளையாமற் போய், நிலம் தன் உயிர்த்தன்மையை இழந்துவிடும் என்றார்.

o

கஎ. நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும், தடிந்தெழிலி தானல்கா தாகி விடின். 17

பொருள் கோள் முறை :

தடிந்த எழிலி தான் நல்காது ஆகிவிடின்,
நெடுங்கடலும் தன் நீர்மை குன்றும்.

பொழிப்புரை : *கடல்நீர் குறைவுறக் (கதிரவ வெப்பத்தால்) ஆவியாகி மேலெழுந்து (திரட்சியுற்றுப் படர்ந்து) நின்ற கருமேகம், (மீண்டும் அக்கடல் குறைவு நிறைவுறும்படி மழையாகப் பொழிந்து) நீர் நல்காவிடில், (அகன்று*

விரிந்து பரந்து ஆழ நிற்கும்) நீடிய கடலும், தன் இயற்கைத் தன்மையில் குறைவுபட்டு விடும்.

சில விளக்கக் குறிப்புகள்:

1 தடிந்த எழிலி என்பது **தடிந்தெழிலி** எனத் தொக்கு நின்றது. கடல் நீரைக் குறைத்து எழுந்த நீர் மேகம் என்பது பொருள். தடித்து என்று கொள்வது அவ்வளவு பொருந்துவதன்று. தடிந்து என்பதற்கு மின்னி என்றும் பொருள் கொள்ளலாம்.

2 **நல்குதல்** - பெற்றதைத் திரும்பத் தருதல்.

3 **நெடுங்கடல்** - பார்த்தற்கும், கடத்தற்கும், அளத்தற்கும் அரிய நீடிய கடல்.

4 **நீர்மை குன்றுதல்** - நீர் அளவிலும் நீர்மையிலும் அஃதாவது தன் இயல்பாந் தன்மையிலும் குறைவுபடுதல். இயல்பாந் தன்மை - தானும் தன்னுள் வாழும் பயிரும் உயிரும் கனியும் மணியும் அளவிற் குறைதல். நில விளைவின்றிக் கடல் விளைவை நம்பினார்க்கு அதுவும் இல்லாமற்போகும் என்றவாறு.

5. இக்குறள் கருத்தினையொட்டிக் கூறிய,

'கலங்கு தெண்டிரை மேய்ந்து கனமழை .....
..... வானிரைத்து மணந்து சொரிந்தவே' - சீவக. சிந். 32-33.

'மாக்கடல் முகந்து .....
..... செறிந்த இம் மழை' - நற். 112.

- என்னும் பாடலடிகள் இங்கு நினைவு கூர்ந்து ஒப்பிட்டு மகிழத் தக்கன.

O

கஅ. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு. 18

பொருள் கோள் முறை:

வானம் வறக்குமேல், ஈண்டு, வானோர்க்கும்
சிறப்பொடு பூசனை செல்லாது.

பொழிப்புரை: *வானில் (மழைக்குரிய மேகங்கள் சூழாதும் அதனால் மழை பொழியாதும்) வறட்சியான வெறுமை தோன்றுமானால், இவ்வுலகத்து, (வான் உறைவதாகக் கருதப்பெறும்) தெய்வங்கட்கும், (பொதுவானும்) சிறப்பானும் (வேளையும் நாளும் பருவத்தும்) செய்யப்பெறும் பூசனை முதலிய வழிபாடுகள் (ஆக்கமின்மையானும், நம்பிக்கை குறைதலானும்) நிகழ்த்தப் பெறா.*

சில விளக்கக் குறிப்புகள்:

1. **வானம்** *இடவாகு பொருளாய் மழையைக் குறிக்குமேனும், வறட்சி தோன்றுவது கூறப்பெற்றதால், இடப்பொருளாய் வானத்தையே குறிக்கும்.*

2. **வானோர்** *- வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து சிறப்புற மறைந்தும் மக்கள் மனங்களில் தெய்வங்களாக நின்று கொண்டாடப் பெறுவோர். 'வையத்துள்' எனத் தொடங்கும் திருக்குறளை (50) ஓர்க. முருகன், சிவன், திருமால் முதலிய தெய்வங்களும் அத்தகையோரே.*

3. **பூசனை** *- பூசை 'பூசு' என்னும் வினையடியாகப் பிறந்த சொல்.*

   பூ செய் (பூ வழிபாடு) 'பூசை'யானது என்பாரும் உளர்.

   "பூசை அல்லது பூசனை சமசுக்கிருதச் சொல் என்பார் உண்டு. ஆனால் அச்சொல்லும் சொற்றொடர்புப் பொருள் மரபும் ஆரிய இனத் தொடர்பற்றவை.... பூசை அல்லது பூசனை என்ற சொல்லின் பொருள் தெய்வ உருவத்துக்கு நெய் முதலிய பூசி வழிபாடாற்றுதலும், பூவழிபாடு செய்தலும் ஆகும். இந்திய ஆத்திக ராகிய சைவ, சமண, வைணவ சமயத்தவரிடையே தான் பூசை பெருவழக்காயுள்ளது. ஆரியரின் இருக்கு முதலிய வேதங்களிலே பலியாட்டு வேள்வியன்றிப் பூசை, செபதபங்கள், துறவு, ஊனுண்ணாமை, உருவவழிபாடு ஆகிய எதுவும் காணப்படவில்லை." என்பர் அறிஞர் கா. அப்பாத்துரையார்.

   - மணிவிளக்கவுரை. பக். 512.

4. *மழை பொழியாது வானம் வறக்குமேல், நிலமும் வறண்டு, பூ பழம், நெல், நெய் முதலிய கிடையாமற் போதலாலும், நம்பிய தெய்வங்கள் மழையைப் பொழிவியாது, அவற்றின்மேற் கொண்ட நம்பிக்கை தளருமாதலானும், அவற்றைப் பாராட்டியெடுக்கும் பூசனைகள் நிகழ்த்தப் பெறாவென்றார்.*

   'பூவே புகை சாந்தம் சுண்ணம்
   விளக்கு இவற்றால் புனைதல் நாளும்
   ஏவா இவை பிறவும் பூசனை'

   சீவக. சிந். 1547 **O**

கசூ. தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின். 19

பொருள் கோள் முறை :

வானம் வியனுலகம் வழங்காது எனில்
தானம், தவம் இரண்டும் தங்கா.

பொழிப்புரை : வானம் (தன்னிடமிருந்து வந்து தங்கும் மழை மேகங்களைத் தன் இயங்கியல் முறைப்படி குளிர்வித்து), சூழற்சியாலும், உயிர்த்தோற்ற நிலைப்பாலும் மற்றும் பற்பல வகையாலும், சிறப்புற்று விளங்கும்) வியத்தகு பெருமைக்குரிய இவ்வுலகத்திற்கு, மழையாக வழங்காமற் போமாயின், (பிறர் நலனுக்கும் மகிழ்ச்சிக்கும் உரிய வகையில் ஒருவர் நல்குகின்ற) கொடையும், (தன் நலனுக்கும் மகிழ்ச்சிக்கும் உரிய வகையில் தன்னை முறைப்படுத்திக் கொள்கின்ற, அறிவு, உள்ளம், உடல் முயற்சிகளாகிய) தவம் என்னும் நோன்மையும் ஆகிய இரு செயற்பாடுகளும் நிலைபெறா. (படிப்படியாய் இல்லாமற் போய்விடும்.

சில விளக்கக் குறிப்புகள்:

1. **வானம் வழங்காது எனின் :** என்பது, வானம் மழையை வழங்காதாயின் என்று பொருள்படும். *வழங்குவது* மேகவுருவில் நீராவியாக வந்து தன்னிடம் தங்குவதைக் காற்றால் குளிர்வித்து மழையாக்கித் தருவது. வானிடத்திலிருந்து பொழிவதை வானம் வழங்குவது என்றார். வானம் இடவாகு பொருளாய் மழையைக் குறிப்பதினும் இடப் பொருளாய் நிற்பதே சிறப்பு என்க.

2. **தங்குதல் :** நிலை பெறுதல் - **தங்கா** - நிலை பெறா. இல்லாமற் போதல்.

3. **வியனுலகம் :** வியத்தகு உலகம். அகலப் பொருளினும் வியப்புப் பொருளே பொருத்தமுடைத்து அது, பலவகை இயங்கியல் நிலைகளுக்கு, உரியதாகலின், அவற்றுள்ளும் சூழற்சியும், உயிர்த்தோற்றமும் வியப்பினும் வியப்பாம்.

4 **தானம் :** கொடை (தா' வென்னும் வேரடியாகப் பிறந்த தூய தமிழ்ச் சொல்). பிறர் நலனுக்கும் மகிழ்ச்சிக்கும் பயனுறுத்துவதைக் கொடுத்தல். நலன் உடல் சார்ந்தது. மகிழ்ச்சி உளஞ்சார்ந்தது. தானம் பிறர்க்கும் தனக்கும் நன்மையும் மகிழ்ச்சியும் தரும் நிகரமை உணர்வு. தானம், தருமம், கொடை, ஈகை நான்கும் தூய தமிழ்ச் சொற்கள்.

தானம் - கேளாமல் தருவது.
தருமம் - கேட்டுத்தருவது.
கொடை - பொதுவின் கொடுப்பது
ஈகை, ஈதல் - தனக்குரியனவற்றையும் தருவது.

நோற்றிட்டு, உடனாக ஐம்பொறியும் வென்றார்க்கு உவந்தீதல் தானமாகும் என்று சீவக சிந்தாமணியார் (1546) கூறுவது போல், நோற்பார்க்கு மட்டுமே ஈதல் தானம் என்பது சமணர் கொள்கை.

5. **தவம் :** தன் உடல் நலனுக்கும், மகிழ்விற்கும் அறிவுக் கூர்மைக்கும் செய்யப்பெறும் நோன்மை முயற்சி. நோன்மை - நோற்றல் - கடைப்பிடி. அஃது இருக்கை, மனவொருமை, மெய்யறிமுனைவு முதலிய விரிவு நிலைகள் கொண்டது. (இவற்றின் விரிவும் - விளக்கமும் நுண்பொருண்மையும் நிறைவுரை நூலுள் காண்க.) அறிஞர் மு. வரதராசனார், பிறர் பொருட்டுச் செய்யும் தானமும் தம் பொருட்டுச் செய்யும் தவமும் என்பர்.

6. **'ஒழுக்கம் காத்தல் தாவாத்தவம்'** (சீவக. 1548) என்பது ஒரு கருத்து. மழைகுன்ற வளங்குன்றும்; வளங்குன்றக் கொடை குன்றும். கொடை குன்றப் பிறர் நலமும் மகிழ்வும் குன்றும் பிறர் நலமும் மகிழ்வும் குன்றத் தம் நலமும் வளமும் குன்றும் - என்க. தானம் பிறர் சார்பு நிலை; தவம் தற்சார்பு நிலை. தவம் வாழ்வியல் பொது; துறவுக்கே உரியதன்று.

O

உ0. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு. 20

பொருள் கோள் முறை:

உலகு நீரின்று அமையாது; எனின்
வான் இன்று யார் யார்க்கும் ஒழுக்கு அமையாது.

பொழிப்புரை: உலகமும் அதிலுள்ள உயிர்களும் (அவற்றின் இயற்கையும் செயற்கையும் ஆம் தன்மைகளும்) நீரில்லாமல் நிலைத்திரா. (விரைவில் அழிந்துபடும்). (இயற்கை செயற்கை நிலைகளே அவ்வாறாகும்.) எனின், வான்மழை இல்லாமல் உயிர்களுட் சிறந்த மக்களும், மக்களுட் சிறந்த

பெரியோரும் சிறியோரும், அறவோரும் துறவோரும், கற்றோரும் மற்றோரும், உள்ளோரும் இல்லாரும் எனும் யாவர்க்கும் அவரவர்க்குரிய நடைமுறைகள் அமையாமல் போகும்.

சில விளக்கக் குறிப்புகள்:

1. **அமையாது :** உலகமும் அதிலுள்ள உயிர்களும் இக்கால் உள்ள இயற்கையாந் தன்மையில் அமைந்திரா; அஃதாவது நிலைத்திரா. அமைதல் - உள்ளது நிலைத்தல்; அமையாமை - உள்ளது நிலை யாமற் போதல்.

2. **உலகு :** உலகும் அதிலுள்ள இயற்கையும் செயற்கையும்.

3. **ஒழுக்கு :** உலகியல் நடைமுறை, ஒழுகல் தன்மை.

4. **யார் யார்க்கும் :** மக்களுள் பல படிநிலையில் உள்ளவர்க்கும்; பிற அனைத்துயிரியக்கக் கூறுகளுக்கும்.

5. **'உலகு'** என்றது உலகியலை; **'ஒழுக்கு'** என்றது ஒழுக்கத்தை. **உலகியல்** -- பொதுமாந்த நடைமுறை; **ஒழுக்கம்** - தனிமாந்த நடைமுறை.

-- பொதுமாந்த நடைமுறைக்கு நீர் எவ்வளவு இன்றியமையாததோ, அவ்வளவு இன்றியமையாதது தனிமாந்த ஒழுக்கத்திற்கும் என்றார்.

-- உலகியல் நடைமுறைகளாவன, அரசமைப்புகள், நாட்டமைப்புகள், மக்கட் பிரிவுகள், அவர்களின் அறிவாக்க வாழ்வியல் நிலைகள், அறநிலைகள், துய்ப்பு நிலைகள் முதலிய அனைத்தும் என்க.

-- மேலும் 'வான்' என்பது மழை என்னும் பொருளில் மட்டும் அடங்குவதன்று. வானின்று வரும் வெயிலும், காற்றியக்கமும், வேறு பல அண்ட வெளி இயக்கங்களும், இன்னும் பல அறிவியல் கூறுகளான வேதியற் பொருள்களும் பிறவுமாகும்.

நீரில்லாமல் உயிர் உலகம் இல்லை என்னும் அறிவியல் உண்மையை வெளிப்படுத்தினர் என்க. எனவே நீரில்லாப் பிற கோள் உலகங்களில் உயிரியக்கம் இல்லை என்றதுமாம்.

6. மழை இன்றெனின் உலகின் இயற்கையும் செயற்கையும் திரிபுற்று நிலையிழந்து போகும். பின்னர் உயிர்களும் அவற்றுட் சிறந்த மக்களும் அவர்களுள் பல்வேறு நிலையினரும் தாமே அமைந்த - அமைத்துக் கொண்ட உலகியல் நடைமுறைகளும் படிப்படியாய்ச் சிதைவுற்று அழிந்து போகும்.

7. உலகமே அமையாதென்றவர், மீண்டும் உலகின் கண்ணுள்ள மாந்தர்க்கு ஒழுக்கம் அமையாது என்று வேண்டாது கூறியது - ஏன் எனில், உலகின்கண் ஓரோவிடத்துப் பெய்த நீர்,

வேறோரிடத்துப் புரக்கப்பெற்று மாந்தர்க்குதவலாம் ஆகலானும், வானமையாவிடத்துச் சிறிது காலம் முன்னரேயுள்ள ஆறுகள், அணைகள், ஏரிகள், குளங்கள், கடல் போலும் நீர் நிலைகள் சிறிது காலத்திற்குதவலாம் ஆகலானும், அவ்விடைக்கால மாந்தவொழுக்கத்திற்கும் நீரின்றியமையாமை கூறப்பெறல் வேண்டி என்க. o

அ-1. பாயிரவியல்

அ-1-3. நீத்தார் பெருமை-3

அதிகார முன்னுரை:

தன் தனிநிலை உணர்வு கருதும் மாந்தன் திறம், தன்னை முழுமையாக்கிக்கொண்டு, அதனின்று வெளியேறிப் பொதுமையான ஒன்றில் தன்னை நேரடியாக இணைத்துக்கொள்ளும் முயற்சியில் ஈடுபடுதல். அவ்வாறு ஈடுபடுகின்றவர்களுடைய சிறப்புக் கூறுவது, இது.

இவ்வுலக இயக்கத்திற்கே மூலமாக என்றும் உள்ள அறமுதலாம் இறைமையை முதலில் உணர்த்தினார்.

பின்னர் அதன் அரும் பெரும் ஆற்றல் செயல்படும் வகையில், இங்குள்ள அனைத்து இயற்கைக்கும் செயற்கைக்கும் முதற்காரணியாய் அமைந்த, நீர் தரும் மழையினது இன்றியமையாத் தேவையை இரண்டாவதாகக் கூறினார்.

இனி, மூன்றாவதாக, இங்குப் பிறவியுற்ற அனைத்து உயிரினங்களும், அவற்றுள்ளும் படிநிலை வளர்ச்சியுள்ள, மேம்பட்டு விளங்கும் உயர்ந்த அறிவினமாகிய மாந்த இனமும், அவற்றுக்கு இயல்பாக உள்ள உயிர்க்கருதுதல், உயிரியங்கியல் ஆகிய முயற்சிகளான், தங்களுக்குற்ற ஐம்புலத் துய்ப்புகளையும் அந்துகர்ச்சிகளால் ஏற்படும் இன்பங்களையுமே அவாவித் திரிகின்ற நிலையில், அம்மாந்தர்களுள், முதிர்ந்த அறிவு

முனைப்பானும், அதனினும் மேம்பட்ட மெய்யறிவானும், மனவுணர்வுத் தெளிவானும், பிறரினும் வேறுபட்டு விளங்கி, புலனுணர்வுகளை அடக்கி, இவ்வுலகில் இல்லறம் முதலியவற்றால் வரும் இன்பங்களைத் தவிர்த்து, நீக்கிக்கொண்டு, அவற்றினின்று அவ்வாறு தங்களை நீக்கிக்கொள்ளாமல், அவற்றுளே ஈடுபட்டு, அனைத்து நிலையானும் இன்புற்றும் துன்புற்றும் வாழ்ந்துகொண்டிருக்கும் பிறமக்கள் மேல், அன்பும் அருளும் கொண்டு, அவர்களுக்கு அறமும் அறிவும் வாழ்வியலும் புகட்டி, அவர்களொடு இணைந்து நின்றும், அதே பொழுது தனித்து நின்றும், நாடுறை அறவோர்களாக, இல்லறம் மேற்கொள்ளாத துறவோர்களாக, முனைவர்களாக, அறிவர்களாக, அன்பும் அருளும் கொண்ட அந்தண்மையாளர்களாக வாழ்ந்து, மக்கட்கு வழிகாட்டிகளாக விளங்கும் பொதுநலப் பெரியோர்களின் பெருமைகளைக் கூறி, அவர்களை உணர்ந்து மதிக்கவும், பின்பற்றவும், இதில் ஆற்றுப்படுத்துவார்.

நீத்தார் -- கானுறை துறவியரல்லர். நாடுறை துறவோர்; அறிவர்; அந்தணர்.

பெருமை -- உயர்ச்சி, சிறப்பு. இது ஒருவரின் சொல், செயல், வாழ்க்கை, அறிவு, கொள்கை, தொண்டு முதலியவற்றின் சிறப்பியல் கூறுகளைப் பிறர் மதித்துப் பெரிதுபடுத்திக் கூறும் தகைமையாலும் அதன் காலங்கடந்த நிலைப்பாலும் புலப்படுவதாம் என்க.

--- இனி, அத்தகைய நிலையில் உள்ளவர்கள் தவிரப் பிறர், தமக்கும் பிறர்க்கும் ஓர் இணைப்பை உருவாக்கிக்கொள்ளும் பொழுது, இயற்கையின் உயிரியக்க இயல்பின் ஓர் ஒழுங்கை முறைப்படுத்திக் காட்டுவதே இதற்கு அடுத்ததான 'அறன் வலியுறுத்தல்' அதிகாரம் என்க. O

உக. ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு. 21

பொருள் கோள் முறை : **இயல்பு**

பொழிப்புரை : ஒழுக்கம் உடையவராக இருந்து, (அறவுணர்வு மேம்பட்டு) உலக இன்ப நாட்டங்களைத் தவிர்த்துக் கொண்டவரின் பெருமை, அவரின் சிறந்த நோக்கத்தைச் செயற்படுத்துவதன் தேவையைக் கொண்டதாக

இருத்தல் வேண்டும். (அல்லாக்கால் அவர் அவற்றை நீத்தலில் பெருமையில்லை.) - என்பதே அறிவு நூல்களின் தேர்ந்த முடிவாகும்.

சில விளக்கக் குறிப்புகள்:

1. **ஒழுக்கத்து நீத்தார்** -- என்றதால், ஒழுக்கமின்மையால் நீத்தல் பெருமைக்குரியதாகாது என்றார். அவ்விழுக்கத்து நீத்தாரைக் கூடாவொழுக்க, அதிகாரத்துக் குறிப்பார். ஒழுக்கமின்மையால் நீத்தல் என்பது, இல்லறத்துக் கீழ்மையால், கொலை, களவு காரணத்தால், வறுமையால், மறைந்தொழுகும் பூசையால், அச்சத் தேவையால், பிற மன வெறுக்கையால் வேறுவழியன்றி நீத்தலை மேற்கொள்ளுதல்.

   இவ்வாறின்றி ஒழுக்கத்து நீத்தார் பெருமைக்குரியர் என்றார். ஒழுக்கத்து என்பதற்குப் பரிமேலழகர், 'ஒழுக்கத்தின்கண்ணே நின்று துறத்தலாவது என்று தொடங்கிக் கூறும் வருணாசிரமப் பொருள் துளியும் பொருந்துவதன்று; அஃது அறிவியலுக்கும் மாந்தச் சமநிலைக்கும் ஏற்றதன்று ஆகலானும் குலப்பிரிவை வலியுறுத்துவதாகலானும் என்க.

   இனி, விழுப்பத்து என்பதற்கு 'உத்தமமாகிய பத்து' என்று பொருள் கூறிச் சமயஞ்சார்ந்து விளக்குவதும் ஏற்புடைத்தன்று.

2. **விழுப்பத்து வேண்டும்** -- அப்பெருமைக்குரிய நீத்தலும் தலைசிறந்த ஒரு நோக்கத்தின் பொருட்டாதல் வேண்டும். 'பெருமையுடையவர் ஆற்றுவார்' (975) எனப் பெருமை அதிகாரத்தும் வலியுறுத்துவார்.

3. **பனுவல்** -- பொதுவாக நூல்கள் எனப் பொருள்படாது, அறிவு நூல்களைச் சுட்டும் சிறப்புச் சொல், ஈண்டு அறிவு நூல்களின் ஆசிரியர்களைச் சுட்டியது. 'பகுத்துண்டு' (322) என்பதினும் இவ்வுத்தி பின்பற்றப்பெறுவது காண்க. பஞ்சினால் நூற்கப்பெறுவது நூலாவது போல், அறிவினால் நூற்றலும் நூல் (பொத்தகம்) ஆயிற்று. அதே போலும் பன்னலால் (பஞ்சினால்) நூற்கப்பெறுவதும் பனுவலாயிற்று. இனி, அதன் மேலும், பன்னுதல் - பல வகையிலும் ஆராய்ந்து தெளிதல் என்னும் பொருளடிப்படையில், பனுவல் அவ்வாறு செய்த நூலைக் குறித்தது என்க. இச்சொல் இந்நூலுள் இவ்வொரே விடத்தில் பயலப்பெற்றதும் இதன் சிறப்பையுணர்த்தும் என்க.

4. **ஒழுக்கம்** - 'ஒழுகு' என்னும் வேரடியாகப் பிறந்த சொல்.

   ஒழுகுதல் -- நீர் மேலிருந்து ஒழுக்கொழுக்காய்க் கீழிறங்குதல். அஃது அளவானும் நிறையானும் நேர்மையானும் ஒரு படித்தானதால், அதனின்று ஒழுக்கப்பொருள் கிடைத்தது என்க.

5. **நீத்தல்** - இருந்து துறத்தல். இருத்தல் உலகியலளவான் இல்லறத்தின்கண் அறத்தொடு பொருந்தியிருந்து துறத்தலாம். இராது நீத்தல் இயலாதாகலின்.

- இதில், அரிதின் முயன்று தந்நலந் துறந்தாரது பெருமையும், துறவதிகாரத்தான் துறவினது பெருமையும் கூறப்பெற்றன.

6. பொதுவாக உயிர்களனைத்தும், சிறப்பாக மாந்தர் அனைத்துக் கூறினரும் தவிராது நசையுற்று நாட்டங்கொண்டு அவற்றுக்காகவே வாழும் ஐம்புல இன்பங்கள் அனைத்தையும் தவிர்ப்பது இயற்கைக்கு மாறான செயலாக இருப்ப, அவ்வுணர்வை மேற்கொள்ளும் மாந்தப் பிறவியினராகிய ஒருவர், அந் நீத்தலை மேற்கொள்வது, ஏதோ வாழ்வியலின்பாற் கொண்ட வெறுக்கையினாலன்று, அதனின்று சிறந்த ஒரு நோக்கத்தினால் இருத்தல் வேண்டும் என்பதே பெருமைக்கு உரியதாகும் என்றும், இதுவே அது பற்றிய அறிஞர்களின் கருத்தாகும் என்றும் அல்லாக்கால் அஃது அத்துணைப் பெருமைக்குரியதில்லை என்றும் உறுதி கூறினார் என்க.

o

உஉ. துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து இறந்தாரை எண்ணிக்கொண் டற்று. 22

பொருள் கோள் முறை: இயல்பு

பொழிப்புரை: *(அவ்வாறு மேற் சொன்ன அளவில் தங்களைப் பொதுமை அற நோக்கத்திற்காக ஈடுபடுத்திக்கொள்ளும் எண்ணத்தில்)* இல்லறம் முதலிய இன்ப நாட்டங்களைத் துறந்தவர்களின் பெருமைக்கு எடுத்துக்காட்டுக் கூறின், இவ்வுலகத்து இதுவரை பிறந்து இறந்தவர்களை எண்ணிப் பார்த்து, அவர்களுள் நினைவால் கொள்ளப்பட்ட தன்மையினரைப் போல்வது.

சில விளக்கக் குறிப்புகள்:

1. **பெருமை** – விளக்கம் முன்னர்க் கூறப்பெற்றது.
2. **துணைக் கூறின்** -- சான்றாக, எடுத்துக்காட்டாக, ஒப்பாக, இணையாகக் கூறின்.

3. **வையத்து இறந்தாரை** -- இவ்வையத்தின்கண் இதுவரை பிறந்து மறைந்தாரை.

4. **எண்ணிக் கொண்ட அற்று** – அவர்களை எண்ணிப் பார்த்து, அவர்களுள் நினைவால் கொள்ளப்பெற்ற தன்மையுடையவரைப் போல்வது. என்னை? இவ்வுலகத்து இதுகாறும் பிறந்து இறந்தாரை எவராலும், எத்தகையர், எத்தன்மையினர், எவரெவர் என்று எண்ணிப் பார்த்தல் இயலாது. ஆனால், அவர்களுள் இவ்வையத்து மக்களால் காலங்காலமாக நினைவில் கொள்ளப்பெறுவோர் ஒரு சிலராவர். அத்தகையோர் இவ்வாறு மக்கள்நலங் கருதி அறமேற்கொண்ட அறவோரும் துறவோரும் அறிவரும் என்க. எனவே அத்தகைச் சான்றோரே துறந்தார் பெருமைக்கு எடுத்துக்காட்டாக நிற்கும் தன்மையுடையவர் என்றார். பிறரெல்லாரும் பிறந்தும் பிறவாரே போல் சுவடின்றித் தேய்ந்தாராகலான், பெருமைக்குரியராகார் என்க.

-- இனி இதற்கு அத்துறவோரது பெருமை 'இவ்வுலகத்து இதுவரை பிறந்து இறந்தாரை எண்ணிக் கணக்கிடுவதைப் போல்வது' என்று கூறி, 'அது போல் கூறுவதற்கு இயலாதது' என்று முடித்துப் பொருள் கூறுவது பொருந்தாது. 'இயலாத ஒன்றைத் துணைக் கூறின்' என்று கூறார் ஆகலானும், அவ்வியலாத தன்மைக்கும், பிறந்திறந்தாரை எண்ணிக்கொள்வதென்னும் உவமை சிறுபிள்ளைத்தும் நகைப்பிற்குரியதும் ஆகலானும், இனி, அத்தகு செயலை 'எண்ணிக் கண்டற்று' என்னாமல், 'எண்ணிக் கொண்டற்று' எனக் கூறினார் ஆகலானும், அப்பொருள் புன்மையானதும் பொருந்தாததுமாம் என்க. இதற்குப் பாவாணர் பொருளும் இதன்வழித்தாம் என்க.

-- இனி, இதற்கு, 'ஒழுக்கத்து நீத்தார் வழிநின்று, அவரால் இயக்கப்படும் துறவோரின் பெருமையை அளந்து மதிப்பிடுவதானால் (அது), நிலவுலகிலே பிறந்து வாழ்ந்து இறந்துவிட்ட பலதலைமுறை உயிர்களையும் எண்ணித் தொகைப்படுத்தியது போன்ற அவ்வளவு பெரிய அளவினது ஆகும், என்னும் அறிஞர் அப்பாத்துரையார் பொருளும் மருளினதேயாம் என்று விடுக்க.

-- எனவே, இறந்தாருள் ஒருசிலர் வையத்தின் நினைவுக்கு உளராதல் உண்மையாவது பற்றியும், அவர்கள் அத்தகைய அறமேற் கொண்டு தந்நலம் துறந்தோராக விருப்பதும் உண்மையாம் பற்றியும், இறந்தாரை எண்ணி, அவர்களுள் நினைவிற் கொள்ளப்பெற்றவர் தன்மை போல்வது என்பதே அறிவுப் பொருத்தமும் இயல்புப் பொருத்தமும் உடைய பொருள் என்றும் இதுவே பொருந்துவதென்றும் கொள்க.

அவ்வாறு எண்ணிக்(நினைவிற்) கொண்டவர்களுள் மாவீரர், புத்தர் முதலாயினார் நூலாசிரியர் காலத்தும், ஏசு முதலாயினார் அவரது பிந்திய காலத்தும் நிற்றல் காண்க.

o

உஉ. இருமை வகைதெரிந்து ஈண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு. 23.

பொருள் கோள் முறை: **இருமை வகை தெரிந்து, ஈண்டு அறம் பூண்டார் பெருமை உலகு பிறங்கிற்று.**

பொழிப்புரை: *(இயற்கை இயங்கியலின் படி, இங்குள்ள அறிவறி பொருள்கள், உணர்வறி பொருள்கள், புலனறி பொருள்கள் ஆகிய நுண்மையும் திண்மையும், பொதுவும் சிறப்பும் வாய்ந்த) பொருள்கள் அனைத்திலும் அமைந்துள்ள இரண்டிரண்டு வகைத் தன்மைகளையும், அவற்றின் மெய்ப்பயன்களையும் ஒருவர் அறிவால் தெரிந்துணர்ந்து, அவற்றுக்கிடையில் அறவாழ்வே பெரிதென்று தெளிந்து, தேர்ந்து, அதை மேற்கொண்டவரின் பெருமையே உலகின்கண் ஒளிபெற்று விளங்கும் தன்மையுடையது.*

சில விளக்கக் குறிப்புகள் :

1. **இருமை வகை.... பூண்டார்:** *இயற்கை இயங்கியலின் படி, இவ்வுலகத்திலுள்ள அறிவால் அறியப்பெறும் நுண்பொருள்களும், உளத்தின் உணர்வினால் அறியப்பெறும் நுண்பொருள்களும் ஐம்புலன்களால் அறியப்பெறும் பருப்பொருள்களும் இரண்டிரண்டு வகைகளாகவே அமைந்துள்ளன.*

   அவ்வாறு அமைந்துள்ள இரு வகைகளையும் அவற்றின் இயல்புகளையும் பயன்களையும் ஒருவர் தெரிந்து கொண்டு, உணர்ந்து, இவ்வுலகில் இன்னின்ன நிலையில் இஃதிதுதான் சிறந்தது எனத் தெளிந்து, அதுபோல் மாந்த வாழ்க்கையிலும், பிற துய்ப்பு வகை வாழ்க்கைமுறை யாவற்றினும், பொதுநலம் பேணும் அறவாழ்க்கையே சிறந்தது என்று தேர்ந்து, அதை மேற்கொண்டவர் என்க.

   இவ்வாறு உலகப் பொருள்களின் இருவகைத் தன்மையாய் விளங்கும்

நிலைகளைத் தெரிந்து, உணர்ந்து, தெளிந்து, தேர்ந்து மேற்கொள்ளாவிடின், அறவாழ்வின் சிறப்பு நிலைகள் விளங்கா என்றார்.

இவ்வாறன்றிப் பிறரைப் பார்த்தோ, பழகியோ, மன வெறுக்கை கொண்டோ, கரவாகவோ, வஞ்சகமாகவோ, கனவுத் துய்ப்புக்காகவோ மேற்கொள்ளும் அறவாழ்வு சிறப்புக்குரியதன்று என்றார்; அவை நீர்த்த தன்மை உடையனவாகலின்.

இங்கும் அறம் துறவாகாது. தந்நலமும் ஐம்புல அவாவுதலும் தவிர்த்த, பொதுநலம் கருதும் நெறிமுறை வாழ்வாம் என்க.

2. **'இருமை வகை தெரிந்து'** என்பதற்குப் பிறப்பு, வீடு என்னும் இரண்டனது துன்ப இன்பக் கூறுபாடுகளை ஆராய்ந்து அறிந்து - என்னும் பரிமேலழகர் உரை, வேதமதக் கொள்கை தழுவியதாகலானும், அது, பிறப்பு துன்பம் என்று, உலகியலை இழித்துக் கூறும் தன்மை கொண்டதும், வீடு, இன்பம் என்று சென்று கண்டார்ப் போல் கூறும் காணாத கற்பனைக் கருத்தும் ஆகலானும், பொருந்துவ தன்று என விடுக்க. என்னை? இம்மை வகையை முழுவதும் அறியப்படா நிலையில், மறுமை வகையை அறியுமாறு யாங்ஙன்?

பிறப்பையும் இயற்கை வாழ்வியலையும் துன்பம் என்பது ஆசிரியர் கருத்தாமெனில், அவர் அறங்கூறுவதற்குப் பயனின்றாம் என்க. என்னை, ஒருவர் துன்பத்திற்குப் பாதை காட்டார் ஆகலின்.

3. **நுண்மை, திண்மைப் பொருள்கள்:** *(சில எடுத்துக் காட்டுகள்)*

நுண்மைப் பொருள்கள் : அறிவுணர்வு, மனவுணர்வு, எண்ணம், ஆசை, பாசம், வெறுப்பு, விருப்பு, ஒலி, ஒளி, காற்று, காணா ஒலி, கேளா ஒளி.

திண்மைப் பொருள்கள்: பருப்பொருள்கள் - கல், மண், நிலம், உயிரினங்கள் முதலியன

அவற்றுள் உள்ள இருமைத் தன்மைகள்:

பொதுப் பொருள்கள் :

உயிர்ப்பொருள் x உயிரல் பொருள்
இயற்கை x செயற்கை
ஒளி x இருள்; பகல் x இரவு

சிறப்புப் பொருள்கள் :

உயர்திணை x அஃறிணை

ஆண் x பெண்; பேடன் x பேடி.
இல்லறம் x துறவறம்.
இறைமை x நிறைமை.

அறிவுணர் பொருள்கள் :

அறம் x மறம்
நன்மை x தீமை; பிறப்பு x இறப்பு;
நேர்மை x எதிர்மை; தெளிவு x ஒளிவு;
அறிவு x அறியாமை; சிறப்பு x இழிவு;
உண்மை x இன்மை; நன்று x தீது;
உள்ளே x வெளியே; உள்ளது x இல்லது;
ஒழுக்கம் x இழுக்கம், -- முதலியன.

உணர்வறி பொருள்கள் :

அகம் x புறம்;
மெய்ம்மை x பொய்ம்மை; அன்பு x வன்பு;
தாய்மை x சேய்மை; உய்வு x தொய்வு;
விருப்பு x வெறுப்பு; அவா x வெறுக்கை. -- முதலியன.

புலனறி பொருள்கள் :

மென்மை x வன்மை,
அண்மை x சேய்மை; மேல் x கீழ்;
வெண்மை x கருமை; பருமை x சிறுமை;
இரைச்சல் x அமைதி; இனிப்பு x கசப்பு;
உவர்ப்பு x துவர்ப்பு; புளிப்பு x கார்ப்பு;
நுகர்ச்சி x அயர்ச்சி; விழிப்பு x உறக்கம்;
இன்பம் x துன்பம் – முதலியன.

4. இம் மூன்று பாட்டானும் அறம் பூண்டார் பெருமை நிலைகள் உணர்த்தப் பெற்றன.

முதலதில், ஒழுக்கத்தும் விழுப்பத்தும் நீத்தல் பெருமை என்றார்.

இரண்டாவதில், இறந்தாருள் எண்ணப் பெறுபவர் துறந்தாரே, அது பெருமை என்றார்,

மூன்றாவதில், இருமை வகை தெரிந்து அறம் பூணுதல் பெருமை என்றார்.

o

உசு: உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. **24**

பொருள் கோள் முறை :

ஓர் ஐந்தும் உரன் என்னும் தோட்டியால் காப்பான்,
வரல் என்னும் வைப்பிற்கு ஓர் வித்து.

பொழிப்புரை : *ஐம்பொறிகள் ஒவ்வொன்றையும் (அவை எழுச்சியுற்றுப் பொருள்களின் மேலும், அவற்றை நோக்கிய செயல்களின் மேலும், அவாவிச் செல்லும் பொழுது) அறிவு என்னும் கதவினாலே (அவை அவ்வாறு செல்லாமல் அடைத்துத் தடுத்துக்) காத்துக் கொள்பவன். (மக்கள் நலத்துக் குதவும்படி). வருங்காலச் சேமிப்புக் கிடங்கில் இட்டு வைக்கப் பெறும் நல்ல ஒரு விதை போன்றவன்.*

சில விளக்கக் குறிப்புகள்:

1. **உரன்** - *அறிவு, உறுதி, வலிவு என்னும் பொருள்களைப் பருப்பொருளுக்கும், அறிவு, ஊக்கம் என்னும் பொருள்களை நுண்பொருளுக்கும் தரும் ஒரு செந்தமிழ்ச் சொல்.*

   உரன் என்னும் தோட்டி - *அறிவு என்னும் கதவு. இதற்குத் துறட்டி, யானைக்குடாரி என்னும் பொருள் கொண்டும், அதையொட்டி 'ஓர் ஐந்தும்' என்பதற்கு ஐந்து பொறிகளாகிய 'ஐந்து யானைகள்' என்று கொண்டும் இதற்கு முன் பரிமேலழகர் முதல் பாவாணர் வரையுள்ள உரையாசிரியர்கள் அனைவரும் குன்று முட்டிய குருவி போல் இடர்ப்படுவர்.*

   ஐந்து பொறிகளையும் ஐந்து யானைகள் என்று உருவகித்துக் கொள்வது அறத்தவறு. துறட்டியோ குடாரியோ 'அங்குசமோ' கை வைத்த பாகன் ஒருவன், ஐந்து யானைகள் மேல் இவரிச்செல்வது, யாங்ஙன்? மேலும், அவை மதங்கொண்டு அடங்காது அலைக்கலுறும் பொழுது, அவ்வைந்தின் மேலும் தாவித் தாவிப் படர்ந்து அவற்றை அப்பாகன் அக்குடாரி கொண்டோ துறட்டி கொண்டோ அடக்குவதும், காப்பதும் எவ்வாறு? இவ்வாறு பொருள் கூறுவது நகைப்பிற்கன்றி உலகியற்குப் பொருந்தாது என்க.

   இனி, 'ஓர் ஐந்தும்' என்பதற்கு, ஒரு யானை என்று பொருள் கொண்டு, அதன் ஐந்துறுப்புகளாகிய நான்கு கால்கள், ஒரு துதிக்கை என்று உருவகித்துக் கொள்ளுதலும் பொருந்தாது என்க. ஏனெனில்

அதன் ஐந்துறுப்புகளும் இணைந்து செயல்படுவது போல், பொறிகள் ஐந்தும் ஒன்றாக இணைந்து செயல்படுவதில்லை. கண் ஒன்றைக் காணவிழையும் பொழுது, காது வேறொன்றைக் கேட்கவும், வாய் மற்றொன்றைச் சுவைக்கவும், மூக்கு இன்னொன்றை முகரவும், உடல் அடுத்தவொன்றின் மேற்படர்ந்து நுகரவும் விழையுமல்லவா? இவை ஒவ்வொன்றையும் அறிவுகொண்டு தனித்தனியே போராடுதலை, யானைப் பாகன் துறட்டி கொண்டு யானையை அடக்குதற்குப் பொருத்தியுரைப்பது எங்ஙனம்? எனவே ஓர் யானை உருவகமும் பொருந்தாதென ஒதுக்குக.

இவையிவ்வாறாக, தோட்டி என்பதற்குக் கதவு என்று பொருள் கொள்வதே மிகப் பொருந்துவதாம் என்க.

என்னை, பொறிகளின் ஐந்து வாயில்களையும் தேவையில்லாவிடத்து, அறிவு என்னும் கதவை அடைத்துக் காத்துக்கொள்வதே இங்குக் கூறப்பெறுவதாகலின், அதுவே சாலப் பொருந்தும் உருவகமாம் என்க. நூலாசிரியரே நிறை என்னும் கதவை நாணம் என்னும் தாழ் அடைத்து நிற்பதாகக் கூறுதல் காண்க. (1251)

தோட்டி - கதவு. தொல் - தொடு - தொடுப்பது - இணைத்து வைத்திருப்பது - மூடி வைத்திருப்பது.

தொல் - தொலி - தோல் - விதை, காய், கனி, மரம் இவற்றையும், உடம்பையும் பொதிந்து மூடி, காப்பாக வைத்திருக்க உதவுவது.

தொல் - தொலு - தொடு - தொடி - வளையல்கள் கழன்று விழாமலிருக்க, முன் கையில் காப்பாக, கைப்பிடிப்பாக அணியும் வளை; அவரை புளி முதலிய விதைகளை - விளா, முந்திரி, முதலிய காய்களை, முட்டை ஆகிய இவற்றைத் தொடி - தோடு - மூடிக் காப்பாக வைத்துள்ள சிறிது வலிவான தோல்.

தொடி - தொட்டி - தேங்காயின் மேல் மூடியிருக்கும் கனமான தோடு - சிரட்டை (கொங்கு நாட்டு வழக்கு) நீரை தேக்கிக் காத்து வைக்க உதவும் நீர்த் தொட்டியையும் குறிக்கும்.

தொட்டி - தோட்டி - இல்ல வாயிலை அது போலும் திறப்புகளை மூடிக் காப்பாக வைக்க உதவும் கதவு.

தோட்டி - இன்னும் ஆற்று நீரைத் தடுத்துக் காத்து வைக்க உதவும் அணை, சுடலையைக் காக்கின்றவன் என்று காத்தல் பொருளில் பிறவற்றையும் குறிக்கும் என்க.

2. **ஓரைந்தும்** – ஓர் ஐந்தினையும் - ஐந்து பொறிகள் ஒவ்வொன்றையும். உரையாசிரியர் பிறர், ஐந்து எனும் சொற்கு மட்டும் ஐந்து பொறிகள்

என்று பொருள் கண்டு, 'ஓர்' என்னும் சொற்குப் பொருள் காணாதது குறை. ஓர் ஓர் ஐந்தும் (ஒவ்வோர் ஐந்தும்) என்பது ஓரைந்தும் என்று மருவி நின்றது.

3. காப்பான் – தேவையில்லாதவிடத்து, அப்பொறிகளை அறிவென்னும் கதவால் அடைத்துக் காப்பான். நல்ல நோக்கத்திற்குச் செயல்படுமாறு பொறிகளைத் திறந்து, அல்ல நோக்கத்திற்குச் செல்லுங்கால் அடைத்துக் காக்க வேண்டுவது அறிவு என்றார். 'சென்ற விடத்தான்' என்னும் குறளிலும் (422) இக்கருத்தை வலியுறுத்துவார்.

இனி ஐம்பொறிகளை அவிப்பது (6), (694), அடக்குவது (126) முதலிய நிலைகள், அவற்றைத் 'தீது ஒரீஇ நன்றின் பால் உய்த்துக் காப்பதை' உணர்த்துமேயின்றி, அவற்றின் உணர்வுகளையும் இயக்கங்களையும் அறவே நீக்கி அல்லது ஒழித்து விடுதலையன்று. என்னை? அவையில்லா உடலியக்கம் ஏது என்க.

ஐம்பொறிகளை நற்பயன் நோக்கிச் செலுத்தியும், தீப்பயன் நோக்கிச் செலுத்தாமலும், அவ்வப்பொழுது அறிவுத்தடை கொண்டு காத்துக் கொள்ளும் ஒருவன், தன் அறநோக்கத்துச் சிறந்து நிற்பானாகலின் அவனின் விளைவுகளே எதிர்வரும் மக்களினத்துக்குப் பயன்படும் என்றார்.

4. வரன் -- வரல் - எதிர்த்து வரவிருக்கும் காலம். எதிர்காலம் ன், ல் போலி (வரல் + ஆறு - வரலாறு) இச் சொல் மிகப் பிந்தியது எனினும் ஆசிரியர் காலத்து வரல் என்னும் சொல்லே வரலாறு குறித்ததாதல் வேண்டும்.) இனி வரன் என்பதற்கு மேல் என்றும், மேலுலகம் என்றும் பரிமேலழகர் பொருந்தாப் பொருள் கூறினார். அவரையடுத்த பிறர் பலரும் வழிமொழிந்தார். பாவாணரோ புரம்-மேல்; புரம் - பரம் - வரம் - வரன் - மேலுலகம், வீட்டுலகம் என்று பரிமேலழகர்க்கு இட்டுக்கட்டி அரண் செய்தார்.

5. வைப்பு -- எய்ப்பில் வைப்பு - சேமிப்பு. எதிர்காலத்திற்குப் பயன் பெறுவதற்காகச் சேமித்து வைப்பது பணங்காசாகவும், பொன்பொருளாகவும், தவசங்களாகவும், கூலங்களாகவும் (பருப்பு முதலிய தின்பொருள்கள்) (தானியங்களாகவும், - அரிசி முதலிய உண்பொருள்கள்) அருங்குவையாகவும், விளைவித்துகளாகவும் ஆகலாம். இங்கு ஓரைந்தும் காத்து அறவொழுக்கம் பூண்டவன் எதிர்காலப் பயனுக்கு நல்ல விதை போன்றவன் என்பார்.

6. ஓர் வித்து -- நல்லதொரு விதை. தேர்ந்தெடுத்து வைக்கப்பெற்ற ஒரே நல்விதை. பிற பொருள்கள் சேமித்த அவ்வளவில் பயன்

தருவன. நல்வித்து - மேலும் பல நல் விளைவுகளுக்கு ஆக்கமாக இருத்தலின் அவற்றினும் இதையே மேம்படுத்திக் கூறினார். நீத்தல், பிறர்க்குத் தன்னையழித்துக் கொள்ளும் விதை போலும் பயன் படுதல் வேண்டும் என்று குறிப்புக் காட்டினார். வித்து - ஈகத்திற்கு உருவகம். 'தம்மின் தம் மக்கள்' என்னும் குறளிலும் (68) இதை வழிமொழிந்து வலியுறுத்தினார். 'இது வீட்டு நிலத்திற் சென்று முளைத்தலின் 'வித்து' என்றார்.' என்னும் பரிமேலழகரது கூற்று வெற்றுரை. வீட்டுலகம் (மோட்சம்) என்பதொன்றும் நிரயம் (நரகம்) என்பதொன்றும் இவ்வுலகத்தினும் வேறாம் எங்கோ உள்ளன வென்பது அறிவியலுக்கும் ஏன், மெய்யறிவியலுத்திக்குமே பொருந்தாத கற்பனைச் செய்தி; மதத்திற்கு மட்டிலும் அதுவும் வேத மதத்திற்கு மட்டுமே பொருந்திய செய்தி. இனி, வீட்டுலகம் செல்வார் வினையின்றி இன்பத் துய்ப்பொன்றே கொண்டிருப்பர் என்பதும், அங்கவர் பசி, விடாய் போலும் எவ்வகை உடல் வருத்தங்களுமின்றி இருப்பர் என்பதும், அது தொடர்பான கற்பனைகளுள் ஒன்றாயிருக்க, அங்கு உழுநிலம் உள்ளதென்பதும், அங்கும் வேளாண்மை நடைபெறுதலும் உண்டென்பதும், அதற்கு இங்கிருந்தும் வித்துகள் போக வேண்டுமென்பதும் அம் மூடக் கற்பனையுள்ளும் புகுத்திய முரண்பட்ட புல்லிய நகைக் கூறாகும். இது மலத்தில் சாணி கலந்தது போலும் மடத்தில் மூடங்கலந்த கூற்றுமாம் என்று இகழ்க.

இக்குறளடிக்கு, அறிஞர் அப்பாத்துரையாரும், 'வருங்கால இன்ப வாழ்வாகிய இன்பப்பயிர் வளத்துக்குரிய அரிய குமுகாய விதைப் பண்பினர்' என்று தம் மணி விளக்கவுரையுள், ஆசிரியர் கருத்தின் புதைமணியைத் துலக்கினார். அவ்வுரை நூல் நழுவிய மணிபோல், மூலக் கோட்டினின்று சிறிது நெகிழ்ந்திருப்பினும், அவரின் உள்நாடிக் கண்டறியும் உணர்வு பாராட்டுக்குரியது.

O

உரு. ஐந்துவித்தான் ஆற்றற் ககல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலும் கரி. 25

பொருள் கோள் முறை:

ஐந்து அவித்தான் ஆற்றற்கு அகல் விசும்புஉளார் கோமான், இந்திரனே கரி சாலும்.

பொழிப்புரை: ஐந்து புலன்களையும் அவற்றின் வேகத்தை அடக்கிப் பக்குவப்படுத்தியவன் ஆற்றலுக்கு, அகன்ற வானத்தில் உள்ளவர்(களாகக் கருதப் பெறுவோர்)களின் அரசன் (எனக் கொள்ளப் பெறும்) இந்திரன் என்பவனே சான்றாக அமைவான்.

சில விளக்கக் குறிப்புகள்:

1. **அவித்தல்** - அடக்குதல்; பொறிகளின் வேகத்தை அடக்கி நெறிப்படுத்துதல் அல்லது பக்குவப்படுத்துதல். ஆற்றல் இல்லாமலே செய்தலன்று. சென்ற குறட்பா உரையினும் இது தொடர்பான விளக்கங்களைக் காண்க.

2. **ஆற்றற்கு** - ஆற்றலுக்கு. பரிமேலழகர் உள்ளிட்ட சிலர் 'ஆற்றல்' என்று பாடங்கொண்டு, 'நான்காம் உருபு செய்யுள் விகாரத்தான் தொக்கது' என்பர். 'ஆற்றற்கு' எனவரினும் புணர்ச்சியான் யாப்புப் பிழைபடாதாகலின், பொருளுக்குத் தக 'ஆற்றற்கு' என்றே கொளப்பெற்றது.

3. **அகல் விசும்புளார் கோமான்** - அகன்ற வானத்தின்கண் உறைவதாகக் கருதப்பெறும் தேவர்களின் அரசன். இக்கருத்து ஆரியக் கற்பனை ஆதலாலும், அக்காலத்திலிருந்து அழுத்தமாக மக்களிடம் பற்றிய அறிவியலுக்குப் புறம்பான, வேதமதம் சார்ந்த மூடநம்பிக்கை யாதலாலும், ஆசிரியர் காலத்து அறிவியல் நோக்கற்ற உணர்வால் அவரும் தவறாகக் கொண்ட கருத்திதுவெனலாம். 'அரிய கற்று' என்னும் (503) குறளில் ஆசிரியர் கூற்றையும் ஓர்க.

4. **இந்திரன்** - இந்திரம் எனும் ஒரு பதவியின் பெயரால் அமைந்த பெயர். ஆரிய வழியினது.

   நூறு அசுவமேத யாகங்களைச் செய்து அப்பதவியைப் பெறுவோன், இந்திரன் என்று அழைக்கப் பெறுவதாக ஆரியத்தொன்மங்கள் (புராணங்கள்) கூறும்.

   ஒரு முறை இப்பதவி பெற்றவன் அதில் நிலைத்திருக்க வேண்டி, மேலும் ஒருவர், தம்மைத் தவிர்த்துவிட்டு அப்பதவியைக் கைப்பற்றுவான் வேண்டி, அவ்வாறு கடுமையான தவங்களை மேற்கொள்ளின், இவன் அவற்றைப் பலவகையாலும் தடுப்பான் என்பதும் அத்தொன்மங்களால் கூறப்பெறும் கருத்து.

   இவன் பல திருவிளையாடல்களில் ஈடுபட்டதாக உள்ள கதைகளை இராமாயணம், பாரதம், பாகவதம், இரகுவம்சம், காந்தம், முதலிய ஆரியச் சார்பு நூல்களிலும், திருவிளையாடல் புராணம், காஞ்சிபுராணம் முதலிய தமிழ்ச் சார்பு நூல்களிலும் கண்டுகொள்க.

5. **ஆற்றலுக்குச் சாலும் கரி** - நூறு அசுவமேத யாகங்கள் செய்கின்ற ஆற்றலுக்கு, இந்திரன் இங்குச் சான்றாகக் கூறப்பெற்றான் என்க.

-- மேலும், இதில் இந்திரனது ஆற்றலைக் குறித்தாரேயன்றி, அவனை இழிவுபடுத்தும் கதைக் குறிப்பிருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறிருப்பின் இந்திரனை 'அகல் விசும்புளார் கோமான்' எனச் சிறப்பித்திரார்.

தொன்மக் கதைகளின்படி அல்லது கற்பனை நம்பிக்கைகளின்படி, ஐந்தவித்த பெருமைக்குரியவன் அவனாகவும் கொள்ள இடமில்லை. இந்திரனுக்குப் பலவகை ஐம்புலத் துய்ப்புகள் இந்திரவுலகத்தில் உளவாகவே கதைகள் கூறுகின்றன. இந்நிலையில் அவன் ஐந்தவித்த நிலையினன் என்பது எவ்வாறு பொருந்தும்?

அத்துடன் 'ஈண்டுத் தன்பதம் நோக்கித் தவம் செய்யும் நீத்தார் மாட்டுத் திலோத்தமை முதலிய தெய்வ மகளிரை விடுத்து, மற்று அத்தவம் அழித்துத் தன் தவம் அழியாமை நிலை நிற்கையானும், தனது பதம் விரும்பாமையானும் தானே சான்றாக அமையும்' என்னும் காலிங்கர் விளக்கமும் கற்பனை மேல் அமைந்த கற்பனையே.

இனி, சமணரின், சாக்கியரின் பாண்டு கம்பளி நடுக்கக் கதையும் இதற்குப் பொருந்துமாறில்லை. கம்பளி நடுக்கத்தால் அவன் அஞ்சுவதாகக் கூறுவது அவன் அறிவுக்கும் தவ வலிமைக்கும் பழுது சாற்றுவதே!

மேலும், இத்தகைய அடிவலுவற்ற ஒரு தொல் கதைக்கு ஐந்தவித்தான் ஆற்றலைப் பொருத்திக் கூறியதாகக் கொள்வது நூலாசிரியரின் மெய்யறிவுக்கு இழுக்கையே சாற்றுவதாகும். அத்துடன் ஒரு தொன்ம (புராண)க் கதையின் அடிப்படையில் நீத்தார்க்குப் பெருமை தரும் இக்குறளை எழுதியிருப்பார் என்று கருதுவதற்கும் இடமில்லை..

இவையெல்லாம் தவிர்த்து, எஞ்சியுள்ள மேரு மந்திரக் கதையினும் இந்திரன் கரியாவதற்கு வாய்ப்பில்லை. இவ்வாற்றலுக்கு உலகியல் சான்றாக எவரையும் கூறாது, தேவியல் சான்றாக இந்திரனைக் கரி கூறியது, மக்களிடத்து நன்கு பரப்பப்பெற்று அறிமுகம் ஆகிய ஒரு கதையே, ஆற்றல் கருத்தை நன்கு புலப்படுத்தும் என்று ஆசிரியர் கருதியதால் என்க.

இது, 'வடையும் காக்கையும்' 'ஆடும் ஓநாயும்', 'நரியும் கொடி முந்திரியும்', 'அரிமாவும் நான்கு எருதுகளும்', 'விறகு வெட்டியும் மூன்று கோடரிகளும்' முதலிய கதைகளை எடுத்துக்காட்டாகக் கூறுதல் போல், ஆசிரியர் இவ்விந்திரனை உவமை கூறியதும் என்க.

எனினும் ஆசிரியர் இந்திரனைக் கூறியது பொருந்துவதன்று என்க.

என்னை? ஆரியக் கதைப்படியே, இந்திரன் ஐந்து பொறிகளையும் அவித்து யாகஞ் செய்து இந்திரப் பதவி பெற்றனனேனும், அதைத் தொடர்ந்து கடைப்பிடியாதவன்.

அடுத்து, கௌதம முனிவனின் மனைவி அகலிகையைக் கரவடமாகக் கூடி, அது வெளிப்பட்டு, அம்முனிவனால் சாவத்துட்பட்ட நிகழ்வைப் பரிமேலழகர் எடுத்துக் காட்டி, 'அவித்தவனது ஆற்றல் உணர்த்தினான் ஆகலின், இந்திரனே சாலும் கரி என்றார்', என்றதும் பொருந்துவதன்று என்க. என்னை? அக் கௌதமரும் ஐந்தவித்த ஆற்றல் இழந்தவராகி இல்லறம் மேற்கொண்டதும், இந்திரனின் களவை முன்னரே விளங்கிக்கொள்ளாமற் போனதும் அவ்வாற்றலற்ற தன்மையையே காட்டும் என்க.

O

உகூ செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலா தார். 26

பொருள் கோள் முறை:

பெரியர் செயற்கு அரிய செய்வார்;
சிறியர் செயற்கரிய செய்கலாதார்.

பொழிப்புரை: *(அறிவு வழி, மனவழி, உடல்வழியான மூவுணர்வுத் தூண்டற் செயல்களுள்) செய்வதற்கு மிகவும் அரியனவும், உலகோர்க்கு உய்வு தருவனவும் ஆன (அறிவு வழி மனவழி அறச்) செயல்களையே எப்பொழுதும் தேர்ந்து செய்பவர்கள் பெரியவர்கள். அவ்வாறு செய்ய இயலாமல் தமக்குமட்டுமே நன்மை தருவனவாகிய எளியவான (உடல்வழிச் செயல்களையே சிந்தனை, அறிவு முயற்சியின்றிச்) செய்பவர்கள் சிறியவர்கள்.*

சில விளக்கக் குறிப்புகள்:

1. **செயற்கு அரிய** - *செய்வதற்குக் கடினமான, அருமையான, பிறர் எளிதாகச் செய்ய இயலாச் செயல்கள்.*

   இவ்வாறு செய்வதற்கு அருமையான செயல்கள் அறிவின் வழிப்பட்ட செயல்களும் மனத்தின் வழிப்பட்ட செயல்களும் ஆம். அவை இணைந்து நடைபெறும் செயல்களே நீத்தாருக்குரிய

அறவழிச் செயல்களாம். அவை, உலக மக்கள் உய்வுக்காகச் செய்யப் பெறுபவையாகலின், துன்பும், துயரும் உடல் வருத்தமும் மிகுந்தவையும், தந்நலப் பயன் குறைந்தவையும் ஆம். எனவே, அவற்றை எளியார் அன்றிப் பெரியார் மட்டுமே செய்குவர். இதில், சித்து அறிந்தவர்தம் திறன்களைச் சிலர் சுட்டுவர். அவர்கள் துறவின் பெருமைக்குரியர் அல்லராகலின், துறந்து அரிய செய்வாரையே ஈண்டுக் குறித்தார் என்க. 'பெருமைக்கும்' (505) 'பெருமை உடையவர் (975) என்னும் குறட்பாக்களிலும் இக்கருத்தை வேறு வகையான் வலியுறுத்துவார்.

2. **செய்வார் பெரியர்** - செய்பவர் பெரியவர். - இதில் கூறப்பெறும் பெரியார் என்னும் குமுகாயப் பெரியவர்களுக்கு நூலாசிரியர் மிக உயர்வு தரக்கூறுவர்.

பொருட்பாலில் **'பெரியாரைத் துணைக் கோடல்'** என்னும் ஓர் அதிகாரத்தையும், **'பெரியாரைப் பிழையாமை'** என்னும் மற்றோர் அதிகாரத்தையும் எழுதுவர். இவையன்றி, ஆங்காங்கே, அவர்தம் பெருமையைச் **'சான்றாண்மை'** அதிகாரத்தாலும், **'பெருமை', 'மானம்', 'நாணுடைமை'** அதிகாரங்களிலும் கூறுவர். அவர் தன்மையை மேலும் விரிவாகப் **'பண்புடைமை'** அதிகாரத்துக் கூறுகையில், **'பண்புடையார்ப் பட்டுண்டு உலகம்'** என்று பெருமை சாற்றுவர். அவர்களைப் பின்பற்றச் சொல்லிக் குமுகாயத்தை மீமிசைக் குமுகாயமாக்க எல்லாருக்கும் அறிவுறுத்துவர்.

இந்நிலைகளுக்கு மாறுபட்டு இயங்குவாரைக் 'கயவர்' என்று 'கயமை' அதிகாரத்துள் இழித்துக் கூறுவர்.

3. **செய்கலாதார்** - செய்ய இயலாதவர்கள், அல்லது அதன் கடுமை கருதிச் செய்ய விரும்பாதவர்கள்.

4. **செயற்கு அரிய அறிவின்வழிப்பட்ட செயல்கள்:**

சில எடுத்துக் காட்டுகள்.

1. அறிவியல் ஆய்வுகள், செயல்கள்
2. உலக நாடுகள் தொடர்பான ஆய்வுகள், வரலாறு முதலியவற்றில் ஈடுபடல்.
3. அரசியல், பொருளியல், மக்களியல் தொடர்பான சீர்திருத்த முயற்சிகள், ஆளுமைத் திறப்பாடுகள்.
4. அறிவு, அறிவியல், மருத்துவயியல், மக்களியல், வரலாறு, நுண்கலை, அரசியல், பொருளியல், இனவியல், உயிரியல், மொழி, பண்பாடு முதலிய ஆய்வு நூலாக்கங்கள் முதலியவை.

5. செயற்கு அரிய மனத்தின்வழிப்பட்ட செயல்கள்:

சில எடுத்துக்காட்டுகள்:

1. மக்கள் மனவியல், குமுக மனவியல், தொடர்பான ஆய்வுகள்.
2. மன அறிவியல், மன மருத்துவவியல், (தவம், ஓகம், ஊழ்கம் பொறிகளொடுக்கம்) பகுத்தறிவியல், மெய்ப்பொருளியல், மாந்தவியல், கற்பனையியல், மதவியல் போன்றவற்றில் ஆய்வும் ஈடுபாடும்.
3. அறத்தொண்டு, மதவியல் தொண்டு, பொதுத் தொண்டு, ஈகைநலன்கள் முதலியவை.

6. உடல்வழிப்பட்ட எளிய செயல்கள்: வணிகம், கலை, உழவு, தொழில், உடல் திறன்கள், மற்றும் பொருளீட்டத்திற்கான முயற்சிகளும் அவற்றின் விளைவுகளும்.

7. முன்னர்க் கூறப்பெற்ற கடுமையான அறச்செயல்களைச் செய்ய மாட்டாதவர்கள், இயலாதவர்கள், விரும்பாதவர்கள், தந்நலமுடையவர்களாதலின் சிறுமையுடையவர்கள் என்றார்.

O

உஎ, சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே உலகு. 27

பொருள் கோள் முறை:

சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்ற ஐந்தின்
வகை தெரிவான் கட்டே உலகு.

பொழிப்புரை : (நம் உடம்பின்கண் உள்ள ஐம்பொறிகளாகிய, சுவையை அறிவதற்குரிய வாய் என்னும் நாக்கு, ஒளியால் விளங்கும் காட்சிகளைக் காணுதற்குரிய கண், ஊறு உணர்வென்னும் தொடு உணர்வுக்கு அடிப்படையாகிய நாடி நரம்புகளைப் போர்த்து நிற்கும் தோலினதாகிய மெய், ஓசையைக் கேட்பதற்குரிய செவி, நாற்றங்களை முகர்ந்து அறிவதற்குரிய மூக்கு - எனும் பிண்டப்பொருள்களின் தன்மைகளாகிய) சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் புலனறிவுகள் ஐந்தினையும், அவற்றின் அண்டப்பெருக்க வகைகளாகிய நீர், தீ, நிலம், வெளி (வான்) வளி (காற்று) ஆகிய ஐந்து பூதப் பொருள்களின் ஆற்றல் உண்மைகளையும்,

அவற்றின் தொடர்பியக்க இயங்கியல், நிலைகளையும் அறிந்து, ஆராய்ந்து, தேர்ந்து, தெளிந்து, உணர்ந்து கொள்பவனிடத்தில், இந்த உலகின் பிற அறிவியக்க நிலைகள் அனைத்தும் விளங்கித் தோன்றும். இந்த உலகும் அவனுக்கு இணையாக இணைந்து இயங்கும். (இவ்வறிவு நிலைகள் அறிந்து கொள்ளும் வாய்ப்பு, தந்நலம் நீத்துப் பொதுமைநலம் மேற்கொண்ட அறவுணர்வாளர்களுக்கே அமையும்.)

சில விளக்கக் குறிப்புகள்:

1. **சுவையொளி ஊறோசை நாற்றம்** - மெய், வாய், மூக்கு, கண், செவி என்னும் பொறிகளின் படிநிலை வளர்ச்சித் தோற்ற வகைகளுக்குரிய, ஊறு, சுவை, நாற்றம், ஒளி, ஓசை யென்னும் புலனுணர்வு வரிசைகளை, சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று செய்யுளமைதி கருதி முறை மாற்றி வரிசைப்படுத்தினர். உயிர்ப்படிநிலை வளர்ச்சி கூறும் 'ஒன்றறிவதுவே' என்னும் தொல்காப்பிய நூற்பாவையும் (1526) ஓர்க.

2. **என்ற ஐந்தின் வகை தெரிவான்** - மேற் கூறிய ஐம்பொறிகளின் உண்மைகளையும், அவற்றின் ஐம்புலவுணர் வுகளின் உண்மைகளையும், அவை சேர்ந்தியங்கும் உடம்பினது தொழிற்கருவிகளின் இயக்க உண்மைகளையும், அவை அண்டத்தின் ஐம்பூதப் பொருள்களின்வழிச் செயற்படுகின்ற தன்மைகளையும், அவற்றிலிருந்து இயங்கும் பேரண்டங்களின் தன்மைகளையும், அவையனைத்துக்கும் மூலமான பொருளின் உண்மையையும், வகைப்படுத்தியுணர்கின்றவன். (இவற்றின் முழுவிளக்கங்களை யெல்லாம் விரிவாகவும் விளக்கமாகவும் இச்சுருக்க நூலின் விரிவாய் வரவிருக்கும் நிறைவுரை நூலுட் கண்டு கொள்க.)

3. **கண்ணே உலகு** - அவனிடத்தேயே இவ்வுலகின் பிற அறிவியக்க நிலைகள் அனைத்தும் விளங்கித் தோன்றும். அஃதாவது அறிதற்காகி நிற்கும். இந்த உலகும் அவனுக்கு இயைபாக இணைந்து இயங்கும். கண்ணதாக - இடத்ததாக - அவனிடத்து உலகு நின்று இயங்கும் என்றது அவன் அறிவு, இயக்க நிலைகளுக்கு இவ்வுலகிலுள்ளார் யாவரும் இயைபுகொண்டு இணையாகியும், துணையாகியும் இருப்பர் என்றதுமாம்.

- கண்ணே - இடத்தே.

கண் + (அ)து > கண் + து > கண்டு > கட்டு (வலித்தல் திரிபு)

கட்டு + ஏ > கட்டே = கண்ணதே - இடத்ததே.

4. இதனால், உலகில் பல்வகை இருப்புநிலை, இயங்குநிலை, திரிபுநிலை,

இறவு நிலை - முதலிய நிலைகளையும் அவற்றின் இணைவு நிலையினையும் நன்கு உணர்ந்த மெய்யறிவினார்க்கே இவ்வுலக மாந்தர் இயைபுகொண்டு இணங்கி நிற்பர் என்பதுணர்த்தினர் என்க. செயற்கரிய செய்வதற்கு இம் மெய்யறிவுணர்வு இன்றியமையாத தாகலின் அதன் பின்னர் இது கூறினார்.

O

உஅ. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டி விடும். 28

பொருள் கோள் முறை : **இயல்பு**

பொழிப்புரை: *(மயக்கமும் அறியாமையும் இன்றி, முழுப்பயனும் விளையும்படி, குறைவில்லாத) நிறைவான மொழிகளைப் பேசும் (ஆற்றல் வாய்ந்த, பொதுமையுணர்வுள்ள) அறநிலை மாந்தர்தம் பெருமையை, இந்நிலவுலகத்தில் (என்றென்றும்) நிலையாகவும், (எல்லார்க்கும் எளிதே புலப்படாமல், முனைவார்க்கே விளங்கும்படி) பொருள் மறைவாகவும் நின்றிலங்கும் (அவரின் பொய்யாத) வாய்மை மொழிகள் (அடையாளம்) காட்டிவிடும்.*

சில விளக்கக் குறிப்புகள்:

1. **நிறை மொழி மாந்தர்** - *எல்லா உணர்வானும் பொருளானும் குறைவின்றி நிறைவுற்று என்றும் விளங்கும் மொழியைப் பேசுபவர்.*

   'நிறை நிறுவுதல் நிறுத்தல்' - *நாநார்த்த தீபிகை : 1027*

2. **மறைமொழி** - *வெறும் பார்வையால் புலப்படாமல், முனைந்து கற்றார்க்கும் கருதுதல் உற்றார்க்கும் மட்டும் பொருள் புலப்படும் மொழி.*

   நிறைமொழி, மறைமொழி என்றது புலப்பாட்டானும் தன்மையானும், பொருளானும், நுட்பத்தானும், மெய்ம்மத்தானும், பிறர்க்கு அரிதாயும், அறவோர்க்கு எளிதாயும் காரண கருமியங்களுடன் கைவரும் கூறுவாய்ந்ததை உணர்த்தும் என்க.

3. **பெருமை** - *என்பது, காலத்தானும், இடத்தானும் இனத்தானும் அடைவுபட்டுவிடாமல், பெருகிய பரவுதலையும் புகழையும்*

பயனையும் உணர்த்துவது. இந் நூலாசிரியர்க்கு உற்ற பெருஞ்சீர் போன்றது.

4. **நிலத்து** - என்றது, எல்லை தவிர்ந்து, இவ்வையகம் முழுவதும், ஆங்காங்குத் தோன்றி அறம்பரப்பிய நிறைமொழி மாந்தர்தம் புகழ்ப் பரப்பை உணர்த்துவது.

5. **காட்டி விடும்** - என்றது, நிறைமொழி மாந்தர், மக்களினத்திற்கு என்றென்றும் பயன்படுமாறு உணர்த்தப்பெற்ற மறைமொழிகளை, அவ்வக் காலங்களில், அவ்வவ்விடங்களில் தோன்றி வாழும் மக்கள் தொகுதிக்கு அவையுணருமாறு அடையாளம் காட்டுவதற்கு உதவும் புகழ்த்தன்மையை உணர்த்துவது என்க. என்னை? இம் மறை நூலையும், இது போன்றவற்றையும் மக்கட்கு அடையாளங் காட்ட இந் நூலாசிரியரதும், இவர் போன்ற நிறைமொழி மாந்தரதும், புகழ் உதவினாற் போல என்க. என்னை? நூலாசிரியர் பெருமையைக் கேட்டே, அதன் மறைமொழிகளை அறிய அவாவுறுகிறோம் ஆகையினான்.

6. **மாந்தர்** - என்றது உயர்மக்களை.

உகூ. குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்த லரிது. 29

பொருள் கோள் முறை:

குணம் என்னும் குன்று ஏறி நின்றார் வெகுளி
கணம் ஏயும் காத்தல் அரிது.

பொழிப்புரை: (அறவுணர்வால் மேம்பட்டு உயர்ந்து நிற்கும்) நற்குணம் என்னும் குன்றில் படிப்படியாய் ஏறி (மீண்டும் சறுக்கலோ கீழிறக்கமோ இன்றி, அங்கேயே) நின்று கொண்டிருக்கும் பேரறிவாளர்தம் வெகுளி, ஒரு கண்ணிமைப் பொழுதே (தோன்றிச் செயல்பட்டு மறைந்துபோகும் தன்மையுடையது) ஆனாலும், அவ்வெகுளிக்குக் காரணமானவர் அதன் தாக்கத்தினின்று தம்மைக் காத்துக்கொள்ளல் கடினமானது.

சில விளக்கக் குறிப்புகள்:

1. **குணமென்னும் குன்று ஏறி நின்றார்** - குணக்குன்று என்று கூறத்தக்க அறமுனைவர். குறை எதுவும் இன்றி நற்குணங்களே உருவாகி நின்றவர். எந்நிலையிலும் அந்நற்குணங்களினின்று தாழாதவரை

நின்றார் என்றார். படிப்படியாய்க் குணநிலையில் மேம்படுதலை 'ஏறி' என்றார்.

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுள்வது அரிது; அவ்வாறு வெகுண்டாலும் அவ் வெகுளி ஒரு கணந்தான் - கண்ணிமைப் பொழுதுதான் - நிற்கும்; அவ்வாறு ஒரு கண நேர அளவே ஆயினும், அதைப் பிறர் தமக்குத் தீங்கு நேரா வண்ணம் காத்துக்கொள்ளல் அரிது.

என்னை? வெகுண்டவர் முழு நல்லுணர்வாளராகவும், பேரறவாளராகவும் இருப்பதால், அவரின் மனவெழுச்சி, வெகுளிக்கு ஆளாயினவர்தம் குறைமனவுணர்வினும் கடிதோங்கி நிற்குமாகலின், அவர் மனம் தாக்கமுறுவது திண்ணம். மனம் தாக்க முறவே, அறிவும் உடலும் தாக்க முற்றுச் செயல் அறுதலும் திண்ணம். மெலியது செயலறவே வலியதன் செயல் நிகழும் ஆகலின், பேரறவாளர் தம்வெகுளியுணர்வு செயல்படும் என்றும் அதைத் தடுத்துத் தனக்குத் தீங்கு வராமல் காத்துக்கொள்ளல் அரிது என்றும் கூறினார் என்க.

- அறிஞர் **கா. அப்பாத்துரையார்** தம் **'மணி விளக்கவுரை'**யில் இதற்கு விளக்கம் எழுதுகையில்,

'அவாவும் சினமும் வென்றவர் ஒழுக்கத்து நீத்தார் மரபினராகிய சான்றோர். அவர் தமக்கென எதுவும் அவாவுதலோ, வெறுத்தலோ அற்றவர் - தமக்கென அவர் எக்காலத்திலும் சினம் கொள்ளாதவர். ஆனால் அத்தகையவர் குமுகாய இனநலன்களாகிய நாட்டுநலம் கருதி, அருட்சீற்றம் கொள்ளும் நிலை ஏற்பட்டால், அதன் விளைவை, நாட்டை ஆள்பவர் அல்லது நாட்டில் ஆளப்படுபவர் ஆகிய இரு சார்பினரிடையிலும் எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. அவர் சீற்றம் தூண்டிய சூழல் அழிந்தாலன்றி, அச்சூழலுக்குக் காரணமான ஆட்சி கவிழ்தல் உறுதி ஆகும்' என்று கூறுவதும் காண்க.

– இதற்குச் சான்றுகளாக, இவ்வுரையாசிரியர் வெகுளியான், இந்திய நாட்டு ஆட்சித்தலைவி, இந்திரா காந்தியினது ஆட்சி 1976-இல் கவிழ்ந்ததும், அவரின் கொடுமகனும் ஆட்சித்தலைவனுமாயிருந்த இராசீவ் என்னும் மாகொடியன் 1991-இல் மாண்டு மடிந்ததும், அவ்வக்கால் அவர் பாடிய சீற்றவெழுச்சிச் சாவப் பாடல்களால் கண்டுணர்க.

2. வெகுளி – கொதிப்புடைய கடுஞ்சினம். சினம், வெகுளி, முனிவு, சீற்றம், கோவம், சாவம் என மனவெழுச்சி குறித்த சொற்கள் பல. அவற்றுள்,

சினம் – சிறு அளவில் குமிழ்போல் சினைத்துத் தோன்றி மறைவது. மனவுணர்வு மட்டுமே கொண்டது. சில் - சிறு - சின் - சினை - சினம்.

வெகுளி – மனம் வெந்து தோன்றுவது; அறவுணர்வும் தழுவியது. வேகு - வெகுள்.

சீற்றம் – அறிவு, மனம், உடல் ஆகிய மூவகை உணர்வு எழுச்சிகளையும் கொண்டது. சீறு - சீற்றம்.

முனிவு – முனைவர் (முனிவர்) கொள்ளும் சினம் முன்கோவம்.

முனை – முனைவர் - முனிவர். முனிவர் வெகுளி கடவுள்களின் வெகுளி போல் கருதப்பெற்றது.

'கலைவலார் நெஞ்சிற் காமமே போன்றும்
கடவுளர் வெகுளியே போன்றும்'

- சீவக. சிந். 2107

கோவம் – கட்டளையுடன் கூடிய அரசன் கொள்ளும் சினம். கோ-அரசன்.

சாவம் – மனவெழுச்சியும் அறிவெழுச்சியும் அறவெழுச்சியும் கொண்டு காரணத்தான் வெளிப்பட்டுப் பிறர் சாவுக்குக் காரணமாகிய வெஞ்சினம்.

3. கணம் - கண்ணிமைப் பொழுது, நொடி. **O**

ஈ0. அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுக லான்

30

பொருள் கோள் முறை:

மற்று எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு, ஒழுகலான், அந்தணர் என்போர் அறவோர்.

பொழிப்புரை: (பிறர்க்கு நலமே கருதுதல், கூறுதல், செய்தல் ஆகிய வகையில்) ஆறறிவுடைய மாந்தர்க்கேயன்றி, ஒன்று முதல் ஐந்தறிவுடைய அனைத்துயிர்க்கும் செவ்விய குளிர்ந்த தன்மையை உள்ளத்தில்

கொள்கையாகக் கொண்டு, அதனையே நடைமுறையிலும் கடைப்பிடித்து ஒழுகுதலால், அத்தகைய அறவாழ்க்கை பூண்டவர்களே அந்தணர்கள் எனப் பெறுவதற்கு உரியோராவர்.

சில விளக்கக் குறிப்புகள்:

1. **அந்தணர்** - அந்தண்மையுடையவர்கள். அந்தண்மை - செவ்விய, குளிர்ந்த தன்மை. எவரிடத்தும் எப்பொழுதும் எந்நிலையிலும் மனவெறுக்கை, அறிவு வேறுபாடு, செயல் வெறுப்பு ஆகியவற்றான் முகச்சுழிப்பும், கடுகடுப்பும் இல்லாமல் நடந்துகொள்ளும் குளிர்ந்த நீர்மைத்தன்மை.

   'அந்தணர்' என்னும் ஒரு சொல், பிறவியான் ஒரு மக்கட் பிரிவினர்க்கு ஆகி வரத் தொடங்கிய பொழுது, 'அவ்வாறு ஒரு பிறவியில்லை' என அவ்வழக்கை மறுத்துக் கூறினார் என்க.

   பிறவிச் செருக்கினான் தமக்கு உயர்வு கூறிப் பிற மக்களை விலங்கினும் கீழாக மதிக்கின்ற கீழ்மை உணர்வுடையார் 'அந்தணர்' ஆகார் என்றும், மக்களுக்கு மட்டன்றிப் பிற எவ்வுயிர்க்கும் குளிர்மையருள் காட்டுவதே 'செந்தண்மை' என்றும், அது பூண்டொழுகும் **'அறவோரே அந்தணர்'** என்றும் விளக்கினர் என்க. இச் சொற் பொருளில் நூலாசிரியர் காலத்து மாற்றம் ஏற்பட்டிருத்தல் வேண்டும். அல்லாக்கால் அதற்கு இலக்கணம் கூறுதல் அவர்க்குத் தேவையிருந்திராது.

2. **அறவோர்** — உலகின்பங்களைப் பிறர் நலம் கருதித் தவிர்த்துக் கொண்ட பேரறவாளர்கள் - அறிவர்கள். இத்தகையார் கானுறை துறவியரோ, முனிவரோ அல்லர் என்று கருதுக.

3. **மற்று** — அசைநிலை யன்று. 'மாந்தர் தவிரப் பிற' - என்னும் பொருளுடைச் சொல். 'மற்றெவ்வுயிர்க்கும்' என்றதால் அப் பொருள் கொள்ளப் பெற்றது. 'எல்லாவுயிரும்' என்று பிறிதோரிடத்தும் (260) கூறுவார்.

4. **செந்தண்மை** — செவ்விய தண்மை. நேரிய நடையும், இணங்கிப் பழகும் குளிர்ந்த தன்மையும்.

5. **பூண்டு ஒழுகுதல்** — கொள்கையாகக் கொண்டு கடைப்பிடித்தல். இதுவன்றிப் பிறவிச் செருக்கான் நூல் முதலிய பூண்டு அந்தணர் எனக் கூறப்பெறுதலைக் குறிப்பின் மறுத்தார்.

6. **அந்தண்மை** — புத்த சமயப் பூணுகை.

7. **செந்தண்மை** — அருக (சமண) சமயப் பூணுகை.

இரண்டு அறக்கடைப்பிடிகளையும் நீத்தார்க்குரியனவாக இணைத்துரைத்தார்.

ஆரிய மத முனிவோர்க்கு அந்தண்மை இல்லையாகலின் ஆங்கு அந்தணரும் இல்லையென்க. அவர்கள் வேதம் ஓதுதலால் வேதியரும், பிரம்மன் முகத்துக் தோற்றம் கொண்டதாகக் கூறப்பெறுவதால் பிராமணருமே ஆவர். மற்று, பிரம்மம் உணர்தலால் பிராமணர் ஆவர் என்று பொதுவுரைப்பது ஏமாற்று; பிறர் அவ்வாறு உணர்ந்ததாகக் கூறுதலை அவர் ஏலார் ஆகையான்.

o

அ-1. பாயிரவியல்

அ-1-4. அறன் வலியுறுத்தல்-4.

அதிகார முன்னுரை:

அறவொழுக்கமுடைய நீத்தார் இயல்புகளை முற்கூறியவர், அவ்வறம் ஏதாம் என்றும், அதனைச் சிறப்பாகவும் பொதுவாகவும் கடைப்பிடித்தொழுகுதல் எதற்காம் என்றும், அவ்வாறு ஒழுகுதலின் பயன் இதுவாம் என்றும் விளக்கிக் கூறி, பிறவுயிர்களுக்கன்றி, அறிவான் மேம்பட்ட மாந்த உயிர் வாழ்க்கைக்கு அதன் இன்றியமையாமையையும் வலியுறுத்தினர் என்க.

அறு என்னும் வேரடியாகப் பிறந்த சொல் அறம் (அறு + அம் - அறம். அம் பெருமைப் பொருள் பின்னொட்டு. (எ-டு) நிலை (Stand) சிறியது; நிலையம் (Station) பெரியது. விளக்கு சிறியது விளக்கம் (கலங்கரை விளக்கம்) பெரியது. அறம் - அறுத்தல், வரையறுத்தல், முறை செய்தல், ஒழுங்குபடுத்துதல், நெறிப்படுத்துதல், தானே ஒரு வழியமைதல் போலும் பொருள்பொதி சொல்.

என்னை? படிநிலை வளர்ச்சி பெற்று, உருத்திருந்தி, அறிவுணர்வு தோன்றித், தாறுமாறாக இயங்கிவந்த தொடக்கக்கால மாந்தவின உயிர்கள், ஊணுக்கும், உறவுக்கும், ஒழுகலுக்கும் தம்முள் சண்டையிட்டுப் பொருது, பற்பல உயிரியல், உணர்வியல், அறிவியல், ஒழுகியல், வாழ்வியல், சிக்கலுற்றுப் பின், சிக்கறுத்துப் பதங்கண்டு, தம்முள் ஆன்று, அவிந்து, அடங்கி, அமைந்து, காலந்தோறும் மாறுபாடுகளும் முரண்பாடுகளும் கண்டு கண்டு, அவை விலக்கித் துலக்கிக் கொண்டே

வருங்கால், துலங்கித் தோன்றிய, என்றும், எந்நிலையிலும், எக்காலத்தும், மாறுபடாத, மாந்தவினத்தின் மேம்பட்ட உயிருணர்வுக் கூறுகளை உய்த்துணர்ந்து, அவற்றையே கடைப்பிடிகளாக்கி முறை கொண்டன. இவ்வாறாக, மாந்த வினத்தார் முறைகொண்ட அம் மீமிசை மாந்த நிறைகளே அறம் என்று நின்றன என்க. மொத்தத்தில் 'அறம்' என்பது அனைத்து நிலைகளும் ஓர் இயற்கை யொழுங்கே (The reality of the natural existence) என்க. நிலைத்திணைகள் (தாவரங்கள்), வானம், காற்று, காடு, மலை, கடல் முதலியன மட்டுமே இயற்கை இல்லை. மாந்தனும் இயற்கையே. எனவே மாந்தனுக்குள்ள தனி இயற்கைத் தன்மையே அறம் என்று சுருக்கமாகச் சொல்லலாம்.

இவ்வுலகின்கண், ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள அனைத்து உயிரினங்களது வாழ்க்கை நிலைகளையும் மிக உன்னிப்பாகக் கவனித்தால், அவை தங்களுக்காகவும், பிறவற்றிற்காகவுமே வாழ்வதை உணரலாகும். பிறவுயிர்களின் கூட்டுத் துணையின்றி, எவ்வகையின் எந்த உயிரும் தானே தனித்து வாழ்தல் இயலாதென்பது இயற்கையின் இயங்கியல் நெறி யென்க. இனி, இன்னோர் இயங்கியல் உண்மையும் யாதெனின், ஒவ்வொரு கீழ்நிலை உயிரும், தன் உடலியல் வாழ்க்கையில், தன்னையடுத்துள்ள மேனிலை உயிர்களுக்கு உணவாகவும் ஊட்டமாகவும் அமைந்து நிற்பதும் என்க. இவ்வகையில் உடற்படிநிலை வளர்ச்சி போன்றே, அறிவுப் படிநிலை வளர்ச்சியும், உள்ளத்தின் படிநிலை வளர்ச்சியும், படிப்படியாக மேம்பட்டு, வாழ்நிலை மிக்கோங்கிய நிலையில், அவ்வுயிரினங்களுக்குள்ள பொதுமை நல உணர்வு, சிலபல கரணியங்களால், படிப்படியாகக் குறுகி வருவதையும், அதேபொழுது, தந்நலவுணர்வு படிப்படியாகக் கூடிவருவதையும் உணர்தல் வேண்டும்.

அறிவு வளர்ச்சி தன்னலவுணர்வை மிகுவித்தலும், பொதுமை நல உணர்வைக் குறைவித்தலும் உய்த்துணர்தற் பாலன. அனைத்துக்கும் மேனிலை உயிரினமாகிய மாந்தவுயிரினம், உள்ளத்தின் இணைவளர்ச்சியற்ற அறிவினது தனி மிகை வளர்ச்சியினால், அறிவியலடிப்படையில் உடலாற்றலை அனைத்தானும் மிகுவித்துக் கொண்ட நிலையில், தந்நலவுணர்வே பெரும்பாலும் மிக்கூர்ந்து, பொதுநலவுணர்வு குறைந்து நிற்பதையும் உய்த்துணர்க. இஃது, இயற்கை இயங்கியலுக்கு மாறானதும், உயிரழிவையும் உலக அழிவையும் நோக்கியதுமாம் என்று நுண்ணிதின் உணர்ந்த முன்னோர்களும், வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவர்களுமாகிய மெய்யறிவுச் சான்றோர்களும், மக்கள்மாட்டுப் பொதுமை நலவுணர்வுகளும், அவற்றின்வழிச் சிந்தனைகளும் செயல்களும், மற்ற கீழ்நிலையுயிர்கள் அனைத்திலும் மிக்கோங்கி வளர்ந்து, முழுவளர்ச்சி பெற்று, மீமிசை

மாந்தநிலை (Super humanism) மலர்ச்சியுறுதல் இன்றியமையாதது என்று ஆய்ந்து கண்டு அப்பொதுமை நலக்கூறுகளுக்கென ஒட்டுமொத்தமான ஒரு தொகுதிப் பெயரை உருவாக்கி, அதற்கு **'அறம்'** எனப் பெயரிட்டு, அவ்வறவுணர்வு அவர்களிடைக் கட்டாயம் வளர்தல் வேண்டி வலியுறுத்தினர் என்க.

இஃது, உலக வாழ்வின் இயங்கியல் கூறுகளான **அறமுதலுணர்தல், வான் சிறப்புணர்தல், நீத்தார் பெருமையுணர்தல்** ஆகியன போன்றே, அறவுணர்வும் அவற்றையடுத்து, மக்கள் உணர்ந்தும் கடைப்பிடித்தும் ஒழுக வேண்டிய இன்றியமையாக் கூறு ஆகலின், இவ்வதிகாரத்து அதனையும் புலப்படுத்தி வலியுறுத்துவார் என்க. எனவே, இஃது அறன்வலியுறுத்தல் ஆயிற்று.

இவ் **வறம்** என்பது, ஆரிய நூல்களுள் **தர்மம்** (Dharma) என்று கூறப்பெற்று, அவர்தம் வண்ண (வர்ண) வொழுக்கங்களுக்கேற்பப் பொருளுரைக்கப்பெற்றுச் செயல்களும், அவ்வச் சாதிப் பிரிவினர்க் கேற்ப வகுத்துரைக்கப்பெற்றன வாகலின், பரிமேலழகர் முதலிய ஆரிய வழி உரையாசிரியர்களும், அவரைத் தழுவிய பிறரும், அத் தர்மக் கோட்பாடுகளையே, தமிழியலின் மேம்பட்ட பொதுமைக் கூறாகிய இவ்வறவியல் கூறுக்குப் பொருளாக வலிந்துரைத்தனர் என்க. இவ் வேறுபாட்டினைப் பின்னர் விளக்குவாம்.

Dharma

- virtue, moral and religious merit according to the shastras.

- any charitable or meritorious act from which future good is expected.

- peculiar or prescribed duty, occupation etc. according to the different ranks and classes in society - as giving alms etc. by the house holder; administrating justice, by kings; piety and perfoming rites by brahmins; courage, bravery in the soldier; shaving in the barber.

- சாதிக்குரிய கருமம்.

(M. Winslow and by Sir. Monier Williams)

- இவ்வாறான ஆரிய **தர்மங்களை** உரைக்கும் நூல்கள் **'ஸ்மிருதிகள்'** எனப் பெறுவன. அவற்றை வகுத்துரைத்த நூல்கள் அந் நூலாசிரியர்கள் பெயர்களால் வழங்குகின்றன. அவை பத்தொன்பது. அவையாவன: மனு, ஆத்ரேயம், ஔரிதம், விஷ்ணு, யாஜ்ஞவல்கியம், உசனம், ஆங்கீர்சம், யமம், ஆபஸ்தம்பம், சம்வர்த்தம், காத்தியாயனம், பிரகஸ்பதியம், பராசரம், வியாசம், சங்கலிதம், தஷம், கௌதமம், சாதான்மம், வாசிட்டம்

ஆகியன. இவற்றுள் சங்கலிதத்தைப் பொதுவாகக்கொண்டு பதினெட்டு என்றும் கூறுவர். இவையில்லாமல், துணை (உப) ஸ்மிருதிகள் பதினெட்டாகக் கண்வ, கபில, லோஹித, தேவல, லோகாகடி, முதலியவையும் கூறப்பெறுகின்றன. இவை சில நூல்களில் முறை மாறியும் எண்ணப் பெறுகின்றன.

இவற்றுள், **மனுஸ்மிர்தி** முதல் யுகமாகிய **கிரேதாயுகத்திலும், கௌதமஸ்மிர்தி** இரண்டாவது யுகமாகிய **திரேதாயுகத்திலும், சங்கலிதஸ்மிர்தி** மூன்றாவது யுகமாகிய **துவாபரயுகத்திலும், பராசரஸ்மிர்தி** நான்காவது யுகமாகிய **கலியுகத்திலும்** சிறப்பாகக் கடைப்பிடிக்க வேண்டியனவாகும் என்றும் குறிப்பிடப்பெறுகின்றன.

- இனி, ஆரியவியலின்படி, துளசிதாசர் இராமாயணத்தில் இன்னொரு கருத்தும் கூறப்பெற்றுள்ளது. அஃதாவது:

'ஆயிரம் பேரிளில் ஒருவனே தர்மத்தைப் பின்பற்றித் தர்மாத்மாவாக விளங்குகிறானாம். அப்படிப்பட்ட கோடி தர்மாத்மாக்களில் ஒருவனே புலன்கள் ஆசையை வெறுத்து வைராக்கியம் உள்ளவனாக இருக்கின்றானாம். அவ்வாறான கோடிப் பேர்களில் ஒருவன்தான் மெய்யறிஞனாக (ஞானஸ்தனாக) விளங்குகிறானாம்.

இத்தகைய மெய்யறிவாளர்கள் கோடிப் பேர்களில் ஒருவன்தான் 'சீவன் முத்தர்கள்' பிரம்மத்தில் லயமானவர்கள் ஆகியவர்கள் கிடைத்தாலும் கிடைக்கலாமாம். ஆனால் உண்மையான ஓர் இராமபக்தன் கிடைப்பது மிகவும் அரிதாம்.

- இவ்வாறு துளசிதாசர் இராமாயணம் கூறுவது ஆரியவியலின் கருத்துப்படி 'தர்ம' நடைமுறைகள் எல்லாம், மாந்த நன்மைக்காக அல்ல; இறைவனை அடையவே என்பதுதான். தமிழியல் அறத்திற்கு மக்கள் நன்மையே முகாமையானது என்க.

இனி, முற்கூறப்பட்ட ஆரிய தர்ம நூல்களிலெல்லாம் தர்மக் கூறுகள் ஆசாரம் (ஒழுக்கம்), விவகாரம் (வழக்கு), பிராயச்சித்தம் (தண்டம்) என முப்பிரிவுகளாகக் கூறப்பெற்றுள்ளன.

அவ்வொழுக்க (ஆசார) முறைகளில் பொதுவாகக் கூறப்பெறும் 'தர்ம'ங்கள் முப்பத்திரண்டாம். அவை வருமாறு:

க. ஆதுலர்க்குச் சாலை : ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுத்தல்.

உ. ஒதுவார்க் குணவு : கல்வி கற்பார்க்கு உறையுளும் உண்டியும் தருதல்.

ங. அறுசமயத்தார்க்குண்டி: நடைமுறையில் உள்ள ஆறு சமயத்தை (மதத்தை)ச் சார்ந்தவர்களுக்கு உண்டியும் உறையுளும் தந்து பேணுதல்.

இங்கு ஆறு சமயங்கள் என்பன பல்வேறு வகைகளில் கூறப் பெறுகின்றன. அவை காலந்தோறும் வேறு வேறாக வரிசைப்படுத்தப் பெற்றுள்ளன. இவையெல்லாம் ஆரியச்சார்பாகவே வளர்ந்து வந்துள்ளனவாகக் காணப் பெறுகின்றன. மிகப் பழங்காலத்தில் இவை,

1. **வைரவம் :** வைரவனை (அஃதாவது) சாம்பலும் மண்டை யோட்டு மாலைகளும் தாங்கிய கானுறை சிவனை) வழிபாட்டுத் தலைவனாகக் கொண்டது.

2. **வாமம் :** பெண்ணைத் தலைவியாகக் கொண்டு பெண்குறியை வழிபடுவது.

3. **காளாமுகம் :** இதுவும் பெண்வழிபாட்டுச் சமயம். ஆனால் திருந்திய நிலையில் காளியை வழிபடுவது.

4. **மாவிரதம் :** ஆண்குறிவடிவாகிய ஆவி உருவை வழிபடுவது.

5. **பாசுபதம் :** சிவனை வழிபடுவது. அஃதாவது, பதி (தலைவன்), பசு (ஆதன் என்னும் ஆன்மா) பாசம் (பிறவிக்குக் காரணமாகிய பற்று) - ஆகிய முந்நிலைக் கொள்கை தோன்றிய காலகட்டம் இது.

6. **சைவம் :** ஆற்றலும் (Energy சக்தி), பொருளும் (Matter) (சிவன்) - ஆகிய சிவையையும் சிவனையும் வழிபடுவது.

- இவை ஆறையும் **உட்சமயங்கள்** அஃதாவது மூல அடிநிலைச் சமயங்கள் என்று கொள்கின்றனர். இவற்றுள் உள்ள பெண் வழிபாடுதான் பிறகு மாலியமாகத் திரிந்தது என்றும் கூறுவர்.

- இனி, இவையல்லாத **வேதாந்த மதங்களாக** ஓர் ஆறையும் அடுத்த நிலையில் கூறுவர்.

அவையாவன:

1. **கபிலம் :** கபிலர் என்னும் முனிவர் நிறுவிய **சாங்கிய மதம்.** இது கடவுளை மறுப்பது. மற்றது மெய்ம்மங்கள் இருபத்தைந்து எனவும், அவற்றுள் இருபத்தைந்தாவது மெய்ம்மமே ஆதன் (புருடன்) என்பதும், அவன் மற்ற இருபத்து நான்கையும் பிரித்தறிந்து, மாயை (அறியாமை)யை நீக்குவதே முத்தி (இறைப்பேறு) என்பதும் ஆம்.

2. **கணாதம் :** இது கணாதர் என்னும் முனிவரால் நிறுவப்பெற்ற **வைசேடிக மதம்.** இது மூலப் பொருள்கள் ஏழென்பது. இது தருக்க முறையில் உலக மெய்ம்மங்களை ஆராய்வது.

3. **பதஞ்சலியம் :** பதஞ்சலி என்னும் முனிவர் உருவாக்கிய மதம்.

4. **அக்ஷபாதம் :** நையாயிக மதம். கௌதம முனிவன் செய்தது. நியாய சூத்திரத்தை அடிப்படையாகக் கொண்டது.

5. **வியாசம்:** வியாச முனிவரால் நிறுவப்பெற்ற உத்திர மீமாம்சை என்னும் மதம்.

6. **ஜைமினி :** ஜைமினி என்னும் முனிவரால் உருவாக்கப் பெற்ற பூர்வ மீமாம்சை மதம்.

- இனி, இவையன்றி, வைதிக மதங்களாகக் கூறப்பெற்ற ஆறு மதங்கள் வருமாறு :

1. **சைவம் :** சிவனை வழிபடு கடவுளாகக் கொண்டது.

2. **வைணவம் :** திருமாலை வழிபடு கடவுளாகக் கொண்டது.

3. **சாத்தம் :** சக்தியை வழிபடுகடவுளாகக் கொண்டது.

4. **செளரம் :** சூரியனை வழிபடு கட்வுளாகக் கொண்டது.

5. **காணாபத்யம் :** கணபதியை வழிபடு கடவுளாகக் கொண்டது.

6. **கௌமாரம் :** முருகனை வழிபடு கடவுளாகக் கொண்டது.

- இனி, இவையன்றி, அகச்சமயங்களாகக் கூறப் பெறும் ஆறு மதங்கள் வருமாறு :

1. **உலோகாயதம் :** இது சாருவாக மதம் என்றும் கூறப்பெறும். இது, கடவுள், ஆன்மா, கர்மம் இவையெல்லாம் இல்லை என்பதும், உலகமே உண்மை என்பதும், உலகில் உள்ள இன்பங்கள் அனைத் திலும் பெண்ணின்பமே பேரின்பம் என்பதும் ஆகிய ஓர் இறை மறுப்பு மதம்.

2. **பௌத்தம் :** தொடக்கக் காலத்திலிருந்து புத்தர்கள் பலர். அவர்களது கொள்கையும் புத்தமதம் என்றே கொள்ளப்பெற்றது. ஆனால், இறுதியில் கபிலவாஸ்து என்னும் இடத்தில் கி.மு. 578-இல் தோன்றிய **கௌதம புத்தர்தாம்** வடிவமாகப் புத்த மதத்தை நிறுவினர் என்பர். இவரே சாக்கிய புத்தர் என்றும், இவருடைய மதம் இன்னொரு வகையில் சாங்கிய மதம் என்றும் கூறப்பெறும்.

3. **சமணம் :** இம் மதத்தினர் அருகனை வழிபடுவோர். இவர்கள், ஆன்மாவும், உலகமும் என்றும் உளவென்றும், இவையல்லாது இவற்றுக்கு மூல காரணனாகிய கடவுள் ஒருவர் இல்லை என்றும், இச் சமயவொழுக்கங்களைக் கடைப்பிடித்து முற்றத் துறந்து முடிவெய்துதலே முத்தியென்றும் கூறுவர்.

4. **மீமாம்சை :** இம் மதத்தை நிறுவியவர், ஜைமினி பகவான் என்பர். ஞாய அளவையை (வாதத்தை) அடிப்படையாகக் கொண்டது இம் மதம். வேதம் என்றும் உள்ளதென்றும் ஆதியந்தம் இல்லாத தென்றும், கடவுளை வேண்டாமலேயே, கருமமே பயன் கொடுக்கும் என்றும் கூறுவது.

5. பாஞ்சராத்திரம் : பிரம்மாவிற்கு விஷ்ணு விளங்கக் கூறிய மதம். நாராயணனை வழிபட்டு வைகுண்ட சாரூப பதவியை அடைய விரும்புவர், இம் மதத்தார் என்பர்.

6. பாட்டாசாரியம் : குமாரிலபட்டர் தோற்றுவித்த மதம். வேதமே தெய்வம் என்பது இதன் கொள்கை.

- இனி, இவையன்றிப் **புறச்சமயங்களாகக்** கூறப்பெறும் இன்னும் ஓர் ஆறு மதங்கள் வருமாறு. இவ்வெண்ணிக்கை வரிசையில் முன்னர்க் கூறிய பல பிரிவுகளில் அடங்கும் பல மதங்களும் இடம் பெற்றுள்ளது கவனிக்கத் தக்கது. அவை வருமாறு :

1. பௌத்தம், ஜைனம், பைரவம், காளாமுகம், உலோகாயதம், சூன்யவாதம் ஆகியவை.

- இவ்வரிசையில் **சூன்யவாதம்** என்னும் மதமே புதியதாகும்.

- இச் **சூன்யவாத மதம்** என்பது இவ்வுலகில் உள்ள அனைத்துமே ஒன்றுமில்லை. எனவே கடவுளும் இல்லை என்பது.

- இனி, மேற்கூறிய ஐவகையான ஆறு ஆறு சமயங்கள் எனும் முப்பது சமயங்களன்றி, இன்னும் சில சமய வகைகளைச் சேர்த்தும், குறைத்தும், விடுத்தும், கூட்டியும், புதுவகையான புதுப்பெயர் சூட்டியும் சமய வகைகள் முப்பத்து நான்கு என்றும் மொழிகுவர்.

- இவை பெரும்பாலும் ஆரிய ஏமாற்றுகளையும், கற்பனைகளையும், மூடநம்பிக்கைகளையுமே அடிப்படையாகக் கொண்டவை.

- எனினும் இச்சமயங்களெல்லாம் அழிந்துபோகக் கூடாது என்பதும், அவ்வாறு அழிந்து போமாயின் தங்கள் வேதமதக் கொள்கையும் கோட்பாடுகளும், அவற்றின்வழி நிறுவிய வர்ணாச்ரம தர்மநெறிமுறைகளும், அவற்றை அடிப்படையாகக் கொண்டு தாங்கள் கட்டுவித்த இன ஆளுமைகளும், ஆட்சி அதிகாரங்களும், அழிந்துவிடக் கூடாது என்பதும் ஆரியரது உட்கோளாகும்.

- மேலே கூறிய மதம் அல்லது சமயங்களுள் பல தமிழியலை அடிப்படையாகக் கொண்டவை. அவை பல படிநிலை வளர்ச்சி பெற்று இறுதியில் **சிவனியம், மாலியம்** என இருசமய வடிவங்களாக நின்றனவேனும், அவற்றுள்ளும் ஆரியக் கலப்பு நேர்ந்து, மொழி நடையில் மணிப்பிரவாளம் போல், சமய நடையுள் **தமிழிய - ஆரிய** மதமாகி இற்றை **இந்து** மதம் என்னும் இறுதி வடிவில் நின்றுவருகின்றன என்க. இவற்றை விரிக்கில் மிகப் பெருகுமாகலின், இவ்வளவில் நிறுத்தி மேலே போவோம்.

- இவற்றின் மிக விரிவான வரலாற்றை இதன் நிறைவுரையில் காணலாம்.

மொத்தத்தில் நாம் கூறப்புகுவது, ஆரிய வழக்கின் முப்பத்திரண்டு தர்மங்களில், அனைத்துச் சமயத்தாரையும் வேறுபாடின்றிப் போற்றிப் புரந்துகொள்வதும் ஒரு தர்மமாக வகுக்கப் பெற்றுள்ளது என்று அறிந்து கொள்வதே என்க. இனி, அடுத்து வரும் தர்மங்களை மேலே கூறுவோம்.

சஉ பசுவுக்கு வாயுறை : ஆக்களைத் தீனி கொடுத்துக் காப்பது.

ருஉ. சிறைச்சோறு : சிறையிலுள்ளவர்களுக்கு உண்டி கொடுப்பது.

சுஉ ஐயம் இடல் : இரவலர்க்கு ஈதல்.

எ. தின்பண்டம் நல்கல் : வழிப்போக்கர்களுக்கு உணவு வழங்குதல்.

அ. அறவைச் சோறு : கைவிடப்பட்ட துணையற்ற ஏதிலி (அனாதை)களுக்கு உணவு, உடை, உறையுள் கொடுத்து ஆதரித்தல்.

கூ. மகப்பெறுவித்தல் : குழந்தைப் பேற்றுக்குத் துணை செய்தல், ஈனில்களை அமைத்தல்.

கஅ. மகவு வளர்த்தல் : ஏதிலி, ஏழைக் குழந்தைகளை வளர்த்தல்.

ககஉ. மகப்பால் வார்த்தல் : ஏதிலியர், ஏழையர் குழந்தைகளுக்குப் பால் வழங்குதல்.

கஉஉ. அறவைப் பிணஞ்சுடுதல் : ஏதிலியர், ஏழையர் பிணங்களைச் சுடுதல் அல்லது புதைத்தல்.

கஙஉ. அறவைத் தூரியம் : ஏதிலியர், ஏழையர்க்கு உடைகள் வழங்குதல்.

கசஉ கண்ணம் : வெற்றிலைக்குச் சுண்ணாம்பு தருதல்.

கருஉ. நோய் மருந்து : ஏதிலியர், ஏழையர் மற்றும் நோயாளிகளுக்கு மருந்து தருதல்.

ககஉ வண்ணார் : ஏதிலியர், ஏழையர்க்குத் துணி வெளுத்துக் கொடுக்க ஏற்பாடு செய்தல்.

கஎ. நாவிதர் : ஏதிலியர், ஏழையர்க்கு முகவழிப்பு, தலைமுடி வெட்டி ஒழுங்கு செய்ய உதவுதல்.

கஅ. கண்ணாடி : இல்லாதவர்க்கு முகம் பார்க்கக் கண்ணாடி வழங்குதல்.

ககூ. காதோலை : ஏழைப் பெண்டிர்க்குக் காதுகளில் அணிய பனையோலைச் சுருள்களை அளித்தல்.

உ0. கண் மருந்து : ஏழைப் பெண்டிர்க்குக் கண் மை வழங்குதல்.

உக. தலைக்கெண்ணெய் : ஏழையர்க்குத் தலை வாரிக்கொள்ள எண்ணெய் தருதல்.

உஉ பெண் போகம் : உடல் இணைவை விரும்பும் பெண்டிரை இணைந்து மகிழ்வித்தல்.

உங. பிறர் துயர் காத்தல் : நோய் வாய்ப்பட்ட, புண்பட்டவர்களுக்கு உதவுதல்.

உச. தண்ணீர்ப் பந்தல் : வழிப்போக்கர்க்கு விடாய் தணிக்க வழியில் தண்ணீர்ப் பந்தல்களை அமைப்பது.

உரு. மடம் : பிராமணர்கள், மற்றவர்கள் ஆகிய வழிப்போக்கர்கள், சமயப் போக்கர்கள் இடையிடைத் தங்க, அவர்களை உண்பிக்க மடங்கள் கட்டித் தருதல்.

உசு தடம் : ஊரார்க்குதவும்படி நன்னீர்க்குளங்களை அமைத்தல்.

உஎ. சோலை : வழிப்போக்கர்கள் நிழலில் தங்கிப் போகச் சோலைகளையும் மரத்தோப்புகளையும் அமைத்தல்.

உஅ. ஆவுரிஞ்சு தறி : மாடுகள் தங்குவதற்கும் உடம்புகள் சொறிந்து கொள்வதற்கும் வைக்கோல் போர்களையும், தினவுக்கற்களையும் இடையிடை யமைத்தல்.

உசூ. விலங்கிற்குணவு : எல்லா வகை விலங்குகளுக்கும் (ஆடு, மாடு, குதிரை, கழுதை, ஒட்டகம் போன்றவற்றிற்கு) உணவுக் கொட்டில்களை அமைத்தல்.

ஈ0. ஏறு விடுதல் : ஆக்கள் சினையுற ஏறுகளை வளர்த்து விடுதல்.

ஈக. விலை கொடுத்து உயிர் காத்தல் : உயிர் போகும் தறுவாயில் அடிமையோ, அடமானமோ, நோய்வாயோ பட்டவர்களுக்காகப் பணம் தந்து அவர்களின் உயிர்களைக் காத்தல்.

ஈஉ. கன்னிகாதானம் : திருமணம் ஆகாத ஏழை, எளிய, ஏதிலிப் பெண்களுக்குத் திருமணம் செய்ய உதவுதல்.

இனி இவையேயன்றித் தமிழியல் முறையில், அறத்தின் உள்ளுறுப்புகளாகக் கீழ்வரும் எட்டு உணர்வு நிலைகளும் கூறப் பெறுகின்றன.

1. **ஐயப்படாமை :** எந்தக் கருத்தையும், எந்த மெய்ம்மையையும் ஐயுறுதல் என்பது ஒரு மனநிலை. எதையும் ஆராயாமல் ஏற்க விரும்பாமை. எந்தக் கருத்திலும் உறுதிப்பாடின்மை - எதிலும் கருத்து முடிவின்மை - எந்த நலவுணர்விலும் நம்பிக்கையின்மை - நல வெறுப்புணர்வு (Scepticism)

   - இவ்வாறின்றி உண்மையான கருத்தை ஐயப்படாது ஏற்றுக் கொள்கின்ற உணர்வு ஓர் அறவுணர்வாகும்.

2. **விருப்பின்மை :** எதையும் அவாவுகிற ஆசைப்படுகிற தன்மை (Covetousness) இன்மை.

- இஃது ஒருவகை அறவுணர்வு.

3. **வெறுப்பின்மை** : எதையும் வெறுக்காமை, எதன்மேலும் கடுவெறுப்பின்மை. (free from disguest) இஃது ஒருவகை அறவுணர்வு.

4. **மயக்கமின்மை** : எதிலும் குழப்பமோ, திகைப்போ, தடுமாற்றமோ (Perplexity) இல்லாதிருத்தல். இதுவும் ஒருவகை அறவுணர்வு.

5. **பழி நீக்கல்** : பிறர்மேல் பழி கூறுதல், பழிமொழிதல், அவதூறு கூறல், தூற்றித்திரிதல் (reproches), குற்றம் கண்டு பிடிக்கிற, குறைகூறுகிற தன்மை (Consoriousness) இல்லாதிருப்பது ஓர் அறவுணர்வு; அவ்வாறு கூறப்படும் பழியை நீக்குவதுமாம்.

6. **அழிந்தோரை நிறுத்தல்** : கடுந்துன்பம் (distress) அழிபாடு, பாழ்நிலை, சீர்குலைவு (ruin) உற்றோரை அணுகி அவர் நிலைக்கு ஆறுதல் கூறி, உதவும் மனவுணர்வு. இஃதும் ஒருவகை அறவுணர்வுச் செயல்.

7. **அறம் விளக்கல்** : நற்செயல்களின் தன்மை - நன்மை, அறச்செயல்களின் மேன்மை, பயன் - இவற்றை மற்றவர்க்கு விளக்கமாக எடுத்துக் கூறி அவர்களையும் அறநெறிக்கு ஆட்படுத்துதல், (bringing into light the nature of benefaction and expounding it). இதுவும் ஓர் அறவுணர்வுச் செயல்.

8. **பேரன்புடைமை** : பிறர்மேல் மிகுதியான, நிறைவான, உண்மையான அன்பு செலுத்துதல் (abunded love). இதுவும் அறவுணர்வுச் செயற்பாடுகளில் ஒன்றென்க.

- இங்ஙனம் பற்பலவாறாகவும், பல கூறுகளாகவும் சொல்லப்பெற்ற தமிழியல் அறமும், ஆரியவியல் வர்ணவொழுக்க அடிப்படைத் தர்மக் கோட்பாடும், ஒன்றுடன் ஒன்று கலந்து மயங்கிக் கிடந்த காலத்து, இந்நூல், (திருக்குறள்) தமிழியல் அறம் இது வெனப் பிரித்துக் காட்டித் தொகுத்து, வகுத்துப் பகுத்துச் சொல்ல முன் வந்த தென்க.

- இனி, எல்லா அறக் கூறுகளும், முன்னர்க் கூறிய மீமிசை மாந்தப் பொதுநலவுணர்வையே அடிப்படையாகக் கொண்டிருப்பதை இந்நூல் முழுவதும் காணலாம் என்க.

அவற்றின் பிழிவாக, மக்கள்நலப் பொதுமைக் கோட்பாடே உயர்ந்து நிற்பதைக் கீழ்வரும் **மணிமேகலைப்** பாடல் விளக்கி நிற்கும்.

"அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்
மறவா தியாதுகேள் மன்னுயிர்க் கெல்லாம்
உண்டியும் உடையும் உறையுளும் அல்லது
கண்ட தில்லெனக் காவலன் உரைக்கும்"

எனவே உலகியல் மக்கள்நலக் கொள்கைகள் அனைத்திற்கும் பொதுமைநலவுணர்வும், அதன் வழிப்பட்ட கருத்தும் செயல்களுமே காரணமாகி நிற்கின்றனவென்றும், அவற்றை ஒவ்வொருவரும் எண்ணத்தானும், உரையானும், செயலானும் கடைப்பிடித்தொழுகுதல் வேண்டும் என்பதையே இவ்வதிகாரத்தாலும், இதைத் தொடர்ந்துவரும் அறம், பொருள், இன்பத்துப் பால்களானும், பல்வேறு அகவகம், அகப்புறம், புறம் புறப்புறம் என்னும் கோணங்களில் வலியுறுத்தியும் தெளிவுறுத்தியும் நூல் செய்தார் என்க.

'சிறப்புடை மரபின் பொருளும் இன்பமும்
அறத்துவழிப் படூஉம் தோற்றம் போல'

- புறம்: 31

- என்று பரிமேலழகர் எடுத்துக் காட்டிய தமிழியல் மரபுச் செய்யுளும் இதையே வலியுறுத்துவதன்றி, அவர் கூறிய இம்மை, மறுமை, வீடு என்னும் மும்மைக் கூறுபாடுகள் சுற்றி வளைத்தேனும் எங்கும் இந் நூலுள் கூறப்பெறவில்லையென்பது தெளிவாம் என்க.

'அறம்' என்பது மென்மையான மனவுணர்வின் நுண்ணியல் கூறுபாடு. மனத்தை அடிப்படையாகக் கொண்ட இவ்வுணர்வு அறிவுணர்வைத் தழுவி வெளிப்பட்டுச் செயலாக மலர்கிறது. எனவே இது மாந்தவியலுக்குப் பொருந்திய வகையில் ஓர் உலக இயங்கியலாக உள்ளதே அன்றி, ஒரு கற்பனைக் கோட்பாடாக மதத்தையோ, சமயத்தையோ அடிப்படையாகக் கொண்டு இயங்கவில்லை என்பதை இந்நூல் முழுவதும் ஆசிரியர் உறுதிப்படுத்தியுள்ளார் என்க.

இந்நடைமுறை இயங்கியல் அறிவியல் தழுவிய மாந்த நலனை, இங்குக் காட்சியாய், கருதுதலாய், செயல்களாய்த் தோன்றி .இயங்கும் உயிரியக்க நிலைக்குப் பொருத்திப் பார்க்காமல், மதவியல் கற்பனையான மறுமைக்கும், துறக்கத்திற்கும் (மோட்சத்திற்கும் விண்ணுலகத்திற்கும்) பொருத்திப் பார்ப்பது அறியாமை மட்டுமன்று, ஏமாற்றும் ஆகும் என்க.

"எல்லாப் பேற்றுள்ளும் சிறந்த பேரின்ப வீடும், சிற்றின்பத்துட் சிறந்த விண்ணின்பமும் சிறப்பெனப்பெற்றன. செல்வமும் விண்ணின்பமும் இல்லறத்தார்க்கும் வீடு துறவறத்தார்க்கும் உரியனவாம்" - என்னும் பாவாணர் உரையும் பயனில் உரையாம்.

இனி, தமிழியலில் **'அறம்'** என்பதற்கும், ஆரியவியலில் **'தர்மம்'** என்பதற்கும் மலைக்கும் மடுவிற்கும் உள்ள வேறுபாடுகள் உள்ளன.

தமிழர் 'அறம்' வேறு; **ஆரிய 'தர்மம்'** வேறு. **தமிழர் 'அறம்'** மாந்த உயிரினத்திற்கே பொதுவானது; வேறுபாடுகளோ, மாறுபாடுகளோ கொள்ளாதது.

ஆரிய தர்மம் சாதிப் பிரிவுகளுக்கேற்ப வகுத்துரைப்பது. மக்களைச் சாதிகளாகப் பகுத்துக்கொண்டு, அவர்களுக்குள் ஓர் ஒப்பந்த (Social Contract) முறையை அடிப்படையாகக்கொண்டது. இஃதை இன்ன சாதியார், வர்ணத்தார் செய்வது தர்மம் என்றால், அதையே இன்னொரு சாதியார், வர்ணத்தார் செய்தால் தர்மம் அன்று என்று கட்டுரைப்பது. மேலும் அது, சிறப்பாகப் பிராமணர்களுக்கே நன்மை தருமாறு கரவாக அமைக்கப்பெற்றது; செயற்கையானது; நடுநிலையற்றது; அடிப்படை அமைப்பியல் வேறுபாடுகளையும் மாறுபாடுகளையும் கொண்டது.

- இனி, **தர்மம்** என்பது வேறு; **'தருமம்'** என்பது வேறு.

'தர்மம்' - ஆரியவழி; மக்கள் நெறிமுறை ஆரிய ஸ்மிருதிகளை அடிப்படையாகக் கொண்டது. இது சமசுக்கிருதச் சொல்.

'தருமம்' என்பது கொடை; ஈகையறம். இரவலர்க்கும், ஏழையர்க்கும், இல்லாதவர்க்கும், ஏதிலியர்க்கும், அறவோர்க்கும், அறிஞர்க்கும் மனம் நெகிழ்ந்து மகிழ்ந்து கொடுக்கும் ஈகை.

கொடை ஓர் அறக்கூறு; கொடையே முழு அறமுமன்று. பொதுமை உணர்வுக்கு அஃதோர் எடுத்துக்காட்டு. அதுவே முழுவதும் பொதுமையுணர்வாகாது.

> - இத்தகைய மாந்தவியங்கியல் கோட்பாடுகளை, அவரவர் வாழ்வியலுக்கும், சூழ்வியலுக்கும் பொருத்திப் பொதுமை நலம் கூறுவதே இந்நூலின் நோக்கமாகும். என்பதால், அந் நோக்கத்திற்கு அடிப்படையாக, வித்தாக அமைந்த அறவுணர்வுகளை இங்கு வலியுறுத்தினார் என்க.

ஃ

ங.க. சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு. 31

பொருள் கோள் முறை:

அறம் சிறப்பு ஈனும்; செல்வமும் ஈனும்; உயிர்க்கு
அதனின் ஊங்கு ஆக்கம் எவனோ?

பொழிப்புரை : அறமெனும் பொதுநலவுணர்வு (உலக வாழ்க்கையில்) இதற்கு முன் இல்லாத பெருமையையும், பொதுமக்கள் மதிப்பையும், புகழையும் வாழ்வியல் நிறைவையும் ஏற்படுத்தித் தரும்; வாழ்க்கை நலத்திற்குரிய

செல்வத்தையும் தரும். எனவே மக்கள் உயிர் வாழ்க்கைக்கு அதைவிட ஆக்கம் தரும் முயற்சி வேறு என்ன உள்ளது? (எதுவும் இல்லை.)

சில விளக்கக் குறிப்புகள் :

1. **சிறப்பு** - என்பதற்குப் பரிமேலழகர் உள்ளிட்ட உரையாசிரியர்கள் 'வீடுபேறு' 'மோட்சம்' என்றும், பாவாணர், 'மறுமையில் விண்ணுலக இன்பத்தையும் வீடு பேற்றையும்' என்றும் பொருள் கொள்ளுவது பொருந்தாது. 'எல்லாப் பேற்றினும் சிறந்தமையின்' வீடு 'சிறப்பு' எனப்பட்டது என்று பரிமேலழகர் மேலும் அவ்வுரையையே மேம்படுத்திக் கூறுவது இன்னும் தவறு. அவ்வாறு பொருள் கொள்ளுவதற்கு அச்சொல் இடந்தராது; வேதமதம் சார்ந்த இட்டுக் கட்டிய பொருள் அது. இல்லாத கருத்தை நூலாசிரியர் மேல் ஏற்றுவது குற்றமுமாம் என்க.
2. **ஈனும்** - இதற்குமுன் இல்லாததைப் புதிதாகப் பெற்றுத் தரும். ஈனுதல் - பெறுதல்; கருவுயிர்த்தலுக்கு நேரிய சொல்.
3. **உயிர்க்கு** - மாந்த உயிர் வாழ்க்கைக்கு.
4. **ஆக்கம்** - ஊதியம் தருகின்ற முயற்சி.
5. பொதுநலவுணர்வொடும் அதையொட்டிய முயற்சியொடும் வாழ்வார், பலரது மதிப்பிற்கும் பாராட்டுதலுக்கும் புகழுக்கும் உரியவராவர் என்பதும், அவரது நேரிய சீரிய முயற்சிகளுக்கு அனைவரும் பொருள் வழியிலும் துணைநிற்பர் என்பதும் மறுக்கவியலாத உலகியல் உண்மையாகும்.
6. இஃது, அறவுணர்வைக் கடைப்பிடித்து ஒழுகுவதால் ஏற்படும் நன்மையைக் கூறியது.

o

நஉ. அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை அதனை மறத்தலின் ஊங்கில்லை கேடு. 32

பொருள் கோள் முறை : இயல்பு

பொழிப்புரை : ஒருவர்க்கு அறமாகிய பொதுநல உணர்வையும் அது தொடர்பான முயற்சிகளையும்விட, பலவாறான ஆக்கம் தருகின்ற வேறு

தனித்த முயற்சிகள் இல்லை. அதனைத்தவிர்த்து அவ்வாறு பொது நலவுணர்வோடு இயங்காமல் தன்னலவுணர்வோடு இயங்குவதனால் ஒருவர்க்கு வருவதைப் போல் வேறுகேடுகள் இல்லை.

சில விளக்கக் குறிப்புகள் :

1. **ஆக்கம்** - ஆகி வருகின்ற பல்வகைப் பயன்கள்.
2. **மறத்தல்** - செய்யாது தவிர்த்தல்; புறக்கணித்தல்; நினைவில் கொள்ளாமை.
3. **கேடு** - தன்னைப் பலவகையாலும் கெடுத்துக்கொள்கின்ற நிலைகள்.
4. இதுவும், அறத்தால் விளையும் நன்மையைக் கூறியதும், அதைக் கடைப்பிடியா விடத்து வரும் தீமையைக் கூறியதுமாகும். O

நஉ. ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாம் செயல். 33

பொருள் கோள் முறை :

அறவினை ஓவாதே, ஒல்லும் வகையான்
செல்லும் வாய் எல்லாம் செயல்.

பொழிப்புரை : பொதுநலஞ் சார்ந்த நல்ல செயல்களை எந்தக் காரணத் தானும் தவிராமல், அவரவரால் முடிந்த வகையிலெல்லாம் முனைந்து, எவ்வெவ் விடத்துத் தேவையோ, அவ்வவ்விடத்து, அவ்வவ் வழிகளிலெல்லாம் செய்து முடிக்க.

சில விளக்கக் குறிப்புகள் :

1. **ஒல்லுதல்** - 'ஒல்' (பொருந்து) என்னும் வேரடியாகப் பிறந்த சொல். ஒல் - ஒல்லு - ஒன்னு - ஒன்று - ஒன்றுதல் - ஒல்லுதல் பொருந்துதல், சேர்தல், இணைதல், இயலுதல்.

ஒல்லும் வகையான் : பொருந்திய, இயன்ற வகையிலெல்லாம், தன்

அறிவுக்கும் மனத்திற்கும் உடலுக்கும் பொருந்திய முடிந்த, இயன்ற வகையிலெல்லாம். என்னை? அறிவுக்குப் பொருந்தியது மனத்திற்கும், இரண்டிற்கும் பொருந்தியது உடலுக்கும் பொருந்தாமல், முடியாமல், இயலாமல் போகலாம் ஆகலின் முடிந்த வகையிலெல்லாம் என்றார்.

2. **அறவினை** - பொதுநலம் சார்ந்த நல்ல செயல்கள். 'வினை' என்பது விளைவுக்குரிய செயல். 'செயல்' என்பது செய்ய முடிந்த செயல். 'வினை' அறிவும் மனமும் தழுவியது; செயல் உடல் தழுவியது.

3. **ஓவாதே** - ஒழியாமல், தவறாமல், தவிராமல். 'உவ' (விரும்பு, ஏல்) என்னும் வேரடியாகப் பிறந்த சொல். உவத்தல் - விரும்புதல். உவாதல் - விரும்பாதல், ஏலாமல். தவிராமல், உவாதே - ஓவாதே. ஓய்வு - ஓவு (தொகுத்தல் திரிபு) - ஓவாதே - ஓய்வில்லாது, ஒழியாது என்று விளக்கியும் பொருள் கூறுவர்.

4. **செல்லும் வாய்** - செய்ய வாய்க்கும் வழியிலெல்லாம்; செய்ய வேண்டிய இடத்திலெல்லாம்.

5. **செயல்** - செய்க. முன்னிலை ஏவல், கட்டளைச் சொல். செயலுக்குக் கொணர். செய்து முடி.

6. இஃது, அறவுணர்வை எவ்வாறு செயற்படுத்துதல் வேண்டும் என்பதால் அவற்றின்பின் வைத்தார். O

நசஃ மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற. **34**

பொருள் கோள் முறை :

அனைத்து அறன் மனத்துக்கண் மாசு இலன் ஆதல்;
பிற ஆகுல நீர.

பொழிப்புரை : எல்லா வகையானும் அறம் என்பது ஒருவன் தன் மனத்தின் கண்ணே குற்றம் இல்லாதவனாக ஒழுகுவது. இதுவன்றி மனத்தே மாசு உள்ளவனாகவும், புறத்தே (அறவுணர்வு உள்ளவன் போல் புனைந்து கொண்டும் நடக்கும்) பிற கோலங்கள் செயல்கள் யாவும் (வெறும்) ஆரவாரத்தன்மை உடையனவாகும்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. **மனத்துக் கண் மாசு இலன் ஆதல்** - உள்ளத்தின் கண்ணே குற்றமுள்ள

எண்ணமும், தவறான நோக்கமும் இல்லாதவனாக இருப்பது; அவ்வாறே நடப்பது.

மனமது செம்மை யானால் மந்திரம் செபிக்க வேண்டாம்
மனமது செம்மையானால் வாசியை நிறுத்த வேண்டாம்
மனமது செம்மையானால் வாயுவை உயர்த்த வேண்டாம்
மனமது செம்மையானால் மற்றதும் செம்மை யாமே!

திருமந்.

- என்பார் திருமூலர்.

2. **அனைத்து அறம்** - அனைத்து வகையாலும். அதுவே அறத்திற்கு அடிப்படையாகும்; எனவே அதுவே அறம் ஆகும்.

3. **ஆகுலம்** - ஆகு + உலம் - ஆகிய ஒலி, பெருகிய ஒலி, வினைத் தொகை. உலம்புதல் - ஒலித்தல், ஆரவாரித்தல். தூய தமிழ்ச் சொல். வடசொல் என்பாரும் உளர்.

மனத்தில் மாசு என்பது கரவு, வஞ்சகம், ஏமாற்று நோக்கம், தீய நினைவு முதலியவை இருப்பது. மா - கறுப்பு - மாசு - கறுப்புப் போலும் கறைத் தன்மையான குற்ற உணர்வுகள்.

- இவை இல்லாதிருப்பின், எண்ணம், உரை, செயல் யாவும் குற்றமின்றி இயங்குமாகலின், மனந்தூய்மையே அனைத்து அற நிலைகளுக்கும் முதலானது, அடிப்படையானது என்றார்.

- மனம் மாசுற்றிருப்பின் உரை, செயல், தோற்றம் பிற யாவும் கரவும், பொய்ம்மையும், போலிமையும், வஞ்சகமும், ஏமாற்றும், தீமையும் கலந்து நிற்குமாகலின், பொதுமைநல விளைவும் பழுதுபட்டுப் போகும் ஆதலால், அந்நிலை கூடாது; அறத்திற்குக் கேடானது; வெளியே வெறும் ஆரவாரத்தை மட்டும் கொண்டது என்றார் என்க. மற்று, மனத்துக்கண் மாசு என்பதற்கு அடுத்த குறள் விளக்கம் தருகிறது.

மனத்துக்கண் மாசு இருத்தல் கூடாது என்பது நீர் காற்று முதலிய அனைவர்க்கும் உரியவாய மூலப் பொருள்களில் மாசு (Pollution) படுத்தல் கூடாது என்பது போலும் என்க. என்னை?

ஒலி, ஒளி எவ்வாறு அலை அலையாகப் பரவுகின்றனவோ, அவ்வாறே மனத்தினின்று எழும் எண்ண அலைகளும் மற்ற மனங்களுக்கும் பரவி அவற்றையும் தாக்கச் செய்கின்றன. அக்கால் தம் எண்ணங்கள் மாசுறின் பிறர் எண்ணங்களும் மாசுபட நேர்கின்றன. தமக்கும் பிறர்க்கும் நலம் பயப்பதே அறமாகலின், தம் மனமாசு பிறர் மனத்தையும் மாசுறச் செய்வது மனவுணர்வுக்கேடு (Pollution of mind) ஆகையால், அவ்வறமல்லாத

நிலை உருவாக எவரும் காரணமாக விருத்தல் கூடாதென்றார்.

ஒவ்வொரு மனமும் பிறர் மனங்களோடு தொடர்பு கொண்டுள்ளது என்பது மெய்யறிவியல் உண்மையும் அறிவியல் உண்மையும் ஆகும்.

'Each mind is a part of the universal mind. Each mind is connected with every other mind. Therefore, each mind is an actual communication with the whole mind'.

- Swami Vivekanandha's Lecture at Los Angeles - 8th Jan. 1900.

பேரண்ட மனத்துடன் தொடர்புகொண்டு இயங்குவது நம் மனம். இவற்றின் விரிவு விளக்கமெல்லாம் எம் நிறைவுரை யில் இடம்பெறும்.

இதனால் மெய்யான அறவுணர்வும், பொய்யான அறவுணர்வும் பிரித்துக் காட்டப்பெற்றன என்க.

O

ஈரு. அழுக்காறு) அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம். 35

பொருள் கோள் முறை : இயல்பு

பொழிப்புரை : அடுத்தவர்மேல் கொள்ளுகின்ற பொறாமை, அதன்வழித் தோன்றுகின்ற ஆசை, அது நிறைவேறாத விடத்து, மனம் முழுவதும் எப்பொழுதும் அளாவி நிற்கின்ற சினம்; அதன் விளைவாகப் பிறக்கின்ற கடுமையான, கொடிய சொற்கள் ஆகிய இவை நான்காலும் இழுக்குப் படாமல் இயங்குகின்ற நல்லுணர்வே அறமாகிய பொதுநல வுணர்வு.

சில விளக்கக் குறிப்புகள் :

இதற்கு முந்தைய குறளில், மனத்துக்கண் மாசு இல்லாமல் இருப்பது அறம் என்றவர், அம்மனத்தில் தோன்றும் மாசுகளை இதில் கூறினார்.

2. அழுக்காறு - குற்றமான போக்கு - பிறர் நலன்கள் கண்டு, பொறுத்துக் கொள்ளாமை - பொறாமை. மனத்தில் ஏற்படும் முதல் குற்றமே பொறாமைதான். இதுவே மனத்தின் பிற தவறான உணர்வுகளுக்கு அடிப்படையாக உள்ளது என்பதால், இதை முதலில் கூறினார்.

3. **அவா** - 'அவ்' என்னும் வேரடியாகப் பிறந்த சொல். அவ்வுதல் - ஒன்றைப் பற்றுதல். மனம் ஒன்றிலேயே பற்றுக் கொண்டு, அதிலேயே அழுந்தி நிற்றல் அவா ஆகும். அழுந்திய முதிர்ந்த ஆசை அவா.

- இஃது, அடுத்தவர்மேற் கொள்ளும் பொறாமையின் அடிப்படையில் எழுவது. அவர்க்கு உள்ளது தனக்கு வேண்டும் என்று அதன் மேல் செல்லும் மனவுணர்வு. இது மனத்தின் இரண்டாவது குற்றவுணர்வாகலின் அதன் பின் வைத்தார்.

4. **வெகுளி** - மனம் முழுவதும் அளாவிக் கன்ன்று கொண்டிருக்கும் சினம். இஃது, ஆசை நிறைவேறாத விடத்துத் தோன்றும் மனவுணர்வாகலின் மூன்றாவது குற்றமாகக் கூறினார்.

5. **இன்னாச் சொல்** - இனிய தல்லாத சொல். கடுஞ்சொல்; கொடுமையான சொல்; பிறர்க்குத் துன்பம் தரும் சொல். இது, பிறர்மேல் கொண்ட வெகுளியால் பிறப்பது - எனவே அடுத்துக் கூறினார்.

6. **இழுக்கா இயன்றது** - மேற்கூறிய மனத்தின் குற்றவுணர்வுகள் நான்கினும் இழுக்காமல் இயங்குவது. இழுக்காமல் - இழுக்கி விடாமல்.

இழுக்குதல் - தவறுதல், வழுக்குதல், சறுக்குதல், முன் சென்ற நிலை பின்னடைதல்.

7. தூய்மையாகவும் குற்றமின்றியும் நேர்மையாகவும் இயங்க வேண்டிய பொது நலவுணர்வாகிய அறவுணர்வு, மனத்தில் ஏற்படும் அழுக்காறு முதலிய குற்றங்களால் பின்னடைந்து இழிவுபட்டுவிடாமல் இயங்குதல் வேண்டும் என்றார்.

- ஒருவர் பொறாமை, ஆசை, வெகுளி, இன்னாச் சொல் முதலிய குற்றங்களை மனத்தில் வைத்துக்கொண்டு, அல்லது வளரவிட்டுக் கொண்டு, பொதுநல வுணர்வில் ஈடுபடல் இயலாது என்றார்.

8. இஃது, அறவுணர்வுக் கேற்படும் அகத் தாக்கங்கள் இவை, என்றது.

o

நகூ அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை. **36**

பொருள் கோள் முறை : இயல்பு

பொழிப்புரை : *(நமக்குரிய வாழ்வியல் தேவைகளை நாம் நிறைவு செய்து கொண்டு, இவ்வுலக நலன்களையும் இளமைக் காலத் துய்ப்புகளையும், நுகர்ச்சி பெற்றுப் பின்) முதுமையுற்ற காலத்தில் அப் பொது நல வுணர்வாகிய அறத்தைப் பற்றி அறிந்து, அதில் ஈடுபடலாம் என்று கருதாமல், (அறிவுணர்வும், உள்ளத்தின் ஊக்கமும், உடல் வலியும் உள்ள) இன்றே, அவ் வற முயற்சிகளை மேற்கொண்டு செய்க; (ஏனெனில் அது நமக்கு மகிழ்வு தரக்கூடிய கடமை மட்டுமன்றி) நாம் எதிர்பாரா வகையில், கேடடைந்து, தாழ்ச்சியுறுங்கால், நம்மைக் காத்து நிற்கின்ற துணையும் ஆகும்.*

சில விளக்கக் குறிப்புகள்:

1. **அன்றறிவாம் என்னாது அறம் செய்க:**

இளமைக் காலத்து, வாழ்க்கைக்கு வேண்டிய பொருள் தேடலும், மணமேற் கொண்டு இல்லறம் நடத்ததுதலும், வாழ்வைத் துய்த்தலும் ஆகிய கடமைகளும், துய்ப்பும் உளவாகையால், பிற்காலத்து அறத்தைச் செய்துகொள்ளலாம் என்னாது, 'ஒன்றே செய்க; அதுவும் நன்றே செய்க; அதுவும் இன்றே செய்க; அதுவும் இன்னே செய்க' - என்றவாறு அறம் நன்றெனத் தெளிந்த போதே ஆற்றத் தொடங்குக - என்றார் என்னை?

'மற்றறிவாம் நல்வினையாம் இளையம் என்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவாது அறஞ்செய்ம்மின்
முற்றி யிருந்த கனியொழியத் தீவளியால்
நற்காய் உதிர்தலும் உண்டு.

- நாலடி. 19

'- யாதும்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து'

- நாலடி. 92

'-ஆங்குத்தாம்
போற்றிப் புனைந்த உடம்பும் பயனின்றே
கூற்றம்கொண் டோடும் பொழுது.'

- நாலடி. 120

'ஒரும்ஐம் பொறியும் ஓம்பி உளபகல் கழிந்த பின்றைக்
கூர்ளரி கவரும் போழ்தில் கூடுமோ குறித்த வெல்லாம்'

- சீவக. சிந். 377

'நாளைச் செய்குவம் அறம்எனில் இன்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினும் நீங்கும்
இதுவென வரைந்து வாழ்நாள் உணர்ந்தார்
முதுநீர் உலகின் முழுவதும் இல்லை'

சிலப்.

'இளமையும் நில்லா யாக்கையும் நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமும் நில்லா
புத்தேள் உலகம் புதல்வரும் தாரார்
மிக்க வறமே விழுத்துணை யாவது?'

- மணிமே. சிறை. 135-138.

'தினைத்துணை யாயினும் செல்வமும் யாக்கையும்
நிலையா வென்றே நிலைபெற வுணர்ந்தே
மலையா வறத்தின் மாதவம் புரிந்தேன்'

- மணிமே. கச்சி. 98-100

'மின்னும் இளமை உளதாம் எனமகிழ்ந்து
பின்னை யறிவென்றால் பேதைமை - தன்னைத்
துணித்தாறுந் தூங்கா தறஞ்செய்க கூற்றம்
அணித்தாய் வருதலும் உண்டு.

- அறநெறி. 106

2. **மற்று** - ஓர் இணைப்பிடைச் சொல். நூலாசிரியர் போலும் நிறைமொழி மாந்தரும், மெய்ப்பொருளறிஞரும் ஆகியர் மிகக் குறுகிய பாவடிகளில், அசைநிலைகளைப் பொருளின்றிப் பயன்படுத்தாராகலின், இது பொருள்தரும் சொல்லே என்க. உரையாசிரியர் பிறர் கூறுவது போல் அசையன்று.

'அறமாகிய பொதுநலத் தொண்டு, செய்வார்க்கும் செய்யப் பெற்றார்க்கும் இன்பந் தருவதொன்றாகலின், இது நமக்கு மகிழ்வு செய்யும் கடமை' என்றுணர்த்தவும், மற்று, அது, நாம் தாழ்ச்சியுறுங்கால், நம்மைக் கேடடையாமல் காத்து நிற்பது', என்று அறிவுறுத்தவும், ஆகிய கருத்துகளையும் இணைத்துக் கூறுதற்கு இவ்விடைச்சொல்லைப் பயன்படுத்தினார் என்க.

அறம் செய்தார்க்கு இன்பந்தருவதை 'ஈத்துவக்கும் இன்பம்' என்னும் (228) குறளிலும் ஒத்துரைப்பார்.

3. **பொன்றுங்கால்:** பொன்றல் நேருங்கால். பொன்றல் - கேடடைதல், சீர்கெடல், தீமையுறுதல், தாழ்ச்சியுறுதல், அழிதல்.

– 'பொல்' என்னும் வேரடியாகப் பிறந்த சொல். பொல்லது - கெட்டது; பொல்லாதது - கெட்டது - தீமை, கேடு, தாழ்ச்சி, அழிவு.

– ஈண்டு, கேடு அல்லது தீமை அல்லது தாழ்ச்சி நேருங்கால் என்பதே பொருந்தும்.

இஃதன்றி, 'உயிர்போம் காலத்து, அதற்கு அழிவில்லாத துணையாம்' என்று பரிமேலழகர் முதல் பாவாணர் ஈறாகப் பலரும் உரை தருவது பொருந்தா தென்க.

என்னை? அறஞ் செய்தாரும் உயிரழிவதும், அக்கால் அறம் அதை அழிய விடாது காத்தல் இல்லையாம் என்பதும், உயிரியங்கியல் உண்மையாதல் காண்க.

இனி, உயிரழிவின் பின் பொன்றாது நிற்பது 'புகழ்' என்பதும் உயிர் காத்தலாகாது. அது, புகழுக்குரிய தனிச்சிறப்பும் இலக்கணமுமாகலின் என்க. அத்துடன், 'புகழல்லால் பொன்றாது நிற்ப தொன்றில்' (233) என்று அவரே உரைப்பதும் காண்க.

– இனி, பொன்றுதல் என்னும் சொற்கு அழிதல் என்னும் பொருளை 156, 233 ஆகிய குறட்பாக்கள் தருமேனும், கெடுதல், தாழ்ச்சியுறுதல் என்னும் பொருள்களையும் 171, 886 ஆகிய குறள்களும் தருதல் ஓர்க. ஈண்டும் அதுவே பொருந்து பொருளும் என்க.

– இனி, பரிமேலழகர் ஈண்டு, பொன்றுதற்கு அழிதல் பொருள் கண்டது, ஆரிய தர்மக்கோட்பாட்டை நிலை நிறுத்தவும், வேத மதத்திற்கு வலிவு சேர்க்கவுமே என்க.

'பின்னை உயிர் அழிவதில்லையோ?' என்பார்க்கு விடை வேறாம் என்க. அது பற்றிய உண்மையினை எம் நிறைவுரையிற் காட்டுதும்; ஆண்டுக் காண்க.

4. துணை - உயிரழிவு நேராது தடுத்தாற் கன்றி, உடல் கேடடைந்து சீருறும் அல்லது நலமடையும் முயற்சிக்கே அறம் துணையாக இருத்தல் இயலும். மற்று உயிர் அழிவுறுங்கால் - இறக்குங்கால் - எனின், அறம் துணை நிற்பதென்பது தேவையின்றாம். எனவே அது பொருளும் ஆகாதாம் என்க.

ஈண்டு, பரிமேலழகர், 'பொன்றாத் துணை என்றார், செய்த உடம்பு அழியவும், உயிரோடு ஒன்றி ஏனை உடம்பினுட் சேறலின்' என்று எழுதுவது குழப்பலும் உழப்பலும் மழுப்பலும் கூடிய உரை என்க.

பொதுநலத் தொண்டு செய்வார் - அஃதாவது அறஞ்செய்வார் - ஏதோ ஒரு வகையில், ஒரு நிலையில் உடல்நலக் கேடடையினும், பொருள்நிலைத் தாழ்ச்சியுறினும், மற்றுப் பிறவாறு இடுக்கட் படினும்,

அவரின் அறத்தொண்டால் உவகையும் பயனும் பெற்ற அனைவரும், அவர்பால் நெருங்கி, அவர்க்குத் தோன்றாத் துணை நின்று, அவரை அவ் வவலத்தினின்றும், அத் தாழ்ச்சியினின்றும், மீட்டெடுப்பர் என்பதையே இங்குப் பொன்றாத் துணை' யென்று குறிப்புணர்த்தினார் என்க.

O

ந.எ. அறத்தாறு) இதுவென வேண்டா சிவிகை பொறுத்தானோடு) ஊர்ந்தான் இடை 37

பொருள் கோள் முறை :

சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை
அறத்தாறு இதுவென வேண்டா.

பொழிப்புரை : சிவிகையை (பல்லக்கை)ச் சுமந்து செல்பவர்கள், அவர்களுடன் அதில் ஏறிச் செல்பவன் ஆகிய இருவர்க் கிடையிலும் உள்ள இரு வேறு நிலைகளைக் கண்டு, (இவ்வாறு ஒருவன் ஏறிச் செல்வதும், சிலர் அவனைச் சுமந்து செல்வதுந்தாம்) முன்னர் அவரவர் செய்த அல்லது செய்யாதொழிந்த அறத்தின் தன்மையும், அதன் பயனும் பயனின்மையும் ஆகும் என்று கருதிவிடல் வேண்டா. (இவ்விருநிலைகளும் செய்தொழில் வேறுபாட்டைச் சார்ந்தனவாகும்.)

சில விளக்கக் குறிப்புகள்:

1. ஒருவன் பல்லக்கில் ஏறிச் செல்வது அவன் முன்னர்ச் செய்த அறத்தின் நன்மையும் அன்று; அவனைச் சிலர் தூக்கிச் செல்வது அறஞ்செய்யாமையான் அமைந்த தீமையும் அன்று. அல்லது இவ்வாறான உலகியல் தொழிலமைப்பு, வேறுபாடுகள் அறச் செயல்களின் விளைவுகளும் ஆகா என்னும் உண்மையை உணர்த்தவே எல்லார்க்கும் புலனாகிய எளிய இவ்வெடுத்துக்காட்டினைப்போல் கூறினார் என்க.
2. தமிழியலின் அறக்கோட்பாடு உண்மைநிலை திரிந்து, ஆரியவியலின் 'தர்ம'க் கோட்பாடு தமிழகத்தில் தலைக்கொண்ட பின், சிவிகையில்

ஊர்ந்தவன், அதைச் சுமந்தவன் ஆகிய இரண்டு நிலைகளுக்குமிடையில் 'கர்மா'க் கொள்கையை வலியுறுத்தி, இவை புண்ணிய பாவத்தின் செயல்கள் என்ற கருத்து, வெளிப்படையாகப் பேசப்பெற்றிருத்தல் வேண்டும்.

"அதனை மறுத்துரைக்கும் நோக்கத்தான், நூலாசிரியர், 'இஃதன்று அறவழியான் அமைந்த செயல்; அறவழிக்கும் இவ்வுலகியல் தொழில் முறைக்கும் தொடர்பில்லை; இதுவேறு; அதுவேறு'' என்று இவ்வெடுத்துக்காட்டின்வழி விளக்கினார் என்க.

'சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்' (972) என்று ஆரியவியலின் பிறப்பியல் கொள்கையைக் கண்டிக்கும் பிறிதோரிடத்தும் இதை வலியுறுத்தினார் என்க.

'பல்லக்குச் சுமப்பவனிடம் அறத்தின் மெய்ப் பண்பைக் காணலாம்; பல்லக்கில் ஏறிச் செல்பவனிடம் அறக்கேட்டின் பண்பைக் காணலாம்' என்பது நூலாசிரியர் கருத்தாதல் வேண்டும்.

3. இனி, பரிமேலழகர், 'அறத்தாறு இதுவென வேண்டா' என்பதற்கு, 'அறத்தின் பயன் இதுவென்று யாம் ஆகம (நூல்) அளவையின் உணர்த்தல் வேண்டா' என்றும்

'சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை' என்பதற்கு 'சிவிகையைக் காவுவானோடு (தூக்கிச் செல்வானோடு) செலுத்துவானிடை (ஏறிச் செல்வானிடை)க் காட்சியளவை தன்னானே உணரப்படும்' என்றும், இட்டுக்கட்டிப் பொருள் தருவது, பரிமேலழகரது ஆரியவியலின் 'கர்மா'க் கோட்பாட்டை உணர்த்தவே என்க.

அப் பொருளுரைக்கு அந் நூலுரையில் அடிப்படையில்லை யாகலான், அது பொருந்தாவுரையும் என்க.

மேலும் 'அறத்தாறு' என்பது அறவழி என்றுதான் பொருள் பெறுமேயன்றி, அறப் பயனையோ பயனின்மையையோ முழுமையும் அது குறிக்காது என்றும் அறிக.

இனி, பாவாணரும் பரிமேலழகரையே ஒட்டியுரைத்து, 'இதுவே ஆசிரியர் கருத்து' என்பதை வலியுறுத்தி, 'அதற்கவர் ஆங்காங்கு நூலுள் கூறும் கூற்றுகளையும், பல்பிறவியும், பழவினையும் பற்றி அவர்க்கிருந்த நம்பிக்கையையும் கூறி, அதன் மேலும், இடைக் காலத்து ஔவையார் பாடலையும், கிறித்தவத் துறவியார் போப் அவர்களின் மொழிபெயர்ப்பையும் சான்று கூறி, அக்கருத்துக்கு வலிவூட்ட முயன்று, இறுதியில்,

"பல்லக்கைச் சுமப்பாரையும் அதில் ஏறிச் செல்வானையும் காட்டி, 'இதுதான் அறத்தின் பயன் என்று கூறாதே' என்னும் உரை

இக்காலத்திற் கேற்குமே யன்றி ஆசிரியர் கருத்தாகாது" என்று பொத்தாம் பொதுவில் கூறியிருப்பதும் மதவழிப்பட்ட மயக்கக் கூற்றே என்று மறுக்க.

அவர்களிருவரும் 'அறம்' இன்னதெனத் தெள்ளிதின் உணராது, ஆரிய வியல், 'தர்ம'க் கோட்பாட்டையே தமிழியல் 'அறமா'கக் கொண்டதாலும், கண்டதாலும் வந்த மருளால் விளைந்த விளைவாம் அஃதென்றும் தெளிக.

என்னை? **தத்தம் வாழ்வியல் நோக்கத்துடன் செய்யப்பெறும் எந்தச் செயலும் அல்லது தொழிலும் அறமாகாது என்பது தெளிக. பொது நலம்கருதிச் செய்வதே அறம்.**

சிவிகை ஊர்வதும், பொறுப்பதும் எந்தப் பொதுநலம் க்ருதிய செயலும் அன்று. ஆகையான், ஆங்கு அறமும் இல்லை; அறத்தின் பயனுமில்லை என்று உறுதியின் உரைக்க.

இவை பற்றி மேலெழும் அனைத்து ஐயங்களுக்கும் ஆன விளக்கங்களும் விரிவும் இதன் மிகு விரிவாகிய **நிறைவுரை**யுள் கூறப்பெறும் என்று உணர்க.

o

ந.அ. வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்கும் கல். 38

பொருள் கோள் முறை : **இயல்பு**

பொழிப்புரை : செய்யத் தவறும் நாள்இடையீடு இல்லாமல், நல்லனவாகிய (பொதுநல) அறச் செயல்களை ஒருவன் தொடர்ந்து செய்து வருவானானால், அஃது, அவன் எஞ்சிய வாழ்வுக் காலத்தில் செய்ய வேண்டிய வழியிலுள்ள பள்ளங்களை மூடி அடைவு (நிறைவு) செய்து கொள்ள உதவும் கல் போன்றதாகும். (அந்நிலையில் அவன் செல்லும் வழி சமநிலைப்பட்டு, அவன்வழிச் செலவை எளிதாக்கும்)

சில விளக்கக் குறிப்புகள் :

1. மக்கள்நலம் கருதும் பொதுவுணர்வுடன் கூடிய அறத்தொண்டில் இடையீடின்றித் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ளும்

அறவோர்க்கு அவர்களின் எஞ்சிய வாழ்க்கையின்வழி, மேடு பள்ளங்களின்றிச் சமநிலையாகி, எளிமையான செலவுக்கு (போக்குக்கு) உகந்ததாகிவிடும் என்பது இதன் திரண்ட கருத்தாகும்./

இச் செய்யுளில் உவமை உவமேயத்துடன் கலந்து உருவகமாகி நின்றது.

2. **வீழ்நாள்** - செய்யத் தவறும் நாள். செய்யாது ஒழியும் நாள்.

3. **படாஅமை** - படாமல், இடையீடு படாமல். 'அ' செய்யுளிசை அளபெடைக் குறியீடு.

4. **நன்று ஆற்றின்** - எல்லார்க்கும் நலந் தருகின்ற பொதுநல அறச் செயல்களைச் செய்யின்.

5. **அஃது** - அவ்வறச் செயல்கள் செய்யும் கடமை தவறாத நிலை.

6. **வாழ்நாள்** - மாந்த உயிர் உலகில் தோன்றி மறையும்வரை வாழ்வதற்குரிய காலம். நாள்.

- மாந்தப் பிறவி தவிர மற்ற கீழ் நிலை உயிர்கள் உயிரோடு இருப்பதற்கு **வாழ்க்கை** என்று பெயரில்லாததைக் கருதுக. அவற்றினது 'உயிர்க்கும் நாள்' எனப்பெறும்.

ஈண்டு வாழ்நாள் என்பதற்குப் பரிமேலழகர் உள்ளிட்ட பலரும், 'அனைத்துப் பிறவிகளும் உடம்போடு உயிர் தொடர்பு கொள்ளும் நாள்' என்று பொருள் கூறுவர்.

அஃதாவது, 'அறியாமை (அவிச்சை, அஞ்ஞானம்), செருக்கு (அகங்காரம்), அவா (ஆசை), விழைவு (விருப்பு), வெறுப்பு - என்னும் ஐவகைக் குற்றங்களால் வருகிற நல்வினை, தீவினை என்னும் இருவகை வினைகளும் உள்ளவரைக்கும், உயிர் உடம்போடும் கூடிநின்று, அவ்விரு வினைகளின் பயன்களாகிய இன்ப, துன்பங்களிரண்டையும் துய்க்கும் ஆதலால், அக்காலம் முழுவதும் வாழ்நாள்' என்று பரிமேலழகர் போலியர் விரித்து விளக்கப்படுத்துவது பொருந்தாது.

- மேலும், குறள் 326-இல் வரும் 'வாழ்நாள்' என்பதற்கு 'இக்கால் பிறந்து வாழும் நாள்' என்றே பொருள் கூறும் பரிமேலழகர், இங்கு மட்டும், 'அனைத்துப் பிறவிகளையும் உள்ளடக்கிய வாழ்வு நாள்' என்று எவ்வாறு பொருள் கொண்டார் என்பது அவர்க்கே புலனாம் என்க.

7. **வழியடைக்கும் கல்** - வாழ்க்கையில் உள்ள பள்ளங்களை அடைவு செய்து நிரவல் செய்ய உதவும் கல்.

இதைப் பிறவிவழியைத் தடுத்து நிறுத்தும் கல் என்பது சிறிதும் பொருந்தாது என்க.

- நூலாசிரியர்க்குப் பல்பிறவிக் கொள்கை உண்டு எனினும், 'பிறப்பறுக்கல்' என்னும் முயற்சி, வாழ்வியல் துறந்த துறவிகளுக்கே உடையதாகவும் சிறப்பாகவும் நூலுள் பலவிடங்களில் காட்டியுள்ளார்.

'பிறப்பறுக்கல்' விரும்பியார்க்கு உடம்பும் மிகை (345) என்றவர், அவ் வுடம்போடு கூடி, 'வீழ்நாள் படாது நன்றாற்றுதல் செய்வது பிறப்பறுக்கும்' என்று கூறுவதாகக் கருதுவது முரணுமன்றோ? என்னை? உடம்பிருந்து தானே நன்றாற்றுதல் இயலும். அவ்வாறு நன்றாற்றல்தானே பிறப்பறுக்க உதவும். அஃதாயின், மிகையான உடம்பைக்கொண்டு நன்றாற்றுதல் செய்தல் வாழ்நாள் வழியடைக்கும் என்று எங்ஙனம் கூறுதல் செய்வார்? ஓர்க.

- இனி, 'பற்றறுத்தல்தான் பிறப்பறுக்கும்' (349), என்பார், உடம்பிருந்து அறஞ்செய்தல் எவ்வாறு பற்றறுத்தல் ஆகும் என்று கூறுவார்? இதனையும் ஓர்க.

அடுத்து, 'செம்பொருள் (ஞானம்) காண்பதே பிறப்பறுக்கும்' (358) என்பவர், உலகியல் தொடர்பால் நாளும் அறஞ்செய்வதும் பிறப்பறுக்கும், என்று யாங்ஙன் கூறுவார்? ஓர்க.

- இவ்வாறு ஈண்டு எடுத்துக்காட்டிய கருத்துகளின் முடிவுகளால், 'பிறப்பறுக்கல் துறவியருக்குரிய பற்றறுக்கும் கடிய முயற்சி' யென்பதும், 'வாழ்வியலுக்கு அது தேவையின்று' என்பதும், ஆகையினால், 'வாழ்நாள் வழியடைக்கும் கல்' என்று, அவர் இங்குக் கூறியது, 'பிறப்பறுக்கும் முயற்சியை அன்று' என்பதும், 'இயல்பினான் வாழும் (47) முயற்சியே அறம் செய்வதற்கு இயல்வதாம்' என்பதும், அதுவே'வாழ்வைச் சமநிலையுடையதாக்கி, எளிமையும் பயனும் உடையதாகச் செய்யும்' என்பதுமே ஆசிரியர் கருத்தாதல் பெற்றாம் என்க.

- இவ்விடத்துச் சிற்சிலர் கொள்ளும் 'வழியடைக்கும்' என்பதற்கு, 'வழியமைக்கும்' என்று பாடங் கொள்ளின், கருத்து வேறுபாடு எதுவும் நிகழ்தற்கில்லை என்றும் கூறலாம் என்க.

- மேலும், துறக்கம் எனப்பெறும் வீடுபேறு பற்றி எதுவும் கூறாது, முழுவதும் உலக வாழ்வியலுக்காகவே செய்யப்பெற்ற இவ்வரிய நூலின்கண், நூலாசிரியர் உயிர் வாழ்க்கையையோ, பிறப்பையோ, எங்கும் எந்நிலையிலும், பழித்தோ, இழித்தோ, தாழ்த்தியோ கூறிற்றிலர்.

மாந்தப் பிறவியைத் தாழ்த்திப் பேசுதல் தமிழியல் அன்று. **'வாய்த்தது நந்தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்'** என்பார் திருநாவுக்கரசர்.

அஃது ஆரியவியலின் வேதமதக் கொள்கை என்க. ஆரியரின் வேதமதம் இற்றை 'இந்துமதம்' எனும் புதுப்பெயர் பூண்டு வழங்கும்.

- ஆனால், அதற்கு மாறாக வாழ்க்கையை உயர்த்தியும், பெருமைப்படுத்தியும் சிறப்பித்தும் தேவையென வலியுறுத்தியுமே, தெளிவாகவும், உறுதியாகவும், நூலுள் பலவிடங்களில் அழுத்தமாகக் கூறியுள்ளார். அவற்றுள் கீழ்வருவன சில:

அ) பழிவந்து சேரவிடாமல், வந்து சேரும் வாழ்வியல் நலன்களைப் பிறர்க்கும் பகுத்துக் கொடுத்து வாழ்பவர் குறையில்லாத நிறைவாழ்க்கை உடையவராவார். (44)

ஆ) பொதுமை நலம் கருதிய அறவழியிலே ஒருவன் இல்வாழ்வை நடத்துவானானால், அவன் துறவு மேற்கொள்வதால் பெறும் பயன் ஒன்றுமில்லை. (46) இங்குப் பிறப்பறுத்தலையும் உள்ளடக்கியே கூறுவார்.

இ) இயல்பான குண நல முயற்சிகளுடன் வாழ்பவன் தவஞ் செய்யும் துறவிகளைவிட மேலானவன். (47)

ஈ) பொதுநல அறவாழ்வு மேற்கொண்டு வாழ்பவன், வீடு பெற நோற்கின்ற துறவியரைவிடத் தவப்பேறு பெற்றவனாவான். (48)

உ) அறவாழ்க்கை என்று சிறப்பித்துக் கூறுவதெல்லாம் இல்லறத்தைத் தானே தவிர வேறு எதனையும் இல்லை. (49)

ஊ) இவ்வுலகத்தில் வாழ்கின்ற முறையுடன் வாழ்பவனே வானில் இருப்பதாகக் கூறும் தெய்வங்களுடன் வைத்துப் போற்றப் பெறுகிறான். (50)

எ) 'துறக்க உலகம்' 'வீட்டு உலகம்' என்று பிறராலும், 'மோட்ச உலகம்' என்று வேதியராலும் உள்ளதாகக் கற்பித்துக் கூறப்பெறும் மேலுலகம் பெறுதற்கு வாய்ப்பில்லை எனினும், ஒருவன் பிறர்க்கு ஈதல்தான் நன்று; அது மற்று நல்ல வழிக்கே எனினும், பிறரிடமிருந்து பெறுவது தீது ஆகும். (222) (இவ்விடத்து, நேர்க்காட்சியாகவும் உண்மையாகவும் உள்ள வாழ்க்கையைவிட, மேலுலகம் செல்வதை அவர் ஒப்புக் கொள்ளவில்லை என்பது தெளிவாகப் புலனாகும் என்க.)

ஏ) ஈதலும், அதனால் பெரும்புகழ் பெற்று வாழ்தலும் தவிர, உயிர்களுக்கு (கவணிக்கவும்) உடம்பு தவிர்ந்த உயிர்களுக்கு வேறு ஊதியங்கள், நலன்கள் என்பனவாக எவையும் இல்லை. (231)

ஐ) ஒருவன் இவ்வுலகத்திலேயே வாழ்ந்து புகழ் பெறுவதே உண்மை. இது நிகழுமாயின், தேவருலகம் என்று வைதிகர்கள் கூறும்

மேலுலகம், அங்குச் செல்வதாகக் கூறும் 'ஞானி'களைக்கூட மெய்யாகப் போற்றுவதில்லை. (234)

ஒ) உலகம் எவ்வழியில் எவ்வகையில் எவ்வாறு எப்படி இயங்குகின்றதோ, அது கண்டு, அவ்வாறு இயங்குவதே அறிவு. (426) (இங்கு உலகியல் தவிர்த்த வேற்றுலகக் கற்பனை அளவைகள் புறந்தள்ளப்பெறுகின்றன என்பது. காண்க.)

- இங்கெடுத்துக் கூறியவற்றால், **'வாழ்நாள்'** என்பது இப்பொழுதே இங்கேயே வாழ்ந்து கொண்டிருக்கும் **'வாழ்க்கைக் காலம்'** என்பதும், **'வழியடைக்கும் கல்'** என்பதற்குப் **பிறவி வழியை அடைத்துவிடும் கல்'** என்று பொருள் கொள்வது தவறு என்பதும், அது 'வாழ்க்கை வழியை அடைவு செய்ய - நிறைவுறச் செப்பம் செய்ய - சமமாக ஆக்க - தாங்குதற்கு உதவும் கல், என்றே பொருள் தரும் என்பதும் பெற்றாம் என்க.

- **அடைக்கும் கல்** என்பதற்குத் திரு. வி.க.வும் தம் திருக்குறள் விரிவுரையில் 'அமைக்கப்படும் கல்' என்றே பொருள் கொள்வர். 'வாழ்நாள் வழியைத் தாங்குதற்குரிய 'அடைகல்' என்றபடி' என்பார்.

'ஆமையாய் மேருத் தாங்கி
அடைகலாய்க் கிடந்த போது'

- சிவஞான சித்தியார்.

'அடைகலான் ஆமையாக்கி'

- தக்கயாக பரணி.

- இனி, அடைத்தல் என்னும் சொற்குப் பள்ளத்தை அடைவு செய்தல், நிரப்புதல் என்றும் பொருளிருப்பது, 'பொந்துகளை அடைக்க', 'புரையை அடைக்க' 'பள்ளத்தை அடைக்க' 'சந்துகளை அடைக்க', 'குழியை அடைக்க', என்னும் உலக வழக்குகளையும் ஒப்பிட்டு உணர்க.

8. அற வாழ்க்கை, நம் வாழ்க்கை நிலைகளை எளிதாக்கிச் சமநிலைப்படுத்தும் என்பதை இதனால் உணர்த்தினார் என்க.

O

நகூ. அறத்தான் வருவதே இன்பம்மற் றெல்லாம்
புறத்த புகழும் இல. 39

பொருள் கோள் முறை : **இயல்பு**

பொழிப்புரை: பொது நலம் கருதிய அறச் செயல்களால் ஆகி வருவதே (மனத்திற்கும் அறிவிற்கும் உடலுக்கும்) இன்பம் பயப்பது; அஃதன்றிப் புகழும் விளைப்பது. மற்று, தன்னலம் கருதிய ஏனைச் செயல்களால் வருவன எல்லாம் இன்பந் தருவன அல்ல என்பதுடன் துன்பமும் பயப்பன; அஃதன்றிப் புகழல்லாது இகழும் தருவன.

சில விளக்கக் குறிப்புகள் :

1. **அறத்தான் வருவதே இன்பம்** - பொதுநலம் கருதிய அறச் செயல்களால் ஆகிவருவதே இன்பத்தைத் தருவதாகும். அறத்தான் வருவதே இன்பம் என்றதால், அறத்தான் வருவதே பொருளும் என்றாயிற்று.

> **'அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்**
> **புல்லார் புரள விடல்'** *(755)*

என்று ஆசிரியர் கூறுவதையும் கருதுக.

அறச்செயல்களால் ஆகி வருவன, உணர்வாயினும், பொருளாயினும், பிறர் நலன்களாயினும், அவையே மனத்திற்கும் அறிவிற்கும் உடலுக்கும் இன்பவுணர்வை ஊட்டக் கூடியனவாம் என்க. இதனால் எத்தகையானும், எவ்வழியானும் இன்பம் பெறலாம் என்னும் கருத்தை மறுத்தார் என்க.

பிறர்க்கு நலம் கருதினோம், செய்தோம் என்பது மனத்திற்கும், இன்னவகையில் அவை பிறர்க்கு நலத்தையும் மகிழ்வையும் தந்தன என்பது அறிவிற்கும், இவற்றுக்காக இயங்கியதும் முயன்றதும் உடலுக்கும் இன்பம் பயப்பன வாகும். இன்பம் என்பது உணர்வு நிறைவு; துன்பம் என்பது நிறைவேறா உணர்வு.

2. இங்கு, இன்பம் என்பதை, 'இல்லறத்தோடு பொருந்தி வரும் இன்பம் - அது காம நுகர்ச்சி என்று பரிமேலழகர் குறிப்பதும், அதைத் தொடர்ந்து சில விளக்கங்கள் தருவதும், அறவே பொருந்தா வென்க.

பொதுப்படக் கூறிய அறத்தைச் சிறப்பாக இல்லற வின்பத்திற்குக் கூறுவது, பொதுவறத்தைக் குறைத்து மதிப்பிடுவதாகும். இவ்வாறு கூறவேண்டிய தேவையும் இங்கில்லை.

- இதுபற்றி அறிஞர், பன்மொழிப் புலவர் கா. அப்பாத்துரையார் தம் மணிவிளக்க வுரையில் கூறும் விளக்கம் இங்குக் கவனிக்கத் தக்கது. அது வருமாறு:

> "காமம் ஒன்றையே பரிமேலழகர் இன்பமாகக் கொண்டார். இல்லறத்தானுக்குத் தன் மனைவி மூலம் வரும் அதுவே, அறத்தொடு வரும் இன்பமாம்; அது இன்பம் தருமாம்;

புகழும் தருமாம்; துறவி என்பவன் மனைவியில்லா தவனாதலால் பிறர் மனைவி மூலம் தேடும் காமம் அறமல்லாமல் வரும் இன்பமாம்."

"மிகச் சிறந்த உரையாசிரியரான பரிமேலழகர் இடைக்காலப் போலி ஆத்திகத்தை அணைத்ததனால் அடைந்த அவக் கேட்டினை இக் குறட்பாவிலேயே உச்ச அளவில் காணலாம்."

"தெய்வத் திருக்குறளை எத்தகைய பழிகேடான கயமைக் கருத்துகளுக்கு அவர் இழுக்கிறார் என்பது மேலே காட்டப்பட்டுள்ளது".

- (பக். 915)

இனி, பாவாணரும் இதைச் சிற்றின்பம் என்று இகழ்ந்து கூறியதும் இழுக்கே.

3. **மற்றெல்லாம் புறத்த** - அறமல்லாத வழிகளில் வருவன எல்லாம் வேறுவேறு விளைவுகளை உடையன.

- பொதுநலம் கருதிய அறமுயற்சிகள் உண்மை, நேர்மை, ஊக்கம், விடாமுயற்சி, ஒழுக்கம், நடுவுநிலைமை என்னும் அறவுணர்வுகளின் அடிப்படையில், நல்வழிகளில் நிகழ்வனவாகலின், அவற்றால் வருவன உலகியல் அளவில் சிற்சில கால் துன்பமாகவே விருப்பினும் அவை மனத்திற்கு இன்பம் சேர்ப்பனவே என்றுணர்க.

- அவ்வாறு பொதுநலம் கருதாமல், தன்னலம் கருதிய மற முயற்சிகள், பொய்ம்மை, நேர்மையின்மை, பழி, இழுக்கம், நடுவுநிலையின்மை முதலிய மறவுணர்வுகளின் அடிப்படையில், அவ்வழிகளில் நிகழ்வன வாகலின், அவற்றால் வருவன உலகியல் அளவில், சிற்சில கால் இன்பமாகவே இருப்பினும் அவை தமக்கும் பிறர்க்கும் உள்ளத் தளவிலும் செயலளவிலும் துன்பமே விளைப்பனவாம் என்றும் உணர்ந்து கொள்க.

– இனி, புறத்த என்றதால், துன்பம் மட்டிலன்றிக் களவும், கொலையும், தண்டமும் விளைவிக்கும் கொடுமைகளையும் உள்ளடக்கினார் என்க.

4. **புகழும் இல** - அறங்கருதாமல் மறங் கருதிய செயல்களால் வருவன, போலிப் பெருமையும் புரைசேர் விளம்பரமும் ஆகலாமெனினும், அவை நிலையான இன்பத்தையும் அழியாத நீடிய புகழையும் தாரா வென்க.

5. முன்னைய குறளில் பொது நலம் கருதுவார்க்கு வாழ்க்கை

வழியெல்லாம் நிரவலும் சமமும் ஆகும் என்றவர், அவற்றால் விளையும் நன்மைகளாகிய நிலையான இன்பத்தையும் நீடு புகழையும் இதில் கூறினார்.

o

கo. செயற்பால தோரும் அறனே ஒருவற்கு உயற்பால தோரும் பழி.

40

பொருள் கோள் முறை :

ஒருவற்குச் செயற்பாலது ஒரும் அறனே;
உயற்பாலது ஒரும் பழி.

பொழிப்புரை : ஒருவன் தான் செய்ய வேண்டுவதாக ஆய்ந்து, கொள்ள வேண்டியது, பொதுநலம் கருதும் அறச் செயலையே! அதேபோல், ஆய்ந்து, செய்யாமல் தள்ள வேண்டியது உலகோர் பழிக்கின்ற தவறான செயலையே.

சில விளக்கக் குறிப்புகள் :

1. **ஒரும்** - ஆய்ந்து, கொள்ளும்.

'ஒரும்' என்பன இரண்டும் அசைச் சொற்கள் என்று தவிர்க்க வேண்டுவதில்லை.

'சொல்லற்க சொல்லில் பயனில்லாச் சொல்' (200) என்னும் கருத்துடையார் செய்யுள் நிறைவுக்கு அசைகளை வையார்.

ஓர்தல் - ஆராய்தல், 'மின் ஓரும் கண்ணாக'. **-கலி. 49-12.**

திரு. வி.க.வும் இதனை ஒப்புவர்.

"ஒரும் இரண்டையும் அசைநிலையாக் கொண்டனர் பழைய உரையாசிரியர். சுருங்கிய குறட்பா ஒன்றில் ஒரே அசைநிலையை இரண்டு முறை பெய்ய ஆசிரியர் உளங் கொள்வாரோ என்பது சிந்திக்கத் தக்கது" என்று மேலும் அவர் விளக்கம் கூறுவர்.

- திருக்குறள் விரிவுரை பாயிரம் பக். 359

– பொதுநலம் கருதும் அறச் செயலை ஆராய்ந்து செய்ய வேண்டும் என்றது.

சில பொதுநல வுணர்வுகளும் செயல்களும், தன்னலத்தின்,

அடிப்படையிலேயே தோன்றி இயங்குவதால் என்க.

எனவே, ஒவ்வொரு பொதுநல வுணர்வையும் செயலையும் 'இஃது அறந்தானா அஃதாவது இது பொதுநலம் கருதியது தானா' என்று தன்னாய்வு செய்து, கொள்ள வேண்டும் என்றார்.

அது போலவே உலகோர் பழிக்கின்ற தவறான செயலையும் தவிர்க்குமுன் ஆய வேண்டும் என்றது, தன்னலம் போல் பிறர் பழி கூறிவிடுவதாலேயே உண்மையான சில பொதுநலவுணர்வுகளும், செயல்களும் தவிர்ந்துவிடக் கூடாவென்பதற்காகவும் என்க.

– அஃதாவது, தன் பொதுநலச் செயல்களுக்கு ஓர் ஊர்தி தேவை என்று கருதுவான் ஒருவன், அதன் செலவைத் தனக்கோ, தன்னைச் சார்ந்தார்க்கோ பயன்படுத்துவது சரியன்று என்று ஆய்ந்தெண்ணித் தவிர்ப்பதும், அதைப் பொது நலச் செயல்களுக்கே பயன்படுத்துவதை ஏற்பதும், முதனிலை ஓர்வுக்கு (ஆய்வுக்கு) எடுத்துக்காட்டு.

– இல்லாதார்க்கு உண்டி, உடை தருதற்கும், கல்லாதார்க்குக் கல்வி நலம் கொடுத்தற்கும் முயன்ற ஒருவன், அதற்கெனத் திரட்டும் அல்லது திரளும் ஈட்டத்தில், தானும் பயன்கொள்ளுவதாகக் கூறும் பழியை மறுத்துத் தன்னலமின்மையை மெய்ப்பித்து, மேலும் அதிலீடுபாடு காட்டுவதன்றிப் பிறர் பழித்தார் என்பதனான், தான் கொண்ட அறச்செயலைக் கைவிடலாகாது என்பது, இரண்டாம் நிலை ஓர்வுக்கு எடுத்துக்காட்டு.

2. - இஃது உண்மை அறச்செயல்களால் வரும் நற்கூறுகளையும், போலி அறச்செயல்களால் வரும் பழிக்கூறுகளையும் ஒருவன் ஆராய்ந்து அதில் ஈடுபட வேண்டும் எனும் எச்சரிக்கை கூறியது என்க.

o

அ-2. இல்லறவியல்

அ-2 இல்லறவியல் - 2

இயல் முன்னுரை:

அறம் எனப்பெறும் பொதுமை நலவுணர்வு, ஒருவர் உள்ளத்துத் தோன்றின், அதைச் செயல்படுத்த விரும்பும் ஒவ்வொருவரும், அதற்கெனச் சில வாழ்வியல் அடிப்படைகளை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும் - என்பது ஆசிரியர் கருத்தாகும்.

அவ் வடிப்படைகளுள் ஒன்றாவதும், தலையாவதும், அவரை அவ்வறவுணர்வில் கொண்டு செலுத்தவும், அதிற் பிழையாது நெகிழ்ச்சியின்றிக் காக்கவும், அதற்குத் துணை நிற்கவும், ஊக்கம் தரவும், அதே பொழுது, இயற்கையின் உயிரியக்கக் கோட்பாட்டின்படி, தாம் பெற்ற உடல், உள்ளம், அறிவு இவற்றின் உணர்வூற்றத்தை நிறைவு செய்வதற்கு வழியமைத்துக் கொடுக்கவும், உற்ற ஓர் உயிர்த் துணை, ஆணாகில் பெண்ணாகவும், பெண்ணாகில் ஆணாகவும் இருத்தல் வேண்டும் - என்பதும், கவர்ச்சியுறு முனைமாற்றுக் காந்தவியல் தன்மையில் அமையும் அவ்விணைகூறு இல்லாவிடில், இயற்கையின் உயிரியக்கக் கோட்பாட்டில் குறை நேரும் என்பதும், அது நேருமாயின், இவ்வுலகத்துள் தான் வாழப் போகும் உயிருடல் வாழ்க்கை ஒரு பகுதியேயாகி, மறுபகுதி நிறைவுறாது, எவ்வகை உயிர் நிறைவும் துய்ப்பு முழுமையும் பெறாது போகும் என்பதும் ஆசிரியரின் அழுத்தமான உயிரியங்கியல் கொள்கையாம் என்க.

அக் கொள்கையின்படி, மக்கள் வாழ்வியலுக்கு இன்றியமையாத அறவியல் ஒழுகலாறுகளை இல்லறம், துறவறம் என இரண்டாகப் பகுப்புச் செய்து, ஆசிரியர் அவற்றின் முதலாவதும், இயற்கைக்குப் பொருந்தியதும், சிறந்ததும், இரண்டாவதாகிய அத் துறவறத்திற்கே ஆதரவும், அடிப்படையும் ஆகியதும், மக்களுக்கேயன்றி, இவ்வுலக உயிர்களுக்கெல்லாமும் பொதுவானதுமாகிய **இல்லறவியலை** முதற்கண் வைத்து, அது தொடர்பாகிய உட்கூறுகளை இருபது அதிகாரங்களாகப் பாகுபாடு செய்து, அவற்றை நிரல் நிறையாகவும், முறையாகவும், ஒன்றினோடொன்று தொடர்புடையதாகவும், இங்கு எடுத்துக் கூறப் புகுந்தார் என்க.

இல்லறம் ஒரு தேவையின் அடிப்படையில் நிகழ்த்துதல் வேண்டும். ஆசையின் அடிப்படையில் இருந்துவிடக் கூடாது. பிறர் வற்புறுத்தலுக்காகவோ, உலகியல் நடைமுறையை எண்ணியோ கூடத் திருமணம் செய்வது நன்றன்று. திருமணத்தின் இன்றியமையாத் தேவைகள் மூன்று. அவை, **உடல் தேவை, மனத் தேவை, அறிவுத் தேவை** ஆகும். அவற்றுள்,

1. உடல் தேவை - இருபுறத்தும் உடல் உணர்வுகளை நிறைவு செய்வது; எனவே, கூடிய மட்டில் உடல் முழு நலமாகவும், வளமாகவும் சிதைவுறாத இளமையுணர்வுடனும் இருத்தல் வேண்டும். இவற்றின் குறை நிறையளவுக்குத் தக்கபடிதான் மணவாழ்வும் குறை நிறைவுடையதாக இருக்கும் என்பதை உறுதியாக எண்ணுக. இது நிறைவுற அமையவில்லையெனின் அடுத்த இரண்டினாலும்கூட, மணவுறவை ஈடுசெய்தல் அரிது என்க.

2. மனத் தேவை - இருவர் மனவுணர்வுகளையும், பகிர்ந்து கொள்ளவும், அவை பற்றி அறிந்து கொள்ளவும், இறுதியில் இரண்டையும் ஒன்றிக்கச் செய்வதுமாம். இதில் ஏற்றத் தாழ்வுகள் இருப்பினும் அதனை உடலீடுபாட்டால், நிறைவுறச் செய்துவிட முடியும்.

3. அறிவுத் தேவை - இருவரின் அறிவுணர்களையும், பகிர்ந்து கொள்ளவும், அவை பற்றி அறிந்து, வளர்த்துக் கொள்ளவும், இறுதியில் மெய்ப்பொருள் உணர்வு பெறவும் உதவுவது. இதிலும் ஏற்றத் தாழ்வுகள் இருப்பினும் அவற்றை உடலாலும், மனத்தாலும் நிறைவு செய்துகொள்ளலாம்.

இவற்றையே இன்பம், அறம், பொருள் என முறையே பாகுபடுத்தினர். இவற்றின் இன்பம் முதற்கூறாக இருப்பினும், அஃது இயற்கையின் அழுத்தத்தால் தவிர்க்க முடியாததாக இருப்பதால், கட்டாயம் செய்யப்பட

வேண்டிய ஒன்றாக உள்ளது. எனவே, அதனை மறைவாகவும் அமைவாகவும் நுகர்தல் வேண்டி இறுதிக் கூறாக அமைத்தனர் போலும்.

இவ்வியலின்கண் அதன் புறக்கூறுகளாகிய மனவியல் கூறும், அறிவியல் கூறுமே பேசப்பெறுகின்றன. மற்று, முதலாவதான உடலியல் கூறையும் அதன் நுட்பங்களையும் இன்பத்துப் பாலாகிய காமத்துப் பாலில் பேசுவார். இன்பம் உடலினது பொதுவும், காமம் அதனது சிறப்புமாகும் என்க.

o

அ-2. இல்லறவியல்

அ-2-1. இல்வாழ்க்கை - 5

அதிகார முன்னுரை:

அஃதாவது, இல்லிலிருந்து வாழ்கின்ற வாழ்க்கையாதலாலும், இல்லை விட்டு வெளியேறி, இயற்கையோடு சூழ்ந்த பாழி (ஆச்சரம) வாழ்க்கைக்கு மாறுபட்டதாலும் இஃது, **இல் வாழ்க்கை** எனப் பெற்றது.

இல்லம், மனை, வீடு, அகம் ஆகியவை ஒரு பொருள் குறித்த பல சொற்கள். மக்களின் பண்பு, நாகரிகப் படிநிலை வளர்ச்சியின் படி, பல்வேறு சிறப்பு நிலைகளை உணர்த்துவதற்குத் தனித்தனிச் சொற்களாக இவை நின்றன.

இல்லம் - புழங்கிடமாக கொண்ட ஓர் அடைவின் உள் பகுதியைக் குறித்தது. இல் - உள்ளே - இல்லம்.

மனை - நிலையான புழங்கிடத்தின் அடைவைக் குறித்தது. மன்னுதல் நிலைத்தல்; மன் - மனை.

வீடு - வாழ்க்கை முயற்சிக்காகச் சென்ற வெளிவுலகத் தொடர்பினின்று விடுபட்டு வந்து, தன் உறவொடு தங்கி, ஓய்வு கொள்ளும் இடம்.

விடுதல் - விடு - வீடு.

இதே போல உயிர் இவ்வுலகத்து உடலொடு வாழ்ந்து களைத்துப்

பின் உடலை விட்டு வெளியேறிச் சென்று, துன்பமும் பிறவியும் அற்ற, இன்பமே நிறைந்திருப்பதாகக் கற்பனை செய்துகொண்ட வேறு உலகமான துறக்க (மோட்ச) உலகத்தையும் வீடு, என்னும் சொல்லால் குறித்தனர்.

வீடு - துறக்கம் - (மோட்சம்).

அகம் - உள்ளத் தொடர்புக்கும் உடல் தொடர்புக்கும் உரியாளொடும், உரியவர்களோடும் வாழும் வாழ்விடம்.

இனி, ஆண் ஒருவனுக்கு ஒரு பெண்ணே உயிர், உள்ளம், உடல் ஆகியவற்றின் தொடர்புக்கு உரியாளாகி நின்ற மக்கள் தோற்றத் தொடக்கக் காலத்தில், அவள் தங்கி வாழும் வாழ்விடத்திற்கும், அப்பெண்ணையே உடைமையாளாக்கி, ஆண் அதனின்று வெளிச் சென்று வாழ்வியல் பொருள்களைத் தேடி வரும் பணியைத் தனக்கென ஒதுக்கிக் கொண்ட அந்தப் பொழுதில் அவ் வாழ்விடத்துக்கு அவள் உரியாள் என்றுணர்த்தும் உரிமைச் சொற்கள் அவ்வாழ்விடத்தின் அடிப்படையிலேயே தோன்றின. அவை இவை:

இல்லம் - இல்லாள் - இல்லக் கிழத்தி. (கிழத்தி - உரியவள்.) மனை - மனைவி - மனைக்கு உரியவள் - மனைக் கிழத்தி. வீடு - வீட்டுக்காரி - வீட்டுக்குரியவள். அகம் - அகத்துக்காரி (ஆத்துக்காரி) அகமுடையாள் - (ஆம்படையாள்) பிற்கால ஆரிய வழக்கு. குடும்பம் - குடும்பினி - குடும்பத் தலைவி, மனைவி.

- இவையன்றி இந் நூலாசிரியர், பெண்ணை ஆணுக்கு உரியவள், உடைமையள் என்னும் பொருள்களில் மட்டுமே கொள்ளாமல், அவளின் வாழ்வியல் பெருமையும் கருதி; **வாழ்க்கைத் துணை** (51) என்னும் ஒரு தனிச் சிறப்பும், சம உரிமைத் தகுதியும் தந்துள்ளார் என்க. இத்தகு பெருமையை வேறு எந்நூலாசிரியரும் எங்கும் பெண்மைக்குத் தந்திலர் என்பது கருதி மகிழற்பாலது.

- மேலும், மனைவி, இல்லாள் என்பன வெறும் மனைக்குரியவள், இல்லத்திற்குரியவள் என்று இடப்பொருள்வழிச் சொற்களாக உள்ளன. மனைக்கும் இல்லத்திற்கும் உரியவர் பலராயுமிருப்பர். கணவனை யிழந்த தாய், மூத்தாள், தங்கை முதலியோர்கூட இல்லத்துக்குக் குரியோராக விருந்து, இல்லாள், மனைவி என்னும் பெயர்களுக்கு வினைவழிப் பொருளுடையவராகலாம். ஆனால் 'வாழ்க்கைத் துணைவி' என்னும் சொல் அவ்வாறன்று. இது தனிப் பொருட் சிறப்புடையது.

– இவ்வாறு உரிமைச் சொற்களும், உடைமைச் சொற்களும், உறவுச் சொற்களும் பெருமைச் சொற்களும் தோன்றுவதற்கு நெடுங்காலத்திற்கு முன்னரே, **ஆண்** என்றும் **பெண்** என்றும் பாலியல்

வேறுபாட்டுச் சொற்கள் தோன்றியிருந்தன என்க. அவற்றின் பொருளும் வருமாறு:

ஆண் - ஆள் - ஆளுமைக்கு, ஆட்சிக்கு உரியவன். (இங்கு ஆட்சி என்பது, தொடக்கத்தில் அரசாட்சியைக் குறித்திருக்க வழியில்லை.)

பெண் – பெட்புக்கு, விரும்புதற்கு, இணைதற்கு உரியவள்.

இனி ஆண்கள் அனைவரும் ஆண்கள் என்னும் சிறப்பிலக்கணத்திற்குள் அடங்குபவர் அல்லர். அதே போல், பெண்கள் அனைவருமே பெண்கள் எனும் சிறப்பிலக்கணத்துள் அடங்குபவர் அல்லர்.

– இவற்றின் மேல் விரிவெல்லாம் இதன் நிறைவுரையில் காண்க.

– இனி இவ்வதிகாரத்துள், இல்வாழ்க்கைக்குரிய ஆட்சித் தலைவனை **இல்வாழ்வான்** என்பார். இஃது இல்வாழ்க்கை மேற் கொண்டவனைச் சிறப்பித்தது.

– இங்கு, உலகின் அனைத்து வாழ்வியலுக்கும் இல்லிருந்து வாழும் வாழ்க்கையே மூலமும், முகாமையுமாகலின், அதன் சிறப்பியல்களையும் தேவைகளையும் முறையே கூறுவார்.

– இனி, இதுவும், இதைத் தொடர்ந்த அனைத்து வாழ்வியல் கூறுகளும், அனைவர்க்கும் பொதுவாகிய அறவுணர்வை அடிப்படையாகக் கொண்டவாகலின், இஃது **அறன் வலியுறுத்தலின்** பின் வைக்கப்பெற்றது என்க.

- பொதுவான இல்வாழ்க்கையின் தன்மைகளையும் நன்மைகளையும் எடுத்துக் கூறுவதால், இஃது இல்வாழ்வின் **புறக்கூறு** என்க.

O

சக. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை. 41

பொருள் கோள் முறை :

இயல்புடைய மூவர்க்கும், இல்வாழ்வான் என்பான் நல்லாற்றின் நின்ற துணை.

பொழிப்புரை : தம்தம் இயல்புகளினின்று மாறாத தன்மைகளைக் கொண்ட (துணை வேண்டிய) உறவோர், அறவோர், இறைவோர் ஆகிய மூவர்க்கும் குடும்ப வாழ்வை அமைத்துக் கொண்டவன் என்பான், பொது நல அறமுறைகளின்படி நிலையான துணையாக இருக்கக் கடமைப்பட்டவன் ஆவான்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. இல் வாழ்வான் என்பான் - இல்லறத்தை மேற்கொண்டு குடும்பத்துடன் வாழ்பவன் - எனப் பெறுபவன். 'இல்வாழ்வான்' என்பதே இல்வாழ்க்கையை மேற்கொண்டவன் என அமையுமேனும், 'என்பான்' என்று கூட்டியது, பிறர் பழித்தலில்லாததும், (49) பொது நல அறந்தழுவியதுமான (45) இல் வாழ்க்கையை மேற் கொண்டவன் என்று சிறப்பித்தற் பொருட்டாம் என்க.

2. இயல்புடைய மூவர்க்கும் - தம் தம் இயல்புகளினின்று மாறாத தன்மைகள் கொண்ட மூவர்க்கும்.

– 'மூவர்' எவரெனக் கூறாது எண்ணிக்கையான் ஆசிரியர் கூறியது, உரையாசிரியர்களிடம் குழப்பத்தையும், மயக்கத்தையும், தவறான பொருள்கோளையும் கிளர்வித்தது என்க.

– மூவர் என்பதற்குப் பரிமேலழகரும், மணக்குடவரும், பரிதியாரும், காலிங்கரும், அவர் மதம் பற்றிப் பிற்காலத்துச் சிலரும், மாணவகனையும் (பிரமசாரியையும்), கானுறைவனையும் (வானப் பிரஸ்தனையும்), முற்றத் துறவியையும் (சந்நியாசியையும்) பொருள் கொண்டனர்.

– இவர்களை இவ்வாறு கொண்டது, ஆரிய வியலின்படி, மாந்தனின் நால்வகை நிலைகளுள், குடும்ப வாழ்வினன் (கிருகஸ்தன்), அந்நால்வருள் ஒருவனாகித் தனித்து நின்றமையால், அவனை, மற்ற மூவர்க்கும் துணையாக நிற்கக் கடவன் என்று கருதினர் போலும்! இந்நிலைகள் பகுப்பும், வாழ்முறை வகுப்பும், அவர்களுக்காக்கிய அறவழித் தொகுப்பும் பிற கோட்பாடுகளும் முடிவுகளும் தமிழியலுக்குப் பொருந்தாவாகலின், இவ்வுரையும் பொருந்தா வென்று தவிர்க்க.

மேலும், இவர்களை உலகியல் அளவான் எண்ணுவதானாலும், மாணவகன் (பிரமசாரியன்) ஒவ்வோ ரில்வாழ்வானின் உறுப்பாகவே இருப்பானாகலினாலும், அவன் ஓராசிரியனிடமோ, பாழியிலோ இருந்து கற்பானாகையினாலும், பொதுவில் அவன் இல்வாழ்வானின் புரத்தலுக்குரியவனாகக் கருதுதல் இயலாதென்க.

இனி, கானுறைவோனும் (வானப்பிரஸ்தனும்), தன் கிழத்தியுடன் கானில் வாழ்வதனாலும், முற்றத் துறவி எவர் தொடர்பும் வேண்டானாகையினாலும், இல்வாழ்வான் இல்லை விட்டுக் கானகம் சென்று, அவர்களைப் புரத்தலும் இயலாததுடன், தேவையு மன்றாகிவிடும் என்க.

– அஃதன்றிப் பரிமேலழகர் வரிசையில் உள்ள பிறரும் அவரையே வழிமொழிந்து உரை தருவதும், அற்றைப் பரவிய ஆரியவியலின் அழுத்தத்தையே உணர்த்துகின்றது.

-- அவர்களை விடுத்த, அண்மைக் காலத்து உரையாசிரியர் பலரும், பலவகையாக இதற்குப் பொருள் கொண்டு, மயங்கியவர்களேயாவர்.

சமணப் புலவர் **கவிராச பண்டிதர்,** அவர்களை பிரமசாரி, சுல்லகன் (இவரும் துறவி போன்றவரே. ஆனால் துவராடையின்றி வெளிறாடை உடுப்பவர்), மாமுனி (இவர் முற்றுந்துறந்தவர்) என்பார்.

இவர்கள் மூவரும் கானுறை வாழ்வினர் ஆகலின் இல்லறத்தார் இவர்களிடஞ் சென்று துணையாதல் இயலாது. எனவே இவருரையும் பொருந்தாதென்க.

– **வ.உ.சிதம்பரனார்,** அவர்களைத் தாயும், தந்தையும், தாரமும் என்பார்.

இதில், தாயும் தந்தையும் தாமே ஓர் இல்லறத்தார் ஆகலானும், தாரம் இன்றிக் கணவன் மட்டுமே இல்லறத்தான் ஆகான் ஆகலானும், மூவரும் 'தென்புலத்தார்' (43) என்னும் குறளுள் குறிக்கப் பெறும் 'தான்' என்பதுள் தனித் தனியே அடங்குவர் ஆகலானும் இவ்வுரையும் பொருந்தா தென்க.

– **திரு வி.க.** 'திருவள்ளுவர் காலத்து ஊர் மன்றத் தலைவர் மூவர் இருந்திருப்பர்' என்றும், 'அவர்களே இயல்புடைய மூவராதல் வேண்டும்' என்றும் கூறுவர்.

– இஃது, உறுதியற்ற கற்பனையாகலின் பொருந்தா தென்க. மேலும் ஊர் மன்றத் தலைவர்கள் இல்லறத்தார்களாக இரார் என்பதற்கும் அடிப்படையில்லை. இனி, அவர்களுக்கும் இல்லறத்தானுக்கும் என்ன தொடர்பு?

எனவே, இவ்வுரையும் பொருந்தாவுரையே.

- இனி, சட்டவியல் பேரறிஞர் **கா. சுப்பிரமணியனார்** பரிமேலழகர் கூறிய வடசொல் வழக்குகளான பிரமசரியம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்பவற்றையே, முறையே கல்வி நிலை, மனைத் தவநிலை, துறவு நிலை ஆகிய மூன்று நிலையினரும் என்று தூய தமிழ்ப் பெயர்களான் கூறுவர்.

பரிமேலழகரது உரையின் பொருந்தாமையே இவருரைக்கும் பொருந்தும் என்க.

- அடுத்து, **நாமக்கல் பாவலர் இராமலிங்கனார்,** நண்பர், ஏழை, உறவினர் என்று கூறுவர். அவர்களும் பெரும்பாலும் இல்லறத்தாராகவும்

துணை வேண்டாதாராகவுமே இருப்பின், இக் கடமை தேவையின்றாகி விடுமாகலின், இதுவும் சரியான உரையன்று.

– மற்று, **புலவர் குழந்தை** சேரர், சோழர், பாண்டியர் என்பார். பேரா **வ.சுப. மாணிக்கனாரும்** அதை வழிமொழிவர்.

– மூவர் என்பது மூவேந்தரைக் குறிக்கும் என்பது சரியன்று. மேலும் அஃது எக்காலத்திற்கும் எந்நாட்டவர்க்கும் பொருந்துவதன்று. அத்துடன், ஓர் அரசனாட்சியில் உள்ள ஓர் இல்லறத்தான் மற்ற இரண்டு அரசர்க்கும் துணையாக இருக்க வேண்டும் என்பது எவ்வாறு? எனவே, இவ்வுரையும் பொருந்தாவுரையே.

– பன்மொழிப் புலவர் **கா. அப்பாத்துரையாரோ,** துறவோர், ஒழுக்கத்து நீத்தார், அந்தணர் (அறவோர்) என்பர். இவர்களுள் பின்னிருவரும் ஒருவரே. (217), (30) ஆகிய குறள்களைக் காண்க. அதுவுமன்றி, இம் மூவரும் சிற்சிறு வேறுபாடுகள் தவிர ஏறத்தாழ ஒரே தரத்தினரே. எனவே இவ்வுரையும் முழுவதும் பொருந்துவதன்று.

– இனி, முனைவர் **சி. இலக்குவனாரோ,** மாணவர், தொண்டர், அறிவர் என்பதும் பொருந்தாது. மாணவர் என்பவர் ஏறத்தாழ பரிமேலழகர் கூறும் பிரமசாரியே. தொண்டர் என்பவர் எந்தத் தகுதி நிலையும் நிலையாக உடையவரல்லர். அவரும் இல்லறத் தாராகவே இருக்கலாம். எத்தகு தொண்டர் என்பதினும் குழப்பம் நேரலாம். கட்சித் தொண்டரா, மதத் தொண்டரா, அறிவுத் தொண்டரா, அரசியல் தொண்டரா, அவ்வாறெல்லாம் இலராயின் வேறு எவர், எதற்கு இல்லறத்தான் அவர்க்குத் துணையிருக்க வேண்டும்? எதுவரை? என்ப வெல்லா வற்றுக்கும் விடையிறுத்தல் இயலாது? எனவே இதுவும் வாயுரையே; வாய்மையுரையன்று?

– மற்று, **மு.கோவிந்தசாமி** என்பார் இவர்கள் யாவரினும் வேறாகச் சைவர், வைணவர், வைதிகர் ஆகிய கடவுளர் மூவர் என்று எவ்வகைப் பொருத்தமுமின்றிக் கூறிக் குழப்புவர்.

– இனி, சிலர் அடுத்த குறளில் (42-இல்) வரும் துறந்தார் துவ்வாதவர், இறந்தார் என்றும், இளைஞர்கள், பிற இல்லறத்தார், துறவிகள் என்றும், பெற்றோர், மனைவி, மக்கள் என்றும், தாய், தந்தை, மனைவி என்றும் பலவாறு கூறி மலைப்பும் சளைப்பும் ஊட்டுவர்.

– **பாவாணர்** அவர்களோ அவரைத் தமிழ அந்தணர், அரசர், வணிகர் என்பார். அரசரும், வணிகரும், இல்லறத் தாரேயாதலின் புரக்கப்பட வேண்டிய மூவருள் ஒருவர் என்பது பொருந்தாது.

– இனி இயல்புடைய மூவர் என்பார், **உறவோரும் அறவோரும்,** இறைவோரும் (ஆட்சியரும்) ஆவர் என்பதே மிகவும் பொருத்தமும்,

நடைமுறையும் உடைத்து என்க.

உறவோர் துணை வேண்டிய உறவின் முறையர். இவருள் இல்லற வாழ்வு துறந்த துணை வேண்டிய பெற்றோரும், பிற நெருக்கமுற்றவரும் கூடி அடங்குவர்.

இனி, **அறவோர்** எனப் பெறுவோர் மக்கள் நலம் கருதித் தந்நலங்கள் நீத்த பொதுநலச் சான்றோர் ஆவர். இவர், தம் தனி வாழ்வுக்கென ஏதும் வகை செய்துகொள்ளாதவரும், பொது நலத்துக்கெனப் பொருள் தேவை கொண்டவரும், ஆக இருப்பாராகையால் இத்தகையவரும் இல் வாழ்வானின் புரத்தலுக்குரியவராவார்.

அடுத்து, **இறைவோர்** என்பர் ஆட்சியர்.

இறை - வரி - குடி மக்களின் இறைப் பொருளாலேயே ஆட்சி நடைபெற வேண்டும். ஆகையால், குடும்ப அமைப்புடைய இல்வாழ்வாரெல்லாரும், இறைவரி கட்டும் கடமையராகலின், ஆட்சியரையும் அம்மூவருள் ஒருவர் ஆக்கினார் என்க.

– இல்லத்து வாழாமற் புறத்துத் திரிகுநர் இறைவரிக்கு உரியரல்ல ராகையால், அவர்க்கு இக் கடமை குறித்தல் தேவையின்று என்க

– இனி, **இயல்புடைய மூவர்** என்றது, மேற்கூறிய உறவோர், அறவோர், இறைவோர் ஆகிய மூவரும், தம்தம் இயல்பு நிலைகளில் திரிவுபடாமல் இருக்கும் நிலையிலேயே இல்வாழ்வானின் புரத்தலுக்கும் துணைக்கும் உரியவராக விருப்பர் - இருத்தல் வேண்டும் - என்று உணர்த்துதற்கே என்க. - என்னை? உறவுணர்வு- - திரிந்த - தவிர்த்துக் கொண்ட மாறுபட்ட - உறவோரும், பொதுவுணர்வு கருதும் அறவுணர்வில் மாறுபட்ட - இயல்பு திரிந்த - தவறான வழியில் நடக்கும் அறவோரும், ஆட்சி நலம் - ஆளுமையறம் - திரிந்த - தமக்குரிய இயல்பு மாறிய ஆட்சியரும் இல்வாழ்வானின் துணைக்கும் புரத்தற்கும் உரியரல்லர் ஆகி விடுகிறார் என்பதே நூலாசிரியர் கருத்தாம் என்க.

3. நல்லாற்றின் - நல்ல அறவழிகளில் – மேற்கூறிய உறவோர், அறவோர், இறைவோர் ஆகிய மூவர்களும் - அவர்கள் இயல்பு திரியாமல் - மாறாமல் - இருக்கும் வரை, அவர்களின் செயற்பாடுகளும் பொதுவுணர்வென்னும் அறவுணர்வு கொண்டதாக இருக்கும் நிலையில் மட்டுமே, இல்வாழ்வான் துணையாக இருத்தல் வேண்டும் என்றார் என்க.

அவர்கள் பொது நலம் கருதாத அல்லது தந்நலம் கருதிய வழிகளில் இயங்குவார்களாயின், இல்வாழ்வான் அவர்கட்குத்

துணையாக இருக்க வேண்டுவதில்லை என்னும் குறிப்புணர்த்தினார் என்க.

4. நின்ற துணை - நிலையான துணை. அஃதாவது, துணையாக இருக்க வேண்டுவது **கடமை** என்று உணர்த்தினார்.

– அடுத்த குறளில் 'துணை' என்ற சொல் மட்டும் வருதல் காண்க. அங்கு அது 'விருப்பச் செயல்' என்றளவில் பொருள் தரும்.

5. இதனால், இல்வாழ்க்கை மேற்கொண்டவன் ஆற்ற வேண்டிய கடமையும், அதன் வரையறையும், அக் கடமையாற்றப்பட வேண்டியவர்களும், அக்கடமை பெற அவர்களுக்குரிய தகுதியும் ஆகிய இலக்கணங்கள் கூறப்பெற்றன என்க.

6. இல் வாழ்வான் **என்பான்** என்பதை 'என்ப' என்று பாடங் கொண்டு, அதனை அசை என்று விடுத்தாரும் உளர். O

௸. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை 42

பொருள் கோள் முறை :

இல்வாழ்வான் என்பான், துறந்தார்க்கும், துவ்வாதவர்க்கும், இறந்தார்க்கும் துணை.

பொழிப்புரை : இல்லறம் மேற்கொண்டு வாழ்கின்ற குடும்பி என்பவன், (தங்கள் உற்றம், சுற்றம், நட்பு, ஊர், நாடு முதலியவற்றை விட்டுப் பிரிந்து வெளியேறி வந்து) தனித்து நிற்கும் ஏதிலியர்க்கும், துவ்வுதல் (உணவு, உடை, உறையுள்) இல்லாத ஏழையர்க்கும், (தன் சுற்றத்தும் உற்றத்தும் அண்டை அயலிலும்) உயிர் துறந்தார்க்கும், அவ்வப் பொழுது உதவியாக இருக்க வேண்டியவன்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. முந்திய குறள் போலவே, உரையாசிரியர்கள் தம் தம் உரைகளுள் மிகவும் வேறுபடும் தன்மையுள்ள குறள்களில் இதுவும் ஒன்று. இதிலுள்ள இறந்தார் என்னும் சொல்லுக்கே பொருள் வேறுபாடுகள் மிகுதி.

2 **துறந்தார்** - இங்குத் துறவிகள் அல்லர். தம் உற்றார் உறவுகளை விட்டுப் பிரிந்து வெளியேறி வந்த ஆதரவற்றவர்கள். ஏதிலிகள் (அகதிகள்) துறத்தல் - விடல் (310) பிரிதல் (1188)

3. **துவ்வாதவர்** - நுகர்ச்சியில்லாதவர். உணவு, உடை, உறையுள் முதலிய வாழ்வியல் நலன்களை நுகர்ந்து (அனுபவித்து) அறியாத ஏழைகள். துய் - துவ் - நுகர்ச்சி. துய்ப்பு - துப்பு - துவ்வு.

4. **இறந்தார்** - உயிர் துறந்தார். குடும்பத்துள்ளோ, உறவுக்குள்ளோ, அண்டையயலுக்குள்ளோ, வேறு ஏதிலியாகவோ உயிர்விட்ட யாவர்க்கும், உயிர் துறந்தார்க்கு உதவுதல் உலக மாந்தப் பொதுநிலை உதவியே. அவரை மண்ணிலிடவும் தீயிற்சுடவும் எல்லா இல்லறத்தாரும் உதவுதல்.

5. **துணை** - முன்னைய குறளில் நின்ற துணை என்றது தவிர்க்க இயலாக் கடமையை. இதில் துணை என்றது பொதுநிலை உதவியை. இஃதொரு விருப்பச் செயல் என்க. அஃதாவது நம் நிலை நோக்கித் துணையாக இருக்கலாம்; இல்லாமலும் போகலாம்.

O

சஉ. தென்புலத்தார் தெய்வம் விருந்(து)ஒக்கல் தான் என்றாங்(கு) ஐம்புலத்துஆ(று) ஓம்பல் தலை. 43

பொருள் கோள் முறை : **இயல்பு**

பொழிப்புரை : தென்னிலப் பகுதிகளில் உள்ளவர்கள், வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த தெய்வச் சான்றோர்கள், தன்னைத் தேடிவரும் புதிய தொடர்பாளர்கள், தன்னோடொத்த உறவினர்கள், தான் - என்னும் ஐந்து நிலையினரிடத்தும் அறவுணர்வைப் பேணிக் கடைப்பிடித்தல் ஒவ்வோர் இல்லறத்தானின் தலையாய கடமையாகும்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. இதுவும் முந்திய குறள்களைப் போலக் கருத்து வேறுபாடு மிகவும் உடையதே. இதிலுள்ள தென்புலத்தார் என்பதற்குப் பலரும் பலவாறு பொருள் தருவர்.

2. **தென்புலத்தார்** - தெற்கில் உள்ள நிலத்தவர். இதற்கு அழகிய

இனிய- தெளிந்த அறிவுள்ளவர்கள் அவ்வாறுள்ள மெய்யறிவினார் என்றெல்லாம் பொருள் கொள்ளுதல் பொருந்தாது என்க. புலம் - முதற்பொருள் இடம்; இரண்டன் பொருளே அறிவு.

ஒருவரின் அறிவைத் தெளிந்த அறிவு என்றும், மெய்யறிவு என்றும் ஆராய்ந்து தேர்தல் யார்க்கும் எளிய செயலன்று. பிறர்வாய்க் கேட்டறிதலும் உலகியற் பிழை தரும். இல்லறத்தான் ஒருவன், அவ்வாறு தேர்ந்து, ஒருவரையோ அத்தகைய சிலரையோ பேணிக் கொள்ளுதலும் புரத்தலும் இயலாதென்க.

நூலாசிரியரும் 'அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப் பேணித் தமராக் கொளல்' (443) என்று உணர்த்துதல் பெரியாரை ஓம்பும் கடினத்தை மெய்ப்பிக்கும்.

பரிமேலழகர், மணக்குடவர், பரிதி, காலிங்கர் முதலியோர் கூறும் 'பிதிரர்' உரை கற்பனையும் ஏமாற்றுமாம். சிலர் 'உயிர் துறக்கும் தறுவாயில் உள்ள முதியவர்' என்று கொள்ளுதலும் இட்டுக் கட்டுதல் ஆகும்.

தன் குடும்பத்து இறந்தவர்கள் தெற்குத் திசையில் - அஃதாவது கூற்றுவன் திசையில் உள்ளனராகக் கருதி, அவர்க்கு ஆண்டுதோறும் நினைவுவழுத்தல் செய்வது இல்லறத்தார்க்குக் கடன் என்று கூறுதலும் அறிவியலுக்கும் மெய்யறிவியலுக்கும் பொருந்துமாறில்லை. நினைவு நாள் கொண்டாடுவது விருப்பின்பாற்படுவது. கடமையின் பாற்படுவதன்று. அத்துடன் அந்நினைவு போற்றலும் ஓம்புதலாகாது.

எனவே, புலம் என்பதற்கு இடப்பொருள் பொருந்துவது; வெளிப்படையானது; கண்டுகொள்ள எளிமையானது; இயல்வது. ஆகவே, தென்புலத்தார் என்பதற்கு 'தென்பகுதி நிலத்தவர்' எனும் பொருளே பொருந்துவது என்க. இனி, தென்பகுதி நிலத்தவர் தமிழினத்தவர் ஆவர். நூலாசிரியர் தமிழகத்தைத் சேர்ந்தவராகலின்.

தென்புலத்தார் - என்னும் இவ்வொரு சொல்லே திருக்குறளில் இந்நூலாசிரியரின் இனத்தையும் மொழியையும் குறிப்பால் புலப்படுத்தும் சொல்லாக உள்ளது. அவை இன்றியமையா ஒரு தேவையை நோக்கியும் உணர்த்தப்பெற்றனவென்க. என்னை? நூலாசிரியர் காலத்துத் தமிழ் நாட்டில் வேற்றினத்தவரான ஆரியர், அரசியல், குழுகியல் வலுப்பெற்றத் தமிழினத்தவரையும் அவர் தாய்மொழியாகிய தமிழையும், அவர்தம் உயர்மரபு வாழ்வியல் நலன்களையும், கலை பண்பாடுகளையும் சிற்சிறிதாக அழிக்கவும்,

அவர்தம் அரைச் செயற்கை மொழியாகிய சமசுக்கிருதத்தையும் ஆரியவியலையும் இவர்களிடம் புகுத்தவும் முற்பட்டனர் என்பது தமிழின வரலாறு.

அக் கொடுநிலைகளைக் கண்டு உளங்குமுறிய நூலாசிரியர், அனைத்து நிலையானும் ஏற்கனவே உருவாகி நின்ற தமிழர் அறத்தையும், குமுகியல் ஒழுக்கப் பண்பாடுகளையும் மறைமுகமாகவேனும், கட்டிக்காக்க உள்ளுறுதி பூண்டு, இவ்வரும் பெரும் வரலாற்று நிலைப்படுத்த நூலை எழுதிப் போந்தார் என்பது, இந்நூல் தொடர்பான அகப்புறச் சான்றுகளாலும் விளக்கங்களாலும் அரிதின் ஆராய்ந்து அறுதியிட்டு உறுதிசெய்த வரலாற்றுச் செய்தியாகும்.

நேரடியாகவும் வெளிப்படையாகவும் இவ்வினத்து மொழி, இன, பண்பாட்டு நலன்களைக் காக்க வெழுந்த நூலிது என்று அவர் காலத்து அறியப் புகுந்தால், ஏனைய வரலாற்று, இலக்கிய, அறிவியல் தமிழ் நூல்களை ஆரியர்கள் அழித்தது போன்றே, இதுவும் அழிக்கப் பெற்றுவிடும் என்பதை, அற்றைச் சூழ்நிலையால் கண்டுணர்ந்த ஆசிரியர், இந்நூலுள், ஆங்காங்குக் குறிப்புரைகளாலும் குறிப்புச் சொற்களாலும், தம் தமிழின வழியினர்க்கு, அம்மரபு நலன்களை உணர்த்திச் சென்றுள்ளார். அவற்றுள் ஒன்றே இத் **'தென்புலத்தார்'** என்னும் அரிய சொல்லுமாம் என்க. நூலுள் வரும் பிற குறிப்புகளெல்லாம் அவ்வவ்விடத்து உணர்த்தப் பெறும். அதுவன்றி இம்மெய்ப்பொருள் நிறைவுரையுள் இவ்வரலாறெல்லாம் அகப்புறச் சான்றுகளுடன் நன்கு விளக்கப்பெறும்.

இவ்வடிப்படையில், **'தென்புலத்தார்'** என்னும் இச்சொல், தமிழ் நாட்டின் தெற்குப் புலத்தில் உள்ள இலங்கை, பிசி, மொரீசியசு, சிங்கை, மலேசியா, ஆப்பரிக்கா, ஆத்திரேலியா, மடகாசுகர் முதலிய தென்புலங்களில் எல்லாம் சிதறி வாழும் தமிழர்களையும் குறித்ததென்க. அவர்களைப் போற்றிக் கொள்ள வேண்டும் என்னுங் குறிப்பையும் குறித்ததென்க. இச்சொல் ஆசிரியர் காலத்திற்கு வெகு முன்னர் இருந்து மூழ்கிய குமரிக் கண்டத் தமிழரையும் நினைவூட்டுவதாகக் குறிக்கும் பாவாணர் குறிப்பையும் ஈண்டுக் கருத்தில் கொள்ளலாம். விளக்கம் அவரின் **'தமிழ் மரபுரை'**யில் காண்க. இத்துடன் அவரின் **'வடமொழி வரலாறு'** என்ற நூலின் முன்னுரை (பக்கம் 1-4) இல், 'குமரிக் கண்டத் தென்பகுதி முழுகிப் போனபின், பண்டைத் தமிழர் தம் இறந்த முன்னோரைத் **தென்புலத்தார்** என்றும், அவர் இருந்து வாழ்ந்த இடத்தைத் **தென்புலம்** அல்லது **தென்னுலகு** என்றும், கூற்றுவனைத் **தென்புலக்கோன், தென்றிசைக் கிழவன்,**

தென்றிசை முதல்வன் என்றும் வழங்கி வந்தனர்' என்பர்.

இனி, தென்புலம் என்பது தென்பகுதிநிலம் என்றும், வடபுலம் என்பது வடபகுதி நிலம் என்றும் இலக்கியங்களில் பரவலாக வழங்குவதையும் காணலாம். தென்புலம் என்பது தென்பகுதி நிலமாயின் தென்புலத்தார் என்பவர் தென்பகுதி நிலத்தில் வாழ்பவர் என்று இயல்பாகவே பொருள்படும் என்க.

'மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுள்'

சிலப்.

என்று கூறிப் பாண்டியன் நெடுஞ்செழியன், கண்ணகிக்குச் செய்த தவறு கூறி வீழ்ந்திறந்தான் என்றவிடத்துச் சிலப்பதிகாரத்தில் பாண்டிய நாடு தென்புலம் என்று குறிக்கப் பெற்றிருப்பது காண்க.

அடுத்து, சிறுபாணாற்றுப் படையில், பாண்டியனும் சோழனும் சேரனும்,

'தென்புலங் காவலர் மருமான்' - என்றும்,
'குணபுலங் காவலர் மருமான்' - என்றும்,
'குடபுலங் காவலர் மருமான்' - என்றும்.
முறையே சுட்டப்பெறுதலும் காண்க.

மேலும், உரைவேந்தர் ஔவை. சு.துரைசாமியார், தம் பதிற்றுப்பத்து உரையுள்,

'மகப் பேற்றினால் பிதிரர் கடன் கழியும் என்னும் வடவர் கொள்கை தமிழ் நாட்டார்க்கு இல்லை. திருவள்ளுவர் மகப்பேறு பிதிர்க்கடனிறுக்கும் வாயிலெனக் கூறாமையே இதற்குச் சான்ற கரியாம்' என்று கூறியிருப்பதையும் நோக்குக.

-- இனி, தெற்கே உள்ள கடல் **தென்கடல்** என்றும், அங்குள்ள குமரி **தென்குமரி** என்றும், இன்னும், **தென் கொற்கை** (முத்தொள். 94-3), **தென்தமிழ்** (சிலப்.), **தென்தமிழ்நாடு** (சிலப்.), **தென் தமிழ்ப்பாவை** (சிலப்.), **தென்தமிழ் மதுரை** (மணி), **தென்திசைப் பொதியில், தென்புலம்** (குறுந். 317-7; அகம். 24-8; புறம் 35-7; 388-1; சிலப். 10-103; 20-76), **தென்புலமருங்கு** (மது. 202; நெடுநல். 52, நற். 153-5; சிலப். 27-133), **தென்வளி, தென்றல்** போலும் பலநூறு வழக்குகள் 'தென்' என்னும் அடையெடுத்து வழங்குதல் காண்க.

2. தெய்வம் - வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த தெய்வச் சான்றோர். கடவுளோ, இறைவனோ அல்லர். இவ் வேறுபாட்டு

விளக்கங்களை நிறைவுரையில் காணலாம்.

முன்னர் வாழ்ந்திருந்து மறைந்துபோன இந்நூலாசிரியர் போலும் தெய்வச் சான்றோர்கள், மக்கள் நலனுக்கென்றே தம்மை முற்றுமாக ஈகப்படுத்திக்கொண்டு தம்மையே இழந்துபோன அறநலப் பெரியோர்கள் ஆகியோர், இல்லறத்தாரால் நினைந்து பாராட்டிப் பின்பற்றத்தக்கவராவர்.

3. **விருந்து** இல்லறத்தாருடன் ஏதோ ஒருவகையில் தொடர்பு கொள்ள வரும் புதியவர்கள். அவர்களும் பேணிப் புரந்து கொள்ளத் தக்கவர்கள். குமுக உறவுக்கும், வாழ்வியல் வலிமைக்கும் நட்பாடலுக்கும் அவர்கள் தேவையாகலின்.

4. **ஒக்கல்** - தம்மோடு குடும்பம், மரபு இவற்றுடன் ஒத்தவர்கள், சமமானவர்கள், பொருந்தியவர்கள், இணைந்தவர்கள், உடன்பட்டவர்கள்.

– இவர்கள் உறவினர்கள், சுற்றத்தார் என்று கூறத்தக்கவர்கள். ஒக்கல் – ஒத்தல் - பொருந்துதல், இணைதல், சமமாதல், உடன்படுதல்.

– இவர்களையும் போற்றிப் புரந்துகொள்ளுதல், இல்லறத்தார்க்கு வலியும் துணையும் மகிழ்வும் நிறைவும் தரக்கூடியதாகலான்.

5. **தான்** - அனைத்து நிலையானும் உற்றத்தையும் சுற்றத்தையும், தொடர்பாளர்களையும், முன்னிருந்து மக்களுக்கு உழைத்த தெய்வச் சான்றோர்களையும், குடும்ப முன்னவர்களையும், தென்நிலங்களில் முன்னிருந்து வாழ்ந்த தன் மொழியின மக்களையும் போற்றிப் புரந்து கொள்ள வேண்டிய இல்லறத்தான், தன்னையும் பேணிப் புரந்துகொள்ளுதல் மிகவும் இன்றியமையாததால் அதையும் ஓம்புதற்குரிய ஐந்திடத்தவர்களுடன் இணைத்தார் என்க.

6. **என்றாங்கு** - என்ற வகையில் - என்றவாறு.

7. **ஐம்புலத்து** - ஐந்து இடத்தும் - ஐந்து வகையினரிடத்தும்.

8. **ஆறு ஓம்பல்** - பொது அறவுணர்வுடன் பேணிப் புரந்து கொள்ளுதல். பெரும்பாலும் உயிரோடு இருப்பவர்களையே ஓம்புதல் இயலுமாகலின், ஈண்டுக் கூறப் பெற்ற ஐம்புலத்தாருள் தெய்வம் தவிர மற்றையவர் உயிரோடுள்ளவர்களே ஆகையினாலும், தெய்வமும் முன்பு உயிரோடிருந்தவர்களே ஆதலின், அவர்கள் நினைவையும் செயலையும் போற்றிப் புரந்து

கொள்வது ஒருவகை ஓம்புதல் ஆகையினாலும், இப்பொருளே பொருந்துவதாம் என்க.

9. தலை - இல்வாழ்வார்க்குத் தலையாயது; முகாமையானது - என்க.

10.முதற்குறளில் கூறப்பெற்ற இயல்புடைய மூவர்க்கும், இல் வாழ்வானை **'நின்ற துணை'** என்று கூறி **அறக்கடமை** யாக வலியுறுத்தினார்.

அடுத்த குறளில் துறந்தார்க்கும் துவ்வாதார்க்கும் இறந்தார்க்கும் அவனைத் **'துணை'** என்று மட்டும் கூறி **விருப்பத் துணை** யாக்கினார்.

இதில், ஆண்டுக் கூறிய ஐம்புலத்தார்க்கும் அவனை, **ஓம்ப வேண்டிய இன்றியமையா உதவியாளனாக** அறிவுறுத்தினார் என்க.

11.இதில், இல்லறத்தான் ஓம்பவேண்டுவனவாகக் குறிக்கப் பெற்ற உறுப்புகள் ஐந்து. அவை **தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான்** என்பன.

இவற்றுள், தான் என்பது தலையாய் இருந்து பிற உறுப்புகளை ஓம்புதல் வேண்டும் என்று அறிவுறுத்துவதாகக் கொள்ளுதல் வேண்டும். கொள்ளவே,

தென்புலத்தாரைக் - கால்களாகவும்,

தெய்வத்தை - நெஞ்சாகவும்,

விருந்தைக் - கைகளாகவும்,

ஒக்கலை - உடம்பாகவும்,

உருவகித்துக் கூறியதாகவும் கருதிக்கொள்ளுதல் வேண்டும். இதில்,

– **தென்புலத்தாரைக்** கால்களாகக்கொண்டது, அவர் வழி நடையிடவேண்டும் என்பதாகவும்,

– **தெய்வத்தை** நெஞ்சாகக் கொண்டது, இறைமைப் பண்பை வலியுறுத்தியது என்பதாகவும்,

– **விருந்தைக்** கைகளாக்கியது, இருகைகளையும் ஒருசேரக் கொண்டு முழுநிறைவான ஈகையறம் மேற்கொள்ளல் வேண்டும் என்பதாகவும், அவர்களைத் தம் கைகள் போல் உதவும் உறுதுணையாகக் கருதல் வேண்டும் என்பதாகவும்,

– **ஒக்கலை** உடம்பாகக் கொண்டது, தான் உருவாய் இருந்து, உழைக்கும் பெற்றித்தாயராக அவரைப் பயன்படுத்துதல் வேண்டும் என்பதாகவும்,

– **தன்னைத்** தலையென்றது, காட்சி, கேள்வி, உயிர்ப்பு, மொழி, அறிவு ஆகிய அனைத்துக் கூறுகளுக்கும் அடிப்படையாகிய தலைபோல் தான் இருந்து பேணி அறமாற்றுதல் வேண்டும் என்பதாகவும்,

உருவகப் பொருள் கொள்ள வேண்டும் என்க.

– இம்மூன்று குறள்களாலும் இல்வாழ்வானுக்குரிய கடமையும், நோக்கமும், தேவையும் எடுத்துரைக்கப்பெற்றன என்க. O

சஅ. பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல். 44

பொருள் கோள் முறை :

பழி அஞ்சிப் பாத்து ஊண் உடைத்து ஆயின், வாழ்க்கை, வழி எஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

பொழிப்புரை : (அறம் செய் வகையினும், பொருள் செய் வழியினும், இன்பம் நுகர் முறையினும், அவை தவறிய விடத்து) வந்து சேரும் பழிகள் மேவாமல் அஞ்சிக் காத்து, நல்வழியில் தன் முயற்சியால் எய்திய பொருள் நலத்தை, முன்னார்க் கூறிய வழிமுறையினார்க்கும், ஏழையர்க்கும், இரங்கினார்க்கும், பகுத்துக் கொடுத்து உண்ணுகின்ற தகைமை உடையதாக இல்லற நடைமுறை இருப்பின், அவ்வாறு ஒழுகுவானுக்கு, வாழ்க்கை முழுமை பெற்று, மேலும் ஆற்ற வேண்டிய கடமையெச்சம் எந்நிலையிலும் இருப்பதில்லை. (அவனே நிறைவுற வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தவனாம் என்க.)

சில விளக்கக் குறிப்புகள் :

1. **பழி** - பிறரால் பழிக்கப்படுதலின் பழியாயிற்று. பிறரால் பழிக்கப்படுதல் - இழித்துரைக்கப்படுதல். அத்தகைய செயலுக்கானது.
2. **அஞ்சுதல்** - உள் நடுங்குதல், உணர்வு ஒடுங்குதல்.
3. **பாத்தூண்** - பகுத்து ஊண், பிறர்க்கும் தன் உணவைப் பகுத்துக்

கொடுத்தல்; இனி, உணவு மட்டின்றி, தன் மிகையுடைமைகளையும் பகுத்துக் கொடுத்தல் மேலும் சிறப்பென்னும் குறிப்பும் **'உடைத்து'** என்னும் சொல்லால் புலப்படுதல் காண்க.

– ஐம்புலத்தில் 'தானும்' ஓர் ஓம்பற்கூறு ஆகையால் **'மிகையுடைமை'** எனக் கூற வேண்டுவதாயிற்று.

– பகுத்து - பாத்து. பகுக்கப்படுவது பாத்து. பாத்தி என்னும் சொல்லும் இதன்வழி என்க. செயல் பொருளின் மேல் நின்றது.

– இச் சொல்லை 44, 227, 1107 ஆகிய இடங்களிலும் இதே பொருளில் ஆளுதல் காண்க.

4. **வாழ்க்கை வழி எஞ்சல்** - மேற்கொண்டு செய்தற்கு வாழ வேண்டிய கடமை எச்சமின்றி நிறைவாழ்க்கை. குறைவாழ்க்கை அன்று.

– 'வழி'யைப் 'பிறங்கடை' என்றும், 'மரபுவழி' என்றும் பொருள் கொள்ளுதல் பொருந்தாது. என்னை? அவரவர்க்கும் வாழ்க்கை தனித்தனி ஆகலான். ஒருவர் நிறைவு வாழ்க்கை அவர் வழி வரும் பிறர்க்குப் பயன் நல்குதல் பெரும்பான்மையுமின்றி ஒரோவழியே நிகழுமாகலின் என்க.

இச் சடைவுக்கு விடையாகப் பாவாணர், 'இறைவனருளும் உலகோர் வாழ்த்தும் அவன் வழியை நீடிக்கச் செய்யும் என்பது கருத்து' என்றதும் முற்றும் அறிவியலுக்கும், மெய்யறிவியலுக்கும் பொருந்தாதென்க.

5. **எஞ்ஞான்றும்** - எப்பொழுதும்; எக்காலத்தும். ஞான்று - காலம்; **ஞாலுதல்** - தொங்குதல். எப்பொழுதும் இயங்கும்படி தடையிலாத கால ஓட்டம்.

6. நிறைவான வாழ்க்கை வாழுதலே இல்லறத்தாருடைய குறிக்கோளாக இருத்தல் வேண்டும்; குறையுடைய வாழ்க்கை சிறப்பன்று என்பது கருத்து. பகிர்ந்துண்ணுதல் மக்கள் உயிர்வாழ்க்கையின் சிறப்பு என்பதும் அக்கருத்துக்கு வலிவும் பொலிவும் சேர்க்கும் என்க.

7. இல்வாழ்க்கையின் பொதுவான உலகியல் நடைமுறைகளை இந்நான்கு குறள்களாலும் கூறியவர், இனிச் சிறப்பான நடைமுறைகளைக் கூறத் தொடங்குவார். O

சரு. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது. 45

பொருள் கோள் முறை :

இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடைத்து ஆயின், அது பண்பும் பயனும்.

பொழிப்புரை : இல்லத்திலிருந்து ஒருவன் மனைவியொடும் மக்களொடும் வாழ்கின்ற வாழ்க்கை உண்மை, அன்புணர்வு உடையதாகவும், பொது அறவுணர்வு கொண்டதாகவும் இருக்குமாயின், அதுவே பண்புடையதாகவும் பயனுடையதாகவும் அமைந்ததாகும்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. **அன்பும் அறனும்** - அன்பு, குடும்பத்தில் வேரூன்றி நிற்பது. அறன், குடும்பத்தாரைத்தாண்டி, புறத்துள்ளாரிடம் பொதுவுணர்வுடன் இயங்குவது.
2. **பண்பும் பயனும் அது** - கணவன் மனைவியரிடை, ஒருவர் மேல் ஒருவர்க்கு உண்மை அன்பு இருக்குமாயின், அஃது அவர்களிடையே பண்பை உருவாக்கும். அன்பு உள்ளவரிடமே பண்பு இருக்கும்.

   அது போலவே ஒருவரிடம் பொது நலவுணர்வாகிய அறவுணர்வு இருக்குமாயின், அவர் வாழ்க்கை அவருக்கும் பிறர்க்கும் பயனுடையதாக இருக்கும்.

   அன்பு பண்பையும் அறம் பயனையும் தரும்; இல்வாழ்க்கைக்கு இரண்டும் அடிப்படை உணர்வுகள் என்க. O

சஎ. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில் போஒய்ப் பெறுவ தெவன். 46

பொருள் கோள் முறை :

இல்வாழ்க்கை அறத்து ஆற்றில் ஆற்றின், புறத்து ஆற்றில் போஒய் எவன் பெறுவது.

பொழிப்புரை : பொது நலம் கருதும் அறவுணர்வுடன் ஒருவன் இல்லிலிருந்து வாழ்க்கையை நடத்திச் செல்வானானால், அவன், இல்லறத்திற்கு வேறான

துறவு நெறியில் சென்று பெறப்போகும் பயன்தான் என்னவாக இருக்க முடியும்? ஒன்றுமில்லை என்க.

சில விளக்கக் குறிப்புகள்:

1. **அறத்து ஆறு** – பொதுநலன் கருதிய வழி.
2. **புறத்து ஆறு** - பொதுநலன் கருதிய இல்லற வழியல்லாது, தனிநலன் கருதும் துறவு வழி. என்னை? துறவு என்பது தான் மட்டுமே உயிர்ப்பயன் கருதி மேற்கொள்ளும், இல்லறம் துறந்த நெறி.

   – இதில், 'புறத்தாறு' என்பதற்குப் பலரும் 'இல்லைவிட்டு வனத்துச் செல்லும் நிலை', 'துறவறம்', 'இல்லறமல்லாத நெறி', 'பாவநெறி', 'அறவழியல்லாதது', 'வேறு வேறு வழிகளில்', 'இயற்கைக்கு மாறுபட்ட வழி' - என்றவாறு பல வகைகளிலும் பொருள் கொள்ளுவர். ஆசிரியர், 'அறம்' என்னும் சொல்லை 'இல்லறம்' என்பதில் போலவே 'துறவறம்' என்பதிலும் கையாண்டுள்ளார் என்பதை நாம் நினைதல் வேண்டும்.

   ஆனால், 'அறத்தாறு' என்பதற்குப் 'புறத்தாறு' என்பது மறுதலையானது என்பது வெளிப்படை. 'புறத்தாறு' என்பதை ஓர் அறக்கூறு என்பதாக ஏற்றுக் கொண்டால், அதற்கு 'அகத்தாறு' என்பதே மறுதலையாக அமைதல் முடியும்.

   அகத்தாறு x புறத்தாறு. அகத்தாறு - இல்லறம். புறத்தாறு - துறவறம் ஆகும்.

   இனி, திருவள்ளுவர் இரண்டு நெறிகளையுமே சிறந்தவை என்றே ஏற்றுக்கொண்டாலும், இரண்டையும் இணைத்துப் பேசும் பொழுது, 'அகத்தாறாகிய இல்லறமே புறத்தாற்றினும் சிறந்தது என்பர். இல்லறத்தை முதற்கண் வைத்ததும், **'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை'** (49) என்பதும் அகத்தறமே மேல் என்று அவர் கருதுவது உணர்த்தலாயின.

   இரண்டறத்தையும் அவர் ஏற்றுக்கொள்வது புலப்படுவதால், ஒருவன் தன் பிறவி வாழ்க்கையில் இரண்டினையும் மேற்கொள்வதையே அவர் விரும்புகிறார் என்று தெரிகிறது. அஃதாவது, திருவள்ளுவர்க்கு அகத்தாறு (இல்லறம்) ஆற்றிவிட்டு, இறுதிக்காலத்துத் துறவறமாகிய புறத்தாறு மேற்கொள்வதே சிறந்ததெனத் தெரிகிறது. துறவறத்தையும் ஓர் அறம் என்று அவர் ஒப்புக் கொள்வதினாலும், 'நீத்தார் பெருமை' அதிகாரக் குறிப்புகளானும் அஃது உறுதிப்படும்.

அஃதவ்வாறெனின், புறத்தாற்றில் போய்ப் பெறுவ தெவன் என்று ஏன் அவர் சொல்லுதல் வேண்டும்?

அஃது ஏனெனில், துறவறம் சிறந்தது எனக் கருதினாலும், ஒருவன் அதைவிரும்பின் அது முதுமையிற் கொள்ள வேண்டுவது என்பது அவர் கருத்து. தமிழியலின் கருத்தாகவும் மரபாகவும் அது தெரிகிறது.

'காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே.

தொல். 1138

– என்று தொல்காப்பியமும் குறிப்பதினும், பிறமரபு நூல்களானும் அது விளங்குகிறது.

மேலும், நூல்கள் குறிப்பதும், திருவள்ளுவர் கூறுவதும், இல்லிலிருந்து மேற்கொள்ளும் இல்லறத்துறவறமா, அல்லது கான்சென்று உறையும் - ஆரியவியலில் கூறப்பெறும் - 'சந்நியாச'த் துறவறமா என்பது 'துறவு' அதிகாரத்தும், துறவறவியல் முன்னுரையிலும் நன்கு ஆராயப்பெறும்.

இஃதொருபுறம் நிற்க, இக் குறளின்கண் குறிப்பிடப்பெறும் கருத்து என்னெனின், இளமையிலேயே இல்லற நெறியை - அஃதாவது அக அறத்தைத் துறந்து - விட்டு - அஃது ஆற்றாமலேயே, புறத்தாறாகத் துறவறம் மேற்கொள்ளும் போக்கை இது கடிந்து கூறியதாகும் என்க. என்னை?

'ஆற்றின்' என்ற சொல்லால், **'காலத்தால் ஆற்றுதல்'** என்னும் பொருளுக்கும் இடனுண்டு.

அறத்தாறு, அஃதாவது இல்லறம் ஆற்றுதற்குக் காலம் உண்டு. அஃதாவது இளமைக்காலம். இக்காலத்தில் அகத்தாறு ஆற்றாமல், பிறவிப் பயனையும் இல்லற விளைவையும் (அஃதாவது உலகம் உயர்த்த மக்கட் பேற்றையும், சமநிலைக் குமுகாயம் சமைக்கும் விருந்தோம்பலையும், ஒப்புரவறிதல், ஈகை முதலியவற்றையும், அதனால் புகழ் பெறுதலையும்) துறந்துவிட்டுப் புறத்தறமாகிய துறவறம் மேற்கொள்வது தேவையில்லை எனல் வேண்டி இது கூறினார் என்க.

'பெறுவது' ஒன்றுமில்லாது, அது பயனில - எனினும் குறிப்பை உணர்த்தி, இதனை அங்குப் போய்ப் பெறுவது எவ்வாறு என்னும் பொருளில், 'எவன்' என்று வினவுகிறார், என்க.

துறவி இல்லறப் பயனை அங்குப் போன பின்னர் எதிர்பார்க்கலாகாது. அத்தகைய மன வெறுக்கை, இயல்பாகக் காலத்தால் வருதல் வேண்டும். அஃது, இளமையிலேயே வந்ததாகக் கொள்ளல் இயலாது.

உடல் இளமையில் உள்ளகாலை, உள்ளம் துறவை மேற்கொள்வது, உள்ளத்தின் உணர்வுகளுக்கும் உடல் உணர்வுகளுக்கும் தோன்றும் ஐம்புலப் போராட்டத்திற்கே இடன் வகுக்கும். ஆகையால், அத்துறவு மேற்கொள்ளல் சாலாது, கூடாது என்றார் என்க. இவ்விரண்டுங்கெட்டான் நிலைகளைத் துறவியலில், 'கூடாஒழுக்கம்', 'கள்ளாமை', முதலிய அதிகாரங்களில் நினைவூட்டிக் கடிவதையும் காண்க.

இதன்வழி ஆரிய வியலின் அடிப்படையில் நிகழ்த்தப்பெறும் வைதிகம், சங்கராச்சாரியம், மற்றும் சமணம், பௌத்தம் முதலிய மதங்களில் உள்ள இளமைத் துறவுகளை வன்மையாகக் கண்டித்தார் என்க.

3. **போஒய்ப் பெறுவது எவன்** - அத்துறவறத்தில் போய் நின்று ஒழுகிப் பெறப்போகும் பயன்தான் எது? ஒன்றுமில்லை என்பதாம் என்க.

தனிப்பயனை விடப் பொதுப்பயன் உயர்ந்ததாகலின், அது நிகழும் இல்லறமே துறவறத்தினும் சிறந்தது என்றார்.

போஒய் – அளபெடை இரக்கம் குறித்தது. தமிழியல் நெறி இளமையில் துறவு அன்று. அதுவும் இல்லறம் வெறுத்த துறவறம் அன்று. இன்னும் சொன்னால் புறத்துறவு அன்று. அகத்துறவே என்க.

4. இச் செய்யுளின் கண், ஆரியவியலின்படி, புனைவும், வெறுக்கையும் பூண்டு, இல்லறத்தின் நீங்கி, கானகம் சென்று, 'சந்நியாசம்' என்னும் துறவு மேற்கொண்டு, நோற்றலும் ஆற்றலும் ஒழுகியிருந்து, பிறப்பறுத்துப் பேரின்ப வீடுபெறும் துறவு மேலாம் என்னும் கொள்கையை எள்ளல் உணர்வால் இகழ்ந்து கடிந்தார் என்க.

இதன் மேலான விளக்கங்களை எம் நிறைவுரையிற் காண்க.

O

சஅ. இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை. **47**

மபொருள் கோள் முறை :

இல்வாழ்க்கை இயல்பினால் வாழ்பவன் என்பான்,
முயல்வாருள் எல்லாம் தலை.

பொழிப்புரை : இல்வாழ்க்கைக்கு உரிய இயல்பான நெறி முறைகளுடன் வாழ்பவன் எனப்பெறுபவன், துறவு பூண்டு வீட்டுப் பயன் காண முயற்சி செய்கின்றவர்கள் யாவருள்ளும் தலையான பயன் எய்துபவன்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. **இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்:**

   – இயற்கையான் அமைந்த இல்லற முறைப்படி இல்வாழ்க்கை நடத்துபவன் எனப் பெறுபவன்.

   இயற்கையான் அமைந்த முறை என்பது, நல்லுடல், நல்மனம், நல்அறிவு, இவற்றுக்குப் பொருத்தமாய் அமைந்த மனைவி, அவளுடன் உடலாலும் மனத்தாலும் அறிவாலும் கொள்ளும் உறவு, இருவரிடத்தும் ஒருவரை ஒருவர் விரும்பும் மாறுபடாத உண்மையன்பு, இருவர்க்கும் உள்ள பொதுநிலை ஈடுபாடு - முதலியவற்றான் அமைந்தது.

2. **முயல்வாருள் எல்லாம்** - முயற்சி செய்கின்றவர்கள் எல்லாருள்ளும்.

   – ஈண்டு முயற்சி என்பது, இல்லறத்திற்குப் புறனாய துறவற முயற்சி. பிற வாழ்வியல் முயற்சிகளை அன்று.

   – ***'முயல்வாருள் எல்லாம்'*** என்றது, அவ்வம் மதங்களுக்குரிய துறவற முயற்சிகளில் ஈடுபடுபவர்கள் எல்லாருள்ளும் என்று உள்ளடக்கியது. வேறு வேறு மதங்களுக்கு வேறு வேறு துறவறக் கோட்பாடுகளும் ஒழுகலாறுகளும், புனைவு பூசல்களும், நோற்றல் ஆற்றல் முறைகளும் உண்டென்பது நோக்கி.

3. ***தலை*** - முதலாவது, சிறந்தது, உயர்ந்தது, மேலானது. இங்கு உயர்திணைக்கு வந்தது.

4. முன்னைய குறளில் துறவற முயற்சியை இல்லறத்துடன் பொதுவாக வைத்துக் கூறியவர், இதில், ஒப்பிட்டு உயர்வது, சிறப்பது என்று தெளியக் கூறினார். O

சஅ. ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை நோற்பாரின் நோன்மை உடைத்து. 48

பொருள் கோள் முறை : **இயல்பு**

பொழிப்புரை : இல்லறத்தில் இருந்து கொண்டு, மனைவி, மக்களாகிய அதன் உறுப்பினர்களையும், அவர்கள் போலுள்ள பிறரையும், அன்றாடம் அவரவர்களுக்குரிய வாழ்க்கை நெறிகளில் ஈடுபட்டு ஒழுகச் செய்து, தானும் பொதுநல அறவுணர்வில் இழுக்கு நேராதவாறு, வாழ்பவனுடைய இல்வாழ்க்கை ஈடுபாடு, மிகவும் கடினமும், பொறுப்பும், முயற்சியும், பொறுமையும் வாய்ந்ததாகலின், அது, காடு சென்று தவம் செய்பவனுக்கிருக்கும் நோற்றல் (பொறுத்தல்) தன்மையைவிட மிக உயர்ந்தது.

சில விளக்கக் குறிப்புகள் :

1. ஆற்றின் ஒழுக்கி - இல்லறத்தில் உள்ள ஒருவன், அதிலுள்ள மனைவி, மக்கள், தொடர்புடைய பிறர் அனைவரையும் அவரவர்க் குற்ற வாழ்க்கை நெறிகளில் ஈடுபடச் செய்து.

– இல்லறத்தில் ஈடுபட்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் இயல்பாக இருக்கும் பொறுப்புணர்வாகும் இது. அஃதாவது இல்லறத் தலைமையுற்றிருப்பவன், அதன் உறுப்புகளாகிய மனைவி, மக்களையும் தொடர்புடைய பிறரையும் நாள்தோறும் அவரவர் கடமைகளைச் செய்யுமாறு இயக்குதல்.

– இல்லறத் துணைவிக்கு, இல்லறத்தை நன்கு, கவனிக்க வேண்டிய உத்திகளைக் கூறுவதும், வருவாய் ஏற்றத் தாழ்வுகளிலும் குடும்பத்திற்குற்ற பொதுக் கடமைகளிலும், பெற்றோர்ப் பேணுதல், உற்றார் ஓம்புதல், உறவோர், நட்போர்க்கு உவத்தல் முதலிய நிலைகளிலும் நடத்துகொள்ள வேண்டிய இல்லறக் கடமைகளை நெறிப்படுத்துவதும், மக்கட்குக் கல்வி, தொழில் ஈடுபாடுகளின் தேவைகளையும் ஏற்ற இறக்கங்களையும் கண்காணித்து அவர்கள் ஆற்ற வேண்டிய பொது, சிறப்புக் கடமைகளில் ஈடுபடுத்துவதும் இல்லறத் தலைவனுக்குரிய ஆற்றின் ஒழுக்குதல் ஆகும்.

– இதற்குப் பரிமேலழகர் 'தவஞ் செய்வாரேயும் தத்தம் நெறியின் கண் ஒழுகப் பண்ணி' - என்று பொருளுரைத்து, 'பசி முதலிய இடையூறு நீக்கலின் ஆற்றின் ஒழுக்கி என்றார்' என்று விளக்கமும் கூறுவர். இஃது, அவர்களின் மதவியலை வலுப்படுத்தவும், நிலைப்படுத்தவும் வேண்டி, அது சார்ந்த துறவியர்க்குப் பேணுதல், புரத்தல் உணர்வை மக்களிடையில் ஊட்டுதற்குக் கொண்ட தந்திர உத்தியே என்க. 'அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றுதல் புறத்தாற்றிற் போயொழுகுதலைவிட உயர்ந்தது' என்று கூறியவர், அவ்வாறு போயினாரைப் புரந்து பேணுதல் வேண்டும் என்று கூறுவரோ என்று உன்னுக.

-- எனவே, அவருரை பொருந்தாதென்க.

இனி, பாவாணரும் அவரையே அடியொற்றி மிடி செய்தார் என்க.

2. **அறனிழுக்கா இல்வாழ்க்கை** - பொதுநல அறவுணர்வுகளில் இழுக்கு நேராதவாறு நெறியின் இயங்கும் இல்லறவொழுக்கம். என்னை? குடும்பத்து வாழ்வான் பொதுவுணர்வில் ஈடுபடும் பொழுது, தன் குடும்பச்சுமை நீக்கத்திற்குப் பொதுப் பயனைப் பயன்படுத்துதல், பொது நிலையில் தனக்கேற்பட்ட பெருமதிப்பைத் தன் குடும்ப ஏற்றத்திற்கும், மனைவி மக்கள் பிழைப்பு வாய்ப்புக்கும் சார்பாக்கிக் கொள்ளுதல் முதலிய நிலைகளில் ஈடுபட்டு, இழுக்கைத் தேடிக் கொள்ளாத இல்லறவொழுக்கம் என்க.

3. **நோற்பாரின் நோன்மை உடைத்து** - இவ்வாறான இல்லறக் கடமைகளிலும், இயக்கச் சுமைகளிலும், மனம் நெகிழாதவாறு, பொறுமையுடன் ஆற்றி இருந்து, மேலும் மேலும் அவ் வில்லறவொழுக்கத்தில் தொடர்ந்து ஈடுபடுதலாலாகிய நோன்மை அஃதாவது பொறுமை. பசி, விடாய், முதலிய அடக்கி, இயற்கை ஏதங்களை வென்று, தவஞ்செய்தற்குப் போதுமான ஆற்றலை விடவும் மிக்குத் திறன் வாய்ந்தது.

என்னை? இல்லறவொழுக்கம் உடையானின் பொறை, பிறர்க்காகத் தான் துன்புறும் ஈகம் (தியாகம்) சான்றது.

தவம் நோற்கும் துறவியொருவனின் பொறையோ தனக்காகத் தானே துன்புறும் தன்னலம் சான்றது.

எனவே, பின்னதின் முன்னது மேலதும் சிறப்பினதும் என்றார்.

4. இதுவும் இல்வாழ்வானின் மேன்மை கூறியது. O

சசு. அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று. 49

பொருள் கோள் முறை : **இயல்பு**

பொழிப்புரை : (தமிழியல் முறைப்படி) பொது நலவுணர்வாகிய அறம் எனச்

சொல்லப் பெறுவதே இல்வாழ்க்கையைத்தான் குறிக்கும். இனி, அதுவும் பிறனது பழிப்புக்கு ஆளாகாமல் இருப்பின் மிகச் சிறந்த அறமாகும்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. **அறன் எனப் பட்டதே இல்வாழ்க்கை** - 'அறம்' என்பது பற்றி முன்னரே விளக்கப் பெற்றது.

தமிழியல் முறைப்படி பொதுவாகவே அறம் என்று சொன்னால் அஃது இல்லறத்தை அஃதாவது இல்வாழ்க்கையைத்தான் குறிக்கும் என்றார்.

ஏனெனில், ஒருவனுக்கோ ஒருத்திக்கோ, இயற்கையாகத் தன்னைப் பற்றிய நலன் உணர்வுகள் நிரம்பப்பெற்று, அதன் பின்னை அறத்துக்கு மூலமாகிய பொதுநலவுணர்வு தோன்றுவதன் அடிப்படையில் தான், அவனோ அவளோ தனக்காகி வரும் இன்னொரு துணையின் தேவையைப் பற்றிச் சிந்திக்கின்றனர். அந்நினைவு முதலில் உடலால் தொடங்கி, உள்ளத்தால் வளர்ந்து, அறிவால் முதிர்வுறுகிறது. அந்நிலையில், **'தான்'** என்னும் தனிநல உணர்வு, **'தாம்'** என்னும் பொதுநல வுணர்வின் வித்தாக உருவாகிறது. இங்கேயே அறவுணர்வு தொடங்கி விடுகிறது. 'தான்' என மட்டும், நினையாமல், **'தாம்'** எனவும் நினைக்கத் தோன்றும் உணர்வுதான் அறத்தின் **'முளை'.**

தொடக்கத்தில், அஃது எதிர்ப்பாலை இணைத்துக் கொண்டு, தாம்'ஆகிறது. பிறகு, அத் **'தாம்'** படிப்படியாக வளர்ந்து, தம் மக்கள், நட்பு, உற்றம், சுற்றம், ஊர், நாடு, உலகம் என வளர்ந்து **'நாம்'** ஆக நிறைவு பெறுகிறது என்பது உணர்வின் மெய்ம்மம் (தத்துவம்) ஆகும்.

எனவே, அறமாகிய பொது நலவுணர்வுக்கு - பொதுமை உணர்வுக்கு - இல்லறமே உடலியல், உறவியல், அறிவியல் தொடக்கமும், முதல் முழுமையும் ஆவதால், **'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை'** என்றார் என்க.

என்னை? இல்லறமே அறத்தின் முதலும், அறவளர்ச்சிக்கு அடித்தளமும் ஆவதால், அதுவே முழுமையும் அறமாயிற் றென்க.

தன்னை விட்டுப் பிறிதோர் உயிரை இணைத்துச் சிந்திக்கும் முதல் இடம் இல்லறம். எனவே, அதுவே முதல் அறம். அவ்வகையில் ஒருவன் தனக்குற்ற அறத்தின் முதற்களமாகிய இல்வாழ்க்கையையே அடிப்படையாகக் கொண்டு, அதனையே நிறைவாக, முழுமையாக, எஞ்சுதல் இல்லாதவாறு, பிறன்பழிப்பதில்லாத முறையில், வையத்து வாழ்வாங்கு வாழ்வானானால், அதுவே முழுமையும் அறமாகி

நின்று, அதன் விளைவையும் பயனையும் அவனுக்குத் தருகிறது. விளைவு பண்பும் பயன் புகழுமாகும்.

மற்று, அறத்தின் பிற அனைத்துக் கூறுகளுக்கும் இல்லறமே அடிப்படை என்க. இனி, அறத்துக்கு மட்டுமின்றிப் பொருளுக்கும், இன்பத்திற்கும்கூட இல்லறம் அடிப்படை ஆகும். அதனால் வாழ்வின் அனைத்துத் துறையினர்க்கும், பகுதியினர்க்கும் இல்லறமே மூலக்களமாகி நிற்கிறது என்றுணர்க. இதனை விளக்கி நிற்பதே, இந்நூலின் முழுநோக்கமாக ஆசிரியர் கொண்டிருப்பதை ஆங்காங்கு உணர்க.

இக்கருத்து ஆரியவியலினின்று மாறுபடுகின்ற முதலிடமாக ஆசிரியர் கருதுவதால், மாந்த வாழ்வின் நான்கு கூறுகளாக அவர்கள் கருதும் பிரம்மச்சரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாஸம் ஆகியவற்றுள் 'சந்நியாஸமே மேலான தர்மம்' என்று கூறுவதற்கு, நேர் எதிராக நின்று, **'அஃதன்று; இல்லறமே அறம்; அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை'** என்று அழுத்தமாகவும் உறுதியாகவும் உரத்தும் அறைகிறார் என்க.

இனி 'தமிழியலின் படி, முழுமையறமாகிய இல்வாழ்க்கையுள் தான், மாந்தன் அனைத்துக் குற்றங்களையும் செய்ய வாய்ப்பு மிகுதி; ஆரியவியலின் படி, சந்நியாஸத்துள், புலனடக்கத்திற்குரிய இருக்கை (ஆசன) முயற்சிகளும், ஒருமையுணர்வாகிய ஊழ்க (ஓக) முயற்சிகளும், ஆற்றலும் நோற்றலும் கூடிய தவ முயற்சிகளும் இருப்பதால், அங்கு உடல் வழியும், உள்ளத்தின் வழியும், அறிவின் வழியும் தவறுகள், குற்றங்கள் நேர்வதற்கில்லை' என்று, அதனை உயர்த்திக் கூறுவார் கூற்றை நினைவு படுத்தத்தான், 'அஃதும், பிறன் பழிப்பதில்லாயின், நன்று, அஃதாவது அறத்தின் முழுவடிவமாகிய இல்லறத்தை பழிசேராமல் நடத்துவதே மிகு சிறப்பாகும்' என்று தமிழியல் குடும்பத்தார்க்கு எச்சரிக்கை செய்தார் என்க.

2. அஃதும் - அவ்வறமாகிய பெருமைக்குரிய இல்லற வாழ்க்கையும்.

3. பிறன் பழிப்பதில்லாயின் நன்று - பிறனொருவனுடைய குற்றஞ் சுட்டிப் பழித்தலுக்கு ஆளாகாமல் இருப்பின் மிகச் சிறந்தது ஆகும்.

யாவனோ ஒருவன் பழிப்பினும் அது சிறப்பிழக்கும் என்று உணர்த்தற்குப் 'பிறன்' என்று ஒருமையில் கூறினார்.

– பழிப்பது குற்றஞ்சுட்டி இழிவு கூறுவது. அஃதாவது இல்வாழ்க்கையுள் ஈடுபட்டுள்ள தலைவனையோ, தலைவியையோ, அவர்களின் மக்களையோ, நட்பையோ அவர்களின் கடைப்பிடியையோ, ஒழுக்கத்தையோ, குறையோ, குற்றமோ கூறிப்

பொதுவில் இழிவு கூறுவது.

– பழி - பழு, பழுது என்னும் சொல்லடியாகப் பிறந்த சொல். பழுது - குற்றம், உறுப்புக்குறை, உணர்வுக்குறை, அறிவுக்குறை, ஒழுக்கக்குறை, இயக்கக்குறை முதலியவற்றை எடுத்துச் சொல்லி இழிவுரைப்பது, பழி.

– 'பிறன், பழிப்பதில்லாயின் நன்று' என்று கூறியதால், 'பிறன் பழிப்பது நன்றன்று' என்னும் துணைக் கருத்துப் புலப்படும்படியும் கூறினார் என்க. 'நன்று' என்னும் நேர் கருத்தும், 'நன்றன்று' என்னும் துணைக்கருத்தும், பழியினது ஆழத்தையும் அகலத்தையும் பொறுத்தும், அதன் பொய், மெய் குறித்தும் ஆய்வுக்குரிய தன்மையையும் உணர்த்தியதுடன், அவ்வாறு ஆழ அகலமற்ற பொய் பழிகளால் கவலவேண்டாது, அவற்றை வலிதே கருதிச் சீர்குலையாது, எளிதே கருதி எள்ளித் தவிர்க்க என்னும் உளவும் கூறினார் என்க.

4. இஃது, இல்வாழ்க்கையின் பெருமைச் சிறப்பையும், அதில் குறைவருமாயின் நேரும் இழுக்கையும் கூறியதாம் என்க.

என்னை? 'அறமே இல்லறம்' என்றதால், 'அனைத்து இல்லறமுமே சிறப்பாகி விடாது' என்பதையும், 'அது பிறன் பழிப்புக்கு ஆளாகாமல் இருப்பதுதான் சிறப்பு' என்பதையும் வேறுபடுத்தி விளக்கியதும் என்க. **O**

ரு0. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும். 50

பொருள் கோள் முறை : **இயல்பு**

பொழிப்புரை : சுழற்சியுடைய இவ்வுலகத்துள் இல்வாழ்க்கையின் அமைந்து, வாழ்கின்ற நெறிமுறைகளின்படி வாழ்கின்றவன், (வானின் கண் உறைவதாக ஏற்கனவே நம்பிக் கொண்டிருக்கும்) தெய்வங்களின் வரிசையுள் வைத்துப் போற்றப் பெறுவான்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. **வையம்** - சுழற்சியுடைய உலகம். வையம் எனல் வட்டையாகிய

சக்கரத்துக்காகிப் பின்னர், அவ்வாறு சுழற்சியுடைய உலகத்திற்காகியது.

சுழற்சியுடைய உலகத்துள் மாந்தனும் சுழன்று வாழும் நிலைப் பட்டவன். எனினும் சுழலாது நிலைப்பவன். வாழ்க்கைச் சுழற்சியுள் உழல்பவன். ஆனாலும் தான் சுழற்சியின்றி வாழ்பவன்.

2. **வாழ்வாங்கு வாழ்பவன்** - மாந்த வாழ்க்கை என்பதற்கோர் ஒழுங்குண்டு. அஃது ஐயறிவுடைய பறவையினம் விலங்கினங்கள் போல் உடலால் மட்டுமின்றி, உள்ளத்தாலும் அறிவாலும் முறை பேணுவது. எனவே, பிறவுயிரினங்களின் இயக்கத்திற்கு வாழ்க்கை என்று பெயரில்லை. மக்களது உயிரியக்கத்திற்கே வாழ்க்கை என்னும் பெயரும், அதற்கொரு, முறையும் ஒழுங்கும் உண்டு என்க. இவை, உடற் படிநிலை (பரிணாம) வளர்ச்சியால் மட்டின்றி, அறிவுப் படிநிலை, உள்ளப் படிநிலை வளர்ச்சியாலும் அமைந்தவாம் என்க.

மக்கள் வாழ்க்கை மட்டுந்தான் பொருளுடையது; சிறப்புடையது; தனித்தனி வரலாறுடையது; மீமிசை மாந்த வளர்ச்சியுடையது; தெய்வக் கூறுடையது; மிக மேம்பட்ட நிலையில் கடவுள் தன்மையுடையது; அதனினும் மேலோங்கி என்றென்றும் இருக்கும் அழியாத இறைத்தன்மையுடையது. எனவே வாழ்வாங்கு வாழ்தல் ஓர் ஒழுங்கின் கண்ணே நிகழ்வது.

மக்களுள் ஓரறிவுயிராயும், ஈரறிவுயிராயும், மூவறிவுயிராயும், நாலறிவுயிராயும், ஐயறிவுயிராயும் வாழும் தன்மையினாரும் உண்டு; அது போல, அறிவுடைய மக்களுள்ளும், வாழ்வாங்கு வாழாத உடலும், மனமும், அறிவும் உடையாரும் உண்டு என்க.

அவருள்ளும், இவ்வுயிர்மெய் வாழ்க்கையின் பொருள் அறிந்து கொண்டு, உளத்தாலும் அறிவாலும் தமக்கியற்கையானமைந்த ஒரு குறிக்கோளைக் கண்டுணர்ந்து, அதன்படியும், உலகியலால் முன்னரே மக்கள் குமுகாயம் வகுத்துள்ள மக்களியங்கியல் நெறிப்படியும், அவற்றுள்ளும் மேம்பட்ட அறமுறைப்படியும் வாழ்தலே வாழ் வாங்கு வாழ்தல் என்ப. அவ்வகையில் வழுவாது வாழ்பவனே வாழ்வாங்கு வாழ்பவன் ஆவான் என்க.

3. **வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்** - வானில் உறைவதாகக் கருதப்பெறுகின்ற தெய்வங்களின் வரிசையுள், வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவனும் ஒன்றாக வைத்து வணங்கப் பெறுவான் என்க.

'தெய்வம்' என்னும் சொல் 'தி' என்னும் வேரடியாகப் பிறந்தது. அழித்தல் என்னும் பொருள் கொண்டது.

- தீ - தீய் - தெய் - தெய்வம் - அழிப்பது என்னும் பொருளில் தோன்றி, பின் ஆக்கல் பொருளிலும் வழக்குறும் சொல்லாய் நின்றது என்க.

- மாந்தர் இறந்த பின்னர் அவர்களின் உயிர்கள் ஆவிவடிவில் வானத்துத் தெய்வ நிலையில் உலவுவதாகவும், உறைவதாகவும் கற்பனை செய்துகொண்டனர். அவ்வுயிர்கள் தெய்வநிலையில் உள்ளவரை மக்களுடன் தொடர்பு கொள்வதாகவும், அவை தம் பிறங்கடை மக்களுக்கு அவ்வப் பொழுதும், அவர்கள் வேண்டியவிடத்தும், இவ்வுலக நிலைக்குக் கீழிறங்கி வந்து, அவர்களுக்கு வேண்டியவை தந்து நன்மை செய்வதாகவும் ஒரு நம்பிக்கை கொண்டிருந்தனர். இன்றும் அந்த நம்பிக்கை மக்களிடம் உண்டு. இஃது அறிவியல் சாராத மிகு கற்பனை என்க. மக்கள் தங்கள் துன்பங்களுக்கு இத்தகு கற்பனையால் விளைந்த நம்பிக்கையினால் ஆறுதலும், மனத்தேற்றமும் கொள்வது இன்றளவும் உள்ளதால் இத் தெய்வக் கற்பனையும் கடவுள் நம்பிக்கையும் தொடர்ந்து வருகின்றன என்க. இக்கற்பனைகள் அறிவியல் அடிப்படையில் உண்மை என்று இதுவரை எவராலும் மெய்ப்பிக்கப் படவில்லை. இருப்பினும், மன இயக்கத்தின் அடிப்படையில் இயங்கும் மனவாற்றல் கூறுகளால் சில நம்பிக்கைகள் செயல்களாக நடைபெறுவது அறியப்பெற்று வருகிறது.

இந்நிலைகள் தவிர, இயற்கையாய் இயங்கும் அனைத்துப் பொருள்களுக்கும் ஆற்றல்களுக்கும் மூலமாகவும், முதலாகவும் உள்ள பேராற்றலை இறைமை, இறைவன் என்னும் சொற்களால் தமிழியல் மெய்யறிவியல் கூறுகிறது. இம் மெய்யறிவியல் கோட்பாடு அறிவியலினும் மேம்பட்ட உணர்வறிவு நிலை என்றும் மெய்யறிவியல் அறிஞர் கூறுவர். இது மதமன்று. மதவியல் கூறும் அன்று. ஆனாலும் இதை மதத்தினும் உள்ளடக்கியே முந்தைய தமிழியல் அறிஞர்கள் பற்பல மதவியல் கோட்பாடுகளைக் கூறினர் என்க.

இவற்றின் மிக விரிவான ஆய்வுண்மைகளை எம் நிறைவுரையில் கண்டு கொள்க.

ஈண்டு விரிக்கின் பெருகுமாகலின் இவ்வளவில் நிறுத்தி, கூறப்பெற்ற நம்பிக்கைக் கோட்பாடாகிய தெய்வக் கருத்துகளை நூலாசிரியர் கூறியவாறே உரைகொள்ளுவோம்.

வையத்து, தமக்குற்ற வாழ்வியல் கூறுகளை ஒழுங்கு படுத்திக் கொண்டு - முறைப்படுத்திக் கொண்டு, தன்னால் பிறர்க்கும் பிறரால் தனக்கும் துன்பம் நேராவண்ணம், அதற்குப் பகரமாக இன்பமே

வரும் வண்ணம், பொதுநல அறம் பேணி, கூடியிருந்து ஒரு குமுகமாக, வாழ்வாங்கு வாழ்ந்து பெருமையும் புகழும் பெறும் ஒருவன், ஏற்கனவே இங்கு அவ்வாறு இருந்து மறைந்து, மக்கள் மீண்டும் மீண்டும் நினைக்கத்தகும் தெய்வங்களாக நின்று போற்றப் பெறுவார்களுள் ஒருவனாக வைத்துப் போற்றப்பெறுவான் என்பதே ஆசிரியர் கருத்து.

நூலாசிரியரும், பிற பொதுநலம் பேணிய செயற்கரிய செய்த மாந்தரும் ஈண்டும் மக்களால் வணங்கப்பெறும் தெய்வங்களாக இருப்பதைக் கண்டு தெளிக.

இதுவே வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பயனும் என்க.

4. இல்வாழ்வான் ஒருவன் பொதுமாந்த நிலையில், சிறப்புற அறம் பேணிப், பிறர்க்குப் பயனுடையவனாய் வாழ்வாங்கு வாழ்ந்து தெய்வ நிலைக்கு உயர்ந்து நிற்கும் வாழ்வியல் கூறுகளையும் கடைப்பிடிகளையும் அவற்றின் நுட்பங்களையும் இவ்வதிகாரத்துள் கூறினார் என்க.

இனி, இல்வாழ்க்கைக்குரிய உறுப்புகளுள் வாழ்க்கைத் துணைவியாய் வரும் இல்லறத் தலைவியினது சிறப்பியல்களை அடுத்த அதிகாரத்துள் கூறுவார். O

அ-2 இல்லறவியல்

அ-2-2 வாழ்க்கைத் துணைநலம் - 6

அதிகார முன்னுரை :

இல்வாழ்க்கையின் புறக்கூறாக, அதன் பொதுவாகிய தன்மைகளையும் நன்மைகளையும் முன் அதிகாரத்துள் விளக்கியவர், அதன் அகக்கூறாகியதும், இல்வாழ்க்கைக்கே இன்றியமையாத உறுப்பாக இருப்பதுமாகிய இல்வாழ்க்கைத் துணை என்னும் இல்லறத் தலைவிக்கு இருக்க வேண்டிய மன நலன்களையும், செயல் திறன்களையும், அவளின் தனிச்சிறப்பு நிலைகளையும் இவ்வதிகாரத்துள் விளக்கிக் கூறுவார்.

இஃது, இல்வாழ்க்கை அமைத்துக் கொள்வான் ஒருவன், அவ்வாறு எண்ணந் துணிந்தபின் செய்ய வேண்டிய முயற்சிகளுள் முதலாவது சிந்திக்க வேண்டியதும், செய்ய வேண்டியதும், தான் துணையாக்கிக் கொள்ளப் புகும் ஒரு பெண்ணுக்கு இருக்க வேண்டிய இயற்கை மனவுணர்வுகள், செயலுணர்வுகள் இவை எனத் தெரிந்துகொள்ள வேண்டியதும் ஆகையால், அவ்வதிகாரத்தின் பின் இதை வைத்தார்.

இதனுள், ஒரு பெண்ணாகி நிற்கும் பொதுவான ஒருத்திக்கும், அவள் இன்னோர் ஆணாகி நிற்கும் ஒருவனுக்கு இல்வாழ்க்கைத் துணையாகி, மனைவி, இல்லாள் எனும் பெயர்கொண்டு நிற்கும் சிறப்பு நிலைக்குமாகிய வேறுபாடுகளும், விளக்கங்களும் மிகச் சுருக்கமாகவும் அதே பொழுது மிக ஆழமாகவும் கூறப்பெறுகின்றன.

பெண் - எனும் ஒருத்திக்கு என இவ்வுலகில் தனிச்சிறப்பும், தனி இயக்க நிலையும், தனி உடலியல், உள்ளவியல், அறிவியல் கூறுகளும் உள. இனி, அவளே, ஆண் எனும் ஒருவனுக்குத் துணையாக வாழ்க்கைப் பட்டு, இல்லறத்தின் மறுபகுதியாய், வாழ்க்கைக்கு இன்னொரு துணையாய் ஆகின்ற பொழுது, அவளுக்கு என்று வேறு தனிச் சிறப்பும், வேறு தனி இயக்க நிலையும், வேறு தனித்தனியான உடலியல், உள்ளவியல், அறிவியல் கூறுகளும் உள்ளன. அவை, முதற்கண் ஒரு பெண்ணான நிலைக்கு வேறானவை.

என்னை? மனைவிநிலை எய்தப்பெறாத ஒரு பெண் தன்வகையில் தனிச் சிறப்புற்றவள். அவளே இன்னோர் ஆணுக்குத் துணைவி, மனைவி என்றாகிய நிலையில், அவனுக்கும் உள்ள சிறப்பிலும் இணைந்த சிறப்பினளாகித் தன் தனித்தன்மையை இழந்து, அவனொடு இணைந்த தன்மையினளாகிப் போகின்றாள் என்க.

அக்கால், அவளின் தனி இயக்க நிலைகளிலும் மாறுபாடும், வேறுபாடும் தோன்றத் தொடங்குகின்றன. என்னை? அவளுக்காக மட்டும் இயங்கியவள் அவனுக்காகவும் இயங்க வேண்டியுள்ளதன்றோ? அதேபோல், அவளின் தனியுடல், அவளுக்கு மட்டுமே சொந்தமாயிருந்த உடல், அதன் தனித்தன்மையை இழந்து, அவனுக்கும் சொந்தமாகிப் போகின்ற தன்றோ? அதேபோல், அவளுக்காக மட்டுமே எண்ணிய உள்ளம், சிந்தனை செய்த அறிவு இனி அவனுக்காகவும் இணைந்து எண்ணவும், இணைந்து சிந்திக்கவும் ஆகின்றன அல்லவா?

எனவே, இந் நிலைகளிலெல்லாம், அவள் தன் தனித்தன்மைகளை இழந்து ஒரு கூட்டுடைமை நிலைக்கு ஆளாகிவிடுகின்றாள் என்க. இவ்வடிப்படையில் ஒரு பெண் வேறு, ஒரு மனைவி வேறு என்றாகிவிடுகிறது. என்னை? பால் திரிந்து தயிராகிய பின்றை, பால் வேறு தயிர் வேறாகுமேயன்றித் தயிர் பாலாகாது என்க. இதே நிலை ஓர் ஆணுக்கும் ஒரு கணவனுக்கும் பொருந்தும் என்க. மாந்தப் பிறவியில் உள்ள அத்தனை வாழ்வியல் கூறுகளுக்கும் இருவரும் ஒரே தகுதியில் உடன்பட்டவர்களே என்க!

இங்கு இன்னோர் உண்மையும் தெளியற்பாலது. அஃது ஒரு பெண் ஓர் ஆணின் நுகர்ச்சிக்கு உரியவளாகின்றாள், அதனால் அவள் அவனின் அடிமை, அடக்கம் என்பது தவறு. ஏனெனில் அப்பெண்ணைப் போலவே, அவ்வாணும் ஒரு பெண்ணின் நுகர்ச்சிக்கும் உரியவனாகின்றதும் உணர்தல் வேண்டும். அக்கால், அவனும் அவளின் அடிமையோ அடக்கமோ ஆகான். இரு இயக்கங்களும் தனித்து இயங்குதல் வேறு; இணைந்து இயங்குவது வேறு. இரண்டு தன்மைகளும் இணைந்து இயங்கும் பொழுது, அவ்விரண்டினது தனித்தன்மைகளும் சிதைக்கப்படுகின்றன என்க. எனவே,

ஒருத்தி இல்லாள், மனைவி என்றாகிய பின் பொது நிலையில் அவள் ஒரு பெண்தான் எனினும், தனி நிலையில் அவள் ஒரு பெண் அல்லள், மனைவியே! மனைவி என்ற பின் பெண்ணுக்குரிய தனித்தன்மையை அவள் இழந்து நிற்கிறாள் என்க. அதே போல், ஒருவன் ஒருத்திக்குக் கொழுநன், கணவன் என்றாகிய பின், பொதுநிலையில் அவன் ஓர் ஆண்தான் எனினும், தனிநிலையில் அவன் ஓர் ஆண் அல்லன்; கணவனே! கணவன் என்றாகிய பின், ஆணுக்குரிய தனித்தன்மையை அவன் இழந்து நிற்கிறான் என்க.

இந்நிலையில் எல்லாம் ஒரு தெளிவு ஏற்படின், ஒருவர்க்கு ஒருவர் அடிமை என்பதும் இல்லை; ஒருவர்க்கு ஒருவர் ஆண்டை என்பதுமில்லை என்க. அவை மனமயக்கங்களே ஆகும் என்க, அல்லது அறிந்த திரிபுகளே ஆகும்

இனி, நூலாசிரியர் இல்வாழ்க்கைக்கு உரியளாகப் போகும் ஒருத்தியின் நலன்களை மட்டுமே சிந்தித்தவர், அதில் ஈடுபடும் - ஈடுபடப்போகும் ஒருவனது நலன்களைச் சிந்தியாமல் போனதென்னை என்பார்க்குக் கூறுதும்.

இல்வாழ்க்கை என்பது ஓர் ஆணை அடிப்படையாகக் கொண்டது அன்று; பெரும் பகுதியும் பெண்ணையே அடிப்படையாகக் கொண்டது என்க. ஓர் ஆண் என்பவன் இல்லத்தில் இருக்க வேண்டிய தேவையிலன். அவன் திண்ணை, தெரு, சத்திரம், சாவடி, காடு, மேடு எங்கும் படுத்துறங்கும் தன்மையினன். அவனது உடலும், மனமும், அறிவும் தனித்து இயங்கும் தன்மையுடையனவாய் இயற்கையாகவே அமைக்கப் பெற்றுள்ளன. அவனுக்கு இன்னோர் ஆனோர பெண்ணோ அவன் விரும்பினாலன்றி உறுதுணையாக இருக்கத் தேவையில்லை. அவன் தனித்தும் இயங்க முடியும்; கூட்டத்தோடும் இயங்க முடியும்.

ஆனால் ஒரு பெண் அவ்வாறிலள். அவள் ஓர் இல்லத்தில், ஓர் அடைவில் இருக்க வேண்டிய தேவையினள். அவள் ஓர் அடைவை, இல்லத்தைவிட்டு வெளியே நாளைப் போக்கும் நிலையினள் அல்லள். ஓர் ஆணைப் போல் திண்ணை, தெரு முதலிய விடங்களில் அவளால் தனித்து உறங்கவும் வாழவும், ஆண்கள் நிறைந்த இவ்வுலகில் வாய்ப்பில்லை, அவ்வாறு இயங்குவது இயலாது. ஏனெனில் அவள் உடலமைப்பு, உள்ள மலர்ச்சி, அறிவுவெளிப்பாடு ஆகியவை இயற்கையாகவே ஆணைக் கவரும் தன்மையில் அமைந்துள்ளன. அவள் தனித்திருப்பின் எந்த ஆணும் அவளை உரிமையாக்கிக்கொள்ள இயலும் என்க. இந்நிலையில் ஓர் ஆணின் கைக்கு அவள் அகப்பட்டால் அவள் பெண் தன்மையினின்றும் மாறி ஒரு தாய் ஆகிவிடுகிறாள். அக்கால் அவளுக்கு உதவி, பேணுதல், காத்தல், புரத்தல் - தேவைப்படுகிறது. இத் தாயாகும் அவளின் தனித்தன்மைதான் அவளை

ஓர் ஆணுக்குத் துணையாகவும், அவனை இவளுக்குக் காப்பாகவும் ஆகும் நிலைகளை உருவாக்குகிறது. இயற்கையே இத்தகைய வரம்புகளையும் வாய்ப்புகளையும் அமைத்து உயிரியங்கியல் நடைபெறும் நிலையை உருவாக்கியுள்ள பொழுது, மாந்தரால் அதை எவ்வாறு மாற்றியமைத்துவிட முடியும் என்பதை எண்ணிப்பார்க்க.

எனவேதான் ஆண் கொழுவும் (கொம்பும்) பெண் கொடியும் ஆகின்றனர். கொழு (கொம்பு) தனித்து நிற்கலாம். கொடி தனித்து நிற்க வியலாது, என்க. அவளுக்கு அவன் ஒரு கொழுநனாகவும், அவனுக்கு இவள் ஒரு கொடியாகவுமே இருந்துதான் வாழ்வியற் கடைமைகளை நிறைவேற்ற வேண்டுமே தவிர, இந்நிலைகள் மாறியிருந்து அவை நிறைவேற்றப்படாவென்க. ஒருவேளை, அவ்வாறு, இயற்கை நிலைகளை மாந்தன் மாற்றியமைக்கும் பொழுது, உயிர்களின் இருப்பு நிலைகள் மாறுமே தவிர, உயிருடல் இயக்க நிலையில், அஃதாவது ஆண், பெண் என்னும் நிலையில் என்றுமே மாறுபாடு தோன்றாதென்க.

இவ்வுயிரியங்கியல் உண்மைகளை யெல்லாம் மெய்ப் பொருளாசிரிய ராகிய இந்நூலாசான், நன்குணர்ந்துதான் வாழ்க்கை இயங்கியலுக்கு ஒரு பெண்துணைதான் சிறப்புற அமையவேண்டுமே தவிர, ஆண் துணை அத்துணைச் சிறப்புற அமைய வேண்டும் என்பதிற் கவலை கொள்ளவில்லை. என்னை? ஒரு பெண் தனக்கமைந்த இயற்கையான உடலமைப்பு, உள்ளவுணர்வுகள், அறிவுச் சிந்தனைகள் ஆகிய இவற்றால், எத்தகைய சிறப்பற்ற ஆணையும் தனக்குற்ற சிறப்பான ஆடவனாக - கணவனாக ஆக்கிக் கொள்ளமுடியும் என்னும் ஆண் பெண் மெய்ப்பொருள் உண்மைகளை ஆசிரியர் நன்கு அறிந்துள்ளார் என்க. இவ்வுண்மையை இவ்வதிகாரத்துள்ள,

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை

– என்னும் குறட்பாவிலும் நன்கு புலப்படுத்தியுள்ளது கவனிக்கத் தக்கது.

இனி, இல்வாழ்க்கைக்கு இன்றியமையாத் தேவையாகிய இல்லாளுக்கு, மனைவிக்கு, இந்நூலாசிரியரால், தமிழியல் இலக்கிய வழக்கில், இவர் காலம்வரை இருந்திராத ஒரு புதுப்பெயராகவும், புதுமைப் பெயராகவும், ஒரு பொதுமைப் பெயராகவும் வாழ்க்கைத் துணை என்னும் இருபெயரொட்டுச் சொல் முதன் முதல் படைக்கப் பெற்று, இவ்வதிகாரத்துள் அதுவும் ஒரே ஒரு குறட்பாவில் மட்டுமே வழங்கப் பெறுவது ஒரு தனிச்சிறப்பாகும். இச்சொல்லை வேறு எங்கும் வேறு எவரும் ஆண்டிராத நிலையில், இவர் இதனைப் புதுவதாகக் கண்டு ஆண்டிருப்பது, பெண்மை, இல்லறத் தலைமையை ஏற்றுக்கொண்ட

தன்மையைப் பெருமைப்படுத்துவதாகவும், ஆண், பெண் இருபாலாரும் இணைந்து நடத்தும் இல்வாழ்க்கைக்கு இருவரும் சமபங்களிப்பைச் செய்து, சமமதிப்புப் பெறவேண்டும் எனும் உயரிய பொதுமை நோக்கத்தைப் புலப்படுத்துவதாகவும் உள்ளது.

ஓர் ஆணுக்குத் துணையென்று அமையாமல். வாழ்க்கை(க்கு)த் துணை - என்றிருப்பதையும், அதன் முழுப்பெருமையையும், பொறுப்பையும் ஒரு பெண்ணுக்குத் தந்திருப்பதையும் உற்று நோக்குங்கால், ஒரு பெண்ணின்றி இல்வாழ்க்கை இல்லை என்பதும், அவளே ஒருவனது வாழ்க்கைச் சிறப்புக்கு அடிப்படையாகவும், பொறுப்பாகவும் இருக்கின்றாள் என்பதும் புலப்படுகின்றன.

நூலாசிரியர் காலத்துத் தமிழகத்துள் புகத்தலைப்பட்ட ஆரியவியல் நாகரிகத்துள் பெண்ணடிமை உணர்வு முதன்முதலாகத் தலையெடுத்து நின்றதையும், அதனைத் தமிழியல் அறிஞர்கள் கண்டித்து நின்றமையையும், அவர்களுள் நூலாசிரியர் தலைமையாக இருந்ததையும் வரலாறு கூறுவதைப் போலவே, இந்நூலும் கூறுவது கவனிக்கத் தக்கது. அதற்கு முழுச் சான்றாகி நிற்பன இவ்வதிகாரமும், அதன் தலைப்புமே ஆகும். O

ருக. மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. 51

பொருள் கோள் முறை : **இயல்பு**

பொழிப்புரை : மனையறத்திற்குத் தக்க பெருமைக் குணங்களையும் செயல்களையும் (இயல்பாகவே) உடையவளாகித் தன்னை மனைவியாகக் கொண்டவனின் உடல், கல்வி, செல்வம், வருவாய் ஆகிய வளங்களுக்குத் தக்கபடி தன்னைத் தகவமைத்துக்கொள்ளத் தக்கவளே வாழ்க்கைக்குத் துணையாக இருக்கும் தகுதி உடையவள் ஆவாள்.

சில விளக்கக் குறிப்புகள்

1. **மனைத்தக்க மாண்புடையள்** இல்லறத்திற்குத் தகுதியான பெருமையுடைய குணங்களையும் செயல்களையும் இயற்கையாகவே அமையப் பெற்றவள்.

பெருமையுடைய குணங்கள், உண்மையான அன்புணர்வும், கணவர் நலன்களிலும் முயற்சிகளிலும் அக்கறையும் ஆர்வமும், பெரியோர்மாட்டும் சிறியோர்மாட்டும் வேறுபாடற்ற பேணுதல் தன்மையும், குடும்ப முன்னேற்றத்திற்கு ஒத்துழைக்கும் ஈடுபாடும், விருந்தோம்புகின்ற நல்லுணர்வும், பொதுநலவுணர்வாகிய அறவுணர்வும் போல்வன. இவ் வுணர்வுகள் இயற்கையாய் அமைய வேண்டுமாகலின் மாண்புடையவை - பெருமையுடையவை - எனப் பெறுவன.

பெருமையுடைய நல்ல செயல்கள், தூய்மை கடைப்பிடித்தலும், இனிமையும், அன்பும் தவழப் பேசுதலும், பண்பும் ஒழுக்கமும் தோன்ற இயங்குதலும், இடம், பொருள், ஏவல், காலம் அறிந்து செயல்படுதலும், சமையல் திறனும் போல்வன.

இவ்விருவகைத் தன்மைகளும் கொண்டவள் மாண்பு - பெருமை உடையவளாவாள்.

2. **தற்கொண்டான்** - தன்னை மணந்துகொண்ட கணவன்.

3. **வளத்தக்காள்** - தன் கணவனின் வளங்களுக்குத் தக்கபடி இணைந்து இயங்குகின்ற தன்மை உடையவள்.

வளங்களாவன - உடல் நலம், கல்வி, ஏற்கனவே அமைந்த செல்வநிலை, இனி, புதுவதாக வரும் வருவாய் முதலியன.

இவற்றுக்குத் தக்கபடி இணைந்து இயங்குதல் தன்மையுடையவள். மனைத்தக மாண்பு, மணந்துகொள்ளுமுன் இயற்கையாக அமைந்த பெருமைக் குணங்களும் செயல்திறன்களும்.

வளத்தக்காள் தன்மை, புதுவதாக மணந்து கொண்ட கணவனின் ஏற்கனவே அமைந்த நலன்களுக்கும் வளங்களுக்கும் தன்னைத் தகவமைத்துக்கொள்ளும் திறனாகும்.

இதனால், தன் தனித்தன்மையை இழத்தல் வேண்டாது அவனின் பொதுத்தன்மைக்குத் தக இணைந்து இயங்குதலாகும்.

அஃதாவது, தன்னைக் கொண்டவனின் உட்ல் நிலைக்கு ஏற்பவும், கல்வியறிவுக்கு ஒப்பவும், செல்வத்தன்மைக்கு உகந்தபடியும், வருவாய்க்கு ஒத்தபடியும், தன் செயற்பாடுகளை அமைத்துக் கொள்ளுதல் - இதற்கு முன்னர்த் தான் பிறந்து வளர்ந்த இடத்தில் இந்நிலைகளெல்லாம் வேறு வகையாக இருந்தாலும், தான் அவற்றுக்கு ஏற்ப இயங்கியிருந்தாலும், திருமணம் ஆகிய பின்னைத் தான் புகுந்த இடத்திற்கேற்ப அந் நடைமுறைகளில் சிற்சில மாறுபாடுகளைச் செய்து தன் மனநிலை, இயக்க நிலைகளைப்

புதிய இடத்திற்குத் தகுந்தாற்போல் தகவமைத்துக் கொள்ளும் தன்மையுடையவளாக இருத்தல் வேண்டும் என்பார்.

இந்நிலை கணவற்கும் வேண்டுவதே என்னும் கருத்தைத் தற்கொண்டான் என்னும் சொல்லால் புலப்படுத்தினார் என்க. என்னை? தற்கொண்டான் என்பது, தன்னை மனைவியாகக் கொண்டவன் என்று புறநிலையில் மட்டும் பொருள் படாது, தன்னை அன்பால் கொண்டவன், பண்பால், செயலால், ஒழுக்கத்தால், அறிவால் உரிமையும் உடைமையும் ஆக்கிக் கொண்டவன் என்று அகநிலையினும் பொருள்படும்படி உணர்த்துதலும் ஆகும் என்க.

பெண் ஒருத்தி தனக்குத் தக ஒத்துழைக்க வேண்டுமாயின் அவள் மன வெறுக்கையின்றி அன்புடன்பாடு கொண்டுதான் அவ்வாறு இயங்குதல் வேண்டுமன்றோ? அவளுக்குத் தக்கபடி அவனும் இயங்கும்பொழுதுதான், அவளும் அவனுக்கு ஒத்தியங்கல் இயலு மன்றோ? எனவே தன்னைக் கொண்டவன் என்கையில், தானும் அவ்வாறு கொளப்பட்டவள் என்னும் பொருளும் ஆங்கே அகப்பொருளாக நிற்றலை உணர்ந்து மகிழ்க.

அன்பு, பண்பு, மதிப்பு, ஒத்துழைப்பு என்னும் அகவுணர்வுகள் இருதலையும் ஒத்து இயங்குதலே இயற்கையாம் என்றுணர்க.

4. வாழ்க்கைத் துணை - இல்வாழ்க்கையில் அவளுக்கு அவன் போன்றே, அவனுக்கும் அவள் துணையாம் என்க.

இவ்வாறான சமநிலைப் பொருளை வருவிக்கத்தான் தமிழியல் வாழ்க்கையில் இதற்கு முன்னர் இல்லாத - புழங்காத – நிலையில் இச்சொல்லைப் புதுவதாகப் புனைந்து பயன்படுத்தினார் என்க.

பெண்மைக்குத் தந்த இச் சமநிலை உணர்வை நூல் முழுவதும் வரும் இன்னோரன்ன இடங்களிலும் காணலாம் என்க.

5. இஃது, இல்வாழ்க்கைக்குத் துணையாக அமையவரும் பெண்ணிற்கு இயற்கையாக இருக்க வேண்டிய மாட்சிமை (பெருமை)க் குணநலன்களையும், அவள் மணவாழ்க்கை தொடங்கியபின் அவள் மணந்து கொண்ட கணவனுக்கு ஏற்ற மனைவியாக அமையத் தன்னைமாற்றி (தகவு) அமைத்துக்கொள்ள வேண்டிய செயல்முறைகளையும் உணர்த்தியதாகும். O

ருஉ. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல். 52

பொருள் கோள் முறை :

இல்லாள்கண் மனைமாட்சி இல்லாயின்
வாழ்க்கை எனை மாட்சித்து ஆயினும் இல்.

பொழிப்புரை : இல்வாழ்க்கைத் துணையாக அமைந்த ஒருத்திக்கு, (முன் சொல்லப்பெற்ற) மனையறத்திற்குரிய பெருமைமிக்க தகுதிகள் இல்லாமற் போமாயின், அவளைக் கொண்டவனுடைய வாழ்க்கை (முற்கூறிய பெருமை) வளங்கள் என்ன வகையினவாக இருப்பினும், அவை இல்லாதவை (போலவே) ஆகும்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. ***மனைமாட்சி*** *- முன்குறட்பாவில் கூறப்பெற்றவாறு மனைவிக்குரிய இயற்கையான பெருமைக் குணங்களும். செயல்திறன்களும். மாண் - பெருமை; மாட்சி - பெருமைக்குரிய பண்பு நலன்கள்.*

2. ***எனை மாட்சித்து ஆயினும் இல்*** *- முன் குறட்பாவில் கூறியவாறு, அவளைக் கொண்டவனுடைய வாழ்க்கை என்ன வகையான வளங்கள் கொண்டதாக இருப்பினும், அவை இல்லாத வாழ்க்கை போன்றதாகவே இருக்கும். அஃதாவது, அவை பயனற்றவையாக ஆகிவிடும்.*

3. இல்வாழ்வானுடைய தகுதிகள், பெருமைகள் அனைத்தும், இல்லாளுடைய இயற்கைக் குணங்கள், செயல் திறன்களைக் கொண்டே பயனுள்ளவையாக இருக்கும். அவை இல்லெனில், இவையும் பயனில்லாமற்போகும் என்றார். O

ருஊ. இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை. 53

பொருள் கோள் முறை :

இல்லவள் மாண்பு ஆனால், இல்லது என்;-
இல்லவள் மாணாக்கடை உள்ளது என்.

பொழிப்புரை : இல்லறத்திற்குரிய அவள், (முன்பு கூறியவாறு, இயற்கைக் குணநலன்களும், தன்னைக் கணவனுக்குரிய வகையில் தகவுப்படுத்திக் கொள்ளும் செயல் திறன்களும் உடைய) பெருமைக்குரியவளாக இருப்பாளானால், அவளைக் கொண்ட இல்லற வாழ்க்கையில் இல்லாதது என்று சொல்லத்தக்கது எது? எதுவுமே இல்லை என்க. (இல்லாததும் இருப்பதைப் போலவே மனநிறைவைத் தருமாகையால்,) ஆனால் அவள் அவ்வாறு பெருமைக்குரிய குணநலன்களும் செயல் திறன்களும் இல்லாத வகையில் பெருமையற்றவளாக இருந்தால், அவ்வில்லற வாழ்க்கையில் (அவர்களின் தேவைக்குரிய எல்லா வகையான வளங்களும் நிறைந்திருந்தாலும்) இருக்கிறது என்று சொல்லத்தக்கது எது? எதுவுமே இல்லை என்க. (இருக்கிறதும் இல்லாததைப் போலவே ஆகி, மனநிறைவைத் தராது ஆகையால்)

சில விளக்கக் குறிப்புகள் :

1. **'மாண்பு '** என்னும் பண்புப் பெயர், அஃது உடையவளுக்கு ஆகி நின்றது.

2. **மாணாக்கடை** - மாண் ஆகா இடத்து. கடை - இடம், மாண் + ஆகா = மாணாகா. இறுதி உயிர்மெய் குறைந்து உயிரொடு நின்றது. மாண் + ஆ = மாணா. ஆ எதிர்மறைப் பொருள் குறித்ததுமாகும்.

3. இல்வாழ்க்கையின் நிறைவு உள்ளத்தைப் பொறுத்ததே ஆகும்; உடைமைகளைப் பொறுத்ததாகாது என்றார். அவ்வுள்ள நிறைவும் இல்லாளைப் பொறுத்தே பெரும்பாலும் அமையும் என்னும் நுட்பம் கூறினார் என்க.

4. இதில் இல்லவளை மட்டும் கூறி இல்லறத்தானைக் கூறாமற் போனது, அவன் மாண்பினும் இவள் மாண்பு அனைத்து நிலைகளினும் முகாமையும் மேலாந்தன்மையும் கருதியென்க. என்னை? இல்லறத்து வேர் போல் இல்லாள். இல்லறத்தான் அடிமரம் போன்றவன். அடிமரம் அரிப்புண்ணினும் வேர் அழுகாமலிருப்பின் மரமாகிய இல்லறம் காக்கப்பெறும் என்பது பற்றி என்க. **O**

ருச: பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின். 54

பொருள் கோள் முறை -

கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின்,
பெண்ணின் பெருந்தக்க யா வுள.

பொழிப்புரை - *(அவளுக்குக்) கற்பு என்னும் மனத்திண்மை (மனவுறுதி) படிப்படியே உண்டாகி நிற்கப்பெறின், இல்வாழ்வானுக்குத் தன் மனைவியைவிடப் பெருமைப்படத்தக்கவை, அவன் பாங்கில் வேறு எவை உள்ளன? எதுவும் இல்லை என்க.*

சில விளக்கக் குறிப்புகள் :

1. **பெண்ணின் பெரும் தக்க யா உள** - *ஒருவனுக்குத் தன் மனைவியை விடப் பெருமைப் படத்தக்கது எது உள்ளது? ஒன்றுமில்லை என்றார். மனைவியின் ஒழுக்கம் ஆணுக்கு வலிவூட்டுவது ஆகையால், அவன் பெருமைப்படத் தக்கது வேறெதையும் விட இந்நிலையே என்றார்.*

இங்கு, பெண் என்றது மனைவியை, பொதுவான ஒரு பெண்ணையன்று.

பெண்- பொதுவான நிலையில் விரும்பப்படுபவள், விரும்புதற்குரியவள். சிறப்பான நிலையில் விரும்பப்பட்ட மனைவி.

'யா உள' என்பது உடைமைப் பொருளில் 'யாவை உள' என்று வராமல் பாங்குப் பொருளில் - அஃதாவது உரிமைப் பொருளில் வந்தது என்க. உறவுப் பொருளில் எனினும் சிறக்கும்.

– 'பெண்ணின் பெரும் தக்க யா உள' - என்பதற்குப் பெண்ணின் பெருமைப்படத்தக்கவையான சிறப்புத் தன்மைகள் வேற எங்கு உள என்றும் பொருள் கொண்டு, அவளிடம் இயற்கையாக அமைந்த கவரத்தகும் அழகிய உடலமைப்பு, அன்புணர்வு, மக்களை ஈன்று தரும் தாய்மை, அவர்களையும் கணவனையும் பேணிப் புரக்கும் பொறுமை, பொறுப்புடைமை, இல்லறச் சுமைகளைத் தாங்கிக்கொள்ளும் நோன்மையுடைமை, அனைவரையும் அரவணைக்கும் கனிவுடைமை, விருந்தினர்ப் பேணும் பண்புடைமை முதலிய அருங்குணங்களும் சிறப்புத்தன்மைகளும் வேறு எங்கும் எவரிடத்தும் இல்லை - என்னும் விளக்கமும் கூறலாம் என்க. என்னை? இத்தகு சிறப்பியல்கள் உடைய பெருமைக்குரிய பெண்ணுக்குக் கற்பு என்னும்

மனவுறுதிப்பாடும் இருக்குமாயின் அவளின் பெருமை இன்னும் சிறப்புற்றிலங்கும் என்றார் என்க.

-- இவ்விடத்து, ' A Virtuous woman is a crown to her husband ' என்னும் ஆங்கிலப் பழமொழி நினைதற்குரியது.

2. **கற்பு என்னும் திண்மை** - கற்பு என்று கூறப்பெறும் மனவுறுதி.

1. கல் + பு - கற்பு. கல்போலும் உறுதி, 'பு' பண்புப் பெயர் ஈறு - கல் போலும் உறுதியான ஒருமைமனநிலையுடன் இருப்பது.

2. கற்பு 'ஒருமை மகளிர்' என்று பிறிதோரிடத்தும் (974) கூறுவார். கல்வி. கற்பிக்கப் பெற்றது. ஒரு பெண் மணமான பின் தன் கணவனொடு எவ்வெவ்வாறு நிறைவுற வாழ்தல் வேண்டும் என்று தன் தாய் தந்தையரால் கற்பிக்கப் பெறும் நெறி நடைமுறை, ஒழுகலாறு ஆகும்.

மணமாகாத பெண்ணுக்குரிய நடைமுறை வேறு. அது பொது வானது. மணமாகிய பெண்ணுக்குரிய நடைமுறை வேறு. அது சிறப்பானது. **இஃது ஆணுக்கு அடங்கிய அல்லது அடிமைப்பட்ட நிலையன்று.** கணவனக்கு உரியாளாகிய பின்னை, அவனுடன் உடல், மனம், அறிவு, ஆகியவற்றால் இணைந்து வாழும் ஓர் **உரிமை உறவு நெறி.** இஃது ஏற்கனவே தாம் பெற்ற பட்டறிவுகளால் பெண்ணுக்குரியாராகிய பெற்றோர் உற்றோரால் பெண்ணுக்கு உரைக்கப் பெறுவது - கற்பிக்கப் பெறுவது என்க.

'கற்பினின் வழாஅ நற்பல உதவிப்
பெற்றோர் பெட்கும் பிணையை ஆகு 'என'

--- அகம் - 86. 13-14.

3. **உண்டாகப் பெறின்** - இம்மனவுறுதியும், கற்பறிவும் படிப்படியாக ஒரு பெண்ணுக்கு உண்டாவது ஆகலின், உண்டாகப் பெறின் என்றார். உண்டாகப் பெறின் - உண்டு ஆகுதல் பெறின். இனி, தானே உணடாவதுடன் பெற்றோராலும், அவர் போலும் பிறப்புறவோர் தம்மாலும் உண்டாக்குதலும் உண்டு. ஆகையால் அதற்கும் இச்சொற்பொருள் பொருந்து மென்க.

உண்டாக்குதல் - உண்டு எனும்படி உருவாக்குதல்
உண்டாகுதல் - உண்டு எனும்படி உருவாதல்.

– இச் செய்வினை, செயப்பாட்டு வினைச்சொற்கள் இரண்டிற்கும் 'உண்டாகப்பெறின்' என்னும் பொதுச் சொல்லமைப்புப் பொருந்தும் என்க.

– கற்பு - பெண்ணின் மன ஒருமைக்கும் உறுதிக்கும் ஓர் இடுகுறிச் சிறப்புச் சொல்லாக இலக்கிய வழக்கில் வேரூன்றிவிட்ட தென்க.

இவ் வொருமையுணர்வு 'பெருமை' அதிகாரத்துள் ஆணுக்கும் வலியுறுத்தப் பெறகிறது. (974). அங்கும் அவ்வுணர்வு உண்டாகப் பெறுதல் போல் 'தன்னைத்தான் கொண்டு ஒழுகுதல்' என்றும் விளக்கப் பெறுகிறது.

– இவ்வொருமை உணர்வுச் சொல், 'பெண்ணடிமை'ச் சுட்டுச் சொல்லன்று; 'பெண்ணுரிமையினை உறுதிப்படுத்தும் தன் னொழுக்கச் சொல்' - என்க.

ஒழுக்கப் படுத்துதல் அடிமைப்படுத்தலாகாது- அதேபோல் ஒழுக்கமிழத்தல் உரிமையுமாகாது.

– இப்பொதுநெறி, திருமணமான ஆணுக்கும் பெண்ணுக்கும் உகந்த நெறியாகவே இந் நூலுள் வலியுறுத்தப்பெறுகிறது.

– இனி; தமிழியலில் கற்புநெறி பொதுவானதுபோல், ஆரிய வியலில் இது பொதுவாக்கப் பெறவில்லை. அங்கு, இது பெண்ணுக்கேயுரிய அடிமைநெறியாக வலியுறுத்தப்பெறுகிறது.

– இதன் விரிவான விளக்கங்களை எம் நிறைவுரையில் கண்டு தெளிக.

– இனி, கற்பென்னும் 'திண்மை' என்று கூறுவதால் பெண்மையுளம்,, அவருடல் போலவே மென்மை வாய்ந்ததும், அது வன்மை (திண்மை) பெறுதல் வேண்டும் என்பதும் குறிப்பால் உணர்த்தினார் என்க.

– 'கற்பு' என்பதைப் பரிமேலழகர் 'கலங்கா நிலை' என்றார். அதை ' நெகிழாநிலை' என்பது மிகப் பொருந்தும்.

4. இச் செய்யுளின் வழி, மனைவி ஒருத்திக்கு அவள் மனவுறுதியே, ஒரு கணவன் பாங்கில் அமைந்த யாவையினும், அவனுக்குப் பெருமை தருவது என்பதும், அதுவே அவளுக்கும் சிறப்புத் தருவது என்பதும் பெறப்பெற்றன. இஃது இல்லவள் மாண்புகளில் சிறந்த பண்புணர்வாகையால், அதன் பின் வைக்கப்பெற்றது. O

குரு. தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை. 55

பொருள் கோள் முறை : இயல்பு

பொழிப்புரை : (குடும்ப முன்னோர், குல முதல்வோர், மக்கள் நலம் கருதி வாழ்ந்து மறைந்த அறச்சான்றோர் முதலாய) தெய்வங்களை, மணமாகிய பின்னை ஓர் இல்லக்கிழத்தி தொழமாட்டாள்- அவள் தன் பற்றுக் கோடாகிய கொழுநனையே ஒவ்வொருநாள் காலையிலும் மனத்தால்

தொழுது, படுக்கையினின்று எழும் வழக்கவுணர்வு கொண்டவள்; அத்தகையவள் பெய் எனக் கூறின் மழை பெய்யும்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. தெய்வம் தொழாள் கொழுநன் தொழுது எழுவாள்- முந்தைய குறளில், கற்பென்னும் ஒருமை மனவுறுதிப்பாட்டை முன்வைத்துக் கூறியவர், இதில் அவ்வுறுதிப்பாடு என்னென்று விளக்கினார் என்க. அஃதுதாவது, கொடிபோல ஒரு பற்றுக் கோடின்றி அலைந்து நின்ற தனக்குப் பற்றிப் படரும் ஒரு கொழுகொம்பாய் நின்றானைத் தனக்கு வாழ்வளித்த தெய்வமாய்க் கருதி, அவன்மேல் பத்திமை கொண்டு, ஒவ்வொருநாள் காலையிலும் துயிலெழுகையில், அவனை மனத்தால் வழிபட்டு எழவும், அவனையன்றி வேறு வாழ்ந்து சென்ற மூவகை மாந்தத் தெய்வங்களையும் அவ்வாறு தொழாதிருக்கவும் ஆன வழக்கத்தைக் கொண்டாள் என்று அவளின் மன ஒருமை உறுதியைச் செயலாலும் பெருமைப்படுத்திச் சொன்னார் என்க.

மூவகைத் தெய்வம், குடும்ப முன்னோரும், குல முதல்வோரும், மக்கள் நலம் கருதி வாழ்ந்து மறைந்த அறச் சான்றோரும் என்க.

குலம் சாதியன்று. மரபினம் என்க.

மரபினம் மொழியாலும், இனத்தாலும், நாட்டாலும், பண்பாட்டாலும், நாகரிகத்தாலும், கலை, இலக்கியக் கூறுகளாலும் ஒன்றுபட்டுத் திகழும் மக்கள் தொகுதி.

– இம் மூவகைத் தெய்வங்களும் அவரவர் மனைவிக்குக் கணவர் ஆகையால், பிறபெண்டிர்க்குரிய கணவரை வணங்காது, தன் கணவனை வணங்குதல், பேரன்பும், ஒருமைக் காதலுணர்வும், மனவுறுதியும், உயர்மதிப்பும் கொண்ட நன்றியுணர்வினான் என்க. வணக்கத்திற்குரியவர் யாவராயினும் யாவர்க்காயினும் அவர்களும் இத்தகையோரே. ஒருவரை வணங்குதல் - தொழுதல் - பிழையன்று; அவர் நெறிப்படும் ஒரு மனவுணர்வு அது. இது மக்கள் தொடர்புக்கு அடிப்படையானது. பிற உயிரினங்கட்கு இவ்வுணர்வுநிலை இல்லை என்க.

– இக்குறள், கால, அறிவு, அறிவியல், தன்மான, தன்மதிப்பு, சமநிலையுணர்வு, வளர்ச்சியில் பலவாறான கொள்கைச் சிக்கலுக்குரியதாக விருப்பினும், நூலாசிரியர் காலத்து, மக்கள் நன் மனவுணர்வே பெருமதி மதிக்கத் தகுந்ததாக இருந்ததாலும், குடும்ப அமைப்பையே பிற அனைத்து, வாழ்வியல் கூறுகளினும், அறங்களினும் உயர்வாகக் கருதியதாலும் [கருதுக : அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை (49)] அக்குடும்ப அமைப்பிற்கு

அடித்தளமாகவும் கடைக் காலாகவும் விளங்குவன அக்குடும்பத் தலைவியின் மாண்பும், மனஒருமையும் (கற்பும்), ஒழுக்கமுமே என்று குமுகாய நலவறிஞர்கள் கருதியிருந்ததாலும், நூலாசிரியரும் அக்கருத்தையே போற்றிக் கொண்டவராதலினாலும், இல்லக்கிழத்தியின் பேரொழுகலுக்குப் பெருமதிப்புக் கொடுத்து உரைக்கப்பெற்றதென்க.

கொழுநன் - என்னும் சொல் **'கணவன்'** என்னும் சொல்லினும், பொருள் பொதிந்தது, பண்புணர்வு கொண்டது.

கணம் - கூட்டம் - சேர்க்கை.
கணத்தல் - கூடுதல் - சேர்தல்.
கணவன் - கூடுதலுக்கு உரியவன், சேர்தலுக்குரியவன். உடலுறவு கொள்ளுதற்குரியவன்.
கொள் - கொளுநன் - கொழுநன் - கொள்ளுதற்குரியவன், - கொண்டவன்.
கொள்ளுதல் - பற்றுதல்
கொடிபோலும் பற்றுக்கோடில்லாத ஒரு பெண் பற்றுதற்கு உரிய கொழுகொம்பு போன்றவன்.

கழக இலக்கியங்களில் 'கொழுநன்' என்னும் சொல்லாட்சியை விட, 'கணவன்' என்னும் சொல்லாட்சியே மிகுதியாக உள்ளது.

'கொழுநன்' என்னும் சொல் ஏறத்தாழ முப்பது இடங்களிலும் 'கணவன்' என்னும் சொல் ஏறத்தாழ நாற்பது இடங்களிலும் பயிலப் பெற்றுள்ளன.

இவற்றைவிட, காதலன், காதலர், காதலவன், காதலவர் என்னும் சொற்கள் கழக இலக்கியங்களில் ஏறத்தாழ இருநூற்று முப்பது இடங்களில் பயிலப் பெற்றுள்ளன.

திருக்குறளிலோ 'காதலர்' என்னும் சொல் பத்து இடங்களிலும், 'காதலவர்' என்னும் சொல் நான்கு இடங்களிலும், 'கொழுநன்' என்னும் சொல் இக்குறளில் ஒரே இடத்தில் மட்டும் பயிலப் பெற்றுள்ளன. 'கணவன்' என்னும் சொல் திருக்குறளில் வரவே இல்லை. 'கணவனைக் குறிக்க வேண்டிய இடங்களிலெல்லாம் 'காதலர்', 'காதலவர்' என்னும் சொற்களே ஆளப் பெறுகின்றன.

– இனி, **தொழுதல்** என்பது கைகூப்பி வணங்குதல், 'தொட்டு வணங்குதல்' என்பார் பாவாணர். மனத்தால் தொழுதலும் உண்டு.

– ஈண்டுக் குறிப்பிடப் பெறுவது மனத்தால் தொழுதலே. சிலர் 'தொழுது எழுதலா' 'எழுந்து தொழுதலா' என்றெல்லாம் வீணாய்வு செய்வர். படுக்கையிலுள்ளாள் கண்விழித்த பின், கணவனை மனத்தால்

தொழுது பின் படுக்கையினின்று எழுவள் என்பதே தெளிபொருள் என்க.

2. பெய்யெனப் பெய்யும் மழை : பெய் என்று சொன்னவுடனேயே பெய்யும் மழை.

– இத்தொடருக்குப் 'பெய்யென்று சொன்னவுடனேயே பெய்யும் மழையைப் போன்றவள்' என்று புரட்சிப் பாவேந்தர் பொருள் கூறுவார். அது திருவள்ளுவர் கருத்தாகாது.

'வீசென வீசும் காற்று', 'தோன்றெனத் தோன்றும் கதிர்' - என்பன போன்றது 'பெய்யெனப் பெய்யும் மழை' - என்பதும்.

– இதை இல்பொருள் உவமையாகக் கொண்டால்தான் 'பெய்யெனப் பெய்யும் மழை போன்றவள்' என்று பொருள் கொள்ளமுடியும்.

– பெய் என்று யார் சொன்னாலும் மழை பெய்யாது. அஃது இயற்கையன்று. இறும்பூது; கற்பனை.

அவ்வாறு பொருள் கொள்வதற்கும், அப்படி எங்காவது ஒரு நிகழச்சி நடந்திருத்தல் வேண்டும். அவ்வாறு நடந்ததாகத் தமிழ் இலக்கியங்களுள் எங்கும் காட்டப்பெறவில்லை.

– ஆனால், மணிமேகலையுள் 'வான்தரு கற்பு' (மணி. 22:55), 'மழைதரும் இவள்' (மேற்படி : 63) என்று வருவதாகப் பாவாணர் எடுத்துக் காட்டிய அடிகளிலும், அவ்வாறு மழை தருதற்குரிய தன்மைதான் கூறப்பெற்றதே தவிர தந்ததிறம், காட்டப்பெறவில்லை.

----- எனவே, பழந்தமிழகத்தில், கற்புள்ள பெண் என்றால், அவள் கணவனைத் தெய்வமாக மதித்துத் தொழல் வேண்டும்; அத்தகைய கற்புள்ளவள் 'பெய் என்றால் மழை பெய்யும்' என்னும் நம்பிக்கை இருந்துளது என்பதே இக் குறளடக்கிய பிற கூற்றுகளிலிருந்தும் தெரியவருகிற செய்தி !

– இது மிகைப்படுத்தப் பெற்ற ஒரு தெய்வ நம்பிக்கையே தவிர, இயற்கைக்குப் பொருந்தியதாகக் கூற முடியாது. இஃதும் ஒரு வகையில் மூடநம்பிக்கையே.

இம் மூடநம்பிக்கை நூலாசிரியர்க்கும் இருந்துள்ளது என்பதையே இக்குறள் காட்டும். அதற்காக அவரை அதனின்று மீட்கும் பொருட்டு, இத்தொடர்க்கு, 'பெய்யெனப் பெய்யும் மழை போன்றவள்' என்றெல்லாம் பொருளுரைப்பது தேவையின்று என்றறிக.

– இது பெண்ணடிமை யாகாது. பெண்மையைத் தெய்வ நிலைக்கு உயர்த்துதற்குக் கொண்ட மூடநம்பிக்கையே அன்றி வேறன்று. நம்பிக்கை மிகையான மன உணர்வின்பாற்பட்டது; அறிவின்

பாற்பட்டதன்று. அறிவின்பாற்பட்டதெனிற்றான் அது 'பெண்ணடிமை' ஆகும் என்க.

3. இஃது, இல்லறம் மேவிய ஒருத்திக்கு ஒருமை மனவுறுதி வேண்டும் என்று வலியுறுத்தியதும், இன்றெனில் இல்லறம் சிதைவுபடும் என்பதும் என்க.

4. இதன் மேலான, பிற அனைத்து விளக்கங்களையும் எம் நிறைவுரையுள் காண்க. O

ருசு தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்துச் சோர்விலாள் பெண். 56

பொருள் கோள் முறை : இயல்பு

பொழிப்புரை : *(உடலாலும் உள்ளத்தாலும் அறிவாலும்) தன்னை முதலில் தற்காப்புச் செய்துகொண்டு, (தான் செலுத்தும் அதே போலும் அன்பாலும் அக்கறையாலும் ஈடுபாட்டாலும் நம்பிக்கையாலும்) தன்னை ஒரு துணையாகக் கொண்டவனாகிய கணவனையும் (தன்னைப் போல) பேணிப்புரந்து, (தன்னைப் பற்றியும், தன் கணவன், குடும்பத்தார் இவர்களைப்பற்றியும், பிறர் மதிப்பிட்டுத் தகுதிகூறும் பெருமை பொருந்திய பாராட்டு மொழிகளுக்குத் தன்னால் ஏதம், (குற்றம்), இழுக்கு (இழிவு), எதுவும் வராமல் காத்து, இம் முயற்சிகளால் (உள்ளத்தாலும் உடலாலும்) சோர்வு (தளர்ச்சி) அடையாதவளே, கடமை சான்ற இல்லறத் துணைவியாவாள்.*

சில விளக்கக் குறிப்புகள் :

1. ***தற்காத்து*** : *தன்னை முதலில் தற்காப்புச் செய்துகொண்டு. குடும்ப நிலையில் அவரவர்களும் தங்கள் தாங்கள் நலம் பெறுவதையே நோக்கமாகக் கொண்டிருப்பார்களாகையால், அவர்கள் அனைவர்க்கும் அடிப்படை நலனுக்கு உகந்தவளாகிய தன்னை எவரும் கவனிக்க மாட்டார்கள் என்பது உலக நடைமுறையாயிருப்பதை நன்கு கவனித்த ஆசிரியப் பெருமான், மனைவி ஒருத்திக்கு முதலில் தானே தன்னைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துவார்.*

பல குடும்பங்களில், வெளியே சென்ற கணவன், வீடு திரும்பும் வரை காத்திருந்து, நெடுநேரமாயினும், அவனுக்கு உணவருத்தி அதன்பின்

தானருந்தும் நிலையினையும், குடும்பத்துப் பிறர் முன்னரே உண்டு முடித்து, இவளைப் பற்றிக் கவலைப்படாத நிலையினையும் கண்டு வருந்திய நிலையில், ஒரு குறிப்பிட்ட நேரத்திற்குள் கணவன் வாராத நிலையில், தான் வீணே பசித்துக் கிடவாமல், தானும் தன் உடல் நலத்தைப் பேணிக் கொள்ளும் பொருட்டு, உணவருந்திக்கொள்ள வேண்டிய தேவையையும் உள்ளடக்கியே இத் 'தற்காத்து' என்ற கருத்தைக் கூறினார் என்க.

---- பிறர் நலத்தைக் கருதுவதிலேயே முழுக்கவனமும் முழு முயற்சியும் செய்யும் இல்லத்தலைவி, தன் நலத்தையும் முதற்கண் காத்துக் கொள்ளவேண்டும் என்றார்.

---- இதில், மன நலமும் அறிவு நலமும் முதலியனவும்கூட அடங்கும் என்க. அந்நிலையில் - 'அஞ்சுவதும் நாணுவதும் ஆமையைப்போல் வாழுவதும் கெஞ்சுவதுமாக' ஓர் இல்லக் கிழத்தி அடங்கி ஒடுங்கி, வீட்டு மூலையிலேயே முடங்கிக் கிடக்காமல், தன் கல்வி ஈடுபாட்டை வளர்த்துக்கொள்ளும் அறிவு முயற்சிகளிலும், பிறர்பால் மனம்கொண்டு பேசி, மனவிறுக்கம் தணித்துக் கொள்கின்ற கலந்து பழகுதலிலும் - ஈடுபட்டு மகிழ்ந்திருப்பதையும் கூட அடக்கிக் கூறலாம் என்க.

2. **தற்கொண்டான் பேணி** : தன்னை மனைவியாகக் கொண்ட கணவனைப் பேணி.

--- அஃதாவது, தான் செலுத்தும் அதே போலும் அன்பாலும், அக்கறையாலும், ஈடுபாட்டாலும், நம்பிக்கையாலும், தன்னை ஒரு துணையாகக் கொண்டவனாகிய கணவனையும், தன்னைப்போல் பேணிப் புரந்து - என்பதைத் 'தற்கொணடான்' என்னும் இணைச்சொல் ஆட்சியினால் நுண்ணிதின் விளக்கினார் என்க.

3. **தகை சான்ற சொல் காத்து** : தான் மணமாகி வந்து இல்லறம் மேற்கொண்டதிலிருந்து, முதுமையுற்று வாழ்க்கை நிறைவெய்துங் காலம் வரை, தன்னைப் பற்றியும், தன் கணவன், குடும்பத்தார் இவர்களைப் பற்றியும், உறவினரும், நண்பரும், சான்றோரும் மதிப்பிட்டுத் தகுதி கூறும் பெருமை பொருந்திய பாராட்டு மொழிகளுக்குத் தன்னால் ஏதமும் இழுக்கும் வாராமல் காத்து. ஏதம் - குற்றம்; இழுக்கு - இழிவு.

---- ஒரு குடும்பப் பெருமை குடும்பத்தலைவனாலும் தலைவியாலும் அதன் உறுப்பினர்களாலும் மதிப்பிடப் பெறுவது உலகியல்.

அதில், கணவனாலும் பிள்ளைகளாலும் பிறராலும் வருகின்ற ஏதம், இழுக்குப் போலவே, மனைவியாலும் வரக்கூடாதென்னும் அவட்குரிய கடமையையும் பொறுப்பையும் இங்கு உணர்த்துவார்.

இதில், இன்னொன்றும் உணரத்தக்கது. அது, மற்ற பிறரால் குடும்பத்திற்கு வரும் ஏத, இழுக்குகளைவிட, ஒரு குடும்பத் தலைவியால் வரும் தாழ்வு நிலைகளே மிகுதியும் உலகினரால் சுட்டிப் பேசப்பெறுவன ஆகலின், அவை தன்னால் வராமல் காத்துக்கொள்வது தன் கடமைகளுள் தலைசிறந்ததும் இல்லறத்திற்கே அடிப்படையானதும் என்பது.

4. **சோர்விலாள் பெண் :** இம் முயற்சிகளிலெல்லாம் உள்ளத்தாலும் உடலாலும் சோர்வு அடையாதவளே கடமைசான்ற இல்லத்துணைவியாவாள். சோர்வு - தளர்ச்சி - மனச் சலிப்பு.

5. இந்தக் குறட்பாவால், கடமை சான்ற இல்லக் கிழத்தியின் நால்வகைக் கடமைகள் கூறப்பெற்றன. ஒன்று, தன்னை உடலாலும், உள்ளத்தாலும், அறிவாலும் காத்து நிலைப்படுத்திக் கொள்ளல். இரண்டு, தன்னை மனைவியாகக் கொண்டவனைத் தானும் அதே அன்பொடும், அக்கறையொடும், ஈடுபாட்டொடும், நம்பிக்கையோடும் பேணிப் புரத்தல். மூன்று, தொடக்கத்திலிருந்து இறுதிவரை அக்குடும்பத்திற்கும் தனக்கும் உள்ள பெருமையைக் காத்துக் கொள்ளுதல். நான்கு, இக்கடமை முயற்சிகளையெல்லாம் செய்து வரும் பொழுது, உள்ளத்தாலும், உடலாலும் தளர்ச்சியின்றி ஊக்கத்துடன் இயங்குதல். O

ருஎ.) சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை. 57

பொருள் கோள் முறை :

மகளிர் சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் ?
நிறை காக்கும் காப்பே தலை.

பொழிப்புரை : உள்ளத்தாலும் உடலாலும் தவறு செய்யாமல் இருக்க வேண்டித் திருமணம் ஆன பெண்டிரைச் சிறையுள்வைத்துக் காப்பதுபோல் காக்கும் காவல் என்ன விளைவைத் தரும்? (அவர்கள் மனம் வைத்தால் அக்கட்டுக்காவலை மீறியும் தவறு செய்யமுடியுமாகையால் ஒரு

விளைவையும் தராது. இந்நிலையில் அவர்கள் தம் நடுநிலையான மனவுறுதி ஒருமை யுணர்வால் தங்களைத் தாங்களே காத்துக்கொள்ளும் காவலே மிகச்சிறந்ததாகும்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. முற்குறளில் கூறப்பெற்ற, தன்னையும் தகைசான்ற சொல்லையும் காத்துக்கொள்ளாத இல்லத்துணைவியால் வரும் ஏதங்களும், இழுக்குகளும் வராமல் செய்யும் முயற்சியின் வகை இதில் கூறப் பெற்றது என்க.

2. **சிறை காக்கும் காப்பு :** இல்லக் கிழத்தியை, அவள் தவறு செய்து விடாமல் இருக்க, சிறைவைத்துக் காப்பதுபோல், அடைத்துவைத்தும் அதன்மேல் காவல் செய்தும் காக்கின்ற காப்பு.

3. **எவன் செய்யும் மகளிர் :** திருமணம் செய்து கொண்ட மகளிரை அக்கட்டுக் காவல் என்ன செய்துவிட முடியும் ? ஒன்றும் செய்ய முடியாது. உலகப் பெரும்பான்மை நோக்கி மகளிர் என்றார்.

4. **நிறை :** நடுநிலையான ஒருமை மனவுறுதி - கற்புணர்வு.

   'நிறைகாக்கும் காப்பு' என்பதற்குப் 'பெண்மையில் நிறைமையைக் காக்கும் பாதுகாப்பான நிலை' என்றும் பொருள் கூறுவர்.

   நிறைமை ஒரு மனவொழுக்கமாகலான், அதனை எவ்வகைப் புறப் பாதுகாவலும் காத்தற்கியலாமையான், அப்பொருள் ஒரு முகமன் வழக்கமாக (உபசார வழக்காக) அமையுமேயன்றிச் செயற்பாட்டிற் குதவாதென்க.

   இக்குறளினது கூற்றால் நூலாசிரியர் காலத்துப் பெண்களைச் சிறைவைத்தும் காத்தமை புலப்படுகிறது என்க. இது தொடர்வது இன்றும் சிற்சில இடங்களிலும் இனங்களிலும் உண்டென்க.

5. இது, பெண்டிர்க்கு அவர் தம்மைக் காக்கும் மனவுறுதியே காவலாவதன்றிப் புறக்காவலால் ஒரு பயனும் விளைவதில்லை என்றார் என்க. **o**

ருஅ. பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப் புத்தேளிர் வாழும் உலகு. 58

பொருள் கோள் முறை :

பெற்றான் பெறின், பெண்டிர் புத்தேளிர் வாழும் உலகு பெருஞ்சிறப்புப் பெறுவர்.

தொழிப்புரை : *தம்மை அனைத்துத் தகுதியானும் மனம் ஒப்பி மனைவியராக ஏற்றுக்கொண்ட ஆடவரைத் தாமும் அனைத்துத் தகுதியானும் மனம் ஒப்பிக் கணவராக ஏற்றுக் கொள்ளின் அத்தகைய பெண்டிர், தேவர்கள் வாழ்வதாகக் கருதப்பெறும் இன்பவுலகில், பெருமை மிக்க சிறப்புச் செய்யப் பெறுவர்.*

சில விளக்கக் குறிப்புகள் :

1. பெற்றான் : *மனைவியாகப் பெற்றான், மனைவியாகக் கொள்ளப் பெற்றான், மனைவியாக ஏற்றுக் கொள்ளப் பெற்றான்.. செயப்பாட்டுவினை செய்வினையாகி நின்றது.*

இனி, மனைவியாக ஒரு பெண் ஒருவனால் ஏற்றுக் கொள்ளப்பெற வேண்டுமானால், அதற்குரிய தகுதிகளை அவள் பெற்றிருத்தல் வேண்டும். அத்தகையவளைத்தான் அவன் மனம் ஒப்பி மனைவியாக ஏற்றுக் கொள்ளப் பெறுவான் என்க.

2. பெறின் : *அதே நிலையில் அவனும் அவளால் கணவனாக ஏற்றுக்கொள்ளப்பெறின்.*

அப்பொழுதுதான் இருவர் மனமும் ஒன்றுபட்டு இல்லறம் நடத்த முடியும் ஆகையான்.

3. பெற்றான் - *பெண்டிர். ஒருமை பன்மை மயக்கம்.*

4. பெறுவர், பெண்டிர் புத்தேளிர் வாழும் உலகு : *தேவர் வாழும் உலகம்.*

– புத்தேளிர் என்பார் தேவர் என்ற கருதுதற்கு பொருளடிப்படை விளங்குமாறில்லை. வெறும் இடுகுறிப் பெயராக நிற்கும் இச்சொல் லுக்கு எந்நூலிலும் வேறு விளக்கமும் இல்லை. எனினும் நூலாசிரியர் காலத்து இச்சொல், தேவர்களைக் குறித்ததாகவும், அவர்கள் வாழும் உலகம் தேவர்கள் வாழும் உலகம் என்பதாகவும், அஃது ஓர் இன்பவுலகம் என்பதாகவும் கற்பனையால் கருதப்பெறும் உலகமாக இருந்துள்ளது என்று தெரிகிறது. இஃது ஒரு மனவியல்

மிகுகற்பனை. உலகியல் துன்பநிறைவு தாளாத ஏக்கத்தான் வந்திருத்தல் வேண்டும் என்க. மற்றும், இதற்கான அறிவியல் சான்றோ மெய்யறிவியல் சான்றோ இன்றுவரை இல்லை.

– இல்லற வழுத்தத்தில் பெண்டிர் படும் கடமைச் சுமைக்கு ஆறுதலளிக்க வேண்டும், அவர்கள் எவ்வாற்றானும் எந்நிலையிலும் கணவனை மதித்துப் போற்ற வேண்டும் என்னும் நோக்கத்துடன், ஆரியவியலின் கர்மாக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு புனையப்பெற்ற கற்பனையாதல் வேண்டும்.

– மற்று, மனைவியைக் கணவன் விரும்பும் அதே அடிப்படையில், கணவனையும் மனைவி விரும்புதல் வேண்டும் என்னும் இல்லற மனவியலையும் மதிப்பியலையும் கொண்டதாகும் இக்கருத்து என்க.

5. இதற்குப் 'பெண்டிர் பெருஞ்சிறப்புப் பெறின், அப்பெண்டிரை மனைவியாகப் பெற்ற கணவரும் புத்தேளிர் உலகில் பெருஞ்சிறப்புப் பெறுவார்கள்', என்று பொருள் தருவாரும் உளர்.

உழக்கில் கிழக்கு மேற்குப் பார்ப்பதுபோல், இப்பொருளில் வேறு புதுச்சிறப்பொன்றும் இல்லை என்க.

6. வேறு சிலர் இக்குறள் கருத்தைக் கணவர்மேல் சாற்றித், 'தம்மைப் போல் நல்ல குணமும் செயலும் உடைய கணவரைப் பெறின், அத்தகைய பெண்கள் என்றும் புதிதாக மணந்து கொண்டதுபோல் இன்பமும் பெருஞ்சிறப்பும் பெறுவர்' என்று உரை தருவது, வலிந்து பொருள் கொள்வதாகும் என்க.

--- நூலாசிரியர் இவ்வதிகாரத்துள் தரும் கருத்துகள் அனைத்தும் இல்வாழ்க்கைத் துணைவியாகிய மனைவிக்கு இருக்கவேண்டிய பெருமைப்பாடுகளையும், அவளுக்கு இருக்கக்கூடாத சிறுமைப்பாடு களையுமே என்க. அவர், இல்வாழ்வானுக்கிருக்க வேண்டிய பெருமைகளையும் இருக்கக்கூடாத சிறுமைகளையும் இதற்கு முன்னுள்ள 'இல்வாழ்க்கை' அதிகாரத்திலேயே சுட்டியுள்ளதையும் ஓர்க.

O

ருசூ.) புகழ்புரிந்த இல்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை. 59

பொருள் கோள் முறை :

புகழ்புரிந்த இல் இலோர்க்கு, இகழ்வார் முன்
ஏறு போற் பீடு நடை இல்லை.

பொழிப்புரை : தன்னைப் பற்றியும் தன்னால் தன் கணவனைப் பற்றியும் பிறர் பாராட்டிப் பேசும்புகழ் மொழிகளை விரும்பிய மனைவியைக் கொண்டில்லாத கணவற்கு, வேறு சில கரணியங்களுக்காகத் தன்னை இகழ்ந்து பேசுகிறவர்கள் முன்னிலையிலும், காளை போல் ஏற்றமாய் நடக்கும் ஒரு பெருமித நடை இல்லை.

சில விளக்கக் குறிப்புகள் :

1. புகழ் புரிந்த இல் : தன்னைப் பற்றியும் தன்னால் தன் கணவரை பற்றியும் அண்டை அயலிலுள்ளவர்களும் பெற்றாரும் உற்றாரும் பாராட்டிக் கூறுகிற புகழ்மொழிகளை விரும்புதலுறும் தலைவி.

--- இஃது இல்லத்தலைவி ஒருத்திக்கு இயல்பாக இருக்கின்ற மனவுணர்வு. புரிதல் - விரும்புதல், விளங்குதல்.

--- தகுமனைவியின் பெருமை கூறிக் கணவரை விளித்தல் இலக்கியங்களில் கூறப்பெற்றுள்ளன.

'செயிர்தீர் கற்பின் சேயிழை கணவ'

-- புறம். 3.6

'அறம்பா டிற்றே ஆயிழை கணவ'

--- புறம். 34.9

'சேணுறு நல்லிசைச் சேயிழை கணவ'

--- பதிற். 88.36

----- மற்று ஈண்டுப் புகழ் என்பது, தான் மட்டும் பெருமை மிக்க அருஞ்செயல் செய்து, அண்டை அயலோர் மட்டன்றி, ஊரும் உலகமும் பாராட்டும் பெருஞ்சீர் அன்று. அது, தனிச்சிறப்புடையார் தவிர, பொதுவானமைந்த அனைத்து இல்லக்கிழத்தியரும் பெறுதல், கடினமும் இயல்பன்றும் ஆகலின் என்க.

இதில், 'புகழ்புரிந்த இல்லிலோர்' என்னும் பாடமே தொடைப் பிழையின்றியிருக்க, பரிமேலழகர் உள்ளிட்ட உரையாசிரியர் பலரும் 'புகழ்புரிந் தில்லிலோர்க்கு' எனப்பாடங் கூறி, 'பெயரெச்சத்து அகரம் விகாரத்தால் தொக்கது என்று விளக்கம் எழுதுதல் தேவையின்று என்க. மேலும் 'புகழ் புரிந்தில்லிலோர்' என்பது தொடையின்பம் பயவாததும் உன்னுக.

2. **இகழ்வார் முன் :** வேறுபிற கரணியங்களால் தன்னை இகழ்ந்துரைப் பார் முன்னும்

தன்னை வேறு பிற கரணியங்களால் சிறுமையுற்றுப் பிறர் இகழ்ந்து பேசுவார் முன்னிலையிலும், மனைவியது பெருமையால் ஒருவன்

தலைநிமிர்ந்து காளைபோல் பெருமிதம் காட்டி நடைபோட் முடியும் என்றார்.

3. **ஏறுபோல் பீடு நடை:** பொலிகாளை போல் வீறுமிக்க நிமிர்ந்த அசைவு நடை.

- பரிமேலழகரும் பிறர் அனைவரும் 'ஏறு' என்பதற்கு ஆண் அரிமா (சிங்கம்) வையே உவமை காட்டியுள்ளனர். ஆனால், காட்டிலுள்ள அரிமா நடையினை நாட்டிலுள்ளார் அனைவரும் கண்டிருத்தல் அருமையாகனும், அவ்வாறு ஒரு சிலர் கண்டிருந்தாலும், அவர், அதன் பாய்ச்சல் நடையையே அச்சத்தால் கண்டிருப்பதன்றி, அது மென்னடையிட்டுத் திமிர்ந்து நடந்து வருதலை வியப்புடன் கண்டிக்க வாய்ப்பில்லையாகலானும், இங்குள்ள அனைவரும் பொலிந்து நிமிர்ந்த காளையின் திமிர்ந்த ஏற்ற நடையையே கண்டிருத்தல் இயலும் ஆகையினாலும், எல்லாரும் எளிதில் உணரத் தகும் பொருளையும் செயலையும் உவமை காட்டுதலே பெரும் புலவோர்க்கியல்பு ஆகலானும், ஈண்டுக் கூறப்பெற்றதும் அதுவேயாம் என்றுறுதியின் உரைக்க.
- பெண் விலங்கின்மேல் ஏறுதலான் ஆண் ஏறு எனப் பெற்றது.

4. இக்குறளின் மறுதலையாக, இகழ்புரிந்த இல்லுளோர்க்கு இல்லை புகழ்வார்முன் ஏறுபோல் பீடு நடை' என்பதும் உணரத்தக்க தென்க.

5. இதன் வழி, தகைசான்ற சொல் காத்தல் பற்றிக் கவலுறாது, பிறர் இகழ்வைத் தேடிக்கொண்ட மனையாளால் கணவர்க்கும் குடும்பத் திற்கும் வரும் இழிவு கூறப்பெற்றது.

o

கூ0. மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கட் பேறு 60

பொருள் கோள்முறை : **இயல்பு**

பொழிப்புரை: (வாழ்க்கையை நன்கு உணர்ந்தவர்கள்), மனைவியின் பெருமைமிகு நல்ல குணங்களும் செயல்களும் என்றும் மகிழ்வையும் நன்மையையும் தரவல்லன என்று கூறுவர். அத்துடன் அம்மகிழ் ச்சிக்கும் நன்மைக்கும் அணிகலன் போல் அழகும் சிறப்பும் தருவது, அவள் பெறும் நல்ல மக்களது பெருமை என்றும் உரைப்பர்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. மங்கலம்-மகிழ்வையும் நன்மையையும் தரும் பொருள் அல்லது செயல்.

'மஞ்சள்' என்னும் சொல்லின்று வந்தது. மஞ்சள் நிறம் மகிழ்ச்சியும் நன்மையு தருவது என்று கருதினர்.

2. என்ப : என்று சொல்வர். சொல்பவர் சிறப்பு நோக்கி 'உணர்ந்தவர் கள்' என்பது வருவிக்கப்பெற்றது.

3. மனைமாட்சி : மனைவியினது மாண்பு, பெருமை மிகு நல்ல குணங்களும் செயல்களும்.

4. மற்றதன் : மற்று அதன்-ஈண்டு இர்டு சொற்களும் பொருள்தரக் கூடியவனவாகலின் பிறர் கூறியது போல் அசையில்லை.

5. நன்கலம் : நல்ல அணிகலன், அழகும் சிறப்பும் தருவது

6. நன்மைகள் பேறு : நல்ல மக்களைப் பெறுவது. ஈண்டு பெருமைக் குரியதாக நின்றது.

7. வாழ்க்கைத் துணைவியின் நன்மைகளைக் கூறியவர், இல்லறத்தின் அடுத்தக் கூறாகிய மக்களைக் கூறப்புகும் அடுத்த அதிகாரத்திற்கு எடுப்புக் கூறினார். ○

அ-2. இல்லறவியல்

அ-2-3. மக்கட்பேறு - 7

அதிகார முன்னுரை :

'அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை' என்றவர், அந்த இல்வாழ்க்கைக்குரிய துணையாகிய இல்லாளின் மாட்சியைச் சென்ற அதிகாரத்துள் கூறினார்.

அத்தகைய மனைமாட்சியின் பெருமைக்கும், சிறப்பிற்கும், மரபிற்கும், உலக நடப்பிற்கும், உயர்ந்ததாகிய மக்கள் பேற்றை இங்குக் கூறப் புகுந்தார் என்க.

மக்களைப் பெறுதல் **மக்கட் பேறு** ஆயிற்று.

இயற்கை மொழியாகிய முந்துதமிழ் மொழியின்கண் உள்ள பலவகையான சிறப்புச் சொற்களில் **'மக்கள்'** என்னும் சொல்லும் ஒன்று.

தமிழில் மட்டுந்தான் **மக்கள்** என்னும் சொல், பெற்றோரின் **பிள்ளைகளையும், பொதுமக்களையும்** குறிக்கும் சிறப்புச் சொல்லாக வழங்குகிறது. பெற்றோர் பலரின் பிள்ளைகளே ஒரு குழுகமாக - ஒரு மக்கள் கூட்டமாகப் - பெருகுவதை இவ் விருபொருள் ஒரு சொல் விளக்குவதாகக் கூறலாம்.

'மக்கட் செல்வம்' என்று செல்வத்திற்கிணையாக மக்களைக் குறிப்பிடுவதிலிருந்தே பெற்றோர் பெறும் பேறுகளில் சிறந்தது மக்கட் பேறு என்று விளங்கும். - நூலாசிரியரும் இதை இவ்வதிகாரத்துள் உறுதிப்படுத்துவார்.

மக்கள் என்னும் சொல் எவ்விடத்தும் இருபாலையும் சேர்த்தே குறிக்கும். பால் வேறுபாட்டின் பன்மை குறிக்கப்பெறும் பொழுது, ஆண், பெண்

என்னும் பால்குறிப்புச் சொற்கள் முன்னடையாகச் சேர்ந்து **ஆண்மக்கள், பெண்மக்கள்** என்று குறிக்கப் பெறும். பால் வேறுபாட்டின் ஒருமை குறிக்க, இச்சொல்லின் பகுதியுடன் பாலிறுதி சேர்த்து **மகன், மகள்** என்று வழங்குதல் பெறும்.

குழவி, குழந்தை, மதலை, பிள்ளை, மகவு, மக்கள், மகன், மகள், புதல்வர், புதல்வன், புதல்வி என்று தமிழில் பல சொற்கள் பிள்ளைகளைக் குறிப்பன.

தமிழிலக்கியங்களில் குறிப்பாகக் கழக இலக்கியங்களுள், பிள்ளைகளைக் குறிக்க மிகவும் அதிகமாகப் பயன்படுத்தப்பெறும் சொல் **மக்கள்** என்பதுதான். **மகன், மகள்** என்னும் ஆட்சியும் மிகுதியே. ஆனால் மகவு என்னும் சொல் இல்லை.

புதல்வர், புதல்வன் ஆட்சி குறைவு. ஆனால் **புதல்வி** என்னும் சொல்லே கழக இலக்கியங்களுள் இல்லை.

பிள்ளை, பிள்ளைகள் என்னும் சொல்லாட்சி மிகவும் குறைவு.

குழவி என்னும் சொல் மிகமிகக் குறைவு. குழந்தை என்னும் சொல்லும் கழக இலக்கியங்களுள் ஆளப்பெறவிலலை.

பரிமேலழகர் இவ் வதிகாரத்தைப் **'புதல்வரைப் பெறுதல்'** என்னும் தலைப்பிட்டு எழுதுகிறார்.

அவர், அவ்வாறு கொள்வதற்குக் கரணியம், 'புதல்வர்' என்பது ஆண்பாற் சொல்லாகக் குறிக்கப்பெறுதலும், அவர்களே நீர்க் கடன், நீத்தார் கடன் இறுக்க வேண்டுமென நடைமுறை கூறப்பெற்றுள்ளதும் என்க.

மேலும், **மக்கள்** என்னும் பொதுப் பெயரையும்கூட, அறிவறிந்த என்று கூறுவதால், பெண் ஒழிந்து நின்ற பெயராகவே கருதுகிறார். ஏனெனில், பெண்ணை அறிவுடையவராக ஆரியவியலார் கருதுவதில்லை.

'நுண்ணறி வுடையோர் நூலொடு பழகினும்,
பெண்ணறி வென்பது பெரும்பேதை மைத்தே,

'பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்'
'தையல் சொற் கேளேல்

--- என்று வருவனவெல்லாம் ஆரியவியல் கோட்பாட்டின் அடிப்படையில் வந்த கூற்றுகளே.

ஆரியவியல் கோட்பாட்டின்படி பெண், ஆணினும் மிகத் தாழ்ந்தவள் என்று பரிமேலழகர் கருதுகிறார். அதனாலேயே ஆண் குழந்தைகளை மட்டுமே குறிக்கும் பன்மையாகிய புதல்வர் என்னும் சொல்லையே மிகுதியும் பயன்படுத்துவார்.

'புத்' என்னும் நிரையத்திற்கு (நரகத்திற்குப் போகாமால், பெற்றோரைக் காப்பதால், சமசுகிருதத்தில் 'புத்திரன்' என்று பெயர் வந்ததாக ஆரியவியலார் கூறுவர். (Put or Pud - hell in which the Childless are condemned - Manu IX 138 Monier Williams)

இந்தப் 'புத்திரர்' என்னும் சொல்லிலிருந்தே 'புதல்வர்' என்னும் சொல்லும் வந்ததென்றும், அதுவும் வடசொல் என்றும் வடநூலார் கருதுவர்.

ஆனால் புதல்வன், புதல்வி, புதல்வர் ஆகிய மூன்று சொற்களும் தூய்தமிழ்ச் சொற்களே.

புது - புதல் - தோன்றுதல்
புதல் - புதல்வன் - புதிதாகத் தோன்றியவன்.

எனினும், நூலசிரியர் இவ்வதிகாரத்திலோ, இந்நூலின் வேறு இடங்களிலோ, புதல்வர் என்னும் சொல்லைக் கையாளவில்லை. அனைத்து இடங்களிலும் ஆண், பெண் பொதுச் சொல்லாகிய **மக்கள்** என்னும் சொல்லையே குறிப்பர்.

ஆனால், இவ்வதிகாரத்துள், சில குறட்பாக்களில் வரும் மகன், மக்கள் சொற்களையும் உள்ளடக்கிய ஒன்பது இடங்களிலும், புதல்வன், புதல்வர் என்னும் சொற்களையே பொருளாகப் பயன்படுத்துவார், பரிமேலழகர்.

இதன்வழி, அவர்க்குத் தமிழ்மொழியைவிட வடமொழி மேல் உள்ள பற்றையும், தமிழியலைவிட ஆரியவியலின் மேல் உள்ள அழுத்தமான ஈடுபாட்டையும் கண்டு கொள்க.

மேலும், பரிமேலழகர் இவ்வதிகாரத்திற்குத் தரும் முன்னுரையில்,

"இரு பிறப்பாளர் மூவரானும், இயல்பாக இறுக்கப்படும் கடன் மூன்றனுள், முனிவர் கடன் கேள்வியாலும், தேவர் கடன் வேள்வியாலும், தென்புலத்தார் கடன் புதல்வரைப் பெறுதலாலும் அல்லது செலுத்தப்படாமையால், அக் கடன் செலுத்தற் பொருட்டு நல்ல மக்களைப் பெறுதலாம்".

– என்று கூறுவது, முற்றும் வேதமதக் கொள்கைகளை நிலைநாட்டுதல் வேண்டியும், ஆரிய மதவியலைச் சார்ந்ததாகவே இந்நூல் எழுதப் பெற்றதென்று பிறர் கருத வேண்டியுமே என்க.

இதில், இரு பிறப்பாளர் மூவர் என்றதால், பூணூல் அணியும் பிராமணர், சத்திரியர், வைசியர் மட்டுமே கூறப்பெற்றுப், பூணூல் அணியாத சூத்திரரை மாந்தராகவே மதியாத நிலையைக் கூறினார். தென்புலத்தாரையும் பிதுர்களாகவே கருதினார். இவ்வகையில் ஆரியவியலை நிலைநாட்ட முயல்கிறார். இக்கொள்கை ஆரியவியலை - வர்ணாச்சிரமத்தை - வலியுறுத்தும் மனுதர்மத்துள் பின்வருமாறு வகுக்கப்பட்டுள்ளது.

"தேவர்கள், இருடிகள் (ரிஷிகள்), பிதுர்கள் இம் மூவர்க்கும் செலுத்தும் மூன்று கடனுடன், மனுஷன், யாகம் செய்வதால் தேவர்களுடைய கடனையும், வேதம் ஓதுவதால் இருடிகளுடைய கடனையும், புத்திரர்களைப் பெறுவதால் பிதுர்களுடைய கடனையும் தீர்க்க வேண்டும்". (மனு:6:36)

"யாகம் செய்யாமலும், வேதம் ஓதாமலும், புத்திரரைப் பெறாமலும் மோட்சத்தினையடைய முயற்சி செய்பவன் நாசமடைவான்". (மனு 6:7)

பெண்களை அறிவற்றவராகக் கருதுவதும். அவர்களை ஆண்களுக்கு அடிமை செய்யப் பிறந்தவர்களாகவே மதிப்பதும், ஆரியவியல் கோட்பாடுகளே யன்றித் தமிழியல் கோட்பாடோ, அதைக் கூற வந்த நூலாசிரியர் கோட்பாடோ அல்ல என்க.

– இனி, **வாழ்க்கைத் துணை நலத்**தின் ஒரு பகுதியாகிய, மனம், அறிவு, செயல் ஆகியவற்றின் நலன்கள் அவ்வதிகாரத்துள் கூறப் பெற்றுள்ளன.

அதன் மறுபகுதியாகிய, உடல் நலனில் ஒரு கூறு எனும் கருவுயிர்ப்புத் தகுதி நலன் இவ்வதிகாரத்திற்கு அடிப்படையாயிற்று.

அஃது அகம் எனில், இஃது அகப்புறம் என்க. O

கூக. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த மக்கட்பே றல்ல பிற. 61

பொருள் கோள் முறை :

பெறும் அவற்றுள், அறிவு அறிந்த மக்கட்பேறு அல்ல பிற, யாம் அறிவது இல்லை.

பொழிப்புரை : இல்வாழ்வை மேற்கொண்ட கணவனும், மனைவியும், தாங்கள் பெற வேண்டியனவாக (முன் வாழ்ந்தவர்களால்) கூறப் பெறும் பலவகை ஆக்கங்களுள், அறிவை அறியத் தகும் உணர்வுள்ள மக்களைப் பெறுவது தவிர வேறு ஆக்கம், யாம் அறிந்த வரையில் எதுவும் இல்லை.

சில விளக்கக் குறிப்புகள்:

1. **பெறுமவற்றுள்:** இல் வாழ்க்கை மேற்கொண்டவர்கள் பெற வேண்டியனவாக முற்கூறப்பெற்ற ஆக்கங்களுள்.

– அவையாவன: அழகு, அறிவு, ஆற்றல், இளமை, நுகர்ச்சி, கல்வி,

புகழ், நோயின்மை, துணிவு, நெல், பொன், வெற்றி, பெருமை, நன் மக்கள், நல்லூழ், வாழ்நாள் ஆகிய பதினாறு என்ப. இவற்றுடன் அறவியலும் வாழ்வியலும் வளர்ந்துள்ள இன்றைய நிலையில், தன்மானம், உரிமை, தொண்டுணர்வு முதலியவற்றையும் சேர்த்துக் கொள்ளலாம்; அவையும் இயல்பாகவே பெற்றிருக்க வேண்டிய நல்லுணர்வுகள் ஆதலின்.

2. **அறிவு அறிந்த மக்கட் பேறு :** அறிவை அறியத்தகும் உணர்வுள்ள மக்களைப் பெறுவது.

'அறிவு' கருமியம் (காரியம்); 'அறியத்தகும் உணர்வு' கரணியம் (காரணம்). அறிவைப் பெறுவது பிறப்பின் பின்னர்; ஆனால் அதற்குப் பிறவியிலேயே அறிவை அறிந்து கொள்ளும் உணர்வை ஒருவர் பெற்றிருத்தல் வேண்டும். அவ்வுணர்வைப் பிறவியிலேயே ஒருவர் பெற்றிருப்பதற்குப் பெற்றோரே கரணியமாவர் என்பது மனவியல், உணர்வியல், உடலியல் அடிப்படையான உண்மையாகும். என்னை? பெற்றோர், தாம் ஒன்றிணையுங் காலத்து, வெறும் உடலுணர்வினராக மட்டுமிராது, உரத்த அறிவுணர்வினராகவும் இருத்தல் வேண்டும் என்பது அறியப்பெற்றுள்ளது. மேலும், குழந்தை கருவுயிர்ப்பின் பொழுதும், கருவிலுள்ள பொழுதும், தாயின் உடல் நலத்தையும் மன நலத்தையும் அறிவு நலத்தையுமே கொண்டு வளர வேண்டுமாகலின், அக்கால் அதனைப் பெற்றெடுக்கப் போகும் அன்னைமார், அதற்குரிய வகையில் உடல் ஊட்டமும், மனவூட்டமும், அறிவூட்டமும் பெறும் வகையில் உண்பதும், நல்லனவற்றைச் சிந்திப்பதும், அறிவை உணர்வதுமாக இயங்குதல் வேண்டும் என்பது இயற்கையும் இற்றை அறிவியலும் ஆகும் என்க.

அந்த வகையில் **அறிவறியும்** உணர்வுள்ள ஏன் இன்னும் சற்று முன்னுணர்வுடனும் முன்னறிவுடனும் முயன்றால், **அறிவறிந்த** மக்களையே பெற்றெடுத்தலும் இயலும் என்பது உயிர் நூலார் துணிபு என்க.

எனவே, அறிவற்ற - அறிவுணர்வற்ற மக்களைப் பெறுவதிலும், அறிவுணர் வுள்ள, அறிவறியும் திறனுள்ள மக்களைப் பெற்றெடுப்பதையே பெற்றோர் கடமையாகக் கொள்ளுதல் வேண்டும் என்றார். நல்ல பயிர் விளைவுக்கு நல்ல நிலமும் எருவும், நீரும் கவனிப்பும் காப்பும், முன் திட்டமும் எவ்வளவு இன்றியமையாதனவோ, அவ்வளவு இன்றியமையாதன தேவை நல்ல உயிர் விளைவுக்கும் என்க.

அறியப் புகும் உணர்வை, 'அறிந்த' என்னும் சொல்லால் குறித்தது உறுதிப்பாடும் சதுரப்பாடும் கொண்டு பெற்றோர் கருத வேண்டியதை வலியுறுத்தவே என்க.

இதில், பரிமேலழகர், பெண் பிறப்பைத் தாழ்வாகக் கருதும்படி உரை கூறுவது வருந்தத் தக்கதும், புறக்கணிக்கத் தக்கதும் என்க. ஆரியவியலின்படி அவர் கூறும் கூற்று இது:

"அறிவறிந்த" என்ற அதனான் 'மக்கள் என்னும் பெயர் பெண் ஒழிந்து நின்றது. இதனான் புதல்வர்ப் பேற்றினது சிறப்புக் கூறப்பட்டது" ----- என்பது.

இங்கு, பெண்கள் அறிவு அறியத் தக்கவரல்லர் என்றோ, அல்லது தகாதவர் என்றோ விளக்கம் கூறி, அதனால் ஆண் மக்களை (புதல்வரை)ப் பெறுவது சிறப்பு என்று நூலாசிரியர் கருதுவதாக, தம் ஆரிய வியலின் தாழ்வுணர்வை நூலாசிரியர்மேல் ஏற்றிக் கூறுவது, அவரைப் பழித்தலுக்கும், இழித்தலுக்கும் உள்ளாக்கும் கொடுமையும் குற்றமுமாம் என்க.

இதை, இவ்வறிவியலும், உரிமையியலும், சமவுடைமையியலும் வளர்ச்சி பெற்ற இக்காலத்தும், பாவாணர் போலியர், கண்டியாததும், கண்டும் காணாதது போலிருந்ததும் அக் குற்றத்திற்கு வழிவிட்டது போலாம் என்று வருந்துக.

3. **யாமறிவதில்லை, அல்ல பிற :** யாம் அறிந்த வரையில் வேறு எவையும் இல்லை.

இல்வாழ்வை அமைத்துக்கொண்ட இளைஞனும் இளைஞியும் தாம் பெற வேண்டுவனவாக, முன்னர் வாழ்ந்து போனவர் தம் பட்டறிவாற் கூறிய பேறுகள் பலவற்றுள்ளும், மக்கட்பேறே சிறப்பு வாய்ந்ததென்பதை, யாமும் வாழ்ந்து அறிந்து கண்டு, அதையே உறுதிப்படுத்திக் கூறுகின்றோம், அதனினும் சிறந்த பேறு வேறு இல்லை என்று" என்பது ஆசிரியர் கூற்றாம் என்க.

பிறபேறுகள் அனைத்தும், தங்கள் வாழ்க்கை நலன்களுக்கு மட்டுமே பயன்படுபவை. ஆனால், அறிவறிந்த மக்களைப் பெறுதல், உலக இயக்கத்திற்கும் நலத்திற்கும் பயன்படுவதால், அஃது உயர்ந்த பேறு என்றார்.

– மேலும், பிற பேறுகளைப் பெறாவிடில் ஒரு தாழ்வும் இல்லை; குறையும் இல்லை என்பதும், ஆனால் ஒரு பெற்றோர் மக்களைப்

பெறாதிருத்தல், ஒரு தாழ்ச்சியும், பெருங் குறையுமாம் என்பதும் உலகியல் என்க.

– இதனை நூலாசிரியரே, முன் வந்து, உறுதி கூறுவதாக, இப்பாடல் அமைந்தது, இதன் கருத்துக்கு மேலும் வலிவும் பொலிவும் தரத் தக்கதாம் என்க.

4. இந்நூலின்கண் உள்ள இது போலும் பல பாக்கள் இதே தகுதியும் பயனும் பெறும் என்க.

– இது, மக்கட் பேற்றின் தனிச்சிறப்பையும், உலகியல் தேவையையும் உணர்த்தியதாம் என்க. O

கூஉ. எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப் பண்புடை மக்கள் பெறின். 62

பொருள் கோள் முறை :

பழிபிறங்காப் பண்புடை மக்கள் பெறின்,
எழு பிறப்பும் தீயவை தீண்டா.

பொழிப்புரை : (இகழ்ச்சியும் இழிவும் தரத்தக்க செயல்களைச் செய்து அதனால்) பிறரால் பழிக்கப்படும் வகையில் விளங்கித் தோன்றாதவாறு, நல்ல பண்புள்ள (செயல்களைச் செய்யும்) பிள்ளைகளைப் பெற்றால், (அவர்களைப் பெற்ற) பெற்றோர்களுக்கும் (அவர்களைத்) தொடர்ந்து அடுத்தடுத்துத் தோன்றுகின்ற குடும்பப் பிறப்பு முறைகள் பலவற்றுக்கும், தீமை (தரக்கூடிய இகழ்ச்சித் தாக்கங்கள் நேர்வதில்லை.

சில விளக்கக் குறிப்புகள்

1-அ) நூலாசிரியர் பிறவிக் கொள்கை உடையவர். உயிர்கள் தம்தம் வாழ்முறை விளைவுகளுக்கு ஏற்ப அடுத்தடுத்துப் பல பிறவிகளை எய்துகின்றன என்பதில் அழுத்தமான நம்பிக்கை உடையவர். அந் நம்பிக்கையை அவர் இந் நூலுள் பல இடங்களில் தெரிவித்துள்ளார்.

1-ஆ) உயிர்கள் பல பிறவிகள் எய்துகின்றன என்று கருதுகிறாரே தவிர, அவை ஏழு பிறவிகள் மட்டுமே எடுப்பதாக நூலுள் எங்குமே அவர் கூறவில்லை.

1-இ எழு பிறவி, எழு பிறப்பு என்பதை உரையாசிரியர்கள் பலரும் இருவகையாகப் பொருள் கொண்டு கூறுகின்றனர்.

– சிலர் எழு பிறப்பு, எழு பிறவி என்பதை ஏழு மக்கள் பிறப்பு என்றும், சிலர், நிலைத்திணை (தாவரம்), நீர்வாழ்வன, ஊர்வன, பறப்பன, விலங்குகள், மாந்தர், தேவர் என்று ஏழுவகைப் பிறப்புகள் என்றும் மாறுபடக் கூறுகின்றனர்.

– நூலாசிரியரைப் பொறுத்தவரை, **எழுபிறப்பு, எழுமை, எழுமை எழு பிறப்பு** என மூவகையாகப் பிறவிகளைக் குறிக்கின்றார். இவை நூலுள் 62, 107, 126, 398, 638, 835, என்னும் ஆறு குறட்பாக்களில் மட்டுமே குறிக்கப் பெறுகின்றன.

அவற்றுள் 126, 398, 638, 855 - ஆகிய நான்கு இடங்களில் **எழுமை** என்றும்.

ஓரிடத்தில், 62-இல், **எழுபிறப்பு** என்றும், மற்றோர் இடமான 107-இல், **எழுமை எழு பிறப்பு** என்றும் கையாள்கிறார்.

இவற்றுள் 'ஏழ்' என்றோ, 'ஏழு' என்றோ எங்கும் குறிப்பிட்டிலர்.

--- எனவே, 'எழுமை' என்பதோ, 'எழு பிறப்பு ' என்பதோ, 'ஏழு' என்ற எண்ணைக் குறிக்கவில்லை என்பதைப் பொதுவாக உணரலாம்.

இனி, 'எழுமை எழுபிறப்பு' என 107 - இல் இரண்டு சொற்களையும் இணைத்துக் குறிப்பதால், எழுமை என்பதோ, எழு என்பதோ, ஏழு என்னும் எண்ணைக் குறிக்கவில்லை என்பதைத் திண்ணமாக உணர்ந்து கொள்ளலாம். என்னை? இவ்விரு சொற்களுள் ஒன்று ஏழு என்னும் எண்ணைக் குறித்ததாக இருப்பின், மற்றொன்று வேறு பொருள் குறித்ததாதல் வேண்டும். இரண்டு சொற்களும் ஏழு என்னும் எண்ணைக் குறித்தனவாக ஒரே விடத்தில் அவர் பயன்படுத்தியிருத்தல் இயலாது.

– எனவே, இரண்டு சொற்களுமோ, அல்லது இரண்டுள் ஒன்றோ, ஏழு என்னும் எண்ணைக் குறிக்கவில்லை என்பது தெளிவாகியது. ஆகவே, இவ்விரு சொற்களுமே பிற ஐந்து இடங்களிலும் தனித்தனியாக வருவதால், அவ்விடங்களிலும் அவை 'ஏழு' என்னும் எண்ணைக் குறித்தனவாகக் கொள்ள முடியாது.

அவ்வாறு முடியாது போகவே, இவ்விரு சொற்களுக்கும், எழு பிறவி என்றோ, ஏழு வகைப் பிறவி என்றோ, பரிமேலழகர் முதல் பாவாணர் ஈறாகப் பெரும்பாலான உரையாசிரியர்களும் பொருள் கண்டதும், கொண்டதும் பிழை என்று ஆகிறது.

இவர்களுள், பாவாணர் மட்டும் 'ஏழு' என்று பொருள் கொண்டதுடன்,

அஃதொரு 'நிறைவெண்' என்றும் 'நீண்ட காலத்தைக் குறிப்பது ' என்றும் தாம்கொண்ட தவற்றுக்கு அமைவு கூறுவார்.

1-ஈ) இஃதிவ்வாறிருக்க, உரையாசிரியர் சிலர், 'எழுபிறப்பு ' என்பதற்கும் 'எழுமை' என்பதற்கும் 'பல தலைமுறைகள்' என்றும் 'வாழ்நாள் முழுமையும்' என்றும், 'வாழ் நிலை', வாழ்க்கை, தோற்றம் - என்றும் பலவாறாக, அவ்வவ்விடங்களுக்குத் தக்கபடி பொருள் கூறி நிறைவுறுவர்.

2 இவை யிவ்வாறாக, நூலாசிரியர் பிறவிகள் பல என்ற கருத்துள்ளவராகத் தெரிகின்றாரே தவிர, ஏழு பிறவி என்பதையோ, ஏழுவகைப் பிறவி என்பதையோ, ஒரே உயிர், புல்லாய்ப், பூண்டாய், நீருயிராய், ஊர்வனவாய், பறப்பனவாய், மடங்கி நடப்பனவாய், நிமிர்ந்து நடக்கும் மாந்தராய், ஒரு வகையில் படிநிலை வளர்ச்சி வட்டத்துள் பிறந்து பிறந்து மேம்பாடடையும் என்பதையோ, கருதுபவராக நூலுள் உய்த்துணர்வுக்கும் வழிவகுத்தாராகத் தம்மைக் காட்டிலர்.

1-உ) எனவே, நூலாசிரியர் அவர் பயன்படுத்தியுள்ள 'எழுமை' என்பதற்கும், 'எழுபிறப்பு' என்பதற்கும் வேறு வேறு பொருள் கொண்டவராகவே, அவை பயன்படுத்தப்பெறும் இடங்களைக் கொண்டு உய்த்துணர வேண்டியுள்ளது.

– இவ்விடத்து வேறு வேறு பொருள்கள் அஃதாவது, இரண்டு சொற்களுக்கும் இரண்டு தனித்தனிப் பொருள்கள் கொண்டார் என்று மட்டுமே கூற முடியுமே தவிர, இரண்டுக்கும் மேற்பட்டு, அவ்வவ் விடங்களுக்குத் தக்கபடி மூன்று, நான்கு, ஐந்து, ஆறு என்னும் பலவகையான பொருள்களைக் கொண்டார் என்று உறுதியாகக் கருத முடியாது. அவ்வாறு கருத, சொல்லளவிலோ, இட அளவிலோ, கருத்தளவிலோ எவ்வகை வாய்ப்பும் இல்லை என்க.

1-எ) இனி, இன்னொன்றையும் நாம் இங்குக் கருதுதல் வேண்டும்.

அஃதாவது, **எழுமை** என்னும் சொல் திருக்குறளில் தவிர, கழக இலக்கியங்களுள் வேறு எங்குமே வரவில்லை. அதேபோல் எழுபிறப்பு, 'எழுபிறவி' என்னும் சொற்களும் கழக இலக்கியங்களுள் இல்லை.

--- இனி எழு என்பது ஏழு எனும் எண்ணிக்கைப் பொருளிலும், ஏழு என்பது எழு என்று குறுகியும் கழக இலக்கியங்களுள் வருகின்றன.

எழுபொறி, எழுமகளிர், எழுமரம், எழுமீன், எழுமுடி, எழுவகை - என்பனவாக எழு எனும் எண்ணும் பொருளடைச்சொற்கள் அங்குக் குறிக்கப் பெறுகின்றன.

அதே போல் ஏழெயில், ஏழிசை, ஏழ்மணி, ஏழில் - என்றும் வருகின்றன. ஆனால் ஏழ் பிறவியோ, எழு பிறவியோ என்ன பொருளிலும் எங்கும் குறிக்கப் பெறவில்லை.

ஆனால் திருக்குறளிலேயே 'எழு' என்பது 'ஏழு' என்று எண்ணுப் பொருளில் 1269, 1278, ஆகிய இரண்டிடங்களிலும் ஏழு நாள்களைக் குறிக்க வந்துள்ளது.

– நூலாசிரியரின் இந்தப் பயன்படுத்தத்தைக் கொண்டே, ஒரு வேளை, எழு பிறப்பு என்பதையும், ஏழு பிறவி என்று நூலாசிரியர் கருதியதாக உரையாசிரியர் பலர் கொண்டிருக்கலாம். ஆனால், நூலாசிரியர் அவ்வாறு கருதவில்லை என்பது முற்காட்டிய காரணியங்களால் தேற்றமாகிறது.

1ஏ) அடுத்து, பாவாணர் 'எழு' என்பதை 'எழு' என்னும் எண்ணுப் பெயராகக் கொண்டு, அதை ஒரு 'நிறைவெண்' என்றும், 'நீண்ட காலத்தைக்குறிப்பது, என்றும் கூறியிருப்பதற்கு அடிப்படை இல்லாமல் இல்லை. ஆனாலும் அதுபோலவே மற்ற எண்களும் குறிக்கப்பெறுகின்றன என்னும் உண்மையையும், நாம் காணுதல் வேண்டும்.

1ஐ) அவ்வாறு, நூல்களுள் பரவலாக இரண்டு முதல் பத்து வரையிலும், தமிழ்ச் சொல் வழக்காகவும், வடசொல் (சமஸ்கிருத) வழக்காகவும் வந்துள்ளவற்றைக் காணலாம். எடுத்துக்காட்டுக்குச் சில பல கீழே தருதும்.

இரண்டு :

தமிழ் வழக்கு : இருகண் (புறக் கண், அகக்கண்), இருகாழி (இரண்டு கொட்டைக்காய்), இருசுடர், இருதிணை, இருநிதி, இருபிறப்பு, இருபொருள், இருபோகம், இரு மரபு, இருமலம், இரு முதுகுரவர், இருமை, இருவினை - முதலியன.

வடமொழி வழக்கு : துவாயுதம், துவிஜன், துவைதம் முதலியன. (துவி - இரண்டு)

மூன்று :

தமிழ் வழக்கு : முக்கடுகம், முக்கண்ணன், முக்கனி, முக்காலம், முக்காழி (முக்கொட்டைக் காய்), முக்குடை, முக்குணம், முக்குலம், முக்கூடல், முக்கோணம், முப்பால், முப்பழம், முப்பகை, முந்நீர், முந்நூல், முப்பலை, முப்புரி, முப்புரம் முப்பொறி, மும்மணி, மும்மதம், மும்மலம், மும்மாரி,

மும்மீன், மும்முரசு, மும்மை, மும்மூர்த்தி, மூவரசர், மூவுலகம், மூவெயில், மூவுடல், மூவான்மா முதலியன.

வடமொழி வழக்கு : திரிகந்தம், திரிகரணம், திரிகாலம், திரிகுணம், திரிகோணம், திரிகண்டம், திரிசூலம், திரித்துவம், திரிபலை, திரிபிடகம், திரிபுரம், திரிமலம், திரிலோகம், திரிவர்க்கம் முதலியன. (திரி - மூன்று)

நான்கு :

தமிழ் வழக்கு : நாற் சாந்து, நாற்சேனை, நால்வகைத் தோற்றம் (நிலம்) (அண்டஜம்), பை (சுவேதஜம்) முட்டை (சராயுஜம்), வெயர்வை (உற்பீஜம்), நால்வகைப் பண், நால்வகைப் பூ, நால்வகை யாழ், நால் வகை உபாயம், நால்வகை யூறுபாடு, நால்வேதம், நாற்கணம், நாற்கதி, நாற்குணம், நாற்படை, நாற் பால்மரம், நாற்பொருள், நாற்றிசை, நானிலம், நாற்கரன் முதலியன.

வடமொழி வழக்கு : சதுராச்சிரமம், சதுருபாயம், சதுர் யுகம், சதுர் வேதம், சதுருப வேதம், சதுர்க்குணி. சதுர்க்குணன், சதுர்முகன், சதுர்வர்ணம், சதுரகராதி, சதுரங்க சேனை - முதலியன. (சதுர் - நான்கு)

ஐந்து :

தமிழ் வழக்கு : ஐங்கணை, ஐங்கதி, ஐங்கலை, ஐங்காயம் (ஐங்காவியம்), ஐங்குரவர், ஐங்காட்டு நெய், ஐம்பால், ஐங்கோச்சம் (ஐந்துடம்பு), ஐங்கோணம், ஐந்தாற்றல், ஐஞ்சாத்தகம், ஐந்தங்கம், ஐந்தடக்கல், ஐந்தவத்தை, ஐந்தாற்றல், ஐஞ்சாத்தகம், ஐந்தங்கம், ஐந்தடக்கல், ஐந்தவத்தை, ஐந்திணை, ஐம்புலன், ஐந்திலக்கணம், ஐந்துணவு, ஐந்துபா, ஐந்துப்பு, ஐந்தொகை, ஐந்தொழில், ஐமலம், ஐமுகம், ஐம்படை, ஐம்பால், ஐம்பான்முடி, ஐந்தாலயம், ஐம்பூதம், ஐம்பெருங் குழு, ஐம்பெருங்கேடு (பாதகம்), ஐம்பொறி, ஐம்பெரு வேள்வி, ஐம்பொன், ஐயாறு, ஐங்குரவர், ஐந்தாயர், ஐமணி, ஐம்பொழுது, ஐம்பாதம், ஐம்பூ, ஐமுடி, ஐவகை மெய்க்குற்றம், ஐவகையாகம், ஐவகையுணவு, ஐவகைவினா, ஐவகைவேள்வி, ஐங்குளியல், ஐவளம் - முதலியன.

வடமொழி வழக்கு : பஞ்சபூதம், பஞ்சேந்திரியம், பஞ்சாண்டம், பஞ்சலிங்கம், பஞ்சமுகம், பஞ்சாகாரம், பஞ்சலவணம், பஞ்சாவங்கை முதலியன. (பஞ்ச - ஐந்து)

ஆறு :

தமிழ் வழக்கு : அறுகுணம், அறுசமயம், அறுசுவை, அறுதொழில், அறுபகை, அறுபடை, அறுபருவம், அறுவகைத்தானை, அறுவழக்கு, அறுவிகாரம், ஆறாண், ஆறாதராம் முதலியன.

வட மொழி வழக்கு : ஷண் மதம், ஷத் பிரஞ்ஞன், ஷண்முகம் - முதலியன.

ஏழு :

தமிழ் வழக்கு : எழு பிறப்பு, எழு நரகம், எழு பூதரம், எழுதீவு, எழு கடல், எழுமதம், எழுமதநீர், எழுமலை, எழு முனிவர், எழு மேகம், ஏழு தான்யம், ஏழு கடல், ஏழுவகைப் பெண் பருவம், எழு வகையளவு, ஏழிசை, ஏழுபாலை, ஏழு புரம், ஏழு வள்ளல்கள் முதலியன.

வடமொழி வழக்கு : சப்த சந்தானம், சப்த சமுத்திரம், சப்த சுரம், சப்த சைலம் (ஏழில்மலை), சப்த தீவம், சப்த நதி, சப்த நரகம், சப்பங்கி, சப்த பதார்த்தம், சப்த பாஷாணம், சப்த பாதாளம், சப்த பிரணாயாமம், சப்தபுரி, சப்த மண்டலம், சப்தமிருத்து (ஏழு மண்டிலங்களிலுள்ள வாயு), சப்த நாகம், சப்தரிஷிகள், சப்தரிஷி மண்டலம், சப்த லோகம், சப்த வர்க்கம், சப்த கன்னிகை, சப்த குலாக்ஷலம் (இமயம், ஏமகூடம், கைலை, நிடதம், நீலகிரி, மந்தரம், விந்தியம் ஆகிய ஏழு மலைகள்) சப்தகருவி, சப்த தாது, சப்த தந்தி, சப்த தீர்த்தம், சப்த மாதர், சப்த வர்க்கம், சப்தாவஸ்தை முதலியன. (சப்த - ஏழு)

எட்டு :

தமிழ் வழக்கு : எண் குணம், எண் குற்றம், எண் சுவை, எண்டிசை, எண் தோளன், எண் தோளி, எண் பதம், எண் பெருந்துணைவர், எண் பேராயம், எண் மயம் (பிறப்பு, குலம், கல்வி, செல்வம், வனப்பு, சிறப்பு, தவம், உணர்வு இவற்றால் வரும் எண்வகைச் செருக்கு) எண் வகைக் கணம், எண்வகைக் கணிதம், எண்வகைக் காட்சி, எண்வகைத் துணைவர், எண்வகை மணம், எண்வகை மாலை, எண் வகையெச்சம் (உடற்குற்றம்) எண்வகை விடை - முதலியன.

வடமொழி வழக்கு : அஷ்ட கணிதம், அஷ்டகந்தம், அஷ்ட கருமம், அஷ்டகிரி, அஷ்ட கீடம், அஷ்டகுஷ்டம், அஷ்டகுணம், அஷ்ட குருக்கள், அஷ்ட குன்மம், அஷ்ட சிரார்த்தம், அஷ்ட சக்தி, அஷ்ட சித்தி, அஷ்ட மங்கலம், அஷ்ட தயாவிர்த்தி, அஷ்ட தர்மம், அஷ்ட தனம், அஷ்ட தாது, அஷ்ட தான பரீஷை, அஷ்ட திக்கு, அஷ்ட திக்கயம், அஷ்டதிக் கரணி, அஷ்ட திக்கு பாலகர், அஷ்ட நாகம், அஷ்ட நாக பந்தம், அஷ்ட நிக்கிரகம், அஷ்ட பந்தனம், அஷ்ட பரிஸம், அஷ்ட புஷ்பம், அஷ்ட போகம், அஷ்ட பிரமாணம், அஷ்ட பிரகரணம், அஷ்ட மணம், அஷ்ட மதம், (எண் வகைச் செருக்கு), அஷ்ட மாந்தம், அஷ்ட மூர்த்தம், அஷ்ட மூர்த்திகள், அஷ்ட மூலம், அஷ்டலக்ஷ்மி, அஷ்ட லக்ஷணம், அஷ்ட லோக பஸ்பம்,

அஷ்ட வஸுக்கள், அஷ்ட வணிகக் குணம், அஷ்ட வர்க்கம், அஷ்ட வாதம், அஷ்ட விகாரம், அஷ்ட தாடனம், அஷ்ட வித்தியேசுரர், அஷ்ட வீரட்டம், அஷ்ட வூறு, அஷ்ட ஜெயம், அஷ்ட ஐஸ்வர்யம், அஷ்ட பைரவர், அஷ்ட சீலம், அஷ்டாங்க நமஸ்காரம், அஷ்டாங்க மார்க்கம், அஷ்டாங்க யோகம், அஷ்டாங்க வந்தனம், அஷ்டாவதானம் - முதலியவை. (அஷ்ட-எட்டு)

இனி, எட்டு பத்து - பதினெட்டு என்னும் எண் தொகையில் கூறப் பெறும் வழக்குகள்:

அஷ்டா தச குணம், அஷ்டா தச தர்ம சாஸ்திரம், அஷ்டா தச படை, அஷ்டா தச புராணம், அஷ்டா தச மூலம், அஷ்டா தச வித்தை, அஷ்டா தச வியவகாரபதம், அஷ்டா தச விவாத பதம், அஷ்டா தச சோ புராணம் - முதலியவை. (தச - பத்து)

ஒன்பது :

தமிழ் வழக்கு : ஒன்பது வாயில், ஒன்பது சிவபேதம், ஒன்பான் மணி, ஒன்பான் சுவை - முதலியவை.

வடமொழி வழக்கு : நவ கண்டம், நவ கிருகம், நவ சக்திகள், நவ சிரார்த்தம், நவதாரணை, நவதானம், நவதான்யம், நவ தீர்த்தம், நவ நதி, நவ துவாரம், நவதாகம், நவநாத சித்தர்கள், நவ நாயகர், நவநிதி, நவபதார்த்தம், நவபாஷாணம், நவபுண்ணியம், நவபேத மூர்த்தம், நவ பிரம்மர், நவமணி, நவமணிமாலை, நவரசம், நவரத்தினம், நவராத்திரி, நவரத்தினங்கள், நவலோகம், நவவர்ஷங்கள், நவவாயில், நவ விலாச சபை, நவவீரர்கள் - முதலியன.

பத்து :

தமிழ் வழக்கு : பத்துப் பாட்டு, பதிற்றுப் பத்து, பதின்மர் முதலியன.

இவையன்றி பன்+இரு (அல்) இரண்டு சேர்ந்த பன்னிரு, பன்னிரண்டு, பன் + நான்கு - பன்னான்கு, பத்து + எண் - பதினெண், பத்து + எட்டு - பதினெட்டு - ஆகிய எண் வழக்குகளும் உண்டு.

அவை : பன்னிரு படலம், பன்னிரண்டாதித்தர், பன்னிரு கையன், பன்னாங்குழி, பதினாலு லோகம், பதினெண் கணம், பதினெண் கீழ்க் கணக்கு, பதினெண் குடிமை, பதினெண் குற்றம், பதினெண் சித்தர், பதினெண் புராணம், பதினெண் பாடை முதலியன.

வடமொழி வழக்கு : தசகரம் (தீய செயல்கள் பத்து: அவை: அபாவனை (நிந்தனை), காமம், சிற்றின்பம், சூது, நடனம், பகற்றுயில், மதுவுண், மாயம்,

விளையாட்டு, வேட்டம் முதலியன) தசகுணம், தசகூலி, தசகிரீவன், தசகண்டன், தசமுகன், தசசீலம், தசதானம், தசதிக்கு (எண்டிசை, மேல், கீழ்) தசநாடி, தசபாரம், தசப் பொருத்தம், தசமூலம், தசபிரஜாபதி, தசமூலம், தசமொழி, தசரா, (பத்து இரவு), தசவருக்கம், தசாவதாரம், தசவாயு, தசாங்கம், தசாங்கிசம் முதலியன. (தச - பத்து)

– இவற்றின் பொருள் விரிவும் ஒரு வகை விளக்கமும் எம் **நிறைவுரை**யிற் காண்க.

1-ஓ இவ்வாறு இரண்டு முதல் பத்து வரை எண் தொகையான் அடக்கிக் கூறும் வழக்கு தமிழியலிலும், ஆரிய வியலிலும் தொன்று தொட்டே இருந்ததாகத் தெரிகிறது.

ஆனால் அவற்றுள் ஏழு, பத்து என்னும் இரண்டு எண்களையும் பல, பற்பல, அடுத்தடுத்து, அடிக்கடி என்னும் பொருள்களில் பயன்படுத்துதல், நூல் வழக்கில் அருகியும், பேச்சு வழக்கில் பெருகியும் காணப்படுதலை உணர்க.

அவை, 'ஏழு தடவை நடந்தான்', 'ஏழுமுறை கேட்டான்', 'ஏழேழு தலைமுறைக்கும் அவனுறவு வேண்டேன் என்பனவும்,

'பத்து நடை போட்டான்', 'பத்துப் பேர் சொல்லட்டும்' 'எனக்கெனப் பத்துப் பேர் இல்லாமலா போயினர்' என்பனவும் காண்க.

இனி, திருக்குறளிலேயே 'எழுபது' என்பது மிகப் பல என்னும் பொருளில் 639 - இல் ஆளப்பெற்றிருப்பதையும் காண்க.

1-ஓ இவ்வழக்கியல்களின் அடிப்படையில் அத்தகைய ஓர் உண்மை இருப்பதை நாம் காணல் வேண்டும் என்பதற்காகத்தான் இவ்வளவில் எண் தொகை வழக்குகள் ஈண்டுக் காட்டப்பெற்றன.

– ஆயினும் இந்நூலுள் பயன்படத்தப் பெற்றுள்ள ஆறு இடங்களில் வரும், **எழுமை, (126, 395, 538, 835,) எழு பிறப்பு (62), எழுமை எழு பிறப்பு (107)** ஆகிய மூன்று சொல்லாட்சிகளையும், நூலாசிரியர் மூவகைப் பொருளில் ஆண்டிருப்பது உய்த்துணரற்பாலது.

– பண்டைத் தமிழியலில் **பல் பிறவிக் கொள்கை** காணப்பெறுகின்றதே தவிர, **ஏழ் பிறவிக் கொள்கை** என்னும் எண் கூட்டிய கொள்கை எங்கும் இருப்பதாகப் புலப்படவில்லை.

– இக் கொள்கை ஆரியவியலில்தான் பரவலாகக் காணப்பெறுகிறது.

எனவே, ஆரியவியலைக் கண்டிக்க வந்தவரும், அதனைக் கண்டிப்பதுடன், அது பரவுவதைத் தடுத்து நிறுத்தவும், அதற்கிடையில், நம், தொன்றுதொட்டு வந்து கொண்டிருந்ததும், அற்றைத் தமிழகத்து நேரத் தொடங்கிய ஆரியப் பரவலால், சிற்சிறிதாய்ப் புறக்கணிப்புக்

குள்ளாகியதுமான தமிழியல் மெய்ம்மக் கொள்கைகளையும், கலை, பண்பு, நாகரிக வழக்கியல்களையும், தம் நூலின்வழி, அழுத்தமாகத் தம் கருத்துகள், எதிர்காலத் தமிழினப் பிறங்கடையினர்க்குப் போய்ச் சேரும் வகையில் நிலைநாட்டவும் முற்பட்டவராகிய நூலாசிரியர், இவ் வேழ்பிறவிக் கொள்கையைக் கண்டிதமாகப் பின் பற்றியிராரென்பது பனிமலையன்னவும் பரிதி யன்னவும் உறுதியெனக.

– அஃதன்றியும், உயிர், பிறவி என்னும் இம் மெய்யியல் கருதுதல் கோட்பாடுகள், அறிவியல் அடிப்படையில் எண்பிக்கப்பெறும் வரையில், அவற்றின் உண்மைகளை இஃதிற்றெனத் தெளிவாக எவராலும் கூறுதற் கியலாது எனவும் கொள்க. அது வரை நூலாசிரியர் பலரும் ஒருவர்க்கொருவர் இவ்வகைப் பொருள் நிலையில் தம்முள் வேறுபடவும் மாறுபடவுமே செய்வர். அவ்வகையுள் இந் நூலாசிரியரையும் ஒருவராகவே கருதுதல் வேண்டும்.

– அஃதவ்வாறாக, இவர்தாம் அம் மூன்று சொல்லாட்சிகளையும் பயன்படுத்திய ஆறு இடங்களிலும், ஏழோ அல்லது பலவோ ஆகிய தலைமுறைகளையோ, வாழ்நாள், வாழ்நிலை, வாழ்க்கை அல்லது தோற்றம் என்பவற்றையோ பொருளாகக் கொண்டார் என்று ஒட்டு மொத்தமாக முற்ற முடிந்த முடிவாக மாறுபட்டுரைப்பது ஆகாதென்க. அஃது இற்றை எம் கால அறிவியல் வளர்ச்சிக்கண் நாம் பெற்ற வேதியல், விளங்கியல் அறிவை, அற்றை அவர் காலக் கருதுதல் அறிவொடு உறழ்ந்து உரைக்கும் குற்றமுமாகும் என்க.

– நூலாசிரியரின் பல்பிறவிக் கொள்கை அவர் வகையில் மிகவும் உறுதியான ஒன்று. அதைத் தம் வழிக்கு எவரும் திரித்துரைத்தல் சாலாது. உரையாசிரியர் நெறியும் அஃதன்று. அஃது அறிவுக் கசண்டு மாகும் என்க.

– எனவே, நூலாசிரியரின் பல்பிறவிக் கொள்கை உண்மையும், ஏழ்பிறவிக் கொள்கை இன்மையும் அடிப்படையாகக் கொண்டு இவற்றிற்குப் பொருளுரைத்தலே நடுவுநிலை சான்றது.

– தாம் உடன்படாக் கொள்கையில், தம் வழிக்குப் பிறரை வலிந்திழுத்திறுத்துதல், அறிவின் முரட்டுத் தன்மையாகவும், இவ்வற நூலுள் கூறப்பெற்ற 'கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற, வல்லதூஉம் ஐயம் தரும்' (845) என்னும் மெய்யுரைக்கு ஏற்ற சான்றாகவும் அமையும் என்க. இனி, அவ்வாறு துணிதற்கு மெய்யறிவினர் அஞ்சுவர் என்றும் கொள்க.

– இவை இவ்வாறாக இருக்க, நூலாசிரியர் இம் முச்சொல் வழக்குகளுக்கு என்ன பொருள்கள்தாம் கொண்டிருக்க முடியும் என்பதைப் பலவாறும் உய்த்துணர்கையில், அவர்,

எழுமை - என்பதற்கு, 'எழுகின்ற (பிறக்கின்ற) பிறவிதோறும்' என்றும்,

எழு பிறப்பு - என்பதற்கு, ஒருவரைத் தொடர்ந்து வரும் ஏழு, அஃதாவது சில அல்லது பல என்னும் குடும்பத் தலைமுறைகள் என்றும்,

எழுமை எழு பிறப்பு - என்பதற்கு, ஒருவர் தாம் எழுகின்ற பிறவிதோறும், அதே போல் அவரை அடுத்தடுத்துத் தோன்றுகின்ற சில அல்லது பல குடும்பத் தலைமுறைகள் தோறும் - என்றுமே பொருள்கள் கொள்ள முடியும் என்க.

– எனவே, இவ்விடத்து, எழு பிறப்பு என்பதற்கு, நல் பண்புகளைச் செய்யும் பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர்களுக்கு, அவர்களைத் தொடர்ந்து அடுத்தடுத்துத் தோன்றுகின்ற குடும்பப் பிறப்புத் தலைமுறைகள் பலவற்றுக்கும் - என்றே பொருள் கொள்ள வேண்டுவதாயிற்று என்க.

2. **தீயவை தீண்டா :** தீமை தரக்கூடிய - பழியும் இகழ்ச்சியும் தரக்கூடிய தாக்கங்கள்; தீமைகள். என்னை ? ஒரு பெற்றோர் பண்புடை மக்களைப் பெறுவாரானால், அவர்களை அவர்கள் வாழும் வரையில், அவர்களைச் சார்ந்தவரோ, பிறரோ பழிப்பதோ இழிப்பதோ இகழ்ச்சி செய்வதோ நேர்வதில்லை. அவ்வாறு நேராதாயின், அதனால் வரும் தீமையான விளைவுகளும் அவர்களைச் சேர்வதில்லை. இனி, அவர்களை மட்டுமன்றி, அவரைத் தொடர்ந்து வரும் குடும்பத் தலைமுறைகள் சில அல்லது பலவற்றுக்கும் கூட, அதே வகையில், தீமைகள் அணுகுவதில்லை என்றார் என்க.

– இனி, தீமையான விளைவுகள் என்பன. அவர்தம்மேல் கூறப் பெறும், பழிச் சொற்களையும் இழி சொற்களையும், இகழ்வுரைகளையும் கேட்டுப் பிறர் அக்குடும்பத்துடனும், அதைச் சார்ந்தும் தொடர்ந்தும் வரும் பல குடும்பங்களுடனும் தொடர்பு கொள்ளவோ, அவர்களுக்கு உதவவோ, அல்லது மதிக்கவோ செய்யாமையால் வரும் பல்வகையான தீமைகள்.

---- அவ்வாறான பழிப்பும் இழிப்பும் இகழ்வும் ஆகிய சொற்கள், 'இவர்கள் கொலையாளிக் குடும்பத்தவர்கள்', 'குடிகாரக்

குடும்பத்தவர்கள்', 'ஒழுக்கமில் குடும்பத்தவர்கள்', 'பண்பில் குடும்பத்தவர்கள்' என்னும் வகையிற் பேசலும், ஏசலும், இகழ்தலுமாம்.

3. பழி பிறங்கா: பிறரால் பழிக்கப்படும், அல்லது இகழப்படும் வகையில் விளங்கித் தோன்றா. பிறங்குதல் - விளங்கித் தோன்றுதல். 'குன்றின் மேலிட்ட விளக்குப் போல்', 'மதிக்கண் மறுப்போல்' - என்க.

– இதே வகையில், இதே பொருளில், இந்நூலுள் வந்த ஒரு கருத்தும் இங்கு நினைதற்குரியது. அது, இது:

'குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து'

– 957

– இவ் வுண்மையினை

– **'பலர் புகழ் நலந் திகழ் பண்புடைச் செயல்கள் பலவும் செய்து, இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்'** பாடிய, **'மலை படுகடாம்'** என்னும் அரிய இலக்கியம் பெற்ற பல்குன்றக் கோட்டத்துச் செங்கண் மாத்து நன்னன் சேய் நன்னன் என்பானின் தந்தையும்,

– சிற்றரசர் பற்பலரை அழித்தழித்து, அவர்கள் உற்ற பொருள்களை யெல்லாம் கொள்ளையிட்டு, வாரி வந்தவனும் (அகம்: 152, 239),

–அவ்வாறு போரில் தோற்ற வேந்தர்களின் மனைவிமார் கூந்தலைக் கயிறாகத் திரித்து, அக்கயிற்றால் அவர்தம் பட்டத்து யானைகளைப் பிணித்துக் கொணர்ந்தவனும் (நற்: 270)

– போரில் படைத்துணை புரிய வந்த நடைகெழு நண்பன் ஆய் எயினனைப் பகைவர் பொருது அழியவிட்டுத் தன்னை ஒளித்துக் கொண்ட வஞ்சகமும் இரண்டகமும் புரிந்தவனும் (அகம்: 208, 396),

--- நீரில் ஊர்ந்து வந்த காவல் தோட்டத்து மாவன்காயை ஆவன் முதிர்வால் எடுத்துண்ட பேதைக் கன்னியின் எடையெடைப் பொற்பாவையும், ஒன்பதிற்று ஒன்பது களிறும் கொடுப்பப் பெற்றோர் இறைஞ்சியும், பாடுபுகழ்ப் புலவரும் ஊராரும் வேண்டியும், உடன்பட்டேற்காது, பெண்கொலை புரிந்தவனும் (குறுந்: 292),

– ஆகிய, கொண்கானத்துக் கடம்பின் பெருவாயில் என்று அழைக்கப் பெற்ற வாகைப் பெருந்துறை **நன்னன்** செய்த பழிச் செயல்கள், அவன் பிறங் கடையினனாகிய மகனுக்கும், அவன் பின்றைத் தலை முறை **இளவிச்சிக்கோ** என்னும் அரசனுக்கும் ஆகி நின்றதைப் பெருந்தலைச் சாத்தனார் பாட்டாலும் (புறம்: 151), பரணர் பாட்டாலும் (குறுந்:292) அறிந்துகொள்க.

பண்புடை மக்கள்: எல்லார்க்கும் பயன்படுமாறு இயங்கத்தக்க குண நலன்களும் செயல்களும் உடைய மக்கள்.

--- இது, பிறவுயிர்களுக்கு மனவளர்ச்சியில் உருவாகி நில்லாது, மக்கட்கே அமைவதாகலின், மக்கட் பண்பு என்றும், அஃது அறிவின் மிக்கது (997) என்றும் பிறிதோரிடத்தில் விதந்து கூறினார்.

--- இப் பண்புள்ளவர் பிறர்க்கு மனத்தாலும் செயலாலும் தீங்கு நினையார்.

5. **பெறின்:** உலகிற்கு வழங்கப் பெறுவார்களாயின்; ஈனுவார்கள் ஆயின்; உயிர்த்துக் கொடுப்பார்களாயின்.

--- பழி பிறங்காப் பண்புடைய மக்களைப் பெற்றால், அவர் செய்யும் நல்வினைகளால், 'தந்தை தாயர் செய்த தீவினை தேயும்' என்று பரிமேலழகர் கருமப் பொருள் கூறுவது, உலகியலானும், அறிவியலானும், மெய்யறிவியலானும், சிறிதும் பொருந்தாப் பொய்ப் புளுகே! இது பார்ப்பனியத்திற்கே இயல்பானது என்க.

--- இதனையே பாவாணரும் வழிமொழிந்து, "பிள்ளைகள் செய்யும் நல்வினையாற் பெற்றோர்கள் தீவினை தேயும் என்னும் கருத்துப் பற்றி, 'எழு பிறப்பும் தீயவை தீண்டா' என்றார்" - என்று பாரித்துரைப்பது அறிவியலறியாமையை உணர்த்திற்று.

6. இவை இரண்டு பாடல்களானும், அறவறிவுணர்வுள்ள மக்களாலும், பண்புடை மக்களாலும், பெற்றோரும் பிறரும் அடையும் - பெறும் பயனும், அதனால் சிறப்புறும் மக்கட் பெறுதலும் கூறப்பெற்றன.

o

கூஉ. தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தம்தம் வினையான் வரும். 63

பொருள் கோள் முறை :

தம் மக்கள் தம் பொருள்; அவர் பொருள்
தம்தம் வினையான் வரும் என்ப.

பொழிப்புரை: (இவ்வுலகில்) தம்முடைய பொருள் என்று உரிமை கொண்டாடுவதற்கு உரியவர்கள் தாம் பெற்று உருவாக்கிய தம் மக்களே. மற்று, அவரவரும் (உடைமை நிலையில்) தம்தம் பொருள் என்று கூறிக்கொள்வன, அவரவர் உழைப்பால் ஈட்டி வருவனவே - என்று (உரிமையையும், உடைமையையும் பிரித்து) உணர்ந்தவர் கூறுவர்.

சில விளக்கக் குறிப்புகள்:

1. இக் குறள், உரிமைக்கும் உடைமைக்கும் உள்ள வேறுபாட்டை விளக்க வந்தது. **உரிமை** என்பது உயிரும், உடலும் ஆகிய இரண்டு தொடர்பு **உடையது: உடைமை** என்பது உடல் (உழைப்பு) தொடர்பு மட்டுமே உடையது.

– மக்கள், பெற்றோரின் சொத்துக்கு எந்த வகையில் உரியவர்கள் என்பதற்கும், மக்களின் உழைப்பீட்டம் எந்த வகையில் பெற்றோர்க்குச் சொந்தமானது என்பதற்கும் எல்லை கூறி, உரிமை, உடைமை என்னும் இரு சொற்களுக்கும் அரிய விளக்கம் கூறுகிறார், இதில்.

2 **தம் பொருள் என்ப தம் மக்கள்:** உலகில் தம்முடைய பொருள் என்று உரிமை கொண்டாடுதற்கு உரியவர்கள் தாம் படைத்து உருவாக்கிய தம் பிள்ளைகளே.

என்னை? 'எம் மக்கள், எம் மகன், எம் மகள்' என்று உரிமை கொண்டாடுவதற்கு உரிய பொருள்களாக இவ்வுலகில், ஒருவர்க்கு இருப்போர் அவர் பிள்ளைகளே. இது தாய், தந்தை இருவர்க்குமே பொது என்பதால் 'தம்' என்றார்.

– மற்று, என் மனைவி, என் கணவன், என் அண்ணன், என் தம்பி, என் அக்கை, என் தங்கை என்னும் உடல் தொடர்பு உறவு நிலை கூட அவரவர் அதைக் கொண்டாடி ஏற்கும் வரையில்தான். உரிமையும்கூட அது வரையில்தான்.

– மனைவி, கணவற்கும்; உடன் பிறப்புகளுக்கும் உள்ள உறவுணர்வு முறியுமானால், அவ்வுரிமை கொண்டாடப்பெறுவது இல்லையாகி விடும். உரிமையிழப்பு ஏற்பட்டுவிடும்.

– மனைவி இன்னொருவன் மனைவியாகவும், கணவன் இன் னொருத்தி கணவனாகவும் ஆக முடிகின்ற பொழுது, அம் மனைவி கணவன் உரிமையை இருவருமே இழக்கின்றனர். வேண்டுமானால் ஒரு காலத்து உறவைக்கூட மீண்டும் நினைவு கொள்ளலாம்.

– அதே போல், உடன்பிறப்புகள் உறவு முறியும் பொழுதும், அவ்வுரிமை மறுக்கப்படுகிறது.

– இனி, பெற்றோர் கொண்டாடும் அதே உரிமையைப் பிள்ளைகளும் கொண்டாடலாம். அவர்களுக்கு இவர்கள் உரிமை (ப் பொருள்) என்கிற பொழுது, இவர்களுக்கும் அவர்கள் உரிமையாகி விடுகின்றனர்.

அவர்களும் என் அன்னை, என் தந்தை என்னும் உரிமை கொண்டாடலாம்.

– இனி, அந்த உரிமை போல, தந்தை தாயர் உடைமைகளைப் பிள்ளைகளும், பிள்ளைகள் உடைமைகளைப் பெற்றோரும், தங்கள் பொருள் என்று சொல்லிக் கொள்ளுதல் இயலாது; ஏனெனில் அவரவர்களின் உடல் உழைப்பால் வருவது; எனவே, அஃது உடைமை என்னும் விளக்கத்தை, அடுத்த கருத்துத் தொடரில் கூறுவார்.

3. அவர் பொருள் தம்தம் வினையான் வரும்:

– மற்று, அவர் அவர் பொருள் என்று உடைமை நிலையில் கூறப் பெறுவன எல்லாம் அவரவர் செயலால் - பல்வகை உடலுழைப்பால் - வருவன.

– ஈண்டு **அவர் பொருள்** என்றது உடைமைப் பொருளில் என்க.

– அவர் என்று மட்டும் கூறினும், 'அவரவர்' என்றே பொருள் தரும்.

– வினை என்பது செயல்; உடலின் பல்வகை உழைப்பு; அறிவுழைப்பும் இதில் அடங்கும்.

மற்று, 'அவர்' என்பதற்கும், 'வினை' என்பதற்கும் வேறுவேறு உரையாசிரியர்கள், அவரவர், காணுதலுக்குத் தக்கபடி, வேறுவேறு பொருளுரைப்பர். அவை, மதஞ் சார்ந்த. மடமையும், உரிமையையும் உடைமையையும் பிரித்தறியா நுட்பமின்மையும் கொண்டனவாகலின், பொருந்தா உரையென்க. 'வினை' என்பதற்கு வேதமதவழிப் பொருள் கொள்ளும் பரிமேலழகர், தம் இயல்பான் ஈண்டும் பிழை செய்தார்.

– முன் கருத்துத் தொடரில் வந்த 'என்ப' என்னும் சொல், இரண்டுக்கும் பொது முடிபு தருவது.

– ஈண்டு, அவரவர் உழைப்பால் ஈட்டும் உடைமைப் பொருள்கள் அவரவர்க்கே உரியவாகும் என்பதும், அப் பொருள்களைப் பிறர்க்கு மாற்றினாலன்றி, அவை பிறர்க்கு உடைமையாகா என்பதும் கூறப் பெற்றன.

– தந்தை, தாயரது உடலுழைப்பால் வந்தது, பிள்ளைகளுக்கும், பிள்ளைகளது உடலுழைப்பால் வந்தது தந்தை, தாயருக்கும்கூட, அவர்கள் அவற்றை மற்றவரின் துய்ப்புக்கு உரிமையாக்கினால் தவிர உடைமையாகா என்பதும் இதில் உணர்த்தப்பட்டது.

– உரிமை மாற்றத்தாலன்றிப் பெற்றோர் பொருளைத் தங்கள் பொருள் என்று பிள்ளைகளும் கூறார். அந்நிலையில் அது தந்தை பொருள், தாயர் பொருள் என்றே உடைமை வைத்துக் கூறப்பெறும் என்க.

4. இப் பாட்டு, பெற்றோர்க்கும் மக்கட்கும் உள்ள உரிமைத் தொடர்பும் உடைமைத் தொடர்பும் பற்றி விளக்க வந்தது, என்க. O

கூசு குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர். 64

பொருள் கோள் முறை :

தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்
குழலினிது யாழினிது என்ப.

பொழிப்புரை : தங்களின் குழந்தைகள் குழறும் மழலைச் சொற்களை (விருப்பமுடன்) கேட்டுச் சுவைத்து மகிழாதவர்கள்தாம், பிறர் பயிலுகின்ற குழல் இசையையும், மிழற்றுகின்ற யாழிசையையும், இனிது இனிது என்று கூறிச் சுவைத்து மகிழ்வார்கள்.

சில விளக்கக் குறிப்புகள்:

1. பரிமேலழகர் மற்றும் பலரது முறை வைப்பில் 66 ஆம் குறளாகக் கொள்ளப் பெற்ற இது, இவ்வதிகாரத்தின்கண் கூறப்பெறும், குழந்தையின் வளர்ச்சிக் கூறுகளை நோக்கி, 64-ஆவதாக, முறை கொள்ளப் பெற்றது.

– அவற்றுள் இது குழந்தையின் மழலை நிலை சுட்டியது, ஆகலின். மக்கள் என்பது பாலும் பருவமும் சுட்டாப் பொதுச் சொல். ஆயினும் இங்கு மக்கள் குழந்தைகளை என்றது.

2. தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்:

தம் தம்முடைய குழந்தைகள் பால்வாயிற் குழறும் சொற்குழைந்த மழலை ஒலிகளை நுண்ணிதாக, பாச விருப்புடன் கேட்டுச் சுவைத்து மகிழாதவர்கள்.

– பிறரின் குழந்தைகளது மழலை மிழற்றுதல் பலர்க்குப் பாச மகிழ்வு தராததும் உலகியல்பு ஆகையான், **தம் மக்கள்** என்றார்.

– **மழலை** திருந்தாச் சொல் - குழைந்து வரும் சொற்கள்.

– குழந்தையின் மழலையில் தம் தம் கேட்டல் உணர்வுக் கேற்ப, சொல்லும் அறியப்பெறுமாதலால், **மழலைச் சொல்** என்றார்.

கேளாதவர் என்று மழலைக்கும், குழல், யாழிசைக்கும் பொதுப் படக் கூறினாரேனும், ஈண்டு, மழலைச் சொல்லுக்கே நெருக்க வைத்துக் கூறியதால், மழலைச் சொல்லைப் பாச விருப்புடன் காதால் கேட்டு, மனத்தால் சுவைத்து, உணர்வால் மகிழாதவர்கள் என்று நுகர்ச்சிப் பொருளையும், குழலிசைக்கும், யாழிசைக்கும் எட்ட வைத்துக் கூறியதால், தொலை நின்று அவற்றைக் கேட்டுப் புலனுணர்வால் நுகர்ந்து துய்ப்புப் பொருளையும், பிரித்து, உணர்த்தினார் என்க.

– குழலையும் யாழையும் கூறியது, அவற்றைப் பெரும்பாலும் இசைப்பாரை நோக்கி, ஆண் மகவையும், பெண் மகவையும் குறிப்பால் சுட்டிற்றென்க.

3. இப்பாடல் பெற்றோர் தங்கள் குழந்தைகளின் குதலை யொழுகு மழலை மொழியான் பெறும் செவியின்பத் துய்ப்பைக் கூறியது. இதனுள் காட்சியின்பமும் அடங்கியுள்ளது என்க. O

சுருக்கம் **அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்**
சிறுகை அளாவிய கூழ். **65**

பொருள் கோள் முறை:

தம் மக்கள் சிறுகை அளாவிய கூழ்,
அமிழ்தினும் ஆற்ற இனிதே.

பொழிப்புரை: *தம்முடைய மக்களின் சிறுகைகளால் துழாவி அளையப் பெற்றது எளிய கூழுணவே ஆயினும், அது பாற்சோற்றினும் மிகுந்த சுவை தருவதாகும்.*

;சில விளக்கக் குறிப்புகள்:

1. *இக்குறள், பரிமேலழகர் முதலியர் முறை வைப்பில் 64-ஆவது ஆகும். குழந்தையின் அமர்தல் நிலை நோக்கி, முன்னதன் பின் இது வைக்கப் பெற்றது.*

2. ***தம் மக்கள் சிறு கை அளாவிய கூழ்:***

தாம் பெற்றெடுத்த மக்களது சிறு கையால் அளாவப் பெற்ற கூழுணவு.

*— **தம் மக்கள்** என்றதால், பிறரது மக்களைத் தவிர்த்தார், அவரளாவுதற்கு வாய்ப்பின்மையும் அவ்வாறு வாய்த்தவிடத்து அத்துணைச் சுவையின்மையும் கருதி.*

*— **சிறுகை** என்றதால், தம்முடையரேனும், வளர்ந்த நிலையில் உள்ளவரல்லாது, இளந்தை நிலையில் உள்ளவரைக் குறித்தார்.*

*— **அளாவுதல்** கையிட்டுப் பிசைதலும் அளைதலும் எடுத்தலும் இறைத்தலும் வாயிடுதலும் முதலியன செய்தல்.*

'வண்ணச் செஞ்சிறு கைவிரல் அளைத்தும்
வாரிவாய்க் கொண்ட அடிசிலின் மிச்சில்
உண்ணப் பெற்றிலேன்'

— திருவாய்மொழி.

*— பரிமேலழகர் உரையில் காட்டப் பெற்ற 188- ஆம் புறச்செய்யுள் அடிகளுள், **'நெய்யுடை அடிசில்'** என்று வருவதானும், பாவாணர் உரையில் காட்டப் பெற்ற நளவெண்பாச் செய்யுளில் **'இன்னடிசில்'** என்று வருவதானும், அக் காட்டுகள் பொருந்தா.*

*— **கூழ்** என்றது, பொதுவாக உணவைக் குறிப்பதேனும் **'அளாவிய'** என்று வருவதால், அது எளிய நீருணவையோ, குழைய வைத்த கூழையோதான் குறிக்கும். குழைதல்-கூழ்.*

— மேலும் குழவியின் சிறுகை யளாவலால் பாலுணவிலும் சுவை கூடும் என்றதால் அது, எளிமையுணவே என்க.

— பரிமேலழகர் 'சோறு' என்றதும், பாவாணர் அதனைக் 'குழைக்கப்பட்ட சோறு' என்றதும், பிறர் பொதுப்பட 'உணவு' என்றதும், சரியல்லவென்க.

3. **அமிழ்தினும் ஆற்ற இனிதே:** பாற்சோற்றினும் மிகுந்த சுவையுடையது:

தாய்ப்பாலைச் சிறப்பாகவும் (11) பிற உண் பாலைப் பொதுவாகவும், பாற்சோற்றைப்பொருந்தும் இடங்களிலும் குறிக்கும் தமிழ்ச் சொல். 'அமிர்தம்' என்று பரிதியாரும், 'அமரர்' கடைந்தெடுத்த அமிர்தம் என்று காலிங்கரும் கூறுதல், கடைந்தெடுத்த பொய்யாம். பாவாணரும் தேவையின்றித் தேவருணவு என்று பொருள் கூறி. 'தேவருண வென்றது மக்களின் குருட்டு நம்பிக்கையான உலக வழக்கைத் தழுவியது' என்று விளக்கம் தருவதும் தேவையற்றது.

– **ஆற்ற** - மிகுதியும்.

– **இனிது** - இனிமை பயப்பது. சுவையும் நன்மையும் கருதி இனிது என்றார். **இனிது** நுகர்ச்சி இன்பத்தையும் செயல் நன்மையையும் குறிக்கும் பொதுச் சொல். குழலினிது, யாழினிது என்று முன்னர் வந்ததும், 'அறிவினிது' (68) என்று பின்னர் வருவதும், 'நோக்கு இனிது' (93), சாதலினிது (230), சொல்லினிது (648), கேண்மை இனிது (811) (839), உணர்வினிது (1106), முயக்கினிது (1108), காமம் இனிது (1145), (1196), (1201), (1202), கனவினிது (1215), நீரினிது, புலவியினிது (1309), ஊடலினிது (1326) - என்றவாறு பலவிடங்களில் வருவதும் உணர்க.

3. இங்கு, குழவியின் ஊறின்பத்தையும், நாவின்பத்தையும் கூறினார்.

4. குழவி, பெற்றோர் மடியமர்தலும், பருவுணவருந்தலும் ஆகிய நிலை கூறியதால், முன் பாடலை அடுத்து வைக்கப் பெற்றது. O

கூகூ மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு. 66

பொருள் கோள் முறை: இயல்பு

பொழிப்புரை: தங்கள் குழந்தைகளின் உடலைத் தீண்டித் தடவித் தழுவுவது, பெற்றோர்க்கு உடலின்பம் தருவது; மற்று, அவர்கள் கூறும் (கள்ளம் கவடற்ற) சொற்களைக் கேட்பது, அவர்களின் செவிக்கு இன்பம் தருவது.

சில விளக்கக் குறிப்புகள்:

1. இக்குறள், பரிமேலழகர் முதலியர் வைப்பு முறையில் 65 - ஆவதாகும். குழந்தைகளின் உடல் தழுவும்படி, சேய்மையினின்றும் நெருங்கி

வருதலைக் குறிப்புணர்த்தி, அவர்கள் நடைகொண்டதையும் உய்த்துணர்த்தலால், அமர்தல் நிலை கூறிய முன்னதன் பின்னர் இது வைக்கப் பெற்றது.

2 **மக்கள் மெய் தீண்டல் உடற்கு இன்பம்:** தம் மக்களின் உடலைத் தீண்டித் தடவித் தழுவுவது பெற்றோரின் உடலுக்கு இன்பமாகும்

இங்கு முன் பாடல்களிற் போல, தம் மக்கள் என்னாது, பொதுப் படக் கூறினாரேனும், அதிகார அடைவினால், பெற்றோர்தம் பிள்ளைகளையே, சிறப்பாகக் குறித்தது. எனினும், பிறர் மக்கள் என்று பொதுவாகக் குறித்துப் பொருள் கொள்ளினும் குறைவின்று என்க.

– **மெய் தீண்டுதல்:** தீண்டுதல் விரலால் தொடுதல் என்று பொருள் படினும், தடவுதலும், தழுவுதலும் அடுத்தடுத்து நிகழ்வன வாகலின் அவற்றையும் உள்ளடக்கியே கூறினார் என்க.

– **உடற்கின்பம்** என்றலால், காணலும், கேட்டலும், தொடலும் எனும் வகை இன்பவுணர்வுகளையும் அடக்கிக் கூறினார்.

மற்று : இரு கருத்து இணைச் சொல்.

அவர் சொல் கேட்டல் இன்பம் செவிக்கு:

குழந்தைகளின் கள்ளம் கவடற்ற சொற்களைக் கேட்பது பெற்றோரின் செவிக்கு இன்பம் பயப்பதாகும்.

– 'அவர் சொற்கேட்டல்' - என்பதற்கு, 'மக்களது மழலைச் சொல்லே அன்றி, அவர் கற்றறிவுடையராய்ச் சொல்லும் சொல்லும் இன்பமாகலின், பொதுப் படச் சொல் என்றார், என்று விளக்குவர், பரிமேலழகர்.

– மழலை வேறு; சொல் வேறு; இனி, கற்றறிவுடைச் சொற்களும் வேறு!

மழலையை முன்னர்க் குறித்தார்; ஈண்டு, கற்றறிவுடைமை தோன்றா நிலை என்பது, மெய்தீண்டல் மெய்ப்பாட்டால் பெறப்பட்டது. எனவே, மழலை நிலைக்கும், கற்றறிவுச் சொல்நிலைக்கும், இடைப்பட்ட இளந்தையர் கூறும் கள்ளம் கவடற்ற சொல் நிலை கூறப்பெற்றது என்க. எனவே, அவர் கருதுதல் மிகையாம். மேலும், கற்றறிவுடையார் சொற்கேட்டல் அனைவர்க்கும் இன்பமென்றாகலின் பரிமேலழகரின் மிகை மிகைப்பட்டது என்க.

– **செவி,** கேட்டல் பொறி முழுமையும் உள்ளடக்கிக் கூறும் சொல். ***காது*** - புறத்துறுப்பு மட்டும் உணர்த்துவது.

செவிக்கு இன்பம் என்றது கேட்டல் பொறி முழுமையும் இன்பவுணர்வால் நிறைவுறுவது.

3. இப் பாடலால், மக்களின் இளந்தை நிலை (இளமைக்கு முன் நிலை) யால் பெற்றோர்க்கு விளையும் இன்பம் கூறப்பெற்றது.

--- இம் மூன்று பாடல்களாலும் குழந்தைகளால் பெற்றோர்க்கு விளையும் உள மகிழ்வும் உடல் மகிழ்வும் கூறப்பட்டன. O

சுஎ. தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல். 67

பொருள் கோள் முறை: **இயல்பு**

பொழிப்புரை: *தந்தை தன் மகனுக்குச் செய்யும் நன்மையாவது, சுற்றோர் நிறைந்த கூட்டத்துள் அவனை முன்னிலையில் இருக்கும்படி, கல்வியிற் சிறந்தவனாகச் செய்வது.*

பிற விளக்கக் குறிப்புகள்:

நூலாசிரியர் காலத்திருந்த **'சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே'** என்ற நடைமுறைப்படி, மகனைக் கல்வியில் சிறந்தவனாகச் செய்வது என்று கூறினும், இக்காலத்துக் கல்வி அனைவர்க்கும் பொதுவாதல் பற்றி, மக்களை அவையத்து முந்தியிருப்பச் செய்வது என்று பொருள் கொள்ளினும் தக்கதாம். அதுபற்றித் **'தந்தை மக்கட் காற்றும் நன்றி'** என்று வரினும் பிழையன்றாம், தொடை நயம் கருதி,' **'தந்தை மகர்க் காற்றும்'** என்று கொண்டு, **'மகர்'** என்பதை 'மகார்' என்பதன் குறுக்கமாகக் கொள்ளினும் பொருந்துவதே. (அவன், அவள், அவர் - என வருதல் போல்)

2. **மகற்கு ஆற்றும்** - மகனுக்கு ஆற்றும் - ஆற்றுதல் - தந்நலமின்றிச் செய்யும் கடமை.

3. **நன்றி** - நன்று பயக்கும் செயல்.

4. **அவையம்** - சுற்றோர் கூட்டம்; அவை, மன்று என்பன ஓரிடத்து அடங்கிய கூட்டம் என்றாகும். சுற்றோர் கூட்டம் என்பது, சுற்றோர்க் கிடையில் முந்தியிருப்பது என்றாதலின், அதுவே சிறப்பாம்.

5. **முந்தி இருப்பச் செயல்:** *முன்னிலை பெறுமாறு, கற்றவனாய்ச் செய்வது; உருவாக்குவது. 'எச்சம் என ஒருவன் மக்கட்குச் செய்வன விச்சைமற் றல்ல பிற' - என்றது நாலடியும் (134).*

6. *இதனால், தந்தை மக்கட்குச் செய்யும் கடமை கூறப் பெற்றது.* O

சுஅ. தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க் கெல்லாம் இனிது. 68

பொருள் கோள் முறை: இயல்பு.

பொழிப்புரை: *பெற்றோர் தம்மைவிடத் தம் மக்கள் கற்று அறிவுடை யராயிருத்தல், இவ்வுலகின்கண் வாழும் மாந்தர் எல்லார்க்கும் நன்மை பயப்பது.*

சில விளக்கக் குறிப்புகள்:

1 ***தம்மின் தம் மக்கள் அறிவுடைமை:*** *பெற்றோரைவிடத் தம் மக்கள் கற்று அறிவுடையராயிருப்பது.*

– கல்வி மேன்மேலும் வளர்தற்குரியது மட்டுமன்று, அது மரபுத் தொடர்பால் படிநிலை வளர்ச்சி பெற்றுச் சிறக்கக் கூடியது.

– கற்றறிவுடையார்க்குப் பிறக்கும் மக்கள் மேலும் அறிவறியும் திறன் பெற்றிருப்பது இயல்பும் ஆகும்.

2 ***மாநிலத்து மன்னுயிர்க்கு எல்லாம் இனிது:***

இவ்வுலகிலுள்ள மக்களினம் எல்லாவற்றுக்கும் பயனுடையது.

– இதனால், தம் மக்களைத் தம்மினும் கற்றவர்களாக்குவது, பெற்றோர்கள் தங்களின் முதுமைக் காலத்திற்கும், பிறங்கடைக்கும் பொருள் வழி, நன்மை பயப்பர் என்று கருதாமல், உலகப் பயன் நோக்கி உதவட்டும் என்று கருதுதல் வேண்டும் என்று உலகப் பொதுமை கூறினார் என்க.

– மன்னுயிர் என்றது மக்களினத்தை.

3. இப்பாடல், குடும்பத் தொடர் கல்வியால், குடும்பமும் நாடும் மட்டுமன்றி, உலகமும் பயனெய்தி நலமும் சிறக்கும் என்று பொதுமை நலம் கூறியது. O

கஉஎ. ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய். 69

பொருள் கோள் முறை:

தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்,
ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும்.

பொழிப்புரை: (கல்வி கேள்விகளில் நன்கு தேர்ந்து, அறிவு மிகப்பெற்று பிறர் பின்பற்றத் தகுதியுடையோன் எனும் நிலை பெற்ற) தன் மகனைச் 'சான்றோன்' என்று அறிஞர் பிறர் சொல்ல, அதனைச் செவி மடுத்த தாய், அவனைக் கருவுயிர்த்து (அயர்வுற்ற அப் பொழுதில், பிறர் வாய் மகன் எனக் கேட்டு) மகிழ்ந்ததினும் பேரளவாய் உள்ளக் களிப்பு எய்துவள்.

சில விளக்கக் குறிப்புகள்:

1. **ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும்:** தான் கருவுயிர்த்த அப் பொழுதினும் பேரளவில் உள்ளக் களிப்பு எய்தும். **ஈன்றல்** - கருவுயிர்த்தல் - **ஈ - தா** - என்னும் தருதற் பொருள்தரும் வேர்ச் சொற்களடியாகப் பிறந்த சொற்கள் **ஈன்றாள், தாய்** என்பன.

   – ஈ - ஈன் - ஈனு - ஈன்றாள் - தன்னைக் கருவுயிர்த்தவள்.

   – தா - தா + ஆய் - தாய் - தன்னை உலகுக்குத் தந்தவள்.

   – இவற்றுள், **ஈன்றாள்** என்பது, கருவுயிர்த்தவள் என்னும் படைப்புப் பொருளையும், **தாய்** என்பது, புறத்தே பெற்றுத் தந்தவள் என்னும் அளிப்புப் பொருளையும் தரும்.

   – **தா** என்னும் வேரடியாகவும், தள்ளுதல் என்னும் வினையடியாகவும் பிறந்த இதனினும் முந்திய சொல் **தள்ளை** என்பது,

தன் வயிற்றினின்று வெளியே தள்ளியவள் என்னும் பொருள் தரும் முந்துதமிழ்ச் சொல்லாகிப் பின், அதன் திசைமொழியாகிய தெலுங்கிற் சென்று 'தள்ளி' என வழங்கும்.

– ஈன்றல் என்பதற்கும் வெறும் பெறுதல் என்னும் பொருள் குறிப்பது போதாது; அது தமிழின் தனிச்சிறப்பைக் குறைத்ததாகும்.

– **பெரிதுவக்கும்** - என்றது, முன் கருவுயிர்த்து, அயர்வுற்ற அப்பொழுதில், பிறர் வாய் மகன் எனக் கேட்டு மகிழ்ந்ததினும் பேரளவாய் உள்ளக் களிப்பு எய்தியதைக் குறிக்கும்.

– **மகிழ்ச்சி** - புறத்துத் தெரியும்படி கொள்ளும் உடற்களிப்பு.

– **உவகை** - அகத்தேயே அமைந்து பொங்குகின்ற மனக்களிப்பு.

2. **தன் மகனை:** 'மகன்' என்றாலே, தன் மகன் என்று பொருள் பெறுமெனினும், 'தன்' என்று விதந்து கூறியது, தான் வருந்திப் பெற்றெடுத்த அன்றைய பொழுதையும் நினைவு கூர்ந்ததை உணர்த்தி, ஈன்ற பொழுதின் எனும் சொற்களுக்கு வலிவூட்டி நின்றது.

– இது தந்தையினும் மிக்குரிமையையும் உணர்த்தியது.

– 'மகனை' என்று ஆண்பால் குறித்துக் கூறியது, ஒருவன் எக்காலத்தும் இன்னார் மகன் எனலும், பெண்பாலை மணத்தின் பின் இன்னான் மனைவி எனலும் உலகியல் ஆகலின்.

4. **சான்றோன் எனக் கேட்ட தாய்:** தன் மகனைச் சான்றோன் என்று அறிஞர் பிறர் சொல்லி, அதனைச் செவிமடுத்த தாய்.

– **சான்றோன்** - அனைவர்க்கும் 'சான்று' ஆகிநிற்பவன். பிறர் பின்பற்றத் தக்க நிலையில், அன்பானும், அறிவானும், பண்பானும் நிறைவுற்று இருப்பவன்.

– சால் - சால்பு - சான்பு - சான்று - சான்றோன் - நிறைவுறுதல்

– சால்பன் - சான்றன் - சான்றோன் - நிறைவுற்ற குணநலன்களுக்கு எடுத்துக்காட்டாக இருப்பவன்.

– ஆங்கிலத்தில் இதற்கு நேர்ச்சொல், exemplary - exemplar.

– **எனக் கேட்ட தாய்** - சான்றோராலும் பிறராலும் சொல்லக் கேட்ட தாய்.

– 'கேட்ட' என்றது, தன் பாசமும் நேசமும் கொண்ட தாய்மை உணர்வால், அவனது அறிவை மிகுத்துணர்தல் இயல்பாதலின். தன் மதிப்பீடு அடக்கிச் சான்றோர் பிறரின் மதிப்பீடு கொள்ள விரும்பிக்

கேட்டறிந்தாள் என்க.

– "பெண்ணியல்பால் தானாக அறியாமையின் 'கேட்ட தாய்' எனவும் கூறினார்" - என்று பரிமேலழகர் குறிப்பது, அவர் சார்ந்த ஆரியவியலின்படி பெண்களைக் குறைத்து மதிப்பிட்டதாம். இஃது ஏற்றுக்கொள்ளத் தக்கதன்று; அன்றியும் இகழத்தக்கதுமாம்.

5. இது, மக்களால் தாய் பெறும் அறிவின்பத்தையும், அவரைச் சான்றோராக்கிய தந்தையின் கடமையையும் ஒரு சேர எண்ணி உவந்தது. ஆகலின் அதன்பின் வைக்கப்பெற்றது. O

எ0. மகன்தந்தைக் கற்றும் உதவி இவன்தந்தை என்நோற்றான் கொல்எனும் சொல். 70

பொருள் கோள் முறை : இயல்பு

பொழிப்புரை: மகன் ஒவ்வொருவனும், தன்னைப் பிறப்பித்துப் பேணி வளர்த்துக் கற்பித்து வாழ்தற்குத் தகுதியாக்கிய தந்தைக்கு ஆற்ற வேண்டிய நன்றிக்கடன் என்னென்றால், 'இவன் இவ்வாறு அனைத்தானும் சிறந்து விளங்குதற்கு, இவன் தந்தை என்னென்ன வகையில் பாடு நோற்றானோ' என்று பிறர் பாராட்டிக் கூறும் உரையைப் பெற்றுத் தருவது.

சில விளக்கக் குறிப்புகள்:

1. **மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி:** ஒவ்வொரு **மகன்** என்பவனும் தன் தந்தைக்கு ஆற்றுகின்ற நன்றிக்கடன்.

– மகளைத் தவிர்த்து, மகன் என்று கூறியது, மகள் திருமணத்திற்குப் பிறகு இன்னொருவர்க்கு வாழ்க்கைப்பட்டுத் தனக்கென வேறு குடும்பப் பொறுப்பு அமைவதால் தன் பெற்றோர்க்கென்று தனிக்கடமை செய்ய இயலாமையால் என்க.

– **தந்தைக்கு** என்ற பொதுவிற் குறித்தாலும் அது தாய்க்கும் சாரும். என்னை ? மக்கள் வளர்ப்பிலும் புரப்பிலும் தாயின்றித் தந்தை தனித்து இயங்குதல் இயலாமையின் என்க.

– **ஆற்றும் உதவி:** செய்த நன்மைக்குச் செய்யும் நன்றிக்கடன்; கைம்மாறு.

2 **இவன் தந்தை என் நோற்றான்கொல் எனும் சொல்:** இவன் இவ்வாறு அனைத்தாலும் சிறந்து விளங்க, 'இவன் தந்தை என்னென்ன வகையில் பாடு பொறுத்தானோ" என்று பிறர் வியந்து கூறும் உரையைப் பெற்றுத் தருவது.

– இங்கும் தந்தை என்றது, தாயையும் அடக்கி, பெற்றோர் என்றே பொருள்படும்.

– நோற்றல் - பொறுத்தல். கொல் - வியப்பிடைச் சொல்.

– **நோற்றான் கொல் எனும் சொல்:** ஒரு மகன் அல்லது மகள் பிறந்த பொழுதினின்று, கல்வி, கேள்வி, ஒழுக்கம், உடலோம்பல் எனப்பல வகையான், ஊட்டியும், காத்தும், உரைத்தும், பேணியும் புரந்து வளர்த்து ஆளாக்குதற்கும், பின்னர் வாலைப் பருவத்துத் தக்க துணையைத்தேடி மணங்கொண்டு வாழ்வு அமைத்தற்கும், பெற்றோர் பலவகையானும் பாடுபடல் வேண்டியுயள்ளதன்றோ? அத்தகு பாடு களுக்கிடையில் அவர்கள் மனத்தானும், அறிவானும், உடலானும், பொருளானும் எத்தனை யெத்தனைத் துன்பங்களையும் துயரங் களையும் சுமைகளையும் பொறுத்துக்கொள்ள வேண்டியுள்ளது! இப்பொறுத்தல் குணம்தான் பெற்றோர்க்கே உள்ள சிறப்புத் தன்மையாகலின், பிள்ளைகளின் பெருமை நிலைகளைப் பார்க்கும் ஒவ்வொருவரும், 'இப்பிள்ளையை இவ்வாறு சிறப்புற வளர்த்து வாழ்வித்தற்கு, அவர் பெற்றோர் என்ன பாடுகள் பட்டனரோ, என்னென்ன துன்ப துயரங்களையும் பொருட் சுமைகளையும் தாங்கிக் கொண்டனரோ" என்று அவர்மேல் இரக்கமும், அவர் கடமைக்கும் எடுதலுக்கொண்ட பொறுப்பு முயற்சிக்கும் பாராட்டும் பெருமையும் வியப்பும் தோன்றக் கூறும் கூற்று என்க.

– இத்தகு நோற்றல் முயற்சிகளே உலகியலளவில் உணரப்பெற்றும் பேசப்பெற்றும் வருவது இயல்பாயிருக்க, ஆரியவியலுக்கும், 'காடு சென்று துறவு மேற்கொண்டு பிள்ளை வேண்டித் தவமிருந்து பெறவேண்டும்' என அவர் கூறும் இயம நியமங்கட்கும், வலிவும் பொலிவும் ஊட்ட வேண்டியே, இக்கூற்றுக்குப் பரிமேலழகர், "தன் அறிவும் ஒழுக்கமும் கண்டார், 'இவன் தந்தை இவனைப் பெறுவதற்கு என்ன தவம் செய்தான் கொல்லோ என்று சொல்லும் சொல்லை நிகழ்த்துதல்" என்று, நல்ல மக்களைப் பெற உலகில் அனைவரும் தவம் செய்யவேண்டும் என்னும் ஆரியக் கூற்றை உலகியலாக்க வேண்டும் என்னும் கருத்திற் பொருள் கொண்டார் என்க. அது மக்களை மருளச் செய்து மதிமயக்கும் ஒரு பிழைப்பு உத்தியாகும் என்று கூறி அப் புனைபொருளைத் தவிர்க்க.

– இவ்வகையில், பரிமேலழகர் மட்டுமன்றிப் பாவாணர் வரை, இக்குறளுக்கு உரை கண்ட அனைவருமே, செம்மறியாட்டுக் கூட்டம் போல், இதே வகையிற்பொருள் கண்டிருப்பது, ஆரியவியல் கூற்றுகள், தமிழினத்தை எந்த அளவில் பிறப்பு முதல் இறப்புவரை மனத்தானும், அறிவானும், வாழ்வானும் தாக்கியிருக்கின்றன என்பதை உணர்த்துகின்றது.

– நோற்றல், நோன்பு, தவம் என்பன ஆரியவியலுக்கு மட்டுமே பொருந்துவன அல்ல: தமிழியலுக்கும் பொருந்துவனவே. இன்னும் கூறுவதானால், இவ்வொழுகலாறுகள் தமிழியலினின்று தான் ஆரியவியலுக்குக் கொள்ளப்பெற்றன என்பதை இரு வரலாறுகளையும் தொடக்கமுதல் துல்லியமாக உணர்ந்தவர் அறிவர். ஆனால், பொதுவான மாந்த முயற்சிகளைக் கூட, தவமுயற்சியின் உள்ளடக்கிக்கூறி, ஆரியக் கோட்பாடுகளை, மாந்த வாழ்வியல் எங்ஙனும் ஊடிழைபோல் ஊடுருவ விட்டுத் தமிழியல் வாழ்வையே மூடநம்பிக்கைக்கு முழுமையும் அடிமைப்படுத்தி விட்ட அவற்றின் ஆழ அகலங்களையும். ஆணிவேர் சல்லிவேர்களையும் அறிந்து தெளியவே இம் மெய்ப்பொருளுரை உணர்தற்பாலது என்க.

3. இப்பாடலால், பெற்றோர்க்குப் பிள்ளைகள் செய்யும் நன்றிக்கடன், உலகியல் அளவான் உணர்த்தப்பெற்றது என்க. ○

அ-2 இல்லறவியல்

அ-2-4 அன்புடைமை - 8

அதிகார முன்னுரை:

அன்புடைமையாவது, இவ்வுலகத் துயிர்கள் அனைத்தும் இணைந்தும் பிணைந்தும் இன்பம் பெற, உயிரின்கண் ஊடுருவி நிற்கும் ஓர் இயற்கை உணர்வை உடைய தன்மை என்க. அது மலரின்கண் மணம் போலவும், கனியின்கண் சுவைபோலவும் உயிரில் கலந்து உடல்வழிச் செயல்படுகிறது. மற்றோர் உயிரின் நுண்ணு ணர்வுக்கு அது விளங்கக் கூடியது.

உயிர்கள் அனைத்துள்ளும் மாந்தவுயிர்களே படிநிலையால் சிறந்தும் உயர்ந்தும் நிற்றல் போல், அவற்றின் பல்வேறு உணர்வு நிலைகளும் அனைத்தினும் மேம்பட்டு விளங்கி நிற்கின்றன. அத்தகு உயிரியக்க - உயிர்நிலைப்பாட்டு - இயற்கை உணர்வுகளுள், அன்பு என்னும் உணர்வே முதலுணர்வும் முற்றுணர்வுமாகும். இதனை அடியொட்டியே பிறவுணர்வு நிலைகள் அனைத்தும் படிப்படியே வளர்ந்து நின்று, மலர்ச்சியும் கனிவும் எய்துகின்றன.

இவ்வன்புணர்வு தொடக்கத்து நேரெதிர், இருபால் உடலிணக்க உணர்வாகவும், பிறகு உள இணக்க உணர்வாகவும், அதன்பின் அறிவிணக்க உணர்வாகவும் பெருகி வளர்கிறது. அந்நிலைகளில் அஃது, உடல்வழி அன்பாகவும், உளத்துவழி அன்பாகவும், அறிவுவழி அன்பாகவும் செயல்படுகிறது. தேவையானவிடத்து அவை விளக்கப் பெறும்.

அன்பின் முதிர்வு இன்பம். அஃது உள்ளத்தை அளாவி, அறிவை அளாவி, உடலை அளாவி, உயிரை மலர்ச்சியுறச் செய்கிறது. 'உறுதோறும்

உயிர் தளிர்ப்பத் தீண்டல்' (1106) என்னும் குறளிலும் நூலாசிரியர் இதனைக் குறிப்புக் காட்டுவர். இன்பத்தின் பின் ஏற்படும் அமைதித் தெளிவே அறிவு. அது மலரின் தேன் போன்றது. அவ்வறிவு வளர வளர, அன்புணர்வும் திண்மையும், உண்மையும், நுண்மையும், கூர்மையும், விரிவும், விளக்கமும் எய்தி, உயிர்களின் உறவுணர்வாகவும் அறவுணர்வாகவும் வளர்ந்து பெருகி, இருமை நீங்கி, ஒருமையுற்று, இறைமையாக நிலைகொள்கிறது.

இதை விரிக்கிற் பெருகுமாகலின், இதனளவில் நிறுத்தி, அன்புணர்வு உலகியல், வாழ்வியல் நிலைகளில், எவ்வெவ் வகையில், எவ்வெம்முறையில் இயக்கம் கொள்கிறது என்பதை இவ்வதிகாரத்துள் நூலாசிரியர் கூறும் கருத்துகள்வழி விளக்குவாம்.

அன்பின் இயல்பு என்பதைப் பலரும் பலவகையாகவும் உணர்ந்திருந்தாலும், அதன் செயல்தன்மை இன்ன வகைத்து, இன்ன எல்லையுடையது என்று உணர்த்துதலும், உணர்தலும் கடினம் என்க. 'அன்பெனதொன்றின் தன்மை, அமரரும் அறிந்த தில்லர்' என்றார் கம்பரும்.

இனி, அன்பே காதலாகவும், பாசமாகவும், பற்றாகவும், பத்திமையாகவும், நட்பாகவும், உறவாகவும், அறமாகவும், அருளாகவும், இறைமையாகவும் வளர்ச்சி பெறுகிறது என்பர் மெய்யறிஞர். இறைமையின் ஒரு கூறு அன்பும் ஒரு கூறு அறிவும் ஆகும். அன்பும் அறிவுமே அறம். அறமே உலகம்; உலக இயக்கம். அன்பே இறைமை, அறிவே இறைமை என்பது சமயம்.

இத்தகைய உயிர்ப்பு சான்ற அன்பு பொதுவாக உயிர்களிடத்தும், சிறப்பாக மக்களிடத்தும் கால்கொண்டு, வாழ்வுறுப்பாகி, பலவகையான இன்ப துன்பங்களுக்குக் கரணியமாகி, மக்களின மேம்பாட்டை இயக்கிச் செல்கிறது.

இவ்வன்புணர்வே இல்லறத்திற்கு முதலும் ஊதியமும் ஆகும். இது, கணவன் மனைவியிடைக் காதலாகி, அவர்களை இணைவித்து, அவர்களை மக்களைப் படைக்கும் படைப்பாளர்களாக்கி, அவர்களின்வழி உலகை உறவாக்குகிறது.

மக்களைப் பெற்று வளர்க்கும் பொழுதே அன்புணர்வு மலர்ந்து மணம் பரப்புகிறது; காய்த்துக் கனிவு எய்துகிறது. மக்கட்பேறின்றி அன்பை முழுவதும் உணர்தல் அரிதாம் என்னும் மெய்யறிவியல் உண்மையைக் கருதியே, இவ்வதிகாரத்தை 'மக்கட்பேறு' என்பதன் பின்வைத்தார் என்க.

இனி, கணவன், மனைவி, மக்களை அடக்கிய குடும்ப உணர்வையும் எல்லையையும் தாண்டிப், பிறருடன் பழகவும், உறவாடவும் ஓர் இணைவு உணர்வாக இருப்பதே அன்புணர்வாகலான், அதனை ஈண்டு உணர்த்த முற்பட்டார் என்க.

பரிமேலழகர் உரைமுறைப்படி, இவ்வதிகார வைப்பு முறை சரியெனினும், இதிலுள்ள குறள் வைப்பு முறை முன் பின்னாக உள்ளது. அதனை முறைப்பட வைத்து, ஈண்டுப் பொருள் கூறப்பெற்றது. **O**

எக. அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு என்புதோல் போர்த்த உடம்பு. 71

பொருள் கோள் முறை:

அன்பின் வழியது உயிர்நிலை;
அஃதிலார்க்கு உடம்பு என்புதோல் போர்த்த.

பொழிப்புரை : *அன்பை அடிப்படையாகக் கொண்டே இவ்வுயிரானது இவ்வுடலில் நிலைப்புக் கொண்டுள்ளது. அவ்வன்பு இல்லாதவர்க்குள்ள உடம்புகள் வெறும் எலும்பு மேல் தோல் போர்த்தன எனும்படி உயிரற்றனவாகும்.*

சில விளக்கக் குறிப்புகள்:

1. *இக்குறள், பரிமேலழகரது குறள் வைப்பு வரிசையில் 80- ஆவது குறளாகும். கருத்து நிரல்நிறையாக, இங்கு 71- ஆவதாக வைக்கப் பெற்றுள்ளது. இம் மாற்றம் இன்றியமையாததும், தவிர்க்க வியலாததும் ஆகும்.*

2. **அன்பின் வழியது உயிர்நிலை:** *அன்பின் வழியாகவே இவ்வுயிர் இவ்வுடலில் நிலைப்புக் கொண்டுள்ளது என்பது முதல் கருத்து.*

--- உயிரானது உடம்பு மேல் அன்பு கொண்டே இதில் வந்து குடி கொண்டும் வாழ்ந்து கொண்டும் உள்ளதாக மெய்ந் நூலார் கருதுவர்.

நூலாசிரியரும் இதே கருத்துடையவர் என்பதை இதன்வழியும்,

'உடம்போடு உயிரிடை என்னமற் றன்ன,
மடந்தையொடு எம்மிடை நட்பு' (1122) என்னும் குறளின் வழியும் உறுதிப்படுத்துவர்.

இனி, இரண்டாவதாக ஒரு கருத்து, பிறர்தன்பால் அன்பு செய்வதனாலேயே, இவ்வுயிர் இவ்வுடலில் தொடர்ந்து தங்கி வாழ்ந்து

கொண்டுள்ளது; இல்லெனில் இவ்வுயிரானது, இவ்வுடலை விட்டு நீங்கி விடும் - என்பது.

– உலகியலில் அன்பால் தவிர்க்கப்பெற்றார் தங்கள் உயிரை மாய்த்துக் கொள்ளுதலும், இது.

--- இவ்விரு கருத்துகளும் இதன் பொதுவான உலகியல் கருத்துகளாம்.

--- இனி, சிறப்பானதும் தலையாயதுமாகிய உயிரியல் கருத்து ஒன்றும் இக் கூற்றுக்கு உண்டு.

அஃது, அன்பு செய்தல் எல்லா உயிரினங்களிலும் தொடர்ந்து இவ்வுலகில் நடந்து கொண்டிருப்பதால்தான் - உயிர்கள் நிலை கொண்டுள்ளன என்பது.

– முன்னவை, **உடலியங்கல்** கருத்தும், பின்னது **உயிரியங்கல்** கருத்துமாம் என்றுணர்க.

2. அஃதிலார்க்கு உடம்பு என்பு தோல் போர்த்த:

அன்பில்லாதவர்க்குள்ள உடம்புகள் வெறும் எலும்பு மேல் தோல் போர்த்தன எனும்படி உயிரற்றனவாகும்.

--- அன்பில்லாத உடல் உயிரில்லாத உடம்பு என்றார். எனவே, அன்பு உயிர் போன்றது; உயிரில் கலந்த உணர்வு அது. அஃது உயிரியக்கத்திற்குத் தேவை என்றார். அன்பில்லாதவர் உலகில் இயங்குவது மிகவும் கடினம் என்பதை உணர்த்தினார்.

3. இஃது, இல்லற வியலில் கூறப் பெற்றது, இல்லற வாழ்க்கைக்கு அஃது இன்றியமையாதது என்பதையும், அஃதின்றி, இல்லறம் இயங்காது என்பதையும் சிறப்பாக உணர்த்தவும், இல்லறம் மட்டுமன்றிப் பொது வாழ்வுக்கும் அதன் தேவையைப் பொதுவாக வலியுறுத்தவும் என்க.

– உயிர் வாழ்க்கைக்கு அன்பு அடிப்படையாது என்பதால், இக்கருத்து இவ்வதிகாரத்து முதலாவதாக வைக்கப்பெற்றது. O

எஉ. அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு. **72**

பொருள் கோள் முறை :

ஆருயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு
அன்போடு இயைந்த வழக்கு என்ப.

பொழிப்புரை : *என்றும் தங்கியிருக்கும் உயிர்க்கு, எலும்பொடு (தசையும் நாரும் நரம்பும் அரத்தமும்) கூடிய உடலொடு பொருந்திய தொடர்பு, அன்பொடு பொருந்தித் துய்த்த வழக்கம் என்று மெய்ம்மை அறிந்தவர் கூறுவர்.*

சில விளக்கக் குறிப்புகள்:

1. *பரிமேலழகர் முறை வைப்பில் 73-ஆவது குறளாக வைக்கப் பெற்ற இது, இங்கு 72-ஆவது குறளாக, கருத்து நிரல்நிறை கருதி வைக்கப் பெறுகிறது.*

2. **ஆருயிர்க்கு என்போடு இயைந்த தொடர்பு** *என்றும் தங்கியிருக்கும் உயிர்க்கு எலும்பினால் ஆய உடலொடு பொருந்திய தொடர்பு.*

*--- **ஆர் உயிர்** - என்றும் தங்கியுள்ள உயிர். தோற்றமும் முடிவும் இல்லாமல் என்றும் தங்கியிருக்கும் உயிர்.*

--- இதனைப் 'பெறுதற்கரிய மக்கள் உயிர்' எனலும் 'அருமையாக வாய்த்த உயிர்' எனலும், பொருந்தா வென்க. என்னை? உயிர்க்குப் பெறுதற்கரியது மாந்தவுடலே தவிர, உயிரே பெறுதற்கரியது எனல் பொருளில்லாத கூற்றாகும். ஏனெனில், உயிர் நிலையானதே தவிர, உடல் நிலையானது அன்று, உடல்தான் அவ்வப் பொழுது உயிரால் பெறப்படுவது. பெறுவது உயிர்; பெறப்படுவது உடல். எனவே, 'பெறுதற்கரிய உயிர்' என்பதோ, 'அருமையாக வாய்த்த உயிர்' என்பதோ பொருந்தாக் கூற்றாகும். அது தவறும் ஆகும்.

– மெய்யறிவர் 'உயிர் நிலையானது; அவ்வப் பொழுது உடலுடன் விரும்பிக் கூடுவது, அவ்வாறு அது மாந்த உடலுடன் கூடுவது, அன்பைத் துய்ப்பதற்கே ஆகும்' என்று கூறும் கூற்றை நூலாசிரியர் இங்கு உறுதிப்படுத்துவர்.

– 'ஆர்' என்னும் 'முன்னடை' 'தங்கிய' என்று பொருள் தரும் அரிய சொல்லாகும். உயிரின் நிலைப்பாட்டை உணர்த்த இங்குப் பண்படையாக வந்தது.

– 'ஆருயிர்' என்றாலே, 'தங்கிய உயிர்', 'நிலையான உயிர்', 'என்றும் ஆர்த்து நிற்கும் உயிர்', என்றுதான் பொருள். 'அழகிய உயிர்', அருமை உயிர்', 'பெறுதற்கரிய உயிர்' என்றெல்லாம் பொருள் கோடல் மெய்யறிவடிப்படையில் மிகவும் பிழையாகும். 'உயிர்' ஓர் ஆற்றல் கூறு ஆகையால், அழகிய, அருமை, அரிய - பெறுதற்கரிய, என்றெல்லாம் பொருள் கொள்வது, உண்மையறியாதவரின் மயக்கக் கூற்றாகும். தீ, காற்று, நீர் என்னும் பூதப் பொருள்களுக்கே அவை

பொருந்தாவென்க. அவ்வாறு கூறினும், அவை உலகியலறிவையே உணர்த்தும்.

– இனி, உலகியலில், ஓர் உயிர், இன்னொரு தொடர்புடைய உயிரை 'ஆருயிர்' எனல் பொருந்தும். ஏனெனில், இங்குத் தோன்றிய ஓர் உயிர், இன்னோர் உயிர்த் தொடர்பை, அன்பு, காதல், நட்பு, உறவு அடிப்பனடையில் விரும்பி, அதனை 'ஆருயிர்' என்றல், அதற்கு அருமையும், பெருமையும் வைத்துப் பேசுவதாகும். எனவே அங்கு இப்பொருள்கள் பிழைபடா வென்க.

– **என்போடு இயைந்த தொடர்பு:** என்பை அடிப்படையாகக் கொண்டு, தசையும், நாரும், நரம்பும், அரத்தமும் பொதிந்த உடலோடு பொருந்திய பிறவித் தொடர்பு.

– உயிர் உடலோடு பொருந்திப் பிறவிக்கு வருவது, அன்பைச் சுவைத்த வழக்கத்தினால் ஆகும் - என்கிறார்.

– உயிர் உடலை விட்டுப் பிரிந்து தனித்து நின்று இயங்கும் பொழுது, மீண்டும் அந்த அன்புச் சுவைப்பை நினைவு கொண்டு, விரும்பி, உடலொடு வந்து பொருந்திப் பிறவி யெடுக்கிறது என்பது நூலாசிரியர் கருத்து.

– உடம்பை என்பு என்று மட்டும் குறித்தது, எலும்பு அதன் இயக்கத்திற்கு அடிப்படையாதல் பற்றி.

– உடம்பின் மிடைந்த பொருள்களுள் என்பு இல்லையாயின், அதுவெறும் தசைக்குவியலாகி, வடிவமே இல்லாமற் போய்விடும் என்பதால், அதன் முகாமை பற்றியும், உடலின்கண் உள்ள தசை, நார், குருதி, தோல் முடி முதலிய அனைத்துப் பொருள்களும், மண், நீர், தீ யாவற்றாலும் அழிந்து போக, என்பு (எலும்பு) ஒன்றே நீண்ட நெடுங்காலம் ஆனாலும் அழியாமல் உள்ளது பற்றியும் அதையே உடலெனச் சிறப்பித்தார் என்க.

– அது போலவே, ஆருயிர் இயக்கத்திற்கும் அன்பு அடிப்படையாகிறது என்றார்.

– உயிர் அன்பைச் சுவைத்த வழக்கத்தால், மீண்டு மீண்டும் அவ்வப் பொழுது ஏதாவது ஓர் உடலுடன் தொடர்புகொண்டு பிறவிக்கு வந்து அன்பைச் சுவைக்கிறது. இல்லெனில், அஃது ஓர் ஒளியாற்றலாகி என்றும் நின்று இயங்கிக் கொண்டிருக்கும் என்பது மெய்ந்நூலாசிரியர் கருத்து என்பார்.

4. ஆர் உயிர் அன்போடு பொருந்திய நிலையை **வழக்கு** (வழக்கம்) என்றும், உடலொடு பொருந்திய நிலையைத் **தொடர்பு** என்றும் குறித்தது, உயிர்க்கு, பிறவியில்லாத பொழுதும் அன்பு நாட்டம் உள்ளது

பற்றியும், அதைச் சுவைக்கப் பிறவியெடுப்பது அவ்வப் பொழுது, கிடைக்கின்ற ஏதாம் ஓர் உடம்பு கொண்டும் ஆகையால், அதனோடு கொள்வது அறிமுகமில்லாத புதுத் தொடர்பு என்பது பற்றியும் என்க.

– நிலையான ஈடுபாட்டை **வழக்கு** என்றும், அவ்வப்பொழுது வேறுவேறு உடம்பொடு கொள்ளும் ஈடுபாட்டைத் **தொடர்பு** என்றும் குறித்தார் என்க.

5. சென்ற பாடலில் அன்பின் வழியது உயிர்நிலை என்றதை உலகியலால் மேலும் நுட்பமாக விளக்கியதால் அதன் பின்னர் இது வைக்கப் பெற்றது.

6. மெய்ப்பொருள் சான்ற இக்கருத்து இல்லறவியலில் வைக்கப்பெற்றது, ஆருயிர் முன் பிறவிகள் பலவற்றுள்ளும் கொண்ட அன்புத் தொடர்பின் அடிப்படையில்தான், இல்லறத்தின் தாய்மைக் கூறுகள், துணைக் கூறுகள், மக்கள் கூறுகள் முதலியன அமைகின்றன என்பது பற்றி என்க. O

எங். புறத்துறுப்பு எல்லாம் எவன் செய்யும் யாக்கை. அகத்துறுப்பு அன்பி லவர்க்கு 73

பொருள் கோள் முறை :

அகத்து உறுப்பு அன்பு இலவர்க்கு,
யாக்கை புறத்துறுப்பு எல்லாம் எவன் செய்யும்.

பொழிப்புரை: மனத்தின் உறுப்பாகிய அன்புணர்வு இல்லாதவர்க்கு, உடம்பின் புறத்துள்ள ஐம்பொறிகளும், செயற்கருவிகளும் ஆகிய உறுப்புகளெல்லாம் செப்பமாகவும், அழகியனவாகவும் அமைந்திருந்தாலும், அவை என்ன பயனைத் (தனக்கும் பிறர்க்கும்) செய்துவிட முடியும்? (ஒரு பயனையும் செய்துவிட முடியாது).

சில விளக்கக் குறிப்புகள்:

1. பரிமேலழகர் முறைவைப்பில் 79-ஆவது குறளாக வைக்கப்பெற்றுள்ள இது, இங்கு 73-ஆவது குறளாக, கருத்து நிரல்நிறை கருதி வைக்கப் பெற்றுள்ளது.

2. **அகத்து உறுப்பு அன்பு இலவர்க்கு:** உயிர், உடல் இயக்கத்தில், மனத்தின் உறுப்பாகிய அன்புணர்வு இல்லாதவர்க்கு.

– அஃதாவது, உயிருக்கும் உடலுக்கும் இணைப்பிடமாகிய மனத்தின்கண், அதற்கிருக்க வேண்டிய ஒரே உறுப்பாகிய அன்பு உணர்வு தேவை என்று வலியுறுத்தினார் என்க. மனத்துக்கண் மாசில்லாமையை முன்னரும் (34) ஆசிரியர் கூறியுள்ளதை ஓர்க.

– **அகத்து உறுப்பு அன்பு** என்பதற்குப் பரிமேலழகரும், பாவாணர் முதலியோரும், இல்லறத்தின் உறுப்பு ஆகிய அன்பு என்று இயல் வழியாகப் பொருள் கொண்டனர்: அது பொருந்தாதென்க.

– எந்தக் கருத்தையும் நூலாசிரியர், அதிகாரத்திற்குச் சிறப்பாகவும், உலகியலுக்குப் பொதுவாகவுமே கூறிச் செல்வது, அவர்க்கு இயல்பாக உள்ளதை உரையாசிரியர்கள் முதலில் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

அவ்வகையில், இல்லறத்தில் ஈடுபடாதவர்க்கு இக் கருத்து, பயனில்லாமற் போமாறும், உயிருடல் இயக்கத்திற்கே சிறப்பாக விளக்கந் தரும் இக் குறளின் கருத்தை அனைவரும் உணராமற் செய்யுமாறும், பரிமேலழகரும் பாவாணரும் பிறரும் அவ்வாறு பொருள் கண்டது மெய்ப்பொருள் ஆகாதென்க.

– இனி, ஒரு சிலர், உடலின் புறத்துறுப்பு கூறப்பெறுவதால், அதற்கு இணைவாக அகத்துறுப்பு என்பதற்கு உடலின் உள்ளுறுப்பாகிய அன்பு 'என்று பொருள் கண்டதும் நிறைபொருளாகாது. என்னை? அன்பு என்பது, உடலின் நெஞ்சாங்குலை, ஈரல், குடல் முதலியன போல் உள்ளுறுப் பன்று; அஃது மனத்தின் ஒரே சிறப்பு உறுப்பு என்க. இன்னும் கூறுவதானால் உயிரின் உறுப்பே அதுதான். அதனால்தான், முன்னை, 'அன்பின் வழியது உயிர்நிலை' என்றும், 'அஃதிலார்க்கு என்பு தோல் போர்த்த உடம்பு' என்றும் விதந்து கூறினார் என்க.

2. யாக்கை புறத்துறுப்பு எல்லாம் எவன் செய்யும்:

– **யாக்கை** – உடம்பு. எலும்பு, தசை, நார், நரம்பு – முதலியன கொண்டு கட்டப்பெற்றது. ஆகையால், உடம்பை யாக்கை என்றனர். யாத்தல் - கட்டுதல்.

– **புறத்து றுப்பு எல்லாம்:** உடம்பின் புறத்தே உள்ள உறுப்புகளாகிய கண், காது, மூக்கு, வாய், மெய் முதலிய ஐம்பொறிகளும், கை, கால், விரல்கள், தலை முதலிய செயற்பொறிகளும் என்க.

– இவை, இயக்கத்திற்குரிய வகையில் மெய்யாகவும், அழகாகவும்

அமைந்திருந்தாலும்

-- **எவன் செய்யும்:** அவை என்ன பயனைத் தனக்கும் பிறர்க்கும் செய்துவிட முடியும்? ஒரு பயனையும் செய்துவிட முடியாது என்க.

– பரிமேலழகரும் பாவாணர் முதலியோரும் அகத்துறுப்பு அன்பு என்பதற்கு, இல்லறத்தின் உறுப்பாகிய அன்பு என்று பொருள் கொண்டது போலவே, புறத்துறுப்பு என்பதற்கு 'இல்லறத்தின் புறத்துறுப்பாகிய இடமும் பொருளும் ஏவலும் முதலாயின' என்றும் இயல்வழிப் பொருள் கொண்டதும் பொருந்தாதென்க.

இக்குறளுக்குப் பரிமேலழகர் கூறும் பொருளை அடியொற்றிச் சிவப்பிரகாசரும், "இல்லானுக் கன்பிங் இடம் பொருள் ஏவல் மற்று எல்லாம் இருந்துமவற் கென்செய்யும்" என்று நன்னெறி செய்ததும், பாவாணர் கூற்றுக்கும் அடிப்படையாயிருந்த தென்க.

என்னை? இவர்கள் கூறும் இல்லறத்தின் புறத்துறுப்புகளாகிய இடம், பொருள்,. ஏவல் முதலியன இல்லறத்தில் ஈடுபட்ட அனைவர்க்குமே பொருந்தா வாகையினாலும், முன்னைய குறளில் உயிரின் உலகியல் தொடர்பை யாக்கையொடு இணை வைத்துக் கூறியதற்கு, விளக்கமாக இதில் நுட்பங் கூறியிருப்பதாலும், இங்குக் கூறப்பெற்றதும், இல்லறத்தில் உள்ளவர்தம் புறத்துறுப்பே ஆகலானும், அவர் பொருளாகிய இடம், பொருள், ஏவல் என்பது பொருந்தாவென்க. தேவையெனின், 'எல்லாம்' என்றதால், அதையும் துணைப் பொருளாக்கி நயப்படுத்துவதிலும் தவறில்லை எனலாம்.

--- மேலும், இல்லறத்துத் தலை உறுப்பினர்களாகிய தலைவனும் தலைவியும் தாங்கள் ஒருங்கிணைவதற்கே அடிப்படைக் கரணியமாகத் தங்கள் உடலுறுப்பழகையும், அவை பழுதில்லாமல் நன்கமைந்த தன்மையினையுமே கருத்தில் கொள்வார்களாகையான், அவற்றால் பெரும் பயனின்மை கூறியும், இல்லறத்திற்கு வேண்டுவது அகத்துறுப்பாகிய அன்பே யன்றிப் புறத்துறுப்புகளின் அழகும் அமைவும் அல்ல என்று நுட்பங் கூறியும், அவர்தம் இயல்பான நோக்கைக் கண்டித்தது ஆகும், இது.

3. இது, முன்னைய குறளுக்கு முழு விளக்கமாகவும் நுட்பமாகவும் அமைந்ததால், அதன் பின்னர், வைக்கப்பெற்றது. இதனை, இன்னொரு வகையானும் அடுத்து வரும் குறளில் மேலும் விளக்குவார். o

எச! அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று. 74

பொருள் கோள் முறை :

அகத்து அன்பில்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம் தளிர்த்து அற்று.

பொழிப்புரை : *உள்ளத்தே அன்புணர்வு இல்லாத உயிரினது உலகியல் வாழ்க்கை, வலிந்து இறுகிய திடர் நிலத்தின்கண்ணே நீர் வற்றிய மரம் தளிர்த்தது போல், மலர்ச்சி இல்லையாகிப் போகும்.*

சில விளக்கக் குறிப்புகள்:

1. *பரிமேலழகர் முறை வைப்பில், 78-ஆவது குறளாக வைக்கப்பெற்றுள்ள இது, 74-ஆவது குறளாக, கருத்து நிரல்நிறை கருதி வைக்கப் பெற்றுள்ளது.*

2. **அன்பகத்து இல்லா உயிர் வாழ்க்கை:**
மனத்தில் அன்பு இல்லாத உயிரினது உலகியல் வாழ்க்கை.

'வாழ்க்கை' என்றாலே 'உலகியல் வாழ்க்கை' என்று பொருள் தருமெனினும் 'உயிர் வாழ்க்கை' என்று சிறப்பித்தலால், உயிர் உடலில் தங்கி வாழும் வாழ்க்கை என்றுதான் பொருள் கொள்ளுதல் வேண்டும்.

-- உயிர்க்கு அனைத்து உணர்வு நிலைகளும் உண்டு என்பது மெய்யறிவு நூலாரது கொள்கை.

நூலாசிரியரும் மெய்யறிவினார் ஆகையான் நூலின் ஒவ்வொரு கருத்தையும் மெய்யறி வடிப்படையிலேயே, ஆனால், இயல்பியலுக்கும், உலகியலுக்கும், மாந்த வாழ்வியலுக்கும், உயிரியலுக்கும் பொருந்துமாறு கூறுவர்.

– ஈண்டும், உயிர்க்குள்ள இயல்பாய குணவுணர்வுகளுள், அன்புணர்வு சிறந்திருத்தலே, அதன் உடலொடும் கூடிய உலகியல் வாழ்க்கைக்கு மேலும் மலர்ச்சி ஏற்படுத்தும் என்றும்| அல்லாக்கால் இல்லை என்றும் இப்பாடலின்கண் புலப்படுத்துகிறார்.

*உயிர்க்கு இவ்வுலகியல் வாழ்வில் **அன்புணர்வு** மேலும் மலர்ச்சியுறுவதை,*

***'உறுதோறும் உயிர் தளிர்ப்பத் தீண்டல்'** (106)*

- என்னும் குறளானும்,

அறிவுணர்வு மலர்ச்சியுற்று மேம்படுவதை,
'ஒருமைக்கண் தான்கற்ற கல்வி' *(398)*
'நுண்ணிய நூல் பல கற்பினும்' *(373)*

– என்னும் குறள்களானும்,

பண்புணர்வு தொடரும் என்பதை,

'ஒருமையுள் ஆமைபோல்' (126)

'சிறுமையுள் நீங்கிய இன்சொல்'(98)

'மனநலத்தின் ஆகும் மறுமை' (459)

'மனையாளை அஞ்சும் மறுமையிலாளன்' (904)

- என்னும் குறள்களானும்,

அன்புணர்வு (காதலுணர்வு)ம் தொடரும் என்பதை,

'இம்மைப் பிறப்பில் பிரியலம்' *(1315)*

– என்னும் குறளானும்,

நட்புணர்வும் பிறவிதொறும் தொடரும் என்பதை,
'எழுமை எழுபிறப்பும் உள்ளுவர்' (107)

– என்னும் குறளானும்,

தீயவுணர்வுகளும் உயிர்க்கு இயல்பான குணங்களாய்த் தொடரும் என்பதை,

'புகழ்ந்தவை போற்றிச் செயல் வேண்டும்' (538)

'ஒருமைச் செயலாற்றும் பேதை' (835)

- என்னும் குறள்களானும், இன்னும் பலவாறும் புலப்படுத்தி யுள்ளதை ஆங்காங்குக் கண்டு உணர்க.

எனவே, அன்புணர்வு உயிர்களிடத்தில் இயல்பாவே உள்ளது. ஆனால், அது மேலும் மேலும் மலர்ச்சியுற்று விரிவடைந்து அருள் என்னும் வேறுபாடற்ற சமநிலைக்கு வருதலின் முயற்சியே வாழ்க்கை என்பது மெய்ந்நூலார் கொள்கை. ஆசிரியரும்,

'அருளென்னும் அன்பீன் குழவி' *(757)*

– என்னும் குறளில் அதை உணர்த்தினார்.

இனி, இது போலவே உயிர் வாழ்க்கையில், உயிரின் பிற இயல்புணர்வுகளும் மலர்ச்சியும் வளர்ச்சியும் பெற்று உயிர் ஒளி பெறுதல் வேண்டும் என்பது உயிரியங்கியல் கொள்கை என்க.

உயிர்க்கு ஒளி பெருகுதலை, நூலாசிரியர்,

'சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும்' (267)

'இளையர் இனமுறையர்' (698)

'ஒளியார்முன் ஒள்ளிய ராதல்' (714)

– என்னும் குறள்களால் உய்த்துணர்விப்பார்.

3. வன்பாற்கண் வற்றல் மரந்தளிர்த்து அற்று:

வன்மையுற்று இறுகிய திடர்நிலத்தின்கண்ணே நீர் வற்றிய மரம் தளிர்த்தது என்னும் நிகழ்வு இல்லாதது போல், மலர்ச்சி இல்லையாகிப் போகும் என்றார்.

வன்பால்கண்: வன்மையுற்று இறுகிய நிலத்திடரின்கண்.

இது பாறை எனலும், பாலை எனலும் பொருந்தா. பாறை எனில் 'வன்'மை தேவையின்று. மேலும் பாற் - பால் - பாலையைக் குறிக்காது; பாலையைக் குறிப்பினும் அது மணல் பொதித்த நிலமே யன்றி, இறுகிய நிலம் அன்று. எனவே வலிந்து இறுகிய திடர் நிலம் என்றே பொருள்படும்.

– வலிந்து இறுகிய திடர் நிலத்தின் கண்ணே புல்லும் முளையாது. எனவே, மரமும் இல்லை; அது வற்றலும் இல்லை; பின் தளிர்ப்பு இல்லை.

– எனவே, 'வானத்துக் குதிரைக்கு மூன்று கொம்பு' என்பது போன்ற இல்பொருள் உவமையணி.

– அன்பு உள்ளத்தே இல்லாத உயிரினது வாழ்க்கையில் தளிர்ப்பு - மலர்ச்சி என்பதற்கே இடனில்லை என்றார்.

– வலிந்து இறுகிய நிலத்தின் உள்ளே நீர் இல்லாததால், மரமும் இல்லை, தளிர்ப்பும் இல்லையாதல் போல், அகத்தில் அன்பில்லாததால், அங்குத் தளிர்ப்பும் இல்லை; மலர்ச்சியும் இல்லை என்றார்.

– இனி, 'அன்பு அகத்து இல்லா' என்றதால் புறத்தே அன்பு இருப்பது போல் காட்டுதலையும் குறிப்புணர்த்தினார்.

– அன்பு, செலுத்துதற்கும், பெறுவதற்குமான இருவழித் தொடர்புடைய ஒரு பரிமாற்ற உயிருணர்வு.

– அஃது அகத்தின்மையால் பிறர்பால் செலுத்துதல் இல்லாமல், பிறரிடமிருந்து பெறுதற்காகப் புறத்தே இருப்பது போல் நடிப்பது தேவை என்றுணர்க.

4. இஃது, இல்லறத்துள்ளவர்களுள் ஒருவர்க்கு அன்பிருந்து மற்றவர்க்கு அன்பில்லாமல் இருப்பினும், அவ்விருவர் வாழ்விலுமே, உயிர் மலர்ச்சி தோன்றலும் வளர்தலும் ஒரு கற்பனையே யாகி, நிகழ்வுறாது போய்விடும் என்றது. O

எரு. அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு. 75

பொருள் கோள் முறை:

வையகத்து இன்புற்றார் எய்தும் சிறப்பு,
அன்புற்று அமர்ந்த வழக்கு என்ப.

பொழிப்புரை: (உருள்கின்ற) இவ்வுலகத்து, எல்லா நிலைகளிலும் இன்பம் அடைந்தவர், மேலும் பிறரால் எய்தப்பெறும் (ஆதரவு, பாராட்டு, புகழ் போன்ற) சிறப்புகள் எல்லாம், ஏற்கனவே மற்றவர்களிடம் அவர்கள் அன்பு செய்தும், பெற்றும் அமைந்திருந்த நடைமுறையால் நிகழ்வன என்று அதன் தன்மையறிந்தவர் கூறுவர்.

சில விளக்கக் குறிப்புகள்:

1. **வையகத்து:** உருள்கின்ற இவ்வுலகத்து. வையம் - சக்கரம். - வையகம் - சக்கரம் போல் உருள்கின்ற உலகம். இதனை நினைவு கூர்ந்தது, அனைத்தும் மாறி மாறி வரும் உலகத்து, மாறாத உயிருணர்வு அன்பு என்று காட்டுதற்காம் என்க.

இன்புற்றார் எய்தும் சிறப்பு: எல்லா நிலைகளிலும் இன்பம் அடைந்தவர், மேலும், பிறரால் எய்தப்பெறும், ஆதரவு, பாராட்டு, புகழ் போன்ற வாழ்வியல் சிறப்புகள் எல்லாம்.

--- இதற்குப் பரிமேலழகர், 'இவ்வுலகத்து இல்வாழ்க்கைக்கண் நின்று, இன்பம் நுகர்ந்து, அதன்மேல் துறக்கத்து, (மோட்சத்து)ச் சென்று, எய்தும் பேரின்பம் என்று பொருள் கூறுதல், அவர்க்கே இயல்பாக நின்ற ஆரியவியல் கொள்கை புகுத்தல் என்னும் நோக்கத்தால் என்க.

இது தொடர்பான கருத்துகள் முன்னரே நன்கு விளக்கப் பெற்றுள்ளன.

இவ்வழிப் பாவாணரும், 'இவ்வுலகத்து இல்லறத்தில் நின்று இன்பம் நுகர்ந்தவர் மறுமையில் தேவருலகஞ் சென்று அடையும் சிறந்த இன்பத்தை' என்று பொருள் கூறி, 'இம்மையில் இவ்வுலக இன்பமும், மறுமையில் விண்ணுலக இன்பமும் பெறுவதற்குக் காரணியமாயிருப்பது' என்று விளக்கமும் செய்து, பரிமேலழகரையே வழிப் பற்றுவர். இருவர் கருத்தும், இன்னோரன்ன பிறர் கருத்தும், வாழ்வியலுக்கும், அறிவியலுக்கும், மெய்யறிவியலுக்கும் பொருந்தாவென்று புறக்கணிக்க.

'ஆருயிர் என்புற்றார் எய்தும் பிறப்பு' என்னும் **நச்சர்** பாடம் சிறப்பன்று.

2. **அன்புற்று அமர்ந்த வழக்கு என்ப :** ஏற்கனவே மற்றவர்களிடம் அவர்கள் அன்பு கொடுத்தும், கொண்டும் அமைந்திருந்த நடைமுறையால் - வழக்கத்தால் - நிகழ்வன என்று அதன் உலகியல் உணர்ந்தவர் கூறுவர்.

– **அன்புறுதல்** - அன்பு செய்தல், அன்பு செயப்பெறுதல்.

– **அமர்ந்த** - அமைந்திருந்த

– **வழக்கு** - நடைமுறை, வழக்கம்.

– ஏற்கனவே அவர்கள் அன்புவழி வாழ்க்கையினை மேற் கொண்டிருந்ததன் பயன் என்றார்.

3. இது, அன்புணர்வு கொண்டு வாழ்தலால் ஏற்படும் உலகியல் பயனையும், உயிரியல் பயனையும் எடுத்துக் கூறியது. O

எசு அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்
நண்பெனும் நாடாச் சிறப்பு **76**

பொருள் கோள் முறை:

அன்பு ஆர்வம் உடைமை ஈனும்; அது
நண்பு எனும் நாடாச் சிறப்பு ஈனும்.

பொழிப்புரை: உள்ளத்தில் உள்ள அன்புணர்வுதான், பிறரிடம் தொடர்பு கொள்ளும் ஆர்வத்தை உண்டாக்கும். அந்த ஆர்வந்தான் பெறுதற்கரிய நட்பு என்னும் சிறப்பு உறவைப் பெற்றுத் தரும்.

சில விளக்கக் குறிப்புகள்:

1. பரிமேலழகர் முறை வைப்பில், 74ஆவது குறளாக வைக்கப்பெற்றுள்ள இது, இங்கு 76-ஆவது குறளாக, கருத்து நிரல்நிறை கருதி வைக்கப்பெற்றுள்ளது.

2. **ஈனுதல்:** உண்டாக்கிப் பெற்றுத் தருதல், உண்டாக்குதல்.

3. **ஆர்வம்:** விருப்ப எழுச்சி.

4. **உடைமை :** புறத்துச் செலுத்தும் உரிமை. இங்கு உடைய தன்மை.

5. **நண்பு :** நட்பு. 'நள்' என்னும் வேரடியாகப் பிறந்த சொல். நள்ளுதல் - பொருந்துதல் - இணைதல் - கூடுதல்.

6. **நாடாச் சிறப்பு:** பெறுதற்கரிய சிறப்பு. நாடிப் பெற முடியாமல், தானாக மனவுணர்வினால் வந்து பொருந்தும் சிறப்பு உறவு. 'செயற்கரிய' (181) என்றும், உணர்வுதான் நட்பாங்கிழமை தரும்' (785) என்றும் கூறுவார், இவரும்.

7. ஆருயிரிடத்திலுள்ள அன்புணர்வுதான், ஏற்கனவே தனக்குப் பொருந்தியிருந்த உயிர்களிடத்துத் தொடர்பு கொள்ளும் ஆர்வத்தை உண்டாக்குகிறது; அந்த ஆர்வத்தின் அடிப்படையில்தான், அது தனக்கு அகத்தானும் புறத்தானும் உகந்த நட்புணர்வுள்ள உயிர்களை நாடிக் கண்டு பிடிக்கிறது என்க.

8. எய்தப்பெறும் சிறப்புகளுள் நட்பு என்பதும் ஒன்று என்றார். O

எஎ. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம். 77

பொருள் கோள் முறை :

என்பு இலதனை வெயில் போல,
அன்பு இலதனை அறம் காயுமே.

பொழிப்புரை : எலும்பில்லாத வெறும் தசையுடலிகளை வெயில் காய்ந்து வருத்துவது போல், அன்பில்லாத வெறும் உடம்புயிர்களை அறவுணர்வு காய்ந்து வருத்தும்.

சில விளக்கக் குறிப்புகள்:

1. **என்பு இலதனை :** எலும்பில்லாத வெறும் தசையுடல் கொண்ட புழுப் போன்றவற்றை.
2. **வெயில் காயும் போல:** வெயில் காய்ந்து வருத்துவது போல்.
3. **அன்பு இலதனை அறம்:** அன்பில்லாத வெறும் உடம்புடைய மக்களை அறவுணர்வு காய்ந்து வருத்தும்.

– அன்பில்லாதவர்களை முன்பே (71) என்பு தோல் போர்த்த வெறும் உடம்பு என்றார்.

– எனவே எலும்பற்ற தசையுடலிகள் வெயிலால் காய்ந்து துன்புறுதலைப் போல், அன்பு இலாத இவர்களும் **பொதுமை நலம் சார்ந்த அறவுணர்வால்** மனத்தானும், பிற வாழ்வியல் நிலைகளானும் துன்புறுவர் என்றார்.

என்னை? **அன்பில்லாத உணர்வு** தன்னலம் சார்ந்தது (72); உண்மை, நேர்மை, நடுநிலைமை, ஒழுக்கவுணர்வு முதலிய பண்புகளற்றது (45) (992); பிறர் மேல் பொறாமை கொள்வது (35); பிறர் பொருளுக்கு ஆசைப்படுவது (35); தனக்குப் பிடிக்காதவர் மேல் எப்பொழுதும் உள்ளத்தே சினம் வைத்துக் கொண்டே இருப்பது (35); பிறரிடம் இனிமையாகப் பேசாமல் கடுகடுப்பாகவே பேசுவது (35); எப்பொழுதும் அவ்வுள்ளத்தில் தீயவுணர்களே நிரம்பி இருப்பது (35); பிறர் துன்பம் கண்டு இரக்கம் கொள்ளாதது (71); யாரிடமும் நட்புக் கொள்ள விருப்பம் இல்லாதது (74); பிறர் விரும்பி நட்புக் கொள்ளினும், அதைப் பேணிக் கொள்ளாதது (807); அன்பில்லாதவர்கள் கோழைகளாய் இருப்பதால், அவர்கள் துணிவான எச்செயலையும் செய்ய இயலாது (76); பிறர்க்குக் கொடுமை செய்தேனும் பொருளை ஈட்டுவது (755); அந்நெஞ்சில் அருளே இராது (757); அவர்களிடம் சான்றாண்மை இராது (983); எல்லாவற்றுக்கும் மேலாக அவர்கள் வாழ்வில் மலர்ச்சியே இராது(78).

அதேபோல், **அறவுணர்வு** என்பது பொது நலம் சார்ந்தது (72); உண்மையானது; நேர்மையானது; பிறர் மேல் நட்புக் கொள்ள ஆர்வமுடையது (76); பிறர் ஆக்கம் கண்டு மகிழ்வது (162); பிறர்க்குத் துன்பம் தராதது (157); (204) சினத்தைத் தவிர்ப்பது (136); பிறரிடம் இனிமையாகப் பேசுவது (93), (96) பிறர்மனை விழையாதது (142), (147), (148), (150); பிறர் பொருள் விரும்பாதது (173), (179); புறங்கூறாதது (181), (182), (183), (185), (189); பிறர்க்கு ஈந்து மகிழ்வது (228); பிறர்பால் அருள் கொள்வது (242), (757); தீதற்ற நேர்மையான வழியில் பொருளை ஈட்டுவது (754); பழிக்கு நாணுவது

(1018); ஏழைமைப் படினும் தீய வழியில் பொருளீட்டலைத் தவிர்ப்பது (1047).

– இனி, அன்பில்லாதவர்களை அறம் காயும் - சுடும் - துன்புறுத்தும் என்பது ***'தன் நெஞ்சறிவது பொய் யற்க; பொய்த்த பின் தன் நெஞ்சே தன்னைச்சுடும்' (293)*** *- என்பது போன்றதோர் உருவகம்* (Metaphor).

அன்பிலாதவர்களுக்கு அகத்தானும், புறத்தானும் நேரும், மனவியல், வாழ்வியல் தாக்கங்களையும், துன்பங்களையும் அவ்வாறு கூறினார் என்க. இவ்வாறு கூறுவது, கருத்துகளைப் படிப்பார் நெஞ்சில் நன்கு பதிய வைக்கும் ஒருவகைச் செய்யுள் உத்தி என்க.

– இதுபோல் இந்நூலுள் பற்பலவிடங்களில் பரவலாக நூலாசிரியர் கூறியுள்ளமை காண்க.

'வித்துமிடல் வேண்டும் கொல்லோ' (85)
'அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்' (121)
'அறம் பார்க்கும் ஆற்றின் நுழைந்து' (130)
'தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்' (138)
'செய்யவள் தவ்வையைக் காட்டி விடும்' (167)
'அழுக்காறு எனஒரு பாவி திருச்செற்றுத்'
'தீயுழி உய்த்து விடும்' (168)
'வெஃகின், குடிபொன்றிக் குற்றமும் ஆங்கே தரும்' (171)
'விறல் ஈனும் வேண்டாமை என்னும் செருக்கு' (180)
'சாதல், அறம் கூறும் ஆக்கம் தரும்' (183)
'சீர்மை சிறப்பொடு நீங்கும்' (195)
'மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு' (204)
'தீப்பிணி தீண்டல் அரிது' (227)
'கை கூப்பி எல்லா உயிரும் தொழும்' (260)
'மன்னுயிர் எல்லாம் தொழும்' (260)
'பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும்' (271)
'படிற்றொழுக்கம் ஏதம் பலவும் தரும் (275)
'உலகம் பழித்தது (280)
'களவு வீயா விழுமம் தரும்' (284)
'அறம் போல நிற்கும்' (288)
'சினம், இனமென்னும் ஏமப் புணையைச்சுடும்' (306)

'பிறவினை எல்லாம் தரும்' (321)
'நாள், உயிர் ஈரும் வாள்' (334)
'அவா நீப்பின், அந்நிலையே பேரா இயற்கை தரும் ' (390)
'இனநலம் எல்லாப் புகழும் தரும்' (457)
'தேரான் தெளிவும். . . தீரா இடும்பை தரும்' (510)
'வேறாக நினைப்பானை நீங்கும் திரு' (519)
'கடுமொழியும். . . அடுமுரண் தேய்க்கும் அரம்' (567)
'மடிமை. . . அடிமை புகுத்தி விடும்' (608)
'மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்
தாளுளாள் தாமரையி னாள்' (617)
'முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்' (619)
'வினைநலம் வேண்டிய எல்லாம் தரும்' (651)
'இடைக்கொட்கின் எற்றா விழுமம் தரும்' (663)
'வினை, இன்பம் பயக்கும்' (669)
'பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்' (753)
'பொருள் செறுநர் செருக்கறுக்கும் எஃகு' (759)
'உள்ளினும் உள்ளம் சுடும்' (799)
'உட்பகை... ஏதம் பலவும் தரும்' (885)
'ஒளி தொழுது ஏத்தும் உலகு' (970)
'சிறுமைதான் குற்றமே கூறி விடும்' (980)
'அறம் நாணத் தக்கது' (1018)
'நிலம் புலந்து இல்லாளின் ஊடி விடும்' (1039)
'நிலமென்னும் நல்லாள் நகும் (1040)
'நல்குரவு... தொல்வரவும் தோலும் கெடுக்கும் (1043)
'கரவென்னும் பார்தாக்கப் பக்குவிடும்' (1069)
'செம்மாக்கும் கீழ்' (1074)
'கொல்லப் பயன்படும் கீழ்' (1078)
'வடுக்காண வற்றாகும் கீழ்' (1079)
'நடுங்குதுயர் செய்யல மன்இவள் கண்' (1086)
'காமநோய் செய்தஎன் கண்' (1175)
'கொண்கன் முயக்கற்றம் பார்க்கும் பசப்பு' (1186)
'உயிருண்ணும் வேலை நீ ... பொழுது' (1221)
'கொடியார் கொடுமை உரைக்கும் ...

தொல்கவின் வாடிய தோள்' (1234)

'கண்ணும்... என்னைத் தின்னும்' (1244)

'பிரிந்தவர் பின் செல்வாய்... நெஞ்சு' (1246)

'பணிமொழி... பெண்மை உடைக்கும்' (1258)

ஆகிய இடங்களில் எல்லாம் ஆசிரியர் கையாண்ட உத்தி போன்றதே **அன்பிலதனை அறம் காயும்'** என்றதும்.

இதனை மட்டும் - இங்கு மட்டும் - பரிமேலழகரும் அவர் சார்ந்த வேதமதக் கொள்கையை ஒப்பிய உரையாசிரியர் பலரும், 'அன்பிலாத உயிரை **அறக் கடவுள் காயும்'** என்றது, அவர் வேத மதத்துற்கு வலிமை கூட்டவே என்க. ஒவ்வொரு பண்பிற்கும் பயனுக்கும் தெய்வங்கள் கற்பிப்பது ஆரியவியல் என்க.

---- இனி, பாவாணரும் 'அறத்தெய்வம்' என்றதும் பரிமேலழகரை அடியொட்டியே என்க'

--- இனி, அன்பில்லாதவர்கள் இயல்பாகவே ஒரு வகைக் குறையுணர்வுடையவர்களாகவே உள்ளதால், எதிலும் அவர்கள் நிறைவையும், இன்பத்தையும் காண மாட்டாதவர்களாகவே இருப்பர். அவர் நம்பிக்கையுணர்வற்ற, தோல்வி மனவுணர்வு கொண்ட, துன்பியல் உணர்வுடைய வெறுக்கை (விரக்தி)யாளர் (Pessimist) களாகவே இருப்பதால், எப்பொழுதும் துன்பவுணர்வே கொண்டிருப்பர். எல்லாக் கருத்துகளும் எதிர்க் கருத்துகளாகவே அவர்களுக்குத் தோன்றும். இஃது அவர்களுக்கிருக்கும் **அகத்தாக்கம்.**

அன்பில்லாதவர்களுக்குத் துணையிருக்காது; எனவே அவர்களுக்கு ஆள்வலிவிருக்காது (862); அன்பிலார் எந்த அரசியல் பணிகளுக்கும் அமர்த்தப்பெறார் (513), (681), (682). எனவே அவர்களுக்கு அதிகார வலிவும் இராது. இனி, அன்பில்லாதவர்கள் கோழைகளாகவே இருப்பதால், அவர்களால் துணிவான எந்தச் செயலையும் செய்ய இயலாது (76); அன்பில்லாதவர்கள் சூழ்ச்சியாலும், ஏமாற்றாலும், தந்திரத்தாலும் சட்டிய பொருளைப் பிறர் பறித்துக் கொள்வார்கள். (1009)

--- இவையெல்லாம் அவர்களுக்கு வரும் **புறத்தாக்கங்கள்**

இவ்வகையில், அன்பிலாதவர்கள் படும் துன்பங்களைத்தாம் அறம் காயும், துன்புறுத்தும் என்றார். மேலும், அன்பில்லாதவர்களை மற்றைய பொதுவுணர்வாளர்கள் மதியாததும், அவர்களுக்குத் துணை நில்லாததும் அறக்கொடுமை என்க.

மற்றபடி, அறக்கடவுள், அறத்தெய்வம், தர்மதேவதை என்பவெல்லாம்

ஆரிய வியலின் மக்களை அச்சுறுத்தச் செய்யும் கற்பனையே என்க.

அவர்கள் அறக்கடவுளாகிய தர்மதேவதையை இவ்வாறு வண்ணிக்கின்றனர்.

அஃதாவது, தர்மதேவதை என்பது பிரம்மாவின் வலது மார்பில் பிறந்தது. பொன் ஊழி என்னும் முதல் ஊழியில் (யுகத்தில்) நான்கு கால்களையும் நிலத்தில் ஊன்றியிருந்தது. வெள்ளி ஊழி என்று கூறப் பெறும் இரண்டாவது ஊழியில் மூன்று கால்களுடனும், பித்தனை ஊழி எனப்பெறும் மூன்றாவது ஊழியில் இரண்டு கால்களுடனும், இரும்பு ஊழி எனப்பெறும் நான்காவது ஊழியில் ஒரு காலுடனும் நடக்கும் என்றும் ஆரியத் தொன்மங்களுள் (புராணங்களுள்) சொல்லப் பெற்றுள்ளது.

(The goddes of virtue born from the right breast of Brahma. The goddess is described as placing four feet on the earth in the golden age; three in the next or silver age; two in the brazen; and only one in the iron age - Winslow's Tamil and English Dictionary)

இனி, இது வெள்ளை நிறமும், நான்கு கொம்புகளும் உயர்ந்த திமிலும் நிலத்தில் படியும் வாலும் உள்ள எருதாகவும், இது திருமாலின் மார்பில் பிறந்ததாகவும், சிவனுக்கு இஃது ஊர்தியாகவும் சில நூல்களில் வண்ணிக்கப்பெறுகிறது.

இவற்றிலிருந்தே இப் புராணிகர்தம் புளுகினை அறியலாம்.

மேலும், பரிமேலழகர்களுக்குத் திருக்குறள் முழுவதும் ஆரியவியலின்படி வகுக்கப்பெற்ற அறநூல் என்று ஆங்காங்கே, 'வாய்ப்பு கிடைத்த விடங்களிலெல்லாம் இட்டுக் கட்டிக் கூறுவது வழக்கம் என்க.

4. இதில் அன்பிலார்க்குற்ற தீமைகளும் துன்பங்களும் சுட்டப் பெற்றன என்க. O

எஅ. அன்பிற்கும் உண்டோ அடைக்கும்தாழ் ஆர்வலர் புன்கணீர் பூசல் தரும். 78

பொருள் கோள் முறை :

அடைக்கும் தாழ் அன்பிற்கும் உண்டோ;
ஆர்வலர் புன்கண் நீர் பூசல் தரும்.

பொழிப்புரை : (வெறுப்பு விருப்புகள், பொறாமை பொருமல்கள், ஆசை அங்காப்புகள், இழிவு ஏக்கங்கள், காரண கமுக்கங்கள் முதலிய உணர்வுகளைப் பிறர்க்குத் தெரியாமல் உள்ளத்தில் மறைத்து வைப்பதைப்

போல்) அன்புணர்வுக்கும் மற்றவர் அறியாதபடி அடைத்துத் தடுக்கும் ஒரு தாழ்ப்பாள் உண்டோ? இல்லை. அன்பார்வம் உள்ளவர்கள் பிறர் துயர்க்காக வருந்துகையில், அவர்கள் கண்களிலிருந்து வழியும் எளிய கண்ணீரே அவரன்பை மற்றவர்க்குப் புலப்படுத்திவிடும்.

சில விளக்கக் குறிப்புகள்:

1. **அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்:**

அன்பிற்கும் என்றதால், பிற மன உணர்வுகளைப் பிறர் அறியா வண்ணம், மனம் மறைத்து வைப்பதைப் புலப்படுத்தினார்.

அவ்வுணர்வுகளில் சில குறிக்கப் பெற்றன.

– அன்பில்லார் அன்புள்ளார் போல், உரை, செயல் முதலியவற்றால் கரவின் ஒழுகலாம். ஆனால், அன்புள்ளவர், அன்பில்லார் போல், அதனை அடக்கி நிற்றல் இயலாது என்றார். அவ்வாறு செய்யின் அவர் கண்களில் பூத்து வரும் புல்லிய நீரே அதைப் புலப்படுத்தி விடும் என்றார்.

— **அடைக்கும் தாழ்:** தாழ்ப்பாளிட்டு அடைக்கும் கதவு.

1251 - ஆம் குறளிலும், நிறை காத்தலுக்கு நாணத்தைத் தாழாகக் கொண்டு அடைக்கும் கதவை உவமை கூறினார்.

– இப் பயன்படுத்தத்தையும் விரிவான விளக்கத்தையும், 'உரனென்னும் தோட்டியான்' என்னும் 24- ஆம் குறளுரையில் காண்க.

2. **ஆர்வலர்:** அன்பு செய்யும் ஆர்வம் உடையவர். முன்னும் (76) 'அன்பீனும் ஆர்வம்' என்றார்.

3. **புன் கணீர்:** புன் கண் நீர் - புல்லிய - எளிய - கண்ணீர். பிறர் துயர்க்கு வருந்துபவர் கண்களிலிருந்து வழியும் எளிய கண்ணீர் - எளிமை தோன்ற 'புன் கண் நீர்' என்றார்.

இதைப், 'பொழிகின்ற புல்லிய கண்ணீர்' என்று பரிமேலழகர் பொருளுரைத்தது பொருந்தாது; பொழிதல், அளவிற் பெரிதாகக் கொட்டுதல் ஆகையால். பொழிதல் மழை, அருவி, தொடர்ந்த பேரழுகை - இவைக்கே பொருந்ததும் என்க.

பாவாணரும் 'கண் சிந்தும் நீர்' என்றதும் பொருந்தாது. சிந்துதல் - வலிதின் வெளிப்படுத்தல். 'காரம் பொறாது கண்ணீர் சிந்துதல்,' 'மூக்கைச் சிந்துதல்' - முதலியவற்றுக்கே பொருந்தும் என்க.

4 **பூசல் தரும்:** மற்றவர்கட்குப் புலப்படுத்தும். — பரிமேலழகர்; 'எல்லாரும் அறியத் தூற்றும்' என்றதும், பாவாணர் 'எல்லாரும் அறியப் பறை சாற்றுதல்' என்றதும், 'பூசல்' என்பதற்கு 'ஊரார் கூறும் அலர் மொழி' (1237) என்னும் பொருள் நினைந்து கூறியவை. ஆயினும் இடம் கருதி அச் சொற்கள் பொருந்தா வென்க.

தூற்றுதலும், சாற்றுதலும் வேறுவேறு வினையின. குறட்பாக்கள் 200, 711, 712 ஆகியவை கருதுக.

5. மனத்தின்கண் உணர்வுகளை ஒளித்து, மறைத்து வைப்பதை 928, 980, 1161, 1253, 1318, - ஆகிய பாக்களில் காண்க.

6. இதன்வழி உள்ளத்தின் அன்புணர்வை அறிந்து கொள்ளும் வழியையும் வாய்ப்பையும் கூறினார்.

7. பரிமேலழகர் முறை வைப்பில் 71-ஆவது குறளாக வைக்கப் பெற்றுள்ள இது, பொருள் நிரல் நிறை கருதி, 78-ஆவதாக இங்கு வைக்கப் பெற்றது.

O

எசு. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு 79

பொருள் கோள் முறை :

அன்பிலார் எல்லாம் தமக்கு உரியர்;
அன்புடையார் என்பும் பிறர்க்கு உரியர்.

பொழிப்புரை : உள்ளத்தே, இயற்கையாகவே, அன்புணர்வு இல்லாதவர், தமக்கும் தம்மைச் சார்ந்த பிற உலக உடைமைகளுக்கும் அவற்றின் துய்ப்பு நலன்களுக்கும் தாமே உரியவராகக் கருதிச் செயல் கொள்ளுவார். ஆனால், அன்புடையவரோ, அவ்வுடைமைகளால் மட்டன்றித் தம் உடம்பாலும் உடம்பினது எலும்பாலும்கூடப் பிறர்க்குத் தாம் உரியவராகக் கருதிச் செயல்படுவர்.

சில விளக்கக் குறிப்புகள்:

1. பரிமேலழகர் முறை வைப்பில் 72-ஆவது குறளாக வைக்கப் பெற்றுள்ள இது, பொருள் நிரல் நிறை கருதி, 79-ஆவதாக, இங்கு

வைக்கப் பெற்றது.

2 **அன்பிலார் எல்லாம் தமக்குரியர்:** அன்பில்லாதவர்கள் தமக்கும், தம்மைச் சார்ந்த உடைமைகளுக்கும் அவற்றின் துய்ப்பு நலன்களுக்கும் எல்லாம் தாமே உரியவராகக் கருதிக்கொள்ளுவர்.

--- அன்பிலாரை முதலில் வைத்துப் பேசியது, அவர்கள் உலகத்துப் பெரும்பான்மையராகலான்.

--- எல்லாம் என்றது ஒருவர்க்குத் தாமும் தம் உடைமைகளாகக் கருதும் எல்லாவற்றையும் உள்ளடக்கியது.

— அவற்றுக்குத் தாமே உரியராகக் கருதிச் செயல்படுவர் என்பதால், **'தமக்கு உரியர்'** என்றார்.

3 **அன்புடையார் என்பும் பிறர்க்கு உரியர்:** மற்று, அன்புணர்வு இயல்பாக உள்ளவர்களோ, தம் உடைமைகள் அனைத்திலும் மட்டன்றித் தம் உடம்பு அளவிலும், தம் உடம்பின் எலும்பளவினும்கூடத் தாம் பிறர்க்கு உரியவராகக் கருதிச் செயல்படுவர் என்றார்.

— தமக்குரியர் என்று முன்னரே வந்ததால் 'உரிய பிறர்க்கு' என்னும் நச்சரது பாடம் கொள்ளதக்க தன்று.

— **'என்பு'** என்றது, என்பு (எலும்பு) போர்த்த உடம்பைப் பொதுவாகக் குறித்தது.

--- இனி **என்பும் உரியர்** என்றது, சிறப்பாக இயற்கை எல்லார்க்கும் பொதுமை என வகுத்த உலகியல் பொருள்களை மட்டன்றித், தனக்கே உரியதாகவும், தன் உடம்புக்கே மூலமாகவும் அமைந்துள்ள எலும்பையும் கூட, பிறர்க்கு உரிய பொருளாக அன்புடையார் கருதுவதைக் குறித்தது.

--- என்னை? - முதற்கண், அன்புடையார் தாம் வாழ்ந்திருக்கையில், உடம்பாலும், அது கொண்ட உணர்வானும் பிறர் பொருட்டாக, அவர், உழைத்ததைக் குறித்தது என்க.

--- இனி, அவர் மறைந்த பின்பும் அவரது உடம்பைத் தீயினால் சுட்டுச் சாம்பலாக்கிய அவ்வெலும்பைப் பிறர் கொண்டு, சமயவுணர் வடிப்படையில், நீரிலும், நிலத்திலும், கரைக்கவும் தூவவும் செய்யும் வகையில், அதைப் பிறர்க்குரியதாக்கியதையும், அஃது உணர்த்தியது, என்க.

--- அன்புடையார், உடம்பால் பிறர்க்குரியராவதைச் செம்பியன் (செம்பி-சிபி) என்னும் சோழ வேந்தன், தன்னகம் புகுந்த ஒரு

புறாவிற்காகத் தன் உடம்பின் தசையை அரிந்து கொடுத்ததைப் (புறம்:43) பரிமேலழகர் எடுத்துக் காட்டாகக் கூறியதையும்.

--- குமணன் என்னும் பெருங்கொடையன், தன்னைப் பாடிய பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர்க்குத் தன் தலையினைக் கொண்டுபோய்த் தன் தம்பி கைக் கொடுத்து, அதன் 'விலையினைப் பெறுக' எனக் கூறி, வாளெடுத்துத் தந்த நிகழ்வையும், (புறம்: 165);

--- பறம்பின் பாரி வள்ளல், 'பரிசிலர் இரப்பின் வாரேனென்னான் அவர் வரையன்' என்று கபிலர் பாடியதையும் (புறம்: 108), சிறந்த எடுத்துக் காட்டுகளாகப் பாவாணர் கூறியதையும், இங்குத் தமிழியல் வரலாற்று நிகழ்வுகளாகப் பொருத்தி மகிழலாம்.

--- இனி, ஆரியவியல் தொன்ம (புராணத்)திலும், ததீசி என்னும் முனிவன், தம்மவர் போரில் வெல்லுவதற்கு, அவர் படைத் தலைவன் இந்திரனிடம், தன் முதுகெலும்பையே வன்கருவி (வச்சிராய்தம்) ஆக்கிக் கொள்ள உதவினான் என்பதைப் பரிமேலழகர் உரை விளக்க ஆசிரியர் கோ. வடிவேலனாரும் (1904) உரையாசிரியர், கா. சுப்பிரமணியனார் (1928) அவர்களும் எடுத்துக் காட்டியதையும் உவந்து நினைவிற் கொள்ளலாம்.

4. இதன்வழி அன்பிலாரையும், அன்புடையாரையும் செயல்வழி வேறுபிரித்தறிய விளக்கம் கூறினார். O

அ0. அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை. 80

பொருள் கோள் முறை :

அன்பு அறத்திற்கே சார்பு என்ப, அஃதே
மறத்திற்கும் துணை அறியார்.

பொழிப்புரை : அன்பு அறத்திற்கு மட்டுமே சார்பானது என்று கூறுவர்; அது, வன்மம் அற்ற வீரத்திற்கும் துணையாக இருப்பதை அவர் அறியார்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. பரிமேலழகர் முறை வைப்பில், 76-ஆவது குறளாக வைக்கப் பெற்றுள்ள இது, இங்கு 80-ஆவது குறளாக, கருத்து நிரல் நிறை கருதி வைக்கப் பெற்றுள்ளது.

2. **அறத்திற்கே அன்பு சார்பு என்ப:** மக்கள் பொதுமை நலம் கருதும் அற உணர்விற்கும் அதன் வழியாய அறச் செயல்களுக்கும் அன்புணர்வே ஓர் இயங்குணர்வாக உள்ளது என்று கூறுவர்.

சார்பு என்பது ஒட்டி இயங்கும் ஒரு நிலை. **அன்பு சார்பு** என்றது, அன்புணர்வை ஒட்டியே - அதனை அடிப்படையாகக் கொண்டே - அறம் இயங்கும் என்பதால்.

'சார்பு' என்பதைச் 'சால்பு' என்று தருமர் பாடங் கொண்டது தகாது'

அன்பு என்பது உயிரியல்; **அறம்** என்பது உலகியல். அஃதாவது உலக இயங்கியல்.

ஆனால், உலக இயங்கியலுக்கு அறம் ஒன்று மட்டுமே அடிப்படையதாக இல்லை; வீரமும் அடிப்படையாக உள்ளதைப் பலர் அறிவதில்லை. அறம் ஒரு கருவி என்று கொண்டால், வீரம் அதன் முனையாக, இருப்பதை உணர்தல் வேண்டும். எனவேதான் மறத்திற்கும் அதுவே துணை என்றார்.

3. **மறத்திற்கும் அஃதே துணை, அறியார்:** வன்முறையற்ற வீரத்திற்கும் அன்பு துணையாக இருப்பதைப் பலர் அறியார். மறம் - வீரம் - துணிவு - முனைவு.

--- அறம் ஒரு செயலாக இயங்குவதற்கு வீரம் முனைப்பாக - முன் நடத்திச் செல்லும் ஒரு முந்துணர்வாக - இயங்குதல் வேண்டும்.

--- முந்துணர்வு - முனைவுணர்வு - துணிவுணர்வு. இஃது இல்லையென்றால், செயலில்லை. செயலுக்கு - வினைக்கு - கருமத்திற்குத் துணிவு - வீரம் - தேவையென்பதை உணர்தல் வேண்டும்.

--- எண்ணம் - துணிவு - கருமம் - என உலக இயங்கியல் முறையில் ஆசிரியர் பிறிதோரிடத்தில் (467) இதனை எடுத்துக் கூறியது, காண்க. மேலும், சில இடங்களில் (669), (671), (688) அதனையே வலியுறுத்தியும் கூறுவர்.

--- **மறம்:** வன்மம் இல்லாத வீரம் . கழகக் காலத்தில் மறம் என்னும்

சொல் வீரம் என்றே பொருள் கொண்டிருந்தது. பிற்காலத்தில் அது கொடுஞ்செயல் என்று பொருள் பெறுவதாயிற்று - என்க.

--- வன்மம் (கொடுமை, வஞ்சகம், பழிவாங்கும் உணர்வு) உள்ள வீரம் மறம் ஆகாது; அஃது அழித்தலுணர்வாம்.

--- 'மறம்' என்பதற்குக் காலிங்கர் முதலிய உரையாசிரியர் 'பாவம்' என்று பொருள் கொள்வது நேரிடையான பொருளன்று. இருபடி தாண்டிய பொருள் என்க.

--- பாவாணர் **'அறம்'** - நல்வினை என்றும், **'மறம்'** தீவினை என்றும் கூறியதும் அத்தகையதே.

-- இனி, 'அறத்திற்கு அன்பு சார்பு' என்பதற்கு அனைத்து உரையாசிரியரும் ஒத்துரை தந்து, 'மறத்திற்கும் அஃதே துணை' என்பதில் பெரிதும் மாறுபட்டும் வேறுபட்டும் நிற்பது குறிப்பிடத்தக்கது.

--- பரிமேலழகர் 'பகைவனை நட்பாகக் கருதி அன்பு செய்ய அது நீங்குமாகலின், மறத்தை நீக்குதற்கும் துணையாம் என்றார்' - என்பர். இதற்கு ஆசிரியரின், **'துன்பத்திற்குத் துணை'** (1299) என்னும் கூற்றையே துணையாக்கினார்.

--- பரிதியாரும், பாவாணரும் இதையே ஒட்டியுரைத்து அவர்க்குத் துணையாகினர்.

--- பாவாணர் மேலும், 'அன்பு மறத்திற்குத் துணை' என்பது, 'இஞ்சி பித்தத்திற்கு நல்லது' என்பது போல்வது, என்று எடுத்துக்காட்டி விளக்கினார்.

--- இதைப் 'பிணிக்கு மருந்து' என்று எடுத்துக் காட்டியும் விளக்கினார், கோ. வடிவேலனார்.

--- மறத்திற்கும் அதுவே துணை என்பதற்கு, 'மறத்தை நீக்குவதற்கும் அதுவே துணை', என்று கூறியது, நடுவு பெய்து பொருளுரைக்கும் உத்தி எனப்பெறும். 'நீக்குவதற்கும்' என்னும் சொல் நடுவே பெய்யப்பெற்றது. இதை வடநூலார் **'துமார்த்தம்'** என்று கூறுவதாகப் **'பிரயோகவிவேக நூலார்'** கூறுவர். தமிழில் இதனை, **'வருவித்துப் பொருள் கோடல்'** என்பர்.

இனி, இத்தொடருக்கு,

'தீமையை யொழிப்பதற்கும் அவ்வன்பே துணையாகும்' என்றும், 'பாவ, வீரச் செயல்களுக்கும் கூட அவ்வன்பு துணையதால் உண்டு' என்றும், 'குமுகாயத்திற்காக ஈகஞ்செய்யும், வீரவாழ்க்கைக்கும் கூட

அன்பே துணையானது' என்றும், 'ஒருயிர் அல்லது ஒரு பொருள் மீது கொண்டுள்ள அன்பே, பிறிதோருயிர்க்குத் தீங்கிழைத்தற்குக் காரணமாதலால் அன்பே மறத்திற்கும் துணையென்றார்' என்றும், உரையாசிரியர் பலரும் பலவாகப் பொருளுரைத்தனர், ஆயினும், அவர்கள் உரையெல்லாம் 'சுற்றியும் வளைத்தும், சுவரில் முட்டியதே' ஆகும்.

– மறம் என்பது கொடுமையற்ற வீரம், மனத்துணிவு, முனைப்புணர்வு, செந்துணிவு என்றுதான் பொருள்படும். ஆகலின், அது, தீயுணர்வோ, கரிசு (பாவ) உணர்வோ, பகையுணர்வோ, பிறரை அழிக்கும் உணர்வோ அன்று. அது மக்கள் இயங்கியலுக்குத் தேவையான - இன்றியமையாத - ஓர் உணர்வே என்க. மக்கள் தவிர்க்கக் கூடிய, வெறுக்கக் கூடிய உணர்வாக அதைக் கற்பனை செய்வதும், அதை விலக்குவதற்கும், நீக்குவதற்கும் அன்பு தேவை என்பதாகப் பொருள் கொள்வதும், உலக இயங்கியல் உணராதவர் கூற்றாம் என்று கூறி விடுக்க.

அதைப் 'பிணி போல்வது', 'பாவம் செய்வது', என்று கூறுவதெல்லாம் அடாதது.

ஒருவர் வாழ்தற்கு அறம் எந்த அளவு தேவையோ, அந்த அளவு மறமும் தேவை என்பதை உணர்த்துவதும், ஆனால் அன்பே அவையிரண்டிற்கும் ஒட்டியியங்கும் உணர்வாக அடிப்படை உணர்வாக இருத்தல்வேண்டும் என்பதையே இக் குறள்வழி ஆசிரியர் உணர்த்தினார் என்க.

– என்னை? 'அறத்திற்கும் அன்பு சார்பு என்பதைப் பலர் அறிந்திருப்பர்! ஆனால், மறத்திற்கும் அது துணையாதல் வேண்டுவதைப் பலர் அறியாதிருப்பர்; எனவே அஃது, உணரப்பெற வேண்டுவது' என்பதே அவர் இதன்வழிக் கூறியது, என்க.

– இன்னும் இதனைக் கீழ்வரும் எடுத்துக் காட்டுகளால் விளக்கமாகக் காட்டுவாம்.

'அறம்' என்பது நம் கையிலுள்ள கனி' போல்வது; 'மறம்' என்பது இன்னொரு கையிலுள்ள கூரிய கத்தி' போல்வது.

அறமாகிய கனியைப் பிறர்க்கும் பயன்படச் செய்யவேண்டுமாயின், நமக்கு அன்புணர்வு இயல்பாக இருத்தல் வேண்டும்.

அதே போல், நம்மிடமுள்ள கத்தியை நம் பொருட்டாகவோ, பிறர் பொருட்டாகவோ, வன்மைக்காக அல்லாமல் நன்மைக்காகப் பயன்படுத்த வேண்டுமானாலும், அதற்கும் அன்புணர்வு அடிப்படையாக இருத்தல் வேண்டும் என்பதே இக்குறளின் கொள்பொருள் என்க.

நமக்கு மறம் வேண்டும்; ஆனால் மறத்திற்குத் துணையாக அன்பு வேண்டும். இதுவன்றி மறமே வேண்டாம் என்று இக்குறள் உரை தரவில்லை - என்க.

அன்பில்லாதது வன்பு; அன்பில்லாமல் அறம் இயங்காது.

அதுபோல், மறம் இல்லாதது கோழைமை; அதுவும் அன்பில்லாமல் இயங்கக் கூடாது - என்றார்.

– 'அன்பு' இல்லாமல் 'அறம்' இயங்காது என்பதால்தான், அறத்திற்குச் **'சார்பு'** என்றார்.

அதுபோல், அன்பு இல்லாமல் 'மறமும்' இயங்கக் கூடாது என்பதால்தான், 'அது மறத்திற்கும் **துணை**' என்றார்.

'சார்பு' என்பது இயற்கையான தொடர்பைக் குறித்தது. அது முன்னரே இருப்பது.

துணை என்பது செயற்கைத் தொடர்பைக் குறித்தது. அஃது, உலக இயங்கியலுக்காக ஏற்படுத்திக் கொள்ளவேண்டுவது.

3. இஃது, அன்புடைமை உயிரியலுக்கும் உலக இயங்கியலுக்கும் தேவையாந் தன்மையை விளக்கிக் கூறியதாகும், என்க. ○

அ-2- இல்லறவியல்

அ-2-5 விருந்தோம்பல் - 9

அதிகார முன்னுரை:

'விருந்தே தானும் புதுவது' என்றார் தொல்காப்பியர். (தொல் - பொருள் -237). **புதியது, புதியவர், புதிய வரவு, புதிய உணவு வகை** முதலிய அனைத்தையும் 'விருந்து'என்னும் அடை கொடுத்துக் கழகக் காலத் தமிழர் வழங்கி யுள்ளதைக் கழக நூல்கள் நெடுகலும் காணலாம்.

புதுவெள்ளம் வருவதை **'விருந்துபுனல்'** (பரி : 6-40) என்றும், அப் புதுப புனல் கடலில் புகுவதை **'வரும்புனல் விருந்து அயர்கடல்'** (பரி: 10-29) **என்றும் அற்றைப் புலவர்கள் கூறி மகிழ்ந்திருக்கின்றனர். 'விருந்திற் புன்கணோ உடையர்' (புறம் : 46-7) என்பது, 'முன்பு அறியாத புதியதொரு வருத்தத்தை உடையவர்'** என்று பொருள் தரும் நூறும்தொடர்.

'விருந்து' என்னும் சொல் மூன்று பொருள்களைக் குறித்ததாகிறது.

முதற்பொருள், **'புதியது'** என்பது.

அதன் வழி, இரண்டாவது பொருள், தம் இல்லத்திற்கு வரும் **'புதியவர்'** என்பது.

அதன் பொருள் வழிப் பிறந்த மூன்றாவது பொருள், புதியவராக வந்தவர்க்குப் படைக்கும், புதிய உணவு வகைகள் கொண்ட **சிறப்புணவு** என்பதைக்

குறிக்கும்.

--- இந்த மூன்று பொருள்களிலும் கழக இலக்கியங்கள் **'விருந்து'** என்னும் சொல்லைப் பரவலாகக் கையாண்டுள்ளன.

இங்கு, **'விருந்தோம்பல்** என்பது, தம் இல்லம் நாடி, அல்லது தம்மையோ, தம் இல்லத்துள்ளவர்களையோ தேடி வரும் **புதியவர்களை ஓம்புதல் - பேணுதல்** - என்று பொருள் பெறும்.

அவ்வாறு புதியவர்கள், தம் இல்லத்திற்கு வருகையில், என்றும் தாம் வழக்கம் போல் உண்ணும் உணவை அவர்க்குப் படைக்காமல், அவர்தம் பெருமையும் அருமையும் கருதி, தம் அன்பின் மிகுதியாலும், பண்பின் தகுதியாலும், அவர்க்குச் சிறப்புணவைச் செய்து படைத்தல், அற்றை இல்லக் கிழத்தியரின் இயல்பாக இருந்ததைக் கழக இலக்கியங்கள் நமக்குப் பல வகையாலும் உணர்த்துகின்றன. எனவே, புதியவர்களாகிய 'விருந்து'க்குப் படைத்த சிறப்புணவும் **'விருந்து'** எனப்பெற்றதாகல் வேண்டும்.

இனி 'விருந்து' என்னும் சொல் முதலில் புதியவர்களையே குறித்து, உறவினர்களைக் குறிக்காமலிருந்து, பின் அவர்களையும் குறித்ததை 'வன்புலக் **கேளிர்க்கு** வருவிருந் தமரும்' (புறம் : 42-17) என்னும் குறிப்பிலிருந்து அறிந்துகொள்ள முடிகிறது.

இல்லறக் கிழத்தியின் மாண்புகளுள் ஒன்றாக **'விருந்து புறந்தரு தலை'** (விருந்து ஓம்புதலை)த் தொல்காப்பியம் கூறுகிறது.

'கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியல் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்'

தொல்.பொருள்: 150-3.

'விருந்தோம்புதல்' பண்டைக் காலத்துத் தமிழரிடையே பெரும் பண்பாகவும், பேரறமாகவும் இருந்தது, கழக இலக்கியங்களால் தெரியவருகிறது. அதுவும், அவ்வுணர்வு இல்லற மகளிரிடத்துப் பேருணர்வாக இருந்ததையும் உணர்தல் வேண்டும். விருந்து வருவதை மிகவும் விரும்பினர் அக்காலப் பெண்டிர்.

'விருந்து விருப்புறூஉம் பெருந்தோட் குறுமகள்'

நற்: 221-8.

'எமக்கே வருகதில் விருந்தே!'

நற்: 120 -10

'விருந்தெதிர் பெறுகதில் யானே என் ஐயும்!'

புறம் : 306-5

(யானும் என் கணவரும் விருந்தைப் பெற விழைகிறோம். 'தில்' விழைவின்கண் வந்த அசைச் சொல்).

காக்கை கரைந்தால் விருந்து வரும் என்பது ஒரு நம்பிக்கை. பண்டைக்கால இல்லறத்தலைவி ஒருத்தி, விருந்துவரக் கரைந்த காக்கைக்கு (வெளியூர் சென்ற கணவனை எதிர்பார்த்து) வெண்ணெல் வெஞ்சோற்றில் ஆநெய் கலந்து, ஏழு கலத்தினும் மிகுதியாகத் தந்ததைக் கீழ்வரும் பாடல் பகர்கிறது.

'பல்ஆ பயந்த நெய்யின், தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
எழுகலத்து ஏந்தினும் சிறிது எள்தோழி

.....

விருந்துவரக் கரைந்த காக்கையது பலியே! குறுந். 210.

விருந்தினரைப் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் அவர்கள் வரவேற்றதை,

'நல்மனை நனிவிருந்து அயரும்'
(அயரும் - விரும்பும்) நற் :-280-9

'நல்விருந்து'

அகம் : 205-13

'நனிவிருந்து'

குறுந்: 155-6

'ஒள்ளிய விருந்து'

புறம்: 266-11

எனவரும் பாடற்பகுதிகளாலும், விருந்து என்னும் சொல்லுக்குத் தரப்பெற்ற அடைச்சொற்களாலும் உணரலாம்.

பகலிலும், மாலையிலும், ஏன், நள்ளிரவிலும் கூட விருந்தினர் வந்தால் அவர்களை, அவர்கள் மிகுந்த உவப்புடன் ஓம்பினர்.

'எல் விருந்து' (எல் – பகல்) -ஐங்: 396-5

'மாலை நனி விருந்து அயர்மார்' குறுந்: 155-6

'அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்

முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறுமகள்'

நற்: **142 9 11**

சமைத்து உண்பதே இயன்றவரை பிறரொடு பகிர்ந்து உண்பதற்குத்தான் என்று அவர்கள் கருதினர்.

'நட்டார்க்கும் நள்ளா தவர்க்கும் உளவரையால்
அட்டது பாத்துண்டல் அட்டுண்டல்'

(பாத்துண்டல் - பகிர்ந்துண்டல்) - நாலடி: 94

'பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை' (322)

என்றார் நூலாசிரியரும். 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' **(புறம்-18-19)** என்றார் பிறரும்.

'வருவிருந்து ஓம்பி' (கலி: 8-21)

'செல்விருந்து ஆற்றி' (அகம்: 203-16)

மகிழ்வதையே, அவர்கள் அன்றாட வாழ்வில் ஒரு பகுதியாகக் கருதினர் என்றுரைப்பதில் குறையில்லை.

புதியராக வந்த விருந்தினர் ஒருவேளையன்று, ஒரு நாளன்று, கூடுதலாகச் சில நாள்களும்கூடத் தங்கியிருந்தனர். அப்பொழுதும் அவர்களை அவர்கள் விரும்பினர்.

'இல்லுறை நல்விருந்து அயர்தல்' அகம்: 300-21.

'ஒரு நாள் செல்லலம் இருநாள் செல்லலம்
பல நாள் பயின்று பலரொடு செல்லினும்
தலைநாள் போன்ற விருப்பினன்'

புறம்: 101-1 -3.

சிலர், அடிக்கடி, நாள்தோறும் விருந்தினர் வரினும், அவ்வாறு வருந்திவரும் புதியவர்களை அவர்கள் மகிழ்வுடன் ஓம்பினர்.

'விருந்து ஒழிவு அறியாப் பெருந்தண் பந்தர்
வருந்தி வருநர் ஓம்பி' அகம்: 353: 17-18.

விருந்தினர்க்கு, இல்லுறை தலைவியர் சமையலறையில் மகிழ்வுடனும் பல்வகைச் சிறப்புடனும் விருந்துணா செய்ததைக் கழகப் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

இரவில் வந்துவிட்ட நல்ல புகழ்மிக்க விருந்தினர் ஒருவர்க்கு, ஓர் இல்லக் கிழத்தி உணவு அணியம் செய்த பாங்கு இது:

'எல்லி வந்த நல்லிசை விருந்திற்கு
கிளர் இழை அரிவை நெய்துழந்து அட்ட
விளர்ஊன் அம்புகை எறிந்த நெற்றி
சிறுநுண் பல்வியர் பொறித்த
குறுநடைக் கூட்டம் வேண்டு வோரே!' நற்: 41-6-10.

(எல்லி - இரவு; அட்ட - சமைக்க)

விருந்தினர்க்கு விருந்துணாச்சமைக்கின்ற கூடுதல் பிணக்கிடையிலும், விருந்தினர் வந்ததைத் தொல்லையாகக் கருதாமலிருந்ததுடன், மேலும் விருந்தினர் வருவதை மிகழ்வுடன் விரும்பும் தலைவி ஒருத்தியின் மனப்பாங்கு இது:

'புகையுண்டு அமர்த்த கண்ணள் தகைபெறப்
பிறைநுதல் பொறித்த சிறுநுண் பல்வியர்
அம்துகில் தலையினில் துடையினள், நப்புலந்து
அட்டிலோளோ அம்மா அரிவை
எமக்கே வருகதில் விருந்தே!'

நற்: 120-6-10.

ஏழைமையராக இருந்தாலும் விருந்து வருவதை விரும்பவும், வந்தவிடத்து அவர்களைத் தம்மால் இயன்ற அளவு ஓம்பவும் நாலடியார் நல்லுரை பகர்கிறது:

'இம்மி யரிசித் துணையேனும் வைகலும்
தம்மில் இயைவ கொடுத்து உண்மின்'

நாலடி: 94

வறுமை கருதியோ, வேறு இயலாமை கருதியோ, விருந்தினரை வரவேற்காத அல்லது விருந்துக்கு ஒளிந்து கொள்ளும் இல்லற வாழ்வைப் பண்பாடற்ற வாழ்க்கை என்று அற்றையர் இகழ்ந்தனர்.

'ஒள்ளிய விருந்து கண்டு ஒளிக்கும்
திருந்தா வாழ்க்கை'

புறம்: 266-11

ஆற்றா வறுமையிலும் தன் இல்லம் தேடி வந்த புதிய விருந்தினரை, ஏழைப் பாணன் (பாடிப் பிழைப்பவன்) ஒருவன், முதல் நாள் தன்னிடமிருந்த பழைய இரும்பு வாளை அடகுவைத்துப் பேணியதையும், இரண்டாம்

நாள் தன்னிடமிருந்த, தான் பாடிப் பிழைத்து வந்த சிறிய யாழையும் பணையம் வைத்துப் புரந்ததையும் கீழ்வரும் பாடல் கூறுகிறது.

'நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைய பழவாள் வைத்தனன் இன்று, இக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணையம்' புறம்: 366-5-7

(நெருநை - நேற்று; இரும்புடைப் பழவாள் - இரும்பினாலான பழையவாள்; பணையம் - ஈடு (அடகு)

இல்லறவழுத்தத்தில் அயர்ச்சி தோன்றாதிருக்கவும், மகிழ்ச்சி ஊன்றவும், அக்கால் மக்கள் விருந்தினரை எதிர்கொண்டு ஓம்பினர். அதேபோல் பிறரது இல்லங்களுக்கும் விருந்தினராகச் சென்றனர். இவ்வாறு ஒருவர்க்கொருவரான ஈடுபட்டால் இரு நிலையினர்க்கும் மகிழ்ச்சி விளைவது இயல்பாம் என்க.

விருந்தோம்புதலில், இல்லறத் துணைவியருக்கே மிகுதியும் பங்கும் பொறுப்பும் ஈடுபாடும் இருப்பதால், அவர்களே அப்பேரற உணர்வுக்கு மிக்கிடம் கொடுத்தனர். இவ்வகையில் இல்லறத் தலைவர்க்கு உதவியாக அக்கால மனைவியர் இயங்கியது, தமிழ்ப் பண்பாட்டிற்கே பெருமை சேர்ப்பது. மனையுறை மகளிர் இதற்கு இயைபாக இல்லாவிடில், விருந்தோம்பல் அறம் சிறப்புற நடவாது என்பதையும், அப்பண்பு இல்லறவியலில் ஒரு கூறு என்பதையும், அதற்கு அன்புடைமை மிகு தேவை என்பதையும், வலியுறுத்தவே இவ்வதிகாரம், இல்லறவியலிலும், அன்புடைமையின் பின்னும் வைக்கப்பெற்றது, என்க.

முற்காலத்துச் சிறந்திருந்த இவ்விருந்தோம்ப லென்னும் அருந்தொடர்புணர்வு, தமிழினத்து நேர்ந்த புறவினைக் கலப்பாலும், புறப்பண்பாட்டுத் திரிபாலும், பிற்காலத்து வர வர, பிற நல்லுணர்வுகள் போலவே படிப்படியாகக் குறைவுற்றுச் சிறப்பிழந்தது. மீமிசைமாந்த வளர்ச்சியில், நல்லவை அருகியும், அல்லவை பெருகியும் வரும் இக்காலத்தோ, இந் நல்லுணர்வு அங்கொன்றும் இங்கொன்றுமான குடும்பங்களிலேயே குடிவாழ்ந்து கொண்டுள்ளது.

அன்பிலாப் பெண்டிர் விருந்தை ஏற்று, ஓம்பாவுணர்வுடன் முரண்பட்ட பிற்கால வாழ்வின் ஒரு துயர் நிகழ்வை,

'இருந்து முகந்திருத்தி ஈரொடுபேன் வாங்கி
விருந்துவந்த தென்று விளம்ப - திருந்திழை
ஆடினாள் பாடினாள் ஆடிப் பழமுறத்தால்
சாடினாள் ஓடோடத் தான்' தனியன்.

- என்னும், பிற்கால ஔவையார் பாடல் சான்று குறித்தது.

இவ்வாறு முழுமையும் விருந்தோம்பா உணர்வு கொண்டவரன்றி, அரைகுறை மனவுணர்வுடன் ஓர் இல்லத்தில் விருந்து பரிமாறியதை உண்ணுதற்கு மனம் நொந்த அதே ஔவையாரின் இன்னொரு பாடலும், பிற்கால இலக்கியத்து ஓர் எடுத்துக்காட்டாக நிற்கின்றது.

காணக்கண் கூசுதே கையெடுக்க நாணுதே
மாணொக்க வாய்திறக்க மாட்டாதே - வீணுக்கென்
என்பெல்லாம் பற்றி எரியுதே ஐயய்யோ
அன்பிலாள் இட்ட அமுது.

- தனியன்.

அன்பில்லாமல் ஒருவர் அமுதே படைப்பினும் அது விருந்தோம்பியது ஆகாதென்க. இனி, அன்புள்ளவர்கள், எளிய கீரை உணவையே அன்புடன் பரிமாறியபொழுது, இதே ஔவையார், மிக விரும்பி உண்டதை அவரின் இன்னொரு பாடல் பகர்கின்றது.

வெய்தாய் நறுவிதாய் வேண்டளவும் தின்பதாய்
நெய்தான் அளாவி நிறம்பசந்த - பொய்யாய்
அடகென்று சொல்லி அமுதத்தை இட்டார்
கடகஞ் செறிந்தகை யார்.

- தனியன்

இவ்வாறு விருந்தோம்பல் தொடர்பான ஏராளமான செய்திகள் நம் பண்டைத்தமிழ் இலக்கியங்களுள், கால நெடுகலும், பதிந்து கிடக்கின்றன.

பொதுவாக, விருந்தினரை இருவகையாகப் பிரிப்பர். தொடக்கத்தில் புதுவரே விருந்தினர் எனப் பெற்றனர். எனினும், நாளடைவில், பழகியரும் பழையரும் அடிக்கடி விருந்தினராக வருவதுண்டு. இவ்வாறு புதியவர், பழையவர் எனும் இருநிலையினருமே விருந்தினர்தாம்.

விருந்தினரை எவ்வாறு ஓம்புதல் வேண்டும் என்பதற்கும் பண்டையில் முறை வகுத்திருந்தனர். அவரவர் தகுதிக்கும், நிலைக்கும், காலத்திற்கும், இடத்திற்கும் ஏற்பவும், விருந்தினரின் தகைமைக்கும் பெருமைக்கும் ஒப்பவும், அவரவர்களின் ஓம்புதல் நிலை பலவாறாக இருக்குமேனும், பொதுவான சில அன்பு நடைமுறைகள் பற்றிச் சில விடங்களில் குறிப்பிடப் பெறுகின்றன.

சீவக சிந்தாமணி 2828-ஆம் பாடற்கு மேற்கோளாக நச்சினார்க்கினியர் கீழ்வரும் பாடலைக் காட்டுவர்.

எதிர்கொளல் இடம்நனி காட்டல் கால்கழீஇ

அதிர்பட வருச்சனை அடிமில் வீழ்தல்
மதுரநன் மொழியொடு மனம்மெய் தூயராய்
உதிர்கநம் வினையென உண்டி ஏந்தினார்.

– இப்பாடலின் கண், விருந்தாக வந்த பெரியோரை (அறவோரை) ஓம்பியது கூறப்பெற்றுள்ளது. எனினும் வந்த விருந்தினரை வரவேற்று, இனியவுரை கூறுதலே முதற்கண் ஒருவர் செய்ய வேண்டுவது என்பதை உணர்த்த, நூலாசிரியர் இதைத் தொடர்ந்து கூறிய **இனியவை கூறுதல்** என்னும் அடுத்த அதிகாரத்தினை அமைத்துக் காட்டினார். அதனுள் 'முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானாம் இன்சொல் இனிது' (93) கூறவேண்டிய முகமனே விருந்தோம்பலுக்கு முதற்கண் வேண்டுவது என்று கூறுவார்.

விருந்து ஓம்பும் பொதுவான நடைமுறைகளாகக் கீழ்வரும் செயற்பாடுகள் சில நூல் பகுதிகளுள் குறிக்கப்பெறுகின்றன. வந்த விருந்தினரை,

1. இனிய முகமலர்ச்சியுடனும், கனிவுடனும் இன்சொல் கூறி எதிர்கொண்டு வரவேற்றல்.
2. அவர்க்கு அன்புடன் கை, கால்கழுவ நீர் தரல்.
3. அவர் அமர இருக்கையிடல்.
4. அவர்க்கு உணவிடல்.
5. பருக நீர் தரல்.
6. வெற்றிலை - அடைகாய் ஈதல்.
7. அவர் ஓய்வு கொள்ளவோ, படுக்கவோ இடம் ஒதுக்கல்.
8. படுக்கை தரல்.
9. வந்தவர் வெளியேறுங்கால், அன்புடன் அவர் பின் சென்று, வாழ்த்தி, மீண்டும் வருமாறு முகமன் கூறி, அழைப்பு விடுத்து, வழியனுப்பிவைத்தல்.

- ஆகிய முறைகளால் ஓம்புதல் இல்லறவியலின் பேரறமாகக் கருதப் பெறுகிறது.

விருந்தோம்புதல் தொடர்பாக, இலக்கியங்களுள்ளும் அறநூல்களுள்ளும் கூறப்பெறும் சொற்றொடர்களும் ஈண்டு கவனிக்கத்தக்கன.

அவை வருமாறு :

விருந்தாடல் - விருந்தாகச் செல்லுதல்

விருந்தெதிர் கோடல்(அல்) விருந்தெதிர் கொள்ளல் - விருந்தை எதிர்சென்று முகமலர்ச்சியுடன் முகமன் கூறி வரவேற்றல்.

விருந்தோம்புதல் - புதியவர்களையும், முன் பழகியிருந்தவர்களையும் வரவேற்றுப் பேணுதல்.

விருந்து அயர்தல் - விருந்தினர் வருதலை விரும்புதல்.

விருந்தாட்டு, விருந்திடல் - விருந்து படைத்தல்.

விருந்து அயிறல் - விருந்துண்ணுதல்.

விருந்து சொல்லுதல் - விருந்துக்கு அழைத்தல்.

விருந்து புறந்தருதல் - விருந்து பேணுதல் - ஓம்புதல் - என்னும் பொருளிலும், விருந்தினரை ஏதாவது பேசிப்போகவிடல் அல்லது அவர் புறத்தே இருக்க, தாம் மட்டும் அகத்தே உண்ணுதல் என்னும் பொருளிலும் இருவகையாக வழங்கப் பெறுகிறது.

விருந்து வனப்பு - விருந்தை நல்லபடி ஓம்பிய மனநிறைவும் மகிழ்வும்.

இனி, **விருந்து** என்னும் சொல்லுக்கு **விரும்புதல், ஆசைப்படுதல், அன்பு காட்டுதல்** என்பனவும் **பொருள்களாம்.**

விரும்பு - 'விரும்' என்னும் வேரடியாகப் பிறந்த சொல். ஆசை, அன்பு என்னும் பொருளது.

விரும் + பு - விரும்பு 'பு' பெயர்ச்சொல் ஈறு. (அரும்பு, இரும்பு, கரும்பு, சுரும்பு முதலியன போல்)

விரும் + து - **விருந்து.** புதிதாக வருபவர்மேல் அன்புகாட்டுதல், விரும்புதல், அவர்க்கு விரும்பிப் படைக்கும் சிறப்புணவு.

'து' பெயர்ச்சொல் ஈறு. (மருந்து, குருந்து, பருந்து, முருந்து (பறவை இறகினடி) - முதலியவற்றுள் போல்)

இனி, **விருந்தோம்பல்** என்னும் பண்பாட்டு வழக்கம், பொது:நலவுணர்வின் முதல்படி; உலக உறவுக்கு எடுத்துவைக்கப் பெறும் முதல் அடி - என்க.

இல்லறம் இதன் நாற்றங்கால்; விளைவயல். மனச் செழுமைக்கும், உயிர் உறவாண்மைக்கும், உலக அறிவு விளக்கத்திற்கும் அடிப்படையாக உள்ள மாந்தநேய உறவு விருந்தோம்பலிலேயே தொடங்குகிறது.

கணவன், மனைவி, மக்கள், உற்றம், சுற்றம் என்று சூழன்று வந்த அன்புணர்வு, இல்லத்தின் வாயிற்படி தாண்டித் தெருவிலிறங்கி, வந்து, வெளிவுலகப் பார்வைக்கு அடிவைக்கும் முன், மாந்தன் கொள்ள வேண்டிய முதல் பொதுவுணர்வு - அஃதாவது அறம் - விருந்தோம்பல். அவன் எதிர்கொள்ளும் முதலாவது பொதுமாந்தன் - அஃதாவது உலக மாந்தன் - விருந்தினன். விருந்தினன் வழியாகத்தான் இல்லற வாழ்வினன்

புறவுலகத்தைத் தொட்டுப் பார்க்கிறான். விருந்தினனே பிறகு நண்பனாகின்றான்; துணையாகின்றான்; வழிகாட்டியாகின்றான்; ஆசிரியனாகின்றான்; அறவோனாகின்றான்; தொண்டனாகின்றான்; தலைவனாகின்றான் - என்க.

விருந்தோம்பலினின்றுதான், பொது உணர்வு கிளர்கிறது; நண்பு வளர்கிறது; மொழி பயிலப் பெறுகிறது; கருத்து ஊற்றெடுக்கிறது; இனம் உருவாகிறது; வீடு ஊராகிறது; ஊர் நாடாகிறது. அன்பு அருளாகி, அறமாகி, உலக உறவு தழைக்க ஊற்றம் பெறுகிறது.

உலக மருதத்தில், தமிழ் வயலில், முளையிட்டுத் தோன்றிச் செழித்து வளர்ந்த இப்பண்பாட்டுப் பயிரின் நறுவிளைவு நாகரிகமெனத் தலையெடுத்து நின்றது, அக்கால். அதன் பின்னர் தமிழகத்துப் புகுந்த ஆரியக்களையால், இப்பயிர் விளைச்சல் படிப்படியாய்க் குன்றத் தொடங்கியதைக் கண்டு மனம் நொந்த நூலாசிரியர், மாந்த நேயமும், அறமும் தழைக்க, இப்பண்பாட்டு உணர்வை மீண்டும் வலியுறுத்தும் முகத்தான், இவ்வதிகாரத்தை வரைந்து, தமிழின மேம்பாட்டிற்குப் பாயிரம் பாடினார் என்க.

ஆரியவியல் கூறும் வடநூல்களுள் விருந்தினர் **'அதிதி'** எனப் பெறுவர். அதிதி என்பதற்குப் பரதேசி (வேற்று நாட்டவன்) முன்பின் அறியாத புதியவன், ஏதிலி (அனாதை) எனப் பல பொருள்கள் உண்டு. 'அதிதி'கள் ஓரிடத்தில், தங்கிச் சமைத்து உண்ணாமல் நாடோடிகளாகத் திரிபவர். 'அட்டுண்டு வாழ்வார்க்கு, அதிதிகள் எஞ்ஞான்றும், அட்டுண்ணா மாட்சியுடையவர்' - என்றும், **அறநெறிச்சாரம்** கூறுதல் காண்க. விருந்தோம்பலை அவர்கள் **'அதிதி கிரியை'** என்று கூறுவர். இதனை அவர்கள் ஈகை அறத்துள் (தானதர்மத்துள்) வைத்துப் பேசுவர். பெரும்பாலும் அவர்கள் முனிவர், துறவியர், இருடி(ரிஷி)கள், முதலியோரைப் பேணுவதையே விருந்தோம்பலாகக் கொள்ளுவர். நாள்தோறும் வாராது ஒரு காலத்து வருபவனுக்கே 'அதிதி' என்று பெயர் என்பதாக மநுநூல் கூறும். (மநு. III) இந்நடைமுறையும் அவர்களுக்கு மதவியல் சார்ந்ததே. மாந்தவியல் சார்ந்ததன்று. தமிழியலில்தான் இவ்விருந்தோம்பல் அறம் மிகுதியும் போற்றப் பெறுகிறது என்பதை உணர்தல் வேண்டும்.

இஃது, இல்லற விளைவு ஆகலின், **இல்லறவியலிலும்,** அன்புணர்வே இதற்குப் பாய்ச்சு நீராகவும், பயப்பு எருவாகவும் உதவ வேண்டுமாகலின், **அன்புடைமை** அதிகாரத்தின் பின்னும் வைக்கப் பெற்றது என்பது முன்னரே கூறப்பெற்றது, என்க.

அக. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தல் பொருட்டு. 81

பொருள் கோள் முறை :

இல் இருந்து ஓம்பி வாழ்வது எல்லாம், விருந்து ஓம்பி வேளாண்மை செய்தல் பொருட்டு.

பொழிப்புரை : இல்லறத்தில் மனைவி மக்களுடன் இருத்தலும், அவர்களையும் பிற ஈட்டுடைமைகளையும் பேணிக் காத்தலும், ஆளுதலும், வாழ்தலும் ஆகிய செயல்கள் எல்லாம், தமக்கு அறிமுகமில்லாப் புதியவர்கள் அல்லது பழகியவர்கள், தம் இல்லத்திற்கு வரும் பொழுது, அவர்களையும் விரும்பிப் பேணி உதவுதல் பொருட்டேயாம்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. **இருந்து** - இல்லத்தில் மனைவி மக்களுடன் இருந்து.

2. **ஓம்புதல்** - விரும்பிப் பேணுதல் - காத்தல் - ஓம்பு - 'உவ' என்னும் வேரடியாகப் பிறந்த சொல். உவ - விரும்பு - விரும்பிப் பேணு. உவ - அம் - உவம் + பு - உவம்பு - ஓம்பு. 'அம்' சிறப்புப் பின்னொட்டு; 'பு' பெயரீறு.

3. **வாழ்வது எல்லாம்** - என்றதால், இருத்தலும், ஈட்டலும், காத்தலும், ஆள்தலும், வாழ்தலும் முதலிய அனைத்துச் செயல்களும் என்று பொருள் பெறலாயிற்று.

4. **விருந்து** - விருந்தினர்; அறிமுகமில்லாத புதியவர்கள் அல்லது பழகியவர்கள் (முன்னுரை காண்க)

   - விருந்தோம்புதல் - விரும்பிப் பேணுதல்.

5. **வேளாண்மை** - விரும்பிப் பேணுதல் - உதவுதல். 1) வேள் - விருப்பம். வேள் + ஆண்மை - வேளாண்மை. - விருப்பத்தை ஆளுதல் தன்மை. என்னை? விரும்புதலுள்ளவரை - அல்லது விருப்பம் கொண்டவரைப் பேணுதல், புரத்தல் அவர்க்கு உதவுதல், துணையிருத்தல் முதலிய வகையால் ஆளுதல் தன்மை.

   2) வேள் - மண்

வேளாண்மை மண்ணை ஆளுதல் தன்மை. என்னை? - மண்ணை நன்செய் ஆக்கி, வித்திப் பயிர் செய்து அல்லது செய்வித்து, உலகோர்க்கு அளித்தல் தன்மை.

பயிர் செய்பவர் வேள் + ஆள்பவர் --- **வேளாளர்** --- (பொதுப் பெயர்) --- **காராளர்** காரணப் பெயர், சிறப்புப் பெயர்) (பயிர் செய்பவர் உடலால் வெயில் பட்டுக் கருத்திருப்பதால் என்க).

--- **பயிர் செய்விப்பவர்** – **வேளாளர்** --- (பொதுப் பெயர்) --- வெள்ளாளர் (சிறப்புப் பெயரும் காரணப் பெயரும்) (பிறரைக் கொண்டு பயிர் செய்வித்துத் தாம் நிழலிலிருப்பதால் உடல் சிவந்திருப்பவர்.)

இனி, **வேளாண்மை** என்னும் சொல் மண்ணை (நிலத்தை) உழுது ஆளும் தன்மைக்கும், விரும்பிப் பேணி உதவும் தன்மைக்கும் இணைத்துச் சொல்லப் பெறுவதால், உழவரது இயல்பாகவே 'வேளாண்மை' என்னும் சொல் ஆளப்பெறலாயிற்று.

'வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்' என்னும் பழமொழியைக் காண்க.

– இனி, வேளாண் மாந்தரியல்பாகக் கீழ்வரும் பத்துக் குணங்கள் நூல்களில் கூறப்பெறுகின்றன.

1. **அழிந்தோரை நிறுத்தல்** – மனமும் உடலும் நலிவுற்றவரை, உரையாலும் பொருளாலும் தேற்றி உயிர் வாழச் செய்தல்.

2. **ஆணை வழி நிற்றல்** அரசுக் கட்டளைப்படியும், ஆன்றோர் மரபுப் படியும் ஒழுகுதல்.

3. **ஒக்கல் போற்றல்** – சுற்றத்தாரைப் பேணுதல். 'செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல்'. (வெற்றி வேற்கை :3.)

4. **ஒற்றுமை கோடல்** – வேளாண் மக்களுடனும், பிறருடனும் இணைந்து வாழ்தல்.

5. **ஓவா முயற்சி** --- ஒழியாத முயற்சி.

6. **கசிவகத்துண்மை** --- துயருறுவார் மேல் கசிவு (கனிவு இரக்கம்)கொண்டு உதவுந்தன்மை உடைமை.

7. **கைக் கடன் ஆற்றுதல்** – ஈடு, உறுதி, பிணையல், அடகு முதலியவையின்றிப் பிறர்க்குத் தேவையான விடத்துப் பணம் கடனாகக் கொடுத்து உதவுதல்.

8. **திருந்திய ஒழுக்கம்** கள்ளம் கவடற்ற நேர்மையான ஒழுக்கம்.

9. **மண்ணிறை தருதல்** – அரசுக்குத் தான் ஆளும் (வேளாண்மை செய்யும்) மண்ணுக்கு உரிய இறையை (வரியை)த் தருதல்.

10. **விருந்து புறந்தருதல்** – தன்னை நாடிவந்த புதியவர்களையும், பழகியவர்களையும் பேணிப் புரந்து உதவுதல்.

6. **செய்தல்** அனைத்து நிலைகளிலும் உதவியாகச் செயற்படுதல்.

7. இல்லற வாழ்வை மேற்கொள்வதே பிறர்க்கு உதவுதல் பொருட்டே என்று கருதுதல் உயர்ந்த பண்பாடும் மாந்த நேய மலர்ச்சியும் ஆகும் என்னும் கருத்தை வலியுறத்து வதாகும் இப்பாட்டு.

– அவ்வாறு இல்லற வாழ்வின்றித் தனித்து வாழ்பவர் விருந்து ஓம்புதல் இயலாமையின், அஃது அவர்க்கு வலியுறுத்தம் ஆகாதென்க.

– உயிர்வாழ்தலின் பயனே தனக்கும், பிறர்க்கும் பயன்படுதல் பொருட்டே என்னும் உயிரியங்கியலின், உலகியங்கியலின முதல் அறத்தை இது வலியுறுத்தியது என்க. O

அஉ. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. 82

பொருள் கோள் முறை :

சாவா மருந்து எனினும், விருந்து புறத்தது ஆக, தானுண்டல், வேண்டற் பாற்று அன்று.

பொழிப்புரை : உயிரை உடலினின்று பிரிந்துவிடாமல் காத்து வைத்துக் கொள்ளும் திறன் கொண்ட மருந்தே எனினும், வந்த விருந்தினர் வீட்டிற்கு வெளியே இருக்க, தான் மட்டும் அதையுண்டல் விரும்பத்தக்கதன்று. (வெறுக்கத் தக்கது ஆகும்).

சில விளக்கக் குறிப்புகள் :

1. **சாவா மருந்து:** கடும் நோயினால் உயிர் உடலினின்று பிரிந்து விடாமல், காத்துக் கொள்ளும் அருமையும் சிறப்பும் வாய்ந்த மருந்து.

உண்ணப் போவது நோய் நீக்கத்திற்கு மட்டுமன்று, அந்நோயையும் நீங்கச் செய்து மேலும், நோய் வராமலும், உயிர் உடலினின்று பிரிந்து செல்லாமலும் காக்கும் அருமருந்தே ஆயினும்.

'மருந்தே எனினும் விருந்தோ டருந்து' என்னும் பழமொழி கருதற் பாலது.

2. **புறத்ததா** ---- புறத்தது ஆக. வீட்டிற்கு வெளியே உளதாக.

3. வந்த விருந்தை வெளியே காக்க வைத்துத் தான் மட்டும் உயிரைக் காத்துக் கொள்ளும் மருந்தே எனினும் உண்ணுவது விரும்பத்தக்க பண்பாடன்று, வெறுக்கத்தக்க - தவிர்க்கத் தக்க நடைமுறை என்று, விருந்து பேணாமையைக் கடிந்தார் என்க O

அஉ. வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை பருவந்து பாழ்படுதல் இன்று 83

பொருள் கோள் முறை :

வைகலும் வருவிருந்து ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று.

பொழிப்புரை : நாள்தோறும் இல்லத்திற்கு வருகின்ற விருந்தினரைப் பேணுவானது வாழ்க்கை வறுமை வந்து இல்லாமைப்படுவது இல்லை.

சில விளக்கக் குறிப்புகள்:

1. **வருவிருந்து** – வருகின்ற விருந்து. முக்காலத்தையும் உணர்த்தும் வினைத் தொகை.

2. **வைகல்** - நாள்தோறும் . வைகல் - வருதல், இருத்தல், கழிதல் - ஆகிய மூன்று வினைக்கும் பொதுவான சொல் ஆகையால் பொழுதைக் குறித்தது. பொழுது - நாள்.

-- வைகலும் என்றது மதிப்புரை (உபசார வழக்கு); நாள்தோறும் அவ்வாறு வருதல் நிகழாததால் என்க.

3. **பருவந்து** – வறுமையுற்று. **பருவரல்** - மிகுதியும் வரல். மங்கல வழக்காய்த் துன்பத்தையும் அதன் வழி வறுமையையும் குறித்தது. நல்கூர்தல் நன்காடு, நல்ல பாம்பு - போல்வதொரு சொல்.

4 **பாழ்படுதல்** - இன்மைப் படுதல்.

5. விருந்து பேணுவான் அதன் பொருட்டு நலிந்து இல்லாமைப் படுதல் இல்லை என்பது உலகியலுக்கு மாறுபட்டது போல் தோன்றினும், குமுக மனவியல்படி, விருந்தாக வந்து பேணுவானது குணநலனும், செயல்நலனும் கருதியவர், அவன் நலிவுறும் போது நன்மை கருதுவார் என்க. அதனால் துன்பமுறுதல் இராது என்றார்.

6. இது, விருந்தோம்பலால் பொருள் இழப்பு நேரும் என்று உலகியல் கருதுவார்க்கு, குமுக மனவியல் கூறி, ஐயம் போக்கியது. O

அசு அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல். 84

பொருள் கோள் முறை :

முகன் அமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல்,
அகன் அமர்ந்து செய்யாள் உறையும்.

பொழிப்புரை : முகத்தில் மகிழ்ச்சி தங்க, நல்ல தகுதியுடைய விருந்தினரைப் பேணுவானது இல்லத்தில், மனம் இசைந்து செய்யவள் தங்கியிருக்கும்.

சில விளக்கக் குறிப்புகள்:

1. **அகன் அமர்தல்:** மனம் இசைதல் - விரும்புதல். அகன் - அகம். 'ன்' போலி. அமர்தல் –பொருந்தல், இசைதல், விரும்புதல், மகிழ்தலுமாம்

2. **செய்யாள்** – செல்வத்திற்குத் தெய்வ உருவகம். ஆரியவியலின் அடிப்படை சான்றது.

– செயலை (முயற்சியை) அடிப்படையாகக் கொண்டு அதனால் விளையும் செல்வ நிலையைக் குறித்தது. 'முயற்சி தன் மெய்வருத்தக் கூலி தரும்' (619) என்றது காண்க.

3. **உறையும்** – இருப்பிடமாகக் கொள்ளும்.

4. **முகன் அமர்தல்** --- உள்ளத்தின் மகிழ்வுணர்வை முகத்தில் தேக்குதல். முகத்தில் மகிழ்ச்சி தங்க.

5. **நல் விருந்து** ---- நல்ல தகுதியுடைய விருந்து -- தகுதியற்ற விருந்தைப் பேணற்க என்றார்.

– நன்றாற்ற லுள்ளும் தவறுண் டவரவர்
பண்பறிந்து ஆற்றாக் கடை' (469) என்றார்.

6. நல்விருந்தால் நன்மையே விளையுமல்லது தீமை விளையாது –என்று அறவியல் (பொது வுணர்வியல்) கூறினார்.

அரு. வித்து மிடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலம். 85

பொருள் கோள் முறை :

விருந்து ஓம்பி மிச்சில் மிசைவான் புலம் வித்து மிடல் வேண்டும் கொல்லோ.

பொழிப்புரை : தன் இல்லத்திற்கு வருகின்ற விருந்தினரைப் பேணி, அவர்க்கு உண்ணத் தந்தது போக, மிகுந்த உணவை உண்டு மகிழ்பவன் விளை நிலத்தில் இட்ட விதைப்புக்குக் காவல் வலிமை வேண்டுமோ? (வேண்டாவாம்)

சில விளக்கக் குறிப்புகள்:

1 **மிச்சில் :** 'மிஞ்சு' (மீதி) என்னும் சொற்பொருளடியாகப் பிறந்த சொல். மிஞ்சியது மிச்சில். அஃதவாது பயன்படுத்தாமல் மிகுந்தது.

- இஃது, **எச்சில்** அன்று, அதனின் சொல்லாலும் பொருளாலும் வேறுபட்டது.

- இதுவும் 'எஞ்சு' (மீதி) என்னும் சொற் பொருளடியாகப் பிறந்தது. எஞ்சியது - எச்சில். அஃதாவது பயன்படுத்தி (உண்டு) மிகுந்தது.

2 **மிசைதல்** -- உண்ணுதல். நுகர்தல், (அநுபவித்தல்) என்னும்

பொருளையும் இது தருதலால், **'மகிழ்வுடன் உண்ணுவதையும்'** இது குறித்தது.

3. **புலம்** - நிலம் (முதற் பொருள்); அறிவு - அதன் பொருளடியாகப் பிறந்த இரண்டாவது பொருள். புலப்படுத்தல் - வெளிப்படுத்தல் (Expose) – தன்மையால் நிலம் புலம் ஆயிற்று; அறிவும் அத்தகையதே. இனி, அறிவைத் தொடர்ந்து அறிவை வெளிப்படுத்தும் கருவியும் 'புலன்' ஆயிற்று; கட்புலன், செவிப் புலன் - என்றவாறு என்க. 'ம்', 'ன்' போலி.

4. **மிடல்** --- வலிமை; ஈண்டு இரண்டாம் படிநிலைப் பொருளாய்க் **'காவல் வலிமை'**யைக் குறித்தது. தொல். III - 51 - 3 - இல், இரண்டாம் படியாகவும் ஆகுபெயராகவும் 'வற்புறுத்தலை'க் குறித்தது போல என்க. (தொல்: 997.)

5. **வித்து மிடல் வேண்டும் கொல்லோ:**

விதைப்பித்த விதைக்குக் காவல் வலிமை வேண்டுமோ? வேண்டாவாம், என்க.

விருந்தோம்பி மிச்சில் மிசைவான் புலத்தின் வித்திய விதைக்கு வேலியிட்டும், ஆள் வைத்தும் செய்யப் பெறும் காவல் வலிமை வேண்டுமோ? வேண்டாவாம் - என்றார் என்க.

என்னை? - அவன் புலத்து விதைத்து விளைவாகி வருவன எல்லாம், பொது நலம் கருதி, அவனது இல்லம் நோக்கி வருவார், போவார் அனைவர்க்குமே, விருந்துக்கும் வேளாண்மைக்குமே பயன்படுத்தப் பெறுவன ஆகலின், அவன் விளைபுலத்துக்குக் காவல் வலிவு தேவையின்றி, ஊரார் அனைவருமே களவாடல் செய்யாமலும், அவ்வாறு செய்வார்க்கும், அப்புலத்தில் மேய வரும் கால்நடைகளுக்கும் காவலாகியும் நிற்பர் என்க.

– இனி, இவ் வடிக்குப் பரிமேலழகர் முதல் பாவாணர் வரை உரையாசிரியர் அனைவருமே ஒன்றுக்குத்தலாகவும், ஒன்றடி மன்றடியாகவும், 'வித்தும் இடல் வேண்டுமோ' என்றே சொற்பிரித்துப் பொருள் கண்டமை, உலகியலுக்கும், பகுத்தறிவியலுக்கும், அறிவியலுக்கும், ஏன், மெய்யறிவியலுக்கும்கூட, சிறிதும் பொருத்தமின்மையை உய்த்து உணர்க. மதவியலில் தவிர, மெய்யறிவியலிலும் இறும்பூதுகள் (Miracles) (இயற்கைக்கு மாறான நிகழ்ச்சிகள்) இல்லை என்க. வித்தாமல் விளைவது என்பது ஓர் இறும்பூதே. இது, மதவியல் சார்ந்த ஒரு சிலர்க்கேயன்றி, அனைவரின் நம்பிக்கைக்கும் பொருந்துவதன்று. இவ்வாறு ஒரு சிலர்க்கே பொருந்திய கருத்துகளை, அனைவர்க்குமே பொருந்திய அறநூல்களில் எடுத்துக் கூறுவது மெய்யறிவினார்க்கு இயல்பன்று. சொல்லாலும் பொருளாலும்

குளறுபடிகளைக் கூறுவது அறிவினார்க்கும் ஒப்புவதன்று. எனவே வித்தாமல் விளைவது என்னும் பொருள் பொருந்தாப் புளுகுரையே என்று கூறி விடுக்க.

– இவ்வாறு அனைவர்க்குமே ஒவ்வாததும், இயற்கைக்கே மாறானதுமான ஒரு பொருளை, உரையாசிரியர் அனைவருமே ஒட்டு மொத்தமாக இணைந்து கூறியது எவ்வா றெனில், அஃதவரவர் நம்பிக்கையும் அறிவு வளர்வின் அடையாளமுமே யாகும் என்க. என்னை? 'கண்டானாம் தான் கண்டவாறு' (849) என்றார் நூலாசிரியரும். மேலும், பரிமேலழகர் போலும் வேத மதவியல் நூலாசிரியர்க்கு, 'வரன்' என்பது 'மோட்ச உலகைக் குறித்திருக்க, (24), 'மிடல்' என்னும் சொல் காவல் வலியைக் குறிக்காமல் போனது பெருவியப்பே!

– இனி, அவர்கள் உரையின் பொருத்தமின்மையைக் காட்டுவாம். 'வித்தும் இடல் வேண்டும் கொல்லோ' என்று கொண்ட பரிமேலழகர்.

'விதை விதைத்தலும் வேண்டுங் கொல். (வேண்டுவதில்லை') என்று பொருள் கூறி, **'விளை நிலம் தாமே விளையும்'** என்றார். ஆனால் **'அஃதெவ்வாறு'** என்றும், அஃது என்ன விளைவு என்றும் கூறவில்லை. 'விருந்து ஓம்பியவன் வேண்டும் பொழுது வேண்டிய விளைவு ஆமோ' என்பதற்கும் இதில் விடை கூறுதல் இயலாது என்க.

ஆனாலும், பரிமேலழகரின் இவ்வுரைக்கு மேலும் விளக்கம் கூறிய கோ.வடிவேலனார் (1904) என்பார், 'விருந்தினரை முன்னே யுண்பித்துப் பின்னே தானுண்ணுவானது விளை நிலத்தில் **தெய்வம் தானே வித்திட்டு விளையச் செய்யும்** என்பதாம்' என்று கூறி, அதற்கு,

'விச்ச தின்றியே விளைவு செய்குவாய்
விண்ணும் மண்ணகம் முழுதும் யாவையும்'

– திருவாசகம்

என்னும் செய்யுளையும் எடுத்துக் காட்டினார்.

'தானே விளையும்' என்னும் பரிமேலழகர் கூற்றுக்கு இயற்கைப் பொருத்தமின்மையைக் கண்டுகொண்டுதான், வடிவேலனார், அதற்கு மேலும் வலிவூட்டத் **'தெய்வம் தானே வித்திட்டு விளையச் செய்யும்'** என்று அக் கூற்றிற்குச் சப்பை வைத்துக் கட்டினார்.

அற்றஃதாயின் தெய்வம் 'வித்திட்டுத்தான்' விளையச் செய்யுமோ? வித்திடாமலே விளையச் செய்யும் ஆற்றல் அதற்கிலையோ? இனி, வித்திடுதலே செய்யுமாயின், நீரிடுதலும், எருவிடுதலும், காவலிடுதலும், களையெடுத்தலும் அத்தெய்வம் செய்யுமோ என்பது விளங்குமாறில்லை. மேலும் தெய்வங்கள் பலவற்றுள், விருத்தோம்பி மிச்சில் மிசைவான் புலத்தை

விளைவிக்க வந்து உதவும் தெய்வம் எது - என்பதும் விளங்குமாறில்லை, என்க. இஃது, இன்னவாயினவாற்றால், பரிமேலழகரது 'தானே விளையும்' என்றவுரைக்கும், அவ்வுரைக்கு வடிவேலனாரின் 'தெய்வம் வித்திட்டு விளையச் செய்யும்' என்னும் பரிந்துரைக்கும் பெருமையும் பெறுமதியும் இல்லை என்று விடுக்க.

இனி, திருவாசகக் கூற்றும் மதவியல் என்க. விருந்தோம்பல் மதவியல் சாராதது. மாந்தவியல் பொதுவுணர்வாகிய அறவியல் சார்ந்தது. அஃது ஏதோ ஒரு தனிப்பட்ட மதத்தின் நடப்பியலும் அன்று.

2. அடுத்து மணக்குடவரும் 'தானே விளையும்' என்று வரிசை பற்றினார்.

3. அவ்வாறே பரிதியாரும், 'விருந்து உபசரித்து மிஞ்சினதைப் புசிப்பது, கழனிக்கு எருப் போட்டு, நீர்த் தேக்கினது போல, ஒன்று நூறாயிரம் விளையும், என்று கூறி, மொட்டைத் தாதன் குட்டையில் விழுந்தான் என்று கரணிய கருமியமின்றிக் கற்பனை கூறினார்.

4. இனி, கவிராச பண்டிதர் என்னும் சமணமத உரையாசிரியர்,

'தான புண்ணியத்தால் தேவர்கள் இரத்தின மழை பொழிகிறதும், போக பூமியில் பிறக்கிறதும், முதலானவை ஆம் என்றவாறு' என்று கூறினார்.

இவர் விருந்தோம்பல் அறத்தைத் 'தானம்' (ஈகை) அறமாகக் குறித்தது பொருந்தாது. அத்துடன் இவருரையும் மதவியல் சார்ந்ததென்று மறுக்க.

5. திருக்குறளுக்குச் சுருக்கவுரை எழுதிய வ.உ.சிதம்பரனாரும்,

'அவர் நிலத்தில் வித்து இடாமலே இறைவன் விளைபொருள்களை அருள்வன் என்றவாறு' என்று பொருள் கூறி,

'வித்திடல் செய்யாமலே நெல் வரப் பெற்றமையை ஏயர்கோன் கலிக்காம நாயனார் புராணத்திலும், நந்தனார் சரித்திரக் கீர்த்தனையிலும் காண்க' என்றும்,

'விச்சதின்றியே விளைவு செய்குவாய்' என்ற திருவாசகத்தையும் நோக்குக' என்றும் விளக்கி,

'விருந்தினரை ஓம்புவானது நிலங்களைத் தேவர் விளைவிப்பர்' என்று கருத்துக் கூறிமுடிப்பர்.

– இதில், 'இறைவன் அருள்வன்' என்பது மத வழியினரின் பொது நம்பிக்கை. 'அனைவர்க்குமே இறைவன் அருள்வது பொதுவான மதக் கோட்பாடாக இருக்க, விருந்து பேணுவார்க்கு மட்டும் அவன் அருள்வன் என்னும் சிறப்புக் கவனிப்புக் கூறி, விரும்தோம்பலை வலியுறுத்துவது மாந்தவியலுக்கே இழுக்காம் என்க. மேலும் தெய்வநலன் கருதி விருந்தோம்பல்

நிகழ்த்துவதென்பது, தன்னலம் கருதுவதே என்க.

இனி, ஏதாம் சில மத நூல்களில் ஒன்றிரண்டாகக் கூறிய இறும்பூது எடுத்துக் காட்டுகளைக் கூறிப் பொது வறத்திற்கு வலிவூட்டுவது தகாது; இஃது மக்களை மதச்சேற்றில் புதைப்பது மாகும்.

அடுத்து, 'விருந்தினரை ஓம்புவானது நிலங்களைத் தேவர் விளைவிப்பர்' என்பது கவைக்குதவாத குருட்டு நம்பிக்கையே! உலகியலுக்கு மாறுபட்டது. எந்தத் தேவர் வந்து, எப்படி விளைவிப்பர்? - இவ்வாறெல்லாம் பிதற்றியிருப்பது அறிவியலுக்கும் ஏன் இறையியலுக்குமே பொருந்தாத அறிவின்மைக் கூற்றேயாகும். பொதுவற நூலில் மக்களுக்கியன்ற பொதுவறம் கூறுமிடத்தில் மத நச்சுநீர் பாய்ச்சுவது மாந்தவியலுக்கு அடாத செயலாகும்.

மேலும், விருந்தோம்பல் செய்வான் தெய்வ நம்பிக்கை யுடையனவனாக மட்டுந்தான் இருக்க வேண்டுமோ? அவ்வாறில்லாதானுக்கு விருந்தோம்பல் அறம் கூடுவதில்லையோ? அல்லது வேண்டாவோ? அத்தகையோனுக்கும், 'தேவர்' வந்து உதவுவரோ? நடக்கதையியிலும் படக்கதையியிலும் மட்டுமே இவ்வாறு நடக்கும். வாழ்க்கையில் எங்குமே எவர்க்குமே இவ்வாறு இயற்கைக்கு மாறாக நடந்திருத்தல் இயலாது.

அறிவியல் கற்றுத் தேர்ந்தோர், இவ்வாறு மதவியலுக்கு அடிமைப்பட்டு, மூடநம்பிக்கைக் குழியில் விழுவதும் மாந்தப் பொது வறத்திற்கு இவ்வாறு சிந்திக்காமல் உரை கூறுவதும் ஆரியவியலுக்கு ஆட்பட்ட கூற்றே எனக் கூறிப் புறந்தள்ளுக.

6 இனி, பாவாணரும், 'விதை தெளித்தலும் வேண்டுமோ, வேண்டியதில்லை' என்றே பொருள் கூறுவர். மேலும்,

(அ) 'வளமிக்க பண்டைக் காலத்தில் அறுவடை நாளில், வயலிற் சிந்திய மணிகள் களந் தூர்க்கப் படாமலே கிடந்து, அடுத்துப் பெய்த மழையால், முளைத்து வளர்ந்து விளைந்திருக்கலாம்' - என்றும்,

(ஆ) இனி, இக்காலத்தும் வித்தையும் சமைத்து விருந்தினர்க்குப் படைத்த வேளாளனது நிலத்தில், **அவனுக்குத் தெரியாமல் இரவோடிரவாக வேறோர் அறவாணனான செல்வன் தன் சொந்த வித்தை விதைக்கலாம்'** --- என்றும்,

(இ) 'இனி, விருந்தோம்பல் முட்டுப்பட்ட விடத்துத் தனி நிலத்தில் விதைக்க வைத்திருந்ததை விதைக்கவும் விரும்புவானோ? விரும்பான்' என்று வேறு ஒரு பொருள் கொள்வர், இதற்கு' என்றும்

பல விளக்கங்கள் கூறிச் செல்வர்.

- ஆனால், இவ் விளக்கங்களெல்லாம் 'வித்திட வேண்டுவதில்லை' என்ற பொருளையே வலியுறுத்தி நிற்பன. இதுவே இயற்கைக்கு மாறான நிலை. கருத்து வேறுபாடே இங்குதான் என்பதால், இதற்குத்தான் விளக்கம் கூறப்பெறல் வேண்டும்.

பாவாணர் கூறும் (அ), (ஆ) விளக்கங்கள் எப்பொழுதோ ஒரு காலத்து, எங்கோ ஓர் இடத்து நிகழ்ந்த அல்லது நிகழத்தக்க சிறப்பு நிகழ்வுகளாகவே இருப்பினும், அவ்வோரிரண்டே பொதுவான நிகழ்வாகவும், அறவுண்மையாகவும் ஆகிவிட முடியாது.

அடுத்து, அவர் கூறும் (இ) விளக்கத்துள்ள நிகழ்வு எப்பொழுதோ ஒரு முறைதான் நிகழ முடியும். நித்த நித்தம், அல்லது ஒவ்வொரு விதைப்புக் காலத்தும் நிகழ வியலாது. எனவே மூல முட்டுப்பாட்டிற்கு விளக்கமாக அமைய முடியாது. இது, 'கண்ணில்' விழுந்த துரும்பை அகற்ற , காதைக் குடைந்தது' போலும் ஒரு நொண்டிச் சாட்டே.

இவை பொக்கானவை யாதலின் பொருந்தாதவையும் ஆகுமென அகற்றுக.

7. அடுத்து, 'விருந்தோம்புபவர் புதியவர்களைப் போற்றிக் காக்கும் போது, அவரால் கவரப்பட்ட மற்றவர்கள் அவருக்கு உறுதுணையாக நிற்பர்' என்று கூறப் பெறும் ஓர் உரையும் பொருந்துமாறில்லை. என்னை? 'நிலம் வித்தப் பெற வேண்டுவதில்லை' என்னும் கருத்திற்கு இஃது அரண்செய்ததாகாது. மற்றவர்கள் செய்யினும் வித்திடுதல் நிகழவே செய்யுமாகலின், குறள் கருத்துக் கொப்பிய நிழலுரை ஆகாதிது என்று இதனையும் தவிர்க்க.

நிழலுரை - மூலமும் உரையும் பருந்தும் அதன் நிழலும் போல் இணைந்துவரல் வேண்டும் என்பர். அவ்வாறு பொருந்தியவுரை நிழலுரை என்க.

8. இனி, இன்னோர் உரைகாரர், 'விருந்தினரைப் பேணி, அவருண்ட பின் மீதமாகும் உணவை உண்பவன், தன் நிலத்திற்கு விதை போடுதலையும் விரும்பான். (விதைப்பதனினும் விருந்துக்கே முதன்மை தருவான்)' - என்று பொழிப்புரை தருவர்.

- இது, மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் போட்ட முடிச்சுப் போலாகும்.

என்னை? விருந்து பேணுபவன் விதைக்க வேண்டியது தவிர்க்க முடியாததாக விருப்பின், விருந்தைப் பேணிவிட்டு விதைக்கவும், அல்லது விருந்தைத் தன் வீட்டிலுள்ளார் பேண, தான் போய் விதைப்புப் பணியைச்

செய்யவும், அல்லது தான் விருந்தைப் பேண, வீட்டிலுள்ளவர்களை விதைக்க அனுப்பவும், அல்லது விருந்தைப் பேணி விடுப்பித்த பின்றை, அடுத்து வரும் அண்மை நாள்களில் விதைக்கவும் செய்யலாம் அன்றோ? இந் நிலையில் விதை போடுதலையும் விரும்பான் என்பது வெற்றுரையும் வீணுரையும் ஆகுமன்றோ?

மேலும், விதைப்பதிலும் விருந்துக்கே முதன்மை தரும் தேவையற்ற நடிப்புணர்வு சிறப்பு நடைமுறையாகி, நிலையான அறவுணர்வுக்கு வலிவூட்டிவிடாதென்று கூறி விடுக்க.

இதனால், இவரும் விதையாமலிருக்கும் நிலையைக் கருதினரே யொழிய, வித்திடல் வேண்டுவதில்லை என்னும் ஆசிரியரின் மூலக் கருத்துக்கு உரை காட்டவில்லை என்க. இவர் 'வேண்டும் கொல்லோ' என்னுந் தொடருக்கு 'விரும்பும் கொல்லோ' என்று பொருள் கருதி, 'விரும்பாது' என்று கூறியவுரை 'புலம்' என்னும் எழுவாய்க்கு ஏற்ற பயனிலையன்று என்று பகர்ந்து நீக்குக.

5. **புலம்** – எழுவாய். வேண்டும் கொல்லோ – 'வேண்டப் பெறும் கொல்லோ'

---- செய்யப்படுபொருள், செயப்பாட்டு நிலையில் பொருள் தந்தது ---- என்க.

மிசைவான்: என்பது, வழுவாயாக நின்றிருப்பின், 'இடல் வேண்டும் கொல்லோ' என்பது பயனிலையாக நின்று, பொருள் பெற்றிருக்கும் என்க.

6. ஈங்குக் கூறிய இவற்றால், குறளின் முதல் அடி, **'வித்தும் இடல் வேண்டும் கொல்லோ'** என்று கொள்ளப் பெறுவதில் உள்ள சிக்கல்களும், சறுக்கல், வழுக்கல்களும், இயற்கைக்கும் மாந்தவியலுக்கும், அறிவியலுக்கும், அறவியலுக்கும் பொருந்தாமற் போவதும், அவ்வடி, **'வித்து மிடல் வேண்டும் கொல்லோ'** என்று கொள்ளப் பெறுவதே அத்தனை இடர்ப்பாட்டிற்கும் உற்ற தீர்வாம் என்பதால் அதுவே பொருந்துவதும், புரை தீர்ந்த கூற்றுமாகும் என்று கொள்க.

7. இது, விருந்தோம்பல் அறம் பேணுவானுக்கும் அவன் செயல்களுக்கும் அண்டையயலார் மதிப்பும் துணையும் தருவர் எனும் உலகியலும் மாந்தவியலும் அறவியலும் கூறியதாம் என்க. O

அசுர செல்விருந்(து) ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு **86**

பொருள் கோள் முறை :

செல்விருந்து ஓம்பி, வருவிருந்து பார்த்திருப்பான்,
வானத்தவர்க்கு நல்விருந்து.

பொழிப்புரை : *தம் இல்லத்திற்கு வந்து தங்கியிருந்த விருந்தினரைப் பேணியும், அவர் சென்ற பின் மீண்டும் தன் வீட்டிற்கு விருந்தினர்கள் வர மாட்டார்களா என்று விரும்பி எதிர்பார்த்தும் இருப்பவன், வானில் உள்ளவர்களாகக் கருதப்பெறும் தேவர்களுக்கு, அவர்கள் விரும்பி வரவேற்கும் நல்ல விருந்தினன் ஆவான்.*

சில விளக்கக் குறிப்புகள்:

1. ***செல் விருந்து:*** *ஓம்பப் பெற்று வழியனுப்பி வைக்கப் பெற்ற விருந்து.*

2. ***வரு விருந்து பார்த்திருப்பான்:*** *மீண்டும் தம் வீட்டிற்கு விருந்தினர்கள் வரமாட்டார்களா என்று விரும்பி எதிர்பார்த்திருப்பான். பார்த்திருத்தல் - விரும்பி எதிர்பார்த்திருத்தல்.*

3. ***வானத்தவர்க்கு நல்விருந்து:*** *வானில் உள்ளவர்களாகக் கருதப் பெறும் தேவர்களுக்கு அவர்கள் விரும்பி வரவேற்கும் நல்ல விருந்தினன் ஆவான்.*

நல்விருந்து என்றதால் விரும்பி வரவேற்கும் தன்மை வெளிப்பட்டது.

– வானத்தவர் – வானில் உள்ளவர்களாகக் கருதப் பெறுவோர்; அவர்கள் தேவர்கள் எனப் பெறுவர்.

– வானத்தவர் என்பது ஒரு கற்பனை வழக்கு. இவர்களைப் பற்றிய கூற்று ஆரியவியல் கற்பனையால் வந்திருந்தல் வேண்டும். அதன் தொடர்பால் தமிழ் நூல்களிலும் வந்திருத்தல் வேண்டும். மற்றபடி, தமிழியலில் இதற்கெல்லாம் மூலமும் இல்லை; முழுமையும் இல்லை; விளக்கங்களும் இல்லை.

– தேவர்கள் - வானவர்கள் - இந் நிலவுலகத்திற்கு மேல் உள்ள உலகில் உள்ளதாகவும் அவ்வுலகம் எண்பத்தைந்து நூறாயிரம் (85 இலக்கம்) யோசனை தூரப் பரப்புக் கொண்டதாகவும் கூறுவர்.

(யோசனை - யோஜனா (சமசுக்கிருதம்) - 4 முதல் 10 நாழிகையளவில் நடந்து செல்லும் ஒரு தொலைவு தூரம் ஒரு யோசனை. அஃதாவது 9 முதல் 13 கல் அளவு எனப்பெறுகிறது.)

– இதையே 'ஸ்வர்க்கலோகம்', 'மோக்ஷலோகம்', 'தேவலோகம்', 'இந்த்ரலோகம்', 'அமரலோகம்' என்றெல்லாம் வடமொழியிலும்,

துறக்கவுலகம், விண்ணுலகம், அமரருலகம், வானுலகம், தேவருலகம் - என்றெல்லாம் தமிழிலும் வண்ணித்துக் கூறுவர். அவையன்றி இந்நூலுள் வரும் **'தாமரைக் கண்ணான் உலகு'** (1103) என்று கூறப் பெறுவதும் இதுவே. இவ்வாட்சி வேறு எந்தத் தமிழ் நூலிலும் இல்லை, என்க.

– இவ்வுலகம் **அமராபதி** என்றும் குறிக்கப் பெறும்.

– மற்றும், தேவருலகத்திற்கு இந்திரன் தலைவன் என்பர். அவன், வானவர்கோன், விண்ணவர்கோன் என்றெல்லாம் சிறப்பித்துக் கூறப் பெறுகிறான்.

– **தேவர்கள்** முப்பத்து மூன்று கோடிப் பேர் உள்ளனர் என்று எண்ணிக்கையும் சொல்லப்பெற்றுள்ளது. இவர்களது உணவு 'அமிர்தம்' என்றும், இவர்கள் வாழும் 'சுவர்க்க' உலகத்தின் சிறப்புகளும் பல்வகையாக உள்ளன என்றும் கூறப்பெற்றுள்ளன.

– இந்நிலவுலகத்தில், யாகங்கள் செய்வோர், புண்ணிய இடங்களுக்குச் சென்று வழிப்பட்டோர் (தீர்த்த யாத்திரர்), நோன்பு (விரதம்) இருந்தவர்கள், தானம் செய்தவர்கள் முதலியோரே, தேவருலகம் செல்வர்; அங்குள்ள தேவர்களால் வரவேற்கப்பெறுவர் என்றும் கூறப்பெறுகிறது. இதன் பொருட்டாகவே இங்கும் விருந்தினர்களை ஓம்பியவன் வானவர் விரும்பும் விருந்தினன் ஆவான் என்று சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளது போலும்!

– **இஃதொரு சுவையான, கவர்ச்சியான, மதக் கற்பனையேயாகும்.** ஆனால் வழி வழியாக ஆரிய நூல்களிலும், தொன்மங்களிலும் (புராணங்களிலும்), பழங்கதை (இதிகாசங்)களிலும் சொல்லப் பெற்றுத் திருவள்ளுவர் காலத்திற்குச் சற்று முன்பிருந்தே தமிழகத்திலும் பரவி வந்துள்ளது.

– இக் கற்பனைக் கருத்துகளுக்கெல்லாம் எந்த அடிப்படையுமில்லை. அறிவியலுக்கும் மெய்யறிவியலுக்கும் பொருந்தாத, வெறும் மதவியலும், மனப் பிறழ்ச்சியும் கொண்ட, வாழ்வியல், உலகியல் தாக்கங்களால் சோர்வுற்றவர்களின் உள்ளத்தில் ஒரு வகை நம்பிக்கையையும் பிடிப்பையும் ஏற்படுத்தி, அவர்களை மதவழியில்

வீழ்த்துவதற்காக, ஆரியர்களும் அவரடிமைகளும் வலக்காரமாகச் செய்துகொண்ட வளமான, கற்பனைக் கட்டுக் கதைப்புகளே இவை யென்க.

தமிழியலின் தொன்மை நூலான தொல்காப்பியத்திலும் வானோர், தேவர், அமரர், அமுதம் முதலிய செய்திகள் வருகின்றன.

மற்று, அகம், புறம், பரிபாடல், கலித்தொகை முதலிய நூல்களுள் சிலவாகவும், சிலப்பதிகாரம், மணிமேகலையுள் பலவாகவும், பரவலாகவும், ஏராளமாகவும் செய்திகள் கூறப்பெற்றுள்ளன.

இக் குறளுள் கூறப்பெறும், **வானவர்க்கு நல்விருந்து** ஆகின்ற செய்தி போலவே, புறநானூற்றில் 213-ஆம் பாடலில், கோப்பெருஞ்சோழனைப் புல்லாற்றூர் எயிற்றியனார் என்னும் புலவர், **வானவர்க்கு நல்விருந்து ஆகுவை'** என்று பாராட்டுகின்றார்.

அரும்பெறல் உலகத்து ஆன்றவர் 'வானோர் விதும்புறு விருப்பொடு விருந்தெதிர் கொளற்கே'

(வானிலுள்ளவர்களது, பெறுதற்கரிய உலகத்தின்கண் அமைந்த (தே)வர்களின் விரைந்த விருப்பத்தோடு விருந்தினனாக ஏற்றுக் கொள்வதற்கு (விரைந்தெழுவாயாக) என்று பொருள் தரும்)

இப்பாடலடிகளும், கருத்தும் இங்குக் கவனிக்கத் தக்கன.

மேலும், இது தொடர்பாக, இங்குக் குறிக்க வேண்டாத பல செய்திகளும் தமிழ் நூல்களுள் இடையிடையே குறிக்கப்பெற்றுள்ளன.

'நெடுமா வளவன் என்னும் ஓர் அரசன் தேவருலகம் எய்தினான்' -- என்ற ஒரு செய்தியைப் புறநானூறு 228-ஆம் பாடல் குறிக்கிறது.

இஃது, அறிவியல் வளர்ந்தோங்கி, மாந்தவியலும் மிக விழிப்புற்ற இக் காலத்தும், நந்தமக் கிடையிலும், மறைந்தொழிந்த பொது மக்களையுங்கூட, 'இறைவனடி சேர்ந்தார்', 'வானுலகம் சென்றார்' 'விண்ணுலகம் ஏகினார்', 'சிவபதம் அடைந்தார்' 'கைலாயப் பதவியடைந்தார்' 'வைகுண்டப் பதவி அடைந்தார்' முதலிய குறிப்பீடுகளால் குறிப்பிடப்பெறும் ஒரு வகை மங்கலக் குறியீடுகள் என்றே கருதுதல் வேண்டும்.

திருவள்ளுவரும், அறிவியல் விளங்காத மதவியலே வாழ்வியலாகக் கருதிய, ஆரியர்தம் கள்ளமும் கரவும், சூழ்ச்சியும், 'மாட்சி'யும் கையோங்கி வந்துகொண்டிருந்த அற்றைப் பொழுதில் வாழ்ந்த பெருந்தமிழ்ச் சான்றோர் என்னினும், மூட நம்பிக்கைகளின் முழுமைத் தன்மையும் நன்கு விளங்காதவராகவே சிற்சில விடங்களில் கருத்தறிவித்துச் செல்வர். அத்தகையவற்றுள் இதுவும் ஒன்று என்று

கருதி, அதன், நல்லுணர் வுண்மைகளை மட்டும் போற்றிக் கொள்ளுதல் வேண்டும் என்க. ஏனெனில், அவர் கூறும் அத்தகைய கருத்துகளில் மாந்தரை அடிமைப்படுத்தும் பாங்கு இல்லை என்க.

4. இனி, எல்லா விடங்களிலும் போலவே இங்கும் 'வானத்தவர்க்கு நல்விருந்து' என்னும் தொடர்ப் பொருளில் உரையாசிரியர்கள் பெரிதும் ஒன்று பட்டும் சிற்சிறிது வேறுபட்டும், பலரும் பலவாறு கருத்தறிவிக்கின்றனர். அவற்றின் விளக்கங்கள் தேவையில்லை எனினும் அவ்வுரைக் கோணங்களை அறிதல் நன்றாம்.

பரிமேலழகர் தம் ஆரியவியல் வழக்கப்படியே, 'மறுபிறப்பில் தேவனாய் வானில் உள்ளவர்க்கு நல்விருந்தாம்' என்பார்.

அவரை அடியொட்டியும் கருத்தொட்டியுமே பரிதி முதல் பாவாணர் வரை பொருள் கூறியிருக்கின்றனர்.

அவருள் இக்கால் உரை வெளியிட்ட ஓரிருவர் மட்டும், பட்டும் படாமலும் தொட்டும் தொடாமலும், 'வானவர்' என்பது ஒரு கருத்துச் சொல் அன்று' என்றும், 'மிக மேலோரும் விரும்பும் நல்ல விருந்தாளியாவான்' என்றும் பொருள் கூறிப் புலந்து செல்கின்றனர்.

எஃது எவ்வாறாயினும், இக்குறட்கு இங்குக் கூறப் பெற்ற விளக்கங்களே சாலுமென்க.

5. இது, கூடுதல் விருந்தால் மனமும் அறிவும் சோர்வடையாது தம்மால் இயன்ற மட்டில் பொதுவறம் பேணுவது கூறியது என்க. O

அஎ. இனைத்துணைத்(து) என்பதொன்று இல்லை விருந்தின் துணைத்துணை வேள்விப் பயன். 87

பொருள் கோள் முறை :

வேள்விப் பயன் இனைத் துணைத்து என்பது ஒன்று இல்லை; விருந்தின் துணைத் துணை.

பொழிப்புரை : விருந்து பேணுதல் என்னும் வேளாண்மையின் பயன் இவ்வளவினது, இவ்வகையினது என்று கூறும்படி ஓர் அளவோ மதிப்பீடோ இல்லை. பேணப்பெறும் விருந்தினரின் தன்மை, தகுதி - ஆகிய அவற்றையும்

அதே போல் அவர்க்குப் படைக்கப்பெறும் விருந்தின் தன்மையையும் சிறப்பையும் பொறுத்தது, அதனால் வரும் நன்மை.

சில விளக்கக் குறிப்புகள் :

1. இது விருந்தோம்புவதால், விருந்தோம்பியவர்க்கு வரும் நன்மை கூறியது.

2. வேளாண்மையை வேள்வி என்று குறித்தார். இங்கு, இஃது, யாகத்தை இணை கூறியதன்று.

   வேளாண்மை - விருந்து பேணுதாலகிய உதவி.

3. **இனைத்துணைத்து :** இன்ன அளவினது - இன்ன வகையினது.

4. **என்பது ஒன்று இல்லை -** என்று கூறமாறு ஓர் அளவோ மதிப்பீடோ இல்லை.

5. **விருந்தின் துணைத்துணை :** பேணப் பெறும் விருந்தினரின் தன்மை, தகுதி ஆகியவற்றையும், அதே போல் அவருக்குப் படைக்கப்பெறும் விருந்தின் தன்மையையும் சிறப்பையும் பொறுத்தது, அதனால் வரும் நன்மை.

6. **வேள்விப் பயன் :** விருந்தோம்பிய வேளாண்மையின் நன்மை - பயன்.

7. விருந்து பேணுவதால் விளைகிற நன்மை அல்லது பயன் என்று கூறுவது, ஓம்பப் பெறுகிற விருந்தினர் தம்மை ஓம்பிய வேளாளருக்குத் தம்மால் இயன்ற உதவியைப் பிற்காலத்துத் தேவையான விடத்துத் தேவையான அளவில் செய்யலாம் என்பதும், அவரது வேளாண்மை யுணர்வையும் அறச் செயலையும் கேள்வியுற்ற பொது நல வுணர்வுள்ள செல்வர், சான்றோர், அறவாணர் முதலியோர் அவர்க்குச் செய்யும் பாராட்டும், மதிப்பும் பெருமையும் பிற உதவிகளுமாம் என்க.

8. விருந்தின் துணைத் துணை வேள்விப் பயன் என்னும் கருத்தை 'உதவி வரைத்தன்று உதவி, உதவி செயப்பட்டார் சால்பின் வரைத்து' - (105) என்னும் பாட்டானும் உறுதி செய்வர்.

9. வேள்வி என்று கூறியதால் பரிமேலழகர் 'ஐம்பெரு வேள்வியின் ஒன்றாகவின் வேள்வி என்றார்' என மநுதர்மக் கூற்றை (III ஆம் பிரிவு) வலியுறுத்திக் கூறினார்.

   மநுவில் அந்தப் பகுதியில் கூறப் பெற்றிருக்கும் பிற செய்திகளாவன:

'கிருகஸ்தன் யந்திரம் அல்லது முறம், அம்மி, துடைப்பம், உரல், உலக்கை, தண்ணீர்க் குடம் என்னும் இவ் வைந்தினையும் பயன்படுத்திக் கொள்ளுவதால், அவனுக்கு ஐவகைக் கொலைப் பாவங்களும் உண்டாகின்றன'.

'அவ் வைந்து பாவங்களையும் போக்குவதற்காக மகரிஷிகளால் நாள்தோறும் ஐந்து மகாயக்கியங்கள் (வேள்விகள்) கிருகஸ்தனுக்குக் கிரமமாக விதிக்கப்பட்டிருக்கின்றன.'

'அவ் வைந்து யக்கியங்களில் வேத மோதுதல் **பிரம்மயக்கியம்.** அன்னத்தினாலாவது ஜல தருப்பணத்தினாலாவது பிதிர்களைக் குறித்துத் திருப்தி செய்வது **பிதிர்யக்கியம்.** தேவதைகளைக் குறித்து அக்னியில் ஓமம் செய்வது **தேவயக்கியம்.** வாயச (காக்கை) பலி முதலானவை வைப்பது **பூதயக்கியம்.** அதிதிகளுக்கு உணவிடுவது **மானுடயக்கியம்.** ஆக மகாயக்கியம் ஐந்து.'

'இவ் வைந்து மகாயக்கியங்களையும் தன் சக்திக்குத் தக்கபடி எவன் செய்கிறானோ அவன் கிருஹஸ்தா ஆஸ்ரமத்தில் இருந்த போதிலும், மேற்சொன்ன ஐந்து கொலைகளின் தோஷங்களையும் அடைவதில்லை.'

இதற்கொரு தனி வெண்பாவும் எடுத்துக் காட்டப் பெறுகிறது.

ஒண்பிரம மேவேதம் ஓதுதல்;ஓ மம்வளர்த்தல்
எண்தெய்வம்; ஈகுபலி யேபூதம் - ஒண்டொடியீர்
எண்ணீர்க் கடன்பிதி ரேவிருந் **தோம்புதல்**
அண்ணீர்மை **மானுடயா கம்.**

இக் கருத்து மறுப்பாகப் பாவாணர் தம் மரபுரையில் கூறும் விளக்கம் ஈண்டு நினைக்கற் பாலது. அஃது இது :

"ஆரியர் தம் ஆரியக் கொள்கைகளைத் தமிழ்நாட்டில் பரப்புதற்கும், 'யாகம்' என்னும் கொலை வேள்வியைத் தமிழரிடை எதிர்ப்பின்றிச் செய்ததற்கும், தம் கொலை வேள்விக்குக் கடவுள் வேள்வி என்றும், வேதக் கல்விக்குப் பிரம வேள்வியென்றும் பெயரிட்டு, அவற்றொடு பேய்ப் படையலாகிய பூதவேள்வியையும், விருந்தோம்பலாகிய மாந்த வேள்வியையும், இறந்த முன்னோர்க்குப் படைத்தலாகிய தென்புலத்தார் வேள்வியையும் சேர்த்து ஐவகை வேள்வியென்று தொகுத்துக் கூறி, வேள்வி என்று வருமிடமெல்லாம் ஆரிய வேள்வியை நினைக்குமாறு செய்து விட்டனர்."

O

அஅ. பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி வேள்வி தலைப்படா தார். 88

பொருள் கோள் முறை :

விருந்து ஓம்பி வேள்வி தலைப்படாதார்
பரிந்து ஓம்பிப் பற்று அற்றேம் என்பர்.

பொழிப்புரை : விருந்தோம்புதல் செய்து வேளாண்மை அறத்தில் ஈடுபடாதவர்கள், தங்கள் செல்வத்தையும் பிற உடைமைகளையும் மிகவும் முயன்று பேணிக் காத்தல் செய்து, அவற்றைத் தாமே தமியராய் உண்டு உடுத்து உலாவிக் கழித்து, அதனால் பிற தொடர்பாளர்களையும் உற்றார் உறவினர்களையும் நண்பர்களையும் பெறுதற்கு இயலாமல் இழந்து, 'ஓர் ஆதரவும் இல்லாதவர்கள் ஆகி விட்டோமே' எனப் பிற்காலத்து வருந்துவர்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. **பரிந்து ஓம்பி :** தங்கள் செல்வத்தையும் பிற உடைமைகளையும் மிகவும் முயன்று பேணிக் காத்தல் செய்து.

2. **பற்று அற்றேம் என்பர் :** ஓர் ஆதரவும் இல்லாமல் ஆகிவிட்டோமே என வருந்துவர். - வருந்துதல் இயல்பானது.

3. **வேள்வி தலைப்படாதவர் :** வேளாண்மை அறத்தில் ஈடுபடாதவர்கள். தலைப்படுதல் - ஈடுபடுதல்.

4. இது, விருந்தோம்பல் முதலிய வேளாண்மை அறத்தில் ஈடுபடாதவர்கள், பிற்காலத்துத் தம் ஈட்டங்களை இழந்து தனிப்பட நின்று வருந்த வேண்டியிருக்கும் என்று கூறி எச்சரித்தது.

இது, முன்னைக் குறளுக்கு மறுதலை யானதால் அதன் பின்னர் வைக்கப்பெற்றது. **O**

அசு. உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா மடமை மடவார்கண் உண்டு. 89

பொருள் கோள் முறை :

விருந்தோம்பல் ஓம்பா மடமை உடைமையுள் இன்மை; மடவார் கண் உண்டு.

பொழிப்புரை : விருந்தோம்புதல் பேணாத அறியாமை என்பது, செல்வம் இருந்தும் இல்லாத வறுமை போன்றது. இத்தகைய அறியாமை மூடர்களிடந்தான் உண்டு.

சில விளக்கக் குறிப்புகள் :

1 **உடைமை :** செல்வம் உடைமை.

2 **இன்மை :** செல்வம் இல்லாத வறுமை.

3 **மடமை :** அறியாமை.

மடங்குதல் என்னும் சொற்பொருளடியாகப் பிறந்த சொல். மடங்குதல் - கீழிருத்தல், சுருங்குதல், அடங்கிக் கிடத்தல், சுருண்டு கொள்ளல், மடிந்து நிற்றல் முதலிய பொருள்கள் தரும்.

4 **மடவார் :** அறியாதவர்கள்; மூடர்கள்.

5. விருந்தோம்புதலுக்கான செல்வம் - உடைமை - இருந்தும் ஓம்பாதது மடமை என்றார். அது விருந்தோம்புதலால் வரும் நன்மையை இழந்தது. பயனைத் தவிர்த்தது. எனவே ஓம்பாமை மடமையாயிற்று.

- தங்காத - நிலையாத - செல்வத்தைக் கொண்டு நிலையான பயனைப் பெறாத தன்மையினராதலால் மடவார் - மூடர் - பேதையர் என்றார். என்னை? பேதைமை 'ஏதந் கொண்டு ஊதியம் போக விடல்' (831) ஆதல் பற்றி.

6. **ஓம்பர் மடமை மடவார்கண் உண்டு :** என்பதற்குப் பரிதியார் விருந்து ஓம்பாத மடமை சில பெண்களிடம் உண்டு என்று பொருள் கண்டது, பெண்டிரை இழித்ததாகும். அஃது அறியாமை.

7. இது, விருந்தோம்பலால் வரும் நன்மையை உணராத - அறியாத மூடர்களின் தன்மை கூறியது. இது முன்னதனோடு பொருந்தியதாகலின் அதன்பின் வந்தது. O

கூ 0. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து. 90

பொருள் கோள் முறை :

அனிச்சம் மோப்பக் குழையும்; விருந்து
முகம் திரிந்து நோக்கக் குழையும்.

பொழிப்புரை : அனிச்ச மலரானது மோந்தவுடன் வாடிவிடும் மென்மையுடையது. ஆனால், விருந்தினர் மனமோ அதனினும் மென்மையுடையதாக இருக்குமாதலால், தம் இல்லம் தேடி வரும் அவர்களை, முக மலர்ச்சி மாறுபட்டு நோக்கிய அளவிலேயே, அவர்கள் மனம் குழைந்து வாடிவிடுவர்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. **மோத்தல் :** மூக்கால் மோந்து பார்த்தல்.

2. **குழைதல் :** வாடுதல்.

3. **அனிச்சம் :** மிகவும் மென்மையான, ஒரு மரத்தினது பூ. இதனை பூங்கணை, நாகமல்லி என்றும் அழைப்பர்.

– அனிச்ச மலர் முகர்ந்தால் வாடும் என்னும் செய்தி, கழக இலக்கியங்களுள் எங்கும் எவராலுமே சொல்லப் பெற வில்லை. அம் மலர் பற்றிய குறிப்பும் கலித்தொகை தவிர வேறு கழக இலக்கியங்களில் இல்லை. கலித்தொகையுள்ளும் ஒரே இடத்தில்தான் (91-1) வருகிறது.

– அனிச்ச மலர் சூடிக்கொள்ளப்பெறுவது (1115), மாலையிற் பெய்வது (கலி : 91-1) என்று அறியப் பெறுகிறது.

– நூலுள், இதன் வேறான மூன்று இடங்களில் (1111, 1115, 1120) அனிச்சப் பூவை ஆசிரியர் குறிப்பிடுவதாலேயே அனிச்சம் பெருமைபெறுகிறது. இவர், இப் பூவைக் குறியாது விட்டிருப்பின், இதன் மென்மை பற்றி எவருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பில்லை.

– இவர், இது தவிர இப்பூவைப் பற்றிக் குறிப்பிடும் வேறு மூன்று இடங்களிலும் இதன் மென்மையையே புகழ்ந்து கூறியிருப்பதால், மலர்களிலேயே இதுதான் மிகவும் மென்மையுடையது, முகர்ந்தால் வாடும் தன்மையுடையது என்று தெரியவருகிறது.

-- இம் மூன்று இடங்களும் **காமத்துப் பாலின், நலம் புனைந்து உரைத்தல்** அதிகாரத்திலேயே வருவது குறிக்கத் தக்கது.

-- மொத்தமாக இந் நூலுள் இப் பூ குறிப்பிடப் பெறும் நான்கு இடங்களிலும்,

'பெண்ணுடம்பின் மென்மைக்கு' ஓரிடத்திலும் (1111),

'அவள் இடையின் மென்மைக்கு' ஓரிடத்திலும் (1115),

'அவள் அடியின் மென்மைக்கு' ஓரிடத்திலும் (1120),

இங்கு, 'விருந்தினரின் மன மென்மைக் குறிப்பிலும்' ஆக மென்மைத் தன்மையைப் புலப்படுத்தவே ஆசிரியர் ஆண்டிருப்பது, அவரின், பொருள்களின் நுண்மையறியும் சிறந்த இயற்கை ஈடுபாட்டை உணர்த்துகிறது என்க.

4. **விருந்து குழையும்** என்றது, அவர்களின் மனம் குழைந்து, முகம் வாடுதலைக் குறித்தது.
– முகர்தலால் குழைந்து வாடும் அனிச்சத்தைக் கூறி, முகந் திரிந்த பார்வையாலேயே வாடி விடும் விருந்தினர் மனத்தையும், முகத்தையும் இணைத்துக் கூறியதால், அம் மலரினும் மென்மை யுடையது அவர்களின் மனம் என்று குறிப்புணர்த்தினார் என்க.
– அவர்களின் மனம் மென்மையானது, மற்றோர் இல்லம் தேடி வருதலால் இயல்பாக நேர்ந்த மெலிமையால் என்க.

5. இஃது, இவ் வதிகாரத்திற்கே முத்தாய்ப்பாக அமைந்து, விருந்தினரின் தன்மையை இரு திறத்தார்க்கும் உணர்த்தியது என்க. O

அ-2- இல்லறவியல்

அ-2-6 இனியவை கூறல் - 10

அதிகார முன்னுரை:

விருந்தோம்பல் உலகியல் உறவுக்கு அடிப்படை என்று முன்னர் உணர்த்தினோம். அம் முயற்சிக்கு **'இனியவை கூறல்'** ஒரு கருவி. ஓர் அணுகு முறை. எனவே இவ்வதிகாரம் விருந்தோம்பலின் பின் வைக்கப் பெற்றது.

வருகின்ற விருந்தை முக மலர்ச்சியுடன் வரவேற்று இனியவை கூறுதலுடன் உலக உறவு தொடங்குகிறது.

புதியவர்களாக வந்த விருந்தினர், பழகியவர்களாகவும் பழையவர்களாகவும் நண்பர்களாகவும் வளர்ச்சியுற இனியவை கூறல் தேவைப்படுகிறது. அத்துடன், அது பிறர்தம்மோடும் உறவாடும் வகையில் பரவலாக்கப்பெறுகிறது.

ஒருவர் உள்ளத்து உணர்வுகளை மற்றவர்க்கு அறிவிக்க மொழி உதவுகிறது - என்றால், அம் மொழியை மற்றவர்கள் செவி கொள்ளவும், மனங் கொள்ளவும், நினைவிலிருத்தவும், அம் மொழியோடு கலந்து தரும் அன்புணர்வு உதவுகிறது. அந்த அன்புணர்வுக்கு அடையாளமே இனியவை கூறுதல்.

அன்புள்ளவர்கள், அன்பு செலுத்துபவர்களிடம் இனிமையாகத் தான் பேசுதல் இயலும். இனிமையாகப் பேசுதலுக்கு அன்பும் கனிவுமே அடிப்படை. உள்ளத்தில் அன்பும் கனிவும் இலவாயின் வாய்ச் சொற்கள் இனிமையாக இரா.

'இனியவை கூறல்' என்னும் தொடர் இரண்டு பொருள்களைக் கொண்டது.

ஒன்று, **இனிமையான சொற்களைக் கூறுதல்,**

இரண்டு, **இனியவற்றைக் கூறுதல்.**

இவ் விரு பொருள்களையும் ஒன்றாக்கினால், **இனிமையானவற்றை இனிமையான் சொற்களால் கூறுதல்** எனப் பொருள்பெறும்.

இனியவை என்பன நல்லவை; நன்மை பயப்பவை. இன்பம் தருபவை, என்க.

கூறுபவரும் கூறப் பெறுபவரும் எவராக இருப்பினும், அதுவே போல் கூறுபவை எவையாக இருப்பினும், அவை அன்பும் கனிவும் இனிமையும் கலந்த சொற்களால் கூறப்பெறுதல் வேண்டும் என்பது சிறந்த ஓர் உலகியல் நடைமுறை. நல்லனவாயினும் இனிய சொற்களால் கூறுவதையே பிறர் கேட்பர்.

'இன் சொலால் அன்றி இருநீர், வியனுலகம் வன்சொலால் என்றும் மகிழாதே' (நன்னெறி : 18) என்றார் பிறரும்.

இனிய சொல் 'அன்பு பொதி கிளவி' (தொல் III, 159), 'அன்புறு கிளவி' (கலி - 138), 'அன்புடை நன்மொழி' (திருமுருகு 292) - என்றெல்லாம் சொல்லப் பெறுவதால், அன்புணர்வு கலந்திருந்தால் தான் கூறுகின்ற சொல், இனிமையாகவும், இனியவையாகவும் இருக்கும் என்பது உணரப்பெறுகின்றது.

இனிய கூறுதலையும், இனிமையாகக் கூறுதலையும் கழக அறிஞர்கள் பலபடப் புகழ்ந்து கூறியிருக்கின்றனர்.

'சிறந்த இசைஞன் இசைக்கின்ற செவ்வழி என்னும் நல்ல யாழிற் பிறந்த இசை போலும் இனிய சுவையான சொற்கள்'

'நயவன் தைவரும் செவ்வழி நல்யாழ்,
இசைஞர்ந் தன்ன இன்தீம் கிளவி'

- (அகம்: 212-7)

'இன் தீம் கிளவி' (கலி: 24-3)

''இன்சொல் பிணிப்ப' - (அகம்: 153-6)

'இன்சொல் மேவலைப் பட்டஎன் நெஞ்சு' - (நற்: 20-5)

– என்னும் கூற்றுகள், இனிய சொற்கள்தாம் உள்ளத்தை ஈர்க்கும், அவற்றைத்தான் உள்ளம் விரும்பும் என்னும் கருத்துகளை உணர்த்துவன.

கூறுதல் - சொல்லுதல் பலவகைப்படும். அவை:

'அன்பாகச் சொல்லுதல்' (91)
'அறிவாகச் சொல்லுதல்' (638)
'அறனறிந்து சொல்லுதல்' (635)
'அன்புடையவர் போல் சொல்லுதல்' (911)
'அமைதியாகச் சொல்லுதல்' (635)
'அவையறிந்து சொல்லுதல்' (711)
'அஞ்சாமல் சொல்லுதல்' (686)
'அவையஞ்சாமல் சொல்லுதல்' (725)
'அழும்படி சொல்லுதல்' (795)
'ஆராய்ந்து சொல்லுதல்' (711)
'இடித்துச் சொல்லுதல்' (447), (448)
'இனியமையாகச் சொல்லுதல்' (387), (911), (1198)
'இனியவற்றைச் சொல்லுதல்' (96)
'இகழ்ந்து சொல்லுதல்' (151), (667), (698), (891), (966), (995), (1057)
'இடம் அறிந்து சொல்லுதல்' (687), (712)
'ஈர்ப்பாகப் பிறர் விரும்பும்படி சொல்லுதல்' (646), (696)
'உணரும்படி சொல்லுதல்' (650)
'உணர்வுடையார் முன் சொல்லுதல்' (718)
'உறுதியாகச் சொல்லுதல்' (634)
'உண்மையாகச் சொல்லுதல்' (295), (688)
'எளிமையாகச் சொல்லுதல்' (424)
'எண்ணிச் சொல்லுதல்' (687)
'எள்ளலாகச் சொல்லுதல்' (607)
'ஏற்கும்படி சொல்லுதல்' (719)
'கற்றறிந்து சொல்லுதல்' (635)
'கற்றவற்றைச் சொல்லுதல்' (686), (722), (724)
'கடுமையாகச் சொல்லுதல்' (386), (566), (567)
'கண்ணின்று சொல்லுதல்' (184)
'கண்களால் சொல்லுதல்' (1100), (1271)

'கண்ணீர் வரும்படி சொல்லுதல்' (71)
'கண்டித்துச் சொல்லுதல்' (447), (448), (607), (784), (795)
'கடமை உணரும்படி சொல்லுதல்' (687)
'கல்லாமற் சொல்லுதல்' (402), (405)
'கமுக்கமாகச் சொல்லுதல்' (694)
'கற்றார் முன் சொல்லுதல்' (403)
'காலம் உணர்ந்து சொல்லுதல்' (687), (696)
'காதலைச் சொல்லுதல்' (1162)
'காதலால் இனிய சொல்லுதல்' (1198)
'காம நோய் சொல்லுதல்' (1280)
'குறிப்பறிந்து சொல்லுதல்' (696)
'குற்றம் சொல்லுதல்' (188), (980)
'கேட்டார்ப் பிணிக்கும்படி சொல்லுதல்' (643)
'கேளாரும் விரும்பும்படி சொல்லுதல்' (643)
'சிரிக்கும்படி சொல்லுதல்' (187)
'சிரித்துக் கொண்டு சொல்லுதல்' (187), (685)
'சுவைபடச் சொல்லுதல்' (420)
'செவி வருந்தும்படி சொல்லுதல்' (389)
'சொல் திறமையுடன் சொல்லுதல்' (682)
'சொற்களை யறிந்து சொல்லுதல்' (721)
'தன்னிலை சொல்லுதல்' (1319)
'திறனறிந்து சொல்லுதல்' (644)
'தீயவை சொல்லுதல்' (128)
'தீமையில்லாதவை சொல்லுதல்' (291)
'துன்பத்தைச் சொல்லுதல்' (223)
'தூற்றிச் சொல்லுதல்' (188), (1157), (1190)
'தெரிந்து சொல்லுதல்' (186)
'தெளிவாகச் சொல்லுதல்' (1154)
'தேர்ந்து சொல்லுதல்' (721)
'தேவையானவற்றைச் சொல்லுதல்' (696)
'தொகுத்துச் சொல்லுதல்' (685)

'நன்கு சொல்லுதல்' (728)
'நற்பொருள் சொல்லுதல்' (1046)
'நல்லவை சொல்லுதல்' (826)
'நட்புடையவர் போல் சொல்லுதல்' (826)
'நன்குணர்ந்து சொல்லுதல்' (712), (1046)
'நன்றாகச் சொல்லுதல்' (728)
'நயம்படச் சொல்லுதல்' (197)
('நயம் பட உரை' என்றார் ஔவையாரும்.)
'நன்மை சொல்லுதல்' (182), (194)
'நல்லவை சொல்லுதல்' (96), (387), (826)
'நகும்படி சொல்லுதல்' (187)
'நிறைமொழியில் சொல்லுதல்' (28)
'நினைத்துச் சொல்லுதல்' (1241)
'பயனில்லாமல் சொல்லுதல்' (192), (193), (194), (195), (200)
'பயனுடையவை சொல்லுதல்' (198), (200)
'பழிகூறிச் சொல்லுதல்' (186)
'பழித்துச் சொல்லுதல்' (820)
'பண்பில்லாமல் சொல்லுதல்' (194)
'பண்போடு சொல்லுதல்' (97), (194), (912)
'பலரும் வெறுக்கும்படி சொல்லுதல்' (191)
'பணிவாகச் சொல்லுதல்' (827), (1121)
'பகையாகச் சொல்லுதல்' (187)
'படித்துச் சொல்லுதல்' (834)
'பாரித்து (விரிவாக) உரைத்தல்' (193)
'பிழைகளை இடித்துச் சொல்லுதல்' (784)
'பிறரை வெல்லும்படி சொல்லுதல்' (645)
'பின்னால் போய்ச் சொல்லுதல்' (184)
'புகழ்ந்து சொல்லுதல்' (386), (891)
'புனைந்து சொல்லுதல்' (அதி.112), (790)
'புறம் சொல்லுதல்' (181), (185)
'புன்சொல் சொல்லுதல்' (189)

'பேதைத் தனமாகச் சொல்லுதல்' (417)
'பொய்யாய் நகைத்துச் சொல்லுதல்' (182)
'பொய்யாய்ச் சொல்லுதல்' (293)
'பொருளில்லாமல் சொல்லுதல்' (199)
'மனத்தில் பதியும்படி சொல்லுதல்' (424), (686), (722)
'மழலை சொல்லுதல்' (66)
'மறைவானதைச் சொல்லுதல்' (28), (1076),
'மாறுபடச் சொல்லுதல்' (119)
'முறைப்படி நிரலாகச் சொல்லுதல்' (648)
'வகையறிந்து சொல்லுதல்' (721)
'வணக்கமாகச் சொல்லுதல்' (827)
'வல்லவை சொல்லுதல்' (635)
'வாய்மை சொல்லுதல்' (295)
'வாய் குளறாமல் சொல்லுதல்' (689), (721)
'வாழ்த்திச் சொல்லுதல்' (312)
'விரிவாகச் சொல்லுதல்' (650)
'விளக்கமாகச் சொல்லுதல்' (193)
'விரும்பும்படி சொல்லுதல்' (646), (696), (697)
'வெல்லும்படி சொல்லுதல்' (645)

- முதலியவற்றை நூலாசிரியர் ஆங்காங்குக் கூறியிருத்தல் காண்க.

- உரைத்தல், கூறுதல், சொல்லுதல், மொழிதல் ஆகியன ஒரு பொருட் சொற்கள். O

கூ க. இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல். 91

பொருள் கோள் முறை :

ஈரம் அளைஇப் படிறிலவாம் இன்சொல் ஆல்;
செம்பொருள் கண்டார் வாய்ச் சொல்.

பொழிப்புரை : குளிர்ச்சியான அன்புணர்வு கலந்து வெளிப்படும் குற்றம் விளைவிக்காத சொற்களே இன்சொல் என்பது, மெய்ப்பொருளை உணர்ந்து கண்டவர்களின் வாய்மை உரையாகும்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. இது, மெய்ப்பொருள் அறிஞர் கூறும் இனிய சொல் என்பதற்கான விளக்கமாகும்.

2. **இன்சொல் ஆல் :** இனிய சொல்லாவது. 'ஆல் - ஆவது' 'என்பது' எனும் சொற் பொருளுணர்த்திய அசை.

3. **ஈரம் அளைஇ :** குளிர்ச்சியான அன்புணர்வு கலந்து. நீர்மையால் குளிர்ச்சி வருவிக்கப்பெற்றது. நெஞ்சத்தின் ஈரம்.

'நார் உடை நெஞ்சத்து ஈரம்'		நற் : 233-7
'ஈரத்தின் இயன்ற நின் அருள்'	-	கலி : 10-18
'ஈரம் இலாத இவன்'		கலி : 84-8
ஈரமில் காதலர்	-	கலி : 120-13
'ஈரமில் கேள்வன்'	-	கலி : 144-61
'ஈரம் சேரா இயல்பின் பொய்ம்மொழி'	-	அகம் : 65-3
'அறிவும் ஈரமும் பெருங்கண்ணோட்டமும்'	-	புறம் : 20-6
'ஈரமிலாளர் தொடர்பு'	-	நாலடி : 136.

4. **அளைஇ :** கலந்து.

5. **படிறு இலவாம் :** உள்ளத்தின் குற்றமும், கருத்தின் குற்றமும் இல்லாதவனவாம் - உள்ளத்தின் குற்றம் - வஞ்சனை, சூழ்ச்சி, பொய், கள்ளம், கரவு, தன்னலம் முதலியன, - கருத்தின் குற்றம் - தீயவை செய்யத் தூண்டும் கருத்துகள் - இதற்கு வஞ்சனை என்பது மட்டும் பொருளாகாது; தீயவை செய்யும் குற்றத்தை அது குறியாது ஆகலான்.

6. **செம்பொருள் :** உலகப் பொருள்கள், செயல்கள் ஆகியவற்றின் உண்மைத் தன்மை; மெய்ப்பொருள்.

> **'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்**
> **மெய்ப்பொருள் காண்பது அறிவு'** (355)
>
> **'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
> **மெய்ப்பொருள் காண்பது அறிவு'** (423)

என்றதும் காண்க.

'சிறப்பென்னும் செம்பொருள்' *(358)* என்றும் கூறுவார்.

இதனை 'அறம்' எனல் நேர்ப்பொருளாகாது.

7. **கண்டார்** : அறிந்தவர் - காணுதல் - அறிதல்.

8. **வாய்ச்சொல்** : வாயின் சொற்கள். இங்கு வாய்மைக்கு வந்தது, தீயவை பயிலாத வாயாகலின். என்னை?

'ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்' *(139)*
என்றார் அவரும்.

9. இக்குறளுக்குப் பரிமேலழகர் முதல் பாவாணர் ஈறாக, அனைத்து உரையாசிரியர்களும், 'இன்சொல் ஆவன, அன்போடு கலந்து வஞ்சனை இலவாயிருக்கின்ற அறத்தினை உணர்ந்தார் வாயின் சொற்கள்' என்றே பொருள் கூறினர். அது பொருந்தா தென்க. என்னை? இனிய சொற்களைக் கூறுவது, செம்பொருள் கண்டார்க்கே மட்டும் உரியது, இயல்வது எனின், இது பொதுவார் அனைவர்க்கும் உரிய அறமாவது எங்ஙன்?

செம்பொருள் கண்டார் வாய்ச்சொற்கள் இனியவை என்பதில் தவறின்று; பொருந்துவதே; ஆயின், அதனால் மற்றவர்க்கு என்ன பயன்? பிறரும் அதைப் பேசவேண்டும் என்பதே ஆசிரியர் குறிக்கோளாதலின், அனைவர்க்கும் பொதுவான அறத்தை மெய்ப்பொருள் கண்ட சான்றோர்க்கு மட்டும் உடைமையாக்குதல் இலக்கணம் ஆகுமேயன்றி இலக்கியம் ஆகாதென்க.

செம்பொருள் கண்டார்தாம் குற்றமற்ற அன்புடைய இனிய சொற்கள் கூறுமுடியும் என்றால், அஃது எவ்வாறு பொது அறம் ஆகும்? அதனை எவ்வாறு பொதுவார்க்கும் வற்புறுத்த முடியும்? அவ்வாறாயின் பொது மக்கள் இனிய சொற்கள் கூறுதல் இயலாதா? அல்லது கூடாதா?

மக்கள் அறத்தை அறிஞர் கடைப்பிடியாக மட்டும் எடுத்துரைப்பது தவறு; குற்றம்; பொருத்தமற்றது - என்க.

எனவே, அக்கருத்தைச் செம்பொருள் கண்ட மெய்யறிவுச் சான்றோர்மேல் ஏற்றிக் கூறாமல், சான்றோர் கூற்றாகக் கொள்வதே பொருத்தம் என்க; என்னை? அஃது அவராலேயே உணர்த்துவதற்கு இயலும் ஆகலின்.

10. இஃது, இனியவை என்பன இவை என்னும் சான்றோர் மெய்க்கருத்தைப் புலப்படுத்தியது. O

கு.உ. அகனமர்ந்து ஈதலின் நன்றே முகனமர்ந்து இன்சொலன் ஆகப் பெறின். 92

பொருள் கோள் முறை :

முகனமர்ந்து இன்சொலன் ஆகப் பெறின்
அகனமர்ந்து ஈதலின் நன்றே.

பொழிப்புரை : அக மலர்ச்சியை முகத்தின்கண் தேக்கி, தம்பால் வந்தவரிடம், இனிய சொற்களைக் கூறும் தன்மையுடையவனாக இருத்தல், உள்ளம் மகிழ்ந்து அவர்க்குக் கொடுக்கும் பொருளையும் விருந்தையும்விட நல்லது.

சில விளக்கக் குறிப்புகள் :

1 **அமர்தல் :** மகிழ்தல், விரும்புதல், மலர்தல்.

2 **ஈதல் :** பொருளீதல், உணவீதல் - இரண்டும் உடலுக்கு நல்லன.

3 **இன்சொலன் ஆதல் :** உள்ளத்திற்கும் அறிவுக்கும் உதவுவது இன்சொல். அது நிலையாக இருந்து நலம் தருவது.

- கையில் கொடுத்த பணமும், கட்டிக் கொடுத்த சோறும் போல்வது ஈதல். கற்றுக் கொடுத்த கல்வி போன்றது இன்சொல்.

- எனவே அதைச் சிறப்பென்று உயர்த்திக் கூறினார்.

- ஈதல் நன்று; அகனமர்ந்து ஈதல் அதனினும் நன்று; அகமலர்ச்சியை முகத்தில் காட்டி இனிய சொற்களைக் கூறுதல் அதனினும் நன்று என்றார்.

4 **முகன் அமர்ந்து :** முகம் மலர்ந்து, முகத்தைப் பார்த்து அமர்ந்து என்னினுமாம்.

5. இனிய சொற்களைக் கூறுவது விருந்தோம்பல் ஈகையறத்தினும் சிறந்தது; நிலையான உணர்வைத் தருவது; நல்லது என்று புலப்படுத்தினார். O

கூ ந. **முகத்தான் அமர்ந்(து)இனிது நோக்கி அகத்தானாம்**
இன்சொல் இனதே அறம். 93

பொருள் கோள் முறை : **இயல்பு**

பொழிப்புரை : *(தன் இல்லம் தேடி வந்தவரை இன்முகம் காட்டி வரவேற்று) அவர் முகமும் தன் முகமும் நேருக்கு நேர் அமைய, (அவரை அமர்வித்துத் தானும்) அமர்ந்து, இனிய பார்வையால் அவரை நோக்கி, அவருடன் அகத்தினின்று வெளிவரும் (அன்புணர்வு தோய்ந்த) இனிய சொற்களால் உரையாடுவதே சிறந்த (பொதுநலவுணர்வாகிய) அறம் ஆகும்.*

சில விளக்கக் குறிப்புகள் :

1. *விருந்தினரைப் பேணும் இனிய நடைமுறை படிப்படியாக இதில் விளக்கப்பெறுகிறது.*

2. **முகத்தான் அமர்ந்து :** *முகம் பட நேருக்கு நேர் அமர்ந்து.*

   'அமர்ந்து' என்பதற்குப் பரிமேலழகரும் அவரைத் தொடர்ந்த பலரும் 'விரும்பி' என்றே பொருள் கொண்டுள்ளனர். அஃது, அமைதல், இருத்தல், படிதல், அடங்குதல், பொருந்துதல், வாய்த்தல் ஆகிய பொருள்களைத் தாண்டிய இறுதிப் பொருளாம். அஃது அத்துணைச் சிறப்பன்று. மேலும் அறியக்கூடாத மன விருப்பத்தினும், அதைச் செயலாக்கிக் காட்டும் தன்மையே வந்தவரை மகிழச் செய்வதாம். எனவே இயல்பான இப்பொருளே சிறந்தது என்க.

3. **இனிது நோக்கி :** *இனிய பார்வையால் நோக்கி.*

   – தமிழில் பார்ப்பதற்குப் பொதுவாக மூன்று சொற்கள் உள்ளன. அவை, பார்த்தல், காணுதல், நோக்குதல். அவற்றுள்,

   பார்த்தல் - *காட்சியளவையான் மனமும் அறிவும் ஈடுபடாமல் மேலோட்டமாகப் பார்ப்பது.*

   'நான் அவரைப் பார்த்தது இல்லை' *(வழக்கு)*
   'வருவிருந்து பார்த்திருப்பான்' *(86)*
   'அறம் பார்க்கும்' *(130)*
   'காலம் பார்த்து' *(487)*

'பார்வை வேட்டுவன்' (நற்: 212-1)
'பார்வை மடப்பிணை' (புறம்: 320-4)

இன்னும் வந்த பிறவிடத்தும் பிறர் பயில்வினும் பார்த்துக் கொள்க.

காணுதல் - அறிவுணர்வோ, மனவுணர்வோ ஒன்றும்படி பார்த்தல்.

அறிவுணர்வால் காணுதல் :

(எ-டு)
'அவரவர் எச்சத்தால் காணப்படும்' (114)
'தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால்' (249)
'நிலையாமை காணப்படும்' (849)

'காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை?' (1286)

'காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
கண்டானாம் தான்கண்ட வாறு' (849)

'மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்
இன்னா அறிவி னவர்' (857)

'காணின் நிலமென்னும் நல்லாள் நகும்' (1040)

'உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ்' (1079)

'தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்' (399)

'தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்' (436)

மேலும் காட்சி என்னும் சொல் அறிவுப் பொருளில் வழங்குதல் காண்க:
174, 199, 218, 258, 352, 386, 654, 699

'கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்' (வழக்கு)

'இன்று கண்டாங்குக் காண்குவம் என்றும்'

புறம். : 40-8

'இன்னும் காண்குவை நன்வாய் ஆகுதல்'

புறம். : 227-3

'அறனில் காட்சி'

புறம். : 210-2

'இக்குடிப் பிறந்தோர்க்கு எண்மை காணுமெனக்
காண்டகு மொய்ம்பு காட்டினை'

புறம். : 43-19-20

'அறியலும் அறியேன்; காண்டலும் இலனே!'

நற். 147-7

'ஆங்கும் மதிமருளக் காண்குவல்'

பதிற். 73-20

மனவுணர்வால் காணுதல் :

'கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்' (1265)

'இவையென்னைத் தின்னும் அவர்க் காண லுற்று' (1244)

'காணாது அமைவில கண்' (1178), (1283)

'காணின் மகிழ்ந்து உள்ளம் உள்ளுள் உவப்பது' (1057)

'தான்வரக் காண்குவம் யாமே'

- ஐங். 112-3

'முறுவல் காண்டலின் இனிதோ'

- ஐங். 309-4

'கனவில் காணும் இவளே
நனவில் காணாள் நின் மார்பே'

- ஐங். 234

'இவள் புதுநாண் ஒடுக்கமும் காண்குவம்'

- அகம். 112-19

'அரிமதர் மழைக்கண், அமைபுரை பணைத்தோள்
அணங்குசால் அரிவையைக் காண்குவம்'

- அகம். 114-14-15

'காண்டல் விருப்போடு தளர்பு தளர்பு ஓடும்

பூங்கண் புதல்வனை நோக்கி'
(இங்கு நோக்கி என்றது 'நாடி') - அகம். 66-11-12

'நெஞ்சம் திறப்போர் நிற்காண் குவரே'
- புறம் 175-2

'வருந்தக் காண்டல் அதனினும் இலமே'
- புறம் 61-19

'கேட்பின் அல்லது காண்புஅறி யலையே
காண்டல் வேண்டினை யாயின் .....
....
மாரி யன்ன வண்மைத்
தேர்வேள் ஆயைக் காணிய சென்மே!
- புறம் - 133.

'பல்காற் காண்டலும் உள்ளத்திற்கு இனிதே'
- குறுந். 60-6

'காண்டல் விருப்பொடு'
- பதிற். 12-10

'இவள் வதுவை நாண் ஒடுக்கமும்
காண்குவன் நானே'
- கலி. 52-25

'ஒல்லை எம் காதலர்க் கொண்டு.....
காண்குவேன்'
- கலி - 145-31

'கிளர்மணி ஆர்ப்ப ஆர்ப்பச்
சாஅய்ச் சாஅய்ச் செல்லும்
தளர்நடை காண்டல் இனிது'
- கலி. 80-10-17

'வளை நெகிழ்பு யாம் காணுங்கால்'
'எவ்வநோய் யாம் காணுங்கால்'
'அல்குல் வரி யாம் காணுங்கால்'
'கோதை புரிபு ஆடு, காண்கும்'
- கலி. 80:13, 17, 21, 26

'காணும் பொழுதின் நோக்கல் செல்லாது'

- கலி. 49-8

'யாம் நின்னை வெரூஉதும் காணுங் கடை'

- கலி. 87-1-2

'நாணில் நெஞ்சம் நெகிழ்தலும் காண்பல்'
'மருளி நெஞ்சம் மகிழ்தலும் காண்பல்'
'அல்லல் நெஞ்சம் மட்ங்கலும் காண்பல்'

- கலி. 122-11, 15, 19

- இன்னும் வந்த பிறவாண்டும் பிறர் ஆட்சியிலும் கண்டு கொள்க.

3. நோக்குதல் - அறிவுணர்வும் மனவுணர்வும் இணைந்த ஆழமான பார்வை:

(எ-டு) 'முகந்திரிந்து நோக்க' (90)

'பிறன்மனை நோக்காத பேராண்மை' (148)

'முன்னின்று பின் நோக்காச் சொல்' (184)

'புறன் நோக்கிப் புன்சொல் உரைப்பான்' (189)

'பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அது நோக்கி வாழ்வார் பலர்' (528)

'மன்னவன் கோல் நோக்கி வாழும் குடி' (542)

'செல்லும் வாய் நோக்கிச் செயல்' (673)

'கூறாமை நோக்கிக் குறிப்பறிவான்' (701)

'முகம் நோக்கி நிற்க அமையும் அகம் நோக்கி
உற்றது உணர்வார்ப் பெறின்' (708)

'பெரியாரைப் பேணிக் கொள்வேம் என்னும் நோக்கு' (976)

'அறம் நோக்காது ஈட்டிய ஒண்பொருள்' (1009)

'அறஞ்சாரா நல்குரவு ஈன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்' (1047)

'நோக்கினாள் நோக்கு எதிர் நோக்குதல்' (1082)

'மடவரல் நோக்கம் இம் மூன்றும் உடைத்து' (1085)

'பிணையோர் மடநோக்கும் நாணும் உடையாள்' (1089)

'இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கு ஒன்று அந்நோய் மருந்து' (1091)

'கண்களவு கொள்ளும் சிறுநோக்கம்' (1092)

'நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள்' (1093)

'யான்நோக்கும் காலை நிலன்நோக்கும் நோக்காக்கால்
தான் நோக்கி மெல்ல நகும்' (1094)

'குறிக்கொண்டு நோக்காமை' (1095)

'செற்றார் போல் நோக்கும்' (1097)

'யான் நோக்கப் பசையினள்' (1098)

'ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே உள.' (1099)

'கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின்' (1100)

'காணிற் குவளை கவிழ்ந்து நிலன்நோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று' (1114)

'தெரிந்துணரா நோக்கிய உண்கண்' (1172)

'கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்' (1173)

'தொடிநோக்கி மென்றோளும் நோக்கி அடிநோக்கி
அஃதாண்டு அவள்செய் தது' (1279)

'நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீர் என்று' (1320)

- காதலர்க்குள் நேரும் அனைத்துப் பார்வையும் 'நோக்கு' என்னும் சொல்லால் குறிக்கப்பெறுதல் காண்க; அவை அறிவும் மனமும் ஒன்றியிருத்தலால்.

இனி, பிறர் ஆட்சிகளும் சில :

'தண்பதம் பரப்பின் ஒண்பதம் நோக்கி'

- நற் 4-3

'விம்முறு கிளவியள் என்முகம் நோக்கி'

- நற் 33-10

'தொல்கவின் இழந்தஎன் பொன்னிறம் நோக்கி'

- நற். 56-8

'நேர்ந்த நெஞ்சும் நெகிழ்ந்த தோளும்
வாடிய வரியும் நோக்கி'

- நற். 130-7-8

'மாயோன் இருந்த தேயம் நோக்கி'

- நற். 371-3

'வேய்வனப்பு இழந்த தோளும் வெயில் தெற
ஆய்கவின் தொலைந்த நுதலும் நோக்கி'

- ஐங். 392-1-2

'மாற்றருந் தானை நோக்கி
ஆற்றவும் இருத்தல் வேந்தனது தொழிலே'

- ஐங். 451-3-4

'தொடிநிலை கலங்க வாடிய தோளும்
வடிநலன் இழந்தஎன் கண்ணும் நோக்கி'

- ஐங். 475-1-2

'விறல் வெய்யோன் ஊர்மயில்
வேல்நிழல் நோக்கி'

- பரி. 8-67

'இல்லது நோக்கி இளிவரவு கூறாமுன்
நல்லது வெஃகி வினைசெய்வார்'

- பரி. 10-87

'பூண்ஆரம் நோக்கிப் புணர்முலை
பார்த்தான், உவன்;
நாணாள் அவனை, இந் நாரிகை'

- பரி. 12-55-56

'ஒள் ஒளி மணிப்பொறி ஆய்மயில் நோக்கித்தன்
உள்ளத்து நினைப்பானைக் கண்டனள்'

- பரி. 18-7-8

'பொருள் நோக்கிப் பிரிந்துநீ போகுதி'

- கலி. 10-16

'தெய்வத்துத் திறன் நோக்கி'

- கலி. 16-19

'அறன் நோக்கிக் கூறுவீர்'

- கலி. 20-12

'கடைக்கணால் கொல்வான் போல் நோக்கி'

- கலி. 51-15

'கொடுங்கழிப் புகாஅர்த் தெய்வம் நோக்கி'

- அகம் 110-4

'பெண்கோள் ஒழுக்கம் கண்கொள நோக்கி'

- அகம் 112-17

'அருங்கடிக் காவலர் இகழ்பதம் நோக்கி'

- அகம் 162-7

'புன்னைப் பொன்நேர் நுண்தாது நோக்கி'

- அகம். 180-14

'அருங்கடி வியல் நகர் நோக்கி'

- அகம். 224-17

'அறனும் பொருளும் வழாமை நாடி
தற்தகவு உடைமை நோக்கி'

- அகம் 286-10-11

'பல் ஊழ் பெயர்ந்து என்னை நோக்கும்;
மற்றுயான் நோக்கின்,
மெல்ல இறைஞ்சும் தலை'

- கலி. 61-5-6

'இடையிடைக் கள்வர்போல்
நோக்கினும் நோக்கும்'

- கலி. 61-25-26

'நீ, உடன்று நோக்கும் வாய் எரிதவழ
நீ, நயந்து நோக்கும் வாய் பொன்பூப்ப'

- புறம் : 38-5-6

- இன்னும் வந்த பிற வழியினும் பிறர் மொழியினும் நோக்குக.

- புதியராக வந்த விருந்தினரின் தகுதி, திறன் முதலியன அறிய அறிவுனர்வும், அவற்றுக்குத் தக அவரைப் பேணுதற்குரிய

மனவுணர்வும் (அன்புணர்வும்) ஒன்று சேர்ந்து இயங்குவதால் இங்கு நோக்கி என்று கூறப்பெற்றது என்க.

4. **அகத்தானாம் இன் சொல்** : இனிய சொல் அகவுணர்வாகிய அன்புணர்வின் எழுச்சியாகக் கூறப்பெறுதல் வேண்டுமே யல்லது, புறவுணர்வின் வெளிப்பாடாக இருத்தல் கூடாது என்றார்.

- உணர்வு மனத்தினின்று தோன்றும் பொழுதே அஃது உண்மையாக இருத்தல் இயலும். அறிவுணர்வால் மட்டும் வெளிப்படுவதாயின், அது வெறும் புலனுணர்வாய் உலகியல் கலந்து இருக்கும். இருக்கவே அதிற் போலியும் பொய்யும் புனைந்திருக்கலாம் என்க.

இதனை, 'மனத்தானாம் மாந்தர்க்குணர்ச்சி' (453) என்பதிலும் நிலைநாட்டுவார்.

5. **இனதே அறம்** : இன்ன நிலையினதே அறம் என்பது 'இன்னது' என்பது இடைக்குறையாய் 'இனது' என்று நின்றது.

– 'அறம்' என்பது 'பொதுநலவுணர்வு' என்று முன்னரே காட்டினம்.

– இத்தகைய உணர்வே, அனைத்துப் பொதுநிலைக்கும் பொருந்துமாகலின், அவ்வனைத்தையும் உள்ளடக்கி, அறத்தின் படிநிலையை விளக்கினார்.

6. இது, முந்தைய பாட்டின் கருத்து விளக்கத்தைக் காட்சி விளக்கமாக விரித்ததாகலின், அதன்பின் வைக்கப்பெற்றது. O

கூ சு துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு. 94

பொருள் கோள் முறை :

யார்மாட்டும் இன்புறூஉம் இன்சொலவர்க்கு,
துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும்.

பொழிப்புரை : (வேறுபாடின்றி) எவரிடத்தும் இன்பம் தரும் இனிய சொற்களைப் பேசும் இயல்புடையவர்க்குத் துன்பம் செய்யும் இல்லாமை என்னும் நுகர்ச்சியின்மை இல்லையாகும்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. **துன்புறூஉம் இன்புறூஉம் :** துன்புறும், இன்புறும் என்னும் சொற்கள் ஈற்றயல் நீண்டு அளபெடை பெற்றன.

துன்புறுத்தும் அல்லது துன்பம் செய்யும்; இன்புறுத்தும் அல்லது இன்பம் செய்யும்.

2. **துவ்வாமை :** - நுகர்வின்மையால் இல்லாமை.

– நுகர்தற்கு ஒன்றும் இல்லாமை அஃதாவது வறுமை.

– துவ்வுதல் - நுகர்தல் (அநுபவித்தல்).

– 'அநுபவம்' என்னும் வடசொற்கு நேரிய தமிழ்ச்சொல்.

– வறுமை, இல்லாமை, நல்குரவு என்று சொல்லாமல், துவ்வாமை என்று கூறியது, உணவு மட்டன்றிப் பொருளால் வரும் உடை, உறையுள், மற்றுமான துய்ப்புப் பொருள்கள் இல்லாமையை விரித்து உணர்த்தியது.

3. **யார் மாட்டும் :** யாவரிடத்தும், எல்லாரிடத்தும்.

– சிலர் தம்மவரிடத்தும், முன்பே பழகியவரிடத்தும், தம்மினும் அகவையானும், செல்வத்தானும், நிலையானும் மிக்காரிடத்தும் மட்டும் இன்சொல் உடையவராக இருக்கும் உலகியலால், அவ்வாறின்றி யாவர் மாட்டும் எனச் சிறப்பித்தார்.

4. **இன்சொலவர்க்கு :** இன்சொல் உரைக்கும் இயல்பு உடையவர்க்கு.

5. வேறுபாடின்றி எல்லாரிடத்தும் பொதுவாகவே இனிய சொற்களைக் கூறும் இயல்புடையவரிடத்தில் எல்லாருமே அன்பாகவும் ஆதரவாகவும் இருப்பர். ஆகையால், அவர்க்குத் துன்பம் வரும்பொழுது அனைவரும் துணையாக இருந்து உதவுதல் இயல்பாகலின், அவர் வறுமைப்படுவதுமில்லை. அதனால் இல்லாமைப்படுவதும் இல்லை என்றார்.

6. இஃது இன்சொல்லை இயல்பாக உடையார்க்கு ஏற்படும் உலகியல் நன்மை கூறியது. **O**

கூ ரு. பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு அணிஅல்ல மற்றுப் பிற. 95

பொருள் கோள் முறை :

ஒருவற்கு அணி, பணிவுடையன் இன்சொலன் ஆதல் மற்றுப் பிற அல்ல.

பொழிப்புரை : *ஒருவனுக்கு அழகாவது அல்லது பூணத்தக்க அணியாவது பணிவுடையவனாகவும் இன்சொல் உடையவனாகவும் இருப்பதே. மற்றவை பிறவெல்லாம் அழகோ அணியோ ஆகா.*

சில விளக்கக் குறிப்புகள் :

1. **பணிவுடையன்** : *பிறர்பால் பணிவான நடத்தை உடையவன். அடக்கமும் அமைவும் பணிவு என்க.*

2. **இன்சொலன்** : *இனிய சொற்களையே பேசும் இயல்புடையவன். இயற்கையாக அவ்வாறிருப்பவனே இனிய சொற்களை உடையவனாக இருத்தல் இயலும்; அல்லது உலகியல் அழுத்தத்தால் அவ்வாறு தன்னைப் பழக்கிக் கொள்ளுதலும் சாலும் என்க. செயற்கையாக அவ்வாறு இருத்தல் இயலாமை.*

   – இன்சொல் உடைமைக்கு முன் பணிவுடைமையைக் கூறியது, முதலில் தோற்றத்தானும், பிறகு சொல்லானுந்தாம் பிறரது கவனத்துக்கு உரியராகும் உலகியல் பற்றி என்க.

3. **ஒருவற்கு** : *ஒருவனுக்கு - என்று ஆண்பாற்படுத்திக் கூறுதல் புறப்புழக்கமும், விருந்துக்கு முன்னிற்கும் மிக்குடை நிலையானும் என்க.*

   – இஃதன்றிப் பொதுவான அறங்களை ஆண்பாலுக்குரியனவாகக் கூறுதல் எந்நூலாசிரியர்க்கும் இயல்பான தன்மையன்றிப் பெண்மையைத் தாழ்த்திக் கூறிய தாகாது என்க. ஆண்மையை முன்னிலைப்படுத்திக் கூறுதலில், பெண்மையும் அடங்கியதே என்க.

4. **அணி** : *என்றது அழகு, அணிகலன் (நகை) இரண்டையும் குறிக்கும்.*

   – அழகு, கல்வி, செல்வம், நிலை (பதவி) ஆகியவை பற்றிப் பணிதலும் இன்சொலும் பலரிடம் இல்லாமை உலகியலாதல் பற்றி முன்னவை

அணியல்ல, பின்னவை யுடைமையே பிறரைக் கவர்வனவாகலின் அணியாகும் என்றார் என்க.

5. **மற்றுப் பிற அல்ல :** மற்றவை பிறவெல்லாம் அழகோ அணியோ அல்ல.

— அழகு இயற்கையும், அணி செயற்கையுமாம்.

— மற்று என்பதை முன்னவர் அனைவரும் அசையென்றார். அது மற்றவை என்று விரித்துப் பொருள் கூறும் சொல்லாகலின் அசையன்று. பொருளிலாது இடம் நிரப்பும் அசைச் சொற்களை நுண்ணறிவுடைய, மெய்யறிவுடைய, சொல்லின் தொகையறிந்த சான்றோர் மிகுதியும் பயன்படுத்தார் என்பது முன்னரே (24) கூறப்பெற்றது.

6. இதுவும், முன்னைக் குறளுக்கு இணைவாக நின்று இன்சொற் பயனைக் கூறியது. இதில் பிறர் மதிக்கும் இயல்பு தெரிவித்தார் என்க. O

கூ சுஎ அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை நாடி இனிய சொலின். 96

பொருள் கோள் முறை :

நல்லவை நாடி இனிய சொலின்
அல்லவை தேய அறம் பெருகும்.

பொழிப்புரை : (உலகப் பொதுவறத்திற்குப் பொருத்தமான) நல்ல செயல்கள், கருத்துகள், சொற்கள் ஆகியவற்றையே நோக்கமாகக் கொண்டு, (அவற்றைப் பிறர் மனங்கொள்ளுமாறு) இனிமையாக எடுத்துப் பலர்க்கும் கூறிவந்தால், (மக்களிடையே ஏற்கனவே படிப்படியாகத் தோய்ந்து நிற்கும்) நல்லவை அல்லாத செயல்கள், கருத்துகள், சொற்கள் ஆகியவை சிற்சிறிதாகக் குறைந்து, பொது அறவுணர்வுகளும், செயல்களும் கருத்துகளும் பெருகிவரும்.

சில விளக்கக் குறிப்புகள் :

1. நல்லவற்றை நாடுவதும், அவற்றை மக்களுக்கு அன்புணர்வுடன் இனிமையாக எடுத்துச் சொல்லுவதும், பெரும்பாலும்

கற்றவர்களாலேயே இயலும் ஆகலின், அவர்களையே முன்னிருத்திக் கூறியதாகும் இது.

2. மனத்தால் நல்லவர்களும், அறிவால் வல்லவர்களும் ஆகியவர்கள், உலகப் பொது நலன்கள் கருதாமல், ஒதுங்கி நின்று, தாமுண்டு, தம் பாடுண்டு என்றிருப்பதால்தான், உலகின்கண் அல்லவை (தீயவை) பெருகி, நல்லவை குறைந்து நிற்பதாக ஆசிரியர் கருதுவர். அவரது மனநோக்கின் (Social Psychological) வெளிப்பாடு, இது.

3. இது, பெரும்பாலும் இனியவை கூறுதலால் நிகழ வேண்டுவதாகலின் இங்குக் கூறப்பெற்றது.

– மற்றபடி விருந்தோம்பலுக்கும், அல்லது தனிப்பட்ட இருவர்க்கும் அல்லது ஒரு சிலர்க்குமே, இனியவை கூறுதலறம் பயன்பட்டுவிடாது, மக்கள் அனைவர்க்குமே பயன்படவேண்டும் எனும் பேரறவுணர்வால் கூறப்பெற்ற கருத்திது வென்க.

4 **அல்லவை :** நல்லவை அல்லாத செயல்கள், கருத்துகள், சொற்கள் · தீய நிகழ்வுகள்.

5. **தேய :** சிறிது சிறிதாகக் குறைய.

6. **அறம் பெருகும் :** பொது அறவுணர்வுகளும் செயல்களும் கருத்துகளும் பெருகிவரும்.

7. **நல்லவை நாடி :** உலகப் பொதுவறத்திற்கு அஃதாவது பொது நலத்திற்குப் பொருந்திய நல்ல செயல்கள், கருத்துகள், சொற்கள் ஆகியவற்றையே நோக்கமாகக் கொண்டு. நாடுதல் - தேடி நோக்கமாகக் கொள்ளுதல், அல்லது நோக்கமாகக் கொண்டு தேடுதல்.

– இதற்குப் பரிமேலழகர் 'பொருளால் பிறர்க்கு நன்மை பயக்கும் சொற்களை மனத்தான் ஆராய்ந்து' என்று பொருள் கூறுவர். இது, பிழையான கருத்தும் விளக்கமுமாகும். 'நல்லவை' என்பதற்கு 'நல்ல சொற்கள்' என்று பொருள் தருவது, 'தும்பை விட்டு வாலைப் பிடிப்ப'தாகும்.

– இப் பொருளையே பாவாணர் வரை பிறரும் கூறுவது, அவ்வாலை நீவிக்கொடுப்பதைப் போன்றதே!

– இவர்கள் இவ்வாறு மயங்கப் பொருள் கொண்டது, 'இனியவை கூறுதல்' என்பதற்கு வெறும் சொல்லினிமையையே பொருளாகக் கொண்டதுவே காரணியம் என்க.

'பிறர்க்கு நன்மை பயக்கும் சொற்களை மனத்தான் ஆராய்ந்து சொல்லுதல்' என்னும் கூற்று, மனவியல்புக்குப் பொருந்தாதது. சொல்லுதல் நிகழ்வின் பொழுது, சொல் தேடுதில் உணர்வு செல்லாதாகலின்.

– இதனை மொழியறிவர் பாவாணரும் வழி மொழிந்தது, அவரின் சொல் தேடலின் அருமுயல்வால் கொண்ட மனவுணர்வால் என்க.

– மேலும், 'அல்லவை'யைப் 'பாவம்' என்று பரிமேலழகர் கூறியதும் அடாதது. அஃது, அவரின் வேதமதவழிப் 'பாவ புண்ணியக்' கருத்துக்கு வலிவூட்டிக் கொள்வதுமாம்.

– அதேபோல், 'தேய்தல்' என்பதற்குத் 'தன்பகை ஆகிய அறம் வளர்தலின் (பாவம்) தனக்கு நிலையின்றி மெலிதல்' என்றும், 'தவத்தின்முன் நில்லாவாம் பாவம்' (நாலடி - 51) என்பதூஉம் இப்பொருட்டு' என்றும் விளக்கம் கூறுதலும், பொதுநலக் கூறாகிய அறத்தை, மதச்சேற்றில் புதைக்கும் கொடுஞ்செயலாகும்.

– 'பாவம்' என்பது, ஏதோ சாணிமலை போல் வளர்ந்திருக்கும் என்பதும், 'புண்ணியம்' ஏதோ வெயில் போல் உருக்கொண்டு அதை உறுத்துக் காய்ச்சிக் குறைக்கும் என்பதும் பரிமேலழகரின் ஆரியவியல் சார்ந்த மதமூடக் கற்பனையேயின்றி, அறிவியலுக்கும் மெய்யறிவியலுக்கும் பொருந்தாவென்க.

– 'நல்லவை' - நல்ல செயல்களும், 'தீயவை' தீய செயல்களும் என்னும் பொதுவுண்மை, 'புண்ணிய பாவ'க் கோட்பாட்டின் கீழ்ப் பகுக்கக் கூடியவை அல்ல. அவ்வாறு பகுப்பது **மதம்.** அவற்றை உலகியல் வழியாகப் பார்த்து, மாந்தவியல் வழியாகப் பொருள் கொள்ளுவதே **அறம்** என்க.

– இவ்வாறு பொருள் கற்பிக்கும் பரிமேலழகரது நோக்கம், அறத்தைத் 'தர்மம்' என்று கொண்டு, அதற்கு வேதத்தை அடிப்படையாகக் கூறி, ஆரியவியலை நிலைநாட்டுவதே என்க.

– இவ்வகையில் பரிமேலழகரை ஒட்டி உரைப்பாரும், அவர் வழிப்படுதலும், அவரின் ஆரியவியல் சூழ்ச்சி அறியாராகுதல் பற்றி என்க.

– மொழியறிவர் பாவாணரும், 'அறம் நல்வினை' என்றும், 'அறமல்லாதவை தீவினைகள்' என்றும், 'தீவினைகள் தேய்தலாவது, தீவினைப்பயன் குன்றல்' என்றும், 'நல்வினையும் தீவினையும் ஒளியும் இருளும் போல மறுதலைப் பொருள்களாதலின், ஒளியின் முன் இருள்

கெடுதல் போல நல்வினைப் பயன் முன், தீவினைப் பயன் கெடும்' என்றும், பலவாறாய் மயங்கியும், மதவுணர்வு சார்ந்தும், மக்களியல் அறியாதும், மனவியல் உணராதும் கூறியவை, ஆரியத்தால் கலங்கிய தமிழியல் மட்டுமறிந்து, தமிழரியலும் அவர்தம் மெய்யறிவியலும் உய்த்துணராக் குழப்பத்தால் என்க.

8. **இனிய சொலின் :** பிறர் மனங் கொள்ளுமாறு இனிமையான சொற்களில், இனியவற்றைக் கூறிவந்தால்.

- நன்மைகள் (இனியவை) எனினும் இனிமையாக (அன்புணர்வு தோன்றக் கனிவாக)க் கூறப்பெற்றால்தான் அவற்றை மக்கள் செவி கொள்ளுவர்; அதனால் மனந்திருந்துவர் என்றார் என்க.

9. இதில், பொது அறவுணர்வுகளும்கூட இனிமையாகச் சொல்லப் பெறுதல் வேண்டும் என்று மக்கள் மனவியல் கூறப்பெற்றது.

O

கூ எ. நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று பண்பின் தலைப்பிரியாச் சொல். 97

பொருள் கோள் முறை :

பயன் ஈன்று பண்பின் தலைப்பிரியாச் சொல்,
நயன் ஈன்று நன்றி பயக்கும்.

பொழிப்புரை : தனக்கும் பிறர்க்கும் பயனை உருவாக்கித் தருகின்ற பண்பு விலகாத இனிய சொல், ஞாயத்தை உண்டாக்கி, நல்ல விளைவுகளையே பெற்றுத் தரும்.

சில விளக்கக் குறிப்புகள் :

1 ***நயன்*** **:** நயம் - நாயம் - ஞாயம். இவ்வடிவந்தான் வடமொழியில் 'நியாயம்' என்று திரிக்கப்பெற்று, 'நீதி'யைக் குறிக்கும். 'நீதி' வடசொல்; ஞாயம் அல்லது நாயம் அல்லது நயம், நயன் ஆகிய வடிவங்கள் அனைத்தும் தூய தமிழே.

2 ***ஈன்று*** **:** பிறப்பித்து, உருவாக்கித் தந்து, உண்டாக்கித் தந்து.

3 ***நன்றி*** **:** நன்மை, நல்லது.

4 **பயக்கும் :** தரும்.

5. **தலைப்பிரியா :** இருந்து விலகாத, இருந்து நீங்காத.

தலைபிரிதல் என்பது ஒரே சொல் - தலைக்கூடுதல் என்னும் சொல்லுக்கு எதிர்ச்சொல். தலைக்கூடுதல் - வந்து சேர்தல்.

– இவ்வகை ஒட்டுச்சொற்கள் மரபுத் தொடர் (Idioms) என்று கூறப்பெறும். இவை இரண்டு சொற்களாகப் பொருள் கொள்ளுதல் கூடாது. இரண்டு சொற்களும் சேர்ந்து ஒரு சொல்லாகவே மரபு வழிப் பொருள் கொள்ளுதல் வேண்டும். தமிழில் இவ்வகைச் சொற்கள் நிறைய உண்டு. 'தலை'யை முதற் சொல்லாகக் கொண்டு வரும் மரபுச் சொற்கள் சில : தலைகனத்தல், தலைகாட்டுதல், தலைகொடுத்தல், தலைகவிழ்தல், தலைக்கீடு, தலைசாய்த்தல், தலைகவிழ்த்தல், தலைதாழ்தல், தலைதொடுதல், தலைதருதல், தலைதின்னுதல், தலைநிமிர்தல், தலைநீட்டுதல், தலைப்படுதல், தலைப்புரட்டல், தலைபோதல், தலைமோதல், தலைப்பெய்தல் (கூடுதல், கலத்தல்), தலைபிணங்குதல் (ஒன்றோடொன்று மாறுபடுதல்), தலைமடிதல், தலைமறைதல், தலைமுழுகல், தலைமுறை, தலைமேற்கொள்ளுதல், தலையழிதல், தலையாட்டுதல், தலையிடுதல், தலையிலடித்தல், தலைவெடித்தல் முதலியன. இவற்றுக்குப் பொருள் தெரியார் அகர முதலிகளைப் பார்க்க.

6. **நயன் ஈன்று நன்றி பயக்கும் :** என்பதற்குப் பரிமேலழகர், 'இம்மைக்கு நீதியையும், மறுமைக்கு (இறந்த பின்) அறத்தையும் பயக்கும்' என்று பொருள் தருவது இட்டுக் கட்டிச் சொல்வதாகும். எங்கெங்கு வாய்ப்பிருக்குமோ அங்கங்கெல்லாம் ஆரியவியலைப் புகுத்துவதே அவர் கோட்பாடு என்க.
இங்கு இம்மையோ, மறுமையோ எந்த வகையிலும் பொருள் கொள்ளத் துளியும் இடமில்லை என்பதை உணர்க.

பாவாணரும் அவரை அப்படியே பின்பற்றிப் பொருளுரைத்தல் மிகவும் வருந்தத்தக்கது.

– பண்பு விலகாத, குறையாத இனிய சொற்களைப் பயன்படுத்து பவனை எல்லாரும் விரும்பி மதித்து; அவன் பால் நேர்மையாகவும் நடுநிலையாகவும், ஞாயமாகவுமே நடந்து கொள்ளுதலும், அதனால், அவனுக்கு நன்மை உண்டாதலும் இயல்பான உலகியற்கை. இந்த உண்மைதான் இங்குச் சுட்டப்பெறுகிறது.

7. **பயன் ஈன்றல் :** நன்மையைப் பெற்றுத்தருதல்.

பண்பின் விலகாத சொல் இனிமை கூறலைக் குறித்து அதிகாரத்தொடு பொருந்தியது.

இதனால் தனக்கு உண்டாகும் நன்மை கூறினார்.

O

கூ அ. சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும் இம்மையும் இன்பம் தரும். 98

பொருள் கோள் முறை : இயல்பு

பொழிப்புரை : புன்மை, இழிவு, இகழ்ச்சி ஆகிய சிறுமையுணர்வுகள் தவிர்ந்த இனிமை தரும் சொற்கள், வாழ்வின் பிற்பகுதியிலும், வாழ்கின்ற இப்பொழுதும், மனத்தாலும் செயலாலும் இன்பம் தருவனவாகும்.

சில விளக்கக் குறிப்புகள் :

1 ***சிறுமையுள் நீங்கிய இன்சொல் :*** சிறுமை உணர்வுகளாகிய புன்மை, இழிவு, இகழ்ச்சி ஆகியவை நீங்கிய இனிய சொற்கள்; புன்மையான சொற்கள் கீழ்த்தரமாகச் சொல்லும் தகவற்ற சொற்கள், இழிவான சொற்கள், பிறர் மறைவுகளைச் சுட்டித் தாழ்வை உண்டாக்குபவை; இகழ்ச்சியான சொற்கள், மற்றவர்கள் இகழ்வாக நினைக்கும்படி கூறும் சொற்கள் ஆகியவை சிறுமைச் சொற்களாம்.

– நீங்கிய என்பது, தப்பித் தவறியேனும் பேச்சுக்கிடையில் வந்துவிடாமல் தவிர்ப்பது.

— அதனால் கூறியவை முழுவதும், பிறர்க்கு வருத்தத்தைத் தராமல் இன்பத்தையும் நன்மையையும் தரும்படியாக இருத்தல் வேண்டும் என்றார்.

– முன்னைய குறளில 'பணபான தலைபபாரியாச் சொல்' என்றவர், இதில் 'சிறுமையுள் நீங்கிய இன்சொல்' என்றது, பண்பு நீங்காத சொற்களைப் பேசினாலும் போதாது, சிறுமையுணர்வுள்ள ஒரு சொல் தானும் வாராமல் பேசுதல் வேண்டும் என்று நுட்பமும் சிறப்பும் கூறியது.

'பண்பு நீங்காத சொல்லை'ப் பிறர் விளங்கிக் கொள்வதினும், அல்லது விளங்கிக்கொண்டவர்க்கு மகிழ்வூட்டுவதினும், சிறுமைச் சொற்கள்தாம் மிகுதியும் விளங்கிக் கொள்வனவும், பிறர்க்குத் துன்பத்தைத் தருவனவும் ஆகையால், இதை அதனினும் மேல்நின்று வலியுறுத்திச் சொன்னார்.

– இன்பம் தருவதினும் துன்பம் தராமல் இருப்பது சிறப்பு என்பது உணர்த்தப் பெற்றது.

– பிறரைச் சிறுமைப்படுத்தாத சொற்களைப் பேசுபவர்கள், பிறரால் என்றும் மதிக்கத் தக்கவர்களாகவும், பிறரைச் சிறுமைப்படுத்தும் சொற்களைப் பேசுபவர்கள் பிறரால் என்றும் இகழத்தக்கவர்களாகவுமே இருப்பர் என்க.

2. **மறுமையும் இம்மையும் இன்பம் தரும் :** வாழ்க்கையின் பிற் பகுதியிலும், இப்பொழுதும் இன்பம் தரும்.

– வாழ்வின் மறுபகுதியாகிய இறுதிக் காலத்தை முற்கூறியது, தொடர்ந்து அவர் கடைப்பிடித்து வரும் இனியவை கூறுதலை உள்ளடக்கியது.

– ஒருவரைப் பழகப் பழகவும், காலம் செல்லச் செல்லவுமே அறிந்து கொள்ள முடியுமாதலால், இடையில் கைநெகிழ்க்காமல், வாழ்வின் இறுதிவரை ஒருவர் கடைப்பிடித்துவரும் கோட்பாடுகளுக்கும் அறவுணர்வுகளுக்குமே, இறுதிக்காலத்து உலகம் மதிப்பளிக்கும் ஆகையால், வாழ்வின் மறுவாழ்வுப் பகுதியாகிய இறுதிக் காலத்தை, இப்பொழுது வாழ்வதினும் சிறப்பித்துச் சொன்னார் என்க.

– இதைக் 'கருமம் செயவொருவன் கைதூவேன் என்னும் பெருமை' என்று பிறிதோரிடத்தும் (1021) வலியுறுத்துவார்.

– 'இம்மையும்' என்று உறுதிப்படுத்தியது எதிர்காலத்தில் அஃதாவது இறுதிக் காலத்தில் என்று சோர்வடைய வேண்டா, நிகழ்காலத்தும் அதன் பயன்கிட்டும் என்றது.

– சிறுமை நீங்கிய இன்சொல் வழங்குபவனை நிகழ்காலத்தும் அவன் மகிழும்படி போற்றுவர்; நன்மைகள் செய்வர். இனி, எதிர்காலத்தும் அவற்றினும் மேலாகவே போற்றுவர், சிறப்புச் செய்வர் என்றபடி.

– சிறுமை நீங்கிய இன்சொல் கூறுபவன், செயலிலும் சிறுமைச் செயல்களைச் செய்யாமல் பெருமைச் செயல்களையே செய்வான் என்னும் இயல்பால், அவன் மதிக்கப்பெறுதலும் போற்றப்பெறுதலும் உய்த்துணர்த்தினார் என்க.

இவற்றால் அவன் இப்பொழுதும் (இம்மையும்), மறுமைப்பொழுதும் (மறுமையும்) இன்பம் பெறுவது கூறப்பெற்றது.

இம்மையும் மறுமையும் என்பதற்குப் பரிமேலழகர் உள்ளிட்ட பிறர் இயல்பாகவே **இப்பிறவி, மறுபிறவி** என்றே உரை கூறினர்.

இந்நூலுள், 'இம்மை' என்னும் சொல் மூன்று இடங்களிலும் (98, 1042, 1351), 'மறுமை' என்னும் சொல் நான்கு இடங்களிலும் (98, 459, 904, 1042) குறிக்கப்பெற்றுள்ளன.

– இவ்வேழு இடங்களில், இரண்டில்தான் 'இம்மை'யும் 'மறுமை'யும் இணைந்தே வருகின்றன.

– மற்ற ஐந்து இடங்களில் ஒன்றில் (1315) மட்டும் 'இம்மை'யோடு 'பிறப்பு'ம் சேர்ந்து வருகிறது. எனவே, மற்ற ஆறு இடங்களிலும் வரும் 'இம்மை' என்னும் சொல், பிறப்பைச் சுட்டவில்லை என்பது தெளிவாகத் தெரிகிறது. அவ்வாறு சுட்டும் என்றால், அங்கும் 'பிறப்பு' என்னும் சொல் இணைக்கப் பெற்றிருத்தல் வேண்டும். இல்லெனில் 1351-இலும் 'பிறப்பு' என்னும் சொல் இணைக்கப் பெறாமல் இருந்திருக்க வேண்டும்.

– ('எழு பிறப்பு' (62) என்னும் சொல்லுக்குக் கூறப்பெற்ற விளக்க முறையே இதற்கும் பொருந்தும் என்க.)

எனவே, **'இம்மைப் பிறப்பு'** (1315) என்று குறிப்பிடப் பெறுவது வேறு, **'இம்மை'** (98, 459, 904, 1042) என்று குறிப்பிடப் பெறுவது வேறு - என்றுணர்ந்து கொள்க.

இனி, 'இம்மை' என்று குறிப்பிடப் பெறும் மற்ற இரண்டு (98, 1042) இடங்களிலும், அது பிறப்பைச் சுட்டும் பொருள் வருதற்கு இடமில்லை. இவ்விரண்டில் ஒன்று இங்கு (98) வந்தது. இன்னொன்று 'நல்குரவு' (ஏழைமை) அதிகாரத்தின் வருவது. அங்கு வருவதற்குப் பரிமேலழகர், 'வறுமை' ஒருவனுக்கு மறுபிறவி இன்பமும் இல்லாமல் செய்து விடும், என்று கூறி, ஈயாமையால் அஃதில்லாயிற்று, என்று விளக்கமும் கொடுப்பார். அவர் குறிப்பில் 'ஈகை' அறம் ஒன்று தான் 'மறுமையின்பம்' நல்கும் என்பது அவரின் வேதமதக் கொள்கைக்கே முரணானது. என்னை? 'இல்லற வாழ்க்கை நடத்துவதும்' (49) 'மனத்துக்கண் மாசிலனாக' இருப்பதும் (34) 'பொய்யாமை அறம்' கடைப்பிடிப்பதும் (297) - அறங்களே என்று ஆசிரியர் குறிப்பிடுவது பயனின்றோ? அல்லது அவை ஏழைமைக்கு இயலாவோ? அவற்றைச் செல்வரும் ஏழையரும்கூடச் செய்யலாமே! அவையும் அறங்களாயின், ஏழையரால் செய்யப்பெறின், மறுமையின்பத்தை அவை தாராவோ? ஈகையறம் ஒன்று மட்டுத்தான் பரிமேலழகர் கருத்துப்படியான மறுமையின்பத்தைத் தர வல்லதோ? ஓர்மின்.

எனவே, 'இம்மை' எனும் சொல்லுக்கு 'இப்பிறவி' எனும் பொருளில்லை என்பது பெற்றாம். பெறவே, 'மறுமை' என்பதற்கும் 'மறுபிறவி' என்றும் பொருளில்லை என்று திண்ணமாய் அறிக.

- இனி, 'இம்மைப் பிறப்பு' (1315) எனும் சொல்லாட்சி, 'பிறப்பில், உடலின்பம் துய்த்தற்குரிய இளமைக்காலப் பகுதி'யைக் குறிப்பதை ஆண்டு விளக்குவாம்.

– அதே போல், 'மறுமை' என்று வரும், 459, 904, 1042, 1315 ஆகிய பிறவிடங்களிலும், இதிற் போலவே, வாழ்வின் பிற்பகுதி என்று வரும் பொருளையும் அவ்வவ்விடங்களில் பொருத்திக் காட்டி மெய்ப்பிப்போம்.

– முற்குறளில் (97) வந்த 'நயன் ஈன்று' என்னும் தொடருக்கு, 'இம்மைக்கு நீதியையும் உண்டாக்கி' என்றும் இட்டுக் கட்டி., ஆங்கு, சொல்லாலும் பொருளாலும் உண்மையாலும் இன்மையாகிய 'இம்மை'யைப் புகுத்தியவர், இதில் வெளிப்படையாக 'இம்மை'யும், அத்துடன் அதற்கிணைவான 'மறுமை'யும் கண்டவர், அணியமாகத் தம் கையினும், மனத்தினும் வைத்துள்ள வேதமதக் கருத்தையும், ஆரியவியலின் வழக்கையும் திணிக்காமல் விடுவரோ? 'வெறும்வாயை மெல்லுவானுக்கு, அவலும் வெல்லமும்' கிடைத்தால், அதக்கியும் சுவைத்தும் மென்று விழுங்கானோ? அதுபோலும், இவர் ஈங்கு இம்மை, மறுமைக்குரிய பொருந்தாப் பொருள் கூறியதும் என்று விடுக்க.

இவ்விடத்தில், பாவாணரும் இவரைக் கைநெகிழ்க்காமல், பிடித்துப் பின் தொடர்வதே போல், 'இருமையிலும் இன்பம் விளைவிக்கும்' என்று பொருள் கூறி, 'இம்மை இன்பமாவது ஐம்புல நுகர்ச்சி பெற்று நோயற்ற நீடு வாழ்வு' என்றும், 'மறுமையின்பமாவது விண்ணுலக வாழ்வு அல்லது மண்ணுலக நற்பதவி' என்றும், சென்று கண்டு வந்தாற்போலும் விளத்தம் தருவது, ஆழ எண்ணாமையே ஆகும். மேலும், அவர், இம்மை இன்பம் என்பது, **ஐம்புல நுகர்ச்சி, நோயற்ற வாழ்வு** அதிலும் **நீடு வாழ்வு** என்றெல்லாம் இலக்கணப்படுத்திக் கூறுவது கருதினால், இவ்வுலகில் பிறந்த எவனொருவனும் இம்மை இன்பத்தைப் பெற்றிருக்கவும் முடியாது, பெறவும் முடியாது என்றே முடிவுகொள்ள வேண்டியிருக்கும். அவ்வாறு அரிதான ஒன்றை, சிறுமை நீங்கிய இனியவை கூறலாலேயே பெற்றுவிட முடியும் என்று பொருள் கூறுவது, வாய்க்கு வந்ததையே கூறுவதும், கைக்கு வந்ததையே எழுதுவதும் ஆகும். இஃதொரு வகையில் ஒன்றுமறியாப் பொதுமக்களைக் கவர்ச்சியான மூட நம்பிக்கையுள் ஆழ்த்துவதும் ஆகும்;

அறங்கூறுவது ஆகாது.

அறத்தால் வரும் பயன் இறும்பூதுக்கு (அற்புதத்துக்கு - Miracle) உரியதன்று; தெய்வ இயலும் அன்று; மாந்த வியலுக்கு உட்படுவதே; இயற்கையியலுக்கு (Naturity) பொருந்துவதே! இயற்கை கடந்த (Super Natural) நிகழ்வுகள் ஒருவாறு, காலம், இடம், பொருள் பொருத்தங்கள் நோக்கித் தெய்வ இயல் என்று கருதப்பெற்று வருகின்றன. ஆனால், அவை மெய்யறிவியல் ஆகா. ஆனது பற்றித்தான் 'எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்ப தறிவு' (355) என்பார்.

மெய்யறிவியல் உண்மையானது; உணரக் கடினமானது.

தெய்வவியல் கற்பனை கலந்தது; உணர்வானது; ஆனால் உணர்த்த முடியாதது; நம்பிக்கை கொண்டது.

மதவியல் மூடநம்பிக்கையானது; ஏமாற்று நிறைந்தது; அவரவர் காலத்திற்கும் இடத்திற்கும் இனத்திற்கும் உகந்த வகையில் வேறுபடுவது. அறியாத மக்களுக்குக் கவர்ச்சியானது.

– மெய்யறிவியல் **இயல்** போன்றது; தெய்வவியல் இசை போன்றது; மதவியல் **நாடகம்** போன்றது.

இவற்றுக்கிடையே, **அறம்** என்பது, இயற்கையியல், உயிரியல், மாந்தவியல், உலகியல், மனவியல், இனவியல், நாட்டியல், அரசியல், பண்பியல், பொருளியல் - ஆகிய பத்துத் தன்மைகளும் கொண்டது. இவை இவ்வுரை நூலுள் ஆங்காங்குத் தேவையின் விளக்கப்பெறும்.

3. இன்பம் - மனத்தாலும், உடலாலும், உயிராலும் உணரப் பெறுவதோர் உணர்வு.

– இது, மனத்தால் புலன்கள் வழியும், உடலால் பொறிகள் வழியும், உயிரால் மனம், உடல் இரண்டன் வழியும் நுகரப்பெறுவது.

4. இது, பண்பின் தலைப்பிரியா இன்சொல்லினும், சிறுமையுள் நீங்கிய இன்சொல்லின் மேம்பாடும், மிகுபயனும் கூறியது. ஆகலின் அதன்பின் வைக்கப்பெற்றது.

O

கூ கூ. இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ வன்சொல் வழங்கு வது. 99

பொருள் கோள் முறை :

இன்சொல் இனிது ஈன்றல் காண்பான்

வன்சொல் வழங்குவது எவன்கொல்.

பொழிப்புரை : *தான் கூறும் இன்சொல்லால் பிறரும், பிறர் கூறும் இன்சொல்லால் தானும், மகிழ்தலைக் கண்டு உணர்ந்தவன், அதைத் தவிர்த்துக் கடுமையான சொற்களைப் பயன்படுத்துதல் ஏனோ?*

சில விளக்கக் குறிப்புகள் :

1. **இன்சொல்** இனிமை தருவது இருபுறத்தும் நிகழ்வதாகலின் கேட்பது மட்டுமன்றிக் கிளத்துவதையும் உள்ளடக்கிக் கூறப்பெற்றது. பிறர் ஒரு சார்புப் பொருளையே கூறுவர்.
2. **வன்சொல்** - வன்மையான சொற்கள். வன்மை - கடுமை; தடித்த தன்மை.
3. **வழங்குவது** - பயில்வது, பயன்படுத்துவது.
4. **கொல்** - வியப்புப் பொருள் குறிக்கும் அசைச் சொல்.
5. இஃது, உலகியல் தெரிந்தும் அதையொட்டி நடவாமல், மாறுபட நடத்தலைத் தவிர்க்கக் கூறியது. ○

க00. இனிய உளவாக இன்னாத கூறல் கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. 100

பொருள் கோள் முறை : **இயல்பு**

பொழிப்புரை : *இனிமை பயக்கும் சொற்களும், கருத்துகளும் தனக்குத் தெரிந்திருக்க, அவற்றைத் தவிர்த்து, இனிமை பயவாத சொற்களையும் கருத்துகளையும் ஒருவன் கூறுவது, இனிய மணமும் சுவையும் பொருந்திய கனிகளும் மரத்திலிருக்க, மணமும் சுவையும் கனிவும் இல்லாது, புளிப்பும் அல்லது கசப்பும் உள்ள காய்கள் மேல் ஆசை கொண்டு பறித்து உண்பதைப் போன்றது.*

சில விளக்கக் குறிப்புகள்

1. பொருந்திய உவமையுடன் கூடிய சிறந்த உலகியல் கருத்துடையது, இச் செய்யுள்.

2. **இனிய உளவாக** - இனிமை பயக்கும் சொற்களும் கருத்துகளும் தனக்குத் தெரிந்திருக்க அல்லது உள்ளத்தில் இருக்க. 'இனிய' என்பது சொற்களையும் கருத்துகளையும் இணைத்தே நிற்கும் என்பது முன்னரே விளக்கப்பெற்றது. (முன்னுரை காண்க.)

3. **இன்னாத கூறல் :** இனிமை பயவாத சொற்களையும் கருத்துகளையும் ஒருவன் கூறுவது.

-- 'இன்னா' என்பது கடுமையான சொற்களையும் தீமையான கருத்துகளையும் (313) (881) குறிக்கும்.

4. **கனி இருப்பக் காய் கவர்ந்தற்று :** இனிய மணமும் சுவையும் பொருந்திய கனிகளும் மரத்திலிருக்க, மணமும் சுவையும் கனிவும் இல்லாது, புளிப்பும் அல்லது கசப்பும் உள்ள காய்கள்மேல் ஆசை - விருப்பம் கொண்டு பறித்து உண்பதைப் போன்றது. கவர்வது - விரும்புவதன் கண் நிகழ்வது, 'கவர்வு விருப்பாகும்' (-தொல். 845)

– கனி என்பது மணமும் சுவையும் பொருந்தியது. அதுபோல் ஒருவன் கூறுதல், இனிய சொற்களும் கருத்துகளும் கொண்டதாக இருத்தல் வேண்டும் என்று குறித்தார்.

– காய் என்பது, மணமும் சுவையும் கனிவும் இல்லாததுடன், புளிப்பும் அல்லது கசப்பும் கொண்டது. அதுபோல், ஒருவன் கூறுதல், இனிமைபயவாத சொற்களும், நன்மை பயவாத கருத்துகளுமாக இருத்தல் கூடாது என்பதுடன், அச்சொற்களும் கருத்துகளும், செவிக்குக் கடுமையும், மனத்துக்குத் தீமையும் வெறுப்பும் தருவனவாகவும் இருத்தல் கூடாது என்றார். அது பேதைமையும் ஆகும் என்பதும் ஆசிரியர் குறிப்பு என்க. என்னை? 'பேதைமை என்பதொன்று யாதெனின் ஏதங் கொண்டு ஊதியம் போகவிடல்' (331) என்பாரும் அவர்.

– இனி 'இருப்ப' என்பது கனிகளும் காய்களும் மரத்தின்கண் இருப்ப என்று பொருள்தரும்.

– 'கனி இருப்ப' என்பதற்கு. 'இனிய கனிகளும் தன் **கைக்கண்** உளவாயிருக்க' என்று பரிமேலழகர் பொருள் தருவது, இயல்புக்கு மாறானது. கனிகள் கையிலிருப்பனவெனின், உண்ணப் போகும் நோக்கில் அவற்றை முன்னரே பறித்து வைத்திருத்தல் வேண்டும். அக்கால் 'கவர்தல்' என்னும் சொல்லுக்குப் பொருள் இல்லாமல்

போகும். அத்துடன் அச்செயல் முன்னரே நிகழ்ந்ததாகவும் வேண்டும். அதன் பின் 'காய் கவர்தல்' என்பது எங்ஙன் பொருந்தும்?

கவர்தல்' என்னும் சொல், பறிப்பது, கையகப்படுத்துவது எனும் முறையான சொற்பொருளைத் தருவதால், 'உளவாக' என்பதற்குக் 'கைக்கண் உளவாயிருக்க' என்னும் பரிமேலழகரின் பொருள் பொருந்தாது என்க. இனி, இவரோடு இணையாமல் மணக்குடவர், 'பழமும் காயும் ஓரிடத்தே யிருக்க' என்றும், காலிங்கர் 'நம் இல்லகத்து இனிய கனி உளவாயிருப்ப' என்றும் பொருள் கூறித் தப்பினர். இவற்றைக் கவிராசபண்டிதரும் கா.சு.வும், 'இனிய பழங்கள் **தன்கையில் இருக்கும் போது**' என்று, பரிமேலழகருடன் இணைந்தே நின்றனர். பாவாணரோ, '...கனிகளும் ...காய்களும் ஒரு சரியாய்க் கைக்கு எட்டுவனவாக விருக்கவும்' என்று ஒருவாறு பொருந்தும் பொருள் கண்டார். இனி, 'உளவாக' என்னும் சொல் தானுடைமைப் பொருள் தருதல் போல், 'இருப்ப' என்னும் சொல்லும் தானுடைமைப் பொருள் தரும். எனவே, 'கவர்தல்' என்னும் சொல்லுக்குத் 'திருடித் தின்பது' என்று சிலர் பொருள் காண்பதும் பொருந்தாது என்க.

5 இனி, 'இனிய' என்பதற்குக் 'கனியும்', 'இன்னாத'தன்பதற்குக் 'காயும்' உவமை கண்டது, இனிய சொல்லிற் கனிவு இருப்பதையும், இன்னாச் சொல்லில், காய்தல் பொருளான எரிவும் வெறுப்பும், வெகுள்வும் இருப்பதையும் கண்டு நயந்து மகிழ்க.

6. இனி, 'கனி' என்பதற்கு 'ஓளவையுண்ட நெல்லிக்கனி போல', என்றும், 'காய்' என்பதற்குக் 'காஞ்சிரங்காய் போல நஞ்சானது' என்றும் பரிமேலழகர் காட்டுவது, அவையிரண்டும் இனமொன்றாதவை ஆகலின், இணையாததும் மிகையானதும் ஆகும் என்க.

7. இஃது, இனியவை கூறுதலின் தன்மையும் நன்மையும் முற்றக்கூறி முடிந்தது.

O

திருக்குறள் மெய்ப்பொருளுரை

பாட்டு முதல் குறிப்பு அகராதி.

அ.

அகரமுதல 53
அகனமர்ந்து ஈதலின் 313
அகனமர்ந்து செய்யாள் 287
அந்தணர் என்போர் 122
அமிழ்தினும் 234
அல்லவை தேய 325
அழுக்காறு அவா 141
அறத்தாறு இதுவென 146
அறத்தாற்றின் 176
அறத்தான் 152
அறத்திற்கே 268
அறத்தினூஉங்கு 137
அறவாழி 76
அறனெனப்பட்டதே 182
அன்பகத்தில்லா 254
அன்பிலார் 266
அன்பிற்கும் 264
அன்பின் வழியது 247
அன்பீனும் 258
அன்பும் அறனும் 176
அன்புற்றமர்ந்த 257
அன்போடியைந்த 248
அன்றறிவாம் 142

ஆ.

ஆற்றின் ஒழுக்கி 180

இ.

இயல்பினான் 179
இருந்தோம்பி 283
இருமைவகை 106
இருள்சேர் 71
இல்லதென் 196
இல்வாழ்வான் 162
இனிய உளவாக 335
இணைத்துணை 298
இன்சொலால் ஈரம் 310
இன்சொல் இனிதீன்றல் 334

ஈ.

ஈன்ற பொழுதிற் 240

உ

உடைமையுள் 302
உரனென்னும் 109

எ.

எழுபிறப்பும் 219
என்பிலதனை 259

ஏ.

ஏரின் உழாஅர் 90

ஐ.

ஐந்தவித்தான் 112

ஒ.
ஒல்லும் வகையான் 138
ஒழுக்கத்து நீத்தார் 102

க.
கற்றதனாலாய 64

கு.
குணமென்னும் 120
குழலினிது 233

கெ
கெடுப்பதூஉம் 92

கோ.
கோளில் பொறியில் 77

சி.
சிறப்பினும் செல்வமும் 136
சிறப்பொடு 95
சிறுமையுள் 330
சிறைகாக்கும் 206

சு.
சுவையொளி 117

செ.
செயற்கரிய செய்வார் 115
செயற்பால தோரும் 155
செல்விருந்து 295

த.
தந்தை மகற்கு 238
தம்பொருள் 230
தம்மின் தம் மக்கள் 239
தற்காத்துத் 204
தனக்குவமை 73

தா.
தானம் தவம் 97

து.
துப்பார்க்குத் 87
துறந்தார்க்கும் துவ்வா 167
துறந்தார் பெருமை 104
துன்புறூஉம் 322

தெ.
தெய்வந் தொழாஅள் 200
தென்புலத்தார் 168

ந.
நயன் ஈன்று 128

நி.
நிறைமொழி 119

நீ.
நீரின்று அமையாது 98

நெ.
நெடுங்கடலும் 94

ப.
பணிவுடையன் 324
பரிந்தோம்பிப் பற்றற் 301
பழியஞ்சி 174

பி

பிறவிப் பெருங்கடல் 83

பு

புகழ்புரிந்த 209
புறத்துருப்பு 250

பெ

பெண்ணின் பெருந்தக்க 398
பெருமவற்றுள்ள 516
பெற்றார் பெற்றின் 208

பொ

பொறிவாயில் 73

ம

மக்கள் மெய்தீண்டல் 236
மகன் தந்தைக்கு 242
மங்கலம் என்ப 211
மலர்மிசை 67
மனத்துக்கண் மாசிலன் 139
மனைத்தக்க 193
மனைமாட்சி 196

மு

முகத்தான் அமர்ந்து 314

மோ

மோப்பக்குழையும் 303

வ

வருவிருந்து 286

வா.

வானின்றுலகம் 86

வி.

விசும்பின் 93
விண்ணின்று 89
வித்துமிடல் 288
விருந்துபுறத்ததா 285

வீ.

வீழ்நாள் படாஅமை 148

வே.

வேண்டுதல் 69

வை.

வையத்துள் 185

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் நூல்கள்

• பாவியக்கொத்து	22.00
• ஐயை	30.00
• கழுதை அழுத கதை	35.00
• கொய்யாக்கனி	25.00
• கற்பனை ஊற்று	40.00
• திருக்குறள் மெய்ப்பொருளுரை - தொகுதி 1	100.00
• திருக்குறள் மெய்ப்பொருளுரை - தொகுதி 2	120.00
• திருக்குறள் மெய்ப்பொருளுரை - தொகுதி 3	120.00
• திருக்குறள் மெய்ப்பொருளுரை - தொகுதி 4	100.00
• வேண்டும் விடுதலை	120.00
• பெரியார்	40.00
• கனிச்சாறு(பெருஞ்சித்திரனார் பாடல்கள்)	
- முதல் தொகுதி	50.00
- 2ஆம் தொகுதி	90.00
• நூறாசிரியம்	100.00
• தன்னுணர்வு	5.00
• பாவேந்தர் பாரதிதாசன்	25.00
• இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக்கான ஆக்கப்பணிகள்	5.00
• ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்	100.00
• சாதி ஒழிப்பு	40.00
• செயலும் செயல் திறனும்	90.00
• ஓ!ஓ! தமிழர்களே!	11.00
• தனித்தமிழ் இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்	10.00
• நெருப்பாற்றில் எதிர் நீச்சல்	6.00
• இளமை விடியல்	50.00
• இட்ட சாவம் முட்டியது	10.00
• மொழி ஞாயிறு பாவாணர்	50.00
• எண் சுவை எண்பது	(அச்சில்)
• மகபுகுவஞ்சி	(அச்சில்)
• அறுபருவத் திருக்கூத்து	(அச்சில்)
• கனிச்சாறு (பெருஞ்சித்திரனார் பாடல்கள்)	
- (தொகுதி 3 முதல் 8 வரை)	(அச்சில்)
• பாவலரேறு பெருஞ்சித்திரனார் கட்டுரைகள்	(அச்சில்)
• வாழ்வியல் முப்பது	(அச்சில்)
• தமிழீழம்	(அச்சில்)

மற்றும்

• பாவலரேறு நினைவேந்தல் மலர் (முதலமாண்டு)	60.00
• பாவலரேறு வாழ்க்கைச் சுருக்கம்	40.00
• மொழிஞாயிறு பாவாணர் மலர்	100.00